பள்ளியிறுதித் தேர்வு (எஸ். எஸ். எல். ஸி.) 1955

லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினா விடையும்

— பொதுப் பகுதி —

(பகுதி I)

★

மாணவர்களுடன் நெடுங்காலத் தொடர்பு கொண்ட
மூவர்
தமிழாசிரியர்களால் இயற்றப்பெற்றது

வித்துவான் வே. ஐயா நாயக்கர்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்நிலைப்பள்ளி, ஆரணி,

வித்துவான் V. P. குழந்தைவேற் சோழகர்,
தமிழாசிரியர், அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி,

வித்துவான் பொன். சுப்பிரமணிய பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், தி. ஆ. உயர்நிலைப்பள்ளி,
திருவிடைமருதூர்.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் :: சென்னை - 17

[விலை ரூ. 1—12—0

S. S. L. C. 1955

THE LIFCO GOLDEN GUIDE TO

THE TAMIL TEXTS : PART I

BY

THREE EXPERIENCED PANDITS :

V. A. NAICKER, V. P. K. SHOLAGAR &
P. S. PILLAI

PUBLISHERS :

THE LITTLE FLOWER CO.,

["BETTER BOOKS FOR A BRIGHTER FUTURE"]

"BHURANGAM BLDGS.", 8, RANGANATHAN RD.,

THYAGARAYANAGAR, MADRAS-17.

SOLE AGENTS IN THE CITY :

Messrs. M. DAMODARAM & CO.

Appah Buildings,

9/286, ESPLANADE, G. T., MADRAS-1.

பொருளடக்கம்

	பக்கம்
முன்னுரை	... ரு
தமிழ்ப் பேராசிரியர்கட்கு வணக்கம்	... எ
வெற்றி பெறும் வழி	... அ
பாடத் திட்டம்	... கூ
தேர்வு விளக்கமும், மதிப்பெண்களும்	... கக
மனப்பாடம் செய்ய வேண்டிய பகுதிகள்	... கஉ
பாட அட்டவணை	... (A)
நாட்குறிப்பு	... (C)
லிப்கோ புத்தகப் பரிசுத் திட்டம் — விதிகளும் பிரவேச பாரமும்	... (L)

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. *திருவருட்பா* ... 1
2. *மலரும் மாலையும்* ... 4

II. அறவுரை

1. *திருக்குறள்* ... 7
2. *நாலடியார்* ... 25
3. *பழமொழி* ... 30
4. *திரிகடுகம்* ... 34
5. *நான்மணிக்கடிகை* ... 38
6. *அறநெறிச்சாரம்* ... 41

III. கதை

1. *சிலப்பதிகாரம் — மங்கல வாழ்த்துப் பாடல்* ... 45
2. *கம்பராமாயணம் — பால காண்டம் — கையடைப் படலம்* ... 61

	பக்கம்
3. திருத்தொண்டர் புராணம் — பூசலார் நாயனார் புராணம் ...	85
4. குசேலோபாக்கியானம் — குசேலர் மேல்கடல் அடைந்த அத்தியாயம் ...	101
5. பாஞ்சாலி சபதம் (பாரதியார் பாடல்) ...	106
IV. பல்சுவை	
1. புறநானூறு ...	120
2. முத்தொள்ளாயிரம் ...	123
3. கலிங்கத்துப்பரணி ...	125
4. பெருந்தொகை ...	127
வினாக்களும் விடைகளும் ...	131

உரைநடைப் பகுதி

1. முருகன் அல்லது அழகு ...	1
2. பாண்டித்துரைத் தேவர் ...	5
3. கடலாண்ட காவலர் ...	10
4. நாடகக் கலை ...	14
5. குடிமக்கள் காப்பியம் ...	19
6. கியூரி அம்மையார் ...	23
7. இன்னும் ஓர் ஐம்பது ஆண்டில் ...	27
8. நாட்டுப்புறங்களின் கல்வி ...	32
வினாக்களும் விடைகளும் ...	35

இலக்கணப் பகுதி ... 73

துணைப்பாட விளக்கம்

1. கரிகால்வளவன் ...	1
2. உதயணன் ...	26
3. கயிலைமால்வரை ...	50
4. வைகைத்துறை ...	77

மொழிபெயர்ப்பு ... 109

மாதிரி வினாத்தாள்கள் ... 123

முன்னுரை

தமிழ்த் தாயின் தண்ணருளால் இந்த லிப்கோ உரை நூல் வெளி வருகின்றது. இதனை ஒரு முறை விரைந்து புரட்டிப் பாருங்கள். அவ்வாறு பார்த்தால், மாணவர்கட்கு வேண்டிய பதவுரை, கருத்துரை, விளக்கவுரை, வினா விடைகள்; உரைநடை விளக்கம், வினா விடைகள்; துணைப்பாடக் கட்டுரைகள்; மொழிபெயர்ப்புக் குறிப்புக்கள் முதலிய வற்றை வழக்கம்போலக் கொண்டிருப்பதுடன், இந்நூல், புதிய முறையில் சில மாறுதல்களையுங் கொண்டுள்ளதென்பதை நீங்கள் உணர்வீர்கள்.

புதிய முறையில் அமைக்கப்பெற்றுள்ள மாறுதல்களுட் சில வருமாறு :—

1. உரைநடைப் பகுதிக்குரிய **வினா விடைகள்** தனியாகத் தரப் பெற்றுள்ளன. தேர்வுக் காலங்களில் அவை மாணவர்கட்குப் பேருதவியாக இருக்கும்.

2. உரைநடையில் சேர்க்கப்பெற்றுள்ள **பத்திச் சுருக்கங்கள்**, மாணவர்கள் உரைநடைப் பாடங்களைப் படித்துச் செய்திகளைக் கருத்தில் இருத்துவதற்கு உதவும்.

3. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் "**நல்லொழுக்கப் பயிற்சி**" என்றொரு பகுதி உள்ளது. கல்வியின் முடிவான நோக்கம் ஒழுக்கம் பெறுதலே அன்றோ? எனவே, மாணவர்கட்கு நல்லொழுக்கங்களைக் கொளுத்தும் முறையில், பாடப் பகுதிகளுடன் தொடர்புபடுத்தி அப் பகுதி அமைந்துள்ளது.

4. சென்ற ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டுள்ள பள்ளியிறுதித் தேர்வினைப்பற்றியும், அத்தேர்வில் வினாக்கள் கேட்கப்படும் முறைகளைப்பற்றியும், பொதுவாகப் பள்ளி மாணவர்கட்கும், சிறப்பாகத் தனிப்பட்ட மாணவர்கட்கும் ஐயங்கள் பல உள்ளன. அவற்றை அகற்றி, உண்மையைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன், அரசியலார் வெளியிட்டுள்ள **பாடத் திட்டத்தின் சில பகுதிகளும், அவற்றைப் பற்றிய விளக்கங்களும், மதிப்பெண்கள் பகுத்து அளிக்கப்படும் முறைகளும்** தனியே தரப்பெற்றுள்ளன. அவை மாணவர்கட்குப் பெரும் பயன் அளிக்கும் என்பது எங்கள் உட்கிடை.

5. **மனப்பாடஞ் செய்தற்குரிய செய்யுட்கள்** யாவும் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. அத்தொகுப்பின் துணைகொண்டு மாணவர்கள் எளிதில் **உரிய செய்யுட்களை மனப்பாடம் செய்யலாம்.**

6. பள்ளியிறுதித் தேர்வில் மாணவர்கள் **விடையளிக்கும் முறையைப்பற்றிய குறிப்புக்கள்** தனியே தரப்பெற்றுள்ளன. பள்ளியிற் சேர்ந்து பயிலாமல், தனிப்பட்ட முறையில் தேர்வினை எழுதும் மாணவர்கட்கு அவை பேருதவி செய்யும்.

7. அண்மையில் அரசியலார் நடத்திய பள்ளியிறுதித் தேர்விற்கு அளிக்கப்பெற்ற வினாத்தாள்களின் முறையைச் சிறிதும் வழுவாமல் பின்பற்றி, **மாதிரி வினாத்தாள்கள்** அமைக்கப்பெற்றுள்ளன. அவை உண்மையிலேயே மாதிரி வினாத்தாள்களாக இருக்கும் என்பது திண்ணம்.

8. *அரசியலார் வெளியிட்டுள்ள புதிய இலக்கணப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி, **நடைமுறை இலக்கணப் பகுதி** ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. இலக்கண விளக்கங்களுக்கு வேண்டிய எடுத்துக் காட்டுகள் செய்யுட் பகுதியிலிருந்தும், உரைநடைப் பகுதியிலிருந்தும் இயன்ற வரையில் பொறுக்கித் தரப்பெற்றுள்ளன. இலக்கணக் குறியீடுகளைப் பாடங்களொடு பொருத்தி அறிந்து கொள்வதற்கு இப்பகுதி பெருந்துணை செய்யும்.

முடிவாகக் கூறுங்கால், 1955-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் நடைபெறப்போகின்ற பள்ளியிறுதித் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கட்கு, உண்மையான வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்னுங் கருத்துடன் இவ்வுரை நூல் அமைக்கப்பெற்றுள்ளது. எம்முடைய நோக்கம் எந்த அளவில் நிறைவேறியது என்று தீர்ப்புக் கூறுதற்கு உரியவர்கள் தமிழாசிரியர்களும், தமிழ் மாணவர்களும் ஆவர். தமிழாசிரியப் பெருமக்களே! தமிழ் மாணவச் செல்வர்களே! தீர்ப்புக் கூறுங்கள். உங்கள் தீர்ப்பு எங்களுக்கு நல்லதொரு தூண்டு கோலாக இருக்கும் என்பது திண்ணம்.

— **ஆசிரியர்கள்.**

மெட்ரிக்குலேஷன் தேர்வு

சென்னை, ஆந்திரா ஆகிய பல்கலைக் கழகத்தார் நடத்தும் மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கு (March 1955) பொது, சிறப்பு ஆகிய இரு பகுதிகளும் பாடங்களாக உள. எனவே, மாணவர்கள் இரு பகுதிகளையும் சேர்த்துப் படிக்க வேண்டும்.

தமிழ்ப் பேராசிரியர்கட்கு மனமார்ந்த வணக்கம்

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வுகளிற் கலந்துகொள்ளும் மாணவர்கட்கு உறுதுணையான உரை நூல்கள் பலவற்றை நாங்கள் வெளியிட்டு வருகின்றோம். மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் வெற்றி பெற உதவுதல் எங்களது துணை நோக்கமே என்பதையும், அவர்கட்கு ஒழுக்க நெறிகளை உணர்த்தி, இலக்கிய இன்பத்தில் ஈடுபடும் வழிகளைக் காட்டுவதே எங்களது முதல் நோக்கம் என்பதையும் அறிஞர்கள் அனைவரும் அறிவர். எங்களது இம்முதல் நோக்கம் இனிது நிறைவேறும் வண்ணம் உதவி செய்வோர் பலராவர். அவர்கள் அவ்வவ்வாண்டு வெளிவரும் எம் நூல்களில் தள்ளத் தக்கனவற்றைத் தயங்காது எடுத்துக் காட்டினர்; கொள்ளத் தக்கனவற்றைக் கூசாது கூறியருளினர்; மாணவர் மனத்தில் தமிழ்ப் பற்றினை ஊட்டுதற்குரிய வழிவகைகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு உதவுகின்றனர். அப்பெரியார்கள் எங்கள் உளம் நிறை நன்றிக்குப் பெரிதும் உரியவர்களாவர்.

இவ்வறிஞர்கள், எங்கள் உரைநூல்கள் சீரிய முறையில் உருப் பெறுவதற்குச் சிறந்த கருத்துக்களை இவ்வாண்டில் எமக்குக் கூறியருளினர். அவர்களுடைய அருங்கருத்துக்கள் எல்லாவற்றையும் இவ்வாண்டிலேயே எங்களால் பயன்படுத்த முடியவில்லை; சிலவற்றையே பயன்படுத்தியுள்ளோம். அடுத்த ஆண்டில் ஏனைய கருத்துக்களையெல்லாம் பயன்படுத்த முயற்சிக்கின்றோம் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவ்வுரை நூலை ஆழ்ந்து படித்துச் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து, நன்முடிவுக்கு வந்து, அம்முடிவுகளை 31—1—1955 தேதிக்குள் அனுப்பியருளுமாறு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பெரியார்களையும், ஏனைய தமிழாசிரியப் பெருமக்களையும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். அவ்வாறு அவர்கள் செய்யும் உதவி காலத்தில் செய்யும் உதவியாகும். இதுவரை பயன் தூக்காது பன்முகமான உதவிகளைச் செய்தருளிய அறிஞர்கட்கு மறுமுறையும் நாங்கள் நன்றியைச் செலுத்துகின்றோம். அன்னார் ஆற்றுகின்ற உதவியை உன்னுங்கால்,

> " கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
> என்னாற்றுங் கொல்லோ உலகு "

என்னும் வள்ளுவர் வாய்மொழியே எம் நினைவுக்கு வருகின்றது.

தமிழ் மாணவர் தகுதி பெற, தமிழ் மக்கள் தனித் தலைமை பெற, தமிழ் நாடு தளிர்க்க, தமிழ் மொழி தழைக்க யாங்கள் எங்களால் இயன்ற சிறு உதவியைச் செய்ய முயல்கின்றோம். இம்முயற்சியில் எங்களை ஊக்கி உதவுமாறு தகுதி சான்ற தமிழ்ப் புலவர் பெருமக்களை நாங்கள் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,

பதிப்பகத்தார்.

வெற்றி பெறும் வழி

அன்புடைய மாணவர்களே !

1955-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெறப் போகின்ற பள்ளியிறுதித் தேர்விற்குப் (S.S.L.C.) பயிலும் மாணவ நண்பர்களுக்கு இந்நூல் பெரும் பயனளிப்பதாக என்று எல்லாம் வல்ல இறைவனை எண்ணி வழிபடுகின்றோம்.

உங்கள் உள்ளத்தின் பான்மையை அளந்தும், உங்கள் உண்மை உழைப்பைத் தம் கண்ணாரக் கண்டும், அரசாங்கத் தேர்வின் போக்கை ஆய்ந்தாய்ந்தும், உங்களோடு ஆண்டுகள் பல பழகித் தொடர்பு கொண்டுள்ள ஆசிரியர்களே இவ்வுரை நூலை உங்கட்கு உதவியுள்ளனர். இவ்வாசிரியத் தந்தைமார் தம் மாணவ மக்களின் எதிர்கால நல்வாழ்வையே தம் நிகழ்கால வாழ்வாக எண்ணுகின்றனர். ஆகவே, இவ்வுரை நூலை நன்கு பயன்படுத்தி, மிகவும் முயன்று கற்றுச் சிறந்து விளங்குவதே அவர்க்குப் பெரு மகிழ்ச்சி தருவதாம்.

உரை நூல் ஒன்றே பெரும் பயன்பெறச் செய்யும் என்று முற்றும் நம்புதல் தவறாக முடியும். உரை நூலை நன்கு கற்பதுடன், வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கின்றவற்றையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். பின்பு கற்றவற்றைப் பன்முறை சிந்தித்தல் வேண்டும். கள்ளமில்லா உள்ளத்துடன் முயல்பவருக்கே ஆண்டவன் அருள் முற்றும் உண்டு என்ற உண்மையை முற்றிலும் நம்புங்கள். உங்களுடைய ஆற்றலை நீங்கள் உண்மையாக நம்பி உழைத்தால், வெற்றி வலிய வந்து உங்களை அடையும்.

இங்ஙனம்,
உங்கள் மெய்யன்பைப் பொன்னெனப் போற்றும்,
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

பாடத் திட்டம்

Abstracts from the latest Departmental Syllabuses—S.S.L.C. Public Examination (Reorganised Course)—Published in The Fort St. George Gazette dated 27-1-1954.

GENERAL

The place of the Regional Language in the curriculum.— The Regional Language or the mother-tongue shall be the First Language of the curriculum of studies and also the medium of instruction in all subjects of the curriculum. According to the scheme of language studies in secondary schools approved in G. O. No. 2121, Education, dated 27th July 1950, the First Language will be either the Regional Language or the pupils' mother-tongue. It will consist of two parts (Parts I and II) of which the study of Part I will be compulsory and under Part II, students will be allowed to choose a further study of the Regional Language or the mother-tongue studied under Part I or a classical or any other Indian language except Hindi, only a student studying Hindi as his mother-tongue under Part I being permitted to choose it under Part II also. Four periods in a thirty-five period week will be assigned to Part I and three to Part II or its alternative. The essential features of the syllabuses herein given are expected to be followed in respect of the methods of teaching the language in all the forms of the secondary school courses.

Chief features of the syllabuses in the Regional Languages :- (1) For Parts I and II of the First Language in the Forms IV to VI the syllabuses will be as detailed.

(2) The aim of the course of study under Part I is the ol attainment of the ability to speak and write the language accurately and grammatically on the topics and experiences within the range of the pupils' study at the high school stage and their conditions of living at this stage and to make use of the language as a vehicle of expression as well as of further independent study for pleasure or instruction. The course of study, under Part II, of the same language as under Part I, envisages the further attainment, at the end of the high school course, of standard of knowledge which will be complete in itself for the needs of an intelligent and cultured adult life without any necessity for a further study in the university except for the purpose of specialization in the language or of raising individual's standard of attainment in the language commensurately with other

studies of the university course. The latter course also envisages the passing into the Intermediate class a better type of language student than at present.

*** *** ***

(3) For the teaching of these syllabuses, a higher standard of general knowledge is expected in the teachers of the languages.

(4) Emphasis should be laid on the training of pupils to write not only accurately and grammatically but also clearly and lucidly and on the use of text-books at the higher stages to serve the interests of cultural aims and literary appreciation. The language should be simple and direct and suited to the themes. It should at the same time aim at enriching progressively the active vocabulary of the pupils. Special efforts should be made to ensure on the part of the pupils both in speech and writing exactness and precision of expression. Exaggeration and vague expression should be discouraged. The enriching of the vocabulary should be directed towards the study of words and phrases expressing delicately different shades of meaning and to their proper use. For example the same degree of precision should be achieved in the Regional Language as is achieved in English by the use of the words beautiful, suitable, ample, superior, agreeable, proper. etc., for all of which it is not unusual to find the word 'good' used in most of the Regional Languages.

*** *** ***

(11) As for the scheme of the S. S. L. C. Public Examination for Parts I and II of language study, it will be as follows :—

(*a*) (*i*) *Part I.—Paper I.*—The paper will be of 2½ hours' duration with the maximum marks as 60. It will contain question on text and textual grammar.

(*ii*) *Part I.—Paper II.*—The paper will be of two hours' duration with the maximum marks as 40. It will contain three questions—two questions on Composition—one from each of the two non-detailed texts and one question on translation from English to the language. Scope may be given for choice in answering the questions from the non-detailed texts; the candidates will, however, be required to answer one question at least from each of the non-detailed books studied

by him. The length of the Composition will be not more than two pages. The distribution of marks will be as follows :—

For each Composition 15 marks ...	30	marks.
Translation	10	,,
	40	

NOTE.—If there is only one non-detailed text-book in a language both the questions will be from the same book.

There will be no question on original or general Composition in this paper.

தேர்வு விளக்கமும் மதிப்பெண்களும்

பொதுப் பிரிவாகிய முதற் பகுதிக்கு உரிய வினாத்தாள்கள் 2.

முதற்றாள் :

மதிப்பெண்கள் : 60

காலம் : 2½ மணி

பாடங்கள் :

செய்யுள், நடைமுறை இலக்கணம், உரைநடை.

மதிப்பெண்களின் பகுப்பு (ஏறத்தாழ) :

செய்யுள்	28
நடைமுறை இலக்கணம்	12
உரைநடை	20
	60

இரண்டாந் தாள் :

மதிப்பெண்கள் : 40

காலம் : 2 மணி

பாடங்கள் :

துணைப்பாடக் கட்டுரைகள் இரண்டு, மொழிபெயர்ப்பு.

மதிப்பெண்களின் பகுப்பு :

இரு பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவி லிருந்தும் ஒவ்வொரு கட்டுரை	$15 \times 2 = 30$
மொழிபெயர்ப்பு	10
	40

மனப்பாடம் செய்ய வேண்டிய பகுதிகள்

மாணவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டிய செய்யுட்கள் கீழே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. மனப்பாடப் பகுதிக்கென்று தேர்வில் 6 மதிப்பெண்கள் ஒதுக்கப்பெற்றுள்ளன. எனவே எல்லாச் செய்யுட்களையும் மாணவர்கள் மனப்பாடஞ் செய்தல் இன்றியமையாததாகும்.

மனப்பாடஞ் செய்யும் முறை : ஒரு பாடலைப் பத்து அல்லது பதினைந்து முறைகள் சொல்லிப் பார்ப்பதும், ஒரே அடியைப் பல முறைகள் சொல்லிப் பார்ப்பதும் மாணவர்கள் பெரும்பாலும் மனப்பாடம் செய்யப் பின்பற்றும் முறையாகும். அதனினும் சிறந்த முறை உள்ளது. நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனப்பாடப் பகுதி முழுவதையும் ஒவ்வொரு முறை படித்துப் பார்த்தல் வேண்டும். ஒரு முறை முழுவதையும் படிப்பதற்கு ஏறத்தாழப் பத்து நிமிடங்கள் ஆகலாம். தொடக்கத்தில் ஒரு மாதத்திற்கு எந்தப் பாடலும் மனப்பாடம் ஆகவில்லைபோல் தோன்றும். அதுபற்றி அலுப்பும் சலிப்பும் கொள்ள வேண்டாம். நாள்தோறும் தொடர்ச்சியாக ஒவ்வொரு முறை படித்துப் பார்த்து வந்தால், மூன்று மாதங்கட்குள்ளாக எல்லாச் செய்யுட்களும் மனப்பாடம் ஆகிவிடும். இஃது ஓர் உள நூல் முறையாகும்.

பின்பற்ற வேண்டிய விதிகள்

1. ஏதேனும் ஓர் இசையில் அமைத்துப் படித்தல்.

2. சொற்களைப் பிரித்துப் படியாமல் சீர்களுக்கு ஏற்றவாறு பிரித்துப் படித்தல்.

3. ஓர் அடியுடன் மற்றோர் அடியைச் சேர்த்துப் படியாமல் இருத்தல்.

4. இயன்ற வரையில் பொருளினை மனத்திற் கொண்டு படித்தல். (இது தொடக்கத்தில் இயலாது. ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே இயல்வதாகும்.)

5. பிழையின்றி உச்சரித்தல்.

6. படிக்குங்கால் பாடலின் எதுகையிலும், மோனையிலும் நினைவினைப் பதித்தல்.

7. ஆண்டின் இறுதிப் பகுதியில் இயன்றால் சில முறைகள் எழுதிப் பார்த்தல்.

8. நிறுத்தக் குறிகளை உளத்தில் அமைத்து, எழுதுங்கால் பின்பற்றுதல்.

வரிகள்

திருவருட்பா 4

அப்பா! நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தை! நின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவ! நினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

மலரும் மாலையும் 4

நாடிப்புலங்கள்...
....
....
....
....
....
....
....அடைக்கலமே.

(இச்செய்யுளை நீங்களே பார்த்து எழுதிக் கொள்ளுங்கள்.)

திருக்குறள் 40

ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.
2. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.
3. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.
4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

வரிகள்

5. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.
6. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.
7. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.
8. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்.
9. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.
10. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

வாய்மை

1. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.
2. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.
3. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.
4. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.
5. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.
6. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
எல்லா வறமுந் தரும்.
7. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.
8. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.
9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.
10. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

வரிகள்

சிலப்பதிகாரம் 8

(வரி 26 முதல் 29 வரை)

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் றிறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ.

(வரி 36 முதல் 39 வரை)

மண்டேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ.

கம்பராமாயணம் 24

10. "தருவனத்துள் யானியற்றுந் தகைவேள்விக்
கிடையூறுத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணஞ்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி"யென வுயிரிரக்குங்
கொடுங்கூற்றி னுளையச் சொன்னான்.

11. எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா லெனவுழந்தான்
கடுந்துயரங் கால வேலான்.

12. தொடையூற்றிற் றேன்றுளிக்கு நறுந்தாரா
னொருவண்ணந் துயர நீங்கிப்
"படையூற்ற மிலன்; சிறிய னிவன்; பெரியோய்!
பணியிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் புரந்தரனும்
நான்முகனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக" என்றான்.

வரிகள்

குசேலோபாக்கியானம் 4

சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூக ராவார்;
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவார்;
குறிபெறு கண்ணு ளாரும் குருடராய் முடிவ ரன்றே.

புறநானூறு 5

அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையுமிலமே.

கலிங்கத்துப்பரணி 4

2. பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்.

பெருந்தொகை 8

இரவு நண்பக லாகி லென்பகல்
இருள றுவிர வாகிலென்
இரவி யெண்டிசை மாறி லென்கடல்
ஏழு மேறிலென் வற்றிலென்
மரபு தங்கிய முறைமை பேணிய
மன்னர் போகிலென் ஆகிலென்
வளமை யின்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே;
கருது செம்பொனின் அம்ப லத்திலோர்
கடவுள் நின்று நடிக்குமே;
காவி ரித்திரு நதியி லேயொரு
கருணை மாமுகில் துயிலுமே;
தருவு யர்ந்திடு புதுவை யம்பதி
தங்கு மானிய சேகரன்
சங்க ரன்தரு சடைய னென்றொரு
தரும தேவதை வாழவே.

ஆக வரிகள் ... 101

ஓ

பாட அட்டவணை

↓ வாரத்து வேலை நாட்கள்	I பிரிவேளை	II பிரிவேளை	III பிரிவேளை	IV பிரிவேளை	V பிரிவேளை	VI பிரிவேளை	VII பிரிவேளை	VIII பிரிவேளை
நேரம் →								
திங்கள்								
செவ்வாய்								
புதன்								
வியாழன்								
வெள்ளி								

BOOK-PRIZES TO V FORM PUPILS*

FREE! **FREE!**

LIFCO SILVER JUBILEE PRIZE SCHEME

WE have just completed twenty-five years of useful service in the cause of our students. To mark the occasion, and in token of our grateful appreciation of the continuous support we have been having from students, teachers and parents, we propose to give **liberal BOOK-PRIZES to V Form pupils of 1954-55 in all High Schools in Madras and Andhra States,** on the basis of the results of their **FIRST** Examination in 1954-55.

ENTRY is free and is open to V Form pupils of all High Schools. Details of the SCHEME will be submitted to Heads of Schools in June/July 1954.

WE request the Heads of Schools to study the SCHEME when it reaches them, and to permit the V Form pupils to take part in it.

MADRAS-17,
7TH MAY, 1954. } *THE LITTLE FLOWER CO.*

*Pupils of S. S. L. C. 1955 are requested to see Pages (L) to (P).

நாள்	கிழமை	ஜூலை 1954	பள்ளி வேலை நாட்கள்
1	வி.		
2	வெ.		
3	ச.		
4	ஞா.		
5	தி.		
6	செ.		
7	பு.		
8	வி.		
9	வெ.		
10	ச.		
11	ஞா.		
12	தி.		
13	செ.		
14	பு.		
15	வி.		
16	வெ.		
17	ச.		
18	ஞா.		
19	தி.		
20	செ.		
21	பு.		
22	வி.		
23	வெ.		
24	ச.		
25	ஞா.		
26	தி.		
27	செ.		
28	பு.		
29	வி.		
30	வெ.		
31	ச.		

விழி ; எழு ; உழை !

நாள்	கிழமை	ஆகஸ்ட் 1954	பள்ளி வேலை நாட்கள்
1	ஞா.		
2	தி.		
3	செ.		
4	பு.		
5	வி.		
6	வெ.		
7	ச.		
8	ஞா.		
9	தி.		
10	செ.		
11	பு.		
12	வி.		
13	வெ.		
14	ச.		
15	ஞா.		
16	தி.		
17	செ.		
18	பு.		
19	வி.		
20	வெ.		
21	ச.		
22	ஞா.		
23	தி.		
24	செ.		
25	பு.		
26	வி.		
27	வெ.		
28	ச.		
29	ஞா.		
30	தி.		
31	செ.		

அறிவுடையார் எல்லாம் உடையார்.

நாள்	கிழமை	செப்டம்பர் 1954	பள்ளி வேலை நாட்கள்
1	பு.		
2	வி.		
3	வெ.		
4	ச.		
5	ஞா.		
6	தி.		
7	செ.		
8	பு.		
9	வி.		
10	வெ.		
11	ச.		
12	ஞா.		
13	தி.		
14	செ.		
15	பு.		
16	வி.		
17	வெ.		
18	ச.		
19	ஞா.		
20	தி.		
21	செ.		
22	பு.		
23	வி.		
24	வெ.		
25	ச.		
26	ஞா.		
27	தி.		
28	செ.		
29	பு.		
30	வி.		

கடமைக்குப்பின் உரிமை.

நாள்	கிழமை	அக்டோபர் 1954	பள்ளி வேலை நாட்கள்
1	வெ.		
2	ச.		
3	ஞா.		
4	தி.		
5	செ.		
6	பு.	ஆயுத பூசை	
7	வி.		
8	வெ.		
9	ச.		
10	ஞா.		
11	தி.		
12	செ.		
13	பு.		
14	வி.		
15	வெ.		
16	ச.		
17	ஞா.		
18	தி.		
19	செ.		
20	பு.		
21	வி.		
22	வெ.		
23	ச.		
24	ஞா.		
25	தி.		
26	செ.		
27	பு.		
28	வி.		
29	வெ.		
30	ச.		
31	ஞா.		

கண்கண்ட தெய்வம் கலைமகளே.

நாள்	கிழமை	நவம்பர் 1954	பள்ளி வேலை நாட்கள்
1	தி.		
2	செ.		
3	பு.		
4	வி.		
5	வெ.		
6	ச.		
7	ஞா.		
8	தி.		
9	செ.		
10	பு.		
11	வி.		
12	வெ.		
13	ச.		
14	ஞா.		
15	தி.		
16	செ.		
17	பு.		
18	வி.		
19	வெ.		
20	ச.		
21	ஞா.		
22	தி.		
23	செ.		
24	பு.		
25	வி.		
26	வெ.		
27	ச.		
28	ஞா.		
29	தி.		
30	செ.		

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்.

நாள்	கிழமை	டிசம்பர் 1954	பள்ளி வேலை நாட்கள்
1	பு.		
2	வி.		
3	வெ.		
4	ச.		
5	ஞா.		
6	தி.		
7	செ.		
8	பு.		
9	வி.		
10	வெ.		
11	ச.		
12	ஞா.		
13	தி.		
14	செ.		
15	பு.		
16	வி.		
17	வெ.		
18	ச.		
19	ஞா.		
20	தி.		
21	செ.		
22	பு.		
23	வி.		
24	வெ.		
25	ச.		
26	ஞா.		
27	தி.		
28	செ.		
29	பு.		
30	வி.		
31	வெ.		

பாடுபட்டால் பயன் உண்டு.

நாள்	கிழமை	ஜனவரி 1955	பள்ளி வேலை நாட்கள்
1	ச.		
2	ஞா.		
3	தி.		
4	செ.		
5	பு.		
6	வி.		
7	வெ.		
8	ச.		
9	ஞா.		
10	தி.		
11	செ.		
12	பு.		
13	வி.		
14	வெ.		
15	ச.		
16	ஞா.		
17	தி.		
18	செ.		
19	பு.		
20	வி.		
21	வெ.		
22	ச.		
23	ஞா.		
24	தி.		
25	செ.		
26	பு.		
27	வி.		
28	வெ.		
29	ச.		
30	ஞா.		
31	தி.		

நாள்	கிழமை	பிப்ரவரி 1955	பள்ளி வேலை நாட்கள்
1	செ.		
2	பு.		
3	வி.		
4	வெ.		
5	ச.		
6	ஞா.		
7	தி.		
8	செ.		
9	பு.		
10	வி.		
11	வெ.		
12	ச.		
13	ஞா.		
14	தி.		
15	செ.		
16	பு.		
17	வி.		
18	வெ.		
19	ச.		
20	ஞா.		
21	தி.		
22	செ.		
23	பு.		
24	வி.		
25	வெ.		
26	ச.		
27	ஞா.		
28	தி.		

முயற்சி திருவினை ஆக்கும்.

நாள்	கிழமை	மார்ச்சு 1955 பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி	பள்ளி வேலை நாட்கள்
1	செ.		
2	பு.		
3	வி.		
4	வெ.		
5	ச.		
6	ஞா.		
7	தி.		
8	செ.		
9	பு.		
10	வி.		
11	வெ.		
12	ச.		
13	ஞா.		
14	தி.		
15	செ.		
16	பு.		
17	வி.		
18	வெ.		
19	ச.		
20	ஞா.		
21	தி.		
22	செ.		
23	பு.		
24	வி.		
25	வெ.		
26	ச.		
27	ஞா.		
28	தி.		
29	செ.		
30	பு.		
31	வி.		

வெற்றி முரசு கொட்டுக.

S. S. L. C. 1955*

THE LIFCO BOOK-PRIZES

FOR PROFICIENCY IN TAMIL

THE SCHEME

INTRODUCTORY:

WHEREAS THERE HAS BEEN A TENDENCY ON THE PART OF CERTAIN PUPILS to neglect their study of Tamil in the beginning of the School Year, and WHEREAS THE LITTLE FLOWER CO. sincerely desire, in a spirit of service to the pupils of S. S. L. C. 1955, to create among the said pupils an enthusiasm *to study earnestly even from the first day of the re-opening* of the School, they propose to award prizes in the shape of some useful books and certificates to deserving pupils, subject to certain terms and conditions as set out below.

In a similar way, 405 pupils of S. S. L. C. 1954 got the LIFCO BOOK-PRIZES AND CERTIFICATES in all the languages, and a list of such Prize-Winners was sent on 27-3-1954 to Heads of Schools for favour of circulation and publication on the Notice Board.

THE LITTLE FLOWER CO. appeal to the teachers and the taught and to the Heads of Institutions to make this PRIZE SCHEME of S. S. L. C. 1955 *also*, however humble it may be, a greater success.

TERMS & CONDITIONS:

1. Pupils, studying in recognised High Schools and appearing for the S. S. L. C. Public Examinations of Madras and Andhra States to be held in March 1955 are eligible to participate in the above Scheme.

2. **Private candidates are not eligible to take part in this Scheme.**

3. **PROFICIENCY IN TAMIL:** THE LITTLE FLOWER CO. will judge the pupils by the marks they get in the TAMIL paper (all the papers put together if there be more than one paper) in the very **FIRST** examination held in their Schools, the results of which are openly announced to the pupils. Among the participants in this Scheme, the **FIRST 100** pupils — *subject to the students getting a minimum of 50%* — in

* Pupils of V Form (1954–55) are requested to see Page (B).

TAMIL (judged by the marks as recorded in the entry form) will **EACH** get a prize in the shape of some useful book or books to the value of **NOT LESS THAN Rs. 4.** The choice of the books is left entirely to the discretion of THE LITTLE FLOWER CO. and the books may be in English or/and in any other language.

NOTE: All the entries of *all* High Schools will be pooled together and judged. Ranks will then be allotted ; *e.g.*, supposing the highest among the entries received is 65%, the I prize will go to that pupil ; supposing 3 of them next get each 64%, II to IV prizes will go to these 3, and in this way a *maximum* of 100 prizes will be given ; note that no pupil who gets less than 50% can get any prize. The number of prizes may be increased at the discretion of THE LITTLE FLOWER CO.

In addition to the Prize-Books, each of the Prize-Winners will get also a CERTIFICATE, charmingly printed, with the sign and seal of THE LITTLE FLOWER CO.

4. The pupil who desires to participate in this Scheme shall fill in the entry form, attached hereto, carefully and correctly, get it **COUNTERSIGNED** by the concerned **Tamil** Teacher and also by the Head of the School and get it **RUBBER-STAMPED WITH THE SEAL OF THE SCHOOL.** The entry form duly filled in, signed and rubberstamped, should be sent, addressed to "THE LITTLE FLOWER CO., THE S. S. L. C. PRIZE DEPARTMENT, MADRAS-17." To avoid unnecessary postal expenses, pupils may join together and send all their coupons in one cover. Coupons relating to different languages may also be sent in one cover affixing suitable postage stamps.

5. The above form must reach THE LITTLE FLOWER CO., *AFTER* the 1st day of November 1954 and *BEFORE* the 31st day of December 1954. THIS IS VERY IMPORTANT. Entries received *before* 1-11-1954 or *after* 31-12-1954 **will not be taken into consideration.**

6. The entries in the form will be taken as final for the purpose of the award of Prizes. No plea of error or inaccuracy in making the entries that may be discovered later, on a comparison with the School records, will be admitted by the Publishers.

7. THE LITTLE FLOWER CO. will, soon after 31-12-1954, take up the scrutiny of the entry forms, *judge who are all entitled to the Prizes and the Certificates, and will post ordinary cards to the*

Prize-Winners direct, who must, within about 10 days from the posting of such cards, remit to THE LITTLE FLOWER CO., Madras-17, Re. 1-8-0 **(for each language)** *by Money Order to cover the incidental charges in connection with the despatch of the Prize-Books and the Certificates. No stamps or money order should be sent beforehand and if anything be so sent, that amount will not be taken into account.*

NOTE: Every effort will be taken to keep up to the time-limit mentioned above. But, no specific guarantee is given in that regard and the Publishers shall not be answerable for any kind of delay.

Amounts relating to different languages may also be sent by one and the same Money Order. The amount should be sent *only in the shape of a Money Order and under no circumstances, will any concession be shown with regard to the said amount.* **So, Madras City candidates should also send the Money Order.**

The Prize-Books and the Certificates, with the Publishers' best wishes, will be despatched by Registered Packet Post individually to only those Prize-Winners who respond to the above intimation in time.

8. A list of Prize-Winners will, *if convenient*, be sent to Heads of Schools for favour of display on the Notice Board.

NOTE: **A list of S. S. L. C. 1954 Prize-Winners was sent on 27-3-1954 to Heads of Schools for favour of circulation and publication on the** Notice Board.

9. THE LITTLE FLOWER CO. reserve the discretion to alter the terms and conditions of this Scheme, if thereby no Prize-Winner is affected adversely.

10. *No responsibility will be accepted for any articles lost, mislaid or delayed in transit.* No correspondence can be entered into or interviews granted except at the direction of the Proprietor of THE LITTLE FLOWER CO. The decision of the said Proprietor on all matters relating to this Scheme is absolutely final and legally binding and is AN EXPRESS CONDITION of the entry.

11. The various terms, conditions, instructions etc. set out herein and in the entry form constitute a binding contract between the Company and the participant, and the signature of the pupil in the form will be taken as his or her absolute consent to the terms and conditions of the Scheme. The contract shall be deemed to be made in the City of Madras.

CUT HERE ---------- CUT HERE

THE ENTRY FORM

for participating in

THE LIFCO BOOK-PRIZES FOR

PROFICIENCY IN TAMIL [S. S. L. C. 1955]

2

1. (*a*) Name of the School :..

   (*b*) *VI Form ;* Section :..

   (*c*) Town :....................(*d*) District :....................

2. Name (in full and in BLOCK letters) of the pupil and full house address to which the Prize-Books & the Certificate (which will be despatched on or before 28—2—1955) should be sent, in case the pupil becomes entitled to them :..

   ....

   ....

   ....

3. Name of the *first* School Examination held in the School Year, of which the results were announced to the pupils (*e.g., is it weekly, quarterly, half-yearly etc.*) and which has been duly entered in the school records :..

4. Percentage of marks got by the pupil in TAMIL in the above examination (in figures & words) :.........

   ....

   NOTE : If there were more than one paper in TAMIL in the above examination, the percentage of marks in all the papers taken together should be given. Pupils who get below 50% cannot take part in this Scheme.

5. State whether the pupil has entered for the LIFCO Prize Scheme of S. S. L. C. 1955 in other languages (English, Samskrit & Telugu), if so, the names of the languages so offered :..

....

[P.T.O.] ***Signature of the pupil***

CERTIFICATE BY THE TAMIL TEACHER & BY THE HEAD OF THE SCHOOL :

The entries given on the reverse are correct.

....

Signature of the Tamil *Teacher and Date.*

....

Signature of the Head of the School and Date.

SEAL OF THE SCHOOL :

IMPORTANT : This form should be fully filled up in INK and in ENGLISH with care, and should reach "THE LITTLE FLOWER CO., THE S. S. L. C. PRIZE DEPARTMENT, MADRAS-17" on or after 1-11-1954 and before 31-12-1954. **This is very important. Entries received after this date will *not* be considered.** Scoring out, alterations or corrections, should be properly attested by the Head of the School by signing in full. **The seal of the School should also be obtained on this form.**

NOTE : (1) For **Tamil**, this coupon only should be filled up; entries filled in coupons relating to other languages, or filled in blank papers are not valid.

(2) Private candidates cannot take part in this Scheme.

(3) No other letter or chit should be attached to this Coupon; no stamps or money order should be sent beforehand.

(4) To avoid unnecessary postal expenses, pupils may join together and send all their coupons in one cover. Coupons relating to different languages may also be sent in one cover.

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

எடுத்துக்கொண்ட வினை இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கடவுளை வாழ்த்தி வணங்குவது தமிழர் மரபு. அதுபற்றியே நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துக்கள் காணப்படுகின்றன. 'வாழ்த்துதல்' என்பது தொழிற் பெயர். அஃது ஈண்டு வாழ்த்துச் செய்யுளை உணர்த்தியது. எனவே 'வாழ்த்து' என்பது தொழிலாகு பெயர்.

1. திருவருட்பா

பொருளும் இலக்கணக் குறிப்புக்களும் 'திருவருட்பா' என்னுஞ் சொற்றொடர் 'திரு + அருள + பா' என்று பிரிக்கப்படும். திரு + அருள் = திருவருள். "ஏனை உயிர் வழிவவ்வும்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி ஈண்டு வகர உடம்படுமெய் இடையே தோன்றியது. அருள் + பா = அருட்பா. "லளவேற்றுமை யிற்றடவும் அல்வழி அவற்றோடுறழ்வும் வலிவரின் ஆம்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி ளகரம் டகரமாகத் திரிந்தது இச்சொற்றொடர்க்கு 'இறைவன் திருவருளால் இயற்றப்பட்ட பாடல்கள்' என்றும், 'இறைவனது திருவருளைப் பெறுதற் பொருட்டுப் பாடப்பெற்ற பாடல்கள்' என்றும் இருவிதமாகப் பொருள்கள் கொள்ளலாம். முதற் பொருள் கொண்டால் இச்சொற்றொடர் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைஆகும். இரண்டாம் பொருள் கொண்டால் இச்சொற்றொடர் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆகும். 'திரு' என்பது மங்கல அடைமொழியாகும்.

நூலின் தன்மை: இந்நூலின்கண் பக்திச் சுவை சொட்டும். சமரச நோக்கத்துடன் பாடப்பெற்ற இந்நூல் சன்மார்க்கத்தை உலகினர்க்கு எடுத்துரைக்கும் முறையில் அமைந்துள்ளது. இந்நூல் சொல்லழகும், பொருளழகும், எளிமையும் வாய்ந்தது.

நூலின் பகுப்பு முறை: இந்நூல் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பெற்றுள்ளது; ஏறத்தாழ ஆறுபிரம் பாக்களைக் கொண்டது. ஈண்டுப் பாடமாக வந்துள்ள செய்யுள் ஆறாந் திருமுறையின்கண் உள்ள 'சுத்த சன்மார்க்க வேண்டுகோள்' என்னும் பகுதியில் முதற் செய்யுளாக அமைந்துள்ளது.

எனைத்தானும் நல்லவை கேட்க.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: இராமலிங்க அடிகள்.

வேறு பெயர்கள்: வள்ளலார், திருவருட்பிரகாசர், அருட்பிரகாச வள்ளலார் முதலியன.

பிறந்த ஊர்: சிதம்பரத்தை அடுத்த மருதூர்.

பிறந்த ஆண்டு: 1823.

மரபு: கருணீகர் மரபு.

தந்தை: இராமையா பிள்ளை.

தாய்: சின்னம்மையார்.

சமயம்: தொடக்கத்தில் சைவம், பின்பு சமரச சன்மார்க்க சமயம்.

வாழ்ந்த ஊர்: வடலூர்.

பரப்பிய கொள்கைகள்: உயிர்களிடத்து அன்பு, சமரச சன்மார்க்கம், சாதிசமய வேறுபாடு இன்மை முதலியவை.

இயற்றிய உரை நடைநூல்கள்: மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் முதலியன.

இயற்கை எய்திய ஆண்டு: 1873.

இராமலிங்க அடிகளார் இறைவனிடம் வேண்டுவன

பதவுரை

அப்பா - தந்தை போன்றவனே,

நான் வேண்டுதல் - நான் விரும்பிக் கேட்கின்றவற்றை

கேட்டு - (அருள் கூர்ந்து) கேட்டு

அருள் புரிதல் வேண்டும் - (என் விருப்பங்கள் நிறைவேறுமாறு) அருள் செய்தல் வேண்டும்.

ஆர் உயிர்கட்கு எல்லாம் - அரிய உயிர்கட்கெல்லாம்

நான் அன்பு செயல் வேண்டும் - அன்பு காட்டும் இயல்பினை யான் பெற வேண்டும்.

எப்பாரும் - எவ்வுலகத்திலும்

எப்பதமும் - எந்நிலையிலும்

எங்கணும் - எல்லா இடங்களிலும்

நான் சென்று - நானே போய்,

எந்தை - எம் தந்தையாகிய

நினது - தங்களுடைய

அருள் புகழை - அருளால் பெறும் புகழை

இயம்பிடல் வேண்டும் - யாவருக்கும் எடுத்துரைக்கும் பண்பினை யான் பெற வேண்டும்.

செப்பாத - (இத்தகையதென்று) சொல்லப்படாத

மேல் நிலைமேல் - மிக உயர்ந்த நிலைமையில்

சுத்த சிவமார்க்கம் - தனிச் சைவ நெறியானது

திகழ்ந்து ஓங்க - விளங்கித் தழைக்குமாறு

அருள் சோதி - (தங்களுடைய) அருளாகிய ஒளியினை

செலுத்தியிடல் வேண்டும் - வெளிப்படுத்தும் திறமையை யான் பெற வேண்டும்.

தப்பு ஏது நான் செயினும் - எத்தகைய குற்றத்தை யான் செய்தாலும்

நீ பொறுத்தல் வேண்டும் - தாங்கள் பொறுத்தருள வேண்டும்.

தலைவ ! - முதன்மையானவனே !

நினை - உன்னை

பிரியாத - விட்டு நீங்காத

நிலைமையும்-(சமீப) பதவியையும்

வேண்டுவன் - (யான்) விரும்புவேன்.

கருத்துரை: உயிர்களிடத்தில் அன்பு காட்டும் இயல்பையும் இறைவனுரது அருளாற் பெரும் புகழினை எடுத்துரைக்கும் பண்பினையும், இறைவனுரின் அருளொளியை எங்கும் பரப்பும் திறமையையும், சமீப பதவியையும் இராமலிங்க அடிகளார் இறைவனுரிடம் வேண்டுகின்றுர். தாம் எத்தகைய பிழை செய்தாலும் பொருத்தருளும்படியும் அவர் இறைவனுரிடம் கேட்கின்றுர்.

விளக்கவுரை

அப்பா: இறைவனுர் அருள் மிக்கவர் ஆதலாலும், உலகத்து உயிர்கட்குத் தந்தைபோல் இருப்பவராதலாலும், அவர் 'அப்பா' என்று அழைக்கப்பட்டார். ஆருயிர்: பிறருடைய அன்பு இல்லாவிடில் தங்குதற்கு அரியவையாதலால் உயிர்கள் 'ஆருயிர்' எனப்பட்டன. அருட்புகழ்: இறைவனுருடைய அருளால் வருகின்ற புகழ். இறைவனது அருளைப் பெற்றுல் பெரும் புகழ் கிடைக்குமாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. சுத்த சிவமார்க்கம்: தனிச் சைவ நெறி. அன்பே சிவம்' என்பது ஆன்றேர் கண்ட பொருளாகும். எனவே 'சைவ நெறி' என்பது அன்பு நெறியேயாகும். தப்பேது நான் செயினும் நீ பொருத்தல் வேண்டும்: நான் எப்பிழை செய்தாலும் தாங்கள் அதனைப் பொறுக்க வேண்டும். பிழை செய்வது மக்களின் இயற்கையாதலாலும், கடவுளே உலகத்து உயிர்களையெல்லாம் ஆட்டுவிக்கின்றுராதலாலும், 'பொறுத்தல்' என்பது கடவுளுக்கு இயற்கையாதலாலும் இராமலிங்க அடிகளார் இவ்வாறு கூறினுர். மாணிக்கவாசகனுரும், "நன்றே செய்வேன் பிழை செய்வேன் நானே இதற்கு நாயகமே" என்று பாடியமை ஈண்டு உணரற்பாற்று. நினைப்பிரியாத நிலை: சமீப நிலை; இறைவனுருக்கு அருகில் இருக்கும் நிலை. இறைவனுரது புகழைப் பாடவும், சிவ நெறியைத் தழைக்கச் செய்யவும், அவரிடம் அன்பு செலுத்தவும் இயல்கின்ற திறத்தினைத் தமக்கு அருளுமாறு அடிகளார் இறைவனுரை வேண்டுகின்றுர். தாம் குற்றஞ் செய்யின் அதனைப் பொறுத்தருளுமாறும் கடவுளை வேண்டுகின்றுர் இராமலிங்க அடிகளார்.

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.

இலக்கணக் குறிப்பு : அப்பா : சேய்மை விளி ; தந்தைபோன்று அருள புரிபவன் என்று பொருள்படுதலால் உவமையாகு பெயர். அருமை + உயிர் = ஆருயிர் : பண்புத்தொகை. எப்பார், எப்பதம் : புற வினுக்கள். அருள் + புகழ் = அருட்புகழ் : 'அருளாற் பெறும் புகழ்' என்று விரிதலால் இது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. அருள + சோதி = அருட்சோதி : அருளானது சோதியாக ஈண்டு உருவகம் செய்யப்பட்டுள்ளது. இச்சொற்றொடர் 'அருளாகிய சோதி' என்று விரியும். தப்பு + ஏது = தப்பேது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி, ஈண்டுக் குற்றியலுகரம் மறைந்தது. தலைவ : அண்மை விளி. நிலைமையும் : 'ஏனைய நிலைமைகளோடு, நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவன்' என்று பொருள்படுதலால் ஈண்டு உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஏ : ஈற்றசை. வேண்டுவன் : தன்மை ஒருமை வினைமுற்று.

2. மலரும் மாலையும்

பெயர்க் காரணம் : மலர் போன்றது செய்யுள். மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை போன்றது செய்யுட்களால் தொடுக்கப் பெற்ற நூல். பல மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலை போன்றிருத்தலால் இந்நூல் 'மலரும் மாலையும்' என்னும் பெயரைப் பெற்றது. மலர் என்பதும், மாலை என்பதும உவமையாகு பெயர்கள்.

செய்யுட்களின் இயல்பு : இந்நூலின்கண் உள்ள செய்யுட்கள் மிகவும் எளியவை ; சொல்லழகும், பொருளழகும் வாய்ந்தவை.

நூலின் பிரிவு : இந்நூல் அஞ்சலி, இலக்கியம், இயற்கையின்பம், மழலை மொழி, உள்ளமும் உணர்வும், வையமும் வாழ்வும், சமூகம் என்னும் ஏழு பிரிவுகளை உடையது. நமக்குப் பாடமாக வந்துள்ள பாடல், 'அஞ்சலி' என்னும் பகுதியின்கண் முதற் பாடலாக அமைந்துள்ளது.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்.

பிறந்த ஊர் : திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுசீந்திரத்தை அடுத்த தேரூர் என்னும் சிற்றூர்.

பிறந்த ஆண்டு : 1876.

தந்தையார் : சிவதாணுப் பிள்ளை.

தாயார் : ஆதிலட்சுமி அம்மாள்.

அலுவல் பார்த்த நிலையங்கள் : கோட்டாறு இடைநிலைப் பள்ளி, நாகர்கோயில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, திருவனந்தபுரம்

மகளிர் ஆசிரியைப் பள்ளி, திருவனந்தபுரத்தில் மகளிர்க்குரிய அரசர் கல்லூரி.

ஓய்வு பெற்ற ஆண்டு: 1931.

இயற்றிய வேறு நூல்கள்: ஆசிய சோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்.

கலைமகள் துதி

பதவுரை

புலங்கள் - வயல்களை
நாடி - (நல்லனவாக) ஆராய்ந்து
உழுவார் - (ஏர்கொண்டு உழுது பண்படுத்தும்) உழவர்களுடைய
கரமும் - கையையும்,
நய உரைகள் - இன்சொற்களை
தேடி - ஆராய்ந்து பார்த்து
கொழிக்கும் - மிகுதியாகத் தருகின்ற
கவிவாணர் - கவிஞர்களுடைய
நாவும் - நாவினையும்,
செழும் கருணை - பேரருள்
ஓடிப் பெருகும் - வளர்ந்து பரவுகின்ற
அறிவாளர் - அறிஞர்களுடைய
நெஞ்சம் - மனத்தையும்
உவந்து - விரும்பி,
நடம் ஆடி - (அவ்விடங்களில்) நடனம் ஆடி
களிக்கும் - மகிழ்கின்ற
மயிலே - மயில்போன்ற கலைமகளே!
உன் பாதம் - உன் திருவடிகளினிடத்தில்
அடைக்கலம் - (நான்) அடைக்கலம் அடைந்தேன்.

கருத்துரை: 'கலைமகளே! உன்னை நான் அடைக்கலமாக அடைந்தேன். நீ எனக்கு அருள் செய்' என்கின்றார் ஆசிரியர்.

விளக்கவுரை

நாடிப்புலங்கள் உழுவார்: நல்ல வயல்களைத் தேடி உழுது, பயிர்த்தொழில் செய்யும் உழவர்கள். வளம் மிகுந்த மண் நிறைந்த வயல்களைத் தேடி உழுது, பயிர்த்தொழில் செய்வது உழவர்களின் இயல்பு. நயவுரைகள் தேடிக் கொழிக்குங் கவிவாணர்: இன் சொற்களை ஆராய்ந்து மிகுதியாகத் தருதல் புலவர்களுக்கு இயல்பாகுமாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. கவிவாணர்: கவிஞர்: 'கவிகள் இயற்றி வாழ்பவர்' என்பது இச்சொற்றொடரின் பொருளாகும். கருணை ஓடிப்பெருகும் அறிவாளர்: அறிஞர்கள் எப்பொழுதும் பேரருள் கொண்டு விளங்குவர்; அருளை எங்கும் பரப்புவர். அறிவாளர்: அறிவினை ஆள்பவர். நடம் ஆடிக் களிக்கும் மயில்: மயில்போன்ற சாயல் உடையவள் கலைமகள். கலைமகள்

உழவர் கரத்திலும், புலவர் நாவிலும், அறிஞர் நெஞ்சிலும் தங்குவாளாதலால் இங்ஙனம் கூறப்பட்டாள். தொழிலும், கல்வியும், ஒழுக்கமும் சிறக்கின்ற இடங்களில் கலைமகள் தங்குவாள் என்று சொல்லப்படுவதுண்டு. அதற்கேற்ப ஆசிரியர் ஈண்டுப் பாடியுள்ளார். உழவர் கரத்தைத் தொழில் நிற்கும் இடமாகவும், கவிஞர் நாவைக் கல்வி நிலைபெறும் இடமாகவும், அறிஞர் நெஞ்சை ஒழுக்கம் நிலைபெற்றுள்ள இடமாகவும் ஆசிரியர் ஈண்டுக் கூறுகின்றார். அழகிய இடங்களில் மயில் நின்று மகிழ்ச்சியோடு ஆடும். அதுபோலக் கலைமகள் உழவர் கையிலும், கவிஞர் நாவிலும், அறிஞர் நெஞ்சிலும் விரும்பித் தங்குகின்றாள்.

இலக்கணக் குறிப்பு : நாடி, தேடி, ஓடி, உவந்து, ஆடி. வினையெச்சங்கள். உழுவார் : வினையாலணையும் பெயர். உழுவார் கரம்: ஆறும் வேற்றுமைத் தொகை. நயவுரை, செழுங்கருணை : பண்புத் தொகைகள். 'வாழ்நர்' என்பது 'வாணர்' என்று வந்தது மரூஉ மொழி. மயில் : ஈண்டு மயில்போன்ற சாயலை உடைய கலைமகளை இச்சொல் குறிக்கின்றதாதலால் இஃது உவமையாகு பெயர். மயிலே: சேய்மை விளி. பாதம் : பால்பகா அஃறிணைப் பெயர். அடைக்கலமே : ஈண்டு ஏகாரம் தேற்றம்.

நல்லொழுக்கப் பயிற்சி

எடுத்துக்கொண்ட வினை இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கடவுளை வாழ்த்தி வணங்குவது தமிழர் மரபு. கடவுளை வாழ்த்தினால் அவரது அருள் கிடைக்கும் என்பர் பெரியோர். ஏன்? கடவுளினிடத்தில் மனம் நிலைபெற்றால், தீயன நினைத்தல், தீயன செய்தல், தீயன பேசுதல் என்பவை நம்மை விடுத்து அகன்றுவிடும். அப்பொழுது, எடுத்த வினையைத் தொடுத்து முடிக்க வேண்டும் என்னும் எண்ணம் நமக்கு உண்டாகும். அந்நினைவினால் நாம் வினையை முடிக்க ஒருமுகமாக முயல்வோம். அவ்வாறு முயன்றால் எடுத்துக்கொண்ட வினை இடையூறின்றி இனிது முடியும். ஆகவே, வினை செய்யத் தொடங்குங்கால் கடவுளை வாழ்த்தி நினைத்து, மனத்தை ஒரு நிலைப்படுத்துதல் இன்றியமையாதது.

II. அறவுரை

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையா அறவுரைகள் அமைந்த பாடல்களை இப்பகுதி தன்னகத்தே கொண்டுள்ளது.

1. திருக்குறள்

பெயர்க் காரணம்: திரு + குறள் = திருக்குறள்: "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி ஈண்டுக் ககரம் மிக்கது. 'திரு' என்பது மங்கல அடைமொழி. குறள் - குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். வெண்பா வகைகளுள் 'குறள் வெண்பா' என்பது ஒன்றாகும். அஃது இரண்டடிகள் கொண்டுவரும். குறுகிய அடிகளான் இயன்ற காரணத்தால் இவ்வகை வெண்பாவிற்குக் குறள் வெண்பா என்னும் பெயர் வந்தது. 'குறள்' என்னும் சொல் ஈண்டுக் குறள் வெண்பாக்களை உணர்த்தாமல் குறள் வெண்பாக்களான் இயன்ற நூலைக் குறித்தது. 'குறள்' என்னுஞ் சொல் கருவியாகு பெயராய் முதற்கண் குறள் வெண்பாக்களையுணர்த்திப் பிறகு, அவ்வெண்பாக்களான் இயன்ற நூலை உணர்த்துகின்றது. ஆகவே அச்சொல் இருமடியாகு பெயர் ஆகும். 'திருக்குறள்' என்பது அடை அடுத்த கருவியாகு பெயர் ஆகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள்: பழந்தமிழர் ஒழுக்கங் கூறும் நூல்களைப் பதினெட்டு என்று தொகைப் படுத்தியுள்ளனர். அத்தகைய பதினெட்டு நூல்களுள் ஒன்று திருக்குறள் ஆகும். பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் : 1. நாலடியார், 1. நான்மணிக்கடிகை, 3. இனியவை நாற்பது, 1. இன்னா நாற்பது 5. கார் நாற்பது, 6. களவழி நாற்பது, 7. ஐந்திணை ஐம்பது, 8. ஐந்திணை எழுபது, 9. திணைமொழி ஐம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. திருக்குறள், 12. திரிகடுகம், 13. ஆசாரக்கோவை, 14, பழமொழி, 15. சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக் காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை என்பன பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆவன.

நூலின் வேறு பெயர்கள்: முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவப் பயன், தெய்வ நூல், உத்தர வேதம் என்பன திருக்குறளுக்கு அமைந்த வேறு பெயர்கள் ஆவன.

நூலின் பிரிவு: இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பிரிவுகளை உடையது. மூன்று பால்களிலும் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பப்பத்துக் குறட்பாக்கள் அமைந்துள்ளன. இந்நூலின்கண் அமைந்துள்ள குறட்பாக்கள் 1330 ஆவன. மூவகைப் பால்களை (பிரிவுகளை) உடைய காரணத்தாலேயே இந்நூலுக்கு 'முப்பால்' என்னும் பெயர் அமைந்தது.

நூலின் பெருமை :

1. இந்நூல் ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளாக மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. சாதிசமயப் பிணக்குகட்கும், நிறம், மொழி, நாடு பற்றிய வேறுபாடுகட்கும் அப்பாற்பட்டு விளங்குவதாலேயே இந்நூல் அவ்வாறு போற்றப்பட்டு வருகின்றது.

2. இந்நூல் உலகப் பொது நூலாகும். அதுபற்றியே இந்நூல் கிரீக், இலத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

3. இந்நூலின் பெருமையை விளக்கவே 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுந்தது. சங்கப் புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது அந்நூல்.

4. திருக்குறட் கருத்துக்களை எடுத்தாளாத புலவர்கள் இலர் என்னலாம்.

5. "தமிழ்க்குக் கதியாவார் இருவர்" என்பர் ஆன்றோர். 'கதி' என்னுஞ் சொல்லின்கண் உள்ள, 'க' என்னும் எழுத்தானது கம்பரையும், 'தி' என்னும் எழுத்தானது திருவள்ளுவரையும் குறிக்கும்.

6. "ஆலும் வேலும் பல்லுக் குறுதி ; நாலும் இரண்டுஞ் சொல்லுக் குறுதி" என்பது ஒரு பழமொழி. இதன்கண் 'நாலும்' என்பது நாலடியாரையும், 'இரண்டும்' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

7. "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றும் இந்நூலாசிரியராகிய வள்ளுவனாரைப் பாரதியார் பாராட்டியுள்ளார்.

நூலின் உரையாசிரியர்கள் : பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் முதலிய பத்துப் பெரும் புலவர்கள் இந்நூலுக்கு உரையெழுதியுள்ளனர். கிடைத்த உரைப்பகுதிகளையெல்லாம் அமைத்து, தருமபுர ஆதீனத்தார் 'திருக்குறள் - உரைவளம்' என்னும் பெயருடன் நல்ல பதிப்பொன்றினை வெளியிட்டுள்ளனர்.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : திருவள்ளுவனார்.

தாய் : ஆதி என்பர்.

தந்தை : பகவன் என்பர்.

ஊர் : 'மயிலை' என்னும் மயிலாப்பூர்.

காலம் : கடைச் சங்கத்தின் இறுதிக் காலம். அஃதாவது கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டாகும்.

மனைவி : வாசுகியம்மையார் என்பர்.

'வள்ளுவர்' என்ற பெயர்க் காரணம்: 'வள்ளுவர்' என்பது குடிப் பெயர் என்பர் சிலர். தமிழ் நாட்டுப் பழங்குடிகளுள் வள்ளுவர் குடியும் ஒன்று அக்குடியினரால் வளர்க்கப்பட்ட காரணத்தால் அப்பெயர் அவருக்கு அமைந்தது என்பர் வேறு சிலர். 'வள்ளுவர்' என்னுங் குடியினர், யானைமீது ஏறி அமர்ந்து, பறையறைந்து, அரசனது ஆணையை மக்களுக்குக் கூறும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். அரசர்க்கு அரயசில் நெறியின் வழி வகைகளைக் கூறுதல் வள்ளுவக் குடியினர்க்கு உரிய அலுவலாகும் என்பர் பின்னுஞ் சிலர்.

ஆசிரியரின் வேறு பெயர்கள்: முதற் பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார், நாயனார், தேவர், மாதாநுபங்கி, தெய்வப் புலவர், பெருநாவலர், நான்முகனார் முதலியன வள்ளுவனாரைக் குறிக்கும் வேறு பெயர்கள் ஆவன.

ஆசிரியரைப்பற்றி வழங்கும் கதை: "வள்ளுவனார் ஆதியென்னும் புலைச்சிக்கும், பகவன் என்னும் அந்தணர்க்கும் பிறந்தார். அவர் பிறந்த ஊர் மயிலாப்பூர். மகவைப் பெற்றவளவில் பெற்றோர் அவ்விடத்தை விடுத்து அகன்றனர். பின்னர் வள்ளுவர் குடியைச் சேர்ந்து ஒருவர் அக்குழந்தையை எடுத்து வளர்த்தார். அக்குழந்தை கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியது. வள்ளுவனார் பின்பு வாசுகி என்னும் பெண்ணை மணந்து, நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்தார். வாசுகியம்மையார் கணவனாரின் சொற்படியே நடக்கும் இயல்புடையவராக இருந்தார். அவர் தாம் இயற்றிய திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்கண் அரங்கேற்றினார். திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் யாவரும் ஒவ்வொரு பாட்டுப் பாடினர். அப்பாடல்களின் தொகுதியே 'திருவள்ளுவ மாலை' ஆகும்" என்பன போன்ற செய்திகள் வள்ளுவனாரைப்பற்றிக் கூறப்படுகின்றன. இவற்றை உண்மையென்று கோடற்குரிய சான்றுகள் முற்றும் கிடைத்தில.

பாடப் பகுதி: ஈண்டுப் பாடமாக வந்துள்ள அதிகாரங்கள் இரண்டு ஆவன. அவை ஒழுக்கமுடைமை, வாய்மை என்பன. அவ்விரண்டும் திருக்குறள் அறத்துப்பாலின்கண் முறையே 14-ஆம் அதிகாரமாகவும், 30-ஆம் அதிகாரமாகவும் உள்ளன.

(1) ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உடைமை: நல்லொழுக்கம் உடையவர்களாதல், "தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல்" என்று பரிமேலழகரும், "தத்தம் குலத்திற்கும், இல்லத்திற்கும் ஏற்ற ஒழுக்கம் உடையாராதல்" என்று மணக்குடவரும், "தான் பிடித்த நன்னெறியை மறவாமல் மரணாந்த மட்டும் கொண்டொழுகுதல் என்று பரிதியாரும் இச்சொற்றொடர்க்கு விளக்கம் கூறியுள்ளனர்.

ஒழுக்கத்தின் சிறப்பு (1, 2)

1. ஒழுக்கம் உயிரினும் சிறந்தது

பதவுரை

ஒழுக்கம் - நல்லொழுக்கமானது
விழுப்பம் தரலான் - (எல்லார்க்கும்) சிறப்பினைத் தருதலான்
ஒழுக்கம் - அவ்வொழுக்கம்
உயிரினும் - உயிரைக் காட்டினும்
ஓம்பப்படும் - (சிறந்ததாக) பாதுகாக்கப்படும்.

கருத்துரை: ஒழுக்கம் உயர்வைத் தரும். எனவே, உயிர் போவதாயினும் ஒழுக்கத்தை விடலாகாது.

விளக்கவுரை

ஒழுக்கம் என்பது உயர்ந்தார்க்கும், இழிந்தார்க்கும் ஒப்ப உயர்வு தருமாதலால் பொதுப்பட ஈண்டுக் கூறப்பட்டது. அவ்வாறு பெருமையைத் தருவதுதான் ஒழுக்கம் என்று கொள்ளுதல் வேண்டும். **ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்:** உயிர் எல்லாப் பொருளினும் சிறந்தது என்பது உண்மையே. ஆனல் அஃது ஒழுக்கத்தைப்போல உயர்வைத் தாராமையின் 'உயிரினும் ஓம்பப்படும்' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: விழுப்பம்: உரிச்சொல். உயிரினும்: உம்மை ஈண்டு உயர்வு சிறப்பும்மை. விழுப்பம் தரலால்: இரண்டாம் வேற்றுமைத் தொகை.

2. இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது ஒழுக்கம்

பதவுரை

தெரிந்து - (அறங்கள் பலவற்றையும்) ஆராய்ந்து
ஓம்பி - (அவற்றுள் இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது யாதென்று) மனத்தை ஒருப்படுத்தி
தேரினும் - தேர்ந்து முடிவு கண்டாலும்
துணை - துணையாய் முடிவது
அஃதே - அவ்வொழுக்கமே யாகும் (ஆதலால்)
ஒழுக்கம் - ஒழுக்கத்தினை
ஓம்பி - (ஒன்றாலும் அழிவுபடாமல்) போற்றி
பரிந்து - வருத்தப்பட்டாயினும்
காக்க - காத்தல் வேண்டும்.

கருத்துரை: நல்லொழுக்கம் இம்மைக்கும் மறுமைக்கும் துணையாகும். எனவே எது நேரிடினும் அவ்வொழுக்கத்தை காத்தல் வேண்டும்.

விளக்கவுரை

ஓம்புதல்: அழிவுபடாமல் பேணுதல்; மனத்தை ஒருப்படுத்துதல்; மனத்தை அடக்குதல் - மனத்தை வேறு வழிகளிற் செல்லவிடாமல்

ஒழுக்கத்தின் கண்ணேயே செலுத்துதல். தெரிந்து - அறங்கள் பல வற்றை ஆராய்ந்து.

இலக்கணக் குறிப்பு: 'பரிந்தும்' என்பது 'பரிந்து' என நின்றது: உம்மை ஈண்டுச் செய்யுள் விகாரத்தால் தொக்கது. ஓம்பி: வினையெச்சம். காக்க: முன்னிலை வியங்கோள் வினைமுற்று. அஃதே: ஈண்டு ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்துள்ளது. வருந்தி ஓம்புதல் வருந்தாது ஓம்புதல் என்னும் இரண்டினுள்ளே, 'வருந்தியும் ஓம்புக' என்றலின் ஈண்டு 'பரிந்து' என்பதன்கண் உள்ள உம்மை எதிரது தழுவி நின்ற எச்ச உம்மை.

ஒழுக்கம் உள்வழிப்படும் குணமும், இல்வழிப்படுங் குற்றமும் (3—7)

3. ஒழுக்கம் உடைமையே குலன் உடைமை

பதவுரை

ஒழுக்கம் உடைமை - (எல்லோர்க்கும் தத்தம் வருணத்திற்கு ஏற்ற) ஒழுக்கம் உடைமையே

குடிமை - உயர் குலன் உடைமை ஆகும்.

இழுக்கம் - அவ்வொழுக்கத்தி லிருந்து தவறுதல்

இழிந்த பிறப்பாய்விடும் - தாழ்ந்த குலத்தினராகச் செய்துவிடும்.

கருத்துரை: ஒழுக்கம் உடையோர் உயர்குலத்தவர். ஒழுக்கம் கெட்டோர் இழிகுலத்தவர்.

விளக்கவுரை

குடிமை: குலன் உடைமை; குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம். இழிந்த குலத்திற் பிறந்தவராகக் கருதப்படுவர் ஒழுக்கம் உடைமையால் உயர் குலத்தவர் ஆவராதலின் 'ஒழுக்கம் உடைமை குடிமை' எனப்பட்டது. இழுக்கம்: ஒழுக்கத்திலிருந்து தவறுதல்; ஒழுக்கம் கெடுதல். இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்: உயர்ந்த குலத்தில் பிறந்தவராயினும் ஒருவர் தம் ஒழுக்கத்திலிருந்து தவறினால் அவர் தாழ்ந்த குலத்தோராகக் கருதப்படுவாராதலால் இங்ஙனம் கூறப்பட்டது. இக்குறளால் குலத்தின் உயர்வும் தாழ்வும் கருதி மக்களுக்குப் பெருமையும் சிறுமையும் ஏற்றுதல் கூடாது என்பதும், ஒழுக்கத்தையும், இழுக்கத்தையுங் கொண்டே உயர்வும் தாழ்வும் ஏற்றுதல் வேண்டும் என்பதும் கூறப்பட்டன. ஒழுக்கம் உள்ள வழி வரும் குணத்தைக் காட்டிலும், ஒழுக்கம் இல்லாத வழி வரும் குற்றம் பெரியது என்னும் கருத்தையும் இக்குறட்பா வெளிப்படுத்துகின்றது.

செய்தக்க செய்யாமையானும் கெடும்.

இலக்கணக் குறிப்பு: ஒழுக்கம், இழுக்கம்: தொழிற் பெயர்கள். இழிந்த: பெயரெச்சம். ஒழுக்கம் உடைமை: இரண்டாம் வேற்றுமைத் தொகை.

4. ஒழுக்கம் கல்வியினும் உயர்ந்தது

பதவுரை

பார்ப்பான் - அந்தணன்

ஒத்து - (தான்கற்ற) வேதத்தினை ஓத

மறப்பினும் - மறந்தானாயினும்

கொளலாகும் - (அவ்வருணம் கெடாமையால்) அவன் பின்பு அதனை ஓதிக் கொள்ளலாம் (ஆனால் அவ்வந்தணனது)

பிறப்பு - உயர் குலமானது

ஒழுக்கம் குன்ற - அவனது ஒழுக்கம் கெட்ட அளவில்

கெடும் - பெருமையை இழந்து கெட்டுவிடும்.

கருத்துரை: ஒழுக்கம் இல்லாமல் கல்வியைப் பெறுதலைக் காட்டிலும், கல்வியில்லாமல் ஒழுக்கத்துடன் இருப்பது சிறந்தது.

விளக்கவுரை

மறப்பினும்: வேதம் ஓதுதலை மறந்தானாயினும் மறந்தாலும் அந்தணன் இழிந்த குலத்தானவான் ஆகலின், மறக்கலாகாது என்னும் கருத்துப்பற்றி 'மறப்பினும்' என்றார் வள்ளுவனார். 'ஒழுக்கம் குன்றப் பார்ப்பான் பிறப்புக் கெடும்' என்று இயைத்துப் பொருள் கொள்க. சிறப்புப்பற்றி அந்தணர் மரபுக்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும். கல்வியினும் ஒழுக்கம் வலிதானது என்னும் கருத்துப்பற்றியே ஆசிரியர் இங்ஙனம் கூறினார்.

இலக்கணக் குறிப்பு: பார்ப்பான்: வேதம் முதலிய நூல்களைப் பார்ப்பவன்: காரணப் பெயர். கொளல்: தொழிற் பெயர். மறப்பினும்: ஈண்டு உம்மை, 'மறத்தலாகாது' என்னும் எதிர் மறைப் பொருள் தந்து நிற்கின்றது. எனவே இவ்வும்மை எதிர் மறையும்மை. குன்ற: இறந்தகால வினையெச்சம்.

5. ஒழுக்கம் இன்றி உயர்வு இல்லை

பதவுரை

அழுக்காறு - (பிறர் ஆக்கம் கண்டு) பொறாமையை

உடையான் கண் - உடையவனிடத்தில்

ஆக்கம் போன்று - செல்வம் (இல்லையாகுதல்) போல

ஒழுக்கம் இலான் கண் - நல்லொழுக்கம் இல்லாதவனிடத்திலும்

உயர்வு இல்லை - உயர்ச்சி இல்லை.

கருத்துரை: ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்ச்சி தோன்றாது. அவன் உயர்வை அடையமாட்டான்.

விளக்கவுரை

அழுக்காறு: பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளுதல். "பிறர் ஆக்கம் முதலாயன கண்டு பொறாமையால் வருகின்ற மனக் கோட்டம்" என்று மணக்குடவரும், "பிறர் செல்வம் கண்டு, 'இவனுக்கு இந்தப் பாக்கியம் வந்ததே' என்று சொல்லும் மன அழுக்கு" என்று பரிதியாரும் இச்சொல்லுக்கு விளக்கம் கூறியுள்ளனர். ஆக்கம்போன்று: செல்வம் இல்லைபாயினும் போல, அழுக்காறுடையவன்கண் செல்வம் நில்லாதாதலின் இவ்வாறு கூறப்பட்டது. இக்குறட்பாவினால், ஒழுக்கம் இல்லாதவனுடைய சுற்றத்தினர்க்கும் உயர்வு இல்லை என்பது குறிப்பினால் வெளிப்படுகின்றது.

இலக்கணக் குறிப்பு: அழுக்காறு: இஃது ஒரு சொல். அழுக்கறு என்பது பகுதி. அப்பகுதி திரிந்து இவ்வாறு நின்றது. எனவே அழுக்காறு என்பது முதனிலை திரிந்த தொழிற் பெயர், உடையான்கண், இலான்கண்: இரண்டிடங்களிலும் உள்ள 'கண்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு. ஆக்கம்: காரிய ஆகுபெயர். உடையான், இலான்: குறிப்பு வினையாலணையும் பெயர்கள். இச்செய்யுளின்கண் உவமையணி அமைந்துள்ளது.

6. மனவலிமை உடையோர் ஒழுக்கம் குறையப் பெறார்.

பதவுரை

உரவோர் - மனவலிமையை உடையவர்கள்,

இழுக்கத்தின் - ஒழுக்கக் கேட்டால்

ஏதம் - (தமக்கு இழிகுலமாகிய) குற்றம்

படுபாக்கு அறிந்து - உண்டாவதை அறிந்துகொண்டு

ஒழுக்கத்தின் - (செய்தற்கு அருமை நோக்கி) அவ்வொழுக்கத்தில்

ஒல்கார் - சுருங்கமாட்டார்கள்.

கருத்துரை: ஒழுக்கம் கெட்டால் குலச் சிறுமை உண்டாகும் என்பதை மனவலிமையுடையோர் அறிவர். எனவே அவர்கள் தம் ஒழுக்கம் வழுவப் பெறார்.

விளக்கவுரை

ஒழுக்கத்தின் ஒல்கார்: (மனவலிமையுடையோர்) நல்லொழுக்கத்தில் சுருங்கமாட்டார்கள்; நல்லொழுக்கத்தையே மேற்கொள்ளுதல் அரியது என்றெண்ணி, அவ்வொழுக்கத்திலிருந்து வழுவிவிடமாட்டார்கள். எவ்வளவு அரியதாயினும், நல்லொழுக்கத்தை அவர்கள் மேற்கொள்ளுவர் என்பது கருத்து. உரவோர்: மனவலிமை உடையோர்;

னது வரினும் கலங்காத வலிய மனம் உடையோர். கொண்ட விரதத்தை விடாமைபற்றி அவர்கள் 'உரவோர்' எனப்பட்டனர்.

இலக்கணக் குறிப்பு: அறிந்து: வினையெச்சம். அஃது ஈண்டுக் காரணப் பொருட்டாய் நின்றது. ஒல்கார்: எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று; பாக்கு: ஈண்டு விகுதி.

7. ஒழுக்கத்தால் மேன்மையும், இழுக்கத்தால் பழியும் வரும்

பதவுரை

ஒழுக்கத்தின் - (எல்லாரும்) நல்லொழுக்கத்தால்
மேன்மை - மேம்பாட்டை
எய்துவர் - அடைவர்
இழுக்கத்தின்-ஒழுக்கத்தினின்று வழுவுதலால்
எய்தாப் பழி - தாம் அடைதற்கு உரித்தல்லாத பழியை
எய்துவர் - (யாவரும்) அடைவர்.

கருத்துரை: ஒழுக்கத்தால் மேம்பாடும், ஒழுக்கம் வழுவாதலால் பழியும் எல்லோருக்கும் உண்டாகும்.

விளக்கவுரை

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை: எவ்வளவு தாழ்ந்தோராயினும், அவரிடம் நல்லொழுக்கம் இருந்தால், அவர் மேம்பாட்டை அடைவர். பிறப்புப்பற்றி உயர்வு வராது என்பதும், ஒழுக்கத்தாலேயே உயர்வு வரும் என்பதும் இதனால் கூறப்பட்டன. எய்தாப் பழி எய்துவர்: ஒழுக்கம் வழுவியவர் தாம் அடைதற்கு உரித்தல்லாத பழியையும் அடைவர். ஒழுக்கங் கெட்டவர்களைப்பற்றிப் பிறர் அடாப் பழி கூறினாலும், அவர்கள் ஒழுக்கம் கெட்டிருக்கின்ற காரணத்தால், உலகம் அவ்வடாப் பழியையும் உண்மையாகக் கொள்ளும் என்றவாறு. இக்குறளுக்கு மணக்குடவர், "ஒழுக்கத்தாலே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர்; அஃது இன்மையாலே தமக்கு அடாத பழியை எய்துவர்" என்று பொருள் கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு: எய்தா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 'எல்லாரும்' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. அது தோன்ரு எழுவாய் ஆகும்.

8. ஒழுக்க இழுக்கங்களின் பின் விளைவுகள்

பதவுரை

நல்லொழுக்கம் - (ஒருவனுக்கு) நல்லொழுக்கமானது
நன்றிக்கு - அறத்திற்கு
வித்தாகும் - காரணமாக இருந்து (அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும்) இன்பத்தைத் தரும்.

தீயொழுக்கம் - தீய ஒழுக்கமானது
என்றும் - இம்மையிலும், மறுமையிலும்
இடும்பை தரும் - துன்பத்தைத் தரும்.

கருத்துரை: நல்லொழுக்கம் இம்மை மறுமைகளில் இன்பம் தரும்; தீயொழுக்கம் இம்மை மறுமைகளில் துன்பம் தரும்.

விளக்கவுரை

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்றதனால் 'தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாகும்' என்பது பெறப்படும். தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்றதனால் 'நல்லொழுக்கம் என்றும் இன்பம் தரும்' என்பது பெறப்படும். வித்தாகும்: விதை எவ்வாறு முளைத்துப் பின்பு பயன் தருகின்றதோ அதுபோலவே நல்லொழுக்கமும் அறப்பயன் விளைவதற்குக் காரணமாக இருக்கும். இதற்கு, "வித்து நிலத்திலே ஊன்றப்பட்டதுபோல, இந்த இரண்டு ஒழுக்கங்களுள் ஒன்று ஒரு சமயத்திலே நிலைத்து நிற்குமானால், பின்பு தன் பயனாகிய இன்பத்தையானாலும் துன்பத்தையானாலும் தருவது நிச்சயம்" என்று இராமானுசக் கவிராயர் உரை விளக்கம் கூறியுள்ளார்.

இலக்கண குறிப்பு: நன்மை+ஒழுக்கம்=நல்லொழுக்கம்; தீமை+ஒழுக்கம்=தீயொழுக்கம். நல்லொழுக்கத்தை 'வித்து' என்று கூறியது ஏது உருவக அணி ஆகும்.

சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்கள் (9, 10)

9. ஒழுக்கம் உடையோர் தீய சொற்களை வாய் தவறியும் கூறார்

பதவுரை

ஒழுக்கம் உடையவர்க்கு - ஒழுக்கம் உடைவர்க்கு
வழுக்கியும் - மறந்தும்
தீய - தீய சொற்களை
வாயால் சொலல் - தம் வாயால் சொல்லும் தொழில்கள்
ஒல்லா - இயலாது

கருத்துரை: நல்லொழுக்கம் உடையவர்கள் தீய சொற்களைப் பேசுதல் இயலாது.

விளக்கவுரை

வழுக்கியும்: மறந்தும்; ஆராய்ந்து பாராமல் வாய் தவறியும். தீய: தீய சொற்கள். பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலாயினவும், தத்தம் குலத்திற்கு உரியவல்லாதனவுமான சொற்கள் தீய சொற்கள் ஆவன. சொல்லுதல் தொழில் பலவகைப்படுமாதலால் 'தீய' என்ற பன்மைச் சொல் எடுத்தாளப்பெற்றது. வாயால் சொலல்:

'சொலல்' என்று கூறுவதே போதுமானது. 'வாயால்' என்னுஞ் சொல் வேண்டாத சொல்லாகும். வாயினற் கூறுமல், பிற உறுப்புக் களால் கூற முடியாதன்றோ? ஆயின் வள்ளுவனர் ஏன் ஈண்டு 'வாயால்' என்னும் வேண்டாத சொல்லை அமைத்தார்? நல்ல சொற் கள் பயிலும் உறுப்பாகவே வாய் அமைய வேண்டும் என்பது அவரது விருப்பம். அதனை வலியுறுத்திச் சிறப்பித்துக் கூறும்பொருட்டே 'வாயால்' என்னுஞ் சொல்லை அவர் ஈண்டுக் கூறினர்; இவ்வாறு கூறுதலை வடநூலார் 'தாற்பரியம்' என்பர். "ஒழுக்கம் உடையவர் மறந்து சொல்லினும் பிறர்க்கு நன்மை தருஞ் சொற்களையே சொல்லு வர்" என்று இக்குறட்பாவிற்கு இராமானுசக் கவிராயர் கருத்துரை கூறியுள்ளார். இக்குறளால் சொல்லால் வரும் ஒழுக்கம் கூறப்பட் டது.

இலக்கணக் குறிப்பு: தீய: குறிப்பு வினையாலணையும் பெயர். சொலல்: சாதி யொருமை. வழுக்கியும்: 'நினைத்துச் சொல்லுதலும் கூடாது' என்பதனைத் தழுவி நிற்பதனல், ஈண்டுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை.

10. உயர்ந்தோரைப் பின்பற்றி ஒழுகுதலே அறிவுடைமை

பதவுரை

உலகத்தோடு - உயர்ந்தோர் ஒழுகிய ஒழுக்கத்தோடு

கல்லார் - கல்லாதார்

பல - பல நூல்களையும்

ஒட்ட ஒழுகல் - பொருந்த ஒழுகுதலை

கற்றும் - கற்றாராயினும்

அறிவிலாதார் - அறிவில்லாதார் ஆவர்:

கருத்துரை: எவ்வளவு நூல்களைக் கற்றாலும், உயர்ந்தோர் ஒழுகிய ஒழுக்கத்தைப் பின்பற்றி நடவாதவர் அறிவில்லாதார் ஆவர்.

விளக்கவுரை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல்: உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என் பதற்கேற்ப ஈண்டு 'உலகம்' என்பதற்கு 'உயர்ந்தோர்' என்று பொருள் கொள்ளப்பட்டது. அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத் திற்கு ஏலாதனவற்றை ஒழிக்க வேண்டும். அறநூல் சொல்லாதன வற்றுள் இக்காலத்திற்கு ஏற்பனவற்றைக் கொள்ள வேண்டும். அக் கருத்துப்பற்றியே 'உலகத்தோடு ஒப்ப' என்று வள்ளுவனர் கூறினர். பல கற்றும் அறிவிலாதார்: கல்விக்குப் பயன் அறிவாகும். அறி விற்குப் பயன் ஒழுக்கமாகும். எனவே உயர்ந்தோர் ஒழுகிய ஒழுக் கத்தைக் கல்லாதார், 'பல கற்றும் அறிவிலாதார்' ஆவர். இக்குற ளுக்கு "இஃது, ஒழுக்கமாவது உயர்ந்தார் ஒழுகின நெறியில் ஒழுகுதல் என்பதூஉம், அவ்வொழுக்கம் கல்வியினும் வலியுடைத்து என்பதூஉம்

கூறிற்று" என்று மணக்குடவர் விளக்கவுரை கூறியுள்ளார். இக் குறளால் செயலால் வரும் ஒழுக்கம் கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: உலகம்: இடவாகு பெயர். உலகத்தோடு: 'ஒடு' என்பது மூன்றாம் வேற்றுமை உருபு. ஒழுகல்: தொழிற் பெயர். பல: குறிப்பு வினையாலணையும் பெயர். கல்லார்: வினையாலணையும் பெயர்.

(2) வாய்மை

வாய்மை: அஃதாவது மெய்யினது தன்மை. வாய்மை, மெய்ம்மை, உண்மை என்னும் சொற்கள் ஒரு பொருளனவாயினும், அவற்றுக்குள் நுட்பமான வேறுபாடு உண்டு. 'வாய்மை' என்பது வாயின் தன்மை 'மெய்ம்மை' என்பது மெய்யின் தன்மை. 'உண்மை' என்பது உள்ளத்தின் தன்மை. பிறிதோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்வதே வாய்மையாகும் என்று வள்ளுவனார் விளக்கம் கூறியுள்ளார். எனவே வாயினாற் சொல்லப்படுஞ் சொற்களும், மெய்யினாற் செய்யப்படுஞ் செயல்களும், உள்ளத்தினால் நினைக்கப்படும் எண்ணங்களும் பிறிதோர் உயிர்க்குத் தீங்கு தராதனவாக இருக்க வேண்டும் என்னும் கருத்துப்பற்றியே வாய்மை, மெய்ம்மை, உண்மை என்னுஞ் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

வாய்மை, பொய்மைகளின் இலக்கணம் (1, 2)

1. வாய்மையின் இலக்கணம்

பதவுரை

வாய்மை எனப்படுவது - மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது
யாது எனின் - யாது என்று வினவின்
தீமை - (பிறிதோர் உயிர்க்கு) தீங்கினை
யாதொன்றும் - சிறிதேனும்
இலாத - பயவாத சொற்களை
சொலல் - சொல்லுதல் ஆகும்.

கருத்துரை: பிறிதோர் உயிர்க்குச் சிறிதும் தீங்கு தராத சொற்களைச் சொல்வதே வாய்மை ஆகும்.

விளக்கவுரை

தீமை யாதொன்றும் இலாத என இயைக்க.

எனப்படுவது: என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது. 'ஊர் எனப்படுவது உறையூர்' என்னும் பழமொழியும் இத்தகைய பொருளிலேயே அமைந்துள்ளது. **யாதொன்றும் தீமை இலாத சொலல்:** பிறிதோர் உயிர்க்குச் சிறிதும் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதல். 'இதனால் நிகழ்ந்தது கூறல்தான் வாய்மை' என்னும் கருத்து

விளக்கப்பட்டது. 'பிறிதோர் உயிர்க்குத் தீங்கு பயவாதிருப்பின், நிகழ்ந்தது கூறுதல் வாய்மையேயாகும்; தீங்கு பயந்தால் நிகழ்ந்தது கூறுதல் பொய்ம்மையாகும்' என்பது கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு: எனின்: வினையெச்சம். சொலல்: தொழிற் பெயர்.

2. பொய்ம்மையும் வாய்மையாகும் இடம்

பதவுரை

புரை தீர்ந்த - (பிறர்க்கு) குற்றம் தீர்ந்த

நன்மை - நன்மையை

பயக்கும் எனின் - தருமாயின்

பொய்ம்மையும் - பொய்ம்மைச் சொற்களும்

வாய்மை இடத்த - மெய்ம்மைச் சொற்களின் தன்மையை உடையவாம்.

கருத்துரை: நிகழாததைக் கூறுதலாகிய பொய்ம்மையும் பிறர்க்கு நன்மை பயக்குமாயின், வாய்மையாகவே கருதப்படும்.

விளக்கவுரை

புரை தீர்ந்த நன்மை: அறம். பிறிதோர் உயிர்க்குத் தீங்கு தராததே அறமாகலின், அது குற்றம் தீர்ந்த நன்மை எனப்பட்டது. **நன்மை பயக்கும் எனின்:** அறத்தினைப் பயக்குமாயின். அறத்தினைப் பயத்தலாவது, கேடாவது இறப்பாவது எய்த நின்றதோர் உயிர், அச்சொற்களின் பொய்ம்மையால், அதிலிருந்து நீங்கி இன்புறுதல். 'நிகழாதது கூறலும் நன்மை பயவாதாயின் பொய்ம்மையாம்; பயப்பின் மெய்ம்மையாம்' என்பது ஈண்டுக் கூறப்பட்டுள்ள கருத்தாகும். பரிமேலழகர், "இவை இரண்டு பாட்டாலும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும், மெய்ம்மை எனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது" என்று கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு: தீர்ந்த - பெயரெச்சம். பொய்ம்மையும்: உம்மை ஈண்டு இறந்தது தழுவிய எச்சவும்மை ஆகும்; இழிவு சிறப்பும்மை யாகவும் கொள்ளலாம்.

3. பொய் மறையாமையின், அது கூறலாகாது

பதவுரை

தன் நெஞ்சு - (ஒருவன்) தன் மனம்

அறிவது - அறிவதொன்றினை

பொய்யற்க - (பிறர் அறிந்திலர் என்று கருதி) பொய்யாது ஒழிக.

பொய்த்தபின் - பொய்த்தானாயின்
தன் நெஞ்சே - (அதனை அறிந்த) தனது நெஞ்சமே
தன்னை - (அப்பாவத்திற்குச் சான்றாய் நின்று) தன்னை
சுடும் - (அதன் பயனாகிய) துன்பத்தை எய்துவிக்கும்.

கருத்துரை: ஒருவன் தன் மனச்சான்றுக்கு மாறாகப் பொய் கூறலாகாது. கூறினால் அவனது மனமே அவனுக்குத் துன்பத்தைத் தரும்.

விளக்கவுரை

தன்னெஞ்சே தன்னைச் சுடும்: பொய் சொல்லியவனது மனம், அவன் பொய் சொல்லிய பான்மையை அறியும். எனவே அவனது மனமே அவனைத் துன்புறுத்தும். பிறர் அறிந்திலராயினும், ஒருவன் பொய் கூறியதை அவனது மனம் உணரும் என்றவாறு. ஒருவன் பொய் கூறினால், அதற்குச் சான்று அவனது மனமேயாகும். இக்கருத்து,

"கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்"

என்னும் கலித்தொகைப் பாடலின்கண்ணும் வந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு: பொய்யற்க: எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. பொய்த்தபின்: இது 'பொய்த்தானாயின்' என்று பொருள்படுகின்றது. எனவே இது 'பின்' என்பதொரு வாய்பாடு பெற்ற வினையெச்சம். "பின் முன் கால் கடை" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கேற்ப ஈண்டு இவ்வாய்ப்பாட்டைப் பெற்றது. நெஞ்சே: ஏகாரம் பிரிநிலை

4. வாய்மையால் விளையும் இம்மைப் பயன்

பதவுரை

உள்ளத்தால் - (ஒருவன்) தன் மனத்திற்கு ஏற்ப
பொய்யாது - பொய் கூறாது
ஒழுகின் - ஒழுகுவானாயின் (அவன்)
உலகத்தார் - உயர்ந்தவர்களின்
உள்ளத்துள் எல்லாம் - உள்ளத்தின்கண் எல்லாம்
உளன் - உளனாவான்.

கருத்துரை: பொய் கூறாதவன், உயர்ந்தவர்களால் எப்பொழுதும் மதிப்புடன் நினைக்கப் பெறுவான்.

விளக்கவுரை

உள்ளத்தால்: மனத்திற்கு ஏற்ப. மனமே சான்றாதலின் இவ்வாறு கூறப்பட்டது. பொய்யாது ஒழுகின்: பொய் கூறாது ஒழுகு

வானாயின். அஃதாவது மெய் கூறி ஒழுகுவானாயின். உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்: உயர்ந்தவர்களின் உள்ளத்தின்கண் ணெல்லாம் உளனாவான். அஃதாவது உயர்ந்தவர்கள் அவனையே நினைப்பார்கள் என்றபடி, 'உலகம்' என்பது உயர்ந்தவர்களையே குறிக்கும். பொய் கூறாதவனுடைய அறத்தினது அருமை நோக்கி, உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பர் என்பதாம்.

இலக்கணக் குறிப்பு: உள்ளத்தால்: ஈண்டு 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு, 'உள்ளத்திற்கு ஏற்ப' என 'கு' என்னும் நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. எனவே இது வேற்றுமை மயக்கம் ஆகும். வேற்றுமை மயக்கத்தையே 'உருபு மயக்கம்' என்றும் சொல்வது உண்டு. ஒழுகின்: வினையெச்சம். உள்ளத்துள்: ஈண்டு 'உள்' என்பது ஏழாம் வேற்றுமையுருபு.

உண்மை பேசுதலால் விளையும் மறுமைப் பயனது மிகுதி (5-7)

5. உண்மை பேசுதலால் பெருஞ்சிறப்புக் கிடைக்கும்

பதவுரை

மனத்தொடு - (ஒருவன் தன்) மனத்தோடு பொருந்த
வாய்மை - வாய்மையை
மொழியின் - சொல்வானாயின் (அவன்)
தவத்தொடு - தவமும்
தானம் - தானமும்
செய்வாரின் - ஒருங்கே செய்பவர்களைக் காட்டிலும்
தலை - சிறப்பு உடையவன் ஆவான்.

கருத்துரை: தவமும், தானமும் செய்வோர் அடையும் சிறப்பினைக் காட்டிலும் அதிகமான சிறப்பை உண்மை பேசுபவன் அடைவான்.

விளக்கவுரை

மனத்தொடு: மனத்தோடு பொருந்துமாறு; மனத்திற்கு ஏறுமாறு. அஃதாவது மனமே சான்றாக. புறமாகிய உடம்பினால் செய்கின்றவற்றைக் காட்டிலும், அகமாகிய மனமொழிகளால் செய்வது சிறப்புடைத்து என்பது வள்ளுவனாரின் கருத்தாகும். அகம் என்பது உள்ளுறுப்பு ஆகும். கை, கால், கண், செவி முதலியவை புறவுறுப்புக்கள் ஆவன. தவத்தொடு தானம் செய்வார்: துறவறத்தார்க்கு இன்றியமையாதது தவம்; இல்லறத்தார்க்கு இன்றியமையாதது தானம் தவஞ் செய்யும் துறவறத்தார், தானஞ் செய்யும் இல்லறத்தார் ஆகியோரைக் காட்டிலும் உண்மை பேசுபவன் சிறந்தவன் ஆவான்.

இலக்கணக் குறிப்பு: மனத்தொடு வாய்மை: ஈண்டு 'ஒடு' என்னும் மூன்றும் வேற்றுமை உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது. செய்வாரின்: ஈண்டு 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு உறழ் பொருளில் வந்தது.

6. பொய்யாமை பெரும்புகழ் தரும்

பதவுரை

பொய்யாமை அன்ன - (ஒருவனுக்கு இம்மைக்கு) பொய்யாமையை ஒத்த	எய்யாமை - (மறுமைக்கு) மெய் வருந்தாமல்
புகழ் - புகழ்க் காரணம்	எல்லா அறமும் - (அவனுக்கு) எல்லா அறங்களையும்
இல்லை - வேறொன்றும் இல்லை (அப்பொய்யாமையானது)	தரும் - தானே கொடுக்கும்.

கருத்துரை: பொய்யாமை இம்மையில் புகழைத் தரும்; மறுமையில் எல்லா அறப் பயன்களையும் தரும்.

விளக்கவுரை

புகழ்: புகழைத் தருதற்குக் காரணமாக உள்ளது. எய்யாமை எல்லா அறமும் தரும்: பொய்யாமையானது மறுமைக்கு மெய் வருந்தாமல், அவனுக்கு எல்லா அறப் பயன்களையும் தரும். பொருள் சேர்த்தல் முதலியவற்றால் இல்லறத்தார் வருந்த வேண்டும். உண்ணாமை முதலியவற்றால் துறவறத்தார் மெய் வருந்த வேண்டும். அத்தகைய வருத்தங்கள் இல்லாமல் இருவகைப் பயனையும் பொய்யாமையானது தானே தரும் என்னுங் கருத்தினால் வள்ளுவனார் இவ்வாறு கூறினார். 'எய்யாமை' என்பதற்கு 'முயலாமை' என்றும் 'அறியாமை' என்றும் பொருள் கூறுதல் உண்டு. இக்குறட்பாவுடன்,

"வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்"

என்னும் சிலப்பதிகார அடிகளை ஒப்புநோக்குக.

இலக்கணக்குறிப்பு: பொய்யாமை: எதிர்மறைத் தொழிற் பெயர். அன்ன: உவம உருபு. புகழ்: காரிய ஆகுபெயர். எய்யாமை: எதிர்மறை வினையெச்சம்.

7. பொய்யாமை இருப்பின் வேறு அறங்கள் செய்யவேண்டா

பதவுரை

பொய்யாமை - (ஒருவன்) பொய் கூறாமையாகிய அறத்தையே	பிற அறம் - பிற அறங்களை
பொய்யாமை - பொய் கூறாமையாகிய அறத்தையே	செய்யாமை செய்யாமை - செய்யாமையே செய்யாமையே
ஆற்றின் - செய்ய வல்லானாயின் (அவன்)	நன்று - நல்லது.

கருத்துரை: ஒருவன் பொய்யாமையையே மேற்கொள்வானா யின், அவன் பிற அறங்களைச் செய்யவேண்டா.

விளக்கவுரை

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்: பொய்யாமை யையே செய்ய வல்லானாயின். 'பொய்யாமை பொய்யாமை' என்பதை, இடைவிடாமைப் பொருளவந்த அடுக்காகப் பரிமேலழகர் பொருள் கூறியுள்ளார். 'பொய்யாமைப் பொய்யாமல் செலுத்துவானாயின்' என்று இதற்கு மணக்குடவர் பொருள் கூறியுள்ளார். அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று: ஈண்டும் பரிமேலழகர், 'செய் யாமை செய்யாமை' என்பதை அடுக்காகக் கொண்டார். 'துணிவின் மேல் வந்த அடுக்கு' என்று அவர் கூறியுள்ளார். 'பல அறங்களையும் மேற்கொண்டு ஒருவன் சிலவற்றுள் தவறுவானாயின் குற்றப்படுவான். பொய்யாமையோ அத்தனைய அறங்கள் எல்லாவற்றின் பயனையும் தானே தரவல்லது. எனவே, இஃதொன்றையே மேற்கொண்டு தவ றாமல் செய்வது நன்று' என்பது பரிமேலழகரின் கருத்தாகும். இதற்கு மணக்குடவர், 'பிற அறங்களைச் செய்தல் நன்றாம்; அல்லது தீதாம்' என்று பொருள் கூறியுள்ளார். 'பொய்கூறின் பிற அறஞ்செய்கை நன்றாகாது' என்பது மணக்குடவரின் கருத்தாகும். இக்குறட்பா விற்கு, "பொய்யாமையாகிய சத்தியத்தை மறவாமல் நடத்துவானா கில், தர்மம் செய்யாமல் இருந்தாலும் நன்று" என்று பரிதியார் பொருள் கூறியுள்ளார்.

இலக்கணக்குறிப்பு: பொய்யாமை பொய்யாமை: அடுக்கு இடைவிடாமைப் பொருளில் வந்தது. ஆற்றின்: வினையெச்சம். செய்யாமை செய்யாமை: துணிவுப் பொருளில் அடுக்கு வந்துள் ளது.

வாய்மை என்னும் அறத்தினது தன்மை (8·10)

8. துறந்தார்க்கு அகம் தூய்மையும், புறந்தூய்மையும் வேண்டும்

பதவுரை

புறம்தூய்மை - (ஒருவனுக்கு) உடம்பு தூய்தாம் தன்மை	அகம்தூய்மை - மனம் தூய்தாம் தன்மை
நீரான் அமையும் - நீரானே உண்டாகும் (அதுபோல)	வாய்மையான் - உண்மை பேசு வதால்
	காணப்படும் - உண்டாகும்.

கருத்துரை: நீர் புறத்தைத் தூய்மை செய்வதுபோல வாய்மை அகத்தைத் தூய்மை செய்யும். துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டும்.

விளக்கவுரை

புறந்தூய்மை நீரான் அமையும்: உடம்பின் உறுப்புக்களைத் தூய்மை செய்வது நீராகும். உடம்பு தூய்தாதல் என்பது உடம்பின் கண் நிறைந்துள்ள அழுக்கு நீங்குதல். அழுக்கினை நீக்குவது நீரே யாகுமாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **அகம் தூய்மை வாய்மை யால் காணப்படும்:** மனந் தூய்மையாம் தன்மை உண்மை பேசுத லான் உண்டாகும். உள்ளதே காணப்படுமாகிலின், 'காணப்படும்' என்பதற்கு 'உண்டாகும்' என்று பொருள் உரைக்கப்பட்டது. 'மனந் தூய்தாதல்' என்பது 'மெய்யுணர்தல்' ஆகும். இக்குறட்பாவினுல், புறந்தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லைபாயினாற்போல அகந் தூய் மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லை என்பதும், துறந்தார்க்கு அகந்தூய்மை, புறந்தூய்மை ஆகிய இரண்டும் வேண்டும் என்பதும் கூறப்பட்டன.

இலக்கணக் குறிப்பு: 'புறந்தூய்மை நீரான் அமையும்; (அது போல) அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்' என்று இடைக்கண் 'போல' என்னும் உவம உருபு வருவித்துரைக்கப்பட்டுள்ளது ஈண்டு உவமையும், பொருளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவ்விரண் டையும் ஒப்புமைப்படுத்தும் 'போல' என்னும் உவம உருபு வருவிக் கப்பட்டது. எனவே, இக்குறட்பாவின்கண் எடுத்துக்காட்டுவமை யணி அமைந்துள்ளது.

9. பொய்யாமையே உண்மையான விளக்காகும்

பதவுரை

எல்லா விளக்கும் - (வெளியிருளைப் போக்குகின்ற உலகத்தார்) விளக்குகள் எல்லாம்

விளக்கு அல்ல - விளக்குகள் ஆகா.

சான்றோர்க்கு - துறவான் அமைந்தோர்க்கு

விளக்கு - (மனத்திருளைப் போக்குகின்ற) விளக்காவது

பொய்யா விளக்கே - பொய்யாமையாகிய விளக்கேயாகும்.

கருத்துரை: பொய்யாமை மனத்திருளைப் போக்கும். எனவே அதுதான் உண்மையான விளக்காகும்.

விளக்கவுரை

எல்லா விளக்கும்: உலகத்தார் விளக்குகள் எல்லாம், சூரியன் சந்திரன், தீ முதலியவை உலகத்தார் விளக்குகள் ஆவன. இவையா வும் புறத்திருளை அகற்றும். "எல்லா விளக்காவன தானம், தன்மம், கல்வி, ஞானம், பூசை என்பன" என்று பரிதியார் விளக்கம் கூறியுள் ளார். **சான்றோர்:** துறவால் அமைந்தோர்; ஐம்பொறிகளை ஐம் புலன்களிடத்தே செல்லவிடாமல் அடக்கித் துறவு பூண்டோர். **பொய்யா விளக்கே விளக்கு:** பொய்யாமையாகிய விளக்கே விளக்

காகும். சூரியன், சந்திரன், தீ முதலிய உலகத்தார் விளக்குகள் புற இருளை நீக்குமேயன்றி அகவிருளை நீக்கா. பொய்யாமையாகிய விளக்கோ அகவிருளைப் போக்கும். அதுபற்றியே இவ்வாறு கூறப் பட்டது. அகவிருளாவது அறியாமையாகும். எனவே பொய்யாமை யானது அறியாமையை அகற்றும் என்பது பெறும். இக்குறட்பா விற்கு, "கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே" என்றும் பொருள் கூறப்படுதல் உண்டு. சான்றோர்க்குப் பொய்யா விளக்கு இன்றியமையாதது என்பது இக்குறட்பாவினல் வற்புறுத்தப் பட்டது.

இலக்கணக் குறிப்பு. பொய்யா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் விளக்கே: ஏகாரம் பிரிநிலை, எல்லா விளக்கும்; பொய்யா விளக்கே: இக்குறட்பாவின்கண் இடையின எதுகை அமைந்துள்ளது. லகரம், யகரம் ஆகிய இரண்டும் இடையினத்தின் பாற்படும்.

10. வாய்மையினும் நல்ல அறம் வேறு இல்லை

பதவுரை

யாம் - யாம்	வாய்மையின் - வாய்மையைக் காட்டிலும்
மெய்யா - மெய்ந்நூல்களாக	நல்ல - மிக்கனவாகச் சொல்லப் பட்ட
கண்டவற்றுள் - கண்ட நூல் களுள்	பிற - பிற அறங்கள்
எனைத்தொன்றும் - யாதொரு தன்மையானும்	இல்லை - இல்லை.

கருத்துரை: எல்லாவகைப்பட்ட அறங்களினும் சிறந்த அறம் வாய்மையாகிய அறமேயாகும்.

விளக்கவுரை

மெய்யா: மெய்ந்நூல்களாக. மெய்யுணர்த்தும் நூல்கள் 'மெய்' எனப்பட்டன. உலகத்தார் உறுதி எய்துதற் பொருட்டு இறை வர் கூறியருளிய ஆகம நூல்களே மெய்ந்நூல்கள் ஆவன. இறைவா மயக்கமில்லாதவர். எனவே, அவர் பொருள்களை உளளவாறு உணர வல்லவர். இறைவர் காமம், வெகுளி முதலியன இல்லாதவர். எனவே, அவர் உணர்ந்த பொருள்களை உணர்ந்தவாறு உரைக்க வல்லவர். அத்தகைய இறைவர் கூறியருளிய ஆகம நூல்களே மெய்ந் நூல்கள் எனப்படும். இக்குறட்பாவிற்கு மணக்குடவர், "இஃது எல்லா அறமும் இதனை ஒவ்வாது என்று அதன் தலைமை கூறிற்று" என்று விளக்கம் கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு: மெய்: காரிய ஆகுபெயர். வாய்மை யின்: 'இன்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு.

பொச்சாப்புக் கொல்லும் புகழை.

2. நாலடியார்

பெயர்க் காரணம்: 'நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகிய நூல்' என்பது 'நாலடியார்' என்பதற்குப் பொருளாகும். நாலடி : பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். அது, வெண்பாவை உணர்த்தியது. வெண்பா தன்னலாகிய நூலை ஈண்டு உணர்த்தியது. எனவே அது கருவியாகு பெயர் ஆகும். 'நாலடி' என்பது ஈண்டு, நாலடிகளையுடைய பிற பாடல்களைக் குறியாமல் சிறப்புப்பற்றி வெண்பாவைக் குறித்தது. 'ஆர்' என்பது சிறப்பினை உணர்த்தும் விகுதி ஆகும்.

நூல்வகை: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். பதினெட்டு நூல்களும், திருக்குறட் பகுதியின் முன்னுரையில் கூறப்பட்டன.

நூலின் பிரிவுகள்: இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது ; நாற்பது அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பப்பத்துப் பாடல்கள் வீதம் அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள பாடல்கள் நானூறு ஆவன.

பெருமை :

1. இந்நூல் திருக்குறளுடன் ஒன்றாக வைத்து எண்ணப்படுகின்றது.

2. டாக்டர் ஜி. யூ. போப் என்னும் ஆங்கிலப் பெரியார் இந்நூலை ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார்.

3. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியில், 'நாலும்' என்பது இந்நூலையே குறிக்கும்.

ஆசிரியர்கள் : சமண முனிவர்கள்.

நூலின் காலம்: இந்நூல் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று ஒரு சாராரும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று மற்றொரு சாராரும் கூறுவர். இந்நூலின்கண் 'பெரும்பிடுகு முத்தரையர்' என்னும் பெயர் பலவிடங்களில் வருகின்றது. எனவே இந்நூல் பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருத இடமுண்டு.

நூலைத் தொகுத்தவர்: இந்நூல் தொகை நூல் ஆகும். சமண முனிவர்கள் பலரால் பாடப்பெற்ற நீதி வெண்பாக்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டன. அவ்வாறு தொகுத்தவர் 'பதுமனார்' என்பவர் ஆவார்.

இந்நூலைப்பற்றிய வரலாறு: "முன்னொரு காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. அப்பஞ்சத்தால் வருந்திய சமண முனிவர்கள் எண்ணாயிரவர் பாண்டி நாட்டை அடைந்தனர். பாண்

டியன் அவர்களை ஆதரித்து வந்தான். பஞ்சம் நீங்கிய பிறகு அம்முனிவர்கள் அரசனிடம் விடை பெற முயன்றனர். முனிவர்களை விடுத்துப் பிரிய மனமில்லாத அரசன், அவர்கட்கு விடைகொடாமல் இருந்தான். முனிவர்கள் ஒருநாள் இரவு அரசன் அறியாமல் ஊரை விடுத்துச் சென்றுவிட்டனர். அவ்வாறு சென்றவர்கள், தலைக்கு ஒவ்வொரு பாடல் வீதம் ஓலைகளில் எழுதிவைத்தே சென்றிருந்தனர். அப்பாடல்களை அரசன் படித்துப் பார்த்தான். அவை ஒன்றற்கொன்று பொருத்தமின்றி அமைந்திருந்தன. ஆகவே, அரசன் அவற்றை வைகையாற்றில் எறிந்துவிடுமாறு பணித்தான். அவ்வாறு வைகையில் எறியப்பெற்ற ஏடுகளுள் நானூறு ஏடுகள் நீரின் போக்கை எதிர்த்து நான்கடி சென்றன. அது கண்ட அரசன் வியப்புற்று, அந்நானூறு ஏடுகளையும் கொணரச் செய்தான்; 'பதுமனார்' என்னும் புலவரைக்கொண்டு அவற்றை வகைப்படுத்தச் செய்தான். நானூறு பாடல்கள் எழுதப்பெற்ற நானூறு ஏடுகளும் நீரின் போக்கை எதிர்த்து 'நாலடி' சென்றனவாதலால், அப்பாடல்களைக்கொண்ட நூல் 'நாலடியார்' என்னும் பெயரைப் பெற்றது' என்பது இந்நூலைப் பற்றிக் கூறப்படும் வரலாறு ஆகும். இவ்வரலாறு உண்மை என்று துணிதற்கேற்ற உறுதியான சான்றுகள் கிடைத்தில.

1. நண்பர்களைக் கைவிடுதல் கூடாது

(இப்பாடல் 'நட்பிற் பிழை பொறுத்தல்' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது).

பதவுரை

துன் அரு - நெருங்குதற்கு அருமையான
சீர் - சிறப்பையுடைய
விண் குத்தும் - ஆகாயத்தை அளாவுகின்ற
நீள் - நீண்ட
வரை - மூங்கில் நிறைந்த
வெற்ப - மலை நாட்டையுடைய பாண்டியனே
இன்னா - தீயனவற்றை
செயினும் - செய்தாலும்
விடுதற்கு - விடுத்துப் பிரிதற்கு
அரியாரை - அரிய நண்பரை
துன்னா - நட்புக் கொள்ளாமல்
துறத்தல் - கைவிடுதல்
தகுவதோ - தக்கதோ?
தம் - தம்முடைய
கை - கையானது
கண் - தமது கண்ணை
குத்திற்று என்று - குத்திவிட்டது என்று
களைபவோ - வெட்டி விடுவார்களோ? (மாட்டார்கள்)

கருத்துரை: பிரிதற்கு அரிய நண்பர்கள் தீமை செய்தாலும், அவர்களிடம் நட்புக் கொள்ளாமல் கைவிடுதல் தகாது.

விளக்கவுரை

துன்னருஞ்சீர் விண்குத்து நீள்வரை வெற்ப: மலைநாட்டையுடைய பாண்டியனே! நெருங்குதற்கு அரிய உயரத்தினையும்,

பாறைகளையும் கொண்டது மலைநாடு என்பதனை விளக்க 'தன்னரும்' எனப்பட்டது. 'விண்குதது' என்னும் தொடர் மலையின் உயரத்தைக் குறித்தது. 'வரை' என்னும் சொல் 'மூங்கில்' என்று பொருள் படும். மலை நாட்டில் மூங்கில்கள் நிறைந்திருக்குமாதலால் இவ்வாறு கூறப்பட்டது. 'பாண்டியனை முன்னிலைப்படுத்தி, நாலடியார்ப் பாடல்கள் பாடப்பெற்றன' என்னும் கதைபற்றி, 'வெற்ப' என்பதற்கு 'மலை நாட்டையுடைய தலைவனே!' என்று பொருள் கூறப்பட்டது.

இன்னசெயினும்: தீயனவற்றைச் செய்தாலும், 'செயினும்' என்பது செய்தலின் அருமையைக் காட்டி நின்றது. 'செய்யமாட்டார்கள்; அவ்வாறு செய்தாலும்' என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். விடுதற்கு அரியார்: விடுத்துப் பிரிதற்கு அரியவர். ஒருவரிடம் நட்புக் கொளவதற்குமுன் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். நன்கு ஆராய்ந்து தெளிந்த பிறகே நட்புக் கொள்ளுதல் வேண்டும். நட்புக் கொண்டபிறகு, அவர்களை விடுதல் அரிதாகும். அது பற்றியே நண்பர்கள 'விடுதறகு அரியார்' எனப்பட்டனர்.

களைபவோ கண் குத்திற்றென்று தம் கை: கை கண்ணைக் குத்திவிட்ட தென்று, அக்கையை வெட்டி விடுவார்களோ? 'மாட்டார்கள்' என்பது இவ்வினவினால் போந்த பொருள். 'கண்ணைக் குத்திவிட்டதென்று கையை வெட்டமாட்டார்கள். அதுபோல, பிழை செய்தனர் என்று நண்பர்களை விடுத்துப் பிரிதல் கூடாது' என்பது இப்பாடலிற் கூறப்பட்ட கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு: வரை: சினையாகு பெயராய் மூங்கிலைக் குறித்தது. வெற்ப: அண்மை விளி. அரியாரை: வினையாலணையும் பெயர். துறததல்: தொழிற் பெயர். தருவதோ, களைபவோ: ஈண்டு ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளன. கண் குத்திற்று: இரண்டாம் வேற்றுமைத் தொகை. "கண் குத்திற்றென்று தம் கை களைபவோ? (அதுபோல) விடுதற்கரியாரைத் துன்னத் துறத்தல் தருவதோ?" என்று இயையுங்கால் உவம உருபு மறைந்து நிற்கின்றது. எனவே ஈண்டு எடுத்துக்காட்டுவமையணி அமைந்துள்ள.

2. சேர்க்கையால் தம் குணம் கெடாதவர்களே அறிவுடையவர்கள்

(இப்பாடல் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தின்கண் அமைந்துள்ளது)

பதவுரை

எறி - அலைகள் மோதுகின்ற	சேர்ப்ப - இறங்கு துறையையும்
கடல் - கடலையும்,	உடைய பாண்டியனே,
தண் - குளிர்ந்த	கடல் - கடலை

சார்ந்தும் - சேர்ந்த பொழுதும்
இன்நீர் - இனிய நீரானது
பிறக்கும் - உண்டாகும்
மலை சார்ந்தும்-மலையைச் சேர்ந்த பொழுதும்
உப்பு ஈண்டு - உப்பு மிகுந்த
உவரி - உவர் நீர் (உப்பு நீர்)
பிறந்தலால்- தோன்றுகின்ற காரணத்தால்

மக்கள் என்பார் - மக்கள் எனப்படுவோர்
தத்தம் - தங்களுடைய
இனத்து அனையர் அல்லர்- இனததாரை ஒத்தவர் அல்லர்.
மனத்து அனையர் - (தத்தம்) மனததின் அறிவை ஒத்தே இருப்பர்.

கருத்துரை : தாம் சேர்ந்த இனத்திற்கு ஏற்பத் தம் பண்பு மாறுபடாமல இருப்பவர்களே அறிவுடையவர்கள் ஆவர். அவர்களையே மக்கள் என்று கூறலாம். அறிவுடையோர் மனத்தால் ஒத்தவரல்லது இனத்தால் ஒத்தவர் அல்லர்.

விளக்கவுரை

சேர்ப்பன் : இறங்கு துறையை உடையவன் ; நெய்தல் நிலத் தலைவன். நெய்தல் நிலத்தைத் தனக்கு உரிமையாகக் கொண்டவனு தலால் பாண்டியன், 'சேர்ப்பன்' எனப் பெற்றான். கடல் சார்ந்தும் இன்னீர் பிறக்கும் : கடல் உப்புத் தன்மையை உடையது. எனினும், கடற் கரையில் தோண்டப்பெற்ற ஊற்றின் கண் இனிய நீரே பிறக்கும். மலை சார்ந்தும் உப்பீண்டு உவரி பிறத்தல் : மலை நாட்டின்கண் தோண்டப்பெறும கிணறுகளில் சுரக்கும் நீர் இனிய நீராகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. அந்நீர் உப்பு நீராகவும் இருக்கலாம். தத்தம் இனத்தனையர் அல்லர் : கடற் கரையில் உள்ள ஊற்றுக்களில் இனிய நீர் சுரக்கின்றது. மலைகளிலே உப்பு நீர்க் கேணிகள் காணப்படுகின்றன. அவற்றைப்போலவே மக்களும் தம் சூழ்நிலையால் இயற்கைக் குணத்தில் மாறுதல் அடைய மாட்டார்கள். மனத்தனையர் மக்கள் என்பார் : சூழ்நிலையால் மாறுபாடு அடையாத மனமுடையவர்களே மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவர். "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்றார் தொல்காப்பியனார். எனவே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உடையவரே மக்கள் ஆவர். பகுத்தறிவுடையோர், சூழ்நிலையால் தம் மனம் மாறப் பெற மாட்டார்களாதல் இங்ஙனம் கூறப்பட்டது. ஈண்டு 'மனம்' என்னும் சொல் 'அறிவு' என்னும் பொருளில் வந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு : எறி கடல் : வினைத் தொகை. கடல் சார்ந்தும் : உம்மை இழிவு சிறப்பும்மை. மலை சார்ந்தும் : உம்மை உயர்வு சிறப்பும்மை. எடுத்துக் காட்டினை காரணங் காட்டி முடிப்பதால் இப்பாடலின்கண் ஏதுவணி அமைந்துள்ளது.

3. நூல்களைக் கற்றாலும் கயவர்க்கு நுண்பொருள் தெரியாது

(இப்பாடல் 'கயமை' என்னும் அதிகாரத்தின்கண் அமைந்துள்ளது)

பதவுரை

தேரை - ஒருவகைப்பட்ட தவளைகள்
செழும் - செழிப்பான
பெரும் - பெரிய
பொய்கையுள் - குளத்துள்
என்றும் - எக்காலத்திலும்
வாழினும் - வாழ்ந்தாலும்
வழும்பு - (தன்னிடத்தே உள்ள) வழும்பு என்னும் குற்றத்தை
அறுக்ககில்லாவாம் - நீக்கமாட்டாவாம்.
(அதுபோல)
வழாப்புஇல் - குற்றம் இல்லாத
சீர் - சிறப்புப் பொருந்திய
நூல் - நூல்களை
கற்றக்கண்ணும் - கற்றாலும்,
நுணுக்கம் - நுட்ப அறிவு
ஒன்று - சிறிதேனும்
இல்லாதார் - இல்லாதவர்
தேர்கிற்கும் - (உண்மைப் பொருளை) உணரும்
பெற்றி அரிது - தன்மை அரியதாகும்.

கருத்துரை: அறிவில்லாதார் எவ்வளவு சிறந்த நூல்களைக் கற்றாலும், நுட்பமான பொருள்களை உணரமாட்டார்கள். மக்களுக்கு நூல்களை ஆராய்ந்துணரும் நுண்ணறிவு வேண்டும்.

விளக்கவுரை

வழும்பு: வழுவழுப்பான அசுத்தம் தேரையின் உடம்பில் அஃது உள்ளது. **வழும்பு அறுக்ககில்லாவாம்:** குளத்தின்கண் எப்பொழுதும் கிடப்பினும், தேரை தன் உடம்பில் உள்ள வழும்பு அகலப் பெறுவதில்லை புறத்தூய்மைக்களையெல்லாம் தூய்மையாக்கும் நீர், தேரையின் உடம்பின் மேற்புறத்தேயுள்ள வழுவழுப்பான அசுத்தத்தைப் போக்குவதில்லை. **நுணுக்கம்:** நுட்பமான அறிவு; நுண்ணறிவு. தக்கனவற்றையும், தகாதனவற்றையும் பிரித்துணரும் அறிவு; உண்மைப் பொருளை உணரும் அறிவு. 'கயவர்கள் நுண்ணறிவு பெறாதவர்கள். ஆதலால், அவர்கள் சிறப்புடைய நூல்கள் பலவற்றைக் கற்றாலும், அவற்றிற் கூறப்பெற்றுள்ள உண்மைப் பொருள்களை உணரமாட்டார்கள்' என்பது இப்பாடல் கூறப்போந்த செய்தியாகும்.

இலக்கணக் குறிப்பு: கில்: எதிர்மறைப் பொருள்பட வந்த இடைச்சொல். நூல்: உவம ஆகுபெயர். 'நீரிற் கிடைக்கும் தேரை தன் வழும்பு அகலப் பெறுவதில்லை' என்பது 'உவமை நூல்களைக் கற்றாலும், நுண்ணறிவு இல்லாதாவர் உண்மைப் பொருளை உணரமாட்டார்கள்' என்பது பொருள் உவமையையும் பொருளையும் இணைக்கும் 'போல' என்னும் உவம உருபு இடைக்கண் இல்லாமையால், இப்பாடலின்கண் எடுத்துக்காட்டுவமை அணி அமைந்துள்ளது.

---

3. பழமொழி

பெயர்க் காரணம்: 'பழமொழி' என்பது பழமொழியைக் கொண்டு அமைந்துள்ள செய்யுட்களைத் தன்னகத்தே கொண்ட நூலைக் குறிக்கும். முன்னோர்கள், தம் வாழ்க்கையில் கண்ட உண்மைகளைச் சுருக்கமாகச் சமயம் அறிந்து, இடம் அறிந்து வெளியிட்டனர். அவ்வாறு வெளியிடப்பெற்ற உண்மைகள் நாளாவட்டத்தில் 'பழமொழிகள்' எனப்பட்டன. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும், ஒவ்வொரு பழமொழியையும், அதைப்பற்றிய விளக்கங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும்.

நூலின் பிரிவு: இந்நூல் ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் பல உட்பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளது. இந்நூலின்கண் நானூறு பாடல்கள் உள்ளன. அதுபற்றி இதற்கு, 'பழமொழி நானூறு' என்றும் ஒரு பெயர் உண்டு.

நூலின் பெருமை: பழமொழிகளைத் தொகுத்துணர்த்துவது பெருஞ் செயலாகும். அதற்கு விரிந்த கல்வியறிவு வேண்டும். இந்நிலையில் நானூறு பழமொழிகளை எடுத்து, அவற்றின் சார்பையே முற்றும் கொண்டு, பொருளை விளக்கியமை இந்நூலுக்கே உரிய தனிப் பெருமையாகும். இத்தகைய நூல், இதற்குமுன் இருந்ததாகப் புலப்படவில்லை. இந்நூலிற் கூறப்பட்டுள்ள பழமொழிகளுட் பல இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டன என்பது உண்மையே. ஆயின், அவை இந்நூல் இயற்றப்பெற்ற காலத்தே வழக்கில் அமைந்திருக்க வேண்டும். இந்நூற் பழமொழிகள் சிலவற்றை நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் மேற்கோளகளாகக் காட்டியுள்ளனர். அதிலிருந்தும் இந்நூலின் பெருமையை உணரலாம்.

நூலின் வகை: இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அவை முன்பே கூறப்பட்டன.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: முன்றுறை அரையனார். 'முன்றுறை' என்பது இவரது ஊராகும். இவர் அரசர் மரபைச் சேர்ந்தவர். அரையர் – அரசர். ஊர்ப் பெயரும், மரபுப் பெயரும் இணைந்து, ஆசிரியர் பெயராக அமைந்தன. ஆசிரியரின் இயற்பெயர் அறிய இயன்றிலது.

ஊர்: 'முன்றுறை' என்னும் ஊர். அவ்வூர் பாண்டி நாட்டில் உள்ளது என்பர்.

சமயம்: சைனம்.

காலம்: இந்நூலாசிரியர் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர் ஆராய்ச்சியாளர்.

வேலன்று வென்றி தருவது.

1. உயிருடையார் எய்தாததொரு நல்வினைப் பயன் இல்லை

பதவுரை

சுடப்பட்டு - (இளமையில் பகைவரால்) சுடப்பட்டும்
உயிர் உய்ந்த - உயிர் பிழைத்து வாழ்ந்த
சோழன் மகனும் - சோழ மன்னனாகிய கரிகாலனும்,
பிடர்த்தலை - இரும்பிடர்த் தலையார் என்னும்
பேரானை - பெயரினை உடைய தன் மாமனை
பெற்று - (தன்) துணையாகப் பெற்று
கடைக்கால் - பிற்காலத்தில் (தன் அரசுரிமை பெற்று)
செயிர் அறு - குற்றம் அற்ற
செங்கோல் - செங்கோலை
செலீஇயினான் - செலுத்தினான் (ஆதலால்)
உயிர் உடையார் - உயிர் உடையவர்
எய்தாவினை - அடையாததொரு நல்வினைப் பயன்
இல்லை - இல்லை.

கருத்துரை: உயிரோடு வாழ்பவர் பொறுமையுடன் இருந்தால், அவர் அடையக் கூடாத நல்வினையே இல்லை. ஈண்டுள்ள பழமொழி, "உயிருடையார் எய்தாவினை இல்லை" என்பதாகும்.

விளக்கவுரை

சுடப்பட்டு உயிர் உய்ந்த சோழன் மகன்: கரிகாலன். இவன் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன்; இளமையிற் பகைவராற் சிறை வைக்கப்பெற்றவன். சிறை வைக்கப் பெற்ற இடத்திற் பகைவர் தீ வைத்தனர் அது காலையில் கரிகாலன் அவ்விடத்திலிருந்து தப்பினான். அவ்வாறு தப்புங்கால் நெருப்பினால் அவனது கால் சுடப்பட்டுவிட்டது. அதனாற்கரிந்த காலினை உடையவனாக இருந்தானாதலால் இவன் 'கரிகாலன்' என்னும் பெயரைப் பெற்றான் என்பர். கரிகாலன் இளமையில் சிறைப்பட்டிருந்து, பின்பு பகைவரை வென்று வெளிவந்த செய்தியை,

"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி"

என்னும் பாட்டினப்பாலை அடிகளாலும், கரிகாலனுடைய கால் நெருப்புற்ற செய்தியை,

ஏழையழுத கண்ணீர் கூரிய வாளாகும்.

"முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே அளந்ததால்—செய்ச் செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல்நீர் நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று"

என்னும் பழம்பாடலாலும் அறியலாம் இப்பழம்பாடல் கரிகாலனைப் பற்றிய பாடல்களாகிய பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய வற்றினுடைய உரைகளின் ஈற்றில் காணப்படுகின்றது. நச்சினார்க்கினியரும் பொருநராற்றுப்படையினது உரையின்கண், "முச்சக்கரமும்' என்னும் கவியானே கரிகாலாதல் உணாக" என்று கூறியுள்ளார். செவ்வந்திப் புராணம் கரிகாலனது வரலாற்றை மாறுபடக் கூறுகின்றது. பிடர்த்தலைப் பேரான்: இரும்பிடர்த்தலையார் என்னும் பெயரையுடையவர். இவர் கரிகாலனது மாமன் ஆவார். கரிகாலன் பகைவரிடமிருந்து தப்புவதற்கு இவர் பெருந்துணை செய்தார். இவர் பெரும் புலமை பெற்றிருந்தார். இவர் பாடிய பாடல் புறநானூற்றின்கண் இடம் பெற்றுள்ளது. செயிர் அறு செங்கோல்: குற்றமற்ற செங்கோல். கரிகாலன் நரைமுடித்துச் சொல்லால் முறைச் செய்தான் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. இந்நூலிலும் அதைப்பற்றிய குறிப்பொன்று காணப்படுகின்றது அதுபற்றிக் கரிகாலனது செங்கோல் 'செயிர் அறு செங்கோல்' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: உய்ந்த: பெயரெச்சம். பேரான்: ஈண்டு வினையாலணையும் பெயர். செங்கோல்: பண்புத் தொகை. செலீஇயினன்: இன்னிசை அளபெடை. எய்தா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

2. வலியாரிடம் பகை கொள்ளலாகாது

பதவுரை

நோற்ற - தவஞ் செய்த	பகை - பகையை
பெருமை உடையாரும் - பெரியவர்களும்	வேண்டி - விரும்பி
கூற்றம் புறம் - இயமனுடைய முதுகில்	கொள்ளற்க - கொள்ளாதொழிக.
கொம்மை கொட்டினர் - கொம்மை கொட்டிப் பிழைத்தவர்	அரக்கன் - முன் காலத்தில் ஓர் அரக்கன்
இல் - இலர் (ஆதலால்)	போற்று - (அறிவினால் ஆராயாது) பாதுகாவாது
ஆற்ற - மிகவும்	கொண்டு - (பெரியாரோடு) பகை கொண்டு
பெரியார் - (வலிமையால்) பெரியாரோடு	போரின் - போரின் கண்ணே
	அகப்பட்டான் - அகப்பட்டு இறந்து போயினன்.

கருத்துரை: தன்னைக் காட்டிலும் வலியவரிடம் சாமபேததான முறைகளையே பின்பற்ற வேண்டும்; தண்டமாகிய போர் செய்யும்

முறையைக் கையாளலாகாது. அவ்வாறு பகை கொள்பவர் உயிர் தப்புதல் அரிது.

விளக்கவுரை

பெரியார்: பிறர் செயற்கு அரியவற்றைச் செய்வார் பெரியர் ஆவர். **அரக்கன் போரின் அகப்பட்டான்:** 'அரக்கன்' என்று சுட்டப்பட்டவன் இராவணன் ஆவான். அவன் கடவுளின் அவதார மாகிய இராமனுடன் பகை கொண்டான். அதனால் அவன் இறந்து பட்டான். சிவபிரானிடம் பெற்ற படைக்கலமும், பிரமனிடம் பெற்ற வரமும் இராவணனிடம் இருந்தும், அவன் இறக்குமாறு நேரிட்டது. ஆற்றப் பெரியாரின் பகையைக் கொண்டமையே அவன் இறந்தமைக் குக் காரணம் ஆகும். **நோற்ற பெருமை யுடையார்:** தவஞ் செய்த பெரியார். தவஞ் செய்வார் பெருவலிமையும், பெருமையும் உடையர் ஆவர். அதுபற்றியே இவ்வாறு கூறப்பட்டது. இப்பாடலின்கண் "கூற்றம் புறங்கொம்மை கொட்டினர் இல்" என்னும் பழமொழி அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு: கொள்ளற்க: எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. இச்செய்யுளின்கண் வேற்றுப் பொருள்வைப்பணி அமைந்துள்ளது. உடையாரும்: உம்மை உயர்வு சிறப்பும்மை.

3. வருந்தாதார் வாழ்க்கை திருந்தாது.

பதவுரை

வேளாண்மை - (பிறர்க்கு) உபகாரம்
செய்து - செய்து,
விருந்து - வந்த விருந்தினரை
ஓம்பி - உபசரித்து (போற்றி)
வெஞ்சமத்து - கொடிய போரின்கண்
வாளாண்மையாலும் - வாளாற் செய்யும் ஆண் தன்மையினாலும்
வலியராய் - வலியராய் இருந்து
தாளாண்மை - முயற்சியை
தாழ்க்கும் - குறைவிக்கும்
மடிகோள் - சோம்பலைக் கொள்ளுதல்
இலராய் - இல்லாதவராய்,
வருந்தாதார் - (முயன்று) வருந்தாதது
வாழ்க்கை - இல்வாழ்க்கையானது
திருந்துதல் இன்று - செப்பம் அடைதல் இல்லை.

கருத்துரை: சோம்பலுக்கு இடங் கொடாமல், முயற்சி செய்து, மெய் வருத்தத்தை மேற் கொண்டோருடைய மனை வாழ்க்கை செப்பம் அடையும். "வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று" என்பது ஈண்டுள்ள பழமொழியாகும்.

விளக்கவுரை

வேளாண்மை: உபகாரம். இனி, 'வெள்ளத்தை ஆளும் தன்மை' எனப் பொருள் கொண்டு, 'உழவுத் தொழில்' என்றும்

பொருள் கொள்ளலாம். விருந்தோம்புதல்: விருந்ினரை உபசரித்தல். இல்வாழ்வார்க்குரிய அறங்களுக்குள் தலையாயது இவ்வறம் ஆகும். தாளாண்மை: முயற்சியை ஆளும் தன்மை. 'தாள்' என்னுஞ் சொல் 'முயற்சி' என்று பொருள்படும். வேளாண்மை செய்து விருந்தோம்புதலும், போர்க்களத்தே வாளாண்மை காட்டி வெற்றியடைதலும், சோம்பல் இல்லாமல் முயற்சி செய்தலும் ஆகியவை இல்வாழ்க்கையைத் திருத்தி நன்னெறிப்படுத்தும் வழிகள் ஆவன. அவற்றைக் கைக்கொண்டு வருந்தாதாருடைய வாழ்க்கை செப்பம் அடையாது.

இலக்கணக் குறிப்பு: செய்து, ஓம்பி: வினையெச்சங்கள். வருந்தாதார்: எதிர்மறை வினையாலணையும் பெயர். திருந்துதல்: தொழிற் பெயர். வெஞ்சமம்: பண்புத் தொகை.

---

4. திரிகடுகம்

பெயர்க் காரணம்: 'திரி' என்னுஞ் சொல் 'மூன்று' என்று பொருள்படும். 'கடுகம்' என்னுஞ்சொல் 'மருந்து' என்று பொருள்படும். "திரிகடுகம் சுக்கு, திப்பிலி, மிளகு" என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. சுக்கு முதலிய மூன்றிலாகிய கடுகம் ஒருவரது உடல் நோயை அகற்றி, இன்பம் தரும். இந்நூலின்கண் உள்ள ஒவ்வொரு பாடலும் மும்மூன்று உறுதிப் பொருள்களைக் கொண்டுள்ளது. அத்தகைய உறுதிப் பொருள்கள் மக்களுடைய அறியாமையாகிய உள நோயைப் போக்கி இன்பம் செய்யும். 'திரிகடுகம்' எனப்படும் மருந்தைப்போன்ற பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற காரணத்தால் இந்நூல் 'திரிகடுகம்' என்றே பெயர் பெற்றது. மேலும், அந்நூலின் முதற் பாடலின்கண், "இம்மூன்றும் திரிகடுகம் போலும் மருந்து" என்று கூறப்பட்டுள்ளது. ஈண்டுக் கூறப்பட்டுள்ள 'திரிகடுகம்' என்பதே சிறப்பு நோக்கி இந்நூலுக்கும் பெயராகக் கொள்ளப் பட்டது. அஃது உவமையாகு பெயர் ஆகும்.

நூலின் வகை: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திரிகடுகமும் ஒன்றாகும். கடவுள் வாழ்த்துச் செய்யுள் உட்பட, இந்நூல் 101 வெண்பாக்களைக் கொண்டது.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

காலம்: இந்நூல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் தோன்றியது என்பர் பலர்.

பெயர்: நல்லாதனார்.

சமயம்: ஆசிரியர், இந்நூலுக்குத் திருமால் வாழ்த்தினைக் கூறியுள்ளார். அது வழிபடு கடவுள் வாழ்த்தாகும். எனவே இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்.

1. அழியாப் புகழுடைய மூவர்

பதவுரை

தன் நச்சி - தன்னை விரும்பி
சென்றாரை - வந்து அடைந்தவரை
மன்னிய - நிலைபெற்ற
செல்வத்து - செல்வம் வந்த காலையில்
பொச்சாப்பு - மறதியை
நீத்தானும் - விடுத்தவனும்,
என்றும - பிறரிடத்தும் பகைமை உண்டாகிய காலத்திலும்
எள்ளா - இகழ்ந்துரையாத
ஒருவனும் - ஒப்பற்றவனும்,
அழுக்காறு - அவர் செல்வம் கண்டு பொறாமையை
இகந்தானும் - நீங்கியவனும்
இம்மூவர் - ஆகிய இம்மூவரும்
நின்ற - அழியாமல் நிலைபெற்று நின்ற
புகழ் உடையார் - புகழை உடையவர்களாவர்.

கருத்துரை: தம்மை விரும்பி வந்தோரை இகழாமை, செல்வம் வந்த காலையில் சுற்றத்தினரை மறவாமை, பிறர் செல்வங் கண்டு பொறாமையைச் செய்யாமை ஆகிய மூன்றும் மக்களுக்குப் புகழ் தரும்.

விளக்கவுரை

எள்ளா ஒருவனும்: ஒருவனை விரும்பி மதித்து வந்தோர், அவனிடம் ஏதேனும் ஓர் உதவியை எதிர்பார்த்தே வருவர். அவ்விதம் வந்தோரை இகழாமல் இருத்தல் வேண்டும். **செல்வத்துப் பொச்சாப்பு நீத்தான்:** செல்வம் வந்த காலையில் மக்களுள் பலருடைய மனம் மாறுபட்டுவிடும். அது காலையில் மக்கள் தம் உறவினரையும் மறந்து விடுவர். "செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமும் சிறிது பேணார் சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமும் துணையும் நோக்கார்" என்பர் ஆன்றோர். எனவே, செல்வம் வந்த காலையில் மறதியை அகற்ற வேண்டும் எனப்பட்டது. **அழுக்காறு:** பிறர் செல்வம் கண்டு பொறாமைப் செய்தல். பொறாமையை அகற்ற வேண்டும் என்பது இவ்வடியிற் கூறப்பட்டது. இப்பாடலின்கண் புகழுக்குக் காரணமான மூன்று வழிகள் கூறப்பட்டுள்ளன.

இலக்கணக் குறிப்பு: தன்னச்சி: 'தன்னை நச்சி' என விரிதலால் இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகை. நச்சி: 'நச்சு' என்பது பகுதி, 'இ' என்பது வினையெச்ச விகுதி. சென்றாரை: வினையாலணையும் பெயர். எள்ளா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மன்னிய: 'மன்' என்பது இடைச்சொல். எனவே 'மன்னிய' என்பது 'மன்' என்னும் இடைச் சொல்லின் அடியாகப் பிறந்த இறந்த காலப் பெயரெச்சம் ஆகும். மன் + ன் + இன் + அ= மன்னிய. மன்: பகுதி ; ன் :சந்தி; இன் : இறந்தகால இடைநிலை; அ:

நாகரிகம் வேண்டுபவர் நஞ்சும் உண்பர்.

பெயரெச்ச விகுதி: இறந்தகால இடைநிலையின்கண் நின்ற னகரம் விகாரத்தால் குறைந்தது. பொச்சாப்பு : பொச்சா : பகுதி. பு : தொழிற்பெயர் விகுதி. ப் : சந்தி. நீத்தான் : வினையாலணையும் பெயர். அழுக்காறு : முதனிலைதிரிந்த தொழிற் பெயர் ; அழுக்கறு : பகுதி. இகந்தான் : வினையாலணையும் பெயர்.

2. புகழுடம்பு எய்துவோர்

பதவுரை

மண்ணின்மேல் - மண்ணுலகில்
வான்புகழ் - பெரும் புகழை
நட்டானும் - நிலைநிறுத்தியவனும்,
பெண்ணினுள் - பெண்களுள்
மாசிஇல் - குற்றம் இல்லாத
சீர் - சிறப்பினை உடைய
கற்பு உடையாள் - கற்புடைய பெண்ணை
பெற்றானும் - (மனைவியாக) அடைந்தவனும்,
உண்ணும் நீர் - குடிக்கின்ற நீர்
குறைவு இன்றி - குன்றவுபடாதவாறு
கூவல் - கிணறுகளை
தொட்டானும் - தோண்டி வைத்தவனும்
இம்மூவர் - ஆகிய இம்மூவரும்
சாவா - (எக்காலத்தும்) இறவாத
உடம்பு - புகழுடம்பை
எய்தினர் - பெற்றவர்கள் ஆவர்.

கருத்துரை: இரப்பவர்க்கு ஈந்து புகழ் நாட்டியவனும், கற்புடையவளை மனைவியாகப் பெற்றவனும், நீர் வற்றாத உண்ணு நீர்க் கேணிகளை அமைத்தவனும் புகழை நிலைநாட்டியவர்கள் ஆவர்.

விளக்கவுரை

மண்ணின்மேல் வான் புகழ் நட்டான்: பூமியின்கண் பெரும் புகழை நிலைநாட்டியவன். "ஈதல் இசைபட வாழ்தல்" என்றார் வள்ளுவனார். எனவே, இரப்பவர்க்கு ஈந்தால்தான் பெரும் புகழை நிலை நாட்ட இயலும். **கற்புடையாள்:** கற்புடையவள். திருமணம் நடைபெறுங்காலத்தில், கணவனிடம் இன்னவாறு ஒழுக வேண்டும் என்று பெரியோர்கள் கற்பிப்பர். அவ்வாறு கற்பிக்கப் பெற்றவரே நடப்பது கற்பாகும். கற்புடையவளை மனைவியாகப் பெற்றவன் பெரும் புகழை அடைவான். "உண்ணுநீர் குறைவின்றிக் கூவல் தொட்டான்" என்று இயைக்க.

இலக்கணக் குறிப்பு: மண் : கருவியாகு பெயர். நட்டான், பெற்றான், தொட்டான் : வினையாலணையும் பெயர்கள். நட்டான், பெற்றான், தொட்டான் : இவற்றுள் நடு, பெறு, தொடு என்பவை முறையே பகுதிகள். பகுதியின்கண் உள்ள ஒற்று இரட்டித்து, இறந்தகாலம் காட்டியது. சாவா : ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

3. தூயோர் தொழில்

பதவுரை

உண்பொழுது - உண்ணுதற்கு உரிய காலத்தில்
நீர் ஆடி - நீரில் முழுகி,
உண்டலும் - (பின்பு) உண்ணுதலும்,
என்பெறினும் - (சான்று கூறுங்கால்) எத்தகைய பெரும் பயனை அடைவதாயினும்
பால் - ஒரு பக்கத்தை
பற்றி - சேர்ந்து
சொல்லா விடுதலும் - பொய்ச் சான்று கூறுமல் இருப்பதும்,
தோல்வற்றி - (உணவு இன்மையால்) உடல் இளைத்து
சாயினும் - அழிவதாயினும்
சான்ருண்மை - (நற்குணங்கள் பல நிறையப் பெறுதலாகிய) சான்ருண்மைப் பண்பு
குன்ருமை - குறையாமையும்
இம்மூன்றும் - ஆகிய இவை மூன்றும்
தூஉயம் என்பார் - குற்றம் அற்றவர்களாக உள்ளோம் என் போருடைய
தொழில் - செயல்கள் ஆவன.

கருத்துரை: நீராடி உண்ணல், பொய்ச் சான்று கூருமை, சான்ருண்மை நீங்காமை ஆகிய மூன்றும் தூயோர் தொழில்கள் ஆவன.

விளக்கவுரை

நீராடி உண்டல்: குறிப்பிட்ட காலங்களில் நீராட வேண்டும் என்பது மரபு. உண்பதற்குமுன்பு நீராடுதல் இன்றியமையாத தாகும். எனவே நீராடியபிறகு உண்டல் தூய தொழில் ஆயிற்று. **பால்பற்றிச் சொல்லா விடுதல்:** ஒரு பக்கத்தைச் சேர்ந்து பொய்ச் சான்று கூருமல் இருத்தல். 'பால்' என்னுஞ் சொல் 'பக்கம்' என்று பொருள்படும். பொய்ச்சான்று பகர்தல் பெரும் பாவச் செயலாகக் கருதப்படும். எனவே ஒரு பக்கமாக நின்று பொய்ச் சான்று கூறுதல் ஆகாது எனப்பட்டது. "ஒருபாற் கோடாமை சான்ரோர்க்கு அணி" என்ருர் வள்ளுவர். **சான்ருண்மை:** சால்பினை ஆளுந்தன்மை. இதற்குப் பரிமேலழகர், "பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆடல் தன்மை" என்று விளக்கம் கூறியுள்ளார். சான்று என்பது அறிவின் நிறைவு ஆகும். **தூஉயம் என்பார்:** தூய்மையை உடையோம் என்பார். மனம், மொழி, மெய் ஆகியவற்ருல் குற்றம் அற்றவர்கள் என்பார். நீராடுதலால் மெய்யின் குற்றம் நீங்கும். பொய்ச்சான்று பகராமையால் மொழிக் குற்றம் நீங்கும். சான்ருண்மை குன்ருமையால் மனக் குற்றம் நீங்கும்.

இலக்கணக் குறிப்பு: சான்று: 'சால்' பகுதி. அஃது உரிச் சொல் ஆகும். எனவே 'சான்று' என்பது உரிச்சொல் அடியாகப் பிறந்த பெயர் ஆகும். 'று' என்பது விகுதி. ஆண்மை: தொழிற் பெயர். தோல்: சினையாகு பெயர். தூஉயம்: செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை.

உள்ளம் உடைமை உடைமை.

5. நான்மணிக் கடிகை

பெயர்க் காரணம்: நான்மணிக் கடிகை என்பது, 'நந்நான்கு வகைப்பட்ட நீதிமணிகளாற் கோக்கப்பெற்ற ஒருவகை அணிகலன்' என்று பொருள்படும். அத்தகைய அணிகலன் போன்ற நூலாதலால் இந்நூல் இப்பெயரைப் பெற்றது.

நூலின் வகை: இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலின்கண் 104 பாடல்கள் உள்ளன.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: 'விளம்பி நாகனார்' என்பது இந்நூலாசிரியரின் பெயராகும். 'விளம்பி' என்பது இவ்வாசிரியரின் ஊராகும். இவரது இயற்பெயர் 'நாகனார்' என்பது.

சமயம்: இந்நூலின் காப்புச் செய்யுள் திருமால் துதியாக அமைந்திருத்தலால், இந்நூலாசிரியர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர் என்று கொள்ளலாம்.

காலம்: இந்நூலாசிரியர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சொல்லப்படுகின்றது.

1. இன்னார் இன்னார்க்கு இன்ன இன்னவை தோன்றா எனல்

பதவுரை

கழிவு - கழிந்த பொருள்களின் பொருட்டு
இரக்கம் - வருந்துதல்
கற்றார் முன் - கற்றுணர்ந்த பெரியோர்களிடம்
தோன்றா - தோன்றாது
காதலித்து - விரும்பி (ஊக்கம் கொண்டு)
ஒன்று - ஒரு நன் முயற்சியை
உற்றார் முன் - தொடங்கி செய்பவரிடம்
உறுமுதல் - (கிட்டாமையால் ஆகிய) முயற்சித் துன்பம்
தோன்றா - தோன்றாது
தெற்றென - தெளிவாக
அல்ல - தீயனவற்றை
புரிந்தார்க்கு - செய்தார்க்கு
அறம் - நல்லவை
தோன்றா - தோன்றமாட்டா
எல்லாம் - நன்மைகள் எல்லாம்
வெகுண்டார்முன் - சினங்கொண்டவரிடத்தில்
தோன்றா - தோன்றாவாய்
கெடும் - கெட்டு ஒழியும்.

கருத்துரை: கழிந்து போனவற்றின் பொருட்டுக் கற்றார் வருந்தார். ஊக்கமுடையாரிடம் முயற்சித் துன்பம் தோன்றாது. தீயவை செய்வாரிடம் அறம் தோன்றாது. சினங் கொண்டாரிடத்து எல்லா நன்மைகளும் தோன்றா.

ஊக்கம் உடையானுழை ஆக்கம் செல்லும்.

விளக்கவுரை

'கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்: பொருள் கழிவு முன் கற்றோர் பலவகையாக ஆராய்வர்; கழியாமல் இருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து முயல்வர். கழிந்தபிறகு அதன்பொருட்டு அவர்கள் வருந்தமாட்டார்கள். காதலித் தொன்று உற்றார் முன் தோன்றா உறாமுதல்: ஊக்கமுடையாரிடத்து முயற்சித் துன்பம் தோன்றாது. 'காதல்' என்பது 'ஊக்கம்' என்னும் பொருளில் வந்தது. 'உறாமுதல்' என்பது 'கிட்டாமையால் ஆகிய முயற்சித் துன்பம்' என்று பொருள்படும் ஊக்கம் இருந்தால் துன்பம் தோன்றாது என்பது கருதது. அல்ல புரிந்தார்க்கு அறம் தோன்றா: தீயவைச் செய் வாரிடத்து அறத்தின் உண்மைகள் தோன்றா. நல்லவை அல்லாதன யாவும் 'அல்ல' எனப்பட்டன; எனவே 'தீயவை' என்று பொருள பட்டது. அறத்தை உணராதோரே தீயவை செய்வர். எனவே 'அறம் தோன்றா' எனப்பட்டது. மனு முதலிய நூல்களின்கண் விதித் தனவற்றைச்செய்தலும் விலக்கியவற்றை ஒழிதலும் அறம் எனப்படும். எல்லாம் வெகுண்டார் முன்தோன்றா கெடும்: சினங் கொண்டவர் களிடத்தில் எல்லா நன்மைகளும் தோன்றாதனவாய்க் கெடும். சினங் கொள்வோர்க்கு இனம் ஆயினோர் இலராவர். அதுபற்றியே வள்ளுவ னார், "சினம் என்னும் சேர்ந்தாரைச் சொல்லி" என்றார். இனம் ஆயினோர் உற்றாரும், உறவினரும் ஆவர். அவர்கள் இல்லையாகவே சினங் கொண்டார்க்கு எல்லா நன்மைகளும் இல்லையாயின. எனவே, ஈண்டு இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: கழிவு: தொழிலாகு பெயர் முதல்: பண்பாகு பெயர். ஒன்று: எண்ணலளவை ஆகு பெயர். முதல் மூன்றடிகளிலும் உள்ள 'தோன்றா' என்பது ஒன்றன்பாற் படர்க்கை எதிர்மறை வினைமுற்று. ஈற்றடியில் உள்ள 'தோன்றா' என்பது முற்றெச்சம் ஆகும். அல்ல - வினைக்குறிப்புப் பெயர்.

2. இன்னார் இன்னார்க்கு இன்ன இன்னவை அணியெனல்

பதவுரை

நெல்லுங் கரும்பும் - நெற்பயிரும் கரும்புப் பயிரும்	அணி என்ப - அழகு தரும் என் பர் பெரியோர்.
நிலத்துக்கு - வயலுக்கு	நாணம் - நாணம் என்னும் பண்பு
அணி என்ப - அழகாவன என்பர் பெரியோர்	பெண்மை - பெண் தன்மைக்குரிய கற்பாகிய
தாமரை - தாமரை செறிந்திருத் தல்	நலத்துக்கு - நன்மைக்கு
குளத்துக்கு - குளத்துக்கு	அணி என்ப - அழகு தரும் என் பர் பெரியோர்.

வெள்ளத்தனைய மலர் நீட்டம்.

தான் செல் - தான் செல்லும்	அறம் - அறங்கள்
உலகத்து - (மறுமை) உலகத்துக்குத் துணையாகச் செய்யப்படும்	தனக்கு அணி ஆம் - ஒருவனுக்கு அழகு தரும்.

கருத்துரை : நெல்லும் கரும்பும் நிலத்துக்கும், தாமரை குளத்துக்கும், நாணம் பெண்மைக்கும், அறம் ஆடவர்க்கும் அழகு தரும்.

விளக்கவுரை

நிலத்துக்கு அணியென்ப நெல்லுங் கரும்பும் : நெற்பயிரும், கரும்புப் பயிரும் மருத நிலத்திற்கு உரிய பயிர்கள் ஆவன. அவ்விரண்டும் வயலுக்கு அழகு தருவன. நிலங்களுக்குள் மருத நிலமே மக்களுடைய பசியைப் போக்க வல்லது. வயலும், வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். அதுபற்றியே 'நிலம்' என்பதற்கு ஈண்டு 'வயல்' என்று பொருள் கொள்ளப்பட்டது. **பெண்மை நலத்துக்கு அணியென்ப நாணம் :** 'பெண்மை' என்பது 'பெண்ணின் தன்மை' என்று பொருள்படும். பெண்மை நலமாவது கற்பாகும். கற்பிற்கு நாணமே அழகு தரும் என்பது ஈண்டுக்கூறப்பட்ட கருத்தாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு பண்புகளும் பெண்டிருக்கு இருத்தல் வேண்டும் என்பர். அவற்றுள் நாணம் இன்றியமையாதது என்று ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. **தான் செல் உலகத்து அறம் :** தான் செல்லும் மறுமையுலகத்துக்குத் துணையாகச் செய்யப்படும் அறங்கள். ஒருவனுடன் மறுமைக்குத் துணையாக வருவது தான் செய்த அறமேயாகும். "பற்றி வருவன இருவினை புண்ணிய பாவங்களே" என்று பட்டினத்தார் இக்கருத்தையே கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு : நெல், கரும்பு : காரண ஆகு பெயர்கள். தாமரை : சாதி ஒருமை; அது முதலாகு பெயரும் ஆகும். என்ப : எதிர்கால வினைமுற்று ; ஈண்டு அமைந்துள்ள, 'ப' என்னும் விகுதி பல்லோர் படர்க்கை விகுதி ஆகும். பெண்மை நலம் : இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

3. இன்னவை இன்னவற்றை உரைக்கும் எனல்

பதவுரை

மலர் உண்மை - மலர்களின் இருப்பை	கூறிய மாற்றம் - (அவன்) பேசிய சொல்லே
நாற்றம் - அவற்றின் மணமே	உரைக்கும் - அறிவிக்கும்;
உரைக்கும் - அறிவிக்கும்;	தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால்
வினை நலம் - (ஒருவனது) செய்கையின் நலத்தை	அகம் பொதிந்த - மனத்தின் கண் மறைத்து வைத்த

தீமை - தீமையை
மனம் உரைக்கும் - அவனது மனமே அவனுக்கு அறிவிக்கும்;
முன்னம் - ஒருவனது உள்ளக் குறிப்பை
முகம் போல - அவனது முகத்தைப்போல
முன் உரைப்பது - முற்படத் தெரிவிப்பது
இல் - வேறில்லை.

கருத்துரை: மலரின் உண்மையை அதன் மணமும், ஒருவனது வினையின் நலத்தை அவன் பேசும் சொற்களும், ஒருவனது மனத்தில் மறைந்து கிடக்கும் தீமையை அவனது மனமும், ஒருவனது உள்ளக் குறிப்பை அவனது முகமும் அறிவிக்கும்.

விளக்கவுரை

கூறிய மாற்றம் உரைக்கும் வினை நலம்: ஒருவனது செய்கையின் நலத்தை அவன் பேசிய சொல்லே அறிவிக்கும். ஒருவன் பேசிய பேச்சைக் காரண காரிய முறைப்படி ஆராய்ந்து பார்த்தால் அவனது செய்கைத் திறத்தை அறியலாம். **தூக்கின் அகம் பொதிந்த தீமை மனம் உரைக்கும்:** ஒருவனது மனத்தின்கண் மறைந்து கிடக்கும் தீமையை அவனது மனமே அறிவிக்கும்; அத்தீமைக்குச் சான்றாய் நின்று அவனை வருத்தும், ஆராய்ந்து பார்த்தால்தான் மனம் அவ்வாறு அறிவிக்கும் என்பதனைத் தெரிவிக்கும்பொருட்டு, 'தூக்கின்' எனப்பட்டது. "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்று திருக்குறளிலும், "நெஞ்சத்திற்குறுகிய கரியில்லை" என்று கலித்தொகையிலும் கூறப்பட்டுள்ளன. **முன்னம் முகம் போல முன்னுரைப்பதில்:** உள்ளக் குறிப்பை முகத்தைப்போல முற்படத் தெரிவிப்பது வேறில்லை. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி. மனத்தின்கண் உண்டான விருப்பு, வெறுப்புக்களைக் கண்ணே அறிவிக்கும் என்று வள்ளுவனாரும் கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு: உண்மை. குறிப்புத் தொழிற் பெயர். உரைப்பது - வினையாலணையும் பெயர். முன்னம் - தொழிற் பெயர் 'முன்' பகுதி; 'ன்; சந்தி. 'அம்' புடைபெயர்ச்சி விகுதி. இல்: 'இல்லை' என்னுஞ் சொல்லின்கண் உள்ள 'ஐ' என்பது தொக்கு நின்றது.

---

6. அறநெறிச்சாரம்

பெயர்க் காரணம்: அறம் + நெறி + சாரம் = அறநெறிச்சாரம். இச்சொற்றொடர்க்கு 'அறநெறிச் செய்திகளுள் இன்றியமையாதனவற்றைத் தொகுத்துக் கூறும் நூல்' என்பது பொருளாகும். எனவே, 'அறநெறிச்சாரம்' என்பது ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும்.

நூலின் இயல்பு : இந்நூல் அருக சமயத்துடன் தொடர்பு கொண்டது. இந்நூலின் பாடல்கள் சில அருகக் கடவுளைப்பற்றியும், அருக சமயம் பற்றியும், அருக ஆகமம் பற்றியும் சிறப்பாகக் கூறுகின்றன. ஏனைய பாடல்கள் அறங்கள் பலவற்றைக் கூறுகின்றன. பாடல்கள் யாவும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை கொண்டன ; செம்பாகமாகப் பொருள் கொள்ளத் தக்கன. இந்நூற் பாடல்கள் சில ஆங்கில மொழியிற் பெயர்க்கப்பட்டுள்ளன.

காலம் : இந்நூற் பாடல்களுள் சில 'புறத்திரட்டு' என்னும் தொகை நூலின்கண் இடம் பெற்றுள்ளன. புறத்திரட்டானது இற்றைக்கு 500 ஆண்டுகட்கு முன்பு தொகுக்கப்பெற்றது என்பர் ஆராய்ச்சியாளர். நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் இந்நூற் பாடல்கள் சிலவற்றை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர். எனவே, இந்நூல் இற்றைக்குச் சற்றேறக்குறைய 600 ஆண்டுகட்கு முன் எழுந்தது என்னலாம்.

நூலாசிரியர் : முனைப்பாடியார்.

சமயம் : அருகம்.

1. அறம் உரைப்பவன் இலக்கணம்

பதவுரை

அறம் கேட்டு - அற நூல்கள் பலவற்றைக் கேட்டவனாகவும்,

அருள் புரிந்து - அருளை விரும்பி மேற்கொண்டவனாகவும்,

ஐம்புலன்கள் மாட்டும் - ஐம்புல இன்பங்களை

இறங்காது - விரும்பாதவனாகவும்,

இருசார் பொருளும் - அகப் பற்று, புறப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களை

துறந்து - விட்டவனாகவும்,

அடங்கி - அடக்கம் உடையவனாகவும்,

மன் உயிர்க்கு - உலகில் நிலை பெற்ற உயிர்கட்கு,

உய்ந்துபோம் வாயில் - வீட்டுலக கிடைப்பதற்குரிய வழியினை

உரைப்பானேல் - உரைப்பவனாகவும் ஒருவன் உளனாயின் (அவன்),

பன்னுதற்கு - அறம் உரைப்பதற்கு,

பாற்பட்டவன் - உரியவன் ஆவான்.

கருத்துரை : அற நூல்களைக் கேட்டு, அருள் கொண்டு, ஐம்புல நுகர்ச்சிகளை வெறுத்து, பற்றுக்களை நீக்கி, அடக்கம் கொண்டு, மக்களுக்கு வீட்டுலகம் கிடைத்தற்குரிய வழியினைக் கூறுதலே அறம் உரைப்பவனது இலக்கணம் ஆகும்.

விளக்கவுரை

அறம் கேட்டு : அற நூல்களைக் கேட்டு, "கற்றலிற் கேட்டல் நன்று" என்பதற்கு இயைய ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. அருள் :

சிதைவிடத் தொல்கார் உரவோர்.

தொடர்பில்லாத உயிர்களிடத்தில் காட்டப்படுவது. ஐம்புலன்கள் மாட்டும் இறங்காது: ஐம்புல இன்பங்களை வெறுத்து. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் ஐம்புலன்கள் ஆவன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் ஐம்பொறிகள் ஆவன. ஐம்பொறிகளும் ஐம்புலன்களினிடத்தே தத்தம் விருப்பம்போல் செல்லாமல் அடக்குதலே ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருசார் பொருள்: இருவகைப் பற்றுக்கள். அவை அகப்பற்றும், புறப்பற்றும் ஆம். 'நான்' என்று இறுமாத்தல் அகப்பற்று ஆகும். 'எனது' என்று இறுமாத்தல் புறப்பற்று ஆகும். உய்ந்துபோம் வாயில்: பிழைக்கும் வழி. அஃதாவது வீட்டு நெறியாகும்.

இலக்கணக் குறிப்பு: அறம்: ஆகு பெயர்: கேட்டு, புரிந்து, இறங்காது, துறந்து, அடங்கி: வினையெச்சங்கள்.

2. நூல் உரைத்தற்கு உரியரல்லாதார்

பதவுரை

பிள்ளை - பாலகனும்,
பேய் - பேய் தீண்டப்பெற்றவனும்,
பித்தன் - அறிவு கலங்கியவனும்,
பிணியாளன் - நோயாளனும்,
பின்நோக்கி - முன்னேற்றத்தில் நோக்கம் இல்லாதவனும்,
வெள்ளை - அறிவில்லாதவனும்,
களி - கள்ளுண்டு களிப்பவனும்,
விடமன் - பிறர்க்குத் துன்பம் செய்பவனும்,
வேட்கையான் - பேராசைக்காரனும்,
புரைக்க - குற்றம் உள்ளன வற்றையே,
தெள்ளி - ஆராய்ந்து பார்த்து,
பொருள் உணர்வான் - தவறான பொருளையே உணர்பவனும்,
என்ற இவரே - எனப்பட்ட இவர்களே,
நூலை - அறநூலை,
உரைத்தற்கு - சொல்வதற்கு,
உரிமை இலாதார் - உரிமை இல்லாதவர் ஆவர்.

கருத்துரை: பாலகன், பேய் தீண்டப்பெற்றவன், பித்தன், நோயாளன், முன்னேற்றத்தில் நோக்கம் இல்லாதவன், அறிவில்லாதவன், கள்ளுண்டு களிப்பவன், பிறர்க்குத் தீங்கு செய்பவன், பேராசைக்காரன், குற்றத்தையே ஆராய்ந்து உணர்பவன் என்போர் அறநூலை உரைத்தற்கு உரிமையில்லாதவர்கள் ஆவர்.

விளக்கவுரை

பிள்ளை: பிள்ளைத் தன்மை (குழந்தைத் தன்மை) உடைய பாலகன். நல்லனவற்றையும், தீயனவற்றையும் பகுத்து உணராத பருவமே பிள்ளைப் பருவம் ஆகும். பின்னோக்கி: பின்னேக்

கம் உடையவன். அஃதாவது முன்னேற்றத்தில் நோக்கம் இல்லாதவன். விடமன்: பிறர்க்குத் துன்பம் செய்வதில் விருப்பம் உடையவன். தெள்ளிப்புரைக்கப் பொருள் உணர்வான்: குற்றமானவற்றையே ஆராய்ந்தெடுத்து, அவற்றையே உட்கொள்பவன். ஈண்டுக் குறிப்பிடப்பெற்றவர்கள் யாவரும் அறநூலை உரைத்தற்கு உரிமையில்லாதவர்கள் ஆவர்.

இலக்கணக் குறிப்பு: பேய், வெள்ளை: ஆகுபெயர்கள். இவரே: ஏகாரம் பிரிநிலை. என்ற + இவரே = என்றிவரே: ஈண்டு 'என்ற' என்னுஞ் சொல்லின் ஈற்றில் நின்ற அகாரம் மறைந்தது தொகுத்தல் விகாரம் ஆகும்.

3. அறம் கேட்டற்கு உரியர் ஆகாதவர்

பதவுரை

தன் சொல்லே - தான் கூறிய சொல்லே
மேற்படுப்பான் - சிறந்தது என்று கூறுபவனும்
தண்டி - மாண் பிறந்த மானம் உடையவனும்
தடிபிணக்கன் - மிக்க மாறுபாடு கொண்டவனும்,
புன்சொல்லே - பிறர் சொல்லும் இழு சொற்களின்
போதரவு - வரவினையே
பார்த்திருப்பான் - எதிர் பார்த்து இருப்பவனும்,
இன்சொல்லை - இன்சொற்களை
ஏன்று இருந்தும் - கேட்டற்குக் காலமும், இடமும் வாய்த்திருந்தும்.
கேளாத ஏழை - கேட்க விரும்பாத அறிவில்லாதவனும்
என இவர்கட்கு - எனப்படும் இவர்கட்கு
ஆன்றவர்கள் - பெரியோர்கள்
அறம்கூறுர் - அறநூலைக் கூற மாட்டார்கள்.

கருத்துரை: தான் கூறுவதே சிறந்தது என்பான், மாண் பிறந்த மானம் உடையான், மாறுபாடு கொண்டவன், பிறர் எப்பொழுது இழிச்சொற்களைக் கூறுவர் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன், இன்சொற்களைக் கேட்க விரும்பாதவன் முதலியோர் அறநூலைக் கேட்டற்கு உரியர் ஆகார்.

விளக்கவுரை

தன் சொல்லே மேற்படுப்பான்: தான் சொல்லியதே சிறந்தது என்று வாதம் செய்பவன்; பிறர் கூறுவனவற்றை ஆராயாமலே கூறுபவன். புன்சொல்லே போதரவு பார்த்திருப்பான்: பிறர் எப்பொழுது இழி சொற்களைக்கூறுவர் என்று எதிர்பார்த்திருப்பவன். அஃதாவது பிறரைக் குறை கூறுதற்குச் சமயம் பார்த்திருப்பவன் ஏழை: அறிவில்லாதவன். இன்சொற்களைக் கேட்டற்குக் காலமும்,

இடமும் வாய்த்திருந்தும் அவற்றைக் கேட்க விருப்பமில்லாதவனுதலால் அவன் அறிவில்லாதவன் எனப்பட்டான்.

இலக்கணக் குறிப்பு : படுப்பான்: வினையாலணையும் பெயர். போதரவு : தொழிற் பெயர். கேளாத : பெயரெச்சம்.

நல்லொழுக்கப் பயிற்சி

நீங்கள் பலவகைப்பட்ட அறவுரைகளைப் படித்தீர்கள். கல்வி கற்பதன் நோக்கம் யாது ? உயர் பதவியில் இருந்து, பொருள் சேர்ப்பதே கல்வியின் நோக்கம் என்பர் பலர். ஆனால் அது கல்வியின் சிறந்த நோக்கம் அன்று. அறிவு பெறுதற் பொருட்டே கல்வி கற்க வேண்டும். ஒழுக்கம் இன்றேல், கல்வியினாலும், அறிவினாலும் பயன் உண்டாகாது என்கின்றார் வள்ளுவனார். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்றும் அவர் கூறியுள்ளார். உயர்ந்தோர் நடந்து காட்டும் அடிச்சுவட்டினைப் பின்பற்றி நடப்பதே ஒழுக்கம் ஆகும். மாணவர்களாகிய உங்களுக்கு அண்மையில் இருக்கும் உயர்ந்தோர்கள் உங்களுடைய ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஆவர். அவர்கள் கூறும் பொருளுரைகளைப் பொன்னேபோற் போற்றுங்கள்; கல்வியின் பயனை அடையுங்கள்; நல்லொழுக்கத்தைப் பிறர்க்கும் உணர்த்துங்கள்.

III. கதை

1. சிலப்பதிகாரம்

பெயர்க் காரணம் : *சிலம்பு+அ தி கா ர ம்=சிலப்பதிகாரம்.* "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில் தம்மின வன்றொடர் ஆகாமன்னே" *என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி, 'சிலம்பு' என்பது 'சிலப்பு' என நின்றது.* "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" *என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி,* குற்றியலுகரம் உயிர் முதன் மொழிவருங்கால் *கெட்டு, சிலம்பு+அதிகாரம்=சிலப் பதிகாரம் எனப் புணர்ந்தது. 'சிலப்பதிகாரம்' என்பது சிலம்பினது அதிகரித்தலையுடைய நூலைக் குறித்தது அஃது* ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. *இந்நூற் கதை நிகழ்ச்சிக்குச் சிலம்பே இன்றியமையாததாகலின் இவ்வாறு பெயர் வந்தது.*

நூலின் வகை: தமிழ்மொழியின்கண் ஐம்பெருங் காப்பியங்கள் உள்ளன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. 'காப்பியம்' என்பது கதை தழுவிய நூலாகும்.

நூலின் பிரிவு: இந்நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின்கண் முப்பது காதைகள் உள்ளன.

நூலின் பெருமை: தமிழ் மொழியின்கண் முதன்முதல் தோன்றிய பெருங்காப்பியம் சிலப்பதிகாரமேயாகும். முத்தமிழும் விரவப் பெற்றுள்ள நூல் இது. இதன்கண் உரைச் செய்யுளும், இசைப் பாட்டும் இடையிடையே கலந்துள்ளன. தமிழிசைக்கும், நாட்டியத்திற்கும் நல்லுயிர் கொடுத்த நூல் இது தமிழ் மொழியிற் காப்பியங்கள் பல தோன்றுதற்கு இந்நூலே வழிகாட்டியாக இருந்தது. "நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரமென்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்று பாரதியார் இந்நூலைப் பாராட்டியுள்ளார். இந்நூல் குடிமக்கள் காப்பியம் ஆகும்.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர்: இளங்கோவடிகள்.

மரபு: சேரர் மரபு.

தந்தை: நெடுஞ்சேரலாதன்.

உடன் பிறந்தவன்: சேரன் - செங்குட்டுவன்.

சமயம்: இன்ன சமயத்தவர் என்று துணிந்து கூற இயலாது. சமண சமயத்தவரோ என்று நினைக்க இடம் உள்ளது. ஆயின் ஏனைய மதங்களுக்கு இவர் ஏற்றம் கொடுத்துள்ளார்.

காலம்: கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

இதனுடன் தொடர்பு கொண்ட வேறு நூல்: மணிமேகலை. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும்.

உரையாசிரியர்கள்: இந்நூலுக்கு அடியார்க்கு நல்லார் என்பவர் உரையெழுதியுள்ளார். மதுரைக் காண்டத்தின் இறுதி நான்கு உறுப்புக்களுக்கும், வஞ்சிக் காண்டத்திற்கும் இவர் எழுதியவுரை அகப்படவில்லை. அவற்றுக்கு, இவர் இயற்றியவுரை இறந்து பட்டது போலும்! இந்நூலுக்கு அரும்பதவுரை ஒன்று உள்ளது. அவரைப் பற்றிய செய்தி எதுவும் கிடைத்திலது. அடியார்க்கு நல்லார் உரையெழுதுவதற்கு முன்னதாகவே அரும்பதவுரை தோன்றியிருத்தல் வேண்டும். அண்மைக் காலத்தில் நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இந்நூலுக்கு உரையெழுதியுள்ளார்.

ஆசிரியரைப்பற்றிய வரலாறு: இளங்கோவடிகளும், அவரது தமையனாகிய செங்குட்டுவனும் ஒருமுறை தமது தந்தையின் அரசவையில் வீற்றிருந்தனர். அதுபொழுது ஆங்கொரு நிமித்திகன் வந்தான். அவன் மைந்தர்கள் இருவரையும் உற்று நோக்கினன்; இளங்கோவடிகளின் முகத்தில் அறிவொளி திகழ்வதைக் கண்டு, பிற்காலத்தில் அவரே அரசுரிமை பெறுதற்குத் தகுதியுடையவர் என்று நெடுஞ்சேரலாதனிடம் கூறினன். அதுகேட்ட இளங்கோவடிகள் சீறியெழுந்தார்; தமையன் இருக்கத் தம்பி மணிமுடி சூடுவது தக்கதோ என்று நிமித்திகரை வினவினர். தமையனாகிய செங்குட்டுவனது துன்பத்தையும், ஐயத்தையும் தவிர்த்தற்பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டார். இளமையில் துறவு பூண்ட காரணத்தாலேயே இவருக்கு இளங்கோவடிகள் என்னும் இப்பெயர் அமைந்தது.

சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்: காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கோவலன் என்னும் வணிக இளைஞன், தனது மனைவியாகிய கண்ணகியை விடுத்து, நாடக மகளாகிய மாதவி என்பவளுடன் நட்புக் கொண்டிருந்தான். பின்பு ஊழ்வினை வயத்தால் கோவலன் மாதவியை விடுத்துப் பிரியுமாறு நேர்ந்துவிட்டது. கோவலன் தான் இழந்தபொருளை வணிகத் துறையின் வாயிலாகவேபெற விரும்பி மதுரைக்குக் கிளம்பினன். அவனுடன் கண்ணகியும் சென்றாள்.

மதுரையை அடைந்தபின்பு, கோவலன் தனது மனைவியின் சிலம்பு ஒன்றினை விற்றுவரச் சென்றான். அதுபொழுது கோவலனுக்கு எதிரில் பொற்கொல்லர் தலைவன் ஒருவன் வந்தான். அவனே அரசனது அரண்மனையிலிருந்து கோப்பெருந்தேவியின் சிலம்பு ஒன்றினைத் திருடியவன். தனது திருட்டை மறைப்பதற்குரிய வாய்ப்பினை அவன் எதிர்நோக்கியிருந்தான் அத்தகையானிடம் கோவலன் தனது சிலம்பினைக் காட்டி, அதனை விற்றுத் தருமாறு வேண்டினன். அவ்வளவில்பொற்கொல்லன் கோவலனைத் தனது மனையில் இருத்தி, பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சென்று, கோவலனே அரசியின் சிலம்பைத் திருடியவன் என்றும், அவனிடம் சிலம்பு உள்ளது என்றும் கூறினன். அரசனும் ஆராயாமல், கோவலனைக் கொன்று சிலம்பினைப் பெற்று வருமாறு ஏவலரை அனுப்பினன். ஏவலருள் ஒருவன் கோவலனைக் கள்வன் என்றே எண்ணிக் கொன்றுவிட்டான். தனது கணவன் கொலையுண்டமையை உணர்ந்த கண்ணகி பாண்டியனிடம் சென்று, வழக்குரைத்து, சிலம்பினை வாங்கியுடைத்துக் காட்டி, தன் கணவன் கள்வனல்லன் என்பதனை எடுத்துக் காட்டினள். தனது செங்கோல் கோடியதை உணர்ந்த பாண்டியன் அவ்வளவில் இறந்தான். அவனது மனைவியும் இறந்தாள். கண்ணகி தனது சினத்தால் மதுரையை எரித்து, நடந்து சென்று, சேர நாட்டைச் சேர்ந்த திருச்செங்குன்று என்னுமிடத்தில் பதினான்கு நாட்கள் வருந்தி நின்றாள். அப்பொழுது தேவர்கள் வானவூர்தியில் கோவலனிடம் வந்து, கண்ணகியை அழைத்துச் சென்றனர்.

இடுக்கண் வருங்கால் நகுக.

இந்நிகழ்ச்சியைக்கண்ட குறவர்கள், அதனைச் செங்குட்டுவனிடம் கூறினர். அப்பொழுது அருகில் இருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் கண்ணகியின் வரலாற்றைக் கூறினார். செங்குட்டுவன் பின்பு இமயமலைக்குச் சென்று கல்லெடுத்து, அதனைக் கங்கையில் நீர்ப்படை செய்து, அதன்கண் கண்ணகியின் உருவத்தைப் பொறித்து, கோயிலில் அதனை நாட்டி விழாச் செய்தான்.

இந்நூல் பாடப்பெற்ற வரலாறு: கண்ணகி விண்ணுலகு சென்றமையைக் குறவர் கூறியபின்பு, சாத்தனார் கண்ணகியின் வரலாற்றைக் கூறினார். அவ்வரலாறு இளங்கோவடிகளின் கருத்தைக் கவர்ந்தது. செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்குச் சிறப்பு செய்தகாலையில் அடிகளும் உடன் இருந்தார். முடிவேந்தர் மூவருக்கும் உரிய வரலாறு ஆதலால் அதனை முற்றத்துறந்த முனிவராகிய இளங்கோவடிகளே பாடுதற்குரியவர் என்று சாத்தனார் கூறினார். கண்ணகியின் வரலாற்றினால் உலகத்து மக்களுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறலாம் என்றுதோன்றவே அடிகள் அதனைப் பெருங்காப்பியமாகப் பாடி முடித்தார்.

நூல் கூறும் உறுதிப் பொருள்கள் மூன்று: இந்நூல் சிறப்பாக மூன்று உறுதிப் பொருள்களைக் கூறுகின்றது. அரசநீதி பிழைத்தோர்க்கு அறக்கடவுளே கூற்றாகும் என்பதும், பத்தினிக் கடவுளைத் தேவரும் போற்றுவர் என்பதும், ஊழ்வினை தன் பயனை ஊட்டும் என்பதும் இந்நூல்கூறும் மூன்று உறுதிப் பொருள்கள் ஆவன.

பிறநூல்கட்கும் இதற்கும் உள்ள வேறுபாடு: பிற நூல்களைப் பாடிய ஆசிரியர்கள் அவ்வக்கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்திலர். பலர் கற்பனை செய்தே கதைகளைப் பாடல்களில் அமைத்தனர். சிலப்பதிகாரமோ அத்தகையதன்று. இதன் ஆசிரியராகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்; கதையுடன் தொடர்பு கொண்டவர்; கதை நிகழ்ந்த காலத்து மக்களைப்பற்றி நன்கு உணர்ந்தவர். விருப்பு வெறுப்பற்ற நிலையில் நின்று அடிகள் இந்நூலைப் பாடியருளினார்.

மங்கல வாழ்த்துப் பாடல்

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிக மரபில் தோன்றினான் கோவலன். அழகும் ஆண்மையும்பெற்று விளங்கிய அவனுக்கும், உருவும் திருவும் ஒருங்கே அமையப்பெற்ற கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணக் காலத்தில் கோவலனும் கண்ணகியும் தீவலம் செய்தனர். அப்பொழுது பெண்டிர் மங்கலப் பொருள்களுடன் வந்து, கண்ணகியை வாழ்த்தி, அவளைக் கோவலனுடன் சேர்த்தனர். மங்கல வாழ்த்தினைக் குறிப்பிடும் பகுதி 'மங்கல வாழ்த்துப் பாடல்' என்று பெயர் பெற்றது. தொடக்கத்தில் வேறு வாழ்த்துக்களும் அமைந்துள்ளன.

சந்திரனை வாழ்த்துதல் (1—3)

பதவுரை

கொங்கு - தாது
அலர் - பரந்த
தார் - மாலையைச் சூடிய
செம்னி - சோழனது
குளிர் - குளிர்ச்சியை உடைய
வெண்குடைபோன்று - வெண் குடையைப்போல
இ - இந்த
அம்கண் - அழகிய இடத்தை யுடைய
உலகு - உலகிற்கு
அளித்தலால் - பொதுவற அருள் செய்கின்ற காரணத்தால்
திங்களைப் போற்றுதும் - யாம் சந்திரனைப் போற்றுவோம்.
திங்களைப் போற்றுதும்

கருத்துரை : இவ்வுலகிற்கு அருள் செய்கின்ற காரணத்தால் சந்திரனைப் போற்றுவோம் என்கின்றார் ஆசிரியர்.

விளக்கவுரை

சென்னி : சோழன். தலைமைபற்றி இப்பெயர் சோழர்க்கு அமைந்திருத்தல் கூடும். **குளிர் வெண் குடைபோன்று :** சோழனது குடை, சோழ நாட்டு மக்களுக்கு இன்பம் செய்கின்றது; குளிர்ச்சியைத் தருகின்றது. அஃதாவது மக்களுடைய மனம் குளிர்ந்த நிலையில் இருக்குமாறு செய்கின்றது குற்றம் அற்ற தன்மையை வெண்மை குறிக்கும். அதுபற்றியே 'வெண்குடை' எனப்பட்டது. குடை மக்களுக்கு அருளுதல்போலச் சந்திரனும் மக்களுக்கு அருள்கின்றான் என்பது ஆசிரியரின் கருத்தாகும். இது புகார்க் காண்டமாதலால் சோழனைப் புகழ எண்ணி இவ்வாறு வாழ்த்தினார் ஆசிரியர்.

இலக்கணக் குறிப்பு : முதலடி சிறப்பின்கண் வந்த அடுக்கு ஆகும். அலர்தார்: **வினைத் தொகை.** சென்னி: **ஆகுபெயர்.** வெண்குடை : **பண்புத் தொகை.** வெண்குடைபோன்று : **பண்பும் பயனும் விரவி வந்த உவமம்.**

ஞாயிற்றை வாழ்த்துதல் (4—6)

பதவுரை

காவிரி நாடன் - காவிரி நாட்டை யுடைய சோழனது
திகிரிபோல் - ஆணைச் சக்கரத்தைப்போல
பொன் கோட்டு - பொற் சிகரத்தையுடைய
மேரு - மேரு மலையை
வலம் திரிதலான் - வலமாகச் சுற்றுகின்ற காரணத்தால்
ஞாயிறு - சூரியனை
போற்றுதும் - யாம் போற்றுவோம்.
ஞாயிறு போற்றுதும் —.

கருத்துரை: மேரு மலையைச் சுற்றி வருதலால் சோழனது ஆணைச் சக்கரத்தைப்போல் உள்ளது சூரியன். ஆதலால் அதனை யாம் போற்றுவோம் என்கிறார் ஆசிரியர்.

விளக்கவுரை

'காவிரி: தான் செல்லும் இடங்களிலெல்லாம் சோலைகளை விரித்துக்கொண்டே செல்கின்ற காரணத்தால் காவிரியாறு அப்பெயரைப் பெற்றது. கா - சோலை. விரி - விரித்துக்கொண்டு செல்வது. காவிரி நாடன்: சோழன். சோழ நாட்டை வளர்க்கும் தாய்போல் விளங்குவது காவிரி. அந்நாட்டைக் காவிரியே வளப்படுத்துகின்றது. எனவே சோழ நாட்டிற்கு 'காவிரி நாடு' என்று பெயர் வந்தது. சோழ நாட்டை ஆளும் சோழனும் 'காவிரி நாடன்' எனப் பெற்றான். திகிரி: ஆணைச் சக்கரம். ஆக்கினை சக்கரம். அரசனது ஆணையைச் சக்கரமாகக் கூறுதல் மரபு பொற் கோட்டு மேரு: பொற்சிகரத்தையுடைய பெருமலை. 'பொன்' என்னுஞ் சொல் பொலிவையும் குறிக்கும். மேரு என்பது உலகிலேயே பெரிய மலையாகும். சோழனது ஆணைச்சக்கரம் போல மேருவை வலமாகத் திரிகின்ற காரணத்தால் சூரியனைப் போற்றுவோம் என்கிறார் ஆசிரியர்.

இலக்கணக் குறிப்பு: ஈண்டும் முதலடியில் உள்ள அடுக்கு சிறப்புப்பற்றி வந்தது. திகிரிபோல்: தொழில்பற்றி ஈண்டு உவமம் அமைக்கப்பட்டது. பொற்கோடு: மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

மழையை வாழ்த்துதல் (7—9)

பதவுரை

நாமம் - அச்சத்தைத் தருகின்ற,
நீர் - கடலால்,
வேலி - சூழப்பெற்ற,
உலகிற்கு - உலகத்திற்கு
அவன் - அச்சோழனது
அருள்போல் - அருளைப்போல
மேல் நின்று - மேலாகி நின்று
சுரத்தலான் - தன் பெயரால் வளஞ் சுரக்கின்ற காரணத்தால்
மாமழை - பெரிய மழையை
போற்றுதும் - போற்றுவோம்.
மாமழை போற்றுதும் —.

கருத்துரை: சோழன் தன் மக்களுக்கு அருள் செய்தலைப்போல் மேகம் மழை பொழிந்து வளஞ் சுரக்கின்றது. எனவே, அம்மேகத்தைப் போற்றுவோம்.

விளக்கவுரை

மா: பெரிய, கரிய. மழை: மேகம். நாம நீர் வேலி: அச்சத்தைத் தருகின்ற கடலை வேலியாக உடைய; 'நாம' என்பது 'அச்சம்' என்று பொருள்படும். 'நீர்' என்பது நீர் நிறைந்த கடலைக் குறிக்கும்.

'வேலி' என்பது 'வேலிபோற் சூழ்ந்த' என்று பொருள்படும். உலகைக் கடல் சூழ்ந்துள்ளது என்னும் உண்மையை நெடுங்காலத்திற்கு முன்னரே தமிழர் அறிந்திருந்தனர். 'சோழன் தன்மக்களிடத்தே பேரருள் காட்டுவான். அதுபோல மேகமும் உலக மக்களிடத்தே பேரருள் கொண்டு மழையைப் பொழிகின்றது. ஆதலால் மேகத்தை வாழ்த்துவோம்' என்கின்றார் ஆசிரியர்.

இலக்கணக் குறிப்பு: மழை: ஆகுபெயர். 'நாம்' என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது. நீர்: ஆகுபெயர்.

பூம்புகாரை வாழ்த்துதல் (10—12)

பதவுரை

வீங்கு நீர் - மிக்க நீரினையுடைய கடலை,
வேலி - வேலியாகவுடைய (கடலாற் சூழப்பெற்ற)
உலகிற்கு - உலகின்கண்
அவன் குலத்தோடு - (தொன்று தொட்டு வருகின்ற) அச் சோழன் குலத்தோடு
ஓங்கி - பொருந்தி உயர்ந்து,
பரந்து - எங்கும் பரவி
ஒழுகலான் - நடக்கின்ற காரணத்தால்
பூம்புகார் - அழகிய புகாரினை
போற்றுதும் - யாம் போற்றுவோம்.
பூம்புகார் போற்றுதும்—.

கருத்துரை: சோழனது குலம் தொன்று தொட்டு வளர்ந்து வருகின்றது. அதனோடு பொருந்தி உயர்ந்து பரந்து நடக்கின்றது புகார் நகரம். எனவே அத்தகைய புகாரைப் போற்றுவோம்.

விளக்கவுரை: பூம்புகார்: அழகிய புகார்; பொலிவு பெற்ற புகார்: பூக்கள் நிறைந்த புகார். காவிரிப்பூம்பட்டினத்திற்கு உரிய வேறு பெயர் புகார். 'புகார்' என்னுஞ் சொல் 'ஆறு கடலைச் சேர்கின்ற ஆற்றுமுகம்' என்று பொருள்படும் காவிரியாறு கடலுடன் கலக்கின்ற ஆற்றுமுகத்தின்கண் சிறப்புடன் அமைந்திருந்த நகரமாதலால் அதற்கு, 'புகார்' என்னும் பெயர் அமைந்தது. இனி, 'புகார்' என்பதற்கு, 'புகமாட்டார்கள்' என்று பொருள் கூறி, 'அந்நகரில் வாழ்ந்த மக்கள் ஒரு பொருளைக் கருதி வேறு இடத்திற்கு புகமாட்டார்கள், எல்லாவகைப் பொருள்களும் அந்நகரில் நிறைந்திருந்தன. அது பற்றியே அந்நகருக்கு அப்பெயர் வந்தது' என்று சிலர் கூறுவர். வீங்கு நீர்: மிக்க நீரையுடைய கடல். கடல் நீர் மிக்க இடமாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. அவன் குலத்தோடு ஓங்கி. சோழர் குலம் தொன்றுதொட்டே வளர்ந்து வருகின்ற குலம், சோழர் குலம் மிகவும் தொன்மை வாய்ந்தது அதுபோலவே புகார் நகரமும் தொன்மை வாய்ந்தது. சோழர் குலம் தோன்றியபொழுதே புகாரும் தோன்றியது. சோழர் குலத்தோடு பொருந்தி உயர்ந்து நடந்து வந்தது புகார்

நகரம். சோழர் குலத்தினைப் புகழ்வார் புகாரையும் புகழ்வர் என்பது ஆசிரியரின் கருத்தாகும்.

இதுவரையில் ஆசிரியர் சந்திரன், சூரியன், மேகம், ஆகிய இயற்கைப் பொருள்களையும், பூம்புகாரையும் வாழ்த்தினர். அவ்வாறு வாழ்த்துங்கால் அவர் சோழ மன்னனையும், அவனுடைய குடையையும், ஆணையையும், அருளையும், குலத்தின் தொன்மையையும் சிறப்பித்தார்.

இலக்கணக் குறிப்பு: பூ+புகார்=பூம்புகார்: மெலித்தல் விகாரம் நீர்: ஆகு பெயர். உலகிற்கு: ஈண்டு நான்காம் வேற்றுமை யுருபு அமைந்துள்ளது. ஆயின் இதற்கு, 'உலகின்கண்' என்று ஏழாம் வேற்றுமைப் பொருள் கொள்ளப்பட்டது. எனவே இது வேற்றுமை மயக்கம் அல்லது உருபு மயக்கம் ஆகும்.

புகார் நகரின் நிலைபேறுடைமை (13—19)

பதவுரை

ஆங்கு - ஆதலால்
பொதியில் ஆயினும் - பொதியின் மலையும்
இமயம் ஆயினும் - இமயமலையும்
பதி எழு அறியா - நகரினின்றும் பெயர்தலை அறியாத
பழங்குடி கெழீஇய - பழைய குடிகள் பொருந்திய
பொது அறுசிறப்பின் - பொதுமை நீங்கிய சிறப்பினை உடைய
புகாரே ஆயினும் - புகாரும்
நடுக்கு இன்றி - (ஆதியில் தோன்றி) சலித்தல் இன்றி
நிலை இய - நிலைபெற்றன
என்பது அல்லதை - என்று கூறுவார்களேயன்றி
உயர்ந்தோர் - (அவற்றின்கண் உயர்ந்தவர்கள்
உண்மையின் - இருக்கின்ற காரணத்தால்
முடித்தகேள்வி - முற்றிய கேள்வியறிவால்
முழுது உணர்ந்தோர் - எல்லாம் உணர்ந்த பெரியோர்
ஒடுக்கம் கூறார் - அவற்றிற்கு முடிபு உண்டு என்று கூறமாட்டார்கள்.

கருத்துரை: புகார் நகரம் என்றும் நிலைபெறுவது. அது பொதியின்மலையின் மலையைப்போலவும், இமயமலையைப் போலவும் சலிப்பின்றித் தாங்குவது. அதன்கண் உயர்ந்தோர் தங்கியுள்ளனர். எனவே உயர்ந்தோர புகாருக்கு முடிவு கூறமாட்டார்கள்.

விளக்கவுரை

பொதியில்: பொதியின் மலை; குற்றால நீர்வீழ்ச்சி இழியும் மலை; அகத்தியர் தங்கித் தமிழ் வளர்த்த மலை பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇ இய: பதியினின்றும் பெயர்தலையறியாத பழைய குடிகள் தங்கிய புகார் நகரம் செல்வம் நிறைந்த நகரமாகும். அதனை ஆண்ட

அரசர்கள் வலிமையும், செங்கோலும் உடையவர்கள். எனவே அந் நகரத்துக் குடிகள் அவ்விடத்தை விடுத்துப் பெயர்ந்து வேறிடம் செல்ல வேண்டுவதில்லை. பெயர்ந்து செல்லுதல் என்பதையே அந்நகர மக்கள் அறியமாட்டார்கள். இக்கருத்துப்பற்றியே இவ்வாறு கூறப்பட்டது. **பொது அறு சிறப்பு :** பொதுமை நீங்கிய சிறப்பு. தனிச்சிறப்பினை யுடையது புகார் என்பது கருத்தாகும். **உயர்ந்தோர் :** முனிவர், அரசன் முதலியோர். பொதியின் மலையின்கண் அகத்தியரும், இமய மலையின்கண் முனிவர்களும், புகாரின்கண் பழங்குடி வணிகரும் உயர்ந்தோர் ஆவர். "இமயத்தோடும் பொதியிலோடும் உள்ள இருடி களையும் புகாரில் உள்ள வணிகரையும் உவமித்தவாறும்" என்று அடியார்க்கு நல்லார் இதற்கு விளக்கம் கூறியுள்ளார். **முடித்த கேள்வி முழுது உணர்ந்தோர் :** முற்றிய கேள்வியறிவால் அனைத்தும் உணர்ந்த பெரியோர் "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்று வள்ளுவர் கூறியவாறு கேள்வியறிவே சிறந்ததாகும். கேள்வியறிவி னால் அறியவேண்டுவன எல்லாவற்றையும் அறியலாம். புலசதுறை முற்றிய கேள்வியறிவினை உடைய பெரியார் ஈண்டுக் குறிப்பிடப் பட்டனர். பொதியின் மலை, இமய மலை, புகார் ஆகிய மூன்றும் சலிப்பின்றி நிலைபெற்றனவாதலாலும், அவற்றின்கண் உயர்ந்தோர் உறைகின்ற காரணத்தாலும், அவற்றுக்குப் பெரியோர் முடிவு கூற மாட்டார்கள் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு : ஆயினும் ஓர் எண்ணிடைச் சொல். **அறியா :** ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். **பழங்குடி :** பண்புத்தொகை.

புகாரின் சிறப்பு (20—22)

பதவுரை

அதனால் - அங்ஙனம் நிலைபேறு டையதாதலால்,	**நீள்புகழ்** - நீண்ட புகழும்,
நீள் - நீண்ட (பெரிய)	**போகம்** - இன்பமும்
நாக நகரொடு - சுவர்க்கத்துட னும்,	**மன்னும்** - நிலைபெற்ற
நாகநாடு அதனொடு - நாகர் உல கத்துடனும் ஒக்க	**புகார்நகர் அது தன்னில்** - புகார் என்னும் அந்நகரின்கண்,

கருத்துரை : புகழும், இன்பமும் நிலைபெற்ற நகரம் புகார் ஆகும். அந்நகரம் சுவர்க்கம்போன்ற இன்பமும், நாகர் உலகு போன்ற புகழும் உடையது.

விளக்கவுரை

நாகநீள் நகரொடு : நெடிய சுவர்க்கத்தோடு. நாகர் நகராவது சுவர்க்கம் ஆகும். அங்கு வாழும் தேவர்கள் எப்பொழுதும் துன்பமே

சொல்லுதல் யார்க்கும் எளிய.

யின்றி, இன்பமாக வாழ்வர். நாகநாடு: நாகர் உலகம். அது நீண்ட புகழை உடையது. புகார் நகரில் சுவர்க்கம் போன்ற இன்பமும், நாக உலகுபோன்ற புகழும் நிறைந்திருக்கும்.

இலக்கணக் குறிப்பு: நீள் நகர் : வினைத்தொகை. நீள் புகழ் : வினைத்தொகை. ஈண்டு 'நாகநீள் நகர்போன்ற போகமும், நாகநாடு போன்ற புகழும் மன்னும் புகார்' என்று இயைத்துப் பொருள் கூறப்படுகின்றது. எனவே இதன்கண் எதிர்நிரல் நிறை அணி அமைந்துள்ளது.

மாநாய்கன் மகளாகிய கண்ணகி (23, 24)

பதவுரை

மாக - விசும்பினிடத்து
வான் - மேகத்தை
நிகர் - போன்ற
வண்கை - கொடைப் பண்பு பொருந்திய கையினையுடைய
மாநாய்கன் - மாநாய்கன் என்னும் வணிகனது
குலம் - குலத்தில் தோன்றிய
கொம்பர் - பூங்கொம்பும்,
வான் - மேலான
ஈகைக்கொடி - பொற்கொடியும்,
அன்னாள் - போல்வாள் (கண்ணகி)
ஈராறு ஆண்டு - பன்னிரண்டு ஆண்டிற்கு
அகவையாள் - உட்பட்ட பிராயத்தினள் ஆயினாள்.

கருத்துரை: கொடைப் பண்பு மிக்க மாநாய்கன் என்னும் வணிகனுக்கு மகள் ஒருத்தி (கண்ணகி) இருந்தாள். அவள் பூங்கொம்பையும், பொற்கொடியையும் போல்பவள். அவள் பன்னிரண்டு ஆண்டிற்கு உட்பட்ட பிராயத்தினள் ஆயினாள்.

விளக்கவுரை

மாகவான் நிகர் வண்கை: விசும்பிடத்தே திரியும் மேகம் போன்ற கொடைப் பண்பு பொருந்தியகை. மாநாய்கன்: கொடைப் பண்பு நிறைந்தவன். மேகம்போன்ற கொடைப் பண்பு அவனிடம் இருந்தது. கைம்மாறு கருதாமல் மழை பொழியும் கடப்பாட்டினையுடையது மேகம்: அதுபோலவே மாநாய்கனும் கைம்மாறு கருதாமல் பிறர்க்கு ஈபவன். மாநாய்கன் என்னும் பெயர் சிறப்புப் பெயர் போல் தோன்றுகிறது. கொம்பர் ஈகைவான் கொடி அன்னாள்: கண்ணகி. அவள் பூங்கொம்பும், பொற்கொடியும்போல் விளங்கினாள். 'கொம்பர்' என்பது பூங்கொம்பையும், 'ஈகைவான் கொடி' என்பது மேலான பொற்கொடியையும் குறிக்கும். ஈகை-பொன். இனி, 'வான்கொடி' என்பதற்கு 'வானவல்லி' என்றும் பொருள் கொள்ளலாம். ஈராறு ஆண்டு அகவையாள்: பன்னிரண்டு ஆண்டிற்கு உட்பட்ட பிராயத்தினள் ஆயினாள் கண்ணகி. அஃதாவது அவள் பதினொரு ஆண்டும்,

பத்துத் திங்களும் நிரம்பப் பெற்றவள் என்பது கருத்து. அகப்பொருள் இலக்கணம் தலைவிக்கு உரிய பிராயமாக இதனையே குறிப்பிடுகின்றது. அகவை : உட்பட்டது.

இலக்கணக் குறிப்பு: நிகர் : உவம உருபு. ஏகாம்பர் : 'கொம்பு' என்பது 'கொம்பர்' எனவந்தது கடைப் போலி ஆகும். இரண்டு + ஆறு = ஈராறு.

கண்ணகியின் வடிவும், கற்பும், காதலும் (25-29)

பதவுரை

அவளும்தான் - அப்பெண்தான்
போதில் - தாமரைப் பூவில்
ஆர் - பொருந்திய
திருவினுள் - திருமகளின் (வடிவு)
புகழ் உடை வடிவு என்றும் - புகழ் உடைய இவள் வடிவை ஒக்கும் என்றும்
தீது இலா - குற்றம் இல்லாத
வடமீனின் திறம் - அருந்ததியின் கற்பு
இவள் திறம் என்றும் - இப் பெண்ணின் கற்பை ஒக்கும் என்றும்
மாதரார் - உலகத்து மகளிர்
தொழுது ஏத்த - தன்னைத் தொழுது துதிக்கும்படி
வயங்கிய - விளங்கிய
பெருங் குணத்து - பெருங் குணங்களை
காதலாள் - காதலிப்பாள் (அந்தகையவள்)
கண்ணகி என்பாள் - கண்ணகி என்று
பெயர் மன்னும் - பெயர் கூறப் படுவாள்.

கருத்துரை : கண்ணகியின் வடிவு போன்ற வடிவு திருமகளுக்கு உண்டு என்றும், அவளது கற்பினைப் போன்றது அருந்ததியின் கற்பு என்றும் உலகத்து மாதரார் கூறித் தன்னைத் தொழுது துதிக்குமாறு விளங்கினள் கண்ணகி. அவள் பெருங் குணங்களையும் கொண்டிருந்தாள்.

விளக்கவுரை

போதிலார் திருவினுள் புகழுடை வடிவு என்றும்: 'போது' என்பது தாமரைப்பூ ஆகும். தாமரைப்பூவில் பொருந்தியவள் திருமகள். அவள் கண்ணகிபோன்ற வடிவினை உடையவள் என்கின்றார் ஆசிரியர். அழகுடை மகளிர்க்கு எடுத்துக்காட்டாகத் திருமகள் கூறப்படுவாள். அத்திருமகளின் வடிவு கண்ணகியின் வடிவைப் போன்றதே என்று கூறியமை, கண்ணகியின் வடிவழகை நன்கு எடுத்துக்காட்டக் கருதியேயாகும். 'திருவினுள்' என்பதற்குப் பின் 'இவள் வடிவு' என்று வருவித்துரைக்க வேண்டும். தீது இலா வடமீன் : குற்றம் இல்லாத அருந்ததி. கற்பில் சிறந்தவள் அருந்ததி என்றும், அவள் நட்சத்திரத்தின் உருவினைக்கொண்டு வானத்தே வடபுறத்தில் உள்ளாள் என்றும் புராணம் கூறும். 'தீது' என்பது

பிறர் நெஞ்சு புகுதல் ஆகும். பிற ஆடவற் மனத்திற் புகுவது பெண்டிற்குக் குற்றம் எனப்படும். அஃதாவது பிற ஆடவர் விரும்பி நோக்குதற்கேற்ற உருவும் நலனும் கொண்டு விளங்குவது கற்புடை மகளிர்க்கு ஆகாது என்பது கருத்து. இக்கருத்து.

"மண் திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிர் ஆயின் பிறர்நெஞ் புகாஅர்"

என்னும் மணிமேகலை அடிகளிலும் காணப்படுகின்றது. வடமீனின் திறம் இவள் திறம்: அருந்ததியின் கற்பு இவள் கற்பினை ஒக்கும். கற்பிற் சிறந்த அருந்ததி, கற்புடை மகளிர்க்கு மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுவாள். அத்தகைய அருந்ததியின் கற்பிற்கு கண்ணகியின் கற்பு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. 'திறம்' என்பது ஈண்டு, 'கற்பு' என்று பொருள்படும். பெருங்குணத்துக் காதலாள்: பெருங்குணங்களைக் காதலிப்பாள். அஃதாவது பெருங் குணங்களை விரும்பிக் கைக்கொள்வாள் என்பது கருத்து. இனி, 'பெருங்குணத்தாற் காதலிக்கப்படுவாள்' என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

இலக்கணக் குறிப்பு: அவளும்: உம்மை இசை நிறைபொது ஆகுபெயர். திருவினாள்: ஒருசொல், இலா: ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். பெருக்குணம்: பண்புத் தொகை. மன்னும், மன், ஓ: இடைச்சொற்கள்; அவை ஈண்டு அசைநிலைகளாக நின்றன.

மாசாத்துவானுக்கு மகன் கோவலன் (30-34)

பதவுரை

ஆங்கு - அப்புகார் நகரின்கண்,
நெடு நிலம் - நீண்ட நிலம்
முழுது - முழுவதையும்
ஆளும் - தனியே ஆளுகின்ற
பெருமகன் - சோழ மன்னனை
தலைவைத்த - முதற் குடியாக வைத்து எண்ணுதலையுடைய
ஒரு - ஒப்பற்ற
தனிக் குடிகளோடு - குடிகளாகிய தன் உறவினருடன் கூடி,
உயர்ந்து ஓங்கு - மிக ஓங்கிய
செல்வத்தான் - செல்வத்தை உடையவன்
வரு நிதி - அறவழியால் வந்த பொருளால்
பிறர்க்கு - வறுமையுற்ற பிறரை
ஆர்த்தும் - உண்பிக்கும்படியான
மாசாத்துவான் என்பான் - மாசாத்துவான் என்று பெயர் கூறப்படுவான் (அத்தகைய),
இருநிதிக் கிழவன் - பெருஞ் செல்வத்திற்கு உரிமை பூண்ட மாசாத்துவானுடைய
மகன் - மகனானவன்
ஈரெட்டு ஆண்டு - பதினாறு ஆண்டுக்கு
அகவையான் - உட்பட்ட பிராயத்தான் ஆயினன்.

கருத்துரை: புகார் நகரில் மாசாத்துவான் என்னும் வணிகர் தலைவன் இருந்தான். அவன் வறுமையுற்ற மக்களை வாழ்விப்பவன்; பெருஞ் செல்வன். அவனது மகன் பதினாறுண்டுக்கு உட்பட்ட பிராயத்தான் ஆயினான். அம்மகன் கோவலன் ஆவான்.

நெடுநிலம் முழுதாளும் பெருமகன்: நீண்ட நிலம் முழுவதையும் ஆளும் சோழ மன்னன் இக்கதை நிகழ்ந்த காலத்திற்குச் சில்லாண்டுகட்குமுன்பு புகாரை ஆண்ட சோழ மன்னனாகிய கரிகாலன், வடநாட்டில் இமயம்வரை சென்று, எதிர்த்த மன்னரை வென்று, இமயத்தின் நெற்றியில் தனது புலிக்கொடியைப் பொறித்துத் திரும்பினான். இதனை நினைவிற்கொண்டே, 'பெருநிலம் முழுதாளும் பெருமகன்' என்று அக்காலத்துச் சோழ மன்னன் குறிப்பிடப்பட்டான். 'பெருமகன்' எனப்பட்டவன் கரிகாலனே என்பார் அடியார்க்கு நல்லார். ஈண்டுக் குறிப்பிடப்பட்டவன் கரிகாலன் அல்லன் என்று ஆராச்சியாளர் கூறுவர். **ஒரு தனிக்குடிகள்:** பெரிதும் ஒப்பற்றவர் என்று கூறக் கருதியே ஆசிரியர் இவ்வாறு குறிப்பிட்டார். **வருநிதி:** மாசாத்துவான் வணிகர் தலைவனுவான். அவன் அறநெறியால் பெரும் பொருள் ஈட்டினான். இனி, 'வருநிதி' என்பதற்கு, 'கலத்தினும் காலினும் வருநிதி' என்றும் கூறலாம். **இருநிதிக் கிழவன்:** மாசாத்துவான். 'இருநிதி' என்பது 'பெருஞ் செல்வம்' என்று பொருள்படும். இனி, 'இருநிதி' என்பதற்கு, 'சங்கநிதி, பதுமநிதி என்னும் இருவகை நிதிகள்,' என்றும் பொருள் கொள்ளலாம். சங்கநிதியும், பதுமநிதியும் தேவர் உலகில் உள்ளன என்றும், அவை யார் எதனை விரும்பினாலும் அதனைத் தரும் பண்புள்ளவை என்றும் புராணம் கூறும். 'கிழவன்' என்னும் சொல் 'உரியவன்' என்று பொருள்படும். **ஈரெட்டாண்டு அகவையான்:** பதினாறு ஆண்டுக்கு உட்பட்ட பிராயத்தான் ஆயினான் கோவலன். தலைவன் பதினைந்தாண்டும், பத்துத் திங்களும் நிறையப் பெற்றவன் என்று அகப் பொருளிலக்கணம் கூறுகின்றது. தலைவி பதினொரு ஆண்டும், பத்துத் திங்களும், தலைவன் பதினைந்து ஆண்டும், பத்துத் திங்களும் நிறைந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்றும், அவர்களுடைய களவொழுக்கம் இரண்டு திங்கள் நடைபெறும் என்றும், பின்பு அவ்விருவரும் மணஞ் செய்துகொள்வர் என்றும் அகப்பொருள் இலக்கண நூல்கள் கூறுகின்றன.

இலக்கணக் குறிப்பு: உயர்ந்தோங்கு: ஒரு பொருட்பன்மொழி. வருநிதி: வினைத் தொகை. இருநிதி: 'பெருஞ் செல்வம்' என்று பொருள் கொண்டால் பண்புத் தொகை ஆகும்.

கோவலனின் புகழும், அழகும் (35-39)

பதவுரை

அவனும் தான் - அந்த மகன் தான், | **மண்தேய்த்த** - மண்ணுலகம் சிறிதாகும்படி வளர்ந்த

அடுத்தது காட்டும் பளிங்கு.

புகழினன் - புகழை உடையான்
பண்தேய்த்த - இசைப்பண்ணை வென்ற
மொழியினர் - சொல்லினை உடையராகிய
மதிமுகம் - சந்திரன்போலும் முகத்தினையுடைய
மடவார்தம் - பெண்டிரது
ஆயத்து - கூட்டத்தின்கண்,
கண்டு - (உலகிலே) கண்டு
ஏத்தும் - துதிக்கப்படுகின்ற
செவ்வேள் என்று - முருகன் என்று
பாராட்டி - பாராட்டிக் கூறி
இசைபோக்கி - அவனது புகழைப் பரப்பி,
காதலால்கொண்டு - காமக் குறிப்பினை உட்கொண்டு
ஏத்தும் - துதித்தற்கு
கிழமையான் - உரிமை உடையவனாக இருந்தான் (அவன்)
கோவலன் என்பான் - கோவலன் என்று பெயர் கூறப்படுவான்.

கருத்துரை: கோவலன் பெரும்புகழை உடையவன். அவனைக் கண்ட மகளிர், அவன் முருகன்போன்ற அழகும் வீரமும் உடையவன் என்று பாராட்டி, அவனது புகழைப் பரப்பித் துதித்தனர்.

விளக்கவுரை: 'மொழியினராகிய மடவார்தம் ஆயத்துச் செவ்வேள் என்று பாராட்டி' என மாற்றி இயைக்க. மண் தேய்த்த புகழினன்: மண்ணுலகு சிறிதாகும்படி வளர்ந்த புகழையுடையவன். மண்ணுலகை மூடிய புகழை உடையவன். கோவலன் பெரும் புகழ் உடையவன். அவனது புகழின் பெருமையை நோக்க, உலகம் சிறியதாகக் காணப்பட்டது. மதிமுக மடவார்: சந்திரன்போலும் முகமுடைய மகளிர் ஒளிபற்றிச் சந்திரன் பெண்டிரின் முகத்துக்கு உவமையாகக் காட்டப்படும். பண்தேய்த்த மொழியினர்: இசைப் பண்ணை வென்ற சொல்லினையுடைய மகளிர். இசைப்பண் இனிமையானது. இசைப்பண்ணினும் இனிய குரலை உடையவர்கள் என்பது கருத்து. செவ்வேள் என்று: முருகனே என்று. முருகன் சிவந்த நிறமும், அழகிய தோற்றமும், வீரமும் வாய்ந்தவன். கோவலனும் முருகன் போன்றவன் ஆவான். மகளிர் அவனை முருகனே என்று கூறிப் பாராட்டினர். கிழமையான்: உரிமையை உடையவன். கொடை, வீரம், அழகு முதலியவற்றைத் தனக்கு உரிமையாக உடையவன். இளங்கோவடிகள் முதற்கண் கண்ணகியைக் கூறிப் பிறகு கோவலனைக் கூறுகின்றார். பத்தினிக் கடவுளைத் துதிப்பது இளங்கோவடிகளுடைய நோக்கங்களுள் ஒன்றாகும். மேலும், சிலப்பதிகாரக் கதையின்கண் கதைத் தலைவி கண்ணகியே ஆவாள். அவளே இக்கதையின்கண் இன்றியமையாதவள். இத்தகைய காரணங்கள்பற்றியே கண்ணகி முதற்கண் குறிப்பிடப்பட்டாள். இவ்வடிகளுக்கு அடியார்க்கு நல்லார், "இனி மடவார் என்பதற்குப் பூமாதும், கலைமாதும், சயமாதும், புகழ்மாதும், புவிமாதும் என்று கூறி, இவர், அழகிற்கும், அறிவிற்கும், ஆண்மைக்கும், புகழுக்கும், பொறைக்கும் இவன் என்று

உட்கொண்டு ஏத்தும் கிழமையான் என்னும் அமையும்" என்று விளக்கம் கூறியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு: அவனும்: உம்மை, இசை நிறை. தான்: கட்டுரைச் சுவைபட நின்றது. மதிமுகம்: உவமைத் தொகை. மன், ஆ: அசை நிலை இடைச் சொற்கள்.

பெற்றோர் கண்ணகியையும் கோவலனையும் மணம் புணர்த்த விரும்புதல் (40—42)

பதவுரை

அவரை - அத்தன்மையாராகிய கோவலனையும் கண்ணகியையும்
இருபெருங் குரவரும் - பெருமை வாய்ந்த இருவருடைய பெற்றோர்களும்
ஒரு பெருநாளால் - ஒரு பெரு நாளிலே
மண அணி காண - மணக் கோலம் காண
மகிழ்ந்தனர் - விரும்பினர்
மகிழ்ந்துழி - விரும்பிய அளவிலே,

கருத்துரை: இவருடைய பெற்றோர்களும் அவ்விருவருக்கும் மணம் முடித்துவைக்க விரும்பினர்.

விளக்கவுரை

குரவர்: தந்தையும், தாயும். அரசன், ஆசிரியர், அண்ணன், தந்தை தாய் ஆகிய ஐவரும் ஐம்பெருங்குரவர்கள் ஆவர். ஈண்டு இருவருடைய பெற்றோர்கள் சுட்டப்பட்டனர்.

இலக்கணக் குறிப்பு: நாளால்: ஈண்டு மூன்றும் வேற்றுமையுருவாகிய 'ஆல்' என்பது அமைந்துள்ளது. 'நாளால்' என்பதற்கு, 'நாளில்' என்று பொருள் கொள்ள வேண்டும். மூன்றும் வேற்றுமையுருபு, ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. எனவே இது வேற்றுமை மயக்கம் அல்லது உருபு மயக்கம் எனப்படும்.

பெற்றோர் திருமணச் செய்தியை நகர மக்களுக்குக் கூறல் (43-44)

பதவுரை

(இருவருடைய பெற்றோர்களும்)
யானை எருத்தத்துமேல் - யானையினது புறக்கழுத்தின் மீது
அணியிழையார் - மங்கல மகளிரை
இரீஇ - இருத்தி,
மாநகர்க்கு - பெரிய அந்த நகர மக்களுக்கு,
ஈந்தார் மணம் - இவர்களுடைய மணம் என்னும் மகிழ்ச்சியை அறிவித்தனர்.

கருத்துரை: கோவலன், கண்ணகி ஆகியோருடைய திருமண நிகழ்ச்சி புகார் நகரம் முழுவதிலும் அறிவிக்கப்பட்டது.

விளக்கவுரை

யானை எருத்தத்து அணியிழையார்மேல் இரீஇ: யானையினது புறக்கழுத்தின் மீது மங்கல மகளிரை இருத்தி, மங்கல மகளிரை யானையின் மீது ஏற்றி, மணநிகழ்ச்சியை நகர மக்களுக்கு அறிவிப்பது அக்கால வழக்கம் ஆகும். எருத்தம்-புறக்கழுத்து, அணியிழையார்-அழகிய அணிகலன்களை அணிந்த மகளிர். ஈந்தார்: அறிவித்தார்.

இலக்கணக் குறிப்பு: இரீஇ: சொல்லிசையளபெடை. நகர்: இடவாகுபெயர்.

நல்லொழுக்கப் பயிற்சி

தமிழ் மொழியின்கண் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். அதன்கண் இலக்கியச் சுவை சொட்டுகின்றது. அந்நூல் அறிவிக்கும் அறவுரைகள் பல. அவற்றை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று கருத இடம் உள்ளது! அடிகளாரின் தமையனாகிய செங்குட்டுவனே சைவ சமயத்தைச் சார்ந்தவன். சிலப்பதிகாரத்தைப்பாடுமாறு தூண்டிய மதுரைக் கூல வாணிகன் சாத்தனாரோ பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இம்மூவரும் வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றியவர்களாயினும், தமிழால் ஒன்றுபட்டு வாழ்ந்தனர்; தம் வேற்றுமைகளை மறந்து, தமிழ்த் தொண்டு செய்தனர்; சமயத் துறையில் பொறுமை (Religious tolerence) என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கினர். மொழியின் வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் அக்காலத்தில் சமயம் முட்டுக்கட்டையாக நிற்கவில்லை. இவ்வுண்மையை நீங்கள் மனத்திற் கொள்ளுங்கள்; சாதி சமய வேறுபாடுகளை அகற்றித் தமிழ்த் தொண்டு செய்ய ஒற்றுமையுடன் முற்படுங்கள்; அப்பொழுது தமிழ் வாழும்; தமிழ் நாடு வாழும்; தமிழ் மக்கள் வாழ்வர்.

---

2. கம்பராமாயணம்

பெயர்க் காரணம்: கம்பர்+ராமாயாணம்=கம்பராமாயணம்' இச்சொற்றொடர், 'கம்பரால் இயற்றப்பெற்ற இராமாயணம்' என்றும் 'கம்பரது இராமாயணம்' என்றும் விரியும். முதல்வகையாக விரித்தால் அது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். இரண்டாம் வகையாக விரித்தால் அஃது ஆறும் வேற்றுமைத் தொகை ஆகும். ராம+அயனம்=ராமாயணம் : இது வடமொழித் தீர்க்க சந்தி ஆகும். இச்சொற்றொடர்க்கு 'இராமனை அறிவிப்பது' என்பது பொருள். வடமொழியின்கண் 'ராம' என்னுஞ் சொல் 'மகிழ்விப்பவன்' என்று பொருள்படும்.

நூலுக்குரிய வேறு பெயர்: இராமாவதாரம்.

முதல் நூல்: கம்பராமாயணத்திற்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம் என்பர். ஆயின் இந்நூல் முதல் நூலிலிருந்து பலவிடங்களில் வேறுபட்டுள்ளது. வால்மீகி ராமாயணம் வடமொழியின்கண் உள்ளது. கம்பருக்கு வடமொழி யறிவு இருந்ததாகத் தெரிந்திலது. கம்பர் சென்னையைத் தாண்டிச் சென்றவரல்லர். எனவே கம்பராமாயணம் வால்மீகி ராமாயணத்தைத் தழுவி எழுந்த நூல் என்று சொல்லுதல் கூடாது. கம்பர் தமிழ் நாட்டில் பிறந்தார்; தமிழ் நூல்களைக் கற்றார்; தமிழில் காப்பியம் ஒன்று பாட நினைத்தார். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக மக்களிடையே வழங்கப்பட்டு வந்த இராமாயணக் கதை அவரது கருத்தைக் கவர்ந்தது வைணவ சமயத்திற்கு ஏற்றம் கொடுக்க வேண்டும் என்பதும் அவரது விருப்பமாகும். ஆகவே இராமாயணத்தைப் பாடினார். எனவே கம்பராமாயணத்திற்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம் என்று கூறுங் கருத்து இன்னும் ஆராய்தற்குரியது.

நூலின் பிரிவு: கம்பராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று ஆறு காண்டங்கள் உள்ளன. கம்பர் பாடிய பாடல்களின் தொகை 10,500 ஆகும்.

நூலின் இயல்பு: கம்பர் தமிழ்மொழியின்கண் உள்ள இலக்கிய இலக்கண நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர்; தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும், ஒழுகலாறுகளையும் நன்கு உணர்ந்தவர். அக்கால அரசர்களுடன் பழகி, அரசியல் நுட்பங்களை அறிந்தவர். தமிழ் மொழியின்கண் உள்ள சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெரிய புராணம் முதலிய நூல்கள் அவருக்குக் காப்பியம் பாடுதற்கேற்ற மனநிலையை உண்டாக்கி வழிகாட்டின. எனவே கம்பர், வடமொழிக் கதையைத் தமிழ் நாட்டுக் கதைபோலவே அமைத்துள்ளார். அவர் இராமனைத் தமிழ் நாட்டு வீரனாகவும், சீதையைத் தமிழ் நாட்டுக் கற்

புடைப் பெண்ணாகவும், தசரதனை தமிழ் நாட்டுச் செங்கோல் அரசனாக வும் உருவாக்கியுள்ளார். தம் காலத்திற்கு முன்பிருந்த புலவர்கள் எடுத்தாண்ட உவமைகள், உருவகங்கள், வருணனைகள் முதலியவற்றைக் கம்பர், தம் கற்பனைத் திறம் கொண்டு அழகுபட மாற்றியுள்ளார்; புதிய முறையில் கற்பனைச் சொல்லோவியங்களை அமைத்துள்ளார்; தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் இனிக்குமாறு பாடல்களைப் பாடியுள்ளார். கம்பராமாயணச் செய்யுட்களில் இலக்கியச் சுவை நன்கு அமைந்துள்ளது.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: கம்பர்.

ஊர்: சோழ நாட்டில், தஞ்சை மாவட்டத்தின்கண் உள்ள தேரழுந்தூர்.

மரபு: கம்பர் உவச்சர் மரபினர் என்பர் சிலர். அவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர் என்று கூறுதற்குச் சான்றுகள் பல உள்ளன.

ஆதரவு தந்தவர்: திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த சடையப்ப வள்ளல்.

சமயம்: வைணவம் எனலாம். ஆனால், கம்பர் பிற மதங்களைத் தாழ்வுபடுத்தினாரல்லர்.

காலம்: கம்பர் 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று ஒரு சாராரும், 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று மற்றொரு சாராரும் கூறுவர். பின்னதே வலியுடைத்து.

பெயர்க் காரணம்: கம்பரது இயற்பெயர் 'ஏகம்பர்' என்றும் அப்பெயர் 'கம்பர்' என மருவியது என்றும் சிலர் கூறுவர் "கம்பர் 'கம்பநாடுடைய வள்ளல்' என்று குறிப்பிடப்படுகின்றார். எனவே நாட்டின் பெயர் அவருக்கு அமைந்தது" என்பர் வேறு சிலர். கல்வெட்டுக்களின்கண், 'கம்ப நாடர்' என்னும் பெயரே காணப்படுகின்றது. இப்பெயர் அமைந்ததற்குக் கர்ணபரம்பரைக் கதைகளும் உள்ளன. எனவே கம்பரின் பெயர்க் காரணத்தை ஆராய்ச்சியாளர் முடிவாகக் கூறினாரல்லர்.

கம்பரைப்பற்றிய சிறப்புரைகள்: 'கல்வியிற் பெரியவன் கம்பன்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி சொல்லும்", "கம்பநாடன் கவிதையைப்போற் கற்றோர்க்கிதயம் களியாதே", "கம்பனைப் போல்........பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு", "விருத்தமென்னும் ஒண்பாவுக்கு உயர்க் கம்பன்" என்பன கம்பரைச் சிறப்பிக்க எழுந்தன.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்.

நூல் இயற்றக் காரணம் : கம்பர் "ஆசைபற்றி அறையலுற்றேன்" என்கின்றார். தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடித் தரவேண்டும் என்னும் எண்ணத்துடனும், இராமனது கதையைத் தமிழ் நாட்டிற் பரப்ப வேண்டும் என்னும் நினைவுடனும், வைணவ சமயத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் கம்பர் இந்நூலைப் பாடினார் என்று கொள்ளலாம். சடையப்ப வள்ளலின் தூண்டுதலும், குலோத்துங்க சோழனது வேண்டுகோளும் இந்நூல் தோன்றக் காரணமாயின என்பர் சிலர்.

நூல் அரங்கேற்றம் : கம்பர் தம் நூலைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினார் என்று சொல்லப்படுகின்றது.

கம்பர் இயற்றிய வேறு நூல்கள் : சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலையெழுபது, ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்பன.

கம்பரின் நன்றியறிதற் பண்பு : கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் என்பவராவார். அவரைக் கம்பர் தம் இராமாயணத்தில் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

பால காண்டம்

'பாலகாண்டம்' என்னுஞ் சொற்றொடர் பாலனது தொடர்பு கொண்ட காண்டம்' என்று விரியும். எனவே அஃது ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். பாலன் : பதினாறு ஆண்டுக்கு உட்பட்ட பருவம். இக்காண்டம் இராமனது பாலப்பருவ வரலாற்றைக் கூறும். இராமனுடைய பிறப்பு, அவன் தாடகையை வென்றமை, சீதையை மணந்தமை, பரசுராமனை அடக்கியமை முதலான செய்திகள் இக்காண்டம் கூறுகின்றது. இக்காண்டத்தின்கண் இருபத்திரண்டு படலங்கள் உள்ளன.

கையடைப் படலம்

"கையடை யடைக்கலம்" என்று திவாகரை நிகண்டு கூறுகின்றது. எனவே 'கையடை' என்பது 'அடைக்கலம்' என்று பொருள்படும். கையடை (= ஒருவனது) கையை அடைவது; ஒருவனது கையில் சேர்வது. தசரதன் தன் புதல்வர்கள் நால்வருள் இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திர முனிவரிடம் அடைக்கலமாக விடுத்த செய்தியை இப்படலம் கூறும்.

1. தசரதன் அரசவை மண்டபஞ் சேர்தல்

பதவுரை

நனை - அரும்புகள்	நாடு - நாடாகிய சுவர்க்கத்தில் உள்ள
வரு - நிறைந்த	
கற்பக - கற்பக மரத்தையுடைய	

நன்னகர் - நல்ல நகரமாகிய அமராவதியில் வாழ்கின்ற
அனைவரும் - (தேவர்கள்) யாவரும்
அணைதர - (இஃது இந்திர சபையோ என மயங்கி) வந்துசேரும்படி
அயிர்க்கும் - ஐயம் உறுகின்றதும்
சிந்தையான் - மனத்தைக் கொண்டு
நினையவும் - நினைத்துப் பார்ப்பதற்கும்
அரியது - அருமையானதும்,
விசும்பின் - தேவர் உலகத்தளவு
நீண்டது - உயர்ந்துள்ளதும் ஆகிய
மணிபுனை - மணிகளால் அழகு செய்யப்பட்ட
ஓர் - ஒரு
மண்டபம் - அரசவை மண்டபம்
பொலிய - விளக்கம் பெறுமாறு
எய்தினன் - (தசரதன்) அம்மண்டபத்தை) அடைந்தான்.

கருத்துரை : தசரதன் தனது அரசவை மண்டபத்தை அடைந்தான். அம்மண்டபம் தேவர் உலகில் உள்ள இந்திர சபைபோல் விளங்கியது.

விளக்கவுரை

நனைவரு கற்பகநாடு: அரும்புகள் அல்லது தேன் நிறைந்த கற்பக மரத்தையுடைய நாடு. அஃதாவது சுவர்க்கம். யார் எதனை விரும்பினாலும் தருகின்ற பண்புடையது கற்பக மரம் என்று புராணம் கூறும். **நன்னகர் :** நல்ல நகரம் ; அமராவதி. தேவர்களின் தலைவனாகிய இந்திரன் வாழும் இடம் இது என்று புராணம் கூறுகின்றது. **அனைவரும் அணைதர அயிர்க்கும் :** தேவர்கள் அனைவரும் வந்து சேருமாறு ஐயத்தை உண்டாக்குகின்ற (சபை) தேவர்களின் சபா மண்டபம் சுதன்மை எனப்படும். அம்மண்டபத்தைப்போன்ற அழகுடன் தசரதனது அரசவை மண்டபம் விளங்கியது. எனவே, தேவர்கள் தசரதனது அரசவை மண்டபத்தைச் சுதன்மையோ என ஐயுற்று வந்து சேர்வர். அவர்கள் அவ்வாறு ஐயுற்று வருமாறு செய்கின்ற அழகுகொண்டு விளங்கியது தசரதனது மண்டபம் என்பது கருத்து. **மண்டபம் பொலிய எய்தினன் :** தனது அரசவை மண்டபம் விளக்க முறுமாறு தசரதன் ஆங்கு வந்து சேர்ந்தான் அம்மண்டபத்திற்கு வந்தமையால் தசரதன் பொலிவு பெற்றான் என்று கூறுவதுதான் இயற்கையாகும். ஆனால் கம்பர், தசரதனுடைய சிறப்பை வெளிப்படுத்தக் கருதி இவ்வாறு கூறினார்.

இலக்கணக் குறிப்பு : வருகற்பகம் : வினைத்தொகை. நன்னகர் : பண்புத்தொகை. ஈண்டு, மண்டபத்தின் சிறப்பும், தசரதனது பெருமையும் மிக உயர்த்திக் கூறப்பட்டுள்ளன. எனவே இச் செய்யுளின்கண் உயர்வு நவிற்சியணி அமைந்துள்ளது. முன்னிரண்டடிகளில் ஐயவணி அமைந்துள்ளது.

2. தசரதன் அரியணையில் வீற்றிருத்தல்

பதவுரை

(தசரதன்) தூய - தூய்மையை உடைய
மெல் - மெல்லிய
அரி அணை - சிங்காதனத்தில்
பொலிந்து - விளக்கத்துடன்
தோன்றினன் - அமர்ந்தான்
(அதுபொழுது அவனை நோக்கி)
சேய் - உயர்ந்த
இரு - பெரிய
விசும்பிடை - வானவழியிலே
திரியும் - இயங்குகின்ற
சாரணர் - சாரணர்கள்,
நாயகன் - தங்களுக்குத் தலைவனாகிய இந்திரன்
இவன் கொல் என்று - இவனே போலும் என்று
அயிர்த்து - (முதலில்) ஐயம் உற்று நோக்கி (பின்பு)
நாட்டம் - கண்கள்
ஓர் ஆயிரம் - ஆயிரம்
இல்லை - (இவனுக்கு) இல்லை (எனவே இவன் இந்திரனல்லன்)
என்று - என்று துணிந்து
ஐயம்-(தங்களுக்கு எழுந்த) ஐயம்
நீங்கினர் - நீங்கப் பெற்றனர்.

கருத்துரை: வானவழியில் திரியும் சாரணர்கள் முதற்கண் தசரதனை இந்திரனோ என்று ஐயமுற்றனர்; அவனுக்கு ஆயிரங் கண்கள் இல்லாமை கண்டு, அவன் இந்திரனல்லன் என்று பின்பு முடிவு செய்தனர்.

விளக்கவுரை: விசும்பிடைத் திரியும் சாரணர்: வானவழியில் திரியும் சாரணர். சாரணர் என்போர் பதினெட்டு வகைத் தேவகணங்களுள் ஒரு சாரார் ஆவர். வானவழியில் திரியும் இயல்பு அவர்கட்கு உண்டு. நாயகன் இவன் கொல் என்றயிர்த்து: தமக்குத் தலைவனாகிய இந்திரன் இவனோ என்று தசரதனைக் கண்ட சாரணர் ஐயம் உற்றனர். இந்திரனைப் போன்ற வற்றமும் தோற்றமும் கொண்டு தசரதன் விளங்கிய காரணத்தாலும், அவனது அரசவை மண்டபம் இந்திரனது அரசவை மண்டபம்போல் விளங்கிய காரணத்தாலும் சாரணர்கட்கு அவன் தசரதனோ என்னும் ஐயம் எழுந்தது. நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினர். தசரதனைக் கண்ட சாரணர்கள் அவன் இந்திரனோ என்று முதற்கண் ஐயமுற்றனர். பின்பு அவனை நன்கு உற்று நோக்கினர். 'இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் அமைந்திருத்தல் வேண்டுமே! இவனுக்கு இரண்டு கண்கள்தாம் உள்ளன. எனவே இவன் இந்திரனல்லன்' என்று அவர்கள் முடிவு செய்து, தம் ஐயம் நீங்கப் பெற்றனர், தசரதனுக்கும், இந்திரனுக்கும் கண்களின் தொகையில் அன்றி, மற்றவற்றில் வேறுபாடு இல்லை என்பது ஆசிரியரின் கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு: விசும்பிடை: ஈண்டு 'இடை' என்பது ஏழாம் வேற்றுமையுருபு. கொல்: ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். இப்பாடலின் முதல் மூன்றடிகளில் ஐயவணி அமைந்துள்ளது.

பேராண்மை என்ப தறுகண்மை.

3. விசுவாமித்திரன் அரசவை மண்டபத்திற்கு வருதல்

பதவுரை

மடங்கல் போல் - சிங்கம் போன்ற
மொய்ம்பினான் முன்னர் - வலிமையை உடைய தசரதனுக்கு எதிரில்
மன் உயிர் - நிலைபெற்ற உயிர்கள்
அடங்கலும் - எல்லாவற்றையும்
உலகும் - உலகங்களையும்
வேறு அமைத்து - வேறு படைத்து,
தேவரோடு - தேவர்களுடன்
இடம் கொள் - சத்திய உலகம் என்னும் இடத்தில் உள்ள
நான்முகனையும் - பிரமதேவனையும்
ஈண்டு - இப்பொழுதே
படைப்பன் - யான் படைப்பேன்
என - என்று
தொடங்கிய - படைக்கத் தொடங்கிய
துனி உறு - சினம் மிக்க
முனிவன் - முனிவனாகிய விசுவாமித்திரன்
தோன்றினான் - வந்து தோன்றினான்.

கருத்துரை: உலகங்களையும், தேவர்களையும் தனது தவ வலிமையால் படைக்க முற்பட்ட விசுவாமித்திரன் தசரதனுக்கு எதிரில் வந்து தோன்றினான்.

விளக்கவுரை

படைப்பன் ஈண்டு எனத் தொடங்கிய துனியுறு முனிவன்: விசுவாமித்திரன். இவன் பிரமனது குலத்தில் தோன்றியவன்; அரச மரபைச் சேர்ந்தவன்; பெருந்தவம் செய்தவன்; தனது தவ வலிமையால் எதனையும் செய்யலாம் என்னும் நினைவுடையவன்; ஒரு முறை உயிர்களையும், உலகங்களையும், தேவர்களையும், பிரமனையும் யானே படைப்பேன் என்று கூறிப் படைக்கத் தொடங்கியவன்; பெருங் கோபம் உடையவன். விசுவாமித்திரனுடைய தவ வலிமையையும், பெருங் கோபத்தையும் எடுத்துக்காட்ட விரும்பியே ஆசிரியர் இவ்வாறு கூறினார். **நான்முகன்:** நான்கு முகங்களை உடையவன். ஒரு திசைக்கு ஒரு முகமாக நான்கு முகங்களை உடைய பிரமதேவன். உலகங்கள், உயிர்கள் முதலிய எல்லாவற்றையும் படைப்பது இவன் தொழில்.

இலக்கணக் குறிப்பு: மடங்கல்: தொழிலாகு பெயர். போல்: உவம உருபு. நான்முகனையும்: உம்மையை இறந்தது தழுவிய எச்சவும்மை என்றும், உயர்வு சிறப்பும்மை என்றும் கூறலாம்.

நிறைநீர நீரவர் கேண்மை.

4. தசரதன் எழுந்து முனிவனை வணங்குதல்

பதவுரை

முனி - விசுவாமித்திர முனிவன்
வந்து எய்தலும் - வந்து அடைந்த அளவில்
கந்தம் - நறுமணம் உள்ள
மலரில் - தாமரை மலரில் தங்குகின்ற
கடவுள் தன் - கடவுளாகிய பிரமதேவனது
வரவு காணும் - வருகையை நோக்கிய
இந்திரன் என - இந்திரனைப் போல
மார்பின் - தனது மார்பில்
அணி ஆரம் - அணிந்த மணிமாலையானது
அந்தர தலத்து - வான வீதியில் திரிகின்ற
இரவி - சூரியனும்
அஞ்ச - தோற்கும்படி
ஒளிவிஞ்ச - ஒளி மிகுமாறு
கடிது எழுந்து - விரைவாகத் தன் அரியணையிலிருந்து எழுந்து
அடி - விசுவாமித்திரனுடைய திருவடிகளை
பணிந்தான் - வணங்கினான்.

கருத்துரை : விசுவாமித்திர முனிவனது வருகையைக் கண்ட தசரதன், தன் இருக்கையை விடுத்து எழுந்து வணங்கினான்.

விளக்கவுரை

மார்பின் அணியாரம் அந்தர தலத்திரவி அஞ்சவொளி விஞ்ச: தசரதனது மார்பில் அணிந்திருந்த மணிமாலை ஒளி வீசியது. அதனுடைய ஒளி சூரியனுடைய ஒளியையும் வெல்லத்தக்கது. தசரதன் மார்பில் அணிந்த மணிமாலை, வான வழியிற் செல்கின்ற சூரியனும் தோற்குமாறு ஒளியை மிகுதியாக வீசியது என்பது கருத்து. **கந்த மலரிற் கடவுள்:** மணம் மிக்க தாமரை மலரில் தங்கும் பிரமன். பிரமனுக்கு இருப்பிடம் தாமரை மலர் என்று புராணம் கூறும். **கடவுள் தன் வரவு காணும் இந்திரன் என:** பிரம தேவனது வருகையைக் கண்ட இந்திரனைப்போல. பிரம தேவன் போன்றவன் விசுவாமித்திரன் இந்திரன் போன்றவன் தசரதன். பிரமதேவனை இந்திரன் கண்டதைப்போல விசுவாமித்திரனைத் தசரதன் கண்டான். தவ வலிமைபற்றி விசுவாமித்திரனுக்குப் பிரமனும், அழகும் தோற்றமும்பற்றித் தசரதனுக்கு இந்திரனும் உவமைகளாகக் காட்டப்பட்டனர்.

இலக்கணக் குறிப்பு: அணியாரம்: ஈண்டு வினைத்தொகை.

5. தசரதன் விசுவாமித்திரனை உபசரித்து, இன்சொற்கூறல்

பதவுரை

(தசரதன் முனிவனை)
பணிந்து - வணங்கி
மணி - மணிகளை
செற்றுபு - நெருக்கமாக

பிறைமதிப் பின்னீர பேதையர் நட்பு.

குயிற்றி - பதித்து,
அவிர் - ஒளி வீசுகின்ற
பைம்பொன் - பசும்பொன்னினால்
அணிந்த - அழகு செய்யப் பெற்ற
தவிசு - ஆசனத்தை
இட்டு - போட்டு
அதில் - அதன்கண்
அருத்தியொடு - விருப்பத்துடன்
இருத்தி - முனிவனை இருக்கச் செய்து.

(முனிவருடைய)

இணைந்த - இரண்டாக அமைந்த
கமலம் - தாமரை மலர்போன்ற
சரண் - திருவடிகளில்
அருச்சனை செய்து - அருச்சனை புரிந்து
என் வினைத் தொடர்பு - எனது ஊழ்வினைத் தொடர்ச்சி
இன்றே துணிந்தது - இன்றே அழிந்து போய்விட்டது
என - என்று நினைத்து
தொழுது - கைகுவித்துக் கொண்டு
சொல்லும் - வரவேற்புரை கூறுவான்.

கருத்துரை: விசுவாமித்திர முனிவனை தசரதன் வணங்கி, இருக்கையளித்து இருத்தி, அருச்சனை செய்து, கைகுவித்து வரவேற்புக் கூறுவான்.

விளக்கவுரை: மணிசெற்றுபுகுயிற்றி அவிர்பைம் பொன் அணிந்த தவிசு: மணிகள் நெருக்கமாக இழைக்கப் பெற்றதும், பசும் பொன்னால் அழகு செய்யப் பெற்றதும் ஆன ஆசனம். தசரதன் பேரரசனாதலாலும், விசுவாமித்திரன் பெருமுனிவனாதலாலும், இருவருடைய பெருமையையும் விளக்கும் பொருட்டு ஆசனம் இவ்வாறு சிறப்பிக்கப் பெற்றது. இணைந்த கமலச்சரண்: இரண்டாக அமைந்த, தாமரை மலர்போன்ற திருவடிகள திருவடிக்குத் தாமரை மலரை உவமையாகக் கூறுதல் மரபு. இன்றே துணிந்தது என் வினைத் தொடர்பு என: எனது ஊழ்வினைத் தொடர்ச்சி இப்பொழுதே அழிந்துபோய்விட்டது என முனிவனை வணங்கியவர்களுடைய தீவினைகள நீங்கும் என்னும் கருத்தினால் தசரதன் இவ்வாறு நினைததான். பெரியோர்களுடைய தொடர்பு தீவினைகளைப் போக்கும் என்பர் அறிஞர். ஒரு பிறப்பிற்செய்த வினையின் பயன் மறுபிறப்பில் அவ்வுயிரை அடையும் என்று கூறுவது வழக்கம். முனிவனை வணங்குவதனால் தனது தீவினை அகலும் என்று தசரதன் நினைததான்.

இலக்கணக் குறிப்பு: பசுமை + பொன் = பைம்பொன்: பண்புத் தொகை. கமலச்சரண்: உவமத் தொகை.

6. தசரதன் விசுவாமித்திரனைத் துதிக்க, அம்முனிவன் தசரதனைப் புகழத் தொடங்குதல்

பதவுரை

நெடியோய் - பெரியோனே!
யான் - நான்
வலம் செய்து - கின்னை வலமாகச் சுற்றி வந்து

நகுதற் பொருட்டன்று நட்டல்.

வணங்க - வணங்குமாறு
நீ - (ஒப்பற்ற) நீ
நகர் - எனது நகரத்தில்
எளி வந்த - எளிதில் வந்த
இது - இச்செய்கைக்குக் காரணம்
நிலம் - இந்த நாடு
செய்தவம் - செய்துள்ள தவமாகும்
என்று உணரின் - என்று ஆராய்ந்து பார்த்தால்
அன்று - அஃது அமையாது
என் நலஞ் செய்வினை உண்டு - யான் செய்த நல்வினையாகும்
எனினும் - என்று கொண்டாலும்
அன்று - அதுவும் அமையாது. (மற்று வேறு காரணம் யாதெனின்)
முந்து - முன்பு
என்குலம் - என் குலத்து முன்னோர்
செய்தவம் - செய்த தவமேயாகும்
என்று இனிது கூற - என்று இன்னுரை கூற,
முனி - விசுவாமித்திரன்
கூறும் - சொல்வானாயினன்.

கருத்துரை: தன் குலத்து முன்னோர் செய்த தவத்தினாலேயே விசுவாமித்திரன் எளிதில் தன்னிடம் வந்தான் என்று தசரதன் இன்னுரை கூறித் துதிக்க, விசுவாமித்திரன் சொல்வானாயினன்.

விளக்கவுரை

நிலம் செய்தவம் என்றுணரின் அன்று: தவத்திற் சிறந்த விசுவாமித்திரன் எளிதாகத் தன்னிடம் வந்ததற்குக் காரணம் தனது நாடு செய்துள்ள தவமோ என்று ஆராய்ந்து பார்த்தான் தசரதன். பின்பு அது காரணமன்று என்று அவன் முடிவு செய்தான். நலஞ் செய்வினை உண்டெனினும் அன்று: தான் முன் பிறப்பிற் செய்த நல்வினைப் பயன்தான் விசுவாமித்திரனது வருகைக்குக் காரணமோ என்று தசரதன் நினைத்தான். அத்துணை நல்வினையைத் தான் செய்திருத்தல் இயலாது என்று கருதி, அது காரணமன்று என்று முடிவு செய்தான். என் குலஞ் செய்தவம்: தன் குலத்து முன்னோர் செய்த தவமாகும் என்று தசரதன் கருதினான். ஒரு குலத்து முன்னோர் செய்த தவப்பயன் பின்னோனுக்கு வாய்க்கும் என்று கூறுவது வழக்கம். அதற்கேற்பவே தசரதன் நினைத்தான்.

இலக்கணக் குறிப்பு: செய்தவம்: வினைத்தொகை. நெடியோய்: விளி. குலம்: ஆகுபெயர்.

விசுவாமித்திரன் தசரதனைப் புகழ்தல் (7, 8)

7. தசரதனது அருட்பண்பினைப் புகழ்தல்

பதவுரை

இகல் - பகைவரை
வென்ற - (போரில்) வென்ற
புலவு - புலால் நாற்றம் தாங்கிய

வேலோய் - வேலினையுடைய தசரதனே !
என் அனைய - என்னைப் போன்ற
முனிவரும் - முனிவர்களும்,
இமையவரும் - தேவர்களும்
இடையூறு ஒன்று - துன்பம் ஒன்றை
உடையராயின் - உடையவர்களாக இருந்தால் (அவர்கட்கு)
பல் நகமும் - பல மலைகளையும்
நகு - இகழ்ந்து சிரிக்கின்ற
வெள்ளிப்பனி மலையும் - பனி மூடிய வெள்ளி மயமான கைலாய மலையும்,
பாற்கடலும் - திருப்பாற்கடலும்,
பதுமபீடத்தன் - தாமரை மலரை ஆசனமாகக் கொண்டவனாகிய பிரமனது
நகரும் - நகரமாகிய சத்திய உலகமும்,
கற்பக நாடு - கற்பக மரத்தை யுடைய நாடாகிய
அணி நகரும் - அழகிய அமராவதி நகரமும்,
அணிமாடம் - அழகிய மாடங்களையுடைய
அயோத்தி என்னும் - அயோத்தி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற
பொன் நகரும் - இந்த அழகிய நகரமும்
அல்லாது - (புகலிடங்களாகுமே) அல்லாமல்
புகல் - அடைக்கலம் அடைவதற்குரிய இடம்
உண்டோ - வேறு உண்டோ? (இல்லையென்றபடி)

கருத்துரை: முனிவர்கட்கும், தேவர்கட்கும் துன்பம் ஒன்று வந்தால், அவர்கள், சிவபெருமானுக்குரிய கைலைமலை, திருமாலுக்குரிய பாற்கடல், பிரமனுக்குரிய சத்திய உலகம், இந்திராணிக்குரிய அமராவதி, தசரதனுக்குரிய அயோத்தி ஆகிய நகரங்களையே அடைவர் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

விளக்கவுரை

பன்னகமும் நகு வெள்ளிப் பனிமலை: பல மலைகளையும் இகழ்ந்து சிரிக்கின்ற வெள்ளி மயமான பனி மலையாகிய கைலாயம். கைலாய மலை வெள்ளி மலையாகும். ஆண்டு முழுதும் பனி மூடியிருக்கும். பனியால் மூடப்பட்டிருக்கின்ற காரணத்தால் அது வெள்ளி மலைபோல் தோன்றும். அஃது ஒளியுடன் விளங்குவது, ஏனைய மலைகளைப் பார்த்து இகழ்ந்து சிரிப்பதைப்போல் உள்ளது. கைலைமலை சிவபிரான் தங்குகின்ற இடம் என்பர். **பாற்கடல்:** திருப்பாற்கடலில் திருமால் பள்ளி கொண்டுள்ளார் என்று புராணம் கூறும். **பதுமபீடத்தன் நகர்:** தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவனது நகரமாகிய சத்திய உலகம். தாமரை மலரில் பிரமன் தங்கியுள்ளான் என்று கூறப்படும். **அயோத்தி என்னும் பொன்னகர்:** ஏனைய இடங்களெல்லாம் அடைவதற்கு அரியது. அயோத்தியோ மக்கள் அடைதற்கு எளியது எனவே அயோத்தி ஈற்றின்கண் வைக்கப்பட்டது தசரதனுடைய நகரமாகிய அயோத்தியுடன் கைலாய மலை, திருப்பாற்கடல், சத்திய உலகம், அமராவதி ஆகியவை

தினப்படுத்தப் பெற்றுள்ளன. இதிலிருந்து அயோத்தியின் பெருமையும், தசரதனுடைய சிறப்பும் நன்கு வெளிப்படும். எல்லோருக்கும் அடைக்கலம் தருபவன் தசரதன் என்னும் கருத்து இப்பாடலின்கண் அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு: பால்+கடல்=பாற்கடல். உண்டோ: ஓகார வினா ஈண்டு எதிர்மறை, கைலை முதலியவற்றுடன் அயோத்தி ஒப்புமை அமைய உடன் வைக்கப்பட்டுள்ளதாதலால் ஈண்டு ஒப்புமைக் கூட்ட அணி அமைந்துள்ளது. இயற்கையாக ஒளி வீசுகின்ற கைலையை, ஏனை மலைகளைப் பார்த்து சிரிக்கின்ற கைலை என்று கூறியது தன்மைத் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

8. தசரதனது வீரத்தைப் புகழ்தல்

பதவுரை

அரச - 'அரசனே'
இன்தளிர் - இனிய தளிர்களையுடைய
கற்பகம் - கற்பக மரத்தினது
நறும்தேன் - நறுமணமுள்ள தேன்
இடை - இடையிடையே
துளிக்கும் - சிந்தப்பெற்ற
நிழல் - நிழலின்கண்
இருக்கை - அரசனாக வீற்றிருத்தலை
இழந்து போந்து - இழந்து வந்து (இந்திரன்)
நின் - உன்னுடைய
தளிக்கும் - செழிப்புள்ள
தனி - ஒப்பற்ற
குடையின் நிழல் - குடை நிழலினிடத்தே
ஒதுங்கி - சேர்ந்து
குறை இரந்து - குறையைச் சொல்லி
நிற்க - நின்ற காலையில்
நோக்கி - (அவனைப்) பார்த்து (இரங்கி)
குன்று - மலைகளை
அனிக்கும் - ஒத்த
குலம் - உயர்ந்த
மணித்தோள் - அழகிய தோள்களை உடைய
சம்பரனை - (இந்திரனுக்கு பகைவனாகிய) சம்பரன் என்னும் அசுரனை
குலத்தோடும் - அவனுடைய மரபோடும்
நீ தொலைத்து - நீ அழித்து
கொண்டு - உன் வசப்படுத்தி
அன்று - அக்காலத்தில்
அளித்த - மீட்டுத் தந்த
அரசு அன்றோ - அரசாட்சி அல்லவா
இன்று - இந்நாளில்
புரந்தரன் - இந்திரன்
ஆள்கின்றது - ஆண்டு வருவது?
என்றான் - என்று விசுவாமித்திரன் தசரதனைப் பார்த்துக் கூறினான்.

கருத்துரை: சம்பரன் என்ற அசுரன் இந்திரனிடமிருந்து தேவர் உலகத்தைக் கைப்பற்றினான். அதுகாலையில் தசரதன் சம்பரனை வென்று, தேவர் உலகத்தை இந்திரனுக்கு மீட்டுக் கொடுத்தான்.

இத்தகைய வீரத் தன்மையை விசுவாமித்திரன் இப்பொழுது சுட்டிக் காட்டுகின்றான்.

விளக்கவுரை

கற்பக நறுந்தேன் இடைதுளிக்கும் நிழல் இருக்கை: கற்பக மரத்தின் நிழலில் இருந்து இந்திரன் ஆட்சி புரிகின்றான் என்று புராணம் கூறும். கற்பக மரத்தில் பூத்திருக்கும் பூக்களிலிருந்து தேன் துளித்துக் கொண்டிருக்குமாதலால் இந்திரனுடைய இருக்கை இவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது. சம்பரனைக் குலத்தோடும் தொலைத்த வரலாறு: சம்பரன் என்பவன் ஓர் அசுரன். அவன் தண்டகாரண்யத்தில் உள்ள வைஜயந்தம் என்னும் நகரில் இருந்து அரசாண்டவன்; தேவர்களுடன் போர் செய்து, இந்திரனை வெருட்டி, தேவர் உலகத்தைக் கைப்பற்றியவன். தனது நாட்டை இழந்த இந்திரன் தசரதனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான் தசரதன் அவ்வளவில் சம்பரனுடன் போர் தொடுத்தான். அதுகாலையில் தசரதனுடன், அவனுடைய மனைவியருள் ஒருத்தியாகிய கைகேயி என்பவளும் சென்றாள். சம்பரன் தன் மாயையால் பல இடங்களுக்கு ஓடி ஒளிந்தான். எனினும், தசரதன் அவனை விடாமல் பின்பற்றிச் சென்று, அவனையும், அவனுடைய உறவினரையும் கொன்றான். நீ அன்றளித்த அரசன்றோ புரந்தரன் இன்று ஆள்கின்றது: 'சம்பரனைக் கொன்று, இந்திரன் இழந்த நாட்டை மீட்டுத் தந்தாய் அன்றோ? அவ்வாறு நீ கொடுத்த நாட்டையே இன்றும் இந்திரன் ஆள்கின்றான்' என்று விசுவாமித்திரன் தசரதனைப் பார்த்துக் கூறினான். இவ்வரலாற்றிலிருந்து தசரதனின் வீரமும், அடைக்கலம் புகுந்தவர்க்கு அருளும் தன்மையும் விளங்குகின்றன. இந்திரனுக்கு உதவி செய்தமைபோலத் தனக்கும் உதவ வேண்டும் என்னும் கருத்தினையுட்கொண்டே விசுவாமித்திரன் இவ்வரலாற்றை ஈண்டுக் குறிப்பிட்டான். முனிவர்களும், தேவர்களும் அடைக்கலம் புகுவதற்குரியராகச் சிவபெருமான், திருமால், பிரமன், இந்திரன், தசரதன் என்னும் ஐவர் முன்பு குறிப்பிடப்பெற்றனர். அத்தகைய ஐவருள் ஒருவனான இந்திரனுக்கே தசரதன் உதவி செய்தமை அவனது வீரத்தை விளக்கும். அக்கருத்தினைக்கொண்டே விசுவாமித்திரன் இப்பொழுது தசரதனிடம் வந்தான் என்னும் குறிப்பும் ஈண்டு அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு: நறுந்தேன்: பண்புத்தொகை. துளிக்கும்: உவம உருபு. அன்றோ: ஓகாரம் வினா. அரச: அண்மை விளி.

9. தான் செய்யவேண்டுவது யாது எனத் தசரதன் விசுவாமித்திரனைக் கேட்டல்

பதவுரை

உரை செய்யும் அளவின் - (இவ்வாறு விசுவாமித்திரன்) சொல்லிய அளவில்	முரசு எய்து - முரசங்கள் முழங்குகின்ற

கடைத்தலையான் - தலைவாயிலை உடைய தசரதன்
உள்ளத்தின் - தன் மனதில்
ஒருவராலும் - எவராலும்
கரை செய்ய - அளவிட
அரியது - முடியாத
ஒரு - ஒப்பற்ற
பேர் உவகைக்கடல் - பெரிய மகிழ்ச்சியாகிய கடல்
பெருக - பொங்க
கரங்கள் கூப்பி - கைகளைக் குவித்து
அவன் முகம் நோக்கி - அம் முனிவனது முகத்தைப் பார்த்து
அரசு எய்தி இருந்த - 'இந்த அரச பதவியை அடைந்ததனால் ஆன
பயன் - பயனை
எய்தினன் - (தங்களது வருகையால்) பெற்றேன் ;
இனி - இப்பொழுது
செய்வது - (யான்) செய்ய வேண்டுவதை
அருளுக - கட்டளையிட்டருள் வீராக'
என்று - என்று
துன்மொழி - எதிரில் சொல்ல
ஆங்கு - அப்பொழுது
முனிவன் - அந்த விசுவாமித்திரன்
பின்மொழியும் - பின் சொல்லானாயினன்.

கருத்துரை : தான் அரசாட்சியடைந்த பயனை விசுவாமித்திரனது வருகையால் பெற்றுவிட்டதாகவும், இனித் தான் செய்யவேண்டுவதைக் கட்டளையிட்டருளுமாறும் தசரதன் விசுவாமித்திரனிடம் கூற, அம்முனிவனும் சொல்லானாயினன்.

விளக்கவுரை

முரசு எய்து கடைத்தலையான் : முரசங்கள் முழங்குகின்ற தலைவாயிலையுடைய தசரதன். பேரரசர்கட்கே முரசம் உரியது. கொடை முரசு, மண முரசு, வெற்றி முரசு என்று முரசங்கள் மூவகைப்படும். இச்செய்தியிலிருந்து, தசரதன் கொடைப் பண்பும், வெற்றியும் உடையவன் என்பதும், மங்கல வினைகளை நிகழ்த்துபவன் என்பதும் புலனாகின்றன. **கரைசெய்ய அரியதொரு பேருவகைக் கடல்பெருக :** அளவிடற்கு அரியதாகிய பெரிய மகிழ்ச்சியாகிய கடல் பொங்க. விசுவாமித்திரனுடைய மொழிகளைக் கேட்ட தசரதன் பெரு மகிழ்ச்சியடைந்தான் என்பது கருத்து. தசரதனுடைய மகிழ்ச்சி ஈண்டுக் கடலாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. கடல் பொங்குவதுபோலத் தசரதனுடைய மகிழ்ச்சியும் பொங்கியது. அம்மகிழ்ச்சி அளவிடற்கரியது.

அரசெய்தியிருந்த பயன் எய்தினன் : தான் அரச பதவி பெற்றதன் பயனை அன்றே அடைந்ததாகத் தசரதன் கூறுகின்றான். அரச பதவியை அடைந்தவர்கள் சிறந்த பேறு பெறுதல் வேண்டும். பெருந்தவத்தைச் செய்த விசுவாமித்திரனது வருகை தசரதனுக்குப் பெரும் பேறாகத் தோன்றியது.

தான் செய்யும் நல்லறமும் ஒன்பேறாகும் சிந்திக்க.

இலக்கணக் குறிப்பு: உவமைக் கடல்; உருவகம். மற்று: இடைச் சொல். ஈண்டு அசை நிலையாக வந்தது. அருளுக+என்று= அருளுகென்று: ஈண்டு நிலைமொழியீற்றின்கண் உள்ள அகரம் மறைந்தது தொகுத்தல் விகாரம். கடைத்தலை: 'தலைக் கடை' என்பது 'கடைத்தலை' என வந்தது இலக்கணப் போலி.

10. யாகத்தைக் காத்தற்கு இராமனை அனுப்புக என்று விசுவாமித்திரன் கூறல்.

பதவுரை

தரு - மரங்கள் நிறைந்த
வனத்துள் - காட்டின்கண்
யான் இயற்றும் - யான் செய்யப்போகின்ற
தகை - சிறந்த
வேள்விக்கு - யாகத்திற்கு
இடையூறு - தடையாக
தவம் செய்வோர்கள் - தவம் செய்கின்ற முனிவர்கள்
வெருவா - அஞ்சும்படி
சென்று - (அவர்களிடம்) போய்
அடை - சேர்கின்ற
காமம் - காமமும்,
வெகுளி - கோபமும்
என - போல
நிருதர் - அரக்கர்கள்
இடை - நடுவிலே
விலக்காவண்ணம் - தவிர்க்காதவாறு
செரு முகத்து - போர்முகத்தில் (நின்று)
காத்தி - நீ காப்பாயாக
என - என்று கட்டளையிட்டு (பின்பு)
நின்சிறுவர் நால்வரினும்-உன்னுடைய புதல்வர்கள் நால்வர்க்குள்
கரிய - கரு நிறமுடைய
ஒருவனை - ஒப்பற்ற இராமனை
தந்திடுதி - (என்னுடன்) அனுப்புக
என - என்று
உயிர் இரக்கும் - உயிரையே யாசிக்கின்ற
கொடுங்கூற்றின் - கொடிய இயமனைப்போல
உளைய - தசரதனுடைய மனம் வருந்துமாறு
சொன்னான் - விசுவாமித்திரன் கூறினான்.

கருத்துரை: தான் ஒரு யாகம் செய்யப்போவதாகவும், அதற்கு அரக்கர்கள் தடை செய்யாதவாறு தடுத்தல் தசரதனது கடமையாகும் என்றும், அதன்பொருட்டு தசரதனுடைய புதல்வர்களுள் ஒப்பற்ற வலுகிய இராமனைத் தன்னுடன் அனுப்புமாறும் விசுவாமித்திரன் தசரதனிடம் கேட்டான்.

விளக்கவுரை

தவம் செய்வோர்கள் வெருவரச்சென்று அடைகாம வெகுளி என: தவஞ்செய்யும் முனிவர்கட்குக் காமம், கோபம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பவை இருத்தல் கூடா என்பர். அவை மக்களுக்கு இயற்கையாக வருகின்ற பண்புகள் ஆவன. அவை மக்

களைத் தீய வழியிற் செலுத்துர். முனிவர்கள் தம் மனத்தை அடக்கித் தவஞ்செய்யுங்கால், அவை தோன்றி, அவர்களுடைய மனத்தை மாற்றும். எனவே முனிவர்கள் அவற்றைக் கண்டு நடுங்குவர். அவற்றுள் காமமும், வெகுளியும் பெருந்தீங்கு தருபவையாதலால் அவ்விரண்டும் ஈண்டுக் குறிப்பிடப்பட்டன. அவை ஈண்டு அரக்கர்கட்கு உவமையாகக் காட்டப்பட்டன. முனிவர்களின் தவத்தைக் காமமும் வெகுளியும் தவிர்க்கும். அதுபோல முனிவர்களுடைய தவத்தை அரக்கர்கள் தவிர்ப்பர். இனி, முனிவர்க்குப் பகைவர்களாகிய சுபாகு, மாரீசன் என்னும் அரக்கர்கள் இருவர்க்கும் காமமும் வெகுளியும் உவமைகள் ஆக்கப்பட்டன என்றும் கொள்ளலாம். காமம்: ஒரு பொருளின்மீது உண்டாகும் ஆசை. வெகுளி: ஒரு பொருள் கிடைக்கவில்லையெனில் அதுபற்றி உண்டாகும் கோபம். கரிய செம்மல் ஒருவன்: கருநிறமுடைய ஒப்பற்றவனாகிய இராமன். இராமன் கருநிறம் உடையவனாதலாலும், அவன் ஒப்பற்றவனாதலாலும் இவ்வாறு சுட்டப்பட்டான். உயிர் இரக்கும் கொடுங்கூற்றின்: உயிரை யாசிக்கின்ற கொடிய இயமனைப்போல. இயமன் உயிரை யாசிக்கமாட்டான். உயிரை யாசிக்கின்ற இயமன் ஒருவன் இருப்பின் அவன் விசுவாமித்திரனுக்கு உவமையாவான். தசரதனுக்கு உயிர்போன்றவன் இராமன். புதல்வர்களுள் மூத்தவனாதலாலும், அழகும் வீரமும் அமைந்தவனாதலாலும் இராமனிடம் தசரதன் பேரன்பு வைத்திருந்தான்; அவனைத் தன் உயிராகவே கருதியிருந்தான். எனவே, விசுவாமித்திரன் இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்டமை, இயமன் உயிரைத் தருமாறு கேட்டல்போல் இருந்தது. உளைய: தசரதன் வருந்துமாறு. தசரதனது உயிர்போன்ற இராமனை அனுப்புமாறு விசுவாமித்திரன் கேட்டானாதலால் அவன் வருந்தினான்.

இலக்கணக் குறிப்பு: என: உவம உருபு. கூற்றின்: 'இன்' என்பது ஈண்டு உவம உருபு. வெருவா: 'வெருவா' என்பது பகுதி. அரக்கர்க்கு உவமையாகக் காமமும், வெகுளியும், விசுவாமித்திரன் இராமனையனுப்புமாறு கேட்டமைக்கு உவமையாக உயிர் இரக்கும் கூற்றமும் காட்டப்பட்டுள்ளனவாதலால் இப்பாடலின்கண் உவமையணி அமைந்துள்ளது.

11. விசுவாமித்திரனது உரையைக் கேட்ட தசரதன் மிக வருந்துதல்

பதவுரை

எண் இல் - அளவில்லாத
அருந்தவத்தோன் - அரிய தவத்தைச் செய்யும் விசுவாமித்திரன்
இயம்பிய சொல் - சொல்லிய சொல்லானது
மருமத்தின் - மார்பினிடத்தே
எறி - (பகைவன்) எறிந்த
வேல் பாய்ந்த - வேல் பாய்ந்ததால் ஆகிய
புண்ணில் - புண்ணில்
ஆம் - உண்டான
பெரும் புழையில் - பெரிய துவாரத்தில்

கனல் - கொள்ளிக்கட்டை
நுழைந்தால் என - நுழைந்தாற் போல
செவியில் - காதினிடத்தே
புகுதலோடும் - புகுந்த அளவில்
காலன் - (பகைவர்க்கு) இயமனைப் போன்ற
வேலான் - வேலினையுடைய தசரதன்
உள் நிலாவிய - தன் மனத்தில் உண்டான
துயரம் - வருத்தம்
பிடித்து உந்த - பிடித்து வெளியே தள்ளுதலால்
ஆர் உயிர் - தனது அரிய உயிர்
நின்று - வெளியே நின்று
ஊசலாட - ஊஞ்சலைப்போல் ஆட
கண் இலான் - பிறவிக் குருடன் ஒருவன்
பெற்று - பார்வையைப் பெற்று
இழந்தால் என - மீட்டும் இழந்தாற்போல
கடுந்துயரம் - மிக்க துயரத்தால்
உழந்தான் - துன்புற்றான்.

கருத்துரை : விசுவாமித்திரனது உரையைக் கேட்ட தசரதன் பெருவருத்தம் அடைந்தான். முனிவனது உரை வேல் பாய்ந்த புண்ணில் கொள்ளிக்கட்டை பாய்ந்ததுபோல் தசரதனுக்கு இருந்தது.

விளக்கவுரை

வேல்பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தால் என : பகைவரது வேல் பாய்ந்ததனால் உண்டான புண்ணில் அமைந்த பெரிய துவாரத்தில் கொள்ளிக்கட்டை பாய்ந்தாற்போல. பகைவரது வேல் பாய்ந்தால் துன்பம் உணடாகும். அதனால் ஆன புண்ணில் கொள்ளிக்கட்டையும் நுழைக்கப் பெறுமேல் பெருந்துன்பம் உண்டாகும். விசுவாமித்திரனது உரை வேலால் உண்டான புண்ணில் கனல் நுழைந்ததுபோல் இருந்தது. அஃதாவது பெருந்துன்பத்தை உண்டாக்கியது என்பது கருத்து **உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த ஆருயிர் நின்று ஊசலாட :** உள்ளே உண்டான துயரம் பிடித்துத் தள்ளுதலால் உயிர் ஊஞ்சலைப்போல ஆட. விசுவாமித்திரனது உரை தசரதனுடைய மனத்தின்கண் துயரத்தை உண்டாக்கியது. அத்துயரத்தினால் அவனது உயிரே நீங்கிவிடும்போல் இருந்தது. துயரம் உயிரைப் பிடித்து வெளியே தள்ளியது. அவ்வாறு தள்ளப்பட்ட உயிர் போவதும் வருவதுமாக இருந்தது. எனவே அஃது ஊஞ்சலாடுவதைப்போல் இருந்தது. **கண்ணிலான் பெற்றிழந்தால் என உழந்தான் :** பிறவிக் குருடன் ஒருவன் பார்வையைப் பெற்று மீட்டும் இழந்தால் எத்தகைய துன்பம் அடைவானோ அத்தகைய துன்பத்தைத் தசரதன் அடைந்தான். பிறவிக் குருடன், இவ்வுலகின் தோற்றத்தைப்பற்றி ஒன்றும் அறியமாட்டான். எதனையும் தன்னால் பார்க்கமுடியவில்லையே என்ற ஒருவகை ஏக்கம் அவனிடம் இருக்கும். ஆனால், அவன் ஒரு முறை பார்வையைப் பெற்று, மீட்டும் அதனை இழந்துவிட்டால் பெருந்துன்பத்தை அடைவான் என்பது திண்ணம். பார்வையைப் பெறாமலிருந்தால் எத்தகைய துன்பம் அடைவானோ அதனினும் பன்மடங்கு துயரத்தை அவன் கண்பெற்று இழந்த

காலையில் அடைவான். அத்தகைய துயரத்தைத் தசரதன் அடைந்தான் என்று ஈண்டுச் சொல்லப்படுகின்றது. தசரதன் நெடுங்காலமாகப் பிள்ளையில்லாமல் ஏங்கியவன். பின்பு பெருந்தவம் செய்து, பிள்ளைகளைப் பெற்றான். அத்தகைய புதல்வருள் மூத்தவனை விசுவாமித்திரன் கேட்டானதலால் தசரதனுக்குப் பெருந்துன்பம் உண்டாயிற்று. பிறவிக்குருடன் பார்வையைப்பெற்று மீட்டும் இழந்ததுபோல, தசரதன் இராமனைப் பெற்று இழக்குமாறு நேரிட்டது. இராமன் இளைஞனாதலாலும், பகைவர் வலியராதலாலும் விசுவாமித்திரனுடன் இராமனை அனுப்புதல் அவனை இழப்பதுபோல் தசரதனுக்குத் தோன்றியது. இனி, "கண்ணில்லாத முனிவன் ஒருவனது ஒரே மகனைத் தசரதன் தவறிக் கொன்றுவிட்டான். அதனைப் பொறாத முனிவன் தன் மனைவியுடன் தீப்புகுந்தான். அவ்வாறு புகுங்கால் அவன், 'எங்களுக்கு நீ துயரம் செய்தாய், இத்தகைய துயரத்தாலேயே நீயும் இறக்கக் கடவாய்' என்று தசரதனுக்குச் சாபம் கொடுத்துவிட்டான். அக்கதையை நினைவிற்கொண்டே 'கண்ணிலான் பெற்றிழந்தால் என' என்று கம்பர் பாடியுள்ளார்" என்றும் சிலர் கூறுவர்.

இலக்கணக் குறிப்பு: இலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் அருமை + உயிர் = ஆருயிர்: பண்புத் தொகை. கடுமை + துயரம் = கடுந்துயரம்: பண்புத் தொகை. 'கனல் நுழைந்தால் என' என்றும், பெற்றிருந்தால் என (என்றும் உவமைகள் அமைந்துள்ளனவாதலால் இப்பாடலின்கண் உவமையணி அமைந்துள்ளது.

12. தசரதன் தானே வந்து யாகத்தைக் காப்பதாகக் கூறல்

பதவுரை

தொடை - தேன் கூட்டிலிருந்து
ஊற்றின் - (தேன்) ஊற்றுவது போல
தேன்துளிக்கும் - தேனைச் சிந்துகின்ற
நறுந்தாரன் - நறுமணமிக்க மாலையை உடைய தசரதன்
ஒரு வண்ணம் - ஒருவாறாக
துயரம் நீங்கி - துயரம் நீக்கப் பெற்று (முனிவனைப் பார்த்து)
பெரியோய் - 'பெரியவனே!
இவன் - இந்த இராமன்
படை ஊற்றம் இலன் - படைப் பயிற்சி இல்லாதவன்;
சிறியன் - இளம் பருவத்தினன் (எனவே அவன் வேண்டாம்)
இது பணியேல் - (அரக்கர் தடை செய்யாதவாறு) யாகத்தினைக் காத்தலாகிய இதுவே கட்டளையானால்
பனி - குளிர்ந்த
நீர் - நீரையுடைய
கங்கை - கங்கையாற்றை
புடை - ஒரு புறத்திலே
ஊற்றும் - ஒழுக விடுகின்ற
சடையானும் - சடையினையுடைய சிவபிரானும்
புரந்தரனும் - இந்திரனும்
நான்முகனும் - பிரம தேவனும்
புகுந்து செய்யும் - சேர்ந்து செய்கின்ற

இடையூற்றுக்கு - தடைகளுக்குக்கூட
இடையூறு - தடை உண்டாகுமாறு
யான் காப்பேன் - யானே (யாகத்தைக்) காப்பேன் (எனவே)
பெருவேள்விக்கு - (தாங்கள்) பெரிய யாகத்தைச் செய்வதற்கு
எழுக - எழுந்தருளுக'
என்றான் - என்று கூறினான்.

கருத்துரை: தசரதன் ஒருவாறு துயரம் நீங்கப்பெற்று, விசுவாமித்திரனைப் பார்த்து, 'இராமன் படைப் பயிற்சியில்லாதவன்; இளைஞன். எனவே அவன் வேண்டாம். சிவபிரானும், இந்திரனும், பிரமனும் சேர்ந்து தடைசெய்தாலும்கூடத் தடையுண்டாகாதவாறு யான் தாங்கள் செய்யும் யாகத்தைக் காக்கின்றேன். தாங்கள் எழுந்தருளுங்கள்' என்று கூறினான்.

விளக்கவுரை

இவன் படையூற்றமிலன் சிறியன்: இராமன் படைப்பயிற்சியில்லாதவன்; இளைஞன். இராமன் அதுகாலையில் பன்னிரண்டே ஆண்டுகள் நிறையப்பெற்றவன் என்று கூறப்படுகின்றதாதலால் அவன் படைப் பயிற்சியில்லாதவன் என்றும், இளைஞன் என்றும் சுட்டப்பட்டான். அரக்கரை அழித்தற்குரிய படைப் பயிற்சி இல்லாதவன் என்றும் அரக்கருடன் போர் செய்வதற்கேற்ற பருவம் உடையவனல்லன் என்றும் கருதியே தசரதன் இவ்வாறு கூறினான். கங்கை புடையூற்றும் சடையானும் புரந்தரனும் நான்முகனும் புகுந்து செய்யும் இடையூற்றுக்கு: சிவபிரான், இந்திரன், பிரமன் ஆகியோர் செய்யும் தடைக்கு சிவபிரான் ஒரு காலத்தில் தனது அமிசமான வீரபத்திரனைக் கொண்டு தட்சனுடைய யாகத்தை அழித்தான். சகரன் முதலிய அரசர்கள் செய்த யாகங்கள் நடைபெறாமல் தடுக்க முற்பட்டான் இந்திரன். மேலும், வேறு இந்திரன் ஒருவனை விசுவாமித்திரன் படைக்கக் கருதியதை உட்கொண்டு, இந்திரன், விசுவாமித்திரன் செய்யும் வேள்வியைத் தடுக்க முயலவும் கூடும். தனது படைத்தல் தொழிலுக்கு எதிராக எல்லாவற்றையும் படைக்க விசுவாமித்திரன் ஒரு காலத்தில் முயன்றானதலால் பிரமன் அவன்மீது பகை கொண்டு, அவன் செய்யும் யாகத்தைத் தடுக்க முற்படுதலும் கூடும். இக்காரணங்களை பற்றி, "சடையானும் புரந்தரனும், நான்முகனும் புகுந்து செய்யும் இடையூற்றுக்கு" எனப்பட்டது. கங்கையாற்று நீர் சூழ்ந்து முனிவனது யாகசாலையை அழித்து, யாகத்துக்கு இடையூறு உண்டாக்கியது அதுபற்றியே 'கங்கை புடையூற்றுஞ் சடையன்' என்று சிவபிரான் குறிப்பிடப் பெற்றான்.

இப்பாடலில் சிவபிரான், பிரமன், இந்திரன் ஆகியோர் குறிப்பிடப் பெற்றுள்ளார். திருமால் குறிப்பிடப்பட்டிலர். இராமாயணம் வைணவ மதத் தொடர்புடைய நூலாதலாலும், திருமாலுக்குத் தனி

உயர்வு கொடுப்பது இந்நூலின் நோக்கங்களுள் ஒன்று ஆதலாலும் கம்பர் திருமாலைக் குறிப்பிட்டாரல்லர்.

இலக்கணக் குறிப்பு : மற்றின் : 'இன்' என்பது உவம உருபு. தறுக்தார் : பண்புத் தொகை. எழுக : வியங்கோள் வினைமுற்று. "கங்கை புடையூடறுஞ் சடையான்" என்றது கருத்துடை யடை கொளியணி ஆகும்.

13. விசுவாமித்திரனது பெருஞ்சினமும் அதனாலுண்டாகிய குழப்பமும்

பதவுரை

என்றனன் - என்று (தசரதன்) கூறினன்.
என்றலும் - என்று சொல்லியவுடன்
மண் படைத்த - உலகங்களைத் தனியே படைக்க முற்பட்ட
முனி - விசுவாமித்திர முனிவன்
முனிவோடு - கோபத்தோடு
எழுந்தனன் - எழுந்தான் (அது கண்ட)
மையோர் - தேவர்கள்
இறுதிக்காலம் ஆம் என - உலகம் முடியுங் காலம் இதுவென்றும்
அன்று என - அன்று என்றும்
அயிர்த்தனர் - ஐயம் உற்றனர்
மேல் - வானத்தில் உள்ள
வெயில் - சூரியனும்
கரந்தது - மறைந்தது
அங்கும் - மேலுலகத்திலும்,
இங்கும் - இவ்வுலகத்திலும்
நின்றனவும் - நின்ற பொருள்கள் யாவும்
திரிந்தன - சுழன்றன
கொழும் - செழித்த
கடைப்புருவம் - புருவ நுனிகள்
மீ - மேற்புறமாக
நிவந்த - ஏறியனவாய்
நெற்றிமுற்ற - நெற்றி முழுவதும்
சென்றன - பறந்தன
நகையும் - (முனிவனுக்குச் சினத்தால்) நகையும்
வந்தது - உண்டாயிற்று
கண் சிவந்தன - கண்களும் சிவந்தன
திசைகள் எல்லாம் - எல்லாத் திசைகளும்
இருண்டன - இருண்டு போயின.

கருத்துரை : தசரதனது உரையைக் கேட்டவளவில் விசுவாமித்திரனுக்குப் பெருஞ்சினம் உண்டாயிற்று. முனிவனது சினத்தைக் கண்ட தேவர்கள், இவ்வுலகமே அச்சினத்தினால் அழிந்துவிடுமோ என்று அஞ்சினர்.

விளக்கவுரை

மண் படைத்த முனி : தனது தவ வலிமையால் பிரமனுக்கு எதிராக எல்லா உலகங்களையும் படைக்க முற்பட்டவனாதலால் விசுவாமித்திரன் இவ்வாறு சுட்டப்பட்டான். இமையோர் இறுதிக் காலம் ஆம் என அன்றென அயிர்த்தனர்: உலகத்திற்கு முடிவு காலம் வந்துவிடும் என்றும் அவ்வாறு வராது என்றும் தேவர்கள் ஐயமுற்றனர். விசுவாமித்திரன் பெருந்தவம் செய்தவனாதலால் அவனது

சினத்தால் உலகமே அழிந்துவிடும் என்று தேவர்கள் ஐயமுற்றனர். வெயில் மறைந்தமை, பொருள்கள் சுழன்றமை, திசைகள் இருண்டமை முதலியவற்றாலேயே தேவர்கட்கு அத்தகைய ஐயம் உண்டாயிற்று. கடைப்புருவம் மீறிவந்த நெற்றி முற்றச் சென்றன: புருவ நுனிகள் மேற்புறமாக ஏறியனவாய் நெற்றி முழுவதும் பரந்தன. சினத்தின் மிகுதியால் புருவநுனி நெற்றியில் பரத்தல் இயல்பு. விசுவாமித்திரனது பெருங்கோபத்தைக் குறிப்பிட இவ்வாறு கூறப்பட்டது. நகையும் வந்தது: நகை என்றது ஈண்டுக்கோப நகையை ஆகும். கோபத்தால் இகழ்ச்சிச் சிரிப்பு வருதல் உண்டு. புருவம் நெறித்தல், இகழ்ச்சி நகை தோன்றுதல், கண் சிவத்தல் ஆகியவை சினக்குறிகள் ஆவன.

இலக்கணக் குறிப்பு: வெயில்: ஈண்டுச் சினையாகு பெயர். சிவந்தன, இருண்டன: முரண்தொடை. இப்பாடலின்கண் வெகுளிச் சுவை அமைந்துள்ளது.

இராமனை முனிவனுடன் அனுப்புமாறு வசிட்டன் கூறுதல் (14, 15)

14. இராமனுக்குப் பெருநன்மை உண்டாகும் என்று வசிட்டன் கூறல்

பதவுரை

கறுத்த - (இவ்வாறு) பெருங்கோபம் கொண்ட
மா - பெருமை பொருந்திய
முனி - விசுவாமித்திர முனிவனது
கருத்தை - எண்ணத்தை
உன்னி - ஆராய்ந்தறிந்து, (வசிட்டன் விசுவாமித்திரனைப் பார்த்து)
நீபொறுத்தி என்று - நீ பொறுத்துக் கொள்வாயாக என்று
அவன் புகன்று - அந்த முனிவனிடம் கூறி,
(தசரதனைப் பார்த்து)
நின்மகற்கு - நினது மகனுக்கு
உறுத்தல் ஆகலா - பிறரால் உண்டாக்க இயலாத
உறுதி - நன்மைகள்
எய்தும் - (தாமே) வருகின்ற
நாள் - இக்காலத்தில்
மறுத்தியோ - (அவற்றை) மறுக்க முற்படுகின்றாயோ?
எனா - என்று
கூறினான் - சொன்னான்.

கருத்துரை: வசிட்டன் என்னும் முனிவன் விசுவாமித்திரனது சினத்தைத் தணித்துத் தசரதனைப் பார்த்து, 'உன் மகனுக்குத் தாமாகப் பெருநன்மைகள் வருகின்றன. அவற்றை நீ தடுத்தல் தகுமா?' என்று கேட்டான்.

விளக்கவுரை

நீ பொறுத்தி என்று அவற் புகன்று: தாங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று வசிட்டன் விசுவாமித்திரனிடம் கூறினான்.

இரத்தலின் ஊங்கு இளிவரவு இல்லை.

பெருஞ்சினங்கொண்ட விசுவாமித்திரனைப் பொறுத்துக்கொள்ளு மாறு வேண்டினன் வசிட்டன். வசிட்டன் என்பவன் தசரதனது குலகுரு ஆவான். நின் மகற்கு உறுத்தலாகலா உறுதி எய்து நாள் மறுத்தியோ: 'பிறரால் செய்ய முடியாத நன்மைகள் நின் மகனுக்குத்‧தாமே வருகின்றன. அவற்றை நீ தடுக்கக் கருதுவையோ?' என்று வசிட்டன் கேட்டான். இராமன் விசுவாமித்திரனுடன் செல்வதால், அவனுக்கு மதிப்பும், புகழும் கிடைக்கும் என்பதனைத் தன் வருங்கால உணர்வால் அறிந்த வசிட்டன் இவ்வாறு தசரதனைப் பார்த்துக் கூறினன். விசுவாமித்திரனது பெருமையை வசிட்டன் நன்குணர்வான். அவனது சினத்தால் விளையும் கேட்டையும் வசிட்டன் அறிவான். அரசன் தவறு செய்தால் எடுத்துரைத்து, அவனை நல்வழியிற் செலுத்துதல் தன் கடமையாகும் என்றெண்ணியே வசிட்டன் இங்ஙனம் கூறினன்.

இலக்கணக் குறிப்பு: கறுத்த: பெயரெச்சம். ஆகலா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மறுத்தியோ: ஓகாரம் வினா.

15. முனிவனுடன் அனுப்புவதால் இராமனுக்கு அளவற்ற கல்வியறிவு உண்டாகும் என்று வசிட்டன் கூறுதல்

பதவுரை

ஐய - 'அரசே!
பெய்யும் - பெய்கின்ற
மாரியால் - மழையினால்
பெருகு - பெருகுகின்ற
வெள்ளம் - வெள்ளமானது
போய் - ஓடிச்சென்று
மொய்கொள் - வலிமையைக் கொண்ட
வேலைவாய் - கடலினிடத்தே
முடுகு மாறுபோல் - விரைந்து செல்வதைப்போல
நின்மகற்கு - உனது மகனாகிய இராமனுக்கு
அளவு இல் - அளவு இல்லாத
விஞ்சை - கல்வியறிவு
வந்து எய்து - வந்து அடைகின்ற
காலம் - நல்லகாலம்
இன்று எதிர்ந்தது - இன்று வந்து சேர்ந்தது' (என்று வசிட்டன் தசரதனிடம் கூறினன்.)

கருத்துரை: வசிட்டன் தசரதனைப் பார்த்து, 'நினது மகனாகிய இராமனுக்குக் கல்வியறிவு தானாக வந்தடைகின்ற நல்ல காலம் இது. எனவே அவனை முனிவனுடன் அனுப்புக என்று கூறினன்.'

விளக்கவுரை

பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய் மொய்கொள் வேலைவாய் முடுகுமாறுபோல்: பெய்கின்ற மழை நீர்த் துளிகளால் பெருக்கெடுத்து ஓடுகின்ற வெள்ளம் கடலைச் சேர்தல் போல பல நீர்த்துளிகள் சேர்ந்து பெரு வெள்ளம் ஆகுமாறு போல

கற்றோர் முன் கல்வி உரைத்தல் மிக இனிது.

இராமன் விசுவாமித்திரனுடன் செல்வதால் பலவகை வித்தைகளைக் கற்றுப் பேரறிவு பெறுவான் என்பது கருத்து. நீர்த்துளிகள் பல சேர்ந்து உண்டான வெள்ளத்தைத் தாங்கிக்கொள்ளும் வலிமை கடலுக்கு உண்டு அதுபோல, விசுவாமித்திரனுடைய சேர்க்கையால் உண்டாகும் பலவகைப்பட்ட கல்வியறிவைத் தன் மனத்திலே ஏற்றுக் கொள்ளும் திறமை இராமனுக்கு உண்டு. மழையினால் உண்டான வெள்ளம் கடலைச் சேர்வதுபோல, விசுவாமித்திரன் பெற்ற அறிவெல்லாம் இராமனை அடையும் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு: கொள் வேலை: வினைத்தொகை. ஐய: அண்மைவிளி. இப்பாடலின்கண் உவமையணி அமைந்துள்ளது.

16. இராமனைத் தசரதன் வரவழைத்தல்

பதவுரை

குருவின் - தனது குலகுருவாகிய வசிட்டனது
வாசகம் - உரையை
கொண்டு - ஏற்றுக்கொண்டு
கொற்றவன் - வெற்றித் தன்மை அமைந்த தசரதன்
சென்று 'நீங்கள் போய்
திருவின் கேள்வனை - இலக்குமியின் கணவனாகிய இராமனை
கொணர்மின் என - அழைத்து வாருங்கள்' என்று ஏவலர்க்குக் கட்டளையிட (அவர்கள் சென்று)
வருக என்றனன் - 'நின்னை அழைத்து வருக' என்று தசரதன் கட்டளையிட்டனன்
என்னலோடும் - என்று கூறிய அளவில்,
அறிவின் உம்பரான் - எல்லோர் அறிவையும் கடந்தவனாகிய இராமன்
வந்து - சபைக்கு வந்து
அருகு - (தசரதனுக்கு) அருகில்
சார்ந்தனன் - சேர்ந்தான்.

கருத்துரை: வசிட்டனது உரையைக் கேட்ட தசரதன் இராமனை அழைத்துவருமாறு ஏவலரை அனுப்பினான். ஏவலர் சென்று இராமனை அழைத்த அளவில் அவனும் சபைக்கு வந்து, தசரதனுக்கு அருகில் சேர்ந்தான்.

விளக்கவுரை

குருவின் வாசகம்: முன்னிரண்டு செய்யுட்களில் வசிட்டன் கூறிய உரை. வசிட்டன் தசரதனுக்குக் குருவாதலால் அவன் குரு எனப்பட்டான். திருவின் கேள்வன்: இலக்குமியின் கணவனாகிய இராமன். திருமாலின் அவதாரம் ஆதலாலும், இலக்குமியின் அவதாரமாகிய சீதையை மணக்கப் போகின்றானாதலாலும் இராமன் 'திருவின் கேள்வன்' எனப்பட்டான். அறிவின் உம்பரான்: எல்லோருடைய அறிவையும் கடந்தவன்; இராமன், மக்கள், தேவர் ஆகிய எல்லோருடைய அறிவைக் காட்டிலும் மேலான

அறிவுடையவனாதலாலும், அவர்களுடைய அறிவினால் கற்பனை செய்யப்படாத பண்பினை உடையவனாதலாலும் இராமன் இவ்வாறு குறிப்பிடப்பட்டான்.

இலக்கணக் குறிப்பு : கொணர்மின் : முன்னிலைப் பன்மை வினைமுற்று. வருக : வியங்கோள் வினைமுற்று.

17. இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திரனிடம் தசரதன் ஒப்புவித்தல்

பதவுரை

தம்பி தன்னொடும் - தனது தம்பியாகிய இலக்குவனுடன்
வந்த - தன்னிடம் வந்த
நம்பியை - ஆடவருட் சிறந்தவனாகிய இராமனை
முந்தை - பழமையான
நான்மறை - நான்கு வேதங்களையும் கற்ற
முனிக்கு - விசுவாமித்திர முனிவனுக்கு
காட்டி - காண்பித்து
எந்தை - 'எம் தந்தைபோன்றவனே !
இவர்க்கு - இவ்விளைஞர்க்கு
நீ - நீ (இனிமேல்)
நல்தந்தை - நல்ல தந்தையாவாய்
தனித்தாயும் நீ - ஒப்பற்ற தாயும் நீயே யாவாய்
தந்தனன் - (இவர்களை அடைக்கலமாகத்) தந்துவிட்டேன்
இயைந்த - (இவர்கட்கு) ஆக வேண்டியவற்றை
செய்க - நீ செய்வாயாக
என்றான் - என்று (தசரதன் கூறி அவர்களை முனிவனிடம் அடைக்கலமாகத்) தந்தான்.

கருத்துரை : தன்னிடம் வந்த இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திரனிடம் காட்டித் தசரதன், 'தந்தைபோல்பவனே ! இனி இவ்விளைஞர்க்குத் தந்தையும் தாயும் தாங்களேயாவீர்கள ; இவர்கட்கு ஆகவேண்டியவற்றைச் செய்யுங்கள்' என்று கூறி அவர்களை அடைக்கலமாகத் தந்தான்.

விளக்கவுரை

தம்பி : ஈண்டு இலக்குவன். இராமனுக்குத் தம்பிமார்கள் மூவர் இருப்பினும், அவர்களுள் இலக்குவனே இராமனுடன் இணைபிரியாமல் இருப்பவனாதலாலும், அவனே அப்பொழுது இராமனுடன் வந்தானாதலாலும் 'தம்பி' என்னுஞ் சொல் இலக்குவனைக் குறிக்கும். **நம்பி :** ஆடவர் சிறப்புப் பெயர். ஈண்டு அச்சொல் இராமனைக் குறித்தது. இராமன் ஆடவர்களுட் சிறந்தவனாகலால் 'நம்பி' என்று சுட்டப்பட்டான். **நற்றந்தை நீ தனித்தாயும் நீ இவர்க்கு :** இராமனையும், இலக்குவனையும், விசுவாமித்திர முனிவனிடம் அடைக்கலமாகத் தருகின்றானாதலால் தசரதன் இவ்வாறு கூறினான் தாயையும், தந்தை

யையும் விடுத்து மைந்தர் இருவரும் பிரிகின்றமையாலும், அவர்கள் இளைஞர்களாதலாலும் அவர்கட்குத் தாய் தந்தையர்போல் இருந்து போற்றுமாறு தசரதன் விசுவாமித்திரனிடம் கூறினன். இயைந்த: (மைந்தர்குச்) செய்யத் தகுவனவற்றை தன் மைந்தர்க்கு கன்லைகளைச் செய்யவே விசுவாமித்திரன் அழைத்துச் செல்கின்றான் என்று தசரதன் வசிட்டன் வாயிலாக அறிந்தானதலால் இவ்வாறு கூறினன். முதற்கண் இராமன் ஒருவனைத் தர மறுத்ததால் விசுவாமித்திரன் சினங்கொண்டிருப்பான் என்று கருதி, அவனது சினத்தைத் தணிக்கும் பொருட்டு இராமனுடன் இலக்குவனையும் தசரதன் அனுப்பினன் என்று கொள்ளுதல் பொருந்தும்.

இலக்கணக் குறிப்பு: எந்தை: மரூஉமொழி; ஈண்டு விளி ஏற்றது. செய்க என்றான் = செய்கென்றான்: ஈண்டு அகரம் மறைந்து தொகுத்தல் விகாரம் ஆகும்.

நல்லொழுக்கப் பயிற்சி

இராமனிடம் கொண்டிருந்த பேரன்பினுல், விசுவாமித்திர முனிவனுடன் அவனை அனுப்பத் தசரதன் முதற்கண் இயைந்திலன். அதுகாலையில் அவனது குருவாகிய வசிட்டன், இராமனை முனிவனுடன் அனுப்புமாறு அவனுக்கு அறிவுரை கூறினன். அவ்வளவில் தசரதன், தன் குருவின் உரையை ஆணையாகத் தலைமேற்கொண்டான்; இராமனையும், இலக்குவனையும் முனிவனுடன் அனுப்பினன். தனது குருவின் சொல்லுக்குத் தசரதன் எத்துணை மதிப்புத் தந்திருந்தான்! பெரியோர் உறுதி தருவனவற்றையே கூறுவர் என்னும் கருத்து தசரதனுக்கு இருந்தது. மாணவர்கள் இதனைக் கருத்தில் இருத்த வேண்டும்; ஆசிரியர் கூறும் உறுதி உரைகளின்படி தவறாது நடத்தல் வேண்டும். ஆசிரியர்கள் கூறும் அறவுரைகள் முடிவில் நன்மை ப பயக்கும் என்பது திண்ணம்.

—

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ?

3. திருத்தொண்டர் புராணம்

பெயர்க் காரணம் : மேன்மை பொருந்திய சிவனடியார்களின் பழைய வரலாறுகளைக் கூறும் நூலாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. பெரிய புராணம் என்றே இந்நூல் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. எனினும் திருத்தொண்டர் புராணம் என்பதே நூலாசிரியர் இட்ட பெயராதலின் இங்கு அங்ஙனம் குறிக்கப்பெற்றது. ஆறும் வேற்றுமைத் தொகை.

செயற்கரிய செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறுவதால் பெரிய புராணம் என இந்நூல் பெயர் பெற்றது.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர் : சேக்கிழார்.

இயற்பெயர் : அருண்மொழித் தேவர்.

சிறப்புப் பெயர்கள் : உத்தம சோழப் பல்லவர், தொண்டர்சீர் பரவுவார்.

ஊர் : தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர். அது செங்கற்பட்டு மாவட்டத்தின்கண் உள்ளது.

மரபு : வேளாளர்.

சமயம் : சைவம்.

காலம் : கி. பி. பதினோராம் நூற்றாண்டு. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

வரலாற்றுச் சுருக்கம் : அருண்மொழித் தேவர் எனப் பெயர் பெற்ற இப்புலவர் சேக்கிழார் குடியில் தோன்றி அக்குடும்பத்திற்கே சிறப்பைத்தேடித் தந்தமையின் சேக்கிழார் என்ற குடிப்பெயராலேயே வழங்கப்பட்டார். இவருடைய அறிவாற்றலை அறிந்த அநபாய சோழ மன்னன் (முதலாம் இராஜேந்திர சோழன் என்றும், இரண்டாம் குலோத்துங்க சோழன் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்) இவரைத் தன்னுடைய அமைச்சராக்கிக் கொண்டான். அப்பொழுது உத்தம சோழப் பல்லவராயன் என்ற சிறப்புப் பெயரை இவருக்கு அவன் வழங்கினான்.

நூலியற்றக் காரணம் : அநபாய சோழ மன்னன் சைவ சமயத்தைச் சார்ந்தவனாயிருந்தும் சிந்தாமணி முதலிய சைன சமயக் காப்பியங்களைக் கற்பதிலும் கேட்பதிலும் காலங்கழித்து வந்தான். சேக்கிழார் அதனை உணர்ந்து, அந்நூல்களைக் கற்பதனால் பயன் இன்று என்று

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்.

கூறி, இம்மை மறுமை இன்பங்களை அளிக்கவல்ல சிவனடியார்களின் வரலாறுகளை எடுத்துக் கூறினர். அவ்வரலாறுகளைக் கேட்ட அநபாயன் அவற்றை ஒரு நூலாகப் பாடித் தந்தால் உலகிற்குப் பெருநன்மை செய்ததாகும் என்று வேண்டிக் கொண்டான். அதுகேட்ட சேக்கிழாரும் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானை வணங்க, அவர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, ஓராண்டில் இவர் இந்நூலைப் பாடி முடித்தார். புராணம் முடிந்தமையறிந்த அநபாய மன்னன், தன் பரிவாரங்களுடன் தில்லைக்கு வந்து சேக்கிழாரையும் திருத்தொண்டர் புராணத்தையும் யானை மீதேற்றி, தானே அவருக்குக் குடை பிடித்தும் கவரி வீசியும் நகர் வலம் செய்வித்து, அவர்க்குத் தொண்டர் சீர்பரவுவார் என்ற பட்டப் பெயரளித்துப் பரிசில்கள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான்.

நூலின் சிறப்பு: இந்நூல் நடராசப் பெருமானால் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையை உடையது; பக்திச் சுவையும் இலக்கியச் சுவையும் கொண்டது; சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கப்பட்டது; சிறந்த சைவ சமயக் கருத்துக்கள் நிறைந்தது. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று இவரை மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழின்கண் புகழ்ந்து பாடியுள்ளமையால் இந்நூலின் பக்திப் பெருக்கு நன்கு விளங்கும்.

நூல்வகை: நூல்வகையில் இது வழி நூலாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவை இதற்கு முதல் நூல்களாம், இவையேயன்றித் தேவாரப் பாடல்கள், காரைக்காலம்மையார் பாடல்கள், திருமூலர் திருமந்திரம் முதலியவைகளையும், தாம் செவி வழியாகக் கேட்டுணர்ந்த வரலாறுகளையும் அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் இச்சிறந்த நூலை இயற்றினர்.

பூசலார் நாயனார் புராணம்

பூசலார் என்னும் சிவனடியாரது பழமையான வரலாற்றைக் கூறும் பகுதி என்பது இதன் பொருளாம். இது திருத்தொண்டர் புராணத்தின் இரண்டாங் காண்டத்தில், மன்னிய சீர்ச்சருக்கம் என்ற சருக்கத்தில் முதலாவதாக உள்ளது.

பாடப்பகுதிச் சுருக்கம்: தொண்டை நாட்டில் திருநின்றவூரில் அந்தணர் குலத்தில் பூசலார் நாயனார் என்பவர் அவதரித்தார். அவர் சிவபெருமானுடைய திருவடிகளிலேயே தம் சிந்தையினை வைத்தவர்; சிவனடியார்களுக்குச் செய்யுந்தொண்டே சிறந்ததெனக் கொண்டவராய் அவர்கட்குப் பொருள் கொடுத்து மகிழ்ந்தவர். இத்தன்மை

தாளாளன் என்பான் கடன்பட வாழ்பவன்.

வாய்ந்த இத்தொண்டர், சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் கட்டக் கருதி, செல்வம் இன்மையால் வருந்தி, பிறகு தம் கற்பனையாலேயே கட்டத் தொடங்கி, அதற்கு வேண்டிய செல்வம் முதலிய அனைத்தையும் மனத் தினாலேயே தேடிச் சேர்த்தனர். பிறகு ஒரு நன்னாளில் அடிப்படை அமைத்து, இரவும் பகலுந் தூங்காது, அக்கோயிலை மனத்தினாலேயே கட்டி முடித்தார். அவ்வாறு அகக்கோயில் செய்தமைத்த பூசலார், அக்கோயிலில் சிவபெருமானை பிரதிட்டை செய்யும் வண்ணம் நன்னாள் குறிப்பிட்டு அந்நாளை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

அக்காலத்தில் காடவ மன்னன் காஞ்சிபுரத்தில் கருங்கற்களைக் கொண்டு ஒரு கோயிலைக் கட்டுவித்து, அதில் குடமுழுக்குச் செய்விக்க ஒரு நன்னாளையுங் குறிப்பிட்டான். அந்நன்னாளுக்கு முதல் நாளில் கண்ணுதற் கடவுள் அவனது கனவில் காட்சியளித்து, யாம் பூசலாரது ஆலயத்திற்கு நாளைக்குப் போகப் போகின்றோம்; ஆதலின் நீ செய்ய எண்ணிய கும்பாபிடேகத்தை நாளைக்குச் செய்யாமல், வேறொரு நாளிற் செய்க என்று கூறி, பூசலாரது ஆலயத்தை அடைந்தார். இறைவன் உரைத்தமை கேட்ட மன்னவன் பூசலாரைக் காண வேண் டும் என்னுங் காதலால், திருநின்ற ஊருக்கு வந்தான்.

வந்த மன்னவன் அங்குள்ள சிலரால், பூசலார் ஆலயம் கட்ட வில்லை என்பதை அறிந்து, அந்தணரனைவரையும் அழைத்தான். அவர் களும் அவனது அழைப்பிற்கிணங்கி வந்து சேர்ந்தனர். அப்போது அரசன் அவர்களிடம் பூசலாரைப்பற்றி வினவ, அவர்களும் அவரை அழைத்துவரப் புறப்பட்டனர். அரசன் அவர்களைத் தடுத்து, பூசலார் உள்ள இடத்திற்குத் தானே புறப்பட்டுப் போய் அவரை வணங்கி, "பெரியீர்! நீர் அமைத்த கோயிலில் குடமுழுக்கு விழா இன்றைக் கென்று இறைவனால் கூறப்பெற்று, உண்மை வணக்குவதற்காக இங்கு வந்தேன். அந்தக் கோயில் எது?" என்று கேட்டனன். அப்போது பூசலார், தமது அகக்கோயிலை, ஆண்டவன் தாம் வீற்றிருக்கும் இட மாகக் கொண்டதை அரசன் மூலம் அறிந்து வியப்புற்று, பிறகு அம் மன்னனிடத்துத் தாம் மனத்தாற் கோயில் கட்டியதை அறிவித்தார். அதனைக் கேட்ட மன்னவன் மறுபடியும் பூசலாரை வணங்கிப் புகழ்ந்து, சேனையோடு தனது ஊர் போய்ச் சேர்ந்தான் பூசலாரும் தமது அகக் கோயிலில் அமர்ந்த சிவபெருமானுக்குப் பூசனை முதலியவற்றை மிகச் சிறப்பாகச் செய்து, பின்னர் அச்சிவபெருமானது திருவடி நீழலை அடைந்தார்.

1. தொண்டை நாட்டுத் தொல்பதி திருநின்ற ஊர்

பதவுரை

உலகினில் - இப்பூமியில்	என்றும் - எப்போதும்
ஒழுக்கம்-நல்லொழுக்கத்தினாலே	உயர் - சிறப்புற்றுள்ள

வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்.

பெரு - பெருமையினை அடைந்த
தொண்டை நாட்டு - தொண்டை நாட்டில்
நலம்மிகு - (மக்கள்) நன்மையை மிகுதியாக அடைதற்கு ஏதுவாகிய
சிறப்பின் மிக்க - சிறந்த செய்திகளை மிகுதியாக உரைக்கின்ற
நான்மறை - நான்கு வேதங்களும்
விளங்கும் - (அந்தணர் அனைவராலும் ஓதப்பெற்று) நன்றாக விளங்குகின்ற
மூதூர் - பழமை வாய்ந்த ஊராவது (யாதெனில்)
குலம் முதல் - உயர்ந்த குடியினுக்குத் தலைமையாக வேண்டியதான
சீலம் - நல்லொழுக்கமானது
என்றும் குறைவு இலா - எப்போதும் குறைவுபடாத
மறையோர் - அந்தணர்கள்
கொள்கை நிலவிய - கொள்கையோடு விளங்குவதற்கு இடமாக உள்ளதும்
செல்வம் மல்கி - (அதனால்) செல்வம் மிகுந்து
நிகழ்-பொருந்தியுள்ளதும் ஆகிய
திருநின்ற ஊராம் - திருநின்ற ஊராகும்.

கருத்துரை: தொண்டை நாட்டுத் தொல்பதியாகிய திருநின்ற ஊர், ஒழுக்கத்தில் உயர்ந்த அந்தணர்கள் வாழும் சிறந்த பதியாய்ச் செல்வததை மிகுதியாகக்கொண்டு விளங்கும்.

விளக்கவுரை

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்ற ஔவையார் வாக்கிற்கிணங்கத் தொண்டை நாடு சான்றோரை உடையது ஆகையால் ஆசிரியர் "உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டை நாடு" என்று கூறினார். 'தொண்டைமான்' என்ற அரசனால் ஆளப்பட்ட நாடு ஆதலின் தொண்டை நாடு எனப்பெற்றது என்பர். "ஒழுக்கம் உடைமை குடிமை" என்று திருவள்ளுவர் கூறியபடி உயர்ந்த குலத்தவனாக ஆவதற்குக் காரணமாக இருப்பது ஒழுக்கம் ஆதலின் "குலம் முதற் சீலம்" என்றார் சேக்கிழார். திருநின்ற ஊர், தின்னனூர் என்று இப்பொழுது வழங்குகிறது.

இலக்கணக் குறிப்பு: நலம்: பண்புப் பெயர். நான்மறை, மூதூர்: பண்புத் தொகைகள். இலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நிலவிய: பெயரெச்சம் மறையோர் கொள்கை: ஆறும் வேற்றுமைத் தொகை.

2. பூசலார் நாயனார் கல்வி கற்றுச் சிறந்து விளங்குதல்

பதவுரை

அப்பதி - அந்தத் திருநின்ற ஊரில்
அருமறை - அரிய வேதங்களை ஓதுகின்ற

ஈதற்குச் செய்க பொருளை.

மரபு - அந்தணர் குலம்
வாழ - நல்வாழ்வு பெற
வந்து - (தாம்) தோன்றி
சிந்தை தரும் - உள்ளத்தின் இடமாக உண்டாகின்ற
உணர்வு ஆன எல்லாம் - அறிவு ஆகிய யாவையும்
தம்பிரான் - தமது தலைவனாகிய சிவனது
கழல் மேல் சார - திருவடிகளினிடத்துப் பொருந்தி இருக்க
வரும் நெறி - வளருகின்ற தன்மையானது
மாறு அன்பு - குறைவு இல்லாத பக்தி
வளர்ந்து எழ - நாள் தோறும் வளர்ச்சி அடைந்து உயர
வளர்ந்து - (தாமும் நாள் தோறும) வளர்ச்சி எய்தி
வாய்மைப் பொருள் பெறு - உண்மைப் பொருளை உரைப்பதான
வேதம் - மறையும்
நீதிகலை - (அவ்வேதத்தில் சொல்லிய) முறைமையை விளக்கிக் கூறும் கலைகளும்
உணர் பொலிவின் - அறிந்து கொள்ளவல்ல கூரிய அறிவோடு
மிக்கார் - மேம்பட்டு விளங்குபவரானார் (பூசலார்).

கருத்துரை: பூசலார் நாயனார் திருநின்ற ஊரில் அந்தணர் குலத்தில் அவதரித்துப் பரமசிவனிடத்துப் பக்தி கொண்டு, பல கலைகளையும் படித்துச் சிறந்து விளங்கினார்.

விளக்கவுரை

அருமறை மரபு - அந்தணர் குலம். உயர்ந்த பக்தியை உடைய உத்தமர் ஒருவர் உதித்ததால் அந்த மரபிற்கே ஒரு சிறப்பு உண்டாகும் ஆதலால் "அருமறை மரபு வாழ" என்று ஆசிரியர் கூறினார். "வரும் நெறி மாறு அன்பு வளர்ந்து எழ வளர்ந்து" என்றதனால் பூசலார் தாம் வளர்வதைப்போல தமது பக்தியும் வளரப் பெற்றார் என்பது தெரிகின்றது. வேதத்தில் சொல்லிய பொருளனைத்தும் உண்மையே ஆகையால், "வாய்மைப் பொருள் பெறு வேதம்" எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: அருமறை: பண்புத் தொகை. கழல்: தானியாகு பெயர். மாறு: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வேதம் நீதிக்கலை: உம்மைத் தொகை. உணர் பொலிவு: வினைத்தொகை.

3. பூசலார் நாயனார் சிவாலயம் கட்டச் சிந்தித்தல்

பதவுரை

அடுப்பது - (நாம்) செய்வதற்குத் தக்கது
சிவன்பால் அன்பர்க்கு - சிவனது தொண்டர்க்கு
ஆர்பணி செய்தல் - நம்மால் ஆகிய தொண்டைச் செய்வதாகும்

என்றே - என்று முடிவு செய்து
கொடுப்பது - கொடுக்கக்கூடிய பொருளை
வகையும் தேடி - எல்லா வழிகளாலும் ஈட்டி
அவர் கொளக் கொடுத்து - அச்சிவனடியார்கள் பெற்றுக் கொள்ளுமாறு தந்து
இரு நிதி இன்மை - மிகுந்த பொருள் இல்லாமையை
எண்ணூர் - நினையாதவராய்,
கங்கை - கங்கை என்னும் ஆறு னது
மடு பொதி வேணி - ஒரு மடுவினைப்போலத் தங்கி நிறைவதற்கு இடமாகப் பொருந்திய சடாமுடியைக் கொண்ட
ஐயர் - தலைவராகிய சிவபெருமான்
மகிழ்ந்து உறைவதற்கு - மனங்களித்துத் தங்குவதற்குத் தக்க
ஓர் கோயில் - ஒரு கோயிலை
எடுப்பது - கட்டுவதனை
மனத்து கொண்டார் - தமது நெஞ்சத்தில் நினைத்தார்.

கருத்துரை: சிவனடியார்களுக்குத் தானஞ் செய்தலை மேற்கொண்டிருந்த பூசலார் நாயனார், தம்மிடத்துப் பொருள் இல்லாமையையும் எண்ணாமல், சிவபெருமான் மனங்களித்துத் தங்குமாறு ஒரு கோயில் கட்டக் கருதினார்.

விளக்கவுரை

இச்செய்யுளால் சிவனடியார்க்குச் செய்யுந்தொண்டே சிறந்தது என்பதனை உள்ளத்திற் கொண்டார் பூசலார் என்பதனை இனிதின் உணரலாம். இத்தொண்டினால், இன்பமும், அருவினையும், இயமனது பயமும் உண்டாகா.

கங்கை மடுப்பொதிவேணி என்பதிலடங்கிய வரலாறு: கபில முனிவரது சாபத்தால் சாம்பரான தன் மூதாதையரை நல்லுலகத்திற்கு ஏற்றும்பொருட்டு ஆகாயக் கங்கையைப் பகீரதன் பூமிக்குக் கொணரலானான். அப்பொழுது அதன் வேகத்தைத் தாங்கவேண்டுமென்று அப்பகீரதன் சிவனை வேண்ட, அவரும் அவனது வேண்டுகோட்கிணங்கி, அந்நதியைத் தம் சடைமுடியில் ஏற்றுப் பின்பு சிறிது சிறிதாகப் பூமியில் செல்லுமாறு விட்டார்.

இலக்கணக் குறிப்பு: செய்தல் - தொழிற் பெயர். கொள - கொள்ள என்பதன் தொகுத்தல் விகாரம். வேணி ஐயர்: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. கோ + இல் = கோவில்; "ஏனை உயிர் வழி வவ்வும்" என்னும் சூத்திர விதிப்படி வகர உடம்படு மெய்பெற்றது. 'கோயில்' என்பது கோவில் என்பதன் இலக்கணப் போலி. இருநிதி : பண்புத்தொகை. பொதி வேணி : வினைத்தொகை.

4. பூசலார் கோயில் கட்ட மனோபாவனையால் பொருளைச் சேர்த்தல்

பதவுரை

மனத்தினுல் கருதி - (ஆலயங் கட்ட) மனத்தில் நினைத்து
மா நிதி - மிகுந்த செல்வத்தை
எங்கும் - பல இடங்களிலும்
வருந்தி தேடி - வருந்திச் சேர்க்க எண்ணியும்
எனைத்தும் ஓர் பொருள் பேறு - மிகச் சிறிய செல்வமும்
இன்றி - இன்மையால்
என் செய்கேன் - என்ன செய்வேன்
என்று நைவார் - என்று வருந்துபவராகிய அப்பூசலார்
நினைப்பினுல் - (கோயிலை) மனோபாவனையால்
எடுக்க நேர்ந்து - திருமாணம் செய்வதற்கு உறுதிகொண்டு,
நிகழ்வுறு - பொருந்தியுள்ள
நிதியம் எல்லாம் - செல்வம் அனைத்தையும்
தினை துணை முதல் ஆ - தினையென்னும் மிகச் சிறிய அளவு முதற்கொண்டு (பெரிய அளவு வரையிலும்)
சிந்தையால் - நெஞ்சத்தினுலே
தேடி - ஈட்டி
திரட்டிக்கொண்டார் - தொகுத்து வைத்துக்கொண்டார்.

கருத்துரை: சிவாலயங் கட்ட எண்ணிய பூசலார், செல்வம் கிடைக்காமையால் வருந்திப் பிறகு மனோபாவனையால் ஆலயம் அமைக்க உறுதிகொண்டு, அவ்வாலயம் அமைப்பதற்கு வேண்டிய செல்வம் அனைத்தையும் சிந்தையினுலேயே தேடிச் சேர்த்தனர்.

விளக்கவுரை

எனைத்தும் ஓர் பொருள்: இத்தொடர்க்கு 'கோயில் கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள் பலவற்றுள் சிறிதும் ஒரு பொருள்' என்றும் பொருள் கூறலாம். தினை: மிகச் சிறியதற்கு எடுத்துக் காண்பிக்கும் ஓர் அளவையாம்; இதனைத் "தினைத்துணை நன்றி செயினும்" என்னும் வள்ளுவர் வாக்கால் அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: மாநிதி: உரிச் சொற்றொடர். பேறு: முதல் நிலை திரிந்த தொழிற் பெயர். ஆ: ஆக என்பதன் விகாரம். திரட்டி: திறள் என்பதனுடைய பிறவினையாகிய திரட்டு பகுதி. இன்றி: எதிர்மறை வினையெச்சம்.

5. அகத்திலேயே பூசலார் ஆலயம் அமைக்கத் தொடங்குதல்

பதவுரை

சாதனத்தோடு - (ஆலயம் கட்டுவதற்கு வேண்டிய கல் முதலிய) கருவிகளுடன்
தச்சர் தம்மையும் - (தொழிலாளர்களான) சிற்பிகளையும்

மனத்தால் தேடி - மனோபாவனையினால் ஆராய்ந்து
நாதனுக்கு - தலைவனாகிய சிவனுக்கு
ஆலயம் செய் - கோயில் கட்டத் தொடங்குதற்கேற்ற
நலம் பெறு - நன்மையோடு கூடிய
நல்நாள் கொண்டு - நல்ல நாளைப் பார்த்து வைத்துக் கொண்டு (அந்நன்னாளில்)
ஆதரித்து - பேரார்வம் கொண்டு
ஆகமத்தால் - ஆகமத்தில் சொல்லியவாறே
அடிநிலை பாரித்து - அத்திவாரத்தினைப் பரப்பி
கங்குல் போதும் கண்படாது - இரவிலும் உறங்காமல்
காதலில் - மிக ஆசையோடு
எடுக்கல் உற்றார் - (ஆலயம்) கட்டத் தொடங்குபவரானார்.

கருத்துரை: கோயில் கட்டுவதற்கு மண் முதலிய பொருள்களையும், சிற்பிகளையும் தேர்ந்தெடுத்து, ஒரு நன்னாளில் அத்திவாரம் அமைத்து, இரவிலுந் தூங்காது அக்கோயிலைக் கட்டலானார் பூசலார்.

விளக்கவுரை

ஆகமம்: சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட காமிகம் முதலிய சைவ ஆகமங்களாம். அடிநிலை என்றது அடிப்படையையாம். அன்பு என்று கூறியது இங்கே பக்தியைக் குறிக்கும்.

இலக்கணக் குறிப்பு: நலம்: பண்புப்பெயர். சாதனத்தோடு: 'ஓடு' என்பது மூன்றனுருபு. நன்னாள்: பண்புத்தொகை. கங்குற் போதும்: உம்மை இடைச்சொல், இறந்தது தழீஇய எச்சப் பொருளில் வந்துள்ளது.

6. பூசலாரின் உளக்கோயில் முற்றுப் பெறுதல்

பதவுரை

அடிமுதல் உபானம் ஆதி - அடிப்படை முதற்கொண்டு கீழ்ப்படை முதலாகிய
படிகள் எல்லாம் - அடுக்கடுக்காகச் செய்து அமைக்கவேண்டிய பகுதிகள் அனைத்தும்
வடிவு உறும் - எழில் பொருந்திய
தொழில்கள் முற்ற - வேலைப்பாடுகள் முடிவு பெறும் வண்ணம்.
மனத்தினால் வகுத்து - நெஞ்சத்தில் வகுத்துக்கொண்டு
மானம் முடிவு உரு - விமானத்திலே இறுதியாகப் பொருந்துகிற
சிகரம் தானும் - உச்சியினது பகுதியும்
முன்னரிய - நூல்களில் கூறியுள்ள
முழுத்தில் கொண்டு - முழுத்திலே செய்தமைத்து
நெடிது நாள் கூட - (இவ்வாறு கோயில் கட்ட) பன்னாட்கள் செல்ல
கோயில் நிரம்பிட - ஆலயத் திருப்பணி முற்றுப் பெறும் வண்ணம்
நினைவால் செய்தார் - மனோபாவத்தினாலேயே செய்தமைத்தார் (பூசலார்).

கருத்துரை: பூசலார், தம் உளக்கோயிலில் அடிப்படை முதலிய பல உறுப்புக்களும் அழகுடன் அமையுமாறு அமைத்து, கோயில் திருப்பணியைக் குறைவின்றிச் செய்து முடித்தார்.

விளக்கவுரை

உபானம்: பூமி மட்டத்திற்குமேல் எல்லாவற்றையுந் தாங்கும் சித்திரவரி. முழத்திற்கொண்டு என்பதற்கு 'அளவுப்படி அமைத்துக்கொண்டு' எனவும் பொருள் கூறலாம். சிகரம்: விமானத்தில் உள்ள உச்சிப் பகுதியாம்.

இலக்கணக் குறிப்பு: மானம்: விமானம் என்பதன் முதற்குறை விகாரம். கோயில்: கோவில் என்பதன் இலக்கணப் போலி. மனத்தினால்: ஆல் என்பது மூன்றும் வேற்றுமை உருபு. சிகரத்தானும்: உம்மை இடைச்சொல் இறந்தது தழீஇய எச்சப் பொருளில் வந்துள்ளது.

7. பூசலார் தமது அகக் கோயிலில் சிவபெருமானைப் பிரதிட்டை செய்தற்கேற்ற நன்னாள் குறித்தல் [இது முதல் மூன்று பாடல்கள் குளகமாம்].

பதவுரை

தூபியும் நட்டு-விமானக் கலசத்தையும் செய்தமைத்து,
மிக்க சுதையும் - உயர்ந்த சுண்ணம்பினைக் கொண்டு
நல்வினையும் செய்து - மேலான சித்திரம் முதலிய வேலைப்பாடுகளையும் செய்தமைத்து
கூவலும் அமைத்து - கிணற்றையும் செய்து முடித்து
மாடு - பக்கத்திலே
கோயில் சூழ் - ஆலயத்தைச் சூழ்ந்துள்ள
மதிலும் போக்கி - மதிலினையும் செய்தமைத்து
வாவியும் தொட்டு - சிறந்தகுளத்தையும் தோண்டியமைத்து
மற்றும் வேண்டுவ - இன்னும் வேண்டியன அனைத்தையும்
வகுத்து - செய்து முடித்து
சிவனுக்கு ஏற்க - சிவனுக்குப் பொருத்தமாக
மன்னும் தாபனம் - பொருந்திய பிரதிட்டை நியதியை
விதித்த - செய்தற்கெண்ணிய
நாள் சாரும் நாளில் - நல்ல நாள் வந்து சேர்கின்ற போதில்

கருத்துரை: பூசலார் தாம் மனோபாவனையால் கட்டிய கோயிலில் கிணறு முதலியவற்றை ஏற்படுத்தி, சிவபெருமானை அதில் பிரதிட்டை செய்தற்கேற்ற நன்னாள் குறிப்பிட்டு, அந்நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

விளக்கவுரை

"சுதையும் நல்வினையும் செய்து" என்று கூறியதால் பூசலார் மனத்தினால் கட்டிய கோயில் செங்கல்லினால் கட்டப்பட்ட கோயில் என்பது தெரிகின்றது. தாபனம்: பிரதிட்டை, கும்பாபிடேகம்.

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.

இலக்கணக் குறிப்பு : கல்வினை : பண்புத்தொகை. சூழ்மதில்: வினைத்தொகை. வேண்டுவ : பலவின்பால் வினையாலணையும் பெயர். தொட்டு : 'தொடு' என்பது பகுதி. இப்பாடல் குளகம் ஆகும். "குளகம் பல பாட்டு ஒரு வினை கொள்ளும்" என்பது இலக்கணம்.

8. கண்ணுதற் கடவுள் காடவர்கோன் கனவில் தோன்றுதல்

பதவுரை.

காடவர் கோமான் - காடவ மன்னன்
கச்சி - காஞ்சிபுரத்தில்
கல்தளி எடுத்து - கருங்கல்லினால் கோயிலைக் கட்டி
முற்ற - (அது) முடிந்ததனால்
மாடு எலாம் - ஆலயத்தின் பக்கத்திலுள்ள நிலத்தை எல்லாம்
சிவனுக்கு ஆக - கண்ணுதற் கடவுளுக்கு உதவும்வண்ணம்
பெரு செல்வம் - மிகுந்த செல்வத்தை
வகுத்தல் செய்வான் - ஏற்படுத்துகின்றவனாய்
மால் நாட - திருமால் என்ற கடவுளும் தேடிக் கண்டுபிடிக்க
அறியாதாரை - முடியாதவராகிய சிவபெருமானை
தாபிக்கும் - பிரதிட்டை செய்யுமாறு எண்ணிய
அ நாள் - அந்த நாளினது
முன் நாள் - முதல் தினத்தில்
ஏடு அலர் - இதழ்கள் விரியப்பெற்ற
கொன்றை வேய்ந்தார் - கொன்றைப் பூவைச் சூடிய சிவன்
இடை இரவு - நள்ளிரவில்
கனவில் எய்தி - (அம் மன்னனது) கனவில் வந்து தோன்றி

கருத்துரை: காடவ மன்னன் காஞ்சிபுரத்தில் கருங்கற்களைக் கொண்டு ஒரு கோயிலைக் கட்டுவித்தது. அதில் குடமுழுக்குச் செய்விக்கக் குறித்திருந்த நன்னாளுக்கு முன்னாளில் கண்ணுதற் கடவுள் அவனது கனவில் காட்சியளித்தார்.

விளக்கவுரை

காடவர் கோமான்: பல்லவ அரசன்; இவன் தன்னுடைய பொருளனைத்தையும் கண்ணுதற் கடவுளது திருத்தொண்டிற்கே உதவும்வண்ணம் செய்தமைத்த சிறப்புடையவன் என்பதனை இச்செய்யுளின் இரண்டாவது அடியினால் இனிதின் உணரலாம். கல்தளி: கல்லால் செய்த ஆலயம். மால்நாட அறியாதார் என்பதிலடங்கிய வரலாறு: தாமே முதற் கடவுள் என்ற கருத்தினால் போர் தொடங்கிய பிரமன், திருமால் ஆகியவர்களின் மாறுபாட்டைப் போக்கும் பொருட்டு அவர்களுக்கு நடுவில் சிவபெருமான் பெரிய நெருப்பு மலையாய்த் தோன்றி, இதன் அடிமுடிகளை முதலில் கண்டவரே முதல்வர் என்று கூற பிரமன் அன்னப் பறவை வடிவமாயும், திருமால் பன்றி உருவமாயும் அதன் முடி அடிகளை பலகால் தேடியும் காணாது திகைத்தனர்.

மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்.

இலக்கணக் குறிப்பு: காடவர் கோமான்: நான்காம் வேற்றுமைத் தொகை. செய்வான்: 'வான்': ஈற்று எதிர்கால வினையெச்சம், கச்சி: காஞ்சி என்பதன் விகாரம். அறியாதாரை: வினையாலணையும் பெயர். அலர் கொன்றை: வினைத் தொகை. கொன்றை: பொருளாகு பெயர். கற்றளி: கல்+தளி. முன்னாள்: முன்+நாள். இப்பாடலும் குளகம்.

9. பூசலார் மனத்தாற் கட்டிய ஆலயத்தில் நாளை போகப் போகின்றோம் என்று இறைவன் அரசனது கனவில் கூறுதல்

பதவுரை

கொன்றைவார் சடையார் - கொன்றைப்பூவை யணிந்த நீளமான சடையை உடைய சிவன்
நின்ற ஊர் - திருநின்ற ஊரில் வசிக்கின்ற
பூசல் அன்பன் - பூசலார் என்ற நமது பக்தன்
நெடிது நாள் - பன்னாட்களாக
நினைந்து செய்த - மனத்தாற் கட்டிய
நன்று நீடு - சிறப்பால் உயர்ந்துள்ள
ஆலயத்து - கோயிலினுள்
நாளை - நாளைக்கு
நாம் புகுவோம் - நாம் போகப் போகின்றோம் (ஆதலால்)
நீ இங்கு ஒன்றிய - (நீ இந்தக் காஞ்சிபுரத்தில (குடமுழுக்குச் செய்வதாகச்) சம்மதித்த
செயலை - செய்கையினை
நாளை ஒழிந்து - நாளைக்குச் செய்யாமல் விடுத்து
பின் கொள்வாய் - பின்னர் ஒரு நாள் நடத்திக்கொள்வாய்
என்று - என்று கூறி
தொண்டர் கோயில் - அடியவராகிய பூசலாரது ஆலயத்தை
கொண்டருள - ஏற்றுக் கொண்டருளுமாறு
போந்தார் - சென்றருளினார்.

கருத்துரை: காடவர்கோனது கனவில் தோன்றிய இறைவனார் "யாம் பூசலாரது ஆலயத்தில் நாளைக்குப் போகப் போகின்றோம்; ஆதலின், நீ செய்ய எண்ணிய கும்பாபிடேகத்தை நாளைக்குச் செய்யாமல் வேறொரு நாளில் செய்க" என்று கூறிப் பூசலாரது ஆலயத்தை அடைந்தார்.

விளக்கவுரை

"நன்று நீடு ஆலயம்" என்று சிவபெருமான் கூறியதால் பூசலார் மனத்தால் நிருமித்த ஆலயத்தில் ஆண்டவன் மிகுந்த ஆசை கொண்டான் என்பது இனிதின் விளங்குகிறது.

இலக்கணக் குறிப்பு: நாளை: எதிர்காலங் காட்டும் இடைச்சொல்; கொள்வாய்: முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று. சடையார்: வினையாலணையும் பெயர். தொண்டர் கோயில்: ஆறும் வேற்றுமைத் தொகை. போந்தார்: போ - பகுதி, த் - இடைநிலை, த் - சந்தி, ந் - விகாரம், ஆர் - விகுதி.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.

10. துயிலொழிந்த மன்னன் பூசலாரைத் தொழுதற்குத் திருநின்ற ஊரை அடைதல்

பதவுரை

தூயோன் - தூய்மையை உடைய வனாகிய சிவன்
தொண்டரை - (பூசலார் என்ற) தொண்டரின் சிறப்பினை
விளக்க - உலகோர்க்கு நன்றாகத் தெரிவிக்கும்பொருட்டு
அருள் செய - (இவ்வாறு) கூறி யருள
திண் திறல் மன்னன் - மிக்க ஆற்றலை உடைய அரசன்
துயிலை நீங்கி - தனது தூக்கத்தை விடுத்து
நான் - நான்
அந்தத் திருப்பணி செய்தார் தம்மை - அந்தக் கோயில் திருப் பணி செய்தவரை
கண்டு வணங்க வேண்டும் - கண்டு தொழ வேண்டும்
என்று எழும் - என்று மனத்தில் மிகுதியாக உண்டாகிய
காதலோடும் - மிகுந்த ஆசை யோடும்
தண்டலை சூழல் - சோலைகளின் தொகுதிகள்
சூழ்ந்த - சூழ்ந்துள்ள
நின்ற ஊர் வந்து சார்ந்தான் - திரு நின்ற ஊர் வந்து சேர்ந்த னன்.

கருத்துரை : மன்னவன் பூசலாரைக் கண்டு வணங்க வேண்டும் என்னும் காதலால் திருநின்ற ஊருக்கு வந்து சேர்ந்தான்.

விளக்கவுரை

பூசலாரது பக்திப் பெருமையை விளக்குவதற்காகவே சிவபெருமான் காடவ அரசனது கனவில் அவரைப் பற்றிக் கூறினார்.

இலக்கணக் குறிப்பு : தூயோன் : குறிப்பு வினையாலணையும் பெயர். துயில் : முதல் நிலைத் தொழிற் பெயர். திண் திறல் : ஒரு பொருட் பன்மொழி. தண்டலை : பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. நான் : தன்மை ஒருமைப் பெயர். எழுங் காதல் : பெயரெச்சத் தொடர்.

11. அரசன் பூசலார் அமைத்த ஆலயம் எது என்று அவ்வூராரைக் கேட்டல்

பதவுரை

வேந்தன் - மன்னன்
அப்பதி அடைந்து - அந்தத் திரு நின்ற ஊரை அடைந்து
இங்கு - இவ்வூரில்
பூசல் அன்பர் அமைத்த - பூச லார் என்ற தொண்டர் கட்டு வித்த

கோயில் எ புடையது - ஆலயம் எங்குள்ளது
என்று அங்கண் எய்திஞர் தம்மை - என்று அங்குள்ளவரை
கேட்க - வினவ (அவர்கள்)
செப்பிய பூசல் - நீர் சொல்லிய பூசலார் என்பவர்
ஒன்று கோயில் - ஒரு ஆலயத்தையும்
செய்தது இல்லை - கட்டி முடித்தது இல்லை
என்றூர் - என்று கூறினர் (அதனைக் கேட்ட அவ்வரசன்)
மெய்பெறு - மெய்யானவற்றைத் தெரிவிக்கின்ற
மறையோரெல்லாம் - சிறந்த மறைகளில் வல்ல அந்தணர்கள் யாவரும்
வருக என்று - இங்கு வருவார்களாக என்று
உரைத்தான் - மொழிந்தான்.

கருத்துரை : திருநின்ற ஊரை அடைந்த மன்னன் அங்குள்ள சிலரால் பூசலார் ஆலயம் கட்டவில்லை என்பதை யறிந்து, அந்தணர் அனைவரும் வருக என்று அழைத்தனன்.

விளக்கவுரை

மெய் பெறு மறையோர்: இத்தொடர்க்கு 'உண்மையினுல் மிகுந்த பெருமையை அடைந்துள்ள அந்தணர்' என்று சிலர் பொருள் கூறுவர்.

இலக்கணக் குறிப்பு: அமைந்த கோயில்: பெயரெச்சத் தொடர். புடையது: ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. இல்லை: குறிப்பு வினைமுற்று. வருக: வியங்கோள் வினைமுற்று.

12. பூசலார் உள்ள இடத்திற்குப் புரவலன் போதல்

பதவுரை

பூசுரர் எல்லாம் வந்து - அந்தணர் அனைவரும் வந்து
புரவலன் தன்னைக் காண - அரசனைப் பார்த்த பொழுது
வெய்ய வேலான் - கொடுமை வாய்ந்த வேலை உடைய அவ்வரசன் (அவர்களைப் பார்த்து)
மாசு இலா பூசலார் தாம் - குற்றமில்லாத பூசலார் என்ற பெரியார்
ஆர் என வினவ - யார் என்று கேட்க
மறையோர் எல்லாம் - (அங்கு வந்து சேர்ந்த) அந்தணர்கள் அனைவரும்
ஆசு இல் வேதியன் - குற்றமில்லாத அந்தணராகிய பூசலார்
இ ஊரான் - இந்த ஊரில் உள்ளவன்
என்று - என்று உரைத்து (பூசலாரை அழைக்கப் புறப்பட)
அவர் - அந்த மறையவர்கள்
அழைக்க ஒட்டாது - அழைத்து வருவதற்குச் சம்மதியாமல்
ஈசனுர் - சிவனது
அன்பர் தம்பால் - அடியவராகிய பூசலார் தங்கியுள்ள இடத்திற்கு
எய்திறுன் - சென்றுன்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா.

கருத்துரை: அரசன் அங்கு வந்தடைந்த அந்தணர்களை நோக்கிப் பூசலாரைப்பற்றி வினவ, அவர்களும் அவரை அழைத்து வரப் புறப்பட்டனர். அரசன் அவர்களைத் தடுத்துப் பூசலார் உள்ள இடத்திற்குத் தானே புறப்பட்டுப் போனான்.

விளக்கவுரை

புரவலன்: காத்தல் தொழிலிலே ஆற்றல் உள்ளவன்; காத்தலில் வல்லவன்: அரசன்.

இலக்கணக் குறிப்பு: இலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தம்பால்: ஏழன் உருபு. வெய்ய: குறிப்புப் பெயரெச்சம்.

13. அரசன் தான் வந்த காரணத்தைப் பூசலாரிடம் அறிவித்தல்

பதவுரை

தொண்டரை - அடியவராகிய பூசலாரை
சென்று கண்ட - போய்ப் பார்த்த
மன்னவன் தொழுது - காடவ மன்னன் வணங்கி
நீர் இங்கு - நீங்கள் இவ்வூரில்
எண்திசையோரும் ஏத்த - எட்டுத் திக்கில் உள்ளாரும் சிறப்பித்துக் கொண்டாட
எடுத்த ஆலயம் யாது - கட்டியமைத்த கோயில் எது
இங்கு - இந்தக் கோயிலில்
அண்டர் நாயகரை - தேவர்களுக்குத் தலைவராகிய சிவனை
தாபித்து அருளும் நாள் - பிரதிட்டை செய்தருளும் நாள்
இன்று என்று - இன்றேயாகும் என்று
கண்ணுதல் அருள் பெற்று - நெற்றியில் கண்ணை உடைய சிவனால் அருளிச் செய்யப்பட்டதனால்
உம்மைக் கண்டு - உம்மைப் பார்த்து
அடிபணிய - அடிகளில் வீழ்ந்து வணங்குமாறு
வந்தேன் என்றான் - வந்தேன் என்று கூறினான்.

கருத்துரை: பூசலார் உள்ள இடத்தை அடைந்த அரசன் அவரை நோக்கி, 'நீர் அமைத்த கோயிலில் குடமுழுக்கு விழா இன்றைக்கென்று இறைவனால் கூறப்பெற்று, உம்மை வணங்குவதற்காக இங்கு வந்தேன். அந்தக் கோயில் எது?' என்று கேட்டான்.

விளக்கவுரை

இச்செய்யுளால், அடியவர் பெருமையை அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: அண்டர் நாயகர்: நான்காம் வேற்றுமைத் தொகை. வந்தேன்: தன்மை ஒருமை வினைமுற்று. கண்ணுதல்: வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. தான்: அசை. எட்டு + திசை = எண்டிசை.

நன்றே செயினும் இன்றே செய்க.

14. பூசலார் தாம் ஆலயம் எடுத்த வகையினை அறிவித்தல்

பதவுரை

மன்னவன் உரைப்பக் கேட்ட - அரசன் மொழிந்ததைக் கேட்ட
அன்பர் - அடியவரான பூசலார்
மருண்டு நோக்கி - திகைத்து அவனைப் பார்த்து
என்னை ஓர் பொருள் ஆ கொண்டு - சிறியனாகிய என்னையும் ஒரு பொருளாக நினைத்து
எம்பிரான் அருள் செய்தாரேல் - எம்பெருமானாகிய சிவன் மொழிந்தருளுவாரானால்
முன் வரும் - முன்னே ஆலயம் கட்டுதற்கு வேண்டிய
நிதி இலாமை - பொருள் இன்மையால்
மனத்தினால் முயன்ற - (நான்) நெஞ்சத்தினாலே முயற்சி செய்து கட்டிய
கோயில் - ஆலயத்தின் இயல்பு
இன்னது ஆம் - இவ்வாறு (சிவன் ஏற்குமாறு) ஆகும் போலும்!
என்று சிந்தித்து - என்று எண்ணி
எடுத்த ஆறு - ஆலயம் கட்டிய இயல்பினை
எடுத்துச் சொன்னார் - விளக்கமாக எடுத்து மொழிந்தார்.

கருத்துரை: பூசலார் தமது ஆலயத்தைச் சிவபெருமான் வீற்றிருக்குமிடமாகக் கொண்டதை அரசன்மூலம் அறிந்து வியப்புற்றுப் பிறகு, அம்மன்னனிடத்துத் தாம் மனத்தாற் கோயில் கட்டியமையை அறிவித்தனர்.

விளக்கவுரை

இதனால் பூசலாரின் உண்மைப் பேசும் தன்மையினை அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: கேட்ட அன்பர் - பெயரெச்சத் தொடர். தாம்: அசை.

15. புரவலன் பூசலாரை வணங்கித் தனது ஊருக்குப் போதல்

பதவுரை

அரசனும் - காடவ மன்னனும்
அதனைக் கேட்டு - (பூசலார் மொழிந்த) அம் மொழியினைக் கேட்டு
அங்கு அதிசயம் எய்தி - அப்போது வியப்பை அடைந்து
புரையறு சிந்தை அன்பர் - குற்றமில்லாத நெஞ்சத்தோடு கூடிய பூசலாரின்
பெருமை என்னே! - சிறப்புத் தான் என்னே!
என்று - என்று பாராட்டி,
அவரைப் போற்றி - அந்த அடியாரைப் புகழ்ந்துவிட்டு
விரை செறி - வாசனை மிகுந்துள்ள
மாலை தாழ - பூமாலை தாழ்ந்து தொங்கும்படி
நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து - பூமியிலே விழுந்து கும்பிட்டு

இன்றே செயினும் இன்னே செய்க.

முரசு எறிதானையோடும் - முரசு அடிக்கப்படுகின்ற தனது படையுடனே
மீண்டு - மறுபடியும்
தன் முதுஊர் புக்கான் - தனது பழமையான ஊரை அடைந்தான்.

கருத்துரை: பூசலாரை வணங்கிப் புகழ்ந்த புரவலன் சேனையோடு தனது ஊரை அடைந்தான்.

விளக்கவுரை

முரசு என்றது இங்கு வெற்றி முரசைக் குறிக்குமென்பர்.

இலக்கணக் குறிப்பு: செறிமாலை, எறிதானை: வினைத் தொகைகள். முதுமை + ஊர் = மூதூர்: பண்புத் தொகை. நிலை: காரணப் பெயர். நிலமிசை: 'மிசை' என்பது ஏழன் உருபு.

16. பூசலார் தமது அகக் கோயிலில் அமைந்துள்ள ஆண்டவனைத் தொழுது அவனடி சேர்தல்

பதவுரை

அன்பரும் - அடியவராகிய பூசலாரும்
நல் பெரு பொழுது சார - குறிப்பிட்ட மிகவும் உயர்ந்த நல்ல வேளை வந்தவுடன்
சிந்தை அமைத்த ஆலயத்து - நெஞ்சத்தினுள்ளே செய்தமைத்த கோயிலில்
அரனார் தம்மை - சிவனை
தாபித்து - பிரதிட்டை செய்து
பின்பு - பின்னர்
பல நாள் - பல காலம்
பூசனைகள் எல்லாம் - பூசைகள் அனைத்தையும்
நலத்தினோடும் - திருவிழாக்களோடு
பெருமையில் - பெருமையாக
பேணி - ஆர்வத்தோடு நடத்தி (இனிதிருந்து அதன் பிறகு)
பொன் புனை மன்றுள் ஆடும் - கனக சபையில் தாண்டவம் செய்கின்ற சிவனது
பொன் கழல் நீழல் - பொன்னால் செய்யப்பட்ட வீரக் கழலைத் தரித்த திருவடிகளின் நீழலை
புக்கார் - அடைந்தார்.

கருத்துரை: பூசலார் தமது அகக் கோயிலில் அமர்ந்த சிவபெருமானுக்குப் பூசனை முதலியவற்றை மிகச் சிறப்பாகச் செய்து பின்னர் அவரது திருவடி நீழலை அடைந்தார்.

விளக்கவுரை

நலம் - திருவிழாக்கள். பூசனைகள் - நாள்தோறும் நடக்கும் பூசைகள். இப்பகுதியால், பூசலார் நாயனார் தமது அகத்திற்குள்ளேயே கொண்டிருந்த சிறந்த சிவபக்தியை உலகத்தார் அறியும்படி ஆண்டவன் அறிவித்தார் என்ற உண்மையினை அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: நீழல்: நிழலென்பதன் விகாரம். புனைமன்று: வினைத்தொகை. பொற்சூல்: மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

நல்லொழுக்கப் பயிற்சி

'இறைவனார் எங்குள்ளார்?' என்னும் வினவிற்குப் பூசலார் நாயனார் புராணம் தக்க விடையளிக்கின்றது. "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்பர் பெரியோர். கடவுள் இடமாகத் தங்குதற்குரிய மனம் தூய்மையாக இருக்க வேண்டும். "அகத் தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்று வள்ளுவனார் கூறியதைக் கருத்தில் இருத்தி, வாய்மை பேசி, தீய நினைவுகளை அகற்றின் அங்குக் கடவுள் தங்குவார் என்பது திண்ணம்.

---

4. குசேலோபாக்கியானம்

பெயர்க் காரணம்: *குசேல + உபாக்கியனம். குசேலோபாக்கியானம், குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது இதன் பொருள். குசேலன், கிழிந்த ஆடையை அணிந்தவன். உபாக்கியானம்: கிளைக் கதை. பாகவதம் என்ற கண்ணபிரானின் வரலாற்றைக் கூறும் நூலில் இது கிளைக் கதையாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்கதையே விரிவாக எழுதப்பட்ட நூலாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது.*

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: *வல்லூர்த் தேவராசப் பிள்ளை.*

தந்தையார்: *வீராசாமிப் பிள்ளை.*

ஊர்: *தொண்டை நாட்டில் உள்ள வல்லூர்.*

மரபு: *கருணீகர் மரபு (கணக்காயர்).*

காலம்: *சுமார் நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்.*

நூலின் பெருமை: *இந்நூலாசிரியர் பாகவதத்தில் உள்ள குசேலர் சரித்திரத்தையும், தெலுங்கு மொழியில் வரகவி என்பவர் இயற்றிய குசேலோபாக்கியானத்தையும், தழுவித் தமிழில் ஒன்பான் சுவையும் அமைய இந்நூலை 773 பாடல்களால் பாடியுள்ளார். இந்நூல் சொற்சுவை, பொருட் சுவைகளுடன் கற்பவர்க்கு எளிமையும் இனிமையும் அமைந்தது. இந்நூல், 'மனைவி, கணவனை, எத்தகைய நிலையிலும் வெறுத்தல் கூடாது. பயனை விரும்பாது இறைவனிடம் பக்தி*

ஈயென இரத்தல் இழிந்ததாகும்.

செலுத்த வேண்டும். பெருஞ்செல்வராய் இருந்தும் மக்கள் தம்முடைய இயல்பிலிருந்து மாறக் கூடாது.' என்பன போன்ற உண்மைகளைச் சுசீலை, குசேலர், கண்ணபிரான் ஆகியவர்களைக் கொண்டு முறையே விளக்கிக் காட்டும் அரிய நூலாம்.

இது (1) குசேலர் மேல் கடலடைந்த அத்தியாயம், (2) குசேலர் கர்ப்புறமடைந்த அத்தியாயம் (?) குசேலர் வைகுந்தமடைந்த அத்தியாயம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாடப் பகுதி முதற் பிரிவில் வருதுள்ளது.

1. செல்வத்தை வெறுக்கை என்றுரைக்கக்காரணம்

பதவுரை

பொரு அரு - ஒப்பில்லாத
பந்தம் எல்லாம் - பற்றுக்கள் அனைத்தையும்
புணர்த்திடும் - சேர்த்துவிடும்
தெய்வ சிந்தை - தெய்வத்தைப் பற்றிய எண்ணம்
ஒருவ - அகலும்படி
மேல் இட்டு நிற்கும்-மேலோங்கி நிற்கும்
உறக்கமும் - தூக்கமும்
இறக்கச் செய்யும் - நீங்குமாறு செய்யும்
கருவின் உள்புகுத்தும் - பிறவியைத் தரும்
இன்ன - இத்தன்மை வாய்ந்த
கரிசு - குறைகள்
கண்டதனுல் அன்றே - (இந்தச் செல்வத்தினிடத்து) காணப்படுவதனுல் அல்லவோ
புலமை சான்றோர் - அறிவால் நிறைந்த ஆன்றோர்
இருநிலத்து இடை - பெரிய மண்ணுலகத்தில்
வெறுக்கை என்மனுர் - (இதனை) வெறுக்கையென்று கூறுவர்.

கருத்துரை: ஆசையை உண்டாக்கி, தெய்வத்தைப்பற்றிய எண்ணத்தை ஒழித்துப் பலவகைத் துன்பங்களையும் உண்டாக்குதலால் செல்வத்தை வெறுக்கை என்பர் பெரியோசர்.

விளக்கவுரை

பற்றுக்கள் அனைத்தையும் உண்டாக்குவதற்குக் காரணமாக இருத்தலின் செல்வத்தை ஆசிரியர், "பொரு அரு பந்தமெல்லாம் புணர்த்திடும்" என்று கூறினார் "செல்வம் வந்துற்ற காலை தெய்வமும் சிறிது பேணுர்" ஆதலின் "தெய்வ சிந்தை ஒருவ மேல் இட்டு நிற்கும்" என்றார். நீக்கத் தக்கது என்னும் நினைப்பை உட்கொண்டு திருமணத்தைக் 'கடி' என்று கூறியதைப்போல, வெறுக்கத் தக்கது என்னும் பொருளினை எண்ணிச் செல்வத்தை "வெறுக்கை யென்மனுர் புலமை சான்றோர்" என்றார். வெறுக்கை: வெறுக்கத்தக்கது என்னும் பொருளை உடையது செல்வம்.

ஈயேன் என்றல் அதனினும் இழிவே.

இலக்கணக் குறிப்பு : தெய்வ சிந்தை : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. உறக்கம் : தொழிற் பெயர். இருநிலம் : பண்புத்தொகை. உம் : இடைச்சொல் எண்ணும் பொருளில் வந்துள்ளது.

2. செல்வத்தின் இழிவு

பதவுரை

சிறியரே மதிக்கும் - கீழ் மக்களே சிறந்ததென்று எண்ணு தற்குரிய
இந்த செல்வம் - இந்தப் பொருள்
வந்து உற்ற - வந்து பொருந்திய
ஞான்றே - காலத்திலே
வறிய - பயனில்லாத
புல் செருக்கு - அற்பமாகிய கர்வத்தினாலே
மூடி - மூடப்பட்டு
வாய் உள்ளார் - வாயினை உடையார்
மூகர் ஆவர் - ஊமையர் ஆவர்
பறி அணி - பொன்னாலாகிய ஆபரணத்தை அணிந்த
செவி உளாரும் - காதுள்ளவர்களும்
பயில்தரு - மிக்க
செவிடர் ஆவர் - செவிடராவார்கள்
குறிபெறு - குறிக்கும் பொருளினை அடைவதற்குரிய
கண் உளாரும் - விழி உள்ளாரும்
குருடராய் முடிவர் - கண் தெரியாதவர் ஆவர்.

கருத்துரை : செல்வத்தினை அடைந்தோர் ஊமையர் போலவும், செவிடர் போலவும், குருடர் போலவும் ஆவார்கள்.

விளக்கவுரை

செல்வச் செருக்கினால் வாய் திறந்து உரையாடாமல், சென்னியையும் கையினையும் அசைத்துத் தம்முடைய மனக்கருத்தினை வெளிப்படுத்துவர் செல்வர் ஆதலின் "செருக்கு மூடிவாய் உள்ளார் மூகராவர்" என்று ஆசிரியர் கூறினார். 'இப்படிப்பட்டவர்; இச்சிறப்பினை உடையவர்' என்று பிறரைக் கவனித்துப் பார்க்கமாட்டார் செல்வர் ஆதலின் "குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவர்" என்று கூறினார் ஆசிரியர்.

இலக்கணக் குறிப்பு : சிறியரே : 'ஏ' என்னும் இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் வந்துள்ளது. ஞான்றே : 'ஏ' என்னும் இடைச்சொல், தேற்றப் பொருளில் வந்துள்ளது. புன்செருக்கு : பண்புத்தொகை. பறி : காரண ஆகு பெயர். அணி செவி : வினைத்தொகை. அன்று, ஏ : அசைகள்.

3. பொருளைச் செல்வம் என்றுரைக்கக் காரணம்

பதவுரை

பாவாய் - சித்திரப் பதுமை போன்றவளே !
பல் கதிர் – பலவகைக் கதிர்களை

விரித்து தோன்றி - பரப்பி உதித்து
பாடு செய் - மறைதலைச் செய்கின்ற
கதிரே போல - கதிரவனைப்போல
மல்லல் நீர் - வளப்பம் பொருந்திய கடல் சூழ்ந்த
உலகில் - மண்ணுலகத்தில்
தோன்றி மறைந்திடும் - உதித்து இறந்துபடுகின்ற
நும்மை விட்டு - உங்களை விட்டு
செல்வம் என்று - போவோம் என்று
உறுவதற்கும் - பொருந்தியிருப்பதற்கும்
செல்வம் என்று உரைக்கும் - செல்வம் என்று கூறுகின்ற
பேர் நன்று - பெயர் அழகினை உடையது
அல்லலை விளைவிப்பது - துன்பத்தினை விளைவிப்பது
அரும் பெறல் - பெறுதற்கரிய
செல்வம் - செல்வமானது
ஆகாது - மிகப் பொல்லாதது.

கருத்துரை: மக்களைப் பார்த்து, 'தோன்றி மறையும் உங்களை விட்டு யாம் சென்று விடுவோம்' என்பதால் பொருளிற்குச் செல்வம் என்னும் பெயர் உண்டானது.

விளக்கவுரை

வளங்கள் எல்லாவற்றிற்கும் கடலே காரணமாக இருப்பதால், மல்லல் நீர் என்பது கடலைக் குறிப்பதாகும். இப்பாட்டின் முதலிரண்டு அடிகளில் உவமை அணி அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு: இப்பாட்டில் வந்துள்ள செல்வம் என்னும் சொல் இரண்டினுள் முன்னேயுள்ளது எதிர்காலத் தன்மைப் பன்மை வினைமுற்று; பின்னேயுள்ளது காரண இடுகுறிப் பெயர். கதிர் விரித்து: இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஆகாது: எதிர்மறை வினைமுற்று. நன்று: குறிப்பு வினைமுற்று.

4. சிரீச்செல்வம் இன்னதெனமொழிதல்

பதவுரை

மது மடை உடைத்து - தேன் மடையினை உடைத்துக் கொண்டு
பாயும் - பாய்கிற
வனம் - அழகினை உடைய
துழாய் கண்ணி வேய்ந்து - திருத்துழாய் மாலையைச் சூடி
விது முகம் - முழுமதிபோன்ற முகத்தை யுடைய
பதுமை - இலக்குமி
செங்கை - (தன்னுடைய) சிவந்த கரத்தினால்
மெல்லென வருட் - மெதுவாகத் தடவுதலால்
சேந்து - செந்நிறமடைந்து,
கதுமென - விரைவாக
கருதும் அன்பர் - (தன்னை) எண்ணுகின்ற அன்பர்களது
கருத்தினுள் புகுந்து - நெஞ்சகத்தினுள்ளே புகுந்து

வாழும் - வாழ்கின்ற
முதுமறை - பழமையாகிய வேதத்தால் சிறப்பித்துக் கூறப் படுகின்ற
பெருமான் - எமது தலைவனாகிய திருமாலினது
பாதம் பெறுதலே - திருவடியை அடைதலே
மூரிச் செல்வம் - பெருமையினை உடைய செல்வமாகும்.

கருத்துரை: திருத்துழாய் மாலையை அணிந்து, தன்னை எண்ணு கின்ற அன்பரது அகத்திலே விரைந்து சென்று வாழ்பவனாகிய திருமாலது திருவடியினைப் பெறுதலே பெருஞ் செல்வமாம்.

விளக்கவுரை: வேதம் ஆண்டவனைப்போலத் தொன்று தொட்டு உள்ளதால் "முதுமறை" என்றார் ஆசிரியர். திருமாலின் திருவடி மிகவும் மென்மை வாய்ந்தது என்பதனை ஆசிரியர் "விதுமுகப் பதுமை செங்கை மெல்லென வருடச் சேந்து" என்றதனால் விளக் கிக் கூறினார். இறைவனது அன்பின் சிறப்பை, "கதுமெனக் கருது மன்பர் கருத்தினுட் புகுந்து வாழும்" என்னும் தொடரால் நன்கு அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: விதுமுகம் - உவமத் தொகை. சேர்ந்து: வினையெச்சம். கதுமென விரைவுக் குறிப்பினை. உணர்த்தும் இடைச்சொல். மூரி: பண்புப் பெயர். செங்கை: முது மறை பண்புத் தொகைகள். கருதும் அன்பர்: பெயரெச்சத் தொடர். பெறுதல்: தொழிற்பெயர்.

நல்லொழுக்கப் பயிற்சி

செல்வம் நிலையாது என்பதனை இப்பகுதியால் நீங்கள் நன்கு உணரலாம். "செல்வத்துப் பயனே ஈதல்" என்று ஆன்றோர் கூறியுள்ளனர். எனவே, செல்வர், தம் செல் வத்தை வறியவர்கட்கு உதவ வேண்டும். ஏழை மாணவர் கட்குச் செல்வமிக்க மாணவர்கள் தங்களாலியன்றவளவு உதவி செய்தல்வேண்டும். புத்தகங்கள் கடன் கொடுத்து உதவுதல், எழுது கருவிகள் அளித்தல் முதலியன மாண வர்கள் செய்யக்கூடிய உதவிகள் ஆவன.

5. பாஞ்சாலி சபதம்

பெயர்க் காரணம்: இது பாஞ்சால தேசத்து அரசன் மகளும், பாண்டவரின் மனைவியுமான பாஞ்சாலி (திரௌபதி) துரியோதனனால் அரசவைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, துச்சாதனனால் துகிலுரியப்பட்டபோது சினந்து கூறிய சபதத்தினை விளக்கும் ஒரு காப்பியமாகும். மகாபாரதத்தில் வரும் இக்கதைப் பகுதி மட்டும் ஒரு காப்பியமாகப் பாடப்பட்டுள்ளது.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: வரகவி. சுப்பிரமணிய பாரதியார்.

பிறப்பிடம்: எட்டயபுரம்.

தந்தை: சின்னசாமி ஐயர்.

தாய்: இலக்குமி அம்மாள்.

குலம்: அந்தணர்.

காலம்: 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

கல்வி: தம் தந்தையார் சமஸ்தான வித்துவானாக இருந்த எட்டயபுரத்தில் பாரதியார் இளமையில் சில காலம் கல்வி பயின்றார்; பின்னர், திருநெல்வேலியில் ஆங்கிலக் கல்வி கற்றார். ஆயினும் இவரது மனம் ஆங்கிலக் கல்வியில் ஈடுபடவில்லை. திடீரென்று இவர் தந்தையார் காலமாயினமையால், காசியிலிருந்த தம் உறவினரோடிருந்து, வடமொழியையும் பயின்று, முதல்வராகத் தேறினார். அங்கு நீண்ட காலம் தங்காமல் இவர் மீண்டும் எட்டயபுரம் திரும்பினார்.

ஆசிரியரது பெயர்க் காரணம்: இவர் பன்னிரண்டாம் வயதிலேயே கவிபாடும் திறமையுற்றிருந்தார். புலவர் ஒருவர் இவரது திறமையை வியந்து, "நீ சாதாரணமானவன் அல்லன்! நீ ஒரு பாரதியே" என்று புகழ்ந்தமையால் அன்று முதல் இப்பெயர் பெற்றார்.

ஆசிரியரது வாழ்க்கை: இவர் சிலகாலம் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராக இருந்தார். பின்னர், 'இந்தியா,' 'பால பாரதம்' முதலிய பத்திரிகைகளையும் இவர் தாமே நடத்தினார். சுதந்திரக் கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டமையால், அரசாங்கத்தார் கோபத்துக்கு ஆளாகிப் புதுச்சேரியில் வசிக்கவும் சில காலம் சிறையில் வசிக்கவும் நேர்ந்தன.

இவர் பெருமை: இவர் தமிழ்ப்பற்றும், நாட்டுப் பற்றும் வாய்ந்தவர். மக்களிடையே, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உணர்ச்சிகளைப் பரவச் செய்தவர் இவரே. கேட்போர் மனத்தைப்

ப்ரவசப்படுத்தி வீராவேசம் ஊட்டும் பாடல்களை இயற்றுவதில் இவர் இணையற்றவர்.

இயற்றிய வேறு நூல்கள்: செய்யுள்: பாரதநாடு, செந்தமிழ் நாடு, தமிழ்த் தாய், முருகன் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, குயில் பாட்டு முதலியன. **உரைநடை:** ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலியன.

நூலின் பெருமைகள்: புரட்சிக் கவிஞராகிய பாரதியார் இயற்றிய காப்பியம் இஃது ஒன்றேயாம். பெண்ணின் பெருமை, அவர்கள் விடுதலை ஆகியவைகளில் நாட்டங்கொண்ட பாரதியார் பெண்ணின் ஆற்றல் எத்தகையது என்பதை விளக்கவே இக்காப்பியத்தை எழுதினார் போலும்! இந்நூல் எளிய இனிய உணர்ச்சி வாய்ந்த நடையில், ஒப்பற்ற காப்பிய அழகுகளோடு விரிவாக அமைந்துள்ளது. பாரதியாரின் சிறந்த தமிழ்ப் புலமை, கற்பனை சக்தி, உவமைத்திறம், கவியியற்றும் வன்மை முதலியவைகளை நன்கு விளக்கும் நூல் பாஞ்சாலி சபதம் என்று சுருங்கக் கூறலாம். பாரதியார் வெறும் ஆவேசக் கவிஞர் மட்டுமல்ல; கம்பனைப்போல், இளங்கோவைப்போல் ஒப்பற்ற காப்பியக் கவிஞரும் ஆவார் என்பதற்கு இந்நூல் தக்க எடுத்துக்காட்டாம்.

பாடப்பகுதிச் சுருக்கம்: துரியோதனன் கொடிய வார்த்தைகளைச் சொன்னதும், விதுரன் மிகவும் கோபங்கொண்டு, "மூடமகனே, உன் அற்பத்தனத்தால், சொல்லக் கூடாத சொற்களைச் சொல்லி விட்டாய்! சிறுமான், புலியை எதிர்ப்பதுபோலவும், சிறிய தவளை பெரிய பாம்பை எதிர்ப்பதுபோலவும், பாண்டவர் கோபத்தீயை நீ வளர்க்கின்றாய். தெய்வத்தன்மை பொருந்திய தவத்தைச் செய்த திரௌபதியைச் சீர்கெடுமாறு பேசுகிறாய்! அதனால் நீ அழியப் போகின்றாய். உன் நன்மையைக் கருதியே சொல்லுகிறேன். பாண்டவர் நாளையே பழி தீர்த்துக் கொள்வார்கள்; நீ மாண்டு மண்ணில் கிடப்பாய். முன் காலத்தில் வேனன் என்பவன் அழிந்த கதையை நீ கேட்டதில்லையா? அவன் நல்லவருடைய மனம் வருந்துமாறு, செயல் புரிந்ததால் புழுவைப்போல அழிந்தான். நெஞ்சு சுடச் சொல்லும் சொல் நெஞ்சை ஊடுருவிச் செல்வது அல்லவா? கெட்டவர் வாயில் கொடுஞ்சொல் விரைவில் தோன்றும். அச்சொல்லைப் பெற்றவர் மனத்தை விடுத்து அது நீண்ட நாள் அகலாது. அது கொடிய நரகில் சேர்க்கும்; கல்வியைத் தடுத்துவிடும். இப்பொழுது சொல்லி விட்டேன்; இனிச் சொல்ல மாட்டேன்.

"அற்பர்களுக்கு இவ்வுலகில் இன்பம் ஏற்படாது. பேராசையால் குற்றம் செய்கின்றீர்கள். பெருவிபத்து வந்துவிடும். பாண்டவர் பாதங்களை வணங்கி அவரிடமிருந்து பறித்துக் கொண்டவற்றையெல்லாம் மீண்டும் அவர்களுக்கே கொடுத்து, 'ஆண்டவரே, நாங்கள் அறியாது செய்த பிழையைப் பொறுப்பீர்' என்று சொல்லி

செல்வத்துப் பயனே ஈதல்.

அவர்களைத் தங்களது நகருக்குச் செல்லவிடுங்கள். குற்றம் நீங்குதற்குரிய இச்சொற்களை நீங்கள் கேளாவிட்டால் நாளை பாரதப் போர் வரும். அரசர்களே நீங்கள் மாண்டு மடிவீர்கள்" என்றான்.

இச்சொற்களைக் கேட்டு மூடனாகிய துரியோதனன், கோடை இடிபோல முழங்கி, 'சீ மடையா! கெடுக நீ! எப்போதும் எங்களைச் சபிப்பதே உனக்குத் தொழில். உன் சொல்லை யார் கேட்பார்? ஏ தேர்ப்பாகா, நீ போய் விரைவில் அப்பாண்டவர் மனைவியை அரச சபைக்கு அழைத்து வா" என்று பணித்தான். உடனே தேர்ப்பாகன் விரைந்து பாஞ்சாலி தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்று, துக்கத்தால் துடித்த குரலுடனே, "அம்மணி! வணக்கம். தருமத்தைக் காப்பவளே! உன் அடிக்கு வணக்கம். கொடிய விதியால் தரும புத்திரர், மாமனாகிய சகுனியோடு மாயச் சூதாடி, அரசையும் செல்வத்தையும் இழந்து, தம்பியரைத் தோற்று, சுதந்திரத்தையும் இழந்து, தங்களையும் பணயம் வைத்துத் தோற்றார்! உம்மை அழைத்து வருமாறு எங்களரசன் கட்டளையிட்டார்" என்றான்.

அப்படிச் சொல்லவும் "யார் சொன்னது? சூதாடுபவர்கள் சபையில் வீரக் குலத்துப் பெண்கள் செல்லும் வழக்கம் உண்டோ? யார் கட்டளையால என்னை அழைக்கின்றாய்? நீ போய் நடந்ததைக் கேட்டு வா! என்னைத் தோற்ற எனது நாயகர், முன்னம் என்னைத் தோற்றுப் பின் தம்மைத் தோற்றாரா? அல்லது முன்னம் தம்மைத்தோற்றுப் பின் என்னைத் தோற்றாரா? இச்செய்தியைத் தெரிந்து வா" என்று திரௌபதி கூறினாள். அவள், பிறகு தனியே துக்கத்துடன் அழுகழிந்து, கண்ணில் நீர் வழிய மனத்தில் அச்சம் மிக, பேயைக் கண்ட பிள்ளையைப்போல இருந்தாள்.

பின்பு தேர்ப்பாகன் அரசவைக்குச் சென்று, "அரசே! அங்கே திரௌபதியை வணங்கிச் சபைக்கு வருமாறு அழைத்தேன். அதற்கு அந்த அம்மை, என்னை முன்னே தோற்றுத் தம்மை என் நாயகர் தோற்றாரா? அல்லது தம்மைத் தோற்று என்னைத் தோற்றாரா? என்று கேட்டனுப்பினார்கள்; நான் வந்துவிட்டேன்" என்றான். அதனைக் கேட்ட துரியோதனன் அவனை நோக்கி, "ஏ! பயலே, பாஞ்சாலி கூறிய பயனற்ற வார்த்தைகளைக் கேட்டு வந்து இங்குக் கூறுகின்றாய். கிளிபோன்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் அவளது பேச்சின் இனிமையை எனதுள்ளம் விரும்புகின்றது. ஆதலின் அவள் அரசவைக்கு வந்த பிறகு கேட்கவேண்டியவைகளைக் கேட்கலாம்" என்று கூறினான்.

விதுரன் துரியோதனனை இடித்துக் கூறுதல்

துரியோதனன் சுடுசொல்..........சொல்லுகிறேன் [1–9]

பதவுரை

துரியோதனன் - துரியோதனனவன்	இசுடு சொற்களை கூறிடவும் - இந்தக் கொடிய வார்த்தைகளைச் சொல்லவும்

நல்லாரைக் காண்பதுவும் நன்று.

பெரியோன் விதுரன் - மேன்மைக் குணம் பொருந்திய விதுரன்
பெரிதும் சினம்கொண்டு - மிகவும் கோபங்கொண்டு,
மூடமகனே - 'அறிவில்லாதவனே
மொழிய ஒணுவார்த்தையினை - சொல்லத்தகாத சொற்களை
கேடு வரவு அறியாய் - பின்னாலேயே கேடு வரப்போவதை அறியாதவனாகி
கீழ்மையினால் சொல்லிவிட்டாய் - உன் அற்ப புத்தியால் சொல்லிவிட்டாய்
புள்ளி சிறுமான் - புள்ளிகளை உடைய சிறிய மானானது
புலியைப்போய் பாய்வது போல் - புலிக்குப் பகையாகி அதன்மேற் பாய்வதுபோலவும்
பிள்ளை தவளை - சிறிய தவளைக் குஞ்சு
பெரும் பாம்பை மோதுதல் போல் - பெரிய பாம்பை எதிர்த்துச் சண்டையிடுதல் போலவும்
ஐவர் சினத்தின் அழலை - பஞ்சபாண்டவரது கோபத் தீயை
வளர்க்கின்றாய் - மேலும் வளரச் செய்கின்றாய்
தெய்வத்தவத்தியை - தெய்வத்தன்மை பொருந்திய தவத்தினை உடைய திரௌபதியை
சீர் குலையப் பேசுகிறாய் - சிறப்பு அழியுமாறு பேசுகிறாய்
நின்றுடைய நன்மைக்கே - உனது நன்மைக்காகவே
நீதி எல்லாம் சொல்லுகிறேன் - நீதிகள் எல்லாம் கூறுகிறேன்' (என்று விதுரன் கூறி)

கருத்துரை: துரியோதனன் கூறிய கடுஞ் சொற்களைக் கேட்டு விதுரன் கோபித்து, "அறிவற்றவனே, உன் அற்பத்தனத்தினால், சொல்லத் தகாத வார்த்தையினைச் சொல்லிவிட்டாய். சிறு மான் பெரும் புலியை எதிர்ப்பதுபோலவும், தவளைக் குஞ்சு பாம்பைத் தாக்குவது போலவும் நீ பாண்டவரது கோபத் தீயை வளர்க்கின்றாய்; திரௌபதியையும் பழிக்கின்றாய். உன் நன்மைக்காகவே, நான் நீதியெல்லாம் சொல்லுகிறேன், கேள்" என்றான்.

விளக்கவுரை

பாண்டவர் சகுனியோடு சூதாடித் தோற்றனர். அவ்வமயம், துரியோதனன் அப் பாண்டவரையும், திரௌபதியையும், கொடிய சொற்களால் ஏசுகிறான். அது பொறுமல் துரியோதனனது சிற்றப்பனாகிய விதுரன் அவனைக் கோபித்து இடித்துரைக்கிறான்.

இலக்கணக் குறிப்பு: கூறிடவும்: இதில் 'இட' என்பது துணை வினை. மொழியொணு: மொழிய + ஒண்ணு: நிலைமொழி ஈற்று அகரம் தொகுத்தல் விகாரத்தால் தொக்கது. ஒணு: ஒண்ணு என் பதன் தொகுத்தல் விகாரம் பாய்வதுபோல்: பாய்வதுபோல், இவ்விடங்களில் உவமைகள் தொக்கு நிற்கின்றன. தவத்தி: குறிப்பு வினையாலணையும் பெயர்.

விதுரன் கூறும் நீதி

என்னுடைய சொல்.............வந்துவிடும் [10—26]

பதவுரை

என்னுடைய சொல் - *என்னுடைய நீதிச் சொற்கள்*

வேறு எவர் பொருட்டும் இல்லை அடா - *பிறருக்காக அல்ல அடா*

பாண்டவர் தாம் - *பாண்டவர்கள் தாம்*

நாளை பழி இதனை - *நாளைக்கு இந்தப் பழியை*

தீர்த்திடுவார் - *தீர்ப்பார்கள்*

மகனே நீ மாண்டு தரையில் கிடப்பாய் - *மகனே, நீ செத்து நிலத்தில் விழுந்து கிடப்பாய்*

தன் அழிவு நாடும் - *தனது அழிவையே தேடுகிற*

தறுகண்மை என்னேடா - *வீரம் எதற்கடா ?*

முன்னம் ஒரு வேனன் - *முற்காலத்தில் வேனன் என்னுமொருவன்*

முடிந்த கதை கேட்டிலையோ - *அழிந்துபோன கதையை நீ கேட்டதில்லையோ?*

நல்லோர் தமது உள்ளம் நைய - *நல்லவர்களது மனம் வருந்துமாறு*

செயல் செய்தான் - *அவன் தீய செயல்களைச் செய்தான்*

பொல்லாத வேனன் - *கொடிய அந்த வேனன்*

புழுவைப்போல் மாய்ந்திட்டான் - *ஒரு புழுவைப்போலச் செத்தான்*

நெஞ்சம் சுட உரைத்தல் - *மனம் மிகவும் வருந்துமாறு பேசுதல்*

நேர்மை என கொண்டாயோ - *நன்னடத்தை எனத் தீர்மானித்தாயோ ?*

மஞ்சனே - *மகனே*

அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ - *அந்தச் சொல் நெஞ்சத்தை ஊடுருவிப் பாய்வது அல்லவா ?*

கெட்டார் தம் வாயின் - *(அந்தச் சொல்லானது) கெட்டவர்களுடைய வாயிலே*

எளிதே கிளைத்து விடும் - *சுலபமாகத் தோன்றிவிடும்*

பட்டார் தம் நெஞ்சில் - *(அந்தச் சொல்) போய் தைத்தவர்களுடைய மனத்திலே*

பலநாள் அகலாது - *பல நாளைக்கு விட்டு நீங்காது*

மன்னவனே - *அரசே*

நொந்தார் மனம் சுடவே - *முன்னமேயே வருந்துகிறவர்களுடைய மனம் பின்னும் வருந்துமாறு (சொல்லும் சொல்)*

வெம்மை நரகு சேர்த்துவிடும் - *கொடிய நரகத்தில் சேர்த்து விடும்*

கவுரவர்காள் - *கவுரவர்களே !*

பின் ஒருகால் சொல்லேன் - *இதை நான் மறுபடியும் சொல்லமாட்டேன்*

புல்லியர்கட்கு - *அற்பர்களுக்கு*

இன்பம் புவிதலத்தில் வாராது - *இன்பம் இந்த உலகில் கிடைக்காது*

பேராசை கொண்டு - *(கொள்ளத்தகாத) மிகுந்த ஆசையைக் கொண்டு*

பிழை செயல்கள் செய்கின்றீர் - குற்றமுள்ள காரியங்களைச் செய்கின்றீர்கள்
வாராத வன்மை கொடுமை - (அதனால்) வரக்கூடாத மிகுந்த துன்பங்களும்
மாவிபத்து வந்துவிடும் - பெரிய ஆபத்துக்களும் நேர்ந்து விடும் (என்று விதுரன் கூறி)

கருத்துரை : 'நான் உனக்கே சொல்கிறேன். பாண்டவர் நாளை பழி தீர்த்துக் கொள்வார்கள்; அதனால் நீ மாண்டு போவாய். முன்னமே, வேனன் என்பவன் இவ்விதமே அழிந்தான். சுடு சொல்லானது தீயோர் வாயில் விரைவில் தோன்றும். அது வைத்தோர் நெஞ்சை ஊடுருவும், கொடிய நரகத்தில் சேர்க்கும். இப்பொழுதே சொல்லிவிட்டேன். இனி மறுபடியும் சொல்லமாட்டேன். அறமற்றவர்களுக்கு உலகில் இன்பம் கிடையாது. பேராசைகொண்டு நீங்கள் செய்யும் குற்றங்களால் பெருவிபத்து நேரும்' என்று விதுரன் நீதி கூறினான்.

விளக்கவுரை

பாண்டவர்கள்மேல் தகாத சொற்களைச் சொன்ன துரியோதனனுக்கு நீதி புகட்டுவானாய், பிறர் நெஞ்சு வையும்படி சொல்லும் சொற்களால் ஏற்படும் தீங்குகளை விதுரன் எடுத்துரைக்கின்றான். வேனன் கதை : அங்கனுக்குச் சுனிதையிடம் உதித்த குமரன். இவனது தீய ஒழுக்கத்தால் தந்தை தூர தேசமடைந்தனன். இவன் இருடிகள் சாபத்தால் இறந்தனன்.

இலக்கணக் குறிப்பு : என்னே : எவன் என்னும் சொல்லின் திரிபு. மஞ்சன் : 'மைந்தன்' என்பதன் போலி. வெங்கரகு, வன் கொடுமை : பண்புத் தொகைகள். புவித்தலம் : இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மா விபத்து : உரிச்சொற்றொடர்.

விதுரன் துரியோதனனுக்குச் செய்யத்தக்கது இன்னது எனக் கூறுதல்

பாண்டவர் தம்............கூறினன் [27—34]

பதவுரை

பாண்டவர் தம் - 'பாண்டவர்களுடைய
பாதம் பணிந்து - அடிகளை வணங்கி
அவர்பால் கொண்டது எலாம் - அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்ட பொருள்கள் எல்லாம்
மீண்டு - மறுபடியும்
அவர்க்கே ஈந்துவிட்டு - அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டு
விநயமுடன் - பணிவோடு
ஆன்றவரே - தலைவரே
யாங்கள் - நாங்கள்
அறியாமையால் செய்த - தெரியாத்தனத்தால் செய்த

நீண்ட பழி இதனை - பெரிய குற்றமாகிய இதை
நீர் பொறுப்பீர் - நீங்கள் பொறுத்துக் கொள்வீராக
என்று உரைத்து - என்று சொல்லி,
அவரை - அந்தப் பாண்டவர்களை
தங்கள் வள நகர்க்கே - தங்களுடைய வளப்பம் பொருந்திய நகருக்கே
செல்லவிடீர் - போக விடுவீர்களாக
குற்றம் தவிர்க்கும் - குற்றத்தைப் போக்குகிற
நெறி இதனை - வழியாகிய இதை
கொள்வீரேல் - (நீங்கள்) ஏற்றுக் கொள்ளாவிட்டால்
மாபாரதப் போர்-பெரிய பாரதப் போரானது
வரும் - ஏற்படும்
நீவிர் அழிந்திடுவீர் - நீங்கள் அழிந்து விடுவீர்கள்'
என்று - என்று
அ புண்ணியனும் - அந்தப் புண்ணியனாகிய விதுரனும்
கூறினான் - சொன்னான்.

கருத்துரை : "நீங்கள் அந்தப் பாண்டவரை வணங்கி, 'தலைவர்களே, நாங்கள் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுப்பீராக' என்று சொல்லி அவர்களைத் தங்களுடைய நகரத்திற்கே செல்ல விடுவீராக. குற்றத்தை நீக்கிக் கொள்ளும் இந்த வழியை நீங்கள் மேற்கொள்ளாவிட்டால் பாரதப் போர் வரும். நீங்கள் அழிவீர்கள்" என்று விதுரன் சொன்னான்.

விளக்கவுரை : துரியோதனனியர் தவறு செய்து அழியப் போவதை அறிந்த விதுரன் அத்துன்பம் நேராமலிருக்க வழி கூறுகின்றான். தவறு செய்தவர் பணிவை மேற்கொள்ள வேண்டும் என்பது தோன்ற "விநயமுடன் ஆண்டவரே" என்ற சொற்கள் அமைக்கப்பட்டன. "அழிந்திடுவீர் பூபாலரே" எனக் குறித்தது, 'இப்பொழுது பெரிய அரசைப் பெற்றிருக்கின்றோம், என்னும் காவம் வேண்டாம். அது நிலையற்றது, அழிந்துவிடும்' என்பதைக் குறிப்பால் உணர்த்திற்று.

இலக்கணக் குறிப்பு : பாண்டவர்தம்: 'தம்' என்பது சாரியை. மற்றவரை: 'மற்று என்பது வினைமாற்றுப் பொருளில் வந்தது. கொள்வீரேல்: கொள்ளீர்' என்பது எதிர்மறை முன்னிலை வினைமுற்று.

துரியோதனன் விதுரனுக்குக் கூறிய மறுமொழி

சொல் இதனை............என்றியம்பினன் [35-42]

பதவுரை

சொல் இதனைக்கேட்டு - இந்தச் சொல்லைக் கேட்டு
துரியோதன மூடன் - துரியோதனனாகிய மூடன்

ல் இடிபோல - வலிமை பொருந்திய பேரிடியைப் போல
சீச்சீ மடையா - 'சீ, அறிவற்றவனே
கெடுக நீ - நீ அழிந்து போவாயாக
எப்போதும் - எந்தக் காலத்திலும்
எம்மை சபித்தல் - எமக்குக் கேடு உண்டாக வேண்டும் என்று கூறுதல்
இயல்பு உனக்கே - உனக்கு இயற்கை ஆகும்
இப்போது - இந்தச் சமயத்தில்
உன் சொல்லை - உன் நீதிப் பேச்சை
எவரும் செவிக் கொள்ளார் - யாரும் கேட்கமாட்டார்கள்' என்று விதுரனைப் பார்த்துக் கூறி
யாரடா தேர்ப்பாகா - ஏ தேர்ப்பாகனே
பாரதர்க்கு வேந்தன் - பாரத நாட்டுக்கு அரசனான துரியோதனன்
பணித்தான் - கட்டளையிட்டான்
என்று கூறி - என்று சொல்லி
பாண்டவர்தம் - பாண்டவர்களுடைய
தேவிதனை - மனைவியாகிய திரௌபதியை
பார்வேந்தன் மன்றினிலே - பல் நாட்டு அரசரும் நிரம்பிய இச் சபையில்
இன்று - இப்போழுதே
அழைத்துவா - கூட்டி வா'
என்று இயம்பினான் - என்று தேர்ப்பாகனிடம் கூறினான் துரியோதனன்.

கருத்துரை: விதுரனுடைய நீதிமொழியைக் கேட்ட துரியோதனன், இடிபோலத் தாக்கிப் பேசுபவனைப், "சீ, நீ நாசமடைவாயாக. எப்பொழுதும் எங்களைச் சபிப்பவன் நீ. உன் நீதியை, இங்கு யாரும் கேட்கப் போவதில்லை" என்று விதுரனிடம் சொல்லிவிட்டுப் பிறகு தேர்ப்பாகனைப் பார்த்து, "நீ போய், துரியோதனன் அழைத்து வரக் கட்டளையிட்டான் என்று கூறி, பாண்டவரது மனைவியாகிய பாஞ்சாலியை இந்த அரச சபைக்கு அழைத்து வா" என்றான்.

விளக்கவுரை

விதுரன் எப்பொழுதும் நீதியைப் பின்பற்றிப் பேசுபவனாதலால் அவன் பேச்சு தீயவர்களாகிய துரியோதனாதியர்க்கு விரோதமாய்ச் சாபம் போன்றிருந்தது. அதனால் துரியோதனன் "நீ கெடுக" என்று சபிக்கின்றான். சபிக்கும் இயல்பில்லாத நல்லவனாகிய விதுரனைச் சபிப்பவன் என்று கூறி அவனைச் சபிக்கின்றான் துரியோதனன். இதன் நயம் அறிக "உன் சொல்லை எவரும் செவிகொள்ளார்" என்றது உன் நீதி இங்கு எவருக்கும் தேவையில்லை என்னும் ஏளனக் குறிப்பு. பாரதர்க்கு வேந்தன்: இந்தப் பாரத நாடு முழுமைக்கும் வேந்தன் என்னும் பெருமிதக் குறிப்பு கொண்டது. பாண்டவர்தம் தேவி: இது பாண்டவரை மிகவும் இழிந்துக் கூறும் குறிப்பினை உடையது.

இலக்கணக் குறிப்பு: துரியோதன மூடன்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கெடுக: வியங்கோள் வினைமுற்று தேவி

திருவற்ற தீயார் சொல் கேட்பதுவும் தீது.

தனை : 'தன்' என்பது சாரியை. வேந்தர் மன்று, ஆறாம் வேற்றுமைத்தொகை. பார்வேந்தர் : நான்காம் வேற்றுமைத் தொகை.

தேர்ப்பாகன் திரௌபதியிடம் போய்ச் சொல்லல்

ஆங்கே தேர்ப்பாகன்...........உரைத்திடலும் [42—54]

பதவுரை

ஆங்கே - அந்தத் திரௌபதியிடத்திற்கு
தேர்ப்பாகன் விரைந்துபோய் - தேர்ப்பாகன் விரைவிற் சென்று
பாஞ்சாலி மாளிகையில் - அந்தத் திரௌபதி வசிக்கிற வீட்டில்
சோகம் ததும்பி - வருத்தம் அதிகமாகியதனால்
துடித்த குரலுடனே - தழுதழுத்த தொண்டையுடனே
அம்மனே போற்றி - 'அம்மணி வணக்கம்'
தாள்போற்றி - உனது அடிகளுக்கும் வணக்கம்
வெம்மை உடைய - மிகுந்த கொடுமையை உடைய
விதியால் - தலைவிதியினாலே
உதிட்டிரனார் - தருமபுத்திரர்
மாமன் சகுனியோடு - சகுனி மாமனுடன்
மாயச்சூது - வஞ்சனை பொருந்திய சூதாட்டத்தை
ஆடியதில் - விளையாடியதில்
பூமி இழந்து - தனது நாட்டை இழந்து
பொருள் இழந்து - செல்வத்தை இழந்து
தம்பியரை தோற்று - தமது தம்பிமாரையும் தோற்று
தமது சுதந்திரமும் - தங்கள் சுதந்திரத்தையும்
வைத்து இழந்தார் - (பந்தயமாக) வைத்துத் தோற்றுவிட்டார்
சாற்றிய பணயம் - (பிறகு) சொல்லப்பட்ட பந்தயப் பொருளாக
தாயே - அன்னையே!
உனை வைத்தார் - உன்னை வைத்தார்கள்
சொல்லவுமே - அதைச் சொல்லுவதற்குக்கூட
நாவு துணியவில்லை - தைரியம் கொள்ளவில்லை எனது நாக்கு
தோற்றிட்டார் - (உன்னையும்) தோற்றுவிட்டார்கள்
எல்லாரும் கூடி - எல்லாருமாக ஒன்றுசேர்ந்து
இருக்கும் சபைதனிலே - இருக்கிற சபையில்
நின்னை அழைத்துவர - உங்களைக் கூட்டிக்கொண்டு வருமாறு
எம்மரசன் நேமித்தான் - எங்கள் அரசனாகிய துரியோதனன் என்னை ஏற்படுத்தினான்
என்ன உரைத்திடலும் - என்று சொன்னவுடனே

கருத்துரை : துரியோதனன் கட்டளைப்படியே தேர்ப்பாகன், திரௌபதியின் அரண்மனையை அடைந்து தழுதழுத்த குரலுடனே,

"தேவி! வணக்கம், சகுனியுடன் சூதாட முற்பட்ட தருமபுத்திரர் நாடு, செல்வம், முதலியவற்றையும் தம்பிமாரையும் கொடிய விதியால் இழந்தார்; பிறகு தம்மையும், தமது சுதந்திரத்தையும் இழந்தார்; பிறகு தங்களையும் பணயமாக வைத்துத் தோற்றுவிட்டார். அதனால் துரியோதனன், தங்களை அழைத்துவருமாறு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான்" என்று கூறினான்.

விளக்கவுரை

தேர்ப்பாகன் சோகம் ததும்பித் துடித்த குரலுடனே பேசினான் என்றதால், அவனுக்குப் பாண்டவர்மீதுள்ள அன்பு விளங்கும். அவன் பேசுகிற வார்த்தையிலிருந்து, அவன் பணிவும் தோன்றுகிறது. 'அம்மனே' என்றது 'தேவீ' என மிக மரியாதையாக அழைத்தான் என்றவாறு. திரௌபதியின் தோற்றத்தை அவன் வாயால் சொல்லவும் கூசினான் எனத் தோன்ற வைத்தது ஒரு நயம் ஆகும்.

இலக்கணக் குறிப்பு: வாழ்பனை: வினைத்தொகை. ததும்பி: செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். துடித்த குரல: இருபெயரெச்சத் தொடர். மாயச் சூது: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. கேமிததான் எம்மரசன்: தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.

திரௌபதி - தேர்ப்பாகன் உரையாடல்

யார் சொன்ன............என்றவனும் கூறி [54—64]

பதவுரை

யார் சொன்ன வார்த்தை அடா - 'இது யார் சொன்ன வார்த்தை அடா
சூதர் சபை தனிலே - சூதாடுகிறவர்கள் உள்ள சபையிலே
தொல்சீர் - பழமை வாய்ந்த
மறக் குலத்து - வீர அரசர் குலத்தில பிறந்த
மாதர் வருவது - பெண்கள் வருவது
மரபோ அடா - பழக்கமோடா?
யார் பணிபால் - யாருடைய கட்டளையால்
என்னை அழைக்கின்றாய்? - என்னைக் கூப்பிடுகின்றாய்?'
என்றாள் - என்று பாஞ்சாலி சொன்னாள்
அதற்கு அவனும் - அதற்கு அந்த தேர்பபாகனும்
மன்னன் சுயோதனன் தன் - 'அரசனாகிய துரியோதனனுடைய
வார்த்தையினால் - சொல்லினால் (தான்)
என்றிட்டான் - என்று சொன்னான்.
நல்லது - (அதற்குத் திரௌபதி), நல்லது
நீ சென்று - நீ போய்

நடந்த கதை - அங்கு நடந்த வரலாற்றை
கேட்டு வா - தெரிந்து கொண்டு வா
வல்ல சகுனி - சூதாட்டத்தில் வல்லவனாகிய சகுனிக்கு
மாண்பு - தமது மேன்மையை இழந்துவிட்ட
நாயகர் தாம் - எனது கணவர் தாம்
என்னை முன்னே கூறி - என்னை முதலில் பந்தயமாக வைத்து
தம்மையே முன்னம் இழந்து - தம்மை முதலில் தோற்று
முடித்து - ஆட்டத்தை முடித்து
என்னைத் தோற்றாரா - என்னைப் பந்தயமாக வைத்து விளையாடித் தோற்றாரா?
சென்று - நீ போய்
சபையில் - அரச சபையில்
தெரிந்து வா - (கேட்டுத்) தெரிந்து கொண்டு வா'
என்று அவனிடம் கூறி - என்று அந்தத் திரௌபதியும் சொல்லி,

கருத்துரை: தேர்ப்பாகன் உரையைக் கேட்டுப் பாஞ்சாலி, "சூதாடுபவர் சபையில் வீர அரச குலத்துப் பெண்கள் வருவது வழக்கமோ? யார் கட்டளையிது?" என்று கேட்க, அதற்கு அவன், "துரியோதனன் கட்டளையால்" என்று கூறினான். திரௌபதி, "நீ, அரசவைக்குப் போய், தருமபுத்திரர், முதலில் தம்மைத் தோற்று என்னைத் தோற்றாரா அல்லது என்னைத் தோற்றுப் பின் தம்மைத் தோற்றாரா என்று கேட்டுத் தெரிந்துகொண்டு வா" என்றாள்.

விளக்கவுரை

"யார் சொன்ன வார்த்தையடா" என்றது, திரௌபதி, துரியோதனன் கட்டளையை மதிக்கவில்லை என்பதைக் குறிக்கும். "சுயோதனன் கட்டளையால்" என்றதில், சுயோதனன் என்பது நல்ல புத்தியுடையவன் என்னும் பொருளையும், துர்யோதனன் என்பது கெட்ட புத்தி படைத்தவன் என்னும் பொருளையும் தரும் சொற்களாவன. தேர்ப்பாகன் மரியாதையாகச் 'சுயோதனன்' என்று கூறினானாக அதை இகழ்ச்சிக் குறிப்பாய்ப் 'புத்தியற்றவன்' என்னும் பொருளையும் குறிக்குமாறு ஆசிரியர் தோன்ற வைத்தது சிறந்த நயம்.

இலக்கணக் குறிப்பு: சூதர் சபை: ஆறாம் வேற்றுமைத் தொகை. தொல்சீர்: பண்புத் தொகை. என்றிட்டான்: 'இடு' என்னும் துணைவினையினுள்ள ஒற்று இரட்டித்து 'இட்டு' என்றாயிற்று.

திரௌபதி தனியே இருந்து வருந்துதல்

இவன் போகிய பின்னர்............வீற்றிருந்தாள் [34-68]

பதவுரை

இவன் போகிய பின்னர் - இந்தத் தேர்ப்பாகன் போனபிறகு
தன்னந்தனியே - ஒருவரும் இல்லாமல் தான்மட்டும் தனியாக

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.

தவிக்கும் மனத்தளாய் - மிகவும் வருந்துகின்ற மனத்தை உடையவளாய்
வன்னம் குலைந்து-அழகு கெட்டு
மலர் விழிகள் - தாமரை மலர் போன்ற கண்கள்
நீர் சொரிய - கண்ணீரைப் பெருக்கவிட
உள்ளத்தை - மனத்தை
அச்சம் உலைவு உறுத்த - பயமானது துன்பப்படுத்த
பேய்கண்ட பிள்ளையென - பேயைப் பார்த்த பிள்ளையைப் போல
வீற்றிருந்தாள் - உட்கார்ந்திருந்தாள் (திரௌபதி).

கருத்துரை : திரௌபதி, தன்னந்தனியளாக துன்பமடைந்து அழகு கெட்டுக் கண்களில் நீர் பெருக, மனதில் பயம் அதிகமாகப் பேய் அறைந்தாற் போன்ற நிலையில் உட்கார்ந்திருந்தாள்.

விளக்கவுரை : தேர்ப்பாகனிடம் சினத்தோடு தைரியமாய்ப் பேசினாளாலும், வருத்தமும் பயமும் அவளை மேற்கொள்ள, அவள் பேயால் அறைபட்டவள்போல் இருந்தாள். 'வீற்றிருந்தாள்' என்றது 'அப்பொழுதும் அவளிடம் ஓர் அழகு தோன்றியது' என்றவாறு.

இலக்கணக் குறிப்பு : மனத்தள் : குறிப்பு வினையாலணையும் பெயர். குலைந்து, சொரிய : செய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். மலர் விழிகள் : உவமைத்தொகை.

தேர்ப்பாகன் துரியோதனனிடம் போய்ச் சொல்லல்

பின்னர்த் தேர்ப்பாகன்............உரைத்தான் [68-75]

பதவுரை

பின் - பிறகு
அந்தத் தேர்ப்பாகன் - அந்தத் தேர்ப்பாகன்
மன்னன் அவை சென்று - அரச சபைக்குப் போய்
வாள்வேந்தே - 'வாளாயுதத்தைத் தரித்த அரசே!
ஆங்கு - அங்கே
அந்த பொன் அரசி - அந்த நல்ல அரசியாகிய பாஞ்சாலியின்
தாள் பணிந்து - அடிகளை வணங்கி
போதருவீர் - (அரசவைக்கு) வருவீராக
என்றிட்டேன் - என்று சொன்னேன்; (அவர்கள்)
என்னை முதல்வைத்து-என்னை முதலிலே பந்தயப் பொருளாக வைத்து
இழந்தபின்பு - தோற்றபிறகு
என் மன்னர் - எனது நாயகராகிய தருமபுத்திரர்
தன்னை இழந்தாரா - தன்னைத் தோற்றாரா?
மாறி - இந்த முறை வேறுபட்டு
தம்மை தோற்ற பின்னர் - தம்மைத் தோற்ற பிறகு
எனைத் தோற்றாரா - என்னைத் தோற்றாரா?
என்றே - என்று
நும் பேரவையை - உங்களது பெரிய சபையை

வினவி வர - கேட்டு விட்டுவருமாறு
மின்னற் கொடியார் தாம் - மின்னற் கொடிபோன்ற அந்தப் பாஞ்சாலி அம்மையார்
பணித்தார் - கட்டளையிட்டார்
வந்துவிட்டேன் - நான் திரும்ப வந்துவிட்டேன்'
என்று உரைத்தான் - என்று சொன்னான்.

கருத்துரை: தேர்ப்பாகன், அரசவை சென்று துரியோதனனிடம் கூறுவானாய், " அரசே, நான் பாஞ்சாலியை வணங்கி, அரசவைக்கு வருக என்றேன். அதற்கு அவர்கள் தரும புத்திரர் முதலில் என்னைத் தோற்று பின் தம்மை தோற்றாரா அல்லது முதலில் தம்மைத் தோற்று பின் என்னைத்தோற்றாரா என்று அரசவைக்குச் சென்று கேட்டுவா என்று கட்டளையிட்டார்கள்; நான் வந்துவிட்டேன்" என்றான்.

விளக்கவுரை

அரசர் குடிக்குள் உள்ள நேசப் பான்மை எவ்விதமிருந்தாலும் பணியாளர் தம் நேர்மையிலிருந்து தவறக் கூடாது என்பதை இவ்வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. தேர்ப்பாகன், பாஞ்சாலியிடம் பேசிய விதத்தையும் ஆங்கே தான் போய்வந்த வரலாற்றைச் சொல்லும் விதத்தையும் கவனித்தால் இது விளங்கும்.

இலக்கணக் குறிப்பு: வாள்வேந்தே: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. எனை: 'என்னை' என்பதன் தொகுத்தல் விகாரம்.

பாண்டவரும் சபையோரும் பேசாதிருத்தல்

மாண்புயர்ந்த..........வீற்றிருந்தார் [75—78]

பதவுரை

மாண்பு* உயர்ந்த - பெருமை மிகச் சிறந்த
பாண்டவர் தாம் - பாண்டவர்கள்
நொந்து போய் - வருத்தம் உற்று
ஒன்றும் நுவலாது - ஒரு வார்த்தையும் கூறாது
இருந்துவிட்டார் - இருந்தனர்
மற்றும் - பின்னும்
சபை தனிலே வந்திருந்த - அவையில் வந்து வீற்றிருந்த
மன்னர் எலாம் - அரசர் அனைவரும்
உரை முற்றும் இழந்து - ஒரு வார்த்தையும் கூற இயலாது
மூங்கையர்போல் - ஊமைகளைப் போல
வீற்றிருந்தார் - வீற்றிருந்தனர்.

கருத்துரை: தேர்ப்பாகன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பாண்டவரும் அவையோரும் ஒன்றும் பேசாதிருந்தனர்.

உறங்கி விழிப்பது போலும் பிறப்பு.

விளக்கவுரை

"பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்" ஆதலின் "மாண்புயர்ந்த பாண்டவர் தாம்" என்று ஆசிரியர் கூறினார்.

இலக்கணக் குறிப்பு: எலாம்: 'எல்லாம்' என்பதன் தொகுத்தல் விகாரம். தவலாது: எதிர்மறை வினையெச்சம்.

துரியோதனன் சொல்வது

உள்ளந்துடித்து..........வந்த பின்பு தான் [79—90]

பதவுரை

சுயோதனன் - துரியோதனன்
உள்ளம் துடித்து - மனந் துடித்து
சினம் ஓங்கி - கோபம் மிகுந்து
வெறிகொண்டு சொல்வான் - வெறிகொண்டு கூறுவான்
அட - ஏ! பாகனே
என் தன் - என்னுடைய
பெற்றி நீ அறிந்திலை போலும் - தன்மையை நீ அறியவில்லை போலும்! (ஆதலினால்தான்)
அந்த - அந்த
கள்ளம் - வஞ்சனை பொருந்திய
கரிய விழியினள் அவள் - கரிய கண்களை உடைய திரெளபதியினது
கல்விகள் கொண்டு - பயனற்ற வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு
வந்தனை - இங்கு வந்தவனாய்
பிள்ளைக் கதைகள் - சிறு பிள்ளைகள் கூறும் கதைகளைப் போன்ற பயனற்ற சொற்களை
விரிக்கின்றாய் - விரிவாகக் கூறுகின்றாய்
அவள் - அந்தப் பாஞ்சாலியினது
கிள்ளை மொழியின் - கிளியைப் போன்ற பேச்சினது
நலத்தையே - இனிமையையே
இங்கு - இவ்விடத்தில்
என் உள்ளம் - எனது மனம்
கேட்க விரும்பும் - கேட்க ஆசைப்படும் (ஆதலின்)
மன்னர் - அரசரது
நீண்ட - நீளமான
பெருஞ்சபை தன்னிலே - பெரிய அவையிலே
அவள் நேரிட வந்தபின்பு தான் - அவள் நேராக வந்த பிறகுதான்
வேண்டிய - (அவள்) கேட்க வேண்டிய
கேள்விகள் கேட்கலாம் - வினாக்களையெல்லாம் கேட்கலாம்
வேண்டிய - (அவள்) சொல்ல வேண்டிய
வார்த்தைகள் சொல்லலாம் - சொற்களையெல்லாம் கூறலாம்' (என்று கூறினான் துரியோதனன்).

கருத்துரை: துரியோதனன் தேர்ப்பாகனைப் பார்த்து, "பாஞ்சாலி உன்னிடம் கூறிய பயனற்ற வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு வந்தாய். அவளது பேச்சைக் கேட்க எனதுள்ளம் விரும்புகின்றது ஆதலின் அரசவைக்கு வந்தபிறகு அந்தத் திரெளபதி என்னிடம் கேட்க வேண்டிய கேள்விகளையெல்லாம் கேட்கலாம்" என்று கூறினான்.

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்.

விளக்கவுரை : "தனது தேர்ப்பாகனாக இருந்தும் தனது குறிப்பை அறியாதவனாக இருக்கின்றான் அவன் என்பதை அறிவிப்பதற்காகத் துரியோதனன், 'என்றன் பெற்றி அறிந்திலை போலும் நீ" என்றான். **கிள்ளை மொழியின் நலம் :** கிளிமொழியைப்போல, கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் பேச்சின் இனிமை. பிள்ளைக் கதைகள் கேட்பவர்க்கு ஒரு பயனையும் விளைக்காததுபோல நீ அவள் கூறியதாக மொழியும் மொழிகள் அப்பாஞ்சாலிக்கு ஒரு பயனையும் உண்டாக்காது. என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு : உள்ளம் : காரணப் பெயர். அறிந்திலை முன்னிலை ஒருமை வினைமுற்று. கரிய : குறிப்புப் பெயரெச்சம். கிள்ளை மொழி : உவமைத் தொகை. பெருஞ்சபை : பண்புத் தொகை.

நல்லொழுக்கப் பயிற்சி

நம் நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. நமக்கு உரிமைகள் பல கிடைத்துள்ளன. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்ற பாரதியாரின் நீதியுரைகளை நாம் பின்பற்றிவிட்டோம். ஆண்களுக்கு உள்ள உரிமைகள் பெண்டிருக்கும் இன்று உள்ளன. தமக்கு அளிக்கப் பெற்றிருக்கும் உரிமைகளைப் பெண்டிர் பயன்படுத்துதல் வேண்டும். ஆனால் கடமைகளை மறத்தல் கூடாது

IV. பல்சுவை

பலவகைப்பட்ட சுவைகளை உடைய பாடல்களைக் கொண்ட பகுதி என்பது இதன் பொருளாம்.

1. புறநானூறு

பெயர்க் காரணம் : இது புறம்+நானூறு என பிரிக்கப்பட்டுப் புறத்தைப்பற்றிய நானூறு அகவற் பாக்களைக் கொண்ட நூல் என்று பொருள்படும் இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அறம், போர், முதலிய செய்திகளைக் கூறுவது 'புறம்' எனப்படும். இஃது இடவாகு பெயர்.

நூலின் வகை: சங்க நூல்களாகக் கருதப்படுகின்ற கீழ்க்கணக்கு, மேற் கணக்கு என்னும் இரு பிரிவினவாகிய நூல்களுள் இது மேற்

கணக்கைச் சார்ந்தது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் நூல்கள் மேற்கணக்கு நூல்களாவன. அவற்றில் இந்நூல் எட்டுத்தொகையில் எட்டாவது ஆகும்.

எட்டுத்தொகை நூல்கள் : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

புறநானூற்றிலுள்ள பாடல்களை இயற்றிய புலவர்கள் ஓர் ஊரினரல்லர்; ஒரு காலத்தவரல்லர்; ஒரு மரபினருமல்லர். இந்நூற் பாடல்களைத் தொகுத்தாரும், தொகுக்கும்படி சொல்லியவரும் இன்னார் எனத் தெரியவில்லை. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலாக 400 பாக்களைக் கொண்டது. புறம், புறப்பாட்டு என்பன இதன் வேறு பெயர்கள்.

திணை துறைகள் : இதிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே திணை, துறைகள் உள. 'திணை' என்பது மக்கள் ஒழுக்கம். 'துறை' என்பது, 'மக்கள் விலங்கு முதலியன சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டுச் செல்லுவதற்குரிய வழி' என்று பொருள்படும். அஃதாவது மக்களின் வாழ்க்கைக்கு உரிய வழியாம்.

இந்நூலிற்குப் பழையதோர் உரையுண்டு; அது முற்றிலும் கிடைத்திலது. பல நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும், இந்நூற் பாடல்களை மேற்கோள்களாக எடுத்தாண்டமையின் இதன் பெருமை வெளியாகும்.

இந்நூலிலிருந்து பண்டைத் தமிழகத்தில் சிறந்த முடிவேந்தர் மூவர், அவர் தம் சிற்றரசர், சேனைத்தலைவர், போர்வீரர், புலவர்களைப் பாதுகாத்த 1. பாரி, 2. வல்வில் ஓரி, 3 மலையன், 4. அதியமான், 5. பேகன், 6 ஆய், 7. நள்ளி என்னும் கடையெழு வள்ளல்களின் வரலாறுகள், அக்காலத்துத் தமிழ் மக்களின் நாகரிகப் பண்புகள் முதலியன உணரலாம்.

காலம் : கடைச் சங்க காலமாகிய கி. பி. 2-ஆம் நூற்றாண்டு.

ஆசிரியரைப்பற்றி குறிப்பு

பாரிமகளிர் : இவர்கள் தமது தந்தையாகிய பாரியைப்போலவே ஈவதில் இணையற்றவர்கள்; தோலா நாவில் மேலோராகிய கபிலர் என்னும் சங்கப் புலவரிடத்துக் கற்றுத் தேர்ந்தவர்கள்; பாடப்பகுதியாக உள்ள புறநானூற்றுச் செய்யுளை இயற்றியவர்கள் உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உயர் பண்பினர்.

ஒன்று உடுத்து உண்ணார் உயர்ந்தோர்.

பாரிமகளிர் வருந்துதல்

பதவுரை

அற்றைத் திங்கள் - (மூவேந்தரும் முற்றியிருந்த) அன்று தோன்றிய சந்திரனின்

அவ்வெண் நிலவின் - அந்த வெண்மை நிறம் பொருந்திய நிலாவின்கண்

எந்தையும் உடையேம் - எம்முடைய தந்தையையும் உடையவராய் இருந்தோம்

எம் குன்றும் - எம்முடைய மலையையும்

பிறர் கொளார் - பிறர் கொள்ளவில்லை

இற்றைத் திங்கள் - இன்று தோன்றிய சந்திரனின்

இவ்வெண் நிலவின் - இந்த வெண்மை நிறம் பொருந்திய நிலாவின்கண்

வென்று எறி - வென்று அடிக்கப்படுகின்ற

முரசின் - முரசினை உடைய

வேந்தர் - அரசர்

எம் குன்றும் - எம்முடைய மலையையும்

கொண்டார் - கொண்டனர்

யாம் எந்தையும் இலம் - யாம் எமது தந்தையையும் இழந்தோம்.

கருத்துரை: அன்று தோன்றிய வெண்ணிலாவிலே தமது தந்தையோடு தண் பறம்பில் இருந்த உயர்ந்த நிலைமையையும், இன்றைய வெண்ணிலாவிலே பறம்பையும், தந்தையையும் இழந்த சிறுமையையும் பாரிமகளிர் எண்ணி வருந்தினர்.

விளக்கவுரை

தந்தையையும், பறம்பு மலையையும் இழந்து, துன்பத்தால் துடித்த பாரிமகளிர் முன்னிருந்த உயர்ந்த நிலைமையை அப்பொழுது உன்னி வருந்தினர் என்பதனை "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின் எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர் கொளார்" என்ற பகுதியால் அறியலாம். பாரியாகிய ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றதனால் "வென்றெறி முரசின் வேந்தர்" என்றது இந்த இடத்தில் இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது. திங்களை மாதம் என்பாரும் உளர்.

திணையும் துறையும்: திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

பொதுவியலாவது எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக அமைந்த இலக்கணங்களை எல்லாம் தொகுத்துரைப்பதாம்.

கையறுநிலையாவது மன்னவன் இறந்துபட அவனைச் சேர்ந்தோர் அவன் இறந்த செய்தியைச் சொல்லி ஒழுக்கந் தளர்தலாம்.

வைகறை யாமம் துயிலெழுக.

இலக்கணக் குறிப்பு: வெண்ணிலவு: பண்புத் தொகை. குன்றும்: 'உம்' என்னும் இடைச்சொல் இறந்தது தழீஇய எச்சப் பொருளில் வந்தது. எறிமுரசு: வினைத் தொகை. எங்குன்று: ஆறாம் வேற்றுமைத் தொகை. யாம்: தன்மைப் பன்மைப் பெயர். அன்று+திங்கள் - அற்றைத் திங்கள். இன்று+திங்கள் - இற்றைத் திங்கள்.

2. முத்தொள்ளாயிரம்

பெயர்க் காரணம்: சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறித்துப் பாடப்பட்ட முத்தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூலாதலின் இப்பெயர் பெற்றது. மூவேந்தரைப்பற்றித் தனித்தனித் தொள்ளாயிரம், தொள்ளாயிரம் பாடல்களால் பாடப்பட்ட நூலாதலின், முத்தொள்ளாயிரம் என்ற பெயர் பெற்றது என்றும் கூறலாம்.

இந்நூல் முழுதும் கிடைக்கவில்லை. பண்டை இலக்கண நூல்களில் உதாரணங்களாகக் கொடுக்கப்பட்ட பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட "புறத்திரட்டு" என்ற நூலின் மூலம் 108 முத்தொள்ளாயிரப் பாடல்கள் கிடைத்துள்ளன.

நூலின் பெருமை: சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றிய பல அரும் செய்திகள் சுவைபட இந்நூலில் கூறப்பட்டுள்ளன. அவர்களுடைய நாடு, அரண், படைச் சிறப்பு, போர்த் திறம், வீரம், கொடை முதலிய பல செய்திகள் இந்நூலின்கண் இனிய முறையில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. ஆகவே, இந்நூல் பண்டைத் தமிழரசர்களின் பண்புகளையும், தமிழ் நாட்டின் சிறப்பையும், தமிழ் மக்களின் இயல்புகளையும் அறிந்து கொள்வதற்கு ஒரு வாயிலாக விளங்குகின்றது என்று கூறலாம். இந்நூல் வெண்பா வகையால் இயற்றப்பட்டுள்ளது.

ஆசிரியர்: இந்நூலாசிரியர் யார் என்பதும், இந்நூல் எக்காலத்து இயற்றப்பட்டது என்பதும் விளங்கவில்லை. இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளால் அவர் சைவ மரபினராய் இருத்தல் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்நூற் பாடல்களுக்கும், பதினோராந் திருமுறையில் நக்கீர தேவ நாயனார் என்பவர் இயற்றினவாகக் காணப்படும் கைலைபாதி காளத்தி பாதி, அந்தாதி, திருஈங்கோய் மலை எழுபது ஆகிய நூல்களில் உள்ள பாடல்களுக்கும் இருக்கும் ஒப்புமை நோக்கி நக்கீர தேவ நாயனாரே இந்நூலாசிரியர் என்று சிலர் கருதுகின்றனர்.

யானை மறம்: சோழனது யானையின் வீரத்தைப் புனைந்துரைப்பது.

நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்.

புறங்கடையில் நிற்கும் கிள்ளியினது யானையின் பெருமிதம்

பதவுரை

கல் ஆர் - மலையினை ஒத்த
தோள் - புயங்களை உடைய
கிள்ளி - சோழனது
களிறு - யானை
கொடிமதில் - கொடியினைக் கட்டியுள்ள மதிலிலே
பாய்ந்து இற்ற - பாய்ந்ததனால் ஒடிந்த
கோடும் - தனது தந்தங்களும்
அரசர் - பகை மன்னரது
முடி - மணிகள் பதித்த கிரீடத்தை
இடறி - காலால் எற்றிவிட்டுத் தள்ளுதலால்
தேய்ந்த நகமும் - தேய்ந்து போன தனது நகங்களும்
பிடிமுன்பு - பெண் யானை முன்னே
பொல்லாமை நாணி - (எழில் கெட்டதால் தோன்றும்படியான) பொல்லாத தன்மைக்கு வெட்கப்பட்டு - (பெண் யானை நிற்கும் இடத்திற்குச் செல்லாமல்)
புறங்கடை - தலைவாயிலில்
நின்றது - நின்றுவிட்டது.

கருத்துரை: பகைவரது மதிலை அழித்து, அவர்களது முடியை எற்றியதால் கிள்ளியினது ஆண் யானையின் கொம்பு முறிந்தும் நகம் தேய்ந்தும் போயின. அதனால் அது பெண் யானை எளிமையாக எண்ணுமே என்று நாணிப் புறங்கடையில் நின்றது.

விளக்கவுரை

கிள்ளியின் தோள்கள் மலையினை ஒத்தது என்றதனால் அவனது வல்லமை விளங்குகிறது. வல்லமை வாய்ந்த கிள்ளிக்கு மதத்தால் கோபங்கொண்டு போர் செய்யும் யானைப் படைகள் மிகுதியாக உள்ளன. ஆதலின் அவன் மதிலின்மீது கொடிகள் கட்டிக்கொண்டு வாழும் பகைவரை அழிக்கப் புறப்பட்டான். அவனுடைய யானைகளும், படைகளும் சென்று பகைவரை வென்றன. வெற்றி முழக்கத்தோடு ஊர் திரும்புகின்றான் சோழன். வீரர் முதலியோர் தமது வீட்டிற்குச் சென்று தமது மனைவியரோடு அகங் களித்து வாழ்கின்றனர். ஆனால் யானை மட்டும் பிடி தங்கியிருக்கும் இடத்திற்குப் போகாமல் வெளியே நின்றுகொண்டு இருப்பதைப் பார்த்த புலவர், இக்களிறு தனது தந்தம் முறிந்தும், நகம் தேய்ந்தும் இருந்ததைக் கண்டால் பெண் யானை இகழுமே என்று எண்ணித்தான் இங்கேயே நிற்கின்றது என்று அதன் வெற்றிச் சிறப்பை வியந்து பாராட்டுகிறார்.

புறங்கடையில் இயல்பாக நிற்கும் களிற்றை, பிடி இழுக்கும் என்று எண்ணி நின்றதாகக் கவி தனது கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளதால் இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணியாம்.

இலக்கணக் குறிப்பு: கொடிமதில்: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, உம்: இடைச்சொல்.

என்னும் பொருளில் வந்துள்ளது. தேய்ந்த கசம்: பெயரெச்சத் தொடர். புறக்கடை: முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. கிள்ளி களிறு: ஆறும் வேற்றுமைத் தொகை.

3. கலிங்கத்துப் பரணி

கலிங்கம் என்பது கலிங்க தேசம். பரணி என்பது 96 வகைநூல்களுள் ஒன்று. ஆக, கலிங்கத்துப் பரணி என்றால், கலிங்கத்தைப்பற்றிய நூல் எனப் பொருள்படும்.

பரணி: தலைவன் தன் பகைவர்களையும், அவர்களுடைய யானை குதிரை, தேர், காலாட்படைகளையும் கொன்று குவித்துப் பேய்களுக்கு விருந்திட்ட சிறப்புடையவனாய் விளங்கினான் என்று கூறும் நூல் பரணி.

(1) போர் முகத்தில் 1,000 யானைகளை வென்ற வீரனைச் சிறப்பித்து, கடவுள் வாழ்த்து முதலான 13 அங்கங்களை கொண்டு தாழிசையில் பாடுவது பரணி என்பார் பலர்.

(2) பரணி என்னும் நக்ஷத்திரத்திற்கு உரிய தெய்வம் காளியும் இயமனும். அவர்கள் சிறப்பு இங்கு மிகுதியும் அறிவிக்கப்படுவதால் பரணி என்பார் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.

செய்யுள் நடை: இந்நூலில் உள்ள செய்யுள் நடை தாழிசை எனப்படும். இந்நூல் 585 தாழிசைகளைக் கொண்டது.

விசயதரன்: பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த, சோழ மன்னன் விசயதரன். இவன் குலோத்துங்கன், உபய குலோத்தமன், அபயன், சயங்கொண்டான் என்ற பிற பெயர்களும் கொண்டவன். விசயதரன் பரிவேட்டையாடிக் காஞ்சிபுரத்திலிருந்தபொழுது, கலிங்க தேசத்து அரசனாகிய அநந்த பன்மன் கப்பம் கட்டினானல்லன் என்று கேள்விப்பட்டான். உடனே அவன் தன் மந்திரியாகிய கருணாகரத் தொண்டைமானைச் சேனையுடன் கலிங்கத்துக்கு அனுப்பினான். தொண்டைமான் சென்று வெற்றி பெற்று மீண்டனன். இவ்வரலாற்றைப் புலவர் பலவகையில் அழகுபடுத்திக் கூறுகின்றார்.

சயங்கொண்டார்: இந்நூல் ஆசிரியரின் பெயர் சயங்கொண்டார். தமிழிலுள்ள பரணிகள் பலவற்றுள்ளும் கலிங்கத்துப் பரணி சிறந்து நிற்பதால் இதன் ஆசிரியர் "பரணிக்கு ஓர் சயங்கொண்டான்" என்று பாராட்டப்படுகின்றார். இந்நூலும், "தெய்வப் பரணி" என்று பாராட்டப்பெறும்.

நூலியற்றல்: "தொண்டை நாடு சான்றோருடைத்து" என்பது பற்றி நடந்த சொற்போர் ஒன்றில், சயங்கொண்டான் வெற்றி பெற்று விளங்கி நின்றார். அக்காலத்தே விசயதரனும், கலிங்கத்து

வெற்றி பெற்ற செய்தி கேளவிப்பட்டுப் புலவரை நோக்கி, "யானும் ஐயங் கொண்டேன்" என்று கூறினன். அதைக் கேட்ட புலவர் உடனே மன்னனை நோக்கி, "அவ்வாறாயின் சயங்கொண்டான் சயங்கொண்டானைப் பாடுவான்" என்று கூறிப் போந்து கலிங்கத்துப் பரணி பாடினர். சின்னாள் கழித்து அரச சபையில் நூலை அரங்கேற்றியபொழுது அரசன் அதனை மெச்சி ஒவ்வொரு தாழிசைக்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசளித்ததாகக் கூறுவார்.

கலிங்கத்துப் பரணி: இந்நூல் 1. கடவுள் வாழ்த்து, 2. கடை திறப்பு, 3. காடு பாடியது, 4. கோயில் பாடியது, 5 தேவியைப் பாடியது, 6. பேய்களைப் பாடியது, 7. இந்திர சாலம், 8. இராச பாரம் பரியம், 9. பேய் முறைப்பாடு, 10. அவதாரம், 11. காளிக்குக் கூளி கூறியது, 12. களங் காட்டியது, 13 கூழடுதல் என்ற பதின்மூன்று பிரிவுகளை உடையது. இங்கு பாடமாக வந்துள்ள செய்யுள் 12-ஆம் பிரிவைச் சேர்ந்தது. களங் காட்டியது: இப்பிரிவு காளி பேய்களுக்குப் போர்க் களத்தில் கடப்பவைகளைக் காட்டி விளக்குவதைக் கூறுவது.

கணவனை வியந்து காளியை வினுதல்

பதவுரை

பொரு - போர் செய்யும்
தடக்கை - பெரிய கையில் இருக்கும்
வாள் - வாளாயுதம்
எங்கே? - எங்கே?
மணி - அழகிய
மார்பு எங்கே? - மார்பு எங்கே?
போர் முகத்தில் - யுத்தம் வந்த பொழுது
எவர் வரினும் - யார் எதிர்த்தாலும்
புறங் கொடாத - முதுகு காட்டி ஓடாத
பரு - பெரிய
வயிரம் - வச்சிரம் போன்ற
தோள் எங்கே? - தோள்கள் எங்கே?
எங்கே - தோள் எங்கே?
என்று - என்று
பயிரவியை - காளியை
கேட்பாரை - கேட்கின்றவரை
காண்மின் - பாருங்கள்
காண்மின் - பாருங்கள்.

கருத்துரை: 'ஏ பயிரவி! என் கணவனின் வாள் எங்கே? மார்பு எங்கே? புறங்கொடாத தோள் எங்கே?' என்று மாதர் காளியைக் கேட்பார்கள்.

விளக்கவுரை

வெட்டுண்டு கிடக்கும் வீரர்கள் வாள் அற்றும், மார்பு அற்றும், தோள் அற்றும், துண்டம் துண்டமாகக் கிடப்பதனால் மாதர் தாம் காணாத அவயவங்களைக் காளியிடம் கேட்டுகின்றனர். வாளும்,

காற்றில்லாமல் தூசி பறக்குமா?

மார்பும், தோளும் போருக்குரியனவாகக் குறிப்பிட்டார். இத் தாழிசையிலிருந்து பண்டைக் காலப் பெண்டிரின் வீரத்தையும் அஞ் சாண்மையையும் அறியலாம்.

இலக்கணக் குறிப்பு: தட: உரிச்சொல். கேட்பாள்: வினையா லணையும் பெயர், எவர்: வினாப் பெயர் பயிரவி: பைரவி என் பதன் போலி. காண்மின்: முன்னிலை ஏவற் பன்மை வினைமுற்று.

4. பெருந்தொகை

இது சங்க காலத்துக்குப் பிற்பட்ட மக்களின் பழக்க வழக்கங்கள் ஒழுகலாறுகள் என்பனவைபோன்ற செய்திகளை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாகப் பல்வேறு காலங்களில் புலவர்கள் பலர் பாடிய பாடல் கள், பண்டைக்கால இலக்கியங்களில் உரையாசிரியர்களால் மேற் கோள்களாக எடுத்தாளப்பட்ட அரிய பாடல்கள், கேட்பதற்கு இனிய கருத்தமைந்த அழகிய செய்யுட்கள் ஆகியவை ஒழுங்குபெறத் தொகுக் கப்பட்டதொரு நூலாகும்.

இந்நூலில் 3,500-க்கு மேற்பட்ட பாடல்கள் தொகுக்கப் பெற்றுள் ளன. பல பாடல்களை உடைய பெரிய நூலாதலின் இது பெருந் தொகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் கடவுள் வாழ்த்து, அறி வியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என ஐந்தியல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொகுத்த ஆசிரியர் மகா வித்வான் மு. இராகவ ஐயங் கார் அவர்கள். இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்றது. நம் பாடப் பகுதியில் நான்காம் செய்யுள் பரராச சிங்கன் சடையப்ப வள்ளலைப் பற்றிப் பாடியதாம்.

பரராச சிங்கன் பாடல்

ஆசிரியர் பெயர்: *பரராச சிங்கன்.*

மரபு: *அரசர்.*

ஊர்: *ஈழ நாட்டில் உள்ள கண்டி.*

காலம்: இச்செய்யுள் சடையப்ப வள்ளலைப்பற்றிப் பாடப்பெற் றுள்ளமையால் பரராச சிங்கன் காலம் சடையப்ப வள்ளல் காலமாகிய 12-ஆம் நூற்றாண்டு எனலாம்.

வரலாறு: ஒரு சமயம் கண்டிநாடு பெரும் பஞ்சத்தால் துன் புற்றதென்றும் புலவர் ஒருவர் மூலமாகச் சடையப்ப வள்ளலின் பெரு மையை அறிந்த பரராச சிங்கன், இச்செய்யுளை எழுதியனுப்பி, உதவி புரியுமாறு சடையப்ப வள்ளலை வேண்டிக் கொண்டானென்றும், அவர் ஆயிரம் மரக்கலங்களில் நெல் மூட்டைகளை ஏற்றி அனுப்பி, கண்டிநாடு பஞ்சம் நீங்கி இன்புறுமாறு உதவி செய்தாரென்றும் கூறப்படுகின்றன.

சடையனென்ற தரும தேவதையின் சிறப்பு.

பதவுரை

வளமை இன்புறு - வளப்பமும் இன்பமும் செறிந்த
சோழ மண்டல - சோழ நாட்டினுடைய
வாழ்க்கை காரணமாக - நல் வாழ்வைக் காரணமாகக் கொண்டும்
தரு உயர்ந்திடு - மரங்கள் உயர்ந்துள்ள
புதுவை ஆம் பதி - புதுவையாகிய அழகிய நகரில்
தங்கும் - வாழ்கின்ற
மானிய சேகரன் - மதிப்பிற் சிறந்தவனாகிய
சங்கரன் தரு - சங்கர வள்ளல் பெற்றெடுத்த
சடையன் என்று - சடையப்ப வள்ளல் என்று
ஒரு தரும தேவதை வாழுமே - ஓர் அறத் தெய்வம் வாழ்வதனாலும்
கருது - சிறப்புடையதாகக் கருதப்படுகின்ற
செம்பொனின் - செம்மையான பொன்னால் செய்யப்பட்ட
அம்பலத்தில் - ஞான சபையில்
ஓர் கடவுள் - ஒரு தெய்வம் (கூத்தப் பெருமான்)
நின்று நடிக்கும் - (கவலையின்றிக் களிப்புடன்) நிலைபெற்று நின்று நடனமாடுகிறது
காவிரி - காவிரியாகிய
திரு நதியிலே - சிறந்த நதியின் கரையிலே
ஒரு கருணை மா முகில் - ஓர் அருளை உருக் கொண்டது போன்ற சிறந்த காளமேகம் (திருமால்)
துயில் ஆம் - (கவலையில்லாமல்) கண்ணுறங்குகின்றது (எனவே)
இரவு - இருள் மிக்க இரவுப் பொழுதானது
நண்பகல் ஆகில் என் - நண்பகற் பொழுதானால் தான் என்ன?
பகல் - ஒளிமிக்க பகற்பொழுதானது
இருள் அறு - இருள் நீங்காத
இரவு ஆகில் என் - இரவுப் பொழுதானால் தான் என்ன?
இரவி - கிழ்த திசையில் உதிக்கும் சூரியன்
எண் திசை - எட்டுத் திசைகளிலும்
மாறில் என் - மாறி உதித்தால் தான் என்ன?
கடல் ஏழும் - ஏழு கடல்களும்
ஏறில் என் - பொங்கினால்தான் என்ன?
மரபு தங்கிய - குடிகளைக் காக்கும் சிறந்த மரபில் பிறந்த
முறைமை பேணிய - செங்கோலை விரும்பிக் காத்து வருகின்ற
மன்னர் - அரசர்கள்
போகில் என் - தாழ்ந்துபோனால் என்ன?
ஆகில் என் - (அன்றிச்) சிறக்க வாழ்ந்தால் என்ன? (அவைகளால் எத்தகைய துன்பமும் கேடாது)

கருத்துரை : வளப்பமும் இன்பமும் மிக்க சோழநாட்டின் நல் வாழ்வு காரணமாகவும், புதுவை நகரில் வாழும் மதிப்பிற் சிறந்த சங்கர வள்ளலின் புதல்வராகிய சடையப்ப வள்ளலாகிய தருமதேவதை வாழ்ந்து வருவதாலும் சிறந்த செம்பொன் அம்பலத்தில் நடராசப் பெருமானார் கவலையின்றிக் கூத்தாடுகிறார் ; காவிரி நதிக்கரையிலே கருணையே உருக்கொண்ட அரங்கநாதர் துயில்கிறார். ஆதலின் இரவு பகலானாலும், பகல் நள்ளிரவானாலும், சூரியன் எட்டுத் திசைகளிலும் மாறி மாறி உதித்தாலும், ஏழு கடல்களும் பொங்கினாலும் வற்றினாலும் அரசர்கள் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் அங்கு மக்களுக்கு யாதொரு துன்பமும் நேராது.

விளக்கவுரை

வளமை இன்புறு சோழமண்டல வாழ்க்கை : 'கோள் நிலை திரிந்து கோடை நீடினும் தான் நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை' என்று புலவரால் பாராட்டப்பெறும் காவிரி நதி பாய்வதால் சோழ வளநாடு நீர் நிலவளங்கள் உள்ளதாய், சோற்றுக் கவலையில்லாததாய் விளங்குகின்றமையின் அங்குற்ற மக்கள் இன்ப வாழ்வு வாழ்கின்றனர்.

புதுவையம்பதி தங்கு.........சங்கரன் : சடையப்ப வள்ளலின் தந்தையாராகிய சங்கர வள்ளல் என்பார் புதுவையம்பதியில் தங்கி கப்பல் வாணிபம் செய்த காரணத்தால் புதுவைச் சங்கரன் என்று அழைக்கப்படுகிறார். (புதுவை—புதுச்சேரி)

சடையனென்றொரு தருமதேவதை வாழ : சடையப்ப வள்ளல், கம்பர் முதலிய புலவர்களை ஆதரித்தமையாலும், பரராச சிங்கனுக்கு ஆயிரம் கப்பல்களில் நெல்லை அனுப்பி உதவினமையாலும், அவரைத் தருமதேவதை எனக் கூறுதல் பொருந்தும். சோழவள நாடு நீர்வளமுடையதாய் விளங்குவதால் மக்கள் பசிப்பிணி அறியாது இன்பமுற்று வாழ்வார்களாதலாலும், சடையப்ப வள்ளலாகிய தரும தேவதை அங்கு வாழ்வதால், மக்கள் அறநெறி பிறழாது திகழ்வார்களாதலாலும், மக்களையும் அறத்தையும் காக்க வேண்டிய கடவுளாகிய நடராசப் பெருமானும், அரங்கநாதப் பெருமானும் கவலையின்றிக் கூத்தாடியும், உறங்கியும் உள்ளனர் என்பது கருத்து.

மற்றும், 'மக்களையும் அறத்தையும் காக்கும் கடமை வாய்ந்த நடராசப் பெருமான் தம் கடமையைப் புரிபவர்போல் நடிக்கிறார் எனவும், மற்றொருவராகிய திருமால் கவலை சிறிதுமின்றிக் காவிரியின் நடுவில் துயில்கின்றார் எனவும் அவர்களை நம்புவதால் யாதொரு பயனுமில்லை ; காப்பவர் கொடையிற் சிறந்த சடையப்ப வள்ளலே' என்ற பொருளையும் குறிப்பினால் கொள்ளலாம்.

கொற்றவன் தன்னினும் கற்றவன் மிக்கோன்.

கடலேழு: கருப்பஞ்சாறு, பால், நெய், தயிர், தேன், உப்பு நீர், நன்னீர் ஆகிய இவற்றால் நிறைந்த கடல்களைக் குறிக்கும்.

இலக்கணக் குறிப்பு: 'எவன்' என்னும் வினா வினை இங்கு 'என்' என்றாகி இன்மைப் பொருளில் வந்தது. இரவு நண்பகல்: ஏறிலென் வற்றிலென்: போகிலென் ஆகிலென்: முரண் தொடைகள். எட்டு + திசை = எண்டிசை. நடிக்கும், துயிலும்: 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். வாழ: காரணப்பொருளில் வந்த வினையெச்சம். என்ற + ஒரு = என்றொரு: அகரம் தொகுத்தல் விகாரம். அறா (இரவு): ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். முகில: உவமையாகு பெயர்.

நல்லொழுக்கப் பயிற்சி

பல சுவைகளைக் கொண்ட பாடல்கள் தமிழ் மொழியின்கண் உள்ளன. புலவர்கள் தம்முடைய கற்பனைத் திறனைக் கொண்டு பலவகைச் சுவைகளை அமைத்துப் பாடல்களை பாடியுள்ளனர். கற்பனைகள் யாவும் பொய்போல் சிலர்க்குத் தோன்றலாம். கற்பனைக்கும் பொய்க்கும் வேறுபாடு உண்டு. கற்பனையைப் பொய்யாகக் கருதி, அதனை வெறுத்தல் தக்கதன்று. கற்பனைச் சொல்லோவியங்களைச் சுவைக்கும் ஆற்றலை மாணவர்கள் பெறுதல் வேண்டும். அவ்வாறு பெற்றால், தமிழ் மொழி ஆக்கம் பெறும் என்பது திண்ணம்.

தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது.

வினாக்களும் விடைகளும்.

I. வாழ்த்து

1. திருவருட்பா

1. திருவருட்பாவின் ஆசிரியரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
(விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.)

2. திருவருட்பா : சிறு குறிப்பு வரைக.

திருவருட்பாவினை இயற்றிய ஆசிரியர் இராமலிங்க அடிகள் ஆவார். அன்னார் பாடிய பக்திச் சுவைகனியும் எண்ணிறந்த பாடல்கள் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுக்குத் திருவருட்பா என்னும் பெயர் வழங்கப்படுகிறது. மாணிக்க வாசகர் இயற்றியருளிய திருவாசகத்துக்கு ஒப்பாக இந்நூல் போற்றப்படுகின்றது. இறைவனது அருளாலும், இறைவனது அருளை விரும்பியும் பாடப்பெற்ற பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாதலால் இந்நூல் 'திருவருட்பா' என்னும் பெயரைப் பெற்றது.

3. திருவருட்பா : இலக்கணம் கூறிப் பொருள் வரைக.

'திருவருட்பா' என்னுஞ் சொற்றொடர்க்கு, 'சிறப்புடைய கடவுளின் அருளினால் பாடப்பெற்ற பாடல்கள்' என்றும் 'இறைவனது அருளை விரும்பிப் பாடப்பெற்ற பாடல்கள்' என்றும் பொருள் கூறலாம். முதல் வகையிற் பொருள் கொண்டால் அச்சொற்றொடர் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். இரண்டாம் வரையிற் பொருள் கொண்டால் அச்சொற்றொடர் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும்.

4. இராமலிங்க அடிகளார் இறைவனிடம் எவற்றை வேண்டுகின்றார் ?

இராமலிங்க அடிகளார் இறைவனிடம் "ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும். எவ்வுலகிலும், எந்நிலையிலும், எவ்விடத்திலும் யான் சென்று நினது அருட்புகழைப் பாடுமாறும், சுத்த சிவ மார்க்கத்தை வளர்க்குமாறும் எனக்குத் தாங்கள் அருள் புரிதல் வேண்டும். எத்தகைய பிழையை யான் செய்தாலும் தாங்கள் பொறுத்தருள வேண்டும். தங்களைப் பிரியாத நிலை எனக்கு வாய்க்கும்வண்ணம் தாங்கள் அருள்புரிதல் வேண்டும்" என்று வேண்டுகின்றார்.

தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.

5. இலக்கணக் குறிப்பு வரைக: ஆருயிர், செயல், பொறுத்தல்',
அருமை + உயிர் = ஆருயிர். அருமையாகிய உயிர் என்று இச் சொற்றொடர் விரிதலால், இது பண்புத்தொகை.

செயல்: தொழிற் பெயர்.

பொறுத்தல்: தொழிற் பெயர்.

2. மலரும் மாலையும்

1. "மலரும் மாலையும்": இச்சொற்றொடரை விளக்கி, இலக்கணம் கூறுக.

(இந்நூலின் முன்னுரையில், 'பெயர்க் காரணம்' என்னும் தலைப் பின்கண் விடையைக் காண்க.)

2. "மலரும் மாலையும்" என்னும் நூலினது ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

இந்நூலாசிரியர் கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் ஆவார். இவர் 1876-ஆம் ஆண்டு பிறந்தார்; திருவாங்கூர் பகுதியைச் சார்ந்த சுசீந்திரத்தை யடுத்த சிற்றூரில் பிறந்தார். இவருடைய தந்தையார் சிவதாணுப் பிள்ளை; தாயார் ஆதிலக்குமி அம்மையார். இவர் சாந்தலிங்கத் தம்பிரான் என்பவரிடம் கல்வி பயின்றார். தமிழ்ப் புலமையும, ஆங்கில அறிவும் கைவரப்பெற்ற இவர் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியில் ஆசிரியத் தொழில் புரிந்து, தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்.

3. "மலரும் மாலையும்" என்னும் நூலின் ஆசிரியர் கலைமகள் நடம் புரியும் இடங்களாக எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

உழுவார் கரமும், கவிவாணர் நாவும், அறிவாளர் நெஞ்சும் கலைமகள் நடம் புரியும் இடங்கள் என்று "மலரும் மாலையும்" என்னும் நூலின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

4. கவிவாணர் நா எத்தகையது?

இன்சொற்களைத் தேடிச் சேர்த்து, அவற்றைப் பாடல்களில் பெய்து அளிக்கும் இயல்புடையது கவிவாணர் நா.

5. அறிவாளர் நெஞ்சு எத்தகையது?

பேரருள் ஓடிப் பெருகுகின்ற இயல்பினை உடையது அறிவாளர் நெஞ்சு.

6. இலக்கணக் குறிப்பு வரைக:— நயவுரை, செழுங்கருணை, மயிலே (கலைமகள்).

நயவுரை: பண்புத்தொகை.

செழுங்கருணை : பண்புத் தொகை.

மயிலே : 'மயில்' என்னுஞ் சொல மயில் போன்ற சாயலை யுடைய கலைமகளைக் குறிக்கின்றது. எனவே, அஃது உவமையாகு பெயர்.

7. வாழ்த்து : பொதுக் குறிப்பு வரைக.

'வாழ்தது' என்பது இங்கே கடவுள் வாழ்த்தைக் குறிக்கும். தொடங்கிய செயல் இனிது நிறைவேறும் பொருட்டுக் கடவுளை வாழ்த் துதல் பழந் தமிழர் மரபு. வழிபடு கடவுள் வாழ்த்து, ஏற்புடைக் கடவுள் வாழ்த்து என்று வாழ்த்து இருவகைப்படும். புலவர் தாம் வழிபடும் தெய்வத்தை வாழ்த்துதல் வழிபடு கடவுள் வாழ்தது ஆகும். எடுத்துக்கொண்ட நூலுக்கு ஏற்ற கடவுளை வாழ்த்துதல் ஏற்புடைக் கடவுள் வாழ்த்து ஆகும்.

II. அறவுரை

1. திருக்குறள்

1. திருக்குறளைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக :

இந்நூல் திருவள்ளுவர் என்னும் அறிஞரால் இயற்றப்பட்டது ; அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளைப்பற்றி, எக் காலத்திற்கும், எந்நாட்டிற்கும், எவ்வினத்தவர்க்கும் ஏற்றனவாக அமையும் உரைகளைக் கொண்டது ; சாதி, சமய வேறுபாடுகளைப் பின்பற்றுமல், யாவர்க்கும் பொதுவான அறத்தினைக் கூறுவது. இந் நூல் பல மொழிகளில் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளது. இந்நூலின் காலம் கடைச் சங்க காலம் என்பர். இந்நூலாசிரியரைப்பற்றிய வர லாற்றினை ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறினரல்லர். இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றும்.

2. திருக்குறள் : பெயர்க் காரணமும், இலக்கணக் குறிப்பும் வரைக.

3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவை ?

4. திருவள்ளுவர் : பெயர்க் காரணம் எழுதுக.

5. திருக்குறளின் பெருமையைச் சுருக்கி வரைக.

(2, 3, 4, 5 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை இப்பகுதியின் முன் னுரையிற் காண்க.)

6. ஒழுக்கம் உடைமை : விளக்குக.

ஒழுக்கம் உடைமையாவது, மக்கள் தத்தம் வருணத்திற்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல்.

7. ஒழுக்கத்தின் சிறப்பினை வரைக.

ஒழுக்கம் எத்தகையார்க்கும் சிறப்பினைத் தரும். அஃது உயிரினும் சிறந்தது. அறங்கள் பலவற்றை ஆராய்ந்து பார்த்து, அவற்றுள் இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது யாதென்று ஆராய்ந்தாலும், ஒழுக்கமே துணையாவதென்பது விளங்கும். எனவே, ஒழுக்கத்தினை வருந்தியாவது காக்க வேண்டும்.

8. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் : ஏன் ?

ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலான், அதனை உயிரினும் சிறந்ததாகக் கருதிப் போற்றுதல் வேண்டும்.

9. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் : ஏன் ?

அறங்கள் பலவற்றை ஆராய்ந்து, அவற்றுள் இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது யாதென்று ஆராய்ந்தாலும் துணையாய் முடிவது ஒழுக்கமேயாகும். அதனால் ஒழுக்கத்தைப் பரிந்தோம்பிக் காத்தல் வேண்டும்.

10. ஒழுக்கம் உள்வழிப் படுங்குணமும், இல்வழிப்படுங் குற்றமும் யாவை ?

ஒழுக்கம் உடைமையே குலன் உடைமையாகும். ஒழுக்கத்தில் தவறுபவன் தாழ்ந்த குலத்தினனாகக் கருதப்படுவான். வேதத்தினை மறந்தாலும் பார்ப்பான் பிறகு அதனை ஓதிக் கொள்ளலாம்; ஆனால் ஒழுக்கம் குன்றினால் அவனது குலன் உடைமை கெட்டுவிடும். ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்ச்சியில்லை. இழுக்கத்தால் இழிகுலமாகிய குற்றம் உண்டாகுமாதலால் மன வலிமையுடையோர் ஒழுக்கம் தவற மாட்டார்கள். ஒழுக்கத்தால் எல்லோரும் மேம்பாட்டை அடைவர்; இழுக்கத்தால் எல்லோரும் தாம் எய்துவதற்கு உரித்தல்லாத பழியை அடைவர்.

11. இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் : விளக்குக.

உயர்ந்த வருணத்திற் பிறந்தவராயினும், ஒருவர் ஒழுக்கம் தவறினால், அவர் தாழ்ந்த வருணத்தவர் ஆவார். எனவே, 'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' எனப்பட்டது.

12. "மறப்பினும் ஒத்துக்கொளலாகும்": என்று 'மறப்பினும்' என்றது ஏன் ?

அந்தணன் ஒருவன் தான் கற்ற வேதத்தினை மறந்தானாயினும், அவ்வருணம் கெடாமையால் பின்னும் அதனை ஓதலாம். மறந்தே விடுவானாயின் அவன் இழிகுலத்தன் ஆவான். ஆகவே, 'மறக்கலாகாது' என்னுங் கருத்துபற்றி, 'மறப்பினும்' எனப்பட்டது.

---

13. ஒழுக்கம் இலான் கண் உயர்வு இல்லை : எது போல ?

பிறர் ஆக்கம் கண்டு பொறுது அழுக்காறு உடையவனிடம் செல்வம் இல்லையாகும் ; அதுபோல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை.

14. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் : ஏன் ?

ஒழுக்கத்திலிருந்து வழுவுவதால் தமக்கு இழிகுலமாகிய குற்றம் உண்டாவதை அறிந்து, மன வலிமை உடையோர் ஒழுக்கத்தின் ஒல்கார்; அஃதாவது ஒழுக்கத்தில் சுருங்கார்.

15. உரவோர் : விளக்குக.

'உரவோர்' என்னுஞ் சொல் 'மன வலியுடையோர்' என்று பொருள்படும். கொண்ட விரதம் விடாமைபற்றி அவர்கள் 'உரவோர்' எனப்பட்டனர்.

16. இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி : இவ்வாறு கூறப்பட்டது ஏன் ?

ஒழுக்கத்திலிருந்து வழுவுவதால் ஒருவர் தாம் எய்துதற்கு உரித்தல்லாத பழியை எய்துவர். ஒருவர் ஒழுக்கத்திலிருந்து ஒரு முறையேனும் தவறியிருப்பாரேல், அவரைப்பற்றிப் பிறர் கூறும் அடாப் பழியைக்கூட உண்மையென்றே உலகம் கொள்ளும். அதுபற்றியே ஈண்டு 'எய்தாப் பழி' எனப்பட்டது.

17. ஒழுக்கத்தினும், இழுக்கத்தினும் உண்டாகும் பின் விளைவுகள் யாவை ?

ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருந்து, இம்மையிலும், மறுமையிலும் இன்பம் பயக்கும். தீய ஒழுக்கமோ பாவத்திற்குக் காரணமாய் இம்மையிலும், மறுமையிலும் துன்பம் பயக்கும்.

18. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்: ஈண்டு அமைந்துள்ள அணி யாது ?

வித்து நிலத்திலே ஊன்றப்பட்டதுபோல், நல்லொழுக்கம் ஒரு சமயத்திலே நிலைத்து நிற்குமானால், பின்பு அது தன் பயனாகிய இன்பத்தைத் தருவது திண்ணம்; ஆதலால் நல்லொழுக்கத்தினை வித்து என்றது ஏது உருவக அணி ஆகும்.

19. சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்கங்கள் யாவை ?

பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய் முதலியவற்றையும், தம் வருணத்திற்கு உரியன அல்லாதவற்றையும் தம் வாயாற் கூறாமல் இருத்தல் சொல்லால் வரும் ஒழுக்கம் ஆகும். உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றால் ஒழுகுதல் செயலால் வரும் ஒழுக்கம் ஆகும்.

---

20 வழுக்கியும் வாயால் சொலல்: ஈண்டு 'வாயால்' என்னுஞ் சொல் அமைந்திருப்பது ஏன்? அதற்கு வடநூலார் வழங்கும் பெயர் யாது?

'வாயால்' என்னுஞ் சொல் ஈண்டு வேண்டாத சொல் ஆகும். வாயால் அன்றி பிற உறுப்புக்களால் சொல்ல முடியாதன்றோ? நல்ல சொற்கள் பயில்கின்ற இடமாக வாய் அமைந்திருக்கவேண்டும் என்னும் எண்ணத்தாலேயே வள்ளுவனார் 'வாயால்' என்னுஞ் சொல்லை அமைத்தார். இவ்வாறு ஒரு கருத்தினால், வேண்டாத சொல்லைப் பெய்து அமைப்பதை வடநூலார் 'நாற்பரியம்' என்பர்.

21. உலகத்தோடு ஒட்ட ஒழுகல்: விளக்குக.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாற்றால் ஒழுகுதல் ஆகும். "உலகம் என்பது உயர்ந்தோர்" மாட்டே என்பதனால் ஈண்டு 'உலகம்' என்னுஞ்சொல் உயர்ந்தோரையே குறிக்கும். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனவற்றை ஒழித்தலும், சொல்லாதனவற்றுள் இக்காலத்திற்கு ஏற்பனவற்றைக் கொள்ளுதலும் ஒழுக்கமேயாகும் என்பதனை விளக்கவே 'உலகத்தோடு ஒட்ட' என்று சொல்லப்பட்டது. ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல் ஆகும்.

22. உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலைக் கல்லாதார் அறிவிலாதார்: ஏன்?

கல்விக்குப் பயன் அறிவாகும். அறிவுக்குப் பயனே ஒழுக்கமாகும் எனவே, அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவில்லாதவரே ஆவர்.

23. வாய்மை: விளக்குக.

வாய்மையாவது மெய்யினது தன்மை. அதனைப் பொய் சொல்லாமை என்றும் கூறலாம்.

24. வாய்மையின் இலக்கணம் யாது?

பிறிதோர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மையின் இலக்கணம் ஆகும். நிகழ்ந்தது கூறல் தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாகும்; தீங்கு பயப்பின் பொய்ம்மை யாகும்.

25. பொய்ம்மையும் வாய்ம்மையாகும்: எப்பொழுது?

பிறர்க்குக் குற்றம் தீர்ந்த நன்மையைப் பயக்கும்பொழுது பொய்ம்மையும் வாய்மையாகும்.

26. புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்: விளக்குக.

புரை தீர்ந்த நன்மையாவது குற்றம் தீர்ந்த நன்மையாகிய அறம்.

அதனைப் பயத்தல் என்பது,கேடாவது, இறப்பாவது எய்தி நின்றதோர் உயிர், அச்சொற்களின் பொய்ம்மையான் கேட்டையோ இறப்பையோ அடையாமல் இன்புறுதல்.

27. பொய்ம்மையின் இலக்கணம் யாது ?

நன்மை பயவாத நிகழாதது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை ஆகும்.

28. தன்னெஞ்சறிவது பொய்யற்க : ஏன் ?

ஒருவன் தன்னெஞ்சு அறிவதொன்றனைப் பிறர் அறிந்திலர் என்று எண்ணிப் பொய்த்தானாயின், அதனை அறிந்த தன் நெஞ்சமே அப்பாவத்திற்குச் சான்றாய் நிற்கும். அதுமட்டுமா ? பொய்த்தலின் பயனாகிய துன்பத்தையும் அஃது எய்துவிக்கும். எனவே, 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' எனப்பட்டது.

29. உள்ளத்தால் பொய்யாது ஒழுகினல் வரும் இம்மைப் பயன் யாது ? ஏன் ? அல்லது உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளனுவான்: யாவன் ? ஏன் ?

ஒருவன் தன் உள்ளத்திற்கு ஏற்பப் பொய் கூறாது ஒழுகுவானாயின் அவன் உயர்ந்தோர் உள்ளங்களிலெல்லாம் உளன் ஆவான். அஃதாவது உயர்ந்தோர் அவனை எப்பொழுதும் நினைப்பர் என்பது கருத்து. உள்ளத்தால் பொய்யாது ஒழுகுதல் ஓர் அறமாகும். அவ்வறம் அருமையானது. அதுபற்றியே உயர்ந்தோர் அவனை எப்பொழுதும் நினைப்பர்.

30. தவத்தோடு தானம் செய்வாரின் தலையாவான் யாவன் ? ஏன் ?

தன் மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்பவன் தவத்தோடு தானம் செய்வாரின் தலையாவான். தவமும், தானமும் புறமாகிய மெய்யால் செய்யப்படுவன. வாய்மையோ அகமாகிய மனமொழிகளால் செய்யப்படுவது. எனவே தவமும் தானமும் செய்வாரைக் காட்டிலும் வாய்மை பேசுபவன் சிறந்தவன் ஆவான்.

31. எய்யாமை எல்லா அறமும் தரும் : எது ? ஏன் ? விளக்குக.

எல்லா அறமும் தருவது பொய்யாமையாகும். 'அஃதாவது, மறுமைக்கு மெய் வருந்தாமல், ஒருவனுக்கு எல்லா அறங்களையும் பொய்யாமையே தரும். இல்லறத்தார் பொருள் சேர்த்தல் முதலியவற்றாலும், துறவறத்தார் உண்ணாமை முதலியவற்றாலும் வருந்தல் வேண்டும். அத்தகைய வருத்தங்கள் இல்லாமல் அவ்விருவகைப் பயனையும் பொய்யாமையே தருமாதலால்' எய்யாமை எல்லா அறமும் தரும்' எனப்பட்டது.

வண்ணமிலாப் போழ்தத்து வன்னன்மை குற்றம்.

32. அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று: எப்பொழுது? விளக்குக.

ஒருவன் இடைவிடாமல் பொய்யாமையை மேற்கொள்வானாயின், அவன் பிற அறங்களைச் செய்யாமை செய்யாமை நன்று. ஒருவன் பல அறங்களையும் மேற்கொண்டு, செய்தற்கு அருமை பற்றிச் சிலவற்றுள் தவறுவானாயின் குற்றம் உண்டாகும். எனவே, பல அறங்களின் பயனையும் தானே தரவல்ல பொய்யாமையை மேற்கொண்டு, அதனைத் தவறாமல் செய்தல் நன்று என்பதற்காக இவ்வாறு கூறினார்.

33. பொய்யாமை பொய்யாமை: செய்யாமை செய்யாமை: அடுக்குகள் எவ்வெப்பொருளில் வந்துள்ளன?

பொய்யாமை பொய்யாமை: அடுக்கு இடைவிடாமைப் பொருளில் வந்தது.

செய்யாமை செய்யாமை: துணிவுப் பொருளில் இவ்வடுக்கு வந்தது.

34. "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று": இக்குறளுக்கு இரு பொருள் கூறுக.

(திருக்குறட் பகுதியில் உள்ள 'வாய்மை' என்னும் அதிகாரத்தின் ஏழாங்குறளின் பதவுரையும், அக்குறளின் விளக்கவுரைப் பகுதியில் குறிப்பிடப்பெற்றுள்ள மற்றோர் உரையும் இவ்வினாவிற்குரிய விடையாகும்.)

35. வாய்மையால் வரும் மறுமைப் பயனது மிகுதி எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

தவமும் தானமும் செய்து பெறும் பயனைக் காட்டிலும் சிறந்த பயனை வாய்மை தரும். வாய்மை ஒருவனுக்கு இம்மைப் பயனை மட்டுமின்றி, மறுமைக்கு மெய் வருந்தாமல் எல்லா அறங்களையும் தானே கொடுக்கும். முடிவாகக் கூறுமிடத்து, பிற அறங்களெல்லாம் பயக்கும் பயனைத் தரும்' ஆற்றல் வாய்மைக்கு உள்ளது என்னலாம்.

36. ஒருவனுக்கு அகந்தூய்மை எதனால் உண்டாகும்?

வாய்மை பேசுவதால் ஒருவனுக்கு அகத்தூய்மை உண்டாகும்.

37. துறந்தார்க்கு வேண்டும் இருவகைத் தூய்மைகள் யாவை?

புறத்தூய்மையும், அகத்தூய்மையும் துறந்தார்க்கு வேண்டும்.

38. புறந்தூய்மை, அகந்தூய்மை: விளக்குக.

புறத்தூய்மையாவது உடம்பு தூய்தாதல்: அஃதாவது உடம்பின் வெளிப்புறத்தே நிறைந்துள்ள அழுக்குகள் நீங்குதல். நீரால் ஒரு

காலின்நீர் நீங்காமை உண்டிடுக.

வனுக்கு உடம்பு தூய்தாகும். அகந்தூய்மையாவது மனம் தூய்தா தல்: அஃதாவது மெய்யுணர்தல் ஆகும். வாய்மை பேசுவதால் ஒரு வனுக்கு அகந்தூய்மை உண்டாகும்.

39. எல்லா விளக்கும்: விளக்குகள் ஆவன யாவை?

புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகள் ஈண்டு எல்லா விளக்கும் எனப்பட்டன. சூரியன், சந்திரன், தீ முதலியவை உலகத்தார் விளக்குகள் ஆவன. இனி, தானம், தர்மம், கல்வி, ஞானம், பூசை என்பன 'எல்லா விளக்கு' என்பதால் சுட்டப்பட்டன என்றும் கொள்ளலாம்.

40. சான்றோர்க்கு விளக்காவது யாது? ஏன்?

சான்றோர்க்குப் பொய்யாமையாகிய விளக்கே விளக்காகும். உலகத்தார் விளக்குகளாகிய சூரியன், சந்திரன், தீ போன்றவை புறத்திருளையே போக்கும், அவற்றாற் போகாத அறியாமையாகிய இருளைப் பொய்யாமையாகிய விளக்கே போக்குகின்றதாதலால் 'சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு' எனப்பட்டது.

41. மெய்ந் நூல்களாவன யாவை? அவற்றைமெய்ந் நூல்கள் என்பது எங்ஙனம் பொருந்தும்?

இறைவர் கூறிய ஆகம நூல்களே மெய்ந்நூல்கள் ஆவன. தம்மிடத்து மயக்கம் இல்லாதவர் இறைவர். அவர் பொருள்களை உள்ளவாறு உணரவல்லவர்; காம வெகுளிகள் இல்லாதவர்; பொருள்களை உணர்ந்தவாறே உரைக்கவல்லவர். உலகத்தார் உறுதி எய்துதல் வேண்டும் என்னும் எண்ணத்துடன், அவர்களிடம் அருள் கொண்டு இறைவர் ஆகமங்களைக் கூறினர். எனவே ஆகமங்களை மெய்க்நூல்கள் என்னலாம்.

42. வாய்மையாகிய அறத்தினது தலைமை எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

'வாய்மை அகத்தைத் தூய்மையாக்கும்; சூரியன், சந்திரன், முதலிய புறவிருள் கடியும் விளக்குகளால் அகற்றமுடியாத அகவிருளாகிய அறியாமையைப் போக்கும்; சான்றோர்க்கு விளக்காக அமையும்; வாய்மையைக் காட்டிலும் மிக்கனவாகச் சொல்லப்பட்ட அறங்கள் இல' என்று வாய்மையாகிய அறத்தினது தலைமை கூறப்பட்டுள்ளது.

குறிப்பு: திருக்குறட் பகுதியில் உள்ள ஒவ்வொரு குறட்பாவிற்கும் அடிப்புறத்தே தரப்பெற்றுள்ள இலக்கணக் குறிப்புக்களுள் ஒன்றோ, சிலவோ தேர்வு வினாக்களுள் இடம் பெறும். எனவே, அவற்றைக் கருத்தில் இருத்துக.

தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக.

2. நாலடியார்

1. நாலடியார் : பெயர்க் காரணம் எழுதுக.

(விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.)

2. நாலடியார் தோன்றிய காலத்தினைக் குறிப்பிடுக.

விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

3. "களைபவோ கண்குத்திற்றென்று தம்கை": இஃது எதனை விளக்க வந்தது? விளக்குக. அல்லது நட்பிற் பிழை பொறுக்குந் திறன் நாலடியாரில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது? ஆண்டுள்ள உவமையை விளக்குக.

தமக்கு மிகவும் நண்பராயினாரை, அவர்கள் துன்பம் செய்தாலும் கைவிடுதல் கூடாது என்னும் உண்மையை விளக்க, "களைபவோ கண்குத்திற்றென்று தம்கை?" என்பது வந்தது. கண்ணைக் குத்தி விட்டதென்று கையை வெட்டுவார் உளரோ? இலரன்றே! அதுபோல நண்பர்கள் பிழை செய்தாலும் பொறுத்தல் வேண்டும். அதன் பொருட்டு அவர்களை விடுத்துப் பிரிதல் கூடாது. ஈண்டு, "களைபவோ கண்குத்திற்றென்று தம்கை" என்பது உவமை. 'நண்பர்கள் துன்பம் செயினும் அவர்களை விடுத்துப் பிரிதல் கூடாது' என்பது பொருள்.

4. 'மக்கள் தம் இனத்தனையர் அல்லர்; மனத்தனையரே' என்பதை விளக்க வந்த உவமை யாது? அல்லது கடற்கரையில் இன்னீரும், மலையில் உவர் நீரும் பிறக்கும் என்பது கொண்டு விளக்கப்பட்ட உண்மை யாது?

'கடற்கரையில் உள்ள ஊற்றுக்களில் இன்னீர் சுரக்கும். மலைப் பக்கத்தே தோண்டப்பெற்ற கேணியில் உவர் நீர் சுரத்தலும் உண்டு.' என்பது மக்கள் தம் இனத்தனையர் அல்லர்; மனத்தனையரே' என்பதை விளக்க வந்த உவமையாகும். இவ்வுவமையால் மக்கள் தன் மனத்தனையரே ஆவர் என்னும் உண்மை விளக்கப்பட்டது.

5. தேரையின் பண்பு யாது? அது கீழ்மக்களுக்கு உவமையாகக் காட்டப்பட்டது ஏன்? விளக்குக.

நீர் நிலைகளிலும், அவற்றின் அருகிலும் எக்காலத்திலும் தங்கியிருக்கும் தேரை தனது வழுவழுப்பான உடலழுக்கைப் போக்கிக் கொள்வதில்லை. அதுபோல, கீழ்மக்கள் பல நூலகளைக் கற்றாலும், தமக்கு நுண்ணறிவு இன்மையால், உண்மையறிவைப் பெறமாட்டார்கள். இதனால், கீழ்மக்கள் நுண்ணுணர்வு இல்லாதவர்கள் என்பதும், எனவே அவர்கள் எவ்வளவு நூல்களைக் கற்றாலும் மெய்யுணர்வினைப் பெறமாட்டார்கள் என்பதும் விளக்கப்பட்டன.

---

6. வெற்ப, சேர்ப்ப : விளக்குக.

மலை நாடாகிய குறிஞ்சி நிலத் தலைவன் 'வெற்பன்' எனப்படுவான். கடற்கரைப் பகுதியாகிய நெய்தல் நிலத் தலைவன், 'சேர்ப்பன்' எனப்படுவான். பாண்டியன் குறிஞ்சி நிலத்தையும், நெய்தல் நிலத்தையும் உடையவனுதலால் அவன் 'வெற்ப' என்றும், 'சேர்ப்ப' என்றும் விளிக்கப்பட்டான்.

7. வழும்பு என்பது யாது?

தேரையின் உடம்பில் உள்ள வழுவழுப்பான அழுக்கிற்கு 'வழும்பு' என்பது பெயர்.

3. பழமொழி

1. முன்றுறையரையனரைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

முன்றுறையரையனார் 'பழமொழி நானூறு' என்னும் நூலின் ஆசிரியர் ஆவார். அவர் சைன சமயத்தைச் சார்ந்தவர் என்றும், கடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவர் என்றும் சொல்லப்படுகின்றன. 'முன்றுறை' என்பது ஆசிரியரது ஊராகும் என்றும், 'அரையர்' என்பதால் அவர் ஒரு சிற்றரசராக இருத்தல் கூடும் என்றும், அவரது இயற்பெயரை அறிய இயன்றிலது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

2. சுடப்பட்டுயிருய்ந்த சோழன் மகன் வரலாறு யாது?

3. பிடர்த்தலைப் பேரான் : சிறு குறிப்பு வரைக.

(2, 3, வினாக்களுக்குரிய விடைகளை இப்பகுதியின் முதற் செய்யுளுக்கு அமைந்துள்ள விளக்கவுரைப் பகுதியின் கண் காண்க.)

4. "இல்லை உயிருடையார் எய்தாவினை": இப்பழமொழி எவ்வரலாறு கொண்டு விளக்கப்பட்டது?

(இரண்டாம் வினாவிற்குரிய விடையை ஈண்டு எழுதிக் கொள்க). இத்தகைய சோழன் கரிகாலன் குற்றமற்ற செங்கோல் செலுத்தினன். இதிலிருந்து 'இல்லை உயிருடையார் எய்தாவினை' என்பது விளக்கப்பட்டது.

5. "போற்றுது கொண்டரக்கன் போரின் அகப்பட்டான்" என்பதிலிருந்து நீவிர் அறிந்துகொள்ளும் உண்மை யாது? இதனை விளக்க எடுத்தாளப்பெற்ற பழமொழியைக் குறிப்பிடுக.

ஈண்டு அரக்கன் எனக் குறிப்பிடப்பெற்றவன் இராவணன் ஆவான். அவன் பெரியாரோடு பகை கொண்ட காரணத்தால் தன் சுற்றம், முடிவில் இறந்தான். இச்செய்தியிலிருந்து, தன்னினும், வலியா

ரிடம் எவரும் பகை கொள்ளுதல் கூடாது என்னும் உண்மை உணரப் படுகின்றது. 'கூற்றம் புறங்கொம்மை கொட்டினரில்' என்பது ஈண்டு எடுத்தாளப் பெற்றபழமொழி ஆகும்.

6. "கூற்றும் புறங்கொம்மை கொட்டினரில்" என்னும் பழமொழியிலிருந்து நீவிர் அறியும் பொருளுரை யாது?

"கூற்றம் புறங்கொம்மை கொட்டினரில்" என்னும் பழமொழியிலிருந்து, செயற்கரிய செய்யும் பெரியாரிடம் பகை கொள்ளுதல் கூடாது என்னும் பொருளுரை புலனாகின்றது.

7. எத்தகையாரது மனை வாழ்க்கை திருந்துதல் இல்லை?

பிறர்க்கு உதவி செய்து, வந்த விருந்ினரைப் போற்றி, போரில் வாள்வலி காட்டி, முயற்சியைக் குறைவிக்கும் சோம்பல் இலராய், வருந்திப் பாடுபடுதல் வேண்டும். இத்தகைய பண்பு இல்லாதவர்களுடைய மனை வாழ்க்கை திருந்துதல் இல்லை.

8. வேளாண்மை, தாளாண்மை: விளக்குக.

வேளாண்மை: இச்சொல்லுக்கு 'உபகாரம்' என்பது பொருள். இனி, 'வெள்ளத்தை ஆளுந்தன்மை' என்று கொண்டு, வெள்ளத்தைத் தடுத்து, நீரை நிலங்களுக்குப் பாய்ச்சி, உழவுத் தொழில் செய்து, அதன் பயனைப் பிறர்க்குக் கொடுத்தல்' என்றும் இச்சொல்லுக்கு விளக்கம் கூறலாம்.

தாளாண்மை: 'தாள்' என்னுஞ் சொல், 'முயற்சி' என்று பொருள்படும். 'ஆண்மை' என்பது 'ஆளுந்தன்மை' என்று பொருள்படும். எனவே முயற்சியை ஆளுந்தன்மையே தாளாண்மை என்னலாம்.

4. திரிகடுகம்

1. திரிகடுகம்: பெயர்க் காரணம் எழுதுக.

2. திரிகடுகத்தின் ஆசிரியரைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

1, 2 ஆகிய வினாக்களின் விடைகளை இப்பகுதியின் முன்னுரையின்கண் காண்க.

3. நின்ற புகழுடையார் மூவர் யாவர்? அல்லது அழியாப் புகழுடையோர் என்று எத்தகையோரைக் குறிப்பிடலாம்?

தன்னை விரும்பி வந்தவர்களை இகழாதவனும், செல்வம் வந்த காலத்துத்தானே வருகின்ற மறதியை அகற்றியவனும், எக்காலத்திலும் பிறர் ஆக்கம் கண்டு பொறாமையைச் செய்யாதவனும் நின்ற புகழுடைய மூவர் ஆவர். அவர்களை அழியாப் புகழுடையோர் என்னலாம்.

இன்னார் கனியும் மொழியும் கடுவே.

4. "இம்மூவர் சாவா உடம்பெய்தினர்." மூவர் யாவர்? அல்லது புகழுடம்பு எய்துவோர் யாவர்?

தம் செல்வத்தைப் பிறர்க்கு ஈந்து பெரும்புகழ் பெற்றவன், கற்புடைய மனையாள் வாய்க்கப்பெற்றவன், உண்ணுநீர் சுரக்கும் கிணறுகளைத் தோண்டியவன் ஆகிய மூவரையும் "சாவா உடம்பெய்தினர்" என்னலாம். அவர்களே புகழுடம்பு எய்துவோர் ஆவர்.

5. தூயோர் செயற்பாலன யாவை? அல்லது தூயோர் தொழில்கள் யாவை?

உண்பதற்கு முன் நீராடுதல், எத்தகைய செல்வம் கிடைப்பதாயினும் சான்று கூறுங்காலும் நீதி வழங்கும் காலம் ஒருபக்கம் சார்ந்து பேசாமையை மேற்கொள்ளல், சான்றாண்மைக் குன்றாமல் இருத்தல் ஆகியவை தூயோர் செயற்பாலன ஆவன. அவைகளே தூயோர் தொழில்கள் எனப்படும்.

5. நான்மணிக்கடிகை

1. நான்மணிக்கடிகை: பெயர்க் காரணம் வரைக.

2. நான்மணிக்கடிகையின் ஆசிரியரைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

(1, 2 வினாக்களுக்குரிய விடைகளை இப்பகுதியின் முன்னுரையின்கண் காண்க.)

3. கழிவிரக்கம் என்பது யாது? அது யாருக்குத் தோன்றாது?

கழிந்து போனவற்றுக்கு இரங்கி வருந்துதலே கழிவிரக்கம் ஆகும். கற்றோர்க்கு அது தோன்றாது.

4. அருமுதல் யாருக்குத் தோன்றாது?

ஒரு செயலை விரும்பி, அதற்கு ஆவனவற்றை ஆராய்ந்து, முயல்வோர்க்கு அருமுதல் தோன்றாது.

5. அல்ல புரிந்தார்க்கு எது தோன்றாது?

அல்ல புரிந்தார்க்கு அறம் தோன்றாது.

6. நிலம், குளம், பெண்மை நலம்: இவற்றுக்கு அணியாவன யாவை?

நிலத்துக்கு அணி ஆவன நெல்லும் கரும்பும். குளத்துக்கு அணி யாவது தாமரைப்பூக்களின் தொகுதி.

பெண்மை நலத்துக்கு அணியாவது நாணம்.

7. மனிதனுக்கு அணியாவது எது ?

தான் செல்லப்போகும் மறு உலகத்தில் இன்பத்தை அளிக்கவல்ல அறத்தைச் செய்வது மனிதனுக்கு அணியாகும்.

8. மலர், வினைநலம், அகம் பொதிந்த தீமை, உள்ளக் குறிப்பு : இவற்றை உரைப்பன யாவை? தனித்தனி வரைக.

மலர் உள்ளது என்பதனை நறுமணம் உரைக்கும். ஒருவனது வினை நலத்தினை அவன் பேசும் சொற்களே உணர்த்துவிடும். அகம் பொதிந்த தீமையை அவனது மனமே உரைக்கும். ஒருவனது உள்ளக் குறிப்பினை அவனது முகம் உரைக்கும்.

9. "மூன்னம் முகம் போல முன்னுரைப்பதில்": இக்கருத்தினை விளக்கும் பழமொழி யாது ?

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழி, "முன்னம் முகம் போல முன்னுரைப்பதில்" என்னுங் கருத்தினை விளக்கும்.

6. அறநெறிச்சாரம்

1. அறநெறிச்சாரத்தின் ஆசிரியரைப்பற்றிய் குறிப்பு வரைக.

விடையை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.

2. அறம் உரைக்கத்தக்கவனது இலக்கணம் யாது ?

அறநூல்களைக் கேட்டு, அருளை மேற்கொண்டு, ஐம்புலன்களை அடக்கி, அகப்பற்றையும் புறப்பற்றையும் அடக்கி, உலகத்து உயிர்கள் பிழைத்தற்குரிய வழியை உரைப்பவனே அறம் உரைக்கத் தக்கவன் ஆவான்.

3. நூல் உரைத்தற்கு உரியர் அல்லாதார் யாவர் ?

பிள்ளைப் பருவத்தினன், பித்தன், நோயாளன், முன்னேற்றத்தில் நோக்கம் இல்லாதவன், அறிவில்லாதவன், கள்ளுண்டு களிப்பவன், பிறர்க்குத் தீங்கு செய்பவன், பேராசைகொண்டவன், குற்றத்தையே தேர்ந்தெடுத்து மேற்கொள்பவன் ஆகியோர் நூல் உரைத்தற்கு உரியர் அல்லாதார் ஆவர்.

4. அறம் கேட்டற்கு உரிமையில்லாதார் யாவர் ?

தன் சொல்லே சிறந்தது என்று கருதுபவன், மிக மாறுபாடான கருத்துக்களைக் கொண்டவன், இழிந்த சொற்களையே எதிர் நோக்கியிருப்பவன், இன்சொற்களை ஏற்றுக்கொள்ளாத மூடன் ஆகியோர் அறம் கேட்டற்கு உரிமையில்லாதார் ஆவர்.

5. இலக்கணக் குறிப்பு வரைக :

வெற்ப, துன்று (த்துறத்தல்), எறிகடல், செங்கோல், எய்தா (வினை), கொள்ளற்க, எள்ளா (ஒருவனும்), தோன்ரு (கெடும்), இவரே (உரிமையிலாதார்).

வெற்ப : *ஆடூஉமுன்னிலை; அண்மைவிளி.*

துன்று : *ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.*

எறிகடல் : *வினைத்தொகை.*

செங்கோல் : *பண்புத்தொகை.*

எய்தா : *ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.*

கொள்ளற்க : *எதிர்மறை முன்னிலை வியங்கோள் வினைமுற்று.*

எள்ளா : *ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.*

தோன்ரு : *முற்றெச்சம்.*

இவரே : *ஏகாரம் பிரிநிலை.*

குறிப்பு : அறவுரைப் பகுதியில் வந்துள்ள அணிகளைக் கருத்தில் இருத்துக.

III. கதை

1. சிலப்பதிகாரம்

1. சிலப்பதிகாரம் : பெயர்க் காரணம் எழுதுக.

2. சிலப்பதிகாரத்தின் பெருமையைச் சுருக்கி வரைக.

3. இளங்கோவடிகளுடைய வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

4. மங்கலவாழ்த்துப் பாடல் : விளக்குக.

(1, 2, 3, 4 *ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.*)

5. இளங்கோவடிகள் எவற்றை வாழ்த்தியுள்ளார் ?

இளங்கோவடிகள் சந்திரன், சூரியன், மழை, புகார் நகரம் ஆகியவற்றை வாழ்த்தியுள்ளார்.

6. சந்திரனை வாழ்த்துவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது?

சோழனது குளிர்ச்சியை உடைய வெண்குடைபோன்று, இவ்வுலகிற்குப் பொது அற அருள் செய்கின்ற காரணத்தால் சந்திரனை வாழ்த்துவோம் என்கின்றார் ஆசிரியர்.

நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணம்.

7. சூரியனைப் போற்றுதற்கு ஆசிரியர் கூறுங் காரணம் யாது ?

சோழனது ஆணைச் சக்கரம்போல மேருவை வலமாகத் திரிகின்ற காரணத்தால் சூரியனைப் போற்றுவேம் என்கின்றார் ஆசிரியர்.

8. காவிரி நாடன் : விளக்குக.

காவிரி நாடன் சோழன் ஆவான். காவிரி பாய்கின்ற சோழ நாட்டை ஆள்பவனாதலால் சோழன் 'காவிரி நாடன்' எனப்பட்டான். சோழ நாட்டைத் தாய்போல் வளர்ப்பது காவிரியாறேயாகும். காவிரி யாறு சோழ நாட்டை வளப்படுத்துகின்ற காரணத்தால் சோழ நாட்டிற்குக் 'காவிரி நாடு' என்று பெயர் வந்தது.

9. மழையைப் போற்றுதற்கு ஆசிரியர் கூறுங் காரணம் யாது ?

உலகிற்குச் சோழ மன்னன் அருள் செய்யுமாறுபோல, மேலாகி நின்று தன் பெயலால் வளஞ் சுரக்கின்ற காரணத்தால் மழையைப் போற்றுவேம் என்கின்றார் ஆசிரியர்.

10. பூம்புகாரைப் போற்றுதற்கு ஆசிரியர் கூறுங் காரணம் யாது ?

உலகின்கண் தோன்றுதொட்டே சோழன் குலத்தோடு பொருந்தி உயர்ந்து பரந்து நடக்கின்ற காரணத்தால் பூம்புகாரைப் போற்றுவேம் என்கின்றார் ஆசிரியர்.

11. சோழ மன்னனை இளங்கோவடிகள் மறைமுகமாக எவ்வாறு புகழ்ந்துள்ளார் ?

சந்திரனுக்கு உவமை கூறுவார்போலச் சோழனுடைய குளிர்ந்த குடையைப் புகழ்ந்துள்ளார் ஆசிரியர். இவ்வாறே மேருவை வலமாகத் திரியும் சூரியனுக்கு உவமை காட்டுவார்போலச் சோழனுடைய ஆணைச் சக்கரத்தையும், மேலாகி நின்று தன் பெயலால் வளஞ் சுரக்கின்ற மழைக்கு உவமை கூறுவார்போலச் சோழனுடைய அருளையும், பூம்புகாரின் தொன்மையை விளக்குவார்போலச் சோழர் குலத்தின் தொன்மையையும் ஆசிரியர் புகழ்ந்துள்ளார்.

12. முழுதுணர்ந்தோர் ஒடுக்கம் கூறுர் : எவற்றுக்கு ? ஏன் ?

பொதியின் மலை, இமயமலை, பூம்புகார் ஆகிய மூன்றுக்கும் முழுதுணர்ந்தோர் ஒடுக்கம் கூறுர். அம்மூன்றும் சலிபபின்றி நிலைபெற்றன என்றே அவர்கள் கூறுவர். இம்மூன்றின்கண்ணும் உயர்ந்தோர் இருத்தலாலேயே அவர்கள் அவ்வாறு கூறுவர்.

13. பதியெழுவறியாப் பழங்குடி : விளக்குக.

'பதியினின்றும் பெயர்தலை அறியாத பழங்குடிகள்' என்பது இதற்குப் பொருளாகும். அஃதாவது புகார் நகரில், அவ்விடத்தி

யின்றும் பெயர்தலை அறியாத பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பது கருத்து. செல்வம் மிகுதியாக இருந்தமையாலும், பகை யின்மையாலும் அந்நகரில் அத்தகைய பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர்.

14. இளங்கோவடிகள் புகார் நகரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

"புகார் பொதியின்மலைபோலவும், இமயமலை போலவும் சலிப்பின்றி நிலைபெறுவது. அங்கு வாழும் குடிமக்கள் அவ்விடத்தி னின்றும் பெயர்தலை அறியார். அந்நகருக்கு முடிவே இல்லை. அந் நகர் தொன்றுதொட்டுச் சோழர் குலத்தோடு பொருந்தி உயர்ந்து பரந்து நடந்து வருவது. சுவர்க்கம்போன்ற இன்பத்தையும், நாகர் உலகு போன்ற புகழையும் அந்நகர் கொண்டுள்ளது" என்று இளங் கோவடிகள் புகார் நகரைப் புகழ்ந்துள்ளார்.

15. "நாகநீள் நகரொடு நாகநா டதனொடு போகநீள் புகழ் மன்னும் புகார்நகர்": பொருள் எழுதி விளக்கி, ஈண்டுள்ள அணியையும் குறிப்பிடுக.

(விடையைச் சிலப்பதிகாரப் பகுதியின் 21, 22-ஆம் அடிகளுக்கு அமைந்த பதவுரையின்கண்ணும், விளக்கவுரையின்கண்ணும் காண்க.)

16. "ஈகைவான் கொடியன்னாள்" — யாவள்? விளக்குக.

ஈகைவான் கொடியன்னாள் கண்ணகி. 'ஈகை' என்பது 'பொற் கொடி' என்று பொருள்படும். பொற்கொடிபோன்ற இயல்புடைய வளாதலால் கண்ணகி அவ்வாறு சுட்டப்பட்டாள். இனி, 'வான் கொடி' என்பதற்கு 'வானவல்லி' என்று பொருள் கொண்டு, பொற் கொடியும் வானவல்லியும்போன்ற இயல்புடையவள் கண்ணகி என்றும் கொள்ளலாம்.

17. கண்ணகி எவ்வாறு புகழப்பட்டுள்ளாள்?

"கண்ணகி பொற்கொடியும், பூங்கொம்பும், வானவல்லியும் போன்ற இயல்புடையவள். தாமரைப் பூவில் பொருந்திய திருமகளின் புகழுடை வடிவு கண்ணகியின் வடிவை ஒக்கும். அருந்ததியின் கற்பு கண்ணகியின் கற்பைப் போன்றதே. கண்ணகியைப் பெண்டிர் அனை வரும் தொழுது ஏத்துவர்" என்று கண்ணகி புகழப்பட்டுள்ளாள்.

18. மாதரார் கண்ணகியை எவ்வாறு தொழுது ஏத்துவர்?

தாமரைப் பூவில் பொருந்திய திருமகளின் புகழுடை வடிவு கண் ணகியின் வடிவை ஒக்கும் என்றும், அருந்ததியின் கற்பு கண்ணகி யின் கற்பை ஒக்கும் என்றும் கூறிக் கண்ணகியை மாதரார் தொழுது ஏத்துவர்.

19. தீதிலா வடமீனின் திறம்: விளக்கம் கூறுக.

தீதிலா வடமீனின் திறம்: குற்றமற்ற அருந்ததியின் கற்பு. அருந்ததி என்பவள் குற்றமற்ற கற்பினை உடையவள் என்றும், அவள் நட்சத்திரத்தின் உருவில் வானத்தே வடபுறத்தில் உள்ளாள் என்றும் புராணம் கூறுகிறது. 'தீது' என்பது 'பிறர் நெஞ்சு புகுதல்' ஆகும். பிற ஆடவர் தம் மனத்தினால் விரும்பி நினைக்கப் படாத தன்மை கற்புடைப் பெண்டிர்க்கு அமைய வேண்டும் என்பர். 'திறம்' என்பது ஈண்டுக் கற்பினைக் குறிக்கும்.

20. மாசாத்துவான் என்பவன் யாவன்? அவன் எத்தகையவன்?

மாசாத்துவான் என்பவன் கோவலனது தந்தையாவான். அவன் புகார் நகரில் வாழ்ந்த பெருங்குடி மக்களைத் தன் உறவினராகப் பெற்றிருந்தான். அவனிடம் பெருஞ் செல்வம் இருந்தது. அச்செல்வம் அறநெறியினாலேயே ஈட்டப்பட்டதாகும். அத்தகைய செல்வத்தை அவன் வறியவர்க்கு வழங்கினான்

21. வருநிதி, இருநிதி: விளக்குக.

'வருநிதி' என்னுஞ் சொற்றொடர் அறநெறியால் வரு பொருள் என்றும், கலத்தினும் காலினும் வரு பொருள் என்றும் பொருள்படும்.

'இரு நிதி' என்னுஞ் சொற்றொடர் பெருஞ் செல்வம் என்றும், சங்கநிதி, பதுமநிதி ஆகிய இருவகை நிதிகள் என்றும் பொருள்படும். சங்கநிதியும், பதுமநிதியும் தேவர் உலகில் உள்ளன என்றும், யார் எதனைக் கேட்டாலும் தர வல்லவை என்றும் நூலோர் கூறுவர்.

22. ஈராறாண்டு அகவையாள்; ஈரெட்டாண்டு அகவையான்; விளக்குக.

ஈராறாண்டு அகவையாள்: பன்னீராண்டிற்கு உட்பட்ட பிராயத்தினள் ஆயினாள் கண்ணகி.

ஈரெட்டாண்டு அகவையான்: பதினாறாண்டுக்கு உட்பட்ட பிராயத்தான் ஆயினான் கோவலன். தலைவி பதினோராண்டும், பத்துத் திங்களும் புக்கவளும், தலைவன் பதினைந்தாண்டும், பத்துத் திங்களும் புக்கவனும் ஆகல் வேண்டும் என்றும், அவர்கட்குக் களவொழுக்கம் இரண்டு திங்கள் நடைபெறும் என்றும், முடிவில் இருவர்க்கும் திருமணம் நடத்தல் இயல்பென்றும் அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. அவற்றுக்கு ஏற்பவே கண்ணகிக்கும், கோவலனுக்கும் ஈண்டுப் பிராயங்கள் கூறப்பட்டுள்ளன.

23. கோவலன் எவ்வாறு புகழப்பட்டுள்ளான்?

"கோவலன் பூமி சிறுகும்படி வளர்ந்த புகழை உடையவன்; பெண்டிர் கூட்டத்தில், செவ்வேள் என்று யாவராலும் பாராட்டப்

பெறுபவன்; காமக் குறிப்பினை உட்கொண்டு மடவாரால் ஏத்தப்படு பவன்; கொடையும், வீரமும், அழகும் ஒருங்கே அமையப்பெற்றவன்" என்று கோவலன் புகழப்பட்டுள்ளான்.

24. இளங்கோவடிகள் முதற்கண் கண்ணகியைப் புகழ்ந்து கூறினமைக்குக் காரணம் யாது ?

கண்ணகி கற்புடைப் பெண். கற்புடைப் பெண்ணை ஏத்துதலே இளங்கோவடிகளின் கருத்தாகும். மேலும், சிலப்பதிகாரக் கதைக்கு நாயகி கண்ணகியேயாவாள். இத்தகைய காரணங்கள்பற்றியே இளங்கோவடிகள் கோவலனுக்கு முன்னதாகக் கண்ணகியைப் புகழ்ந்து கூறினார்.

25. "மடவார் ஏத்தும் கிழமையான்" என்பதற்கு அடியார்க்கு நல்லார் சொல்லும் பொருள் யாது? விளக்குக.

'மடவார்' என்னுஞ் சொல், பூமாது, கலைமாது, சயமாது, புகழ் மாது, புவிமாது ஆகியோரைக் குறிக்கும் என்றும், அழகிற்கும், அறி விற்கும், ஆண்மைக்கும், புகழுக்கும், பொறுமைக்கும் இவனே பெயர் பெற்றவன் என்று அம்மாதரார் ஏத்தும் உரிமையை உடையவன் கோவலன் என்றும் அடியார்க்கு நல்லார் பொருள் கூறுகின்றார். அழகிற் சிறந்த பூமாதும், அறிவிற்குப் பெயர் பெற்ற கலைமாதும், ஆண்மைக்குரிய கடவுளாகிய சயமாதும், புகழ்க் கடவுளாகிய புகழ் மாதும், பொறுமைக்குப் பெயர் பெற்ற புவிமாதும் கோவலனை ஏத்தினர் என்பது அடியார்க்கு நல்லாரின் கருத்தாகும்.

26. மாநகர்க்கு ஈத்தார் மணம் : யாவர்? எவ்வாறு?

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடித்து வைக்க விரும்பினர் அவர்களுடைய பெற்றோர்கள். எனவே, அவர்கள் அத்திருமணம் என்னும் மகிழ்ச்சியை நகர மக்கட்கு அறிவித்தனர். யானையின் புறக்கழுத்தின்மேல் மங்கல மகளிரை இருத்தி, நகர் வலஞ் செய்வித்து, நகர் மக்களுக்கு அச்செய்தி அறிவிக்கப்பட்டது.

27. இலக்கணக் குறிப்பு வரைக:

நாம(நீர்), பூம்புகார், (இமயம்) ஆயினும், வருநிதி, (ஒரு பெரு) நாளால்.

நாம(நீர்): 'நாம்' என்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது.

பூம்புகார் : மெலித்தல் விகாரம்.

(இமயம்) ஆயினும் : 'ஆயினும்' என்பது ஓர் எண்ணிடைச் சொல்.

வருநிதி : வினைத்தொகை.

(ஒரு பெரு) நாளால் : 'நாளால்' என்பது ஈண்டு, 'நாளில்' என்று பொருள்படுதலால் வேற்றுமை மயக்கம்.

2. கம்பராமாயணம்

1. கம்பராமாயணம்: இலக்கணக் குறிப்பு எழுதுக.

2. 'கம்பர்' என்று பெயர் வரக் காரணம் யாது?

3. கம்பர் இராமாயணம் பாடிய காரணம் யாது ?

(1, 2, 3 ஆகிய வினாக்களுக்கு உரிய விடைகளை இப்பகுதியின் முன்னுரையிற் காண்க.)

4. கையடை : விளக்கம் எழுதுக.

"கையடை யடைக்கலம்" என்று திவாகர நிகண்டு கூறுகிறது. எனவே, கையடை என்பது அடைக்கலம் என்று பொருள்படும். அடைக்கலமாவது, போற்றி வைத்திருந்து பின்பு தன்னிடம் தருமாறு ஒருவன் ஒரு பொருளை மற்றொருவனிடத்தில் கொடுத்து வைப்பதாகும். இனி, 'கையடை' என்பதற்கு, 'ஒருவனது கையை அடைதல்' என்றும், 'ஒருவனது கையில் சேர்வது' என்றும் பொருள் கூறலாம்.

5. தசரதனது அரசவை மண்டபம் எவ்வாறு சிறப்பிக்கப் பெற்றுள்ளது ?

"தேவர்கள் தசரதனது அரசவை மண்டபத்தைக் கண்டால், இது இந்திர சபையோ என்று ஐயுறுவர். ஐயுறுவதுடன் நில்லாது அவர்கள் இந்திர சபையே இது என்று துணிவும் கொள்வர். நினைப்பதற்கும் அரிய சிறப்பினை உடையது தசரதனது அரசவை மண்டபம். அஃது இரத்தினங்களால் கட்டப்பெற்றுப் பொலிவுடன் விளங்கியது" என்று தசரதனது அரசவை மண்டபம் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

6. "நனைவரு கற்பக நாட்டு நன்னகர் அனைவரும் அனைதர அயிர்க்கும்" — ஈண்டமைந்துள்ள அணிகளைப் புலப்படுத்துக.

தசரதனது அரசவை மண்டபத்தைக் காணும் தேவர்கள், இஃது இந்திர சபையோ என ஐயுறுவர் என்று தசரதனது அரசவை மண்டபம் மிக உயர்த்திக் கூறப்படுகின்றதாதலால் ஈண்டு உயர்வு நவிற்சியணியுள்ளது. தேவர்க்கு ஐயம் வரும் என்று கூறியதால் ஈண்டு ஐயவணியும் அமைந்துள்ளது.

7. தசரதனைக் கண்ட தேவர்கள் எவ்வாறு ஐயங்கொண்டனர்? பின்பு அவ்வையம் எவ்வாறு நீங்கப் பெற்றனர் ?

தசரதனுடைய தோற்றத்தையும், செல்வத்தையும் மண்டபத்தின் சிறப்பையுங் கண்ட தேவர்கள், அவன் இந்திரனே போலும் என்று ஐயம் உற்றனர். பின்பு, "இந்திரனுயின் ஆயிரங் கண்கள் இருக்க வேண்டும். இவனுக்கோ இரண்டு கண்களே உள்ளன. எனவே, இவன் இந்திரன் அல்லன்" என்று ஐயம் நீக்கப் பெற்றனர்.

8. விசுவாமித்திரன் எத்தகையவன்?

உயிர்கள் எல்லாவற்றையும், உலகங்களையும், தேவர்களையும், பிரமதேவனையும் இப்பொழுதே படைக்கின்றேன் என்று படைக்கத் தொடங்கிய தவ வலிமை உடையவன் விசுவாமித்திரன். அவன் பிரமனது மரபில் தோன்றியவன்; கௌசிகன் என்னும் பெயரை உடையவன்; அரச முனிவன்; சினத்திற்குப் பெயர் பெற்றவன்.

9. துனியுறு முனிவன் யாவன்? விளக்குக.

துனியுறு முனிவன் எனப்பட்டவன் விசுவாமித்திரன். அவன் பெருஞ் சினம் உடையவனாதலால் 'துனியுறு முனிவன்' எனப்பட்டான்.

10. "கந்தமலரிற் கடவுள் தன் வரவு காணும் இந்திரன் என" — ஈண்டுள்ள உவமையை விளக்குக.

(விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 4-ஆம் செய்யுளின் விளக்கவுரையின்கண் காண்க.)

11. தசரதன் விசுவாமித்திரனை எங்ஙனம் உபசரித்துத் துதித்தான்?

விசுவாமித்திரன் வந்தவளவில், தசரதன் அம்முனிவனை வணங்கி, பொன்னாசனத்தில் அவனை விருப்பத்துடன் இருத்தி, அவனுடைய திருவடிகளை அருச்சித்து, "என் ஊழ்வினைத் தொடர்ச்சி இன்றே அழிந்து போய்விட்டது. என்னுடைய நாடும், நானும் செய்த தவத்தால் தாங்கள் இங்கு வந்தீர்கள் என்று யான் நினைக்கவில்லை. என் குலத்து முன்னோர் செய்த தவப்பயனாலேயே தாங்கள் இங்கு எளிதில் வந்தீர்கள்" என்று இனிது கூறினான்.

12. விசுவாமித்திரன் தசரதனை எவ்வாறு புகழ்ந்தான்? அல்லது விசுவாமித்திரன் தனது வருகைக்குக் கூறிய காரணம் யாது?

விசுவாமித்திரன் தசரதனைப் பார்த்து, "என்போன்ற முனிவர்களும், தேவர்களும் துன்பம் ஒன்றினை அடைவரேயானால் சிவபிரான் தங்கும் கைலையை, திருமால் தங்கும் பாற்கடல், பிரமன் வாழும் சத்திய உலகம், இந்திரன் வாழும் அமராவதி, உனது அயோத்தி ஆகிய ஐந்திடங்களையே அடைவர். எங்களுக்குத் துன்பம் வந்த காலத்தில் அடைக்கலம் அளிக்க வல்லவர்கள் நீங்களேயாவீர்கள். உங்களுக்குள் ஒருவனாகிய இந்திரன் சம்பரனிடம் தோற்று உன்னிடம் அடைக்கலம் புகுந்தான். அவ்வாறு வந்த இந்திரனுக்குத் துணை செய்யும்பொருட்டு, நீ சம்பரனுடன் போர் செய்து, அவ்வசுரனைக் கொன்றாய். உன் உதவியால் இந்திரன் தனது நாட்டைப் பெற்றான். எனவே ஏனையோரினும் நீயே ஏற்றம் உடையவன். அதனாலேயே யான் உன்

னிடம் வந்தேன்" என்று புகழ்ந்து கூறித் தன் வருகைக்குரிய காரணத்தைக் கூறினன்.

13. அயோத்தி எவ்விடங்களுடன் இனப்படுத்தப் பெற்றுள்ளது? ஆண்டு அமைந்துள்ள அணி யாது?

கைலைமலை, திருப்பாற்கடல், சத்திய உலகம், அமராவதி ஆகிய இடங்களுடன் அயோத்தி இனப்படுத்தப் பெற்றுள்ளது. ஏனைய இடங்களுடன் அயோத்தியையும் ஒப்புமையமைய உடன் வைத்தது ஒப்புமைக் கூட்ட அணியாகும்.

14. "பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரை"—: விளக்கி, ஈண்டமைந்துள்ள அணியைக் குறிப்பிடுக.

"பலமலைகளையும் இகழ்ந்து சிரிக்கின்ற வெள்ளி மயமான குளிர்ந்த கைலைமலை" என்பது இச்சொற்றொடர்களின் பொருளாகும். கைலைமலை வெண்பனி மூடிய மலையாகும். எனவே, அது வெள்ளிமயமாகக் காட்சியளிக்கின்றது. அதன் தோற்றத்திற்குக் கம்பர், "கைலைமலை பிறமலைகளைப் பார்த்து இகழ்ந்து சிரிக்கின்றது. ஏனைய மலைகளினும் தனக்கேஏற்றம் உள்ளதெனக் கருதியே அது சிரிக்கின்றது" என்று தமது கற்பனையைக் கைலைமலைக்கு ஏற்றிக் கூறுகின்றார். புலவர் இவ்வாறு தம் கற்பனைக் குறிப்பை, அக்குறிப்பு இல்லாத கைலைமலைக்கு ஏற்றிக் கூறியது தன்மைத் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

15. தேவரினும் தசரதன் சிறந்தவன் என்பதனை விசுவாமித்திரர் எவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்?

"சிவபிரான், திருமால், பிரமன், இந்திரன், தசரதன் ஆகிய ஐவரும் தம்மிடம் அடைக்கலம் என்று வந்தோரை ஆதரிக்கும் இயல்புடையவர்கள். அத்தகைய ஐவருள் ஒருவனாகிய இந்திரன், சம்பரன் என்ற அசுரனிடம் தோற்று அடைக்கலம் புகுந்த காலையில், சம்பரனைக் கொன்று, இந்திரனுக்குரிய நாட்டைப் பெற்றளித்தான் தசரதன். எனவே, தசரதன் தேவர்களைக் காட்டிலும் சிறந்தவன் என்று விசுவாமித்திரர் எடுத்துக் கூறியுள்ளார்.

16. சம்பரனது வரலாற்றை வரைக அல்லது "நீ கொண்டு அன்றளித்த அரசன்றோ புரந்தரன் இன்றுள்கின்றது" — இடஞ்சுட்டி விளக்குக.

(விடையை உங்களுடைய கம்பராமாயணப் பகுதியின் 8-ஆம் பாடலின்கீழ் அமைந்த விளக்கவுரைப் பகுதியின்கண் காண்க)

17. "அரசெய்தியிருந்த பயன் எய்தினன்" — இடஞ்சுட்டி விளக்கம் தருக.

விசுவாமித்திரன் தனது வருகைக்குரிய காரணத்தைக் கூறுங்கால், தசரதனைப் பெரிதும் புகழ்ந்தான்; தேவரைக் காட்டிலும்

சிறந்தவன் தசரதனே என்று புகழ்ந்தான். அவற்றைக் கேட்ட தச ரதன், மகிழ்ச்சியடைந்து, "யான் அரசெய்தியிருந்த பயனை இன்று எய்தினேன். பெருந்தவம் செய்த தாங்கள் என்பால் வருதலை யான் பெற்றேன்" என்று கூறி, இனித் தான் செய்ய வேண்டுவது யாது என்று முனிவனிடம் கேட்டான்.

18. "உயிர் இரக்கும் கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்"— யாவன்? உவமையை விளக்குக.

தசரதனிடம் வந்த விசுவாமித்திரன் அவனைப் பெரிதும் புகழ்ந் தான். அதுபொழுது தான் செய்ய வேண்டுவது யாது எனத் தசரதன் கேட்க, விசுவாமித்திரன், "யான் இயற்றும் யாகத்தை அரக் கர்கள் தடை செய்யாமல் காக்கும்பொருட்டு, நீ உன்னுடைய புதல் வருள் கருநிறம் வாய்ந்தவனாகிய இராமனைத் தருக" என்று கேட்டான். முனிவன் அவ்வாறு கேட்டமையைக் கம்பர், "உயிரை இரக்கும் கொடிய இயமனைப்போல, தசரதனது மனம் வருந்துமாறு, இப்படிக் கேட்டான்" என்று கூறுகின்றார். தசரதனுக்கு உயிர் போன்றவன் இராமன். அத்தகைய உயிர்போன்ற இராமனைத் தருமாறு விசுவாமித்திரன் கேட்டமை, இயமன் தசரதனது உயிரைக் கேட்டதுபோல் இருந்தது. ஈண்டு உயிர் போன்றவன் இராமன். இயமன் போன்றவன் விசுவாமித்திரன். தன் உயிர்போன்ற இரா மனைத் தருமாறு விசுவாமித்திரன் கேட்டதால் தசரதன் மனம் மிக வருந்தினான்.

19. "தவம் செய்வோர்கள் வெருவரச் சென்று அடைகாம வெகுளியென" — உவமையை விளக்குக.

(விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 10-ஆம் பாடலுக்கு அடியில் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க)

20. தசரதனது சோக நிலையைக் கம்பர் எவ்வாறு கூறியுள் ளார்?

"இராமனைத் தருமாறு விசுவாமித்திரன் தசரதனைக் கேட்டான். தன் உயிர்போன்ற இராமனைத் தருமாறு கேட்டதால் தசரதன் பெரு வருத்தம் அடைந்தான். விசுவாமித்திரன் கூறிய சொல், பகைவரது வேல் பாய்ந்ததால் மார்பில் உண்டான புண்ணில், கொள்ளிக்கட்டை பாய்ந்ததுபோன்ற துன்பத்தை தசரதனுக்கு உண்டாக்கியது. அதனால் தோன்றிய துன்பம் தசரதனது உயிரை வெளியே தள்ளியது. அங்ஙனம் வெளியே தள்ளப்பெற்ற உயிரானது ஊஞ்சலாடுவதைப் போல் போவதும் வருவதுமாக இருந்தது. பிறவிக் குருடன் ஒருவன் கண்களைப் பெற்று, மீண்டும் இழந்தாற்போன்றதொரு பெருந் துன் பத்தைத் தசரதன் அடைந்தான்" என்று தசரதனது சோக நிலையைக் கம்பர் கூறியுள்ளார்.

21. **எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல் யாது? அது தசரதனது காதிற் புகுந்ததற்குக் காட்டப்பட்ட உவமை யாது? அல்லது "மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தால் என" உவமையை விளக்குக.**

(இதற்குரிய விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 11-ஆம் பாடலின்கீழ் அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.)

22. **"கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான் கடுந் துயரம்" — உவமையை விளக்குக.**

(முன் வினாவிற்குரிய விடை அமைந்திருக்கும் பகுதியிலேயே இதற்குரிய விடையையும் காண்க.)

23. **விசுவாமித்திரன், இராமனைத் தருமாறு கேட்டமைக்கு வருந்திய தசரதன் அவனிடம் யாது கூறினான்? அல்லது விசுவாமித்திரனுக்குச் சினம் ஏன் வந்தது?**

இராமனைத் தருமாறு விசுவாமித்திரன் கேட்ட அளவில் தசரதன் பெருவருத்தம் அடைந்தான். பிறகு அவன் ஒருவாறு தேறி, முனிவனைப் பார்த்து, "பெரியோய்! இந்த இராமன் இளைஞன்; படைப் பயிற்சியில்லாதவன்; அ ர க் க ரு ட ன் போர் செய்வதற்கேற்ற ஆற்றல் இல்லாதவன். எனவே, யானே வருகின்றேன்; தாங்கள் செய்யும் யாகத்தை யாரும் தடை செய்யாதவாறு காக்கின்றேன். சிவபிரான், இந்திரன், பிரமன் ஆகியோர் தடுப்பதாயினும் யான் அவர்களை அப்புறப்படுத்தி, தங்கள் யாகம் இனிது நிறைவேறும் வண்ணம் செய்கின்றேன். இப்பொழுதே பெரு வேள்வி செய்ய எழுந்தருளுங்கள்' என்றான். இவ்வுரையைக் கேட்ட விசுவாமித்திரனுக்குச் சினம் உண்டாகியது.

24. **சிவபிரான், இந்திரன், பிரமன் ஆகியோர் விசுவாமித்திரன் செய்யும் வேள்விக்கு இடையூறு செய்யக் கூடும் என்று தசரதன் ஏன் நினைத்தான்?**

(விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 12-ஆம் பாடலின் கீழ் உள்ள விளக்கவுரையின்கண் காண்க.)

25. **விசுவாமித்திரன் சினங்கொண்ட நிலையைக் கம்பர் எவ்வாறு வருணித்துள்ளார்? அல்லது கம்பர் வெகுளிச் சுவையை அமைப்பதில் வல்லவர் என்பதற்குச் சான்று காட்டுக.**

இராமன் இளையனாகலால் தானே வருவதாகவும், யாகத்தைக் காப்பதாகவும் தசரதன் கூறியவளவில், விசுவாமித்திரனுக்குப் பெருங் கோபம் உண்டாயிற்று. அந்நிலையை வருணிக்குங்கால் கம்பர், "தசரதனது சொல்லைக் கேட்ட அளவில் விசுவாமித்திரன் சினத்துடன் எழுந்தான். அவ்வளவில் சூரியன் மறைந்தது. உலகத்தில் இருந்த எல்லாப் பொருள்களும் சுழன்றன. திசைகளெல்லாம் இருண்டன.

இவற்றைக் கண்ட தேவர்கள், 'இஃது உலகத்தின் இறுதிக் காலம்' என்றும், 'அஃதன்று; வேறு ஏதோ பெருந் தீங்கு வரப்போகின்றது' என்றும் எண்ணினர். சினத்தால் முனிவருடைய புருவ நுனிகள் மேலேறியனவாய், நெற்றி முழுவதும் பரந்தன; கண்கள் சிவந்தன. முனிவருக்குச் சின நகையும் உண்டாயிற்று" என்கின்றார். இவ்வருணனையிலிருந்து கம்பர் வெகுளிச் சுவையை அமைப்பதில் வல்லவர் என்பதனை நாம் உணரலாம்.

26. விசுவாமித்திரனது பெருஞ்சினத்தைக் கண்ட வசிட்டன் தசரதனிடம் யாது கூறினான்?

விசுவாமித்திரனது பெருஞ்சினத்தைச் கண்ட வசிட்டன், தசரதனைப் பொறுக்குமாறு விசுவாமித்திரனை வேண்டிக்கொண்டு, பின்பு தசரதனைப் பார்த்து, "அரசே! உனது மகனுக்கு இடைத்தற்கரிய பெருநன்மைகள் வந்து சேர்கின்ற காலம் இது. அவற்றை நீ தடுக்கலாமோ? மழையினாற் பெருகும் வெள்ளங்களெல்லாம் முடிவிற் கடலினிடம் சேர்கின்றன. அவ்வாறே விசுவாமித்திர முனிவன் அறிந்துள்ள எல்லா வித்தைகளும் உன் மகனிடம் வந்து சேரப் போகின்றன. அவ்வாறு சேர்தற்குரிய நாள் வந்துவிட்டது. இராமனை முனிவனுடன் அனுப்புக" என்று கூறினான்.

27. "பெருகு வெள்ளம்போய் மொய்கொள் வேலைவாய் முடுகுமாறுபோல்" — உவமையை விளக்குக.

(விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 15-ஆம் பாடலின் கீழே உள்ள விளக்கவுரையின்கண் காண்க.)

28. அறிவின் உம்பரான்: யாவன்? விளக்குக.

'அறிவின் உம்பரான்' எனப்பட்டவன் இராமன். இராமன் திருமாலின் அவதாரம் ஆவான். இன்ன தன்மையன் என்று தேவர்களாலும், மக்களாலும் நன்கு உணரப்படாதவன் திருமால். அவன் எல்லோருடைய அறிவுக்கும் அப்பாற்பட்டவன். எனவே திருமாலின் அவதாரமாகிய இராமன், 'அறிவின் உம்பரான்' எனப்பட்டான்.

29. இராமனையும், இலக்குவனையும் அடைக்கலமாகத் தருங்கால் தசரதன் விசுவாமித்திரனிடம் யாது கூறினான்?

இராமனையும், இலக்குவனையும் அடைக்கலமாகத் தருங்கால் தசரதன், விசுவாமித்திர முனிவனைப் பார்த்து, "என் தந்தைபோல் பவனே! இச்சிறுவர் இருவர்க்கும் இனி நீயே தந்தையாவாய்; தாயும் ஆவாய். இவர்களை உன்னிடம் அடைக்கலமாகத் தந்துவிட்டேன். இனி, இவர்கட்கு ஆகவேண்டியவற்றையெல்லாம் செய்தருள்வாயாக" என்று கூறினான்.

30. "கரிய செம்மல் ஒருவனைத் தருக" என்று முனிவன் கேட்டதற்குத் தசரதன் ஏன் இருவரைத் தந்தான்?

(விடையைக் கம்பராமாயணப் பகுதியின் 17-ஆம் பாடலின் கீழே அமைந்துள்ள விளக்கவுரையின்கண் காண்க.)

பெருக்காற்று இடிகரை ஒத்தது இளமை.

31. இலக்கணக் குறிப்பு வரைக :

(நான்முகனை)யும் (படைப்பன்), செற்றுபு, நறுந்தேன், உவகைக் கடல், கடைத்தலை, எழுக, சிவந்தன இருண்டன, செய்கென்றான்.

(நான்முகனை)யும் : உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; உயர்வு சிறப்பும்மையாகவும் கொள்ளலாம்.

செற்றுபு : 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

நறுந்தேன் : பண்புத் தொகை.

உவகைக் கடல் : உருவகம்.

கடைத்தலை : 'தலைக்கடை' என்பது 'கடைத்தலை' என வந்தது இலக்கணப் போலி.

எழுக : வியங்கோள் வினைமுற்று.

சிவந்தன இருண்டன : தொடைமுரண்.

செய்கென்றான் : செய்க + என்றான் = செய்கென்றான் ; அகரம் மறைந்தது தொகுத்தல் விகாரம்.

3. திருத்தொண்டர் புராணம்

1. "திருத்தொண்டர் புராணம்" — பெயர்க் காரணம் தருக. இதன் வேறு பெயர் யாது ? இதன் முதல் நூல்கள் யாவை?

1. செயற்கருஞ் செயல் செய்து சிவபெருமானின் அருள் பெற்று மேன்மையடைந்த சிவனடியார்களின் பழைய வரலாற்றைக் கூறும் நூலாதலின் இஃது இப்பெயர் பெற்றது.

2. இந்நூலின் வேறு பெயர் பெரிய புராணம் என்பதாம்.

3. இதன் முதல் நூல்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியும், தேவாரங்களும், காரைக்காலம்மையார் பிரபந்தங்களும், திருமூலர் திருமந்திரமும் ஆவன.

2. திருத்தொண்டர் புராணத்தின் ஆசிரியர் யார் ? அவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

ஆசிரியர் : சேக்கிழார்.

ஊர் : குன்றத்தூர்.

இயற்பெயர் : அருண்மொழித்தேவர்.

குலம் : வேளாளர் குலம்.

குடி : சேக்கிழார் குடி.

சிறப்புப் பெயர்கள் : உத்தம சோழ பல்லவர், தொண்டர் சீர் பரவுவார்.

ஆதரித்த அரசன் : அநபாய சோழன்.

தொழில் : அநபாய சோழனின் முதன் மந்திரி.

3. சேக்கிழாரின் சிறப்பினை வரைக.

இவர் இளமையிலேயே சைவ ஆகம நூல்களைத் தெளிவுறப் படித்துணர்ந்தவர் ; அரசனிடத்தும் அரனடியார்களிடத்தும் அளவற்ற அன்புடையவர் ; அரசியல் நடாத்தும் ஆற்றல் பெற்றவர். இவர் பக்திச் சுவை ததும்பும் இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடுவதில் தலைசிறந்தவர்.

4. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் இயற்றக் காரணம் என்ன ?

அநபாய சோழன் சைவ மதத்தைச் சார்ந்தவனாக இருந்தும், சிந்தாமணி முதலிய சைன சமயக் காப்பியங்களைக் கற்றுக் காலம் கழித்தான். அருகிலிருந்த அமைச்சராகிய சேக்கிழார், " அந்நூல்களைக் கற்றலால் இம்மை மறுமைகளுக்குப் பயனின்று" என்று எடுத்துரைத்து, அரனடியார்களின் சிறப்பும் அருட் செயல்களும் தோன்ற அவர்களுடைய வரலாறுகளைத் தெளிவாகக் கூறினார். அரசன் அகமிக மகிழ்ந்து, அவ்வரலாறுகளை ஒரு நூலாக ஆக்கித் தர வேண்டும் என்று வேண்டினான். அவ்வேண்டு கோட்கிணங்கித் தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானைப் பரவ, அவர் "உலகெலாம்" என்று அசரீரியாக அடியெடுத்துக் கொடுக்க, அதனை முதலாகக்கொண்டு சேக்கிழார் இப்புராணத்தைப் பாடி முடித்தார்.

5. திருநின்ற ஊரின் சிறப்பை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்றார் ?

நல்லொழுக்கத்தால் உயர்ந்த தொண்டை நாட்டில், நன்மையை அடைதற்குக் காரணமாகிய சிறந்த செய்திகளை மிகுதியாக உரைக்கின்ற நான்கு வேதங்களும் நன்றாக விளங்கப்பெற்றதும், பழமையினை உடையதும், உயர்குடிப் பிறப்பிற்கு முதன்மையாக வேண்டியதான தமது குல ஒழுக்கத்தில் குறைவுபடாத அந்தணரது கொள்கை நிலவி உள்ளதும், அதனால் செல்வம் மிகுந்து பொருந்தியுள்ளதுமாகிய திருநின்ற ஊர் என ஆசிரியர் கூறுகின்றார்.

6. பூசலாரின் குண நலங்களை வரைக.

திருநின்ற ஊரில் அந்தணர் குலம் நல்வாழ்வு பெற, பூசலார் அவதரித்தார். அவர் தமது தலைவராகிய சிவபெருமானுடைய திருவடிகளிலேயே கருத்தை இருத்தியவர்; தாம் வளர்வதுபோலவே தமது பக்தியும் நாள்தோறும் வளர்ந்துவரப் பெற்றவர்; வேதங்களையும், கலைகளையும் கற்றுச் சிறந்தவர்; சிவனடியார்களுக்குப் பொருளைக் கொடுத்து மகிழும் இயல்பினை உடையவர்.

7. மனோபாவனையால் பூசலார் ஆலயம் அமைத்த வரலாற்றைக் குறிப்பிடுக.

பூசலார் கண்ணுதற் கடவுளுக்குத் தமது ஊரிலே கோயில் ஒன்றைக் கட்டக் கருதிப் பலவாறு முயன்றும், மிகச் சிறிய செல்வமும் அகப்படாமையால் வருத்தமுற்று, தம் அகத்தினுள்ளேயே ஆலயத்தைக் கட்ட எண்ணி, அதற்கு வேண்டிய செல்வம் அனைத்தையும், சிந்தையினாலே தேடிச் சேர்த்துக் கொண்டார்; அவ்வாலயத்தை இனிதாகக் கட்டி முடித்து, அதனுள் சிவபெருமானைப் பிரதிட்டை செய்வதற்குரிய நன்னாள் இந்நாள் என்பதனையும் குறிப்பிட்டார்.

8. விளக்கவுரை தருக :

(1) கங்கை மடுப்பொதி வேணி ஐயர்.

(2) அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படிகளெல்லாம்.

(1) கங்கை என்னும் ஆறானது ஒரு மடுவினைப்போலத் தங்கி நிறைவதற்கு இடமாகப் பொருந்திய சடாமுடியினைக் கொண்ட தலைவராகிய சிவபெருமான்.

(2) அடிப்படை முதற்கொண்டு கீழ்ப்படை முதலாகிய அடுக்கடுக்காகச் செய்து அமைக்க வேண்டிய பகுதிகள் அனைத்தும்.

9. காடவர் கோமானைப்பற்றி நீங்கள் அறிந்தனவற்றை வரைக.

காடவர் கோமான் சிவபக்தியிற் சிறந்தவன். இவன் தன் செல்வத்தையெல்லாம் செலவழித்து, கருங்கற்களைக் கொண்டு காஞ்சிபுரத்தில் சிவாலயம் ஒன்று கட்டுவித்து, கும்பாபிடேகம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். அவன் அவ்வாறு நிச்சயித்திருந்த நன்னாளுக்கு முன்னாளில் கண்ணுதற் கடவுள் அவனது கனவில் காட்சியளித்து, "யாம் திருநின்ற ஊரில் வசிக்கும் எமது அன்பனாகிய பூசலார் பன்னாட்களாக எண்ணிக் கட்டிய ஆலயத்தினுள் நாளைக்குப் போகப் போகின்றோம். ஆதலின், நீ செய்ய எண்ணிய கும்பாபிடேகத்தை நாளைக்குச் செய்யாமல் வேறொரு நாளில் செய்க" என்றுரைத்தார். பின்னர் காடவர்கோன் கும்பாபிடேகத்தை நிறுத்தி வைத்து, திருநின்ற ஊர் சென்று பூசலாரைக் கண்டு வணங்கினான்.

10. இடஞ் சுட்டி விளக்குக :

(1) "நீ இங்கு ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய்."

(2) "செப்பிய பூசல் கோயில் செய்த தொன்றில்லை."

(1) கண்ணுதற் கடவுள் காடவர் கோமானது கனவில் தோன்றி, "நீ இந்தக் காஞ்சிபுரத்தில் கட்டிய ஆலயத்திற்குக் குடமுழுக்குச் செய்வதாகச் சம்மதித்த செய்கையினை நாளைக்குச் செய்யாமல் பின்னர் ஒரு நாள் நடத்திக் கொள்வாய்" என்று கூறினார்.

(2) காடவர்கோன் திருநின்ற ஊரை அடைந்து ஆங்குள்ளவரை நோக்கி, பூசலார் கட்டிய கோயில் யாதெனா வினவ, அவர்கள் 'நீர் சொல்லிய பூசலார் என்பவர் ஒரு ஆலயத்தையும் கட்டி முடிக்கவில்லை' என்று கூறினர்.

11. காடவர் கோமானிடம் கண்ணுதற் கடவுள் கும்பாபிடேகத்தை நிறுத்தும்படி கூறியதிலிருந்து நீங்கள் அறிவது என்ன ?

காடவர் கோமான் சிவபக்தியில் குறைந்தவன் என்று கடவுள் கருதவில்லை என்பதனையும், பூசலாரது உள்ளத்திலிருந்த சிவ பக்தியை உலகோர் உணரும்படி செய்வதற்காகவே சிவபெருமான் அப்பூசலாரைப்பற்றி அவனிடத்துக் கூறினர் என்பதனையும் நாங்கள் அறிகின்றோம்.

12. கங்கை மடுப்பொதி வேணி ஐயர், நாடமால் அறியாதார் : இத்தொடர்களில் அமைந்துள்ள கதைகளை வரைக.

(விடைகளை இப்பகுதியின் 3, 8-ஆம் செய்யுட்களின் அடியில் அமைந்த விளக்கவுரைகளின்கண் காண்க.)

13. "புரையறு சிந்தை அன்பர்" என்றது யாரை ? ஏன் ?

புரையறு சிந்தை அன்பர் என்றது பூசலார் நாயனுரை அவர் தமது அகத்திலே அமைத்த ஆலயத்தில் ஆண்டவன் ஆசை கொண்டு அமர்ந்திருந்தமையால் அவ்வாறு அவர் கூறப்பட்டார்.

14. பிரித்தெழுதுக : கற்றளி, திண்டிறல், மூதூர், பொற்கழல்.

(1) கற்றளி - கல் + தளி.

(2) திண்டிறல் - திண் + திறல்.

(3) மூதூர் - முதுமை + ஊர்.

(4) பொற்கழல் - பொன் + கழல்.

15. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக :

(1) குறைவிலா மறையோர் : இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

(2) தம்பிரான் கழல்மேற்சார : கழல் - தானியாகு பெயர்.

(3) கங்கை மடுப்பொதிவேணி ஐயர் : பொதிவேணி - வினைத் தொகை.

(4) ஏடலார் கொன்றை வேய்ந்தார் : கொன்றை - முதலாகு பெயர்.

(5) காலை ஒழிந்துபின் கொள்வாய் : கொள்வாய் - முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று.

(6) தண்டலைச் சூழல் சூழ்ந்த நின்ற ஊர்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

(7) கண்ணுதல் அருள் பெற்றெனன்றான்: கண்ணுதல் - வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

16. உறுப்பிலக்கணம் கூறுக:

(1) **போந்தார்:** போ + த் + (ந்) + த் + ஆர்; போ - பகுதி; த்-இடைநிலை; த் - சந்தி; தகரம் நகரமானது விகாரம்; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

(2) **செய்வான்:** செய் + வ் + ஆன்; செய் - பகுதி; வ் - இடைநிலை; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

(3) **சூழல்:** சூழ் + அல்; சூழ் - பகுதி; அல் - அல்தொழிற் பெயர் விகுதி.

4. குசேலோபாக்கியானம்

1. குசேலோபாக்கியானம் — பொருள் கூறுக.

குசேல + உபாக்கியானம். குசேலன் என்பதற்கு, 'கந்தலான ஆடையை அணிந்தவன்' என்பது பொருள். உபாக்கியானம் என்பதற்கு 'கிளைக் கதை' என்பது பொருளாம். குசேல முனிவரது சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது இதன் பொருளாம்.

2. இந்நூலாசிரியர் யார்? அவரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

இந்நூலாசிரியர் தேவராஜப் பிள்ளை என்பராவர். இவர் தொண்டை நாட்டிலே வல்லூரென்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் வீராசாமிப் பிள்ளை என்பவராம். இவர் கருணீகர் மரபில் தோன்றியவர். இற்றைக்குச் சற்றேறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன் இவர் வாழ்ந்தார்.

3. இந்நூலின் முதனூல்கள் யாவை?

வேப்பத்தூர் சங்கப் புலவர்களில் ஒருவராகிய ஆரியப்பப் புலவர் இயற்றிய செந்தமிழ்க் காப்பியமான பாகவதமும், ஆந்திர மொழியில் வரகவி என்பார் இயற்றிய குசேலோபாக்கியானமும் இதன் முதனூல்களாம்.

4. செல்வத்தை 'வெறுக்கை' என்று கூறக் காரணம் என்ன?

செல்வமானது ஒப்பற்ற பற்றுக்களையெல்லாம் சேர்த்துவிடும்; தெய்வத்தைப்பற்றிய எண்ணம் அகலும்படி தான் மேலோங்கி நிற்கும்; நித்திரையும் நீங்குமாறு செய்யும்; பிறவியைத் தரும். ஆதலின் ஆன்றோர் செல்வத்தை வெறுக்கை என்று கூறினர்.

5. செல்வத்தின் இழிவினை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்றார்?

கீழ்மக்களே மதித்தற்குரிய பொருள் வந்து பொருந்திய காலத்தில் பயனில்லாத அற்பமாகிய செருக்கினால் மூடப்பட்டு வாய் உள்ளவர் ஊமையர் ஆவர்; பொன்னால் ஆகிய ஆபரணத்தை அணிந்த காதுள்ளவர் மிக்க செவிடராவர்; குறிக்கும் பொருளை அடைவதற்குரிய கண்ணுள்ளாரும் குருடராவர்.

6. செல்வம் - இதற்கு இப்பெயர் வரக் காரணம் என்ன?

பலவகைக் கதிர்களைப் பரப்பி விரித்து மறைதலைச் செய்கின்ற சூரியனைப்போல வளப்பம் பொருந்திய கடல் சூழ்ந்த மண்ணுலகத்தில் பிறந்து இறக்கின்ற உங்களைவிட்டுச் சென்றுவிடுவோம் என்பதால், இதற்குச் செல்வம் என்று பெயர் வந்தது.

7. எதனை மூரிச்செல்வம் என்று ஆசிரியர் மொழிகின்றார்?

திருத்துழாய் மாலையை அணிந்து, முழுமதிபோன்ற முகத்தை உடைய இலக்குமி தனது சிவந்த கையால் மெதுவாகத் தடவுதலால் செந்நிறமடைந்து, அடியார்களது நெஞ்சத்தினுள்ளே விரைந்து புகுந்து வாழ்கின்ற, திருமாலது திருவடியினைப் பெறுதலே மூரிச் செல்வமாம்.

8. பின்வரும் உவமையை விளக்கி, உவமேயத்தோடு பொருந்துக:

பல்கதிர் விரித்துத் தோன்றிப் பாடுசெய் கதிர்.

பலவகைக் கதிர்களைப் பரப்பி உதித்து, மறைதலைச் செய்கின்ற சூரியன். அதுபோல மண்ணுலகத்தில் உதித்து இறந்துபடுகின்றனர் மக்கள். சூரியன் தோன்றி மறைதல் - உவமானம். உலகில் தோன்றி மறையும் மக்கள் - உவமேயம்.

9. பிரித்தெழுதுக:

(1) புன்செருக்கு — புன்மை + செருக்கு.
(2) பயிறரு — பயில் + தரு.
(3) மல்லனீர் — மல்லல் + நீர்.
(4) செங்கை — செம்மை + கை.

10. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக:

(1) பறியணி செவியுளார்: பறி - காரண ஆகு பெயர்.

(2) செல்வம் என்றுறுவதற்குச் செல்வம் என்று உரைக்கும் பேர் கன்று: முதலில் உள்ள செல்வம் - எதிர்காலத் தன்மைப் பன்மை வினைமுற்று; பின்னேயுள்ள செல்வம் - காரண இடுகுறிப் பெயர்.

(3) விதுமுகப் பதுமை: விதுமுகம் - உவமத்தொகை.

(4) மூரிச்செல்வம்: மூரி - பண்புப் பெயர்.

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்.

5. பாஞ்சாலி சபதம்

1. பாரதியாரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

2. பாஞ்சாலி சபதம்: பொருள் தருக. இந்நூலின் சிறப்புக்கள் யாவை?

இவ்விஞக்களுக்குரிய விடைகளைப் பாஞ்சாலி சபத முன்னுரையிற் காண்க.

3. துரியோதனன் கூறிய சுடு சொல் யாது?

துரியோதனன் "நீ பாஞ்சாலியிடஞ் சென்று நடந்ததை நவின்று, அரசவையில் உன் மைத்துனனை துரியோதனன் இருக்கின்றான்; அவனே இனி உனக்குத் தலைவன். அவன் தன் அரண்மனையில் பணிப் பெண்ணாக இருப்பதற்கு உன்னை அழைக்கின்றான் என்று கூறிக் கூட்டிக்கொண்டு வருவாயாக" என்றதே அவன் கூறிய சுடு சொல்லாகும்.

4. துரியோதனனுடைய சுடு சொல்லைக் கேட்டு விதுரன் கோபித்துக் கூறியதென்ன?

"மூட மகனே, சொல்லத் தகாத வார்த்தைகளை உன் அற்ப மதியால் சொல்லி விட்டாய். சிறுமான், புலியை எதிர்ப்பதுபோலவும், சிறு தவளை, பெரும்பாம்பைத் தாக்குவதுபோலவும், நீ பாண்டவரது கோபத் தீயை வளர்க்கின்றாய்; தெய்வத் தன்மையை உடைய பாஞ்சாலியையும் தூற்றுகின்றாய்" என்று விதுரன் சினந்து கூறினான்.

5. விதுரன் துரியோதனனுக்குக் கூறிய நீதி என்ன?

"பாண்டவர் நாளையே பழி தீர்த்துக் கொள்வார்கள். நீ, மாண்டு மண்ணில் கிடப்பாய். தன் அழிவையே தேடும் இந்த ஆண்மை எதற்கு? முன்னம் வேனன் என்னுமொருவன் தகாத செயல் செய்து, புழுப் போலத் துடித்து, மடிந்ததை நீ கேட்டதில்லையோ? பிறரை மனம் நோகப் பேசுதல்தான் நேர்மை என்று நினைத்தாயோ? சுடு சொற்கள் தீயோர் வாயிலிருந்து விரைவில் வெளிவரும்; தைத்தோர் நெஞ்சை அஃது ஊடுருவிப் பாய்ந்து, அங்கேயே நீண்ட நாள் நிலைத்திருக்கும். அது நரகத்தில் சேர்த்துவிடும்; கல்வியைத் தடுத்துவிடும். உன்னுடைய நன்மைக்கே இந்த நீதி சொல்லுகிறேன் இப்போதே சொல்லிவிட்டேன். இனி ஒரு முறை சொல்லமாட்டேன். அற்பர்களுக்கு இவ்வுலகில் இன்பம் வராது பேராசை கொண்டு குற்றங்கள் செய்கின்றீர்கள். கவுரவர்களே! இதனால் வராத கொடுமைகள் எல்லாம் வரும். பெருத்த ஆபத்து நேரும்" என்று விதுரன் துரியோதனனுக்கு நீதி கூறினான்.

6. விதுரன் எது செய்யத் தக்கது என்று துரியோதனனிடம் கூறினான்?

"கௌரவர்கள் பாண்டவர்களிடம் போய், அவர்களுடைய பாதங்களைப் பணிந்து, அவர்களிடமிருந்து பறித்துக் கொண்ட

வற்றையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு, "ஆண்டவரே யாங்கள் அறியாமையாற் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று சொல்லி, அவர்களை அவர்களுடைய நகரத்திற்கு செல்லவிட வேண்டும். இதுவே செய்யத் தக்கது. இப்படிச் செய்யாவிட்டால், நாளை பாரதப் போர் வரும். நீங்கள் அழிவீர்கள்" என்று விதுரன் துரியோதனனிடம் கூறினன்.

7. விதுரன் வார்த்தைக்குத் துரியோதனன் கூறிய மறுமொழி யாது?

"சீ, மடையா! கெடுக நீ! என்றும் எங்களைச் சபிப்பதே உனக்கு வழக்கமாயிருக்கிறது. இப்போது உன் பேச்சை இங்கே யாரும் கேட்க மாட்டார்கள்" என்று விதுரன் சொல்லுக்குத் துரியோதனன் கூறினன்.

8. துரியோதனன் தேர் பாகனுக்கு இட்ட கட்டளை யாது?

"தேர்ப்பாகனே, நீ போய் பாரதநாட்டு அரசன் கட்டளையிட்டான் எனக் கூறி அந்தப் பாண்டவரது மனைவியை அரசவைக்கு அழைத்து வா" என்று துரியோதனன் தேர்ப்பாகனுக்குக் கட்டளையிட்டான்.

9. தேர்ப்பாகன் சென்று செய்தி அறிவித்த விதம் யாது?

தேர்ப்பாகன் பாஞ்சாலியின் அரண்மனைக்குச் சென்று துக்கத்தால் தழுதழுத்த குரலுடன், "தேவி, போற்றி. அறங்காப்பவளே, போற்றி. கொடிய விதியால் உதிட்டிரர் சகுனி மாமனுடன் சூதாடி நாடு, செல்வம் முதலியவற்றையும், தம்பிமாரையும் தோற்று, தம்மையும் தம் சுதந்திரத்தையுந் தோற்று, முடிவில் உங்களையும் பந்தயம் வைத்து, (அதைச் சொல்லவும் நாவெழவில்லை) தோற்றுவிட்டார். அதனால் எல்லோரும் கூடியுள்ள சபைக்கு உங்களைக் கூட்டிவருமாறு எமது அரசன் எனக்குக் கட்டளையிட்டான்" என்றான்.

10. பாஞ்சாலி தேர்ப்பாகன் கூறிய வார்த்தைக்குச் சொன்ன மறுமொழி என்ன?

"யார் சொன்ன வார்த்தை அது? சூதாடுபவர்கள் உள்ள சபைக்குச் சிறந்த வீரக் குடியிற்பிறந்த பெண்கள் வரும் வழக்கம் உண்டோ? யார் கட்டளையால் இப்படிக் கூறுகிறாய்" என்று தேர்ப்பாகனுக்கு மறுமொழி கூறினள்.

11. பாஞ்சாலி கோபத்தோடு சொன்னதற்குத் தேர்ப்பாகன் கூறிய மறுமொழி யாது? பிறகு பாஞ்சாலி அவனுக்கிட்ட கட்டளை யாது?

"மன்னன் சுயோதனன் வார்த்தையினால் சொன்னேன்" என்று தேர்ப்பாகன் மறுமொழி கூறினன்.

பாஞ்சாலி, "நல்லது, நீ அரசவைக்குச் சென்று, எனது நாயகர், தருமபுத்திரர், முதலில் தம்மைத் தோற்றுப் பின் என்னைத் தோற்

[illegible] அல்லது முதலில் என்னைத் தோற்றுப் பின் தம்மைத் தோற்றாரா என்பதை அறிந்து வா" என்று தேர்ப்பாகனுக்குக் கட்டளையிட்டாள்.

12. பாஞ்சாலி தனியே இருந்து வருந்திய விதம் யாது ?

[illegible] தனியே தவிக்கும் மனத்தளாய், அழகு குலைந்து, மலர் விழிகளில் நீர் சோர, மனத்தை அச்சம் வருத்தப் பேய் கண்ட பிள்ளையைப் போல் பாஞ்சாலி வருந்தியிருந்தாள்.

13. தேர்ப்பாகன் திரும்பி வந்து துரியோதனனிடம் சொன்னது என்ன ?

"வாள் வேந்தே, நான் அந்தப் பெண்ணரசியை வணங்கி அரசவைக்கு அழைத்தேன். அதற்கவர் என்னை நோக்கி, 'நீ அரசவைக்குச் சென்று, தருமபுத்திரர் முதலில் தம்மைத் தோற்றுப் பின் என்னைத் தோற்றாரா அல்லது இதற்கு மாறாக முதலில் என்னைத் தோற்றுப் பின் தம்மைத் தோற்றாரா என்று அறிந்து வா' என்று கட்டளையிட்டார்; நான் வந்துவிட்டேன்" என்று கூறினான்.

14. தேர்ப்பாகன் கூறியதைக் கேட்ட துரியோதனன் சினந்துரைத்தவை யாவை ?

"ஏ, பயலே, பாஞ்சாலி கூறிய பயனற்ற வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு வந்து இங்குக் கூறுகின்றாய். கிளியைப்போன்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் அவளது பேச்சினிமையைக் கேட்க எனதுள்ளம் விரும்புகின்றது. ஆதலின் அவள் அரசவைக்கு வந்த பிறகு கேட்கவேண்டிய கேள்விகளையெல்லாம் கேட்கலாம்" என்று துரியோதனன் தேர்ப்பாகனிடம் சினந்துரைத்தான்.

15. இடஞ் சுட்டி விளக்குக :

(1) "புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது."

(2) "மாண்புயர்ந்த பாண்டவர்தாம் நொந்து போயொன்றும் நுவலாது இருந்து விட்டார்."

(1) இது விதுரன் கூறியது. துரியோதனன் விதுரனிடம் 'நீ சென்று பாஞ்சாலியை அரசவைக்கு அழைத்துக்கொண்டு வா' என்ற போது அவனிடம் இவ்வாறு கூறினான்.

விளக்கம் : அற்பர்கள் மனம் போன போக்கெல்லாம் போய்த் துன்புறுவர். ஆதலின், அவர்களுக்கு இன்பம் இவ்வவனியிலே உண்டாகாது.

(2) "எனது நாயகராகிய தருமர், என்னைத் தோற்றுத் தம்மைத் தோற்றாரா, தம்மைத் தோற்று என்னைத் தோற்றாரா" என்று பாஞ்சாலி தன்னிடம் கூறியதைத் தேர்ப்பாகன் துரியோதனனிடம் கூறிய போது பாண்டவர் பேசாதிருந்தனர்.

விளக்கம்: *பொறுமையால் உண்டான பெருமையாற் சிறந்த பாண்டவர்கள் வருத்தமுற்று ஒரு வார்த்தையுங் கூறாது இருந்துவிட்டனர்.*

16. பின்வரும் உவமைகளை விளக்கி உவமேயத்தோடு பொருத்துக:

(1) "புள்ளிச் சிறுமான் புலியைப்போய் பாய்தல்."

(2) "பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்."

(3) "பேய்கண்ட பிள்ளை."

(1) *புள்ளிகளையுடைய சிறியமான் புலியை எதிர்த்துப் பாய்தல் போல, துரியோதனன் பாண்டவர்களைப் பகைத்து அவர்களது கோபத்தியை வளர்த்தான்.*

புள்ளிச் சிறுமான் - உவமை; *துரியோதனன்* - பொருள்.

புலி - உவமை; *பாண்டவர்* - பொருள்.

(2) *தவளைக் குஞ்சு பெரிய பாம்பை எதிர்த்துச் சண்டையிடுதல் போலத் துரியோதனன் பாண்டவர்களைப் பகைத்து அவர்களது கோபத்தியை வளர்த்தான்.*

பிள்ளைத் தவளை - உவமை; *துரியோதனன்* - பொருள்.

பெரும் பாம்பு - உவமை; *பாண்டவர்* - பொருள்.

(3) *பேயைக் கண்ட குழந்தையைப் போல, தனக்குத் துரியோதனனால் என்ன அவமானம் நேருமோ என்று பாஞ்சாலி அஞ்சினள்.*

பேய் கண்ட பிள்ளை - உவமை.

பயத்தால் துன்பப்பட்ட பாஞ்சாலி - பொருள்.

17. பிரித்தெழுதுக:

(1) மொழியொணு - மொழிய + ஒணு.

(2) வெந்நரகு - வெம்மை + நரகு.

(3) வன்கொடுமை - வன்மை + கொடுமை.

18. இலக்கணக் குறிப்பு வரைக:

புவித்தலம்: *இருபெயரொட்டுப் பண்புத்தொகை.*

மாவிபத்து: *உரிச்சொற்றொடர்.*

வேந்தர் மன்னு: *ஆறும் வேற்றுமைத்தொகை.*

பார் வேந்தர்: *நான்காம் வேற்றுமைத்தொகை.*

வாழ்மனை: *வினைத்தொகை.*

துடித்த குரல்: *பெயரெச்சத்தொடர்.*

நேமித்தான் எம்மரசன்: *தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.*

வாள் வேந்தே : இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

என்னே : 'என்னும்' என்ற குறிப்பு வினையின் திரிபு.

மஞ்சன் : 'மைந்தன்' என்பதன் போலி.

கெடுக : வியங்கோள் வினைமுற்று.

ததும்பிய - 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

சொரிய - 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

19. உறுப்பிலக்கணம் கூறுக :

(1) என்றிட்டான் - என்று + இடு + ஆன் ; என்று - பகுதி ; இடு - துணைவினை ; ஆன் - விகுதி ; 'இடு' என்னும் துணைவினையி லுள்ள டு ஒற்று இரட்டித்து 'இட்டு' என்றாயிற்று.

(2) போதருவிர் - போதா + ஈர்; போதா - பகுதி ; ஈர் - முன்னி லைப் பன்மை விகுதி உயர்வுப் பன்மையில் வந்தது; 'போதா' என்பதில் 'தா' குறுக்கல் விகாரம் பெற்றது ; 'ரு' விரித்தல் விகாரமாய் வந்தது.

(3) பணித்தார் - பணி + த் + த் + ஆர்; பணி - பகுதி, த் - சந்தி ; த் - இடைநிலை ; ஆர் - பலர்பால் பன்மை வினைமுற்று விகுதி.

(4) இழந்தார் - இழ + த்(ந்) + த் + ஆர் ; இழ - பகுதி ; த் - சந்தி; த் - இடைநிலை ; ஆர் - பலர்பால் பன்மை வினைமுற்று விகுதி ; 'த்', 'ந்' ஆனது விகாரம்.

IV. பல்சுவை

1. புறநானூறு

1. புறநானூறு - குறிப்பு வரைக.

இது புறப்பொருளைப்பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய தொரு நூல் ; சங்க நூல்களாகிய எட்டுத்தொகையில் ஒன்று. இந் நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பலரால் பாடப்பட்ட தனித்தனிப் பாடல்களாகும். இப்பாடல்களின் வாயிலாக நம் பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிக மேம்பாடு, கலைச் சிறப்பு, அரசியல், போர்த் திறம், வாணிக வளம், ஈகைப் பெருமை முதலியவைகளை நாம் அறிந்து மகிழ்கின்றோம். ஆகையால் இந்நூல் சிறந்த தமிழ்க் கருவூலம் என்று சொல்லத் தக்க பெருமை யுடையதாகும். இந்நூல் தொகுக்கப்பெற்ற காலம் கி. பி. இரண் டாம் நூற்றாண்டு.

2. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரி பாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத் தொகை நூல்களாம்.

---

3. பொதுவியல், கையறுநிலை இவற்றை விளக்குக.

பொதுவியலாவது, எல்லாத் திணைகளுக்கும் பொதுவாக அமைந்த இலக்கணங்களை எல்லாம் தொகுத்துரைப்பதாம்.

கையறுநிலையாவது, மன்னவன் இறந்துபட, அவனைச் சேர்ந்தோர் அவன் இறந்த செய்தியைச் சொல்லி ஒழுக்கந் தளர்தலாம்.

4. பாரி மகளிர் இரங்கிக் கூறியவை யாவை ?

"மூவேந்தரும் முற்றியிருந்த அன்று தோன்றிய சந்திரனின் அந்த வெண்மை நிறம் பொருந்திய நிலவின்கண் எம்முடைய தந்தையை உடையவராய் இருந்தோம். எமது மலையையும் பிறர் கொள்ளவில்லை. இன்று தோன்றிய சந்திரனின் இந்த வெண்மை நிறம் பொருந்திய நிலாவின்கண் வென்று அடிக்கப்படுகின்ற முரசினை உடைய அரசர் எம்முடைய மலையைக் கொண்டனர். யாம் எமது தந்தையையும் இழந்தனம்" என்று பாரி மகளிர் இரங்கிக் கூறினர்.

5. "அற்றைத் திங்கள்" என்னும் செய்யுள் கையறு நிலையென்னுந் துறையின்பாற்படுவது எங்ஙனம் ?

(நான்காவது கேள்விக்குரிய விடையே இதற்கும் விடையாம்.)

6. "வென்றெறி முரசின் வேந்தர்" என்றது யாரை? அவர்களை அவ்வாறு கூறியது ஏன் ?

வென்றெறி முரசின் வேந்தர் எனப்பட்டவர் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களாவர். பாரியாகிய ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றதனால், ஆசிரியர் இகழ்ச்சிக் குறிப்பாக இவ்வாறு கூறினர்.

7. பிரித்தெழுதுக:

அற்றைத்திங்கள் - அன்று + திங்கள்.

வெண்ணிலவு - வெண்மை + நிலவு.

8. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக :

(1) வென்<u>றெறிமுரசின்</u> வேந்தர்: எறிமுரசு - வினைத்தொகை.

(2) <u>எம்குன்றுங்</u> கொண்டார்: எம் குன்று - ஆறும் வேற்றுமைத்தொகை.

2. முத்தொள்ளாயிரம்

1. முத்தொள்ளாயிரம் - குறிப்பு வரைக :

முத்தொள்ளாயிரம் என்ற நூல் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தர்தம் பெருமைகளை விளக்கிப் பாடப்பட்ட முத்தொள்ளாயிரம் பாடல்களை உடைய நூலாகும். மூன்று தொள்ளாயிரம் பாடல்களால் ஆகிய நூல் என்றும் இதனைக் கூறுவர். இந்நூலை இயற்றிய ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. இந்நூல் முழுதும்

கிடைக்கவில்லை. தொல்காப்பியம்போன்ற இலக்கண நூல்களில் உதாரணமாகக் கூறப்பட்ட சிற்சில பாடல்களும், புறத்திரட்டு என்ற நூலில் தொகுக்கப்பெற்ற சிற்சில பாடல்களுமே கிடைத்துள்ளன.

இந்நூல் சேர, சோழ, பாண்டியர்களின் பெருமை, நாட்டின் சிறப்பு, போர்த்திறம் போன்ற சிறந்த செய்திகளைக் காவியச் சுவையுடன் மிக அழகாக விளக்கிக் கூறுகின்றது. இந்நூல் முழுவதும் கிடைக்காதது தமிழரின் தவக் குறைவே என்று கூறலாம்.

2. யானை மறம் விளக்குக:

சோழனது யானையின் வீரத்தினைப் புனைந்துரைப்பது.

3. சோழ மன்னனது யானையின் செயலை விளக்கி வரைக.

சோழனது யானை கொடியினைக் கட்டியுள்ள மதிலிலே பாய்ந்து, அதனால் ஒடிந்த தன்னுடைய கொம்புகளுடனும், பகை மன்னரது மணி முடியைக் காலால் எற்றித் தள்ளுதலால் தேய்ந்துபோன தன்னுடைய நகங்களுடனும் விளங்கியது. அந்நிலையில் அந்த யானை தனது பெண் யானையின் எதிரிற்செல்ல நாணங் கொண்டது. எனவே அது, யானைக் கூடத்திற்குச் செல்லாமல், அவ்விடத்தின் புறங்கடையில் நின்று விட்டது.

4. பிரித்தெழுதுக:

(1) **பாய்ந்திற்ற** - பாய்ந்து + இற்ற.

(2) **கல்லார்** - கல் + ஆர்.

5. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக:

(1) <u>கொடிமதில்</u> பாய்ந்திற்ற கோடும்: கொடிமதில்-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

(2) <u>புறங்கடை</u> நின்றது : புறங்கடை - முன் பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை.

6. தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

தற்குறிப்பேற்ற அணியாவது இயற்கையாக நிகழும் ஒரு பொருளின் நிகழ்ச்சியில் கவிஞர்தம் கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறுவதாம்.

புறங்கடையில் இயல்பாக நிற்கும் களிற்றைப் பிடி இகழும் என்று எண்ணி நின்றதாகக் கவி தமது கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளார். இவ்வாறு கூறுவதே தற்குறிப்பேற்ற அணியாம்.

3. கலிங்கத்துப்பரணி

1. கலிங்கத்துப்பரணியின் ஆசிரியரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

(இதற்குரிய விடையைக் கலிங்கத்துப்பரணியின் முன்னுரையில் காண்க.)

கருமத்தை முடிக்கிறவன் அருமை ஒன்றும் பாரான்.

2. பரணியின் இலக்கணம் என்ன ?

போர் முகத்தில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைச் சிறப்பித்து, கடவுள் வாழ்த்து முதலான பதின்மூன்று அங்கங்கள் கொண்டு தாழிசையால் பாடப் பெறுவதே பரணியின் இலக்கணம் ஆகும்.

3. பயிரவி யார்? அவனை யார் என்ன கேட்டார்?

பயிரவி காளி. கணவனை இழந்த பெண்ணொருத்தி அவளை நோக்கி, "என் கணவனது போர் செய்யும் பெரிய கையில் இருக்கும் வாளாயுதம் எங்கே? அழகிய மார்பு எங்கே? யார் எதிர்த்தாலும் முதுகு காட்டி ஓடாத பெரிய வச்சிரம்போன்ற தோள்கள் எங்கே?" என்று கேட்டாள்.

4. உமது பாடப் பகுதியாகிய கலிங்கத்துப்பரணியிலிருந்து நீங்கள் அறியும் செய்தி யாது ?

பண்டைக்காலப் பெண்டிரது வீரத்தையும், அஞ்சாமையையும் எம்பாடப் பகுதியிலிருந்து அறிகின்றோம்.

5. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக :

(1) பொரு தடக்கை வாள் எங்கே : தடக்கை - உரிச்சொற்றொடர்.

(2) கேட்பானைக் காண்மின் : கேட்பானை - வினையாலணையும் பெயர்.

4. பெருந்தொகை

1. பரராச சிங்கனைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

(இதற்குரிய விடையைப் பெருந்தொகையின் முன்னுரையில் காண்க.)

2. சடையப்ப வள்ளலின் சிறப்பியல்புகள் எவ்வாறு பாராட்டப்படுகின்றன ?

"வளப்பமும் இன்பமும் மிக்க சோழ நாட்டின் நல்வாழ்வு காரணமாகவும், புதுவை நகரில் வாழும் மதிப்பிற் சிறந்த சங்கர வள்ளலின் புதல்வராகிய சடையப்ப வள்ளல் என்னும் தரும தேவதை வாழ்ந்து வருவதாலும் சிறந்த செம்பொன் அம்பலத்தில் நடராசப் பெருமான் கவலையின்றிக் கூத்தாடுகிறார்; காவிரி நதிக் கரையில் கருணையே உருக்கொண்ட அரங்கநாதப் பெருமாள் துயில்கிறார். ஆதலின், இரவு பகலானாலும், பகல் நள்ளிரவு ஆனாலும், சூரியன் எட்டுத் திசைகளிலும் மாறி மாறி உதித்தாலும், ஏழு கடல்களும் பொங்கினாலும், வற்றினாலும், அரசர்கள் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும், அங்கு மக்களுக்கு யாதொரு துன்பமும் நேராது" என்று சடையப்ப வள்ளலின் சிறப்பியல்புகள் பாராட்டப்படுகின்றன.

3. சடையப்ப வள்ளலைத் தரும தேவதை என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்?

சடையப்ப வள்ளல் கம்பர் முதலிய புலவர்களை ஆதரித்தமையாலும், பரராச சிங்கனுக்கு ஆயிரம் கப்பல்களில் நெல்லை அனுப்பி உதவினமையாலும் அவரைத் தரும தேவதை என்று கூறுதல் பொருந்தும்.

4. கருது செம்பொனின் அம்ப லத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே; காவிரித் திருநதியிலேயொரு கருணை மாமுகில் துயிலுமே" — இங்ஙனம் கூறியதன் கருத்தினை விளக்கி வரைக.

சோழ வளநாடு, நீர்வளமுடையதாய் விளங்குவதால் மக்கள் செல்வத்தில் சிறந்து பசிப்பிணி அறியாது இன்பமுற்று வாழ்வார்களாதலாலும், சடையப்ப வள்ளலாகிய தரும தேவதை அங்கு வாழ்வதால் மக்கள் அறநெறி பிறழாது நிகழ்வார்களாதலாலும், மக்களையும் அறத்தையும் காக்க வேண்டிய கடவுளாகிய நடராசப் பெருமானும் அரங்கநாதப் பெருமானும் கவலையின்றிக் கூத்தாடியும் உறங்கியும் உள்ளனர் என்பது இவ்வடிகளிற் பொதிந்துள்ள கருத்தாகும்.

5. பரராச சிங்கன் பாடிய பாடலில் அமைந்துள்ள தொனிப் பொருள் யாது?

"மக்களையும் அறத்தையும் காக்கும் கடமை வாய்ந்த நடராசப் பெருமான், தம் கடமையைப் புரிவதுபோல் நடிக்கிறார். மற்றொருவராகிய திருமால் கவலை சிறிதுமின்றிக் காவிரியின் நடுவில் துயில்கின்றார். எனவே, அவர்களை நம்புவதால் யாதொரு பயனுமில்லை. காப்பவர் கொடையிற் சிறந்த சடையப்ப வள்ளலே" என்ற பொருள் இதில் தொனிக்கிறது.

6. பிரித்தெழுதுக:

(1) எண்டிசை - எட்டு + திசை.

(2) சங்கரன்றரு - சங்கரன் + தரு.

7. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக:

(1) ஓர் கடவுள் நின்று <u>நடிக்கும்</u>: நடிக்கும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

(2) கருணை மா<u>முகில்</u>: முகில் - உவமை ஆகு பெயர்.

(3) இரு<u>ளறு</u> இரவு: அறு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

கரும்புக் கட்டிக்கு எறும்பு தானே வரும்.

உறுப்பிலக்கணம்

உறுப்பிலக்கணங் கூறுக :

அவன் : அ + அன். அ : பகுதி ; அன் : விகுதி.

நன்மை : நல் + மை. நல் : பகுதி ; மை : விகுதி.

உண்டான் : உண் + ட் + ஆன். உண் : பகுதி ; ஆன் : விகுதி ; ட் : இடைநிலை.

நடந்தனன் : நட + த் + த் + அன் + அன். நட : பகுதி ; அன் : விகுதி ; த் : இடைநிலை ; அன் : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' என ஆகியது விகாரம்.

நடப்பான் : நட + ப் + ப் + ஆன். நட : பகுதி ; ஆன் : விகுதி ; ப் : இடைநிலை ; ப் : சந்தி.

நடந்தது : நட + த் + த் + அ + து. நட : பகுதி ; து : விகுதி ; த் : இடைநிலை ; அ : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' என ஆகியது விகாரம்.

நடவான் : நட + வ + ஆன். நட : பகுதி ; ஆன் : விகுதி ; இடையே தோன்றிய 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை மறைந்தது. 'வ' என்பது உடம்படுமெய்.

கழிந்தன்று : கழி + த் + த் + அன் + று. கழி : பகுதி ; று : விகுதி ; த் : இடைநிலை ; அன் : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' ஆக மாறியது விகாரம்.

அடித்த : அடி + த் + த் + அ. அடி : பகுதி ; அ : விகுதி ; த் : இடைநிலை ; த் : சந்தி.

அடிக்கின்ற : அடி + க் + கின்று + அ. அடி : பகுதி ; அ : விகுதி ; கின்று : இடைநிலை ; க் : சந்தி. இடைநிலையின் ஈற்றில் உள்ள உகரம் கெட்டது.

கடிக்கும் : கடி + க் + கு + உம். கடி : பகுதி ; உம் : பெயரெச்ச விகுதி ; கு : சாரியை ; க் : சந்தி. சாரியை ஈற்று உகரம் கெட்டுப் புணர்ந்தது.

சிறிய : சிறுமை + அ. சிறுமை : பகுதி ; அ : விகுதி ; புணருங்கால் 'மை' விகுதி கெட்டது. உகரம் இகரமாகத் திரிந்தது. பின்பு 'ய்' என்னும் உடம்படுமெய் தோன்றியது.

நின்று : நில் + ற் + உ. நில் : பகுதி ; உ : விகுதி. ற் : இடைநிலை ; 'ல்' என்பது 'ன்' எனத் திரிந்தது.

நிற்க (வினையெச்சம்): நில் + கு + அ. நில்: பகுதி; அ: வினையெச்ச விகுதி; கு: சாரியை. லகரம் றகரமாகத் திரிந்தது; சாரியை ஈற்று உகரம் கெட்டது.

நிற்க (வியங்கோள் வினைமுற்று): நில் + க. நில்: பகுதி; க: வியங்கோள் விகுதி. 'ல்' என்பது 'ற்' ஆகத் திரிந்தது.

வறந்தக்கால்: வற + த் + து + அ + கால். வற: பகுதி; கால்: வினையெச்ச விகுதி: து: சாரியை. அ: சாரியை. த்: சந்தி; 'த்' என்னும் எழுத்து 'ந்' ஆகியது விகாரம். சாரியை ஈற்று உகரம் கெட்டது. க்: சந்தி.

செய்தேன்: செய் + த் + ஏன். செய்: பகுதி; ஏன்: விகுதி; த்: இடைநிலை.

கொய்தனன்: கொய் + த் + அன் + அன். கொய்: பகுதி; அன்: விகுதி. த்: இடைநிலை; அன்: சாரியை.

உழுது: உழு + த் + உ. உழு: பகுதி; உ: விகுதி; த்: இடைநிலை.

கூனி: கூன் + இ. கூன்: பகுதி; இ: விகுதி.

உண்டனன்: உண் + ட் + அன் + அன். உண்: பகுதி. அன்: விகுதி. ட்: இடைநிலை; அன்: சாரியை.

பிடித்தனன்: பிடி + த் + த் + அன் + அன். பிடி: பகுதி; அன்: விகுதி; த்: இடைநிலை; அன்: சாரியை; த்: சந்தி.

ஆடினேம்: ஆடு + இன் + ஏம். ஆடு: பகுதி; ஏம்: விகுதி; இன்: இடைநிலை. உகரம் கெட்டது.

கூவிற்று: கூவு + இன் + று. கூவு: பகுதி; று: விகுதி; இன்: இடைநிலை. உகரம் கெட்டு, னகரம் றகரமாகத் திரிந்தது.

ஆடி: ஆடு + இ. ஆடு: பகுதி; இ: விகுதி; உகரம் கெட்டது.

எண்ணின: எண் + இன் + அ. எண்: பகுதி; அ: விகுதி; இன்: இடைநிலை. 'ண்' இரட்டியது.

எண்ணற்க: எண் + அல் + க. எண்: பகுதி; க: வியங்கோள் விகுதி; அல்: எதிர்மறை விகுதி. 'ண்' இரட்டித்து, லகரம் றகரமாகத் திரிந்தது.

வந்தான்: வா + த் + த் + ஆன். வா: பகுதி; ஈண்டு 'வ' எனக் குறுகி நின்றது; ஆன்: விகுதி; த்: இடைநிலை; த்: சந்தி; தகரம் நகரம் ஆகியது விகாரம்.

கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம்

சென்ற: செல் + ற் + அ. செல்: பகுதி; அ: பெயரெச்ச விகுதி; ற்: இடைநிலை; லகரம் றகரமாகிப் பின்பு னகரமாக மெலிந்தது.

வென்று: வெல் + ற் + உ. வெல்: பகுதி; உ: விகுதி; ற்: இடைநிலை. லகரம் றகரமாகிப் பின்பு னகரமாக மெலிந்தது.

கற்றோம்: கல் + ற் + ஓம். கல்: பகுதி; ஓம்: விகுதி; ற்: இடைநிலை; லகரம் றகரமாகத் திரிந்தது.

தோற்றான்: தோல் + ற் + ஆன். தோல்: பகுதி; ஆன்: விகுதி; ற்: இடைநிலை; லகரம் றகரமாகத் திரிந்தது.

கற்பாள்: கல் + ப் + ஆள். கல்: பகுதி; ஆள்: விகுதி: ப்: இடைநிலை. லகரம் றகரமாகத் திரிந்தது.

கற்பான் (வினையெச்சம்): கல் + பான். கல்: பகுதி; பான்: விகுதி; லகரம் றகரமாகத் திரிந்தது.

மாண்டன (இறந்தன): மாள் + ட் + அன் + அ. மாள்: பகுதி; அ: விகுதி; ட்: இடைநிலை. அன்: சாரியை, ளகரம் டகரமாகத் திரிந்து பின்பு மெலிந்தது.

புரண்டு: புரள் + ட் + உ. புரள்: பகுதி; உ: விகுதி; ட்: இடைநிலை. ளகரம் டகரமாகிப் பின்பு மெலிந்தது.

கொள்ப: கொள் + ப. கொள்: பகுதி; ப: விகுதி.

கண்ட: காண் + ட் + அ. காண்: பகுதி (நீண்டுக் குறுகியது); அ: விகுதி; ட்: இடைநிலை.

காண்க: காண் + க. காண்: பகுதி; க: வியங்கோள் வினைமுற்று விகுதி.

விட்ட: விடு + அ. விடு: பகுதி (விட்டு என விகாரப்பட்டது); அ: விகுதி; உகரம் கெட்டது.

புக்கோம்: புகு + ஓம். புகு: பகுதி (புக்கு என விகாரப்பட்டது); ஓம்: விகுதி; உகரம் கெட்டது.

படிப்பேன்: படி+ப்+ப்+ஏன், படி: பகுதி; ஏன்: விகுதி: ப்: இடைநிலை; ப்: சந்தி.

மறப்பின்: மற+ப்+ப்+இன். மற: பகுதி; இன்: விகுதி; ப்: எழுத்துப் பேறு. பகரம் இரட்டியது சந்தி.

இருந்தேன்: இரு+த்+த்+ஏன். இரு: பகுதி; ஏன்: விகுதி; த்: இடைநிலை; த்: சந்தி; தகரம் நகரம் ஆனது விகாரம்.

நக்கான்: நகு+ஆன். நகு: பகுதி (நக்கு என விகாரப்பட்டது); ஆன்: விகுதி.

செய்திலன்: செய்+த்+இல்+அன். செய்: பகுதி; அன்: விகுதி; த்: இடைநிலை; இல்: எதிர் மறை விகுதி.

EXCELLENT
EXHAUSTIVE
BRINGS LUCK
LIFCO'S

FOR V & VI FORMS

THE LIFCO GOLDEN GUIDE TO GENERAL SCIENCE

— IN TAMIL —

- DEC. 1953 EDITION (REVISED & ENLARGED)
- GENERAL HINTS, SYLLABUS & DIAGRAMS
- EXHAUSTIVE QUESTIONS & ANSWERS
- S. S. L. C. PUBLIC EXAM. PAPERS

Price: Rs. 2-8-0; By Post: Rs. 3-5-0.

FOR V & VI FORMS

THE LIFCO GOLDEN GUIDE TO SOCIAL STUDIES

— IN TAMIL —

WITH FACTS ABOUT POPULATION, GENERAL ELECTION, FIVE YEAR PLAN, PARTITION OF ANDHRA & MADRAS, IRRIGATION SCHEMES, ZONAL SYSTEMS OF RAILWAYS AND NEW MINISTRIES OF MADRAS & ANDHRA.

- NOV. 1953 EDITION (REVISED & ENLARGED)
- GENERAL HINTS, SYLLABUS & MAPS
- EXHAUSTIVE QUESTIONS & ANSWERS
- S. S. L. C. PUBLIC EXAM. PAPERS
- MANY APPENDICES WITH MODEL PAPERS

Price: Rs. 2-8-0; By Post: Rs. 3-5-0.

நடிப்பிற்கொரு வாய்ப்பு

நடிப்பு என்பது ஒரு நுண்கலை. நடிப்போர்க்கும், நடிப்பினைக் காண்போர்க்கும், நடிப்பவரின் பேச்சினைக் கேட்போர்க்கும் இன்பம் உண்டாகும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் பாடப் பகுதியில் நடித்துப் பார்ப்பதற்கேற்ற பகுதிகள் சில உள. அவற்றுள் **கம்பராமாயணப் பகுதி சிறந்ததாகும். உங்களுடைய தமிழாசிரியர்களுடைய துணை கொண்டு, அப்பகுதியை நீங்கள் நடித்துப் பாருங்கள்.** *உங்களுக்குள் சிலர்க்கு, நாடகத்திற்கேற்ற உரையாடல் எழுதும் திறமை இயற்கையிலேயே அமைந்திருக்கும். அத்தகையோர், நவராத்திரி விடுமுறை நாட்களில் நாடக உரையாடலை எழுதலாம். அவ்விடுமுறையிலேயே நடிப்பதற்கேற்ற பயிற்சியையும் நீங்கள் பெறுதல் நன்று.*

குறிப்பு : இந்நாடகத்திற்குக் குரலிசை, கருவியிசை, பின்னணி இசை, திரை, ஆடம்பர ஆடைகள் முதலியன வேண்டா.

நடிப்போர்க்குச் சிறு குறிப்புக்கள்

(*இராமாயணம் - கையடை*)

நாடக உறுப்பினர் : *தசரதன், விசுவாமித்திரன், வசிட்டன்.*

தசரதன் : *பெருமித நோக்கு ; பெரியோரிடம் காட்டும் பணிவு ; புகழுரைகளைக் கேட்குங்கால் நாணம் ; "இராமனைத் தருக" என்று விசுவாமித்திரன் கேட்ட அளவில் முகத்தில் துன்பக் குறி ; பிறகு அழுகைச் சுவை.*

விசுவாமித்திரன் : *தருக்கு நடை ; மிடுக்குப் பேச்சு ; வெகுளிச் சுவையை நன்கு வெளிப்படுத்துதல்.*

வசிட்டன் : *பொறுமைப் பண்பு ; கடமையுணர்ச்சி ; இடித்துரைக்கும் ஆற்றல்.*

DIVINE HELP

When any one is faced with any difficulty or doubt, one can pray for DIVINE HELP thus:

''O Most Merciful Mother, Thou seest my dire need. Help me. My prayer is short, but THOU, O LOKA MATHA, knowest how fervent it is.''

Students, do believe in Divine grace. Let us lead a life of piety and God will surely save us all.

OUR OFFERING

''Our deep and inexpressible gratitude to God Almighty for all the blessings He has showered on us all these years. We have always felt the presence of the Unseen Power surrounding and protecting us when things, which should have gone awry, got themselves somehow miraculously straightened. May we venture to pray that we should become more and more worthy of His boundless grace! In all humility, we place this book with all its short-comings on the altar of God, as an offering and beseech Him to accept it. May He bless us with strength and devotion to continue to serve our youngsters more and more usefully year after year!''

THE LITTLE FLOWER CO.,
Publishers.

உரை நடைப் பகுதி

சொல்விளக்கமும் பத்திச் சுருக்கமும்

பாடத்தில் உள்ள பத்திகட்கு எண்களை இட்டுக்கொள்க

முருகன் அல்லது அழகு

பத்தி 1 : 'முருகன்' என்னுஞ் சொல்லின் விளக்கம்

தொன்மை - பழமை. பண்டை - பழமை. முதல்நிலை - பகுதி. இறுதிநிலை - விகுதி. ஒரு சொல்லில் பகுதியானது முதற்கண் நிற்கு மாதலால் அதற்கு 'முதல்நிலை' என்று பெயர் வந்தது. சொல்லின் விகுதியானது இறுதியின்கண் நிற்குமாதலால் அதற்கு 'இறுதிநிலை' என்று பெயர் வந்தது. 'முருகன்' என்னுஞ் சொல்லில் 'முருகு' என்பது முதல்நிலை; 'அன்' என்பது ஆண்பால் இறுதிநிலை.

'முருகு' என்னுஞ் சொல் பழமை வாய்ந்தது. அச்சொல் ஒரு செஞ்சொல் ஆகும். அது முதல்நிலையாக நின்று, 'அன்' என்னும் ஆண்பால் இறுதிநிலை பெற்று 'முருகன்' என்று ஆயிற்று. எனவே 'முருகு' என்னும் சொல்லுக்கும், 'முருகன்' என்னுஞ் சொல்லுக்கும் பொருளில் வேறுபாடு இல்லை.

பத்தி 2 : 'முருகன்' என்னும் சொல்வழக்கு

வழக்கத்தில் இருந்து வருவது வழக்கு. வரையறுத்து - முடிவு கட்டி. இயலாது - முடியாது. ஆட்சி பெற்று - எடுத்து ஆளப் பெற்று. போற்றுதல் - பாராட்டுதல், புகழ்தல். தூய்மை - குற்றமும், கலப்பும் அற்றதன்மை. இறும்பூது - வியப்பு.

'முருகன்' என்னும் சொல் நெடுங்காலமாகத் தமிழ் மக்களால் எடுத்தாளப்படுகின்றது. அச் சொல் இன்று வழக்கில் உள்ளது. அச் சொல்லைப் பலர் பாராட்டுகின்றனர். அச்சொல்லோடு தொடர்புடைய விழாக்களும், நோன்புகளும் கொண்டாடப்படுகின்றன. அச்சொல் உறுதியும், சிறப்பும், தூய்மையும் உடையது.

பத்தி 3, 4 : 'முருகன்' என்னும் சொல்லின் தொன்மை

நனி - மிகுதி, நன்கு. இறை - தலைவன், கடவுள். முத்தமிழ் - இயல், இசை, நாடகம். குறிஞ்சி : மலையும், மலைசார்ந்த இடமும். கிழமை - உரிமை. கிழான், கிழவோன் : உரியவன். முதுமை - பழமை. சாலும் - போதும், அமையும். சொன்மலர் : சொல்லா

கிய மலர். சொல் என்பது மலராக உருவகம் செய்யப்பட்டுள்ளது. இயம்புதல் - சொல்லுதல்.

பழந்தமிழ் மக்கள் முருகனைத் தமிழ்க்கடவுள் என்றும், மலை நிலக்கடவுள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். தமிழன், தமிழ்ப்பெருமான், தமிழ் இறை, முத்தமிழோன் என்பவை முருகனைக் குறிப்பிடுகின்றன. எனவே தமிழுக்கும், முருகனுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். குறிஞ்சிக்கிழான், மலைகிழவோன் என்பவை முருகனைக் குறிப்பிடுகின்றன. எனவே மலை நிலத்திற்கும், முருகனுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். முதல் மனிதன் தோன்றிய இடம் தமிழ் நாடு ஆகும். தமிழ் நாட்டார் கடவுளுக்கு 'முருகு' என்று பெயரிட்டனர். ஆகவே, மிகப்பழமை வாய்ந்த தமிழ்மொழியுடனும், தமிழ்மக்களுடனும் தொடர்பு கொண்டுள்ள 'முருகு' என்னுஞ் சொல்லும் பழமை வாய்ந்தது என்பதனை நாம் அறியலாம்.

பத்தி 5, 6 : தமிழ்நாட்டுப் பழங்கடவுள் முருகன்

கோடல் - கொள்ளுதல். அரும்புதல் - தோன்றுதல். அலர்ந்தது - தோன்றியது. முழுமுதல் - கடவுள். முருகு - அழகு. வழங்குதல் - தருதல். கருதற்பாற்று - நினைக்கத்தக்கது. துவங்குதல் - தொடங்குதல்.

மக்கள் வாழ்வு முதன் முதல் மலையிலேயே தொடங்கியது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவ்வாறு வாழ்ந்த மக்கள், தங்கள் கடவுளை 'முருகு' என்று அழைத்தனர். எனவே அச்சொல் தொன்மை வாய்ந்தது. மலையில் வாழ்ந்த மக்கள் ஏனைய நிலங்களிற் குடிபுகுந்த காலத்தில் கடவுளை வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர். அவ்வாறு பல்வகைப் பெயர்களால் அழைக்கப்பட்ட முழுமுதல் இயற்கையில் உள்ள அழகு அல்லது முருகே ஆகும். அம்முருகைத் திருமால் என்னும் பெயராலும் வேறு பெயர்களாலும் தமிழ்மக்கள் அழைத்தனர். தமிழ்மக்கள் வாழ்வு மலையில் தொடங்கியது. அவ்வாறு தொடங்கிய நாள்முதல் முருகன் தெய்வமாகக் கொண்டாடப்படுகின்றான். எனவே தமிழ்நாட்டுப் பழங்கடவுள் முருகனேயாவான்.

பத்தி 7, 8, 9 : தொல்காப்பியத்திற்கு முன்னரே முருகன் வழிபாடு இருந்தது

இத்துணை - இவ்வளவு. அறுதி - முடிவு, எல்லை. கிளந்து - எடுத்து அகச்சான்று: நூலின் உள்ளே அமைந்த சான்று. நால்வகை நிலம் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். குறிஞ்சி : மலையும், மலை சார்ந்த இடமும். முல்லை : காடும், காடு சார்ந்த இடமும். மருதம் : வயலும், வயல் சார்ந்த இடமும், நெய்தல் : கடலும், கடல் சார்ந்த இடமும். துவங்குதல் - தொடங்குதல்.

• தமிழ் நாட்டைப் பற்றிய ஆராய்ச்சிக்குக் கருவியாக இருப்பது தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் காலத்தைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. குறைந்தது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு தொல்காப்பியம் தோன்றியது என்பது உண்மையாகும். தொல்காப்பியனார் காலத்தில் தமிழ் நாட்டின்கண் முருகன் வழிபாடு இருந்தது என்பதற்கு அவரது நூலில் அகச்சான்றுகள் உள்ளன. அவர் காலத்தில் முருகன் வழிபாடு பழகி முதிர்ந்து வளம்பட்ட நிலையில் இருந்தது. அவர் காலத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களிலும் வாழ்ந்து வந்தனர். மக்கள் முதற்கண் மலையில் தான் வாழ்வு தொடங்கியிருத்தல் வேண்டும். அக்காலத்திலேயே முருகன் வழிபாடு இருந்தது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் முருகன் வழிபாடு இருந்தது என்பது உண்மையாகும்.

பத்தி 10, 11, 12 : மக்களின் தோற்றம்

போதரும் - வெளிப்படும். **சமயநூல்கள் :** சமயங்களை (மதங்களைப் பற்றிய நூல்கள் - **பகர்கின்றன.** சொல்கின்றன. **மூதாதை** - முன்னோர். **விலங்கு** - மிருகம். **கூர்த்த** - கூர்மையான, நுட்பமான. **மதி** - அறிவு. **போந்த** - வெளிப்பட்ட. திருமாலின் பத்துப்பிறவிகள் : 1. மீன், (மச்சாவதாரம்) 2. ஆமை (கூர்மாவதாரம்) 3. பன்றி (வராகாவதாரம்) 4. நரசிம்மாவதாரம். 5. வாமனவதாரம். (திருவிக்கிரமாவதாரம்.) 6. பரசுராமாவதாரம். 7. இராமாவதாரம். 8. பலராமாவதாரம் 9. கிருஷ்ணவதாரம். 10. குதிரை (கல்கியவதாரம்) **கூர்தல்** - மிகுதல், வளர்தல். **புராணிகர் :** புராணம் பாடிய புலவர்கள். **பழமை** - பதுமை.

மக்களின் தோற்றத்தைப் பற்றிச் சமய நூல்கள் பல செய்திகளைக் கூறுகின்றன. மக்களின் மூதாதைகள் விலங்குகளே என்பர் அறிஞர். ஹெக்கல், டார்வின் முதலிய அறிஞர்கள் இவ்வுண்மையை உணர்த்தியுள்ளனர்.

திருமாலின் பத்துப் பிறவிகளைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. உயிர்களின் பிறவி வளர்ச்சிக்கும், புராணங்கள் கூறும் கூற்றுக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. தொடக்கத்தில் மனிதனுக்கு விலங்குக் கூறுகள் இருந்தன. ஆதிமனிதனுக்குக் கோரைப் பற்கள் இருந்தன. அப்பற்களே காலடைவில் தேய்ந்து போயின. அவைகளே இக்காலத்தில் நாய்ப்பற்கள் எனப்படுகின்றன. கோரைப் பல்லுடைய பதுமைகளைக் கோயில்களில் காணலாம். அவை நம் மூதாதைகளின் நினைவுக்குறிகள் ஆவன.

பத்தி 13, 14, 15, 16 : ஆதிமக்களுக்குக் கடவுள் உணர்வு

உணர்வு - அறிவு. **நெறி** - வழி. **அறிகுறி** - அடையாளம். **அருகி** - சுருங்கி, நுட்பமாகி. **மாக்கள்**-விலங்கினை ஒத்தவர். **ஐயறிவு:**

சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம். ஆறறிவு : ஐயறிவுடன் பகுத்தறிவும் கூடி ஆறறிவு ஆகும். மா - விலங்கு. மன்பதை - மக்கள் தொகுதி. அரும்பி - தோன்றி. கணித்து - குறிப்பிட்டு, கணக்கிட்டு. எளிதாங் கொல் - எளிதாகுமோ ? ஆகாது.

விலங்கு நிலையில் இருந்த ஆதிமகனுக்குக் கடவுள் உணர்வு தோன்றியிராது. நாளடைவிலேயே அவனுக்கு அவ்வுணர்வு தோன்றியிருத்தல் வேண்டும். கோரைப்பல் மகனுக்கு இருந்தவரையில் அவ்வுணர்வு தோன்றியிராது. உறுப்புக்கள் தேயத்தேய மூளையும் மென்மையை அடைந்தது. மூளை மென்மை அடைய அடைய அறிவும் விளக்கம் அடையும். விலங்கிலிருந்து தோன்றிய மகனுடைய உடல் உறுப்புக்கள் நாளடைவில் வேறுப்பட்டன. ஆனால் நெடுநாட்கள் கழிந்தபின்னரே அவனது உணர்வு வேறுபட்டது. விலங்குணர்வு வேறுபடாத மனிதரை 'மாக்கள்' என்றும், ஐயறிவுடன் பகுத்தறிவாகிய ஆறுவது அறிவைப் பெற்ற மனிதரை 'மக்கள' என்றும் தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார். ஆறுவது அறிவே கடவுள் உணர்வுக்கு அடிப்படையாகும். பகுத்தறிவு முதிரமுதிர கடவுள் உணர்வும் முதிர்ந்து வந்தது. மக்கள் மலையிடை வாழ்ந்த காலத்தில் கடவுள் உணர்வு தோன்றியிருத்தல் கூடும். அதுபற்றியே அவர்கள் கடவுளை 'மலைகிழவோன்' என்றனர். அக்கடவுள் முருகனே யாதலால் முருகன் வழிபாட்டின் தொன்மையை நாம் உணரலாம்.

பத்தி 17, 18 : மக்களின் தொன்மை

அவித்து - சுட்டு, வேகவைத்து. புலனாய் - வெளிப்பட்டுத் தெரிந்து. புசித்தல் - தின்னுதல்.

ஆதிமனிதன் தொடக்கத்தில் காய்கறிகளைப் பச்சையாகவே தின்றான். பின்னரே அவன் தீயிற் சுட்டும், வேகவைத்தும் தின்றான். அவ்வாறு தின்றமை முப்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னர் என்பர் அறிஞர். மலையிடை வாழ்ந்த காலத்திலும் மக்கள் காய்கறிகளைப் பச்சையாகத் தின்றனர். முருகனுக்கு அவர்கள் தேனும், தினையும் வைத்து வழிபட்டனர். எனவே, மக்களுக்குக் கடவுள் உணர்வு தோன்றி முப்பதினாயிரம் ஆண்டிற்கு மேல் ஆகியிருக்கும் என்று கூறலாம்.

பத்தி 19 : முருகன் காலங் கடந்த கடவுள்

இயலாமல் - முடியாமல். தலைப்பட - புக. செம்பொருள் : நேரான முழுப் பொருள். அநாதி : ஆதியில்லாதது.

'முருகு' என்னுஞ் சொல்லின் தொன்மையை அறுதியிட்டுக் கூற முடியாது. மக்களுக்குக் கடவுள் உணர்வு தோன்றிய நாள் முதல்

'முருகு' என்னுஞ் சொல்லும் தோன்றியது. எனவே முருகன் காலங் கடந்த கடவுள் ஆவான். இயற்கை என்று உண்டோ அன்று முதல் முருகனும் உளன்;

பத்தி 20 : 'முருகு' என்பது பொருள் பொதிந்த சொல்

முகந்து - எடுத்து. இடையறுது - இடைவிடாமல். விராவி - கலந்து. ஒளிரும் - ஒளி வீசும். பொதிந்த - அடக்கிய.

மலையிடை வாழ்ந்த தமிழர் இயற்கையைக் கண்டனர்; உள்ளத்தில் இருத்தினர்; நினைந்தனர்; இயற்கையோடு கலந்து வாழ்ந்தனர். எனவே அவர்கட்கு இயற்கையில் உள்ள அழகு, இளமை, மணம், ஒளி ஆகியவை தெரிந்தன. அவையாவும் கலந்த ஒன்றையே தமிழ் மக்கள் 'முருகு, என்று அழைத்தனர். ஆகவே 'முருகு' என்னுஞ் சொல் பொருள் பொதிந்த சொல்லாகும்.

நல்லொழுக்கப் பயிற்சி

இயற்கையோடு இயைந்த வாழ்வினை நடாத்துதல் வேண்டும் என்பர் அறிஞர். இயற்கையே கடவுளின் உருவம். கடவுளை எவ்வாறு வழிபடுவது? மக்களுக்கும் விலங்குக்கும் வேறுபாடு உண்டு விலங்குக்குப் பகுத்தறிவு இல்லை; மக்களுக்குப் பகுத்தறிவு உண்டு. பகுத்தறிவு என்பது கடவுள் உணர்வேயாகும். கடவுள் உணர்வு என்பது அன்பு நெறியாகும். எல்லா உயிர்களினிடத்திலும் அன்பு காட்டி வாழ்வதே கடவுள் வழிபாடு எனப்படும். கடவுளை வழிபட நீங்கள் முற்பட்டால் உயிர்களினிடத்தில் அன்பு காட்டுங்கள்; அன்பு நெறியை ஏனையோருக்குப் புகட்டுங்கள்.

---

2. பாண்டித்துரைத் தேவர்

பத்தி 1, 2, 3, 4 : தமிழ் நூற்பதிப்புக்கு உதவிகள்

அவை - சபை. வரிசை - சிறப்பு. தண்ணளி - அருள். வழித்தோன்றல் - பரம்பரையினர். பாண்டித்தியம் - அறிவு. அமிழ்து - அமிர்தம். பரிபாலித்தல் - போற்றுதல். அநாதரவு - ஆதரவு அற்ற நிலை. திண்ணம் - நிச்சயம். முப்பால்: அறம், பொருள், இன்பம். அகப்பொருள் : தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள்

பொருளிலக்கணம் அகப்பொருள், புறப்பொருள் என இரு பிரிவுகளை உடையது. ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் காதல் பூண்டு, திருமணஞ் செய்து கொண்டு, இல்லறம் நடத்துவதைப் பற்றிக் கூறுவதே அகப் பொருள் ஆகும்.

பாண்டித்துரைத் தேவரவர்கள் தமிழ் நூற்பதிப்புக்கள் பல வெளி வருவதற்குப் பெரிதும் உதவியிருக்கின்றார். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை ஆகிய நூல்களைத் தேவரவர்களின் உதவி பெற்றே பதிப் பித்தார். மணிமேகலை முதற்பதிப்பின் முகவுரையில் டாக்டர் ஐயரவர் கள் பாண்டித்துரைத் தேவரைத் பெரிதும் போற்றியெழுதியுள்ளார். தேவாரத் தலைமுறைப்பதிப்பு, சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு ஆகிய நூல்கள் தேவரது உதவியாலேயே இராமசாமிப் பிள்ளையவர் களால் வெளியிடப் பெற்றன. சபாபதி நாவலரவர்கள் 'சிவசமவாத உரை மறுப்பு' என்னும் நூலையும், சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை யவர்கள் சில நூல்களையும் தேவருடைய உதவி பெற்றே பதிப்பித்தனர். புலவர்கள் இவருடைய ஆதரவு பெற்று நூல்களைப் பதிப்பித்த காலத் தில், அந்நூல்களை முதற்கண் தேவரிடம் படித்துக் காட்டுவார்கள். அவ்வாறு படிக்கப்படுங்கால், தேவர் அறம், பொருள், இன்பம் பற்றிய பாடல்களைத் தனித் தனியே எழுதித் தொகுக்கச் செய்தார்; அவ் வாறே சைவ சமயத் தொடர்புடைய பாடல்களையும் தொகுக்கச் செய்தார். அவை பின்பு தேவரால் முறையே பன்னூற்றிரட்டு, சைவ மஞ்சரி என்னும் பெயர்களுடன் வெளியிடப் பெற்றன. இவ்வெளியீடு களால் நீதிகள், அறச்செயல்கள், அரசியல் முறைகள், அகப்பொருள் துறைகள் முதலியவற்றையும், சைவ சமயத் தொடர்புள்ள பல கருத் துக்களையும், தமிழ் மக்கள் எளிதில் அறிந்து கொள்ள முடிந்தது.

பத்தி 5, 6 : மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய நினைவு

அரங்கேற்றம் : ஒரு நூல் பாடப் பெற்றவுடன், அந்நூல் அறிஞர் கூடிய சபையில் படிக்கப்படும். குற்றங் குறைகள் அற்ற நூல் என்று யாவரும் ஒப்புக் கொண்டால்தான் அந்நூல் பின்பு எல்லோராலும் படிக்கப்படும். இவ்வாறு சபையில் படிக்கப் பெறு தலுக்கு 'அரங்கேற்றம்' என்று பெயர். **ஆசான்** - ஆசிரியன். **பாயிரம் :** நூலின் முன்னே அமைவது; முகவுரை; பதிகம். **கூடல் :** கூடியிருத்தல், மதுரை. **சிலேடை** - இருபொருள். **காகதாலிய நியா யம் :** காக்கையேறப் பனம் விழுந்தது போல. காக்கையின் சுமையைப் பொறுக்க மாட்டாமல் பனம்பழம் விழவில்லை. காக்கையேறிய நேர மும் பனம்பழம் விழுந்த நேரமும் ஒன்றாயிருந்தன. அதுபோல இக் கட்டுரையின் ஆசிரியர் சொல்லிய கருத்திற்கு ஏற்பத் தமிழ்ச் சங்கம் தோன்றியது. ஆசிரியர் சொல்லியதால் சங்கம் தோன்றவில்லை. ஆசிரியர் பேசியகாலமும், அதற்கேற்பச் சங்கம் தோன்றிய காலமும்

ஒன்றுயிருந்தன. உபந்யாசங்கள். சொற்பொழிவுகள். ஒளி - ஒளி பொருந்திய. தீந்தமிழ் - இனிய தமிழ். கலாசாலை: உயர் நிலைப்பள்ளி. திரு. நாராயண ஐயங்கார் என்பவர் வடமொழியில் உள்ள சாதக சிந்தாமணி என்னும் நூலைத் தமிழிற் பெயர்த்துப் பாடித்தேவர் முன்னிலையில் அரங்கேற்றி, வெளியிட்டார். அதற்கு இக்கட்டுரையின் ஆசிரியர் சிறப்புப்பாயிரம் பாடியளித்தார். அதன்கண் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று இருத்தலின் இன்றியமையாமை புலப்படும்படி சிலேடையாகப் பாடினர். அதற்கேற்ப, காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது போலத் தேவர்கட்குத் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவ வேண்டும் என்னும் நினைவு உண்டாயிற்று. ஒருமுறை தேவரவர்கள் மதுரையில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்த நேரிட்டது. அதுகாலையில் அவருக்குத் திருக்குறள், கம்பராமாயணம் முதலிய நூல்கள் தேவையாக இருந்தன. அவை நண்பர்களிடம் கிடைத்தில. அவற்றைத் தேவரவர்கள் விலைக்கு வாங்க நேரிட்டது. இந்நிகழ்ச்சியும் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவவேண்டும் என்னும் நினைவைத் தேவருக்கு உண்டாக்கியது. இந்த நினைவு உருப் பெறுவதற்கு, திரு. டி. சீனிவாச ஐயங்கார், திரு. எஸ். சாமிநாத ஐயர் ஆகியவர்கள் ஊக்கம் அளித்தனர்.

பத்தி 7: மாகாண அரசியல் மாநாடு

உபசரணை கமிட்டி: வரவேற்புக்குழு (Reception Committee). குன்றிய - குறைந்த. தாபிக்க - நிறுவ. சொல்மாரி - சொல் மழை. குழுமி - கூடி. இயன்ற - முடிந்த.

1901-ஆம் ஆண்டு மதுரையில் அரசியல் மாநாடு கூடியது. அதற்கு ஹானரபிள் பி. அனந்தாசார்லு அவர்கள் தலைமை தாங்கினர். அம்மாநாட்டிற்கு வந்திருந்த அறிஞர்களை வரவேற்குங் குழுவிற்குத் தேவரவர்கள் தலைவராக இருந்தார். அதுகாலையில் அவர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அச்சொற்பொழிவில் தேவரவர்கள், தமிழ் நிலைபெற்ற மதுரையிற் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவவேண்டுவதன் இன்றியமையாமையை வற்புறுத்தினர். அதற்கு மறுநாள் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் அவர் எல்லோரையும் ஒன்று கூட்டி, மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவுவதற்குரிய வழிவகைகளை விளக்கிக் கூறினர். எல்லோரும் அதற்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வதாக உறுதிகூறினர்.

பத்தி 8: தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றமை

குறட்கருத்து: சூழ்ச்சியின் முடிவாவது துணிவாகும். துணிவு பெற்றபிறகு அவன் காலம் தாழ்த்துவானுபின், அது குற்றமுடையது சூழ்ச்சி - ஆராய்ச்சி. தாழ்ச்சி - காலந்தாழ்த்தல். தீது - குற்றம். **நான்காம் தமிழ்ச்சங்கம்:** முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்

சங்கம் என்று மூன்று சங்கங்கள் முன்பு நடைபெற்றனவாதலால், தேவரவர்களால் கூட்டப்பெற்ற இச்சங்கம் நான்காம் தமிழ்ச்சங்கம் எனப்பட்டது. குழுமினர் - கூடினர். பரிவாரம் - தம்மைச் சேர்ந்தவர்கள். குழாம் கூட்டம். தாபித்தல் - நிறுவுதல். ஆஸ்தானம் - அரசவை. பணி - வேலை, தொண்டு.

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் கூட்டப்பெறுஞ் செய்தி யாவருக்கும் அறிவிக்கப்பட்டது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், திருவாளர்கள் ரா. இராகவையங்கார், வை. மு. சடகோபராமானுஜாசாரியார், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சோழவந்தான் சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருமயிலைச் சண்முகம் பிள்ளை முதலிய புலவர்களும், ஸ்ரீ பாஸ்கர சேதுபதியவர்களும் தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்ற நாளன்று வந்திருந்தனர். பிரபவ ஆண்டு, ஆவணி மாதம், 31-ஆம் நாளன்று, சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் சங்கம் நிறுவப் பெற்றது. அன்றே சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை முதலியன தொடங்கப் பெற்றன. யாவரும் அதுபொழுது வாழ்த்தினர். சொற்பொழிவுகள் பல நடைபெற்றன. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைக்குத் திருவாளர் திரு. நாராயண ஐயங்கார் அவர்களும், நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைக்குத் திருவாளர் ரா. இராகவையங்கார் அவர்களும் தலைவர்களாக அமைக்கப் பெற்றனர். சங்கத்தில் பல நூல்கள் சேர்த்து வைக்கப் பெற்றன. பின்பு அச்சங்க அலுவலகம் மதுரை வெளி வீதியில் உள்ள தேவரவர்களின் பெரிய மாளிகைக்கு மாற்றப் பெற்றது. இச்சங்கம் கடந்த 52 ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி செய்து வருகின்றது.

பத்தி 9 : சங்கத் தேர்வுகள்

புலமை - அறிவு. ஸ்தாபனம் - நிலையம். உண்டி - உணவு. உறையுள் - இருப்பிடம். வரன்முறையாக - காரண காரிய முறைப்படி. பயின்று - கற்று. யோக்யதா பத்திரம்: தகுதிச் சீட்டு (certificate). துரைத்தனத்தார் - அரசியலார். அன்னோர் - அவ்வாறு தகுதிச் சீட்டினைப் பெற்றவர். சருவகலாசாலை - பல்கலைக் கழகம் (university). குலபதி - குலத்தலைவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மாணவர்கட்குத் தமிழைக் கற்பித்துத் தேர்வுகளை நடத்தினர். அவர்கள் மூவகைத் தேர்வுகளை (பிரவேச பண்டிதம், பாலபண்டிதம், பண்டிதம்) நடத்தி, அவற்றுள் வெற்றி பெற்றவர்கட்குத் தகுதிச் சீட்டுகளும் அளித்தனர். தகுதிச் சீட்டு பெற்றவர்கள் பள்ளிக்கூடங்களில் தமிழாசிரியர்களாக அமர்ந்தனர். சங்கம் காட்டிய வழியைப் பின் பற்றியே பல்கலைக் கழகத்தார் தமிழ்த் தேர்வுகள் நடத்தத் தொடங்கினர். சங்கத்தில் தமிழ்க் கல்வி பயிற்றித்

தலைவராக விளங்கியவர் திருவாளர் திரு. நாராயண ஐயங்காரவர்கள் ஆவார்.

பத்தி 10 : செந்தமிழ்ப் பத்திரிகை

பத்திராசிரியர் - பத்திரிகையின் ஆசிரியர். புதுமை+உயிர்=புத்துயிர். உவத்தல் - மகிழ்தல். வகித்து - தாங்கி. ஆணை - கட்டளை. மூலம் - ஆதி. பிழையற - பிழையில்லாமல்.

1903-ஆம் ஆண்டு முதல், தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 'செந்தமிழ்' என்னும் மாதப் பத்திரிகை வெளியிடப் பெற்றது. அப்பத்திரிகையின் ஆசிரியராக உயர்திரு. ரா. இராகவையங்காரவர்கள் இரண்டரை ஆண்டுகளும், பிறகு இக்கட்டுரையின் ஆசிரியர் பத்து ஆண்டுகளும் அமர்ந்தனர். அறிஞர்கள் பலருடைய கட்டுரைகள் அப்பத்திரிகையின் கண் வெளிவந்தன. அப்பத்திரிகை கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெருந்தமிழ்த் தொண்டு செய்து வருகிறது. அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தமையால் இக்கட்டுரையின் ஆசிரியர் பெருமதிப்புப் பெற்றார். ஞானாமிர்தம், வில்லிபாரதம், கதிரைவேற்பிள்ளை தமிழகராதி முதலிய நூல்கள் அச்சங்கத்தின் ஆதரவில் வித்துவான் சுப்பிரமணியக் கவிராயர் அவர்களால் வெளியிடப்பெற்றன.

பத்தி 11 : கட்டுரை ஆசிரியரின் உள்ளத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி

குறட் கருத்து : ஒரு கருத்தை எண்ணியவர் உறுதியுடைய மனத்துடன் இருப்பாராயின், அவர் தாம் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியவாறே அடைவார். எண்ணிய - நினைத்தவற்றை எண்ணியாங்கு - நினைத்தவாறே. எய்துப - அடைவார். திண்ணியர் - உறுதியான உள்ளம் உடையவர். பூர்த்தி - நிறைவேறுதல், உசாவினர் - கேட்டனர். உவப்பு - மகிழ்ச்சி.

தேவரவர்கள் உறுதியான உள்ளமுடையவர். எனவே அவரது நினைவுப்படியே தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது. முன்பு ஒரு முறை இக்கட்டுரையாசிரியர், மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெறவேண்டும் என்பதைக் குறிப்பாக வெளிப்படுத்தியிருந்தார். 'சாதகசந்திரிகை' என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரமாக இக்கட்டுரையின் ஆசிரியர் பாடிய பாடல்களுள் ஒன்றின்கண் அக்குறிப்பு வெளிப்பட்டிருந்தது. அதனை உணர்ந்த தேவர் இக்கட்டுரையின் ஆசிரியரை 'ஏது! சோதிட நூலுக்குச் சோதிடங் கூறுவதில் வல்லவனாகவே பாயிரம் கொடுத்தாய் போலும்!' என்று பாராட்டினார். அந்தப் பாட்டுரை இக்கட்டுரை ஆசிரியரின் உள்ளத்தில் நிலைபெற்றது.

நல்லொழுக்கப் பயிற்சி

நீங்கள் ஒன்றினைச் செய்ய விரும்பினால், துணிவு வரும் வரையில் ஆராய்ந்து பாருங்கள்! துணிவு வந்தபின் காலம் தாழ்த்தாதீர்கள்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது". —திருக்குறள் 671

ஒன்றினைச் செய்யத் துணிந்தவர் உறுதியான உள்ளம் உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால், அவர் தாம் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியவாறே அடைவார்.

"எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்" —திருக்குறள் 666.

---

3. கடலாண்ட காவலர்

பத்தி 1. சேரன் கலப்படை

மூவேந்தர்: சேரர், சோழர், பாண்டியர். செங்குட்டுவன்: சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகளின் அண்ணன். பிறக் கோட்டிய - பின்னிடும்படி பகைவரை ஓட்டிய. கலம் - மரக்கலம்.

தமிழ்நாட்டு அரசர்களிடம் வலிய கலப்படையும் இருந்தது. சிறப்பாகச் சேரர்களிடம் பெரிய கப்பற் படையிருந்தது. செங்குட்டுவன் தன் கப்பற் படையின் வலிமையால் பகைவரை வென்றான். அவனது தந்தையாகிய நெடுஞ்சேரலாதன் கடம்பர் என்னும் கடற் பகைவரைத் தன் கலப்படையின் வலிமையால் வென்றான்.

பத்தி 2: கடற் கடம்பர்

இப்பேரரசர்: செங்குட்டுவனும், நெடுஞ்சேரலாதனும். வர்த்தகம் - வியாபாரம். சாலவும் - மிகவும். செழு - நிறைந்த. இழுக்கு - குற்றம், பழி. ஒறுத்து - தண்டித்து. அறுத்து, அழித்து.

செங்குட்டுவனும், நெடுஞ்சேரலாதனும் தமிழ் நாட்டு வாணிக வளத்தைக் காக்கவே கடற்போர் புரிந்தனர். சேரநாட்டில் உள்ள முசிறி என்னும் ஊர் அக்காலத்தில் பெரியதொரு துறைமுகமாக விளங்கியது. யவனர்களும் அரேபியர்களும், எகிப்தியர்களும் தங்கள் கப்பல்

களுடன் முசிறிக்கு வந்தவண்ணம் இருந்தனர். மேல் கடலின் கண் வெள்ளைத் தீவு என்றொரு தீவு உள்ளது. அத்தீவில் கொள்ளைக்காரர்கள் தங்கி, வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்து வந்தனர். அவ்வாறு கொள்ளையடித்தவர்கள் கடம்பர் ஆவர். அவர்களையே சேரலாதனும், செங்குட்டுவனும் தம் கப்பற் படையின் வலிமையால் அழித்து, வாணிகத்தைப் பாதுகாத்தனர்.

பத்தி 3 : சோழர் கடலாட்சி

சால - மிகவும். **வளவன் :** சோழன்; வளப்பம் பொருந்திய சோழ நாட்டை ஆண்டவர் ஆதலால் சோழன் 'வளவன்' எனப்பட்டனர். **காவிரி நாடு** - சோழ நாடு. பாடலின் பொருள் : கடலின் கண் கப்பலை ஓட்டி, காற்றை ஏவல் கொண்டு ஆண்ட வலியு சோழன் **நளி** - குளிர்ந்த, செறிந்த. **இரு** - பெரிய. **முந்நீர் :** கடல்; ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் ஆகிய மூவகை நீரினைக் கொண்டதாதலால் கடல் 'முந்நீர்' எனப்பட்டது. மூன்று + நீர் = முந்நீர். இனி 'நீர்' என்பதற்கு 'தன்மை' எனப் பொருள் கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தன்மைகளை யுடையதாதலால் கடலுக்கு அப்பெயர் வந்தது என்றுப் கொள்ளலாம். **நாவாய்** - கப்பல், மரக்கலம். **வளி** - காற்று. **உரவோன்** - வலியவன்.

சோழ நாட்டுக் கப்பற்படையும் வலிமை வாய்ந்தது. சோழ அரசன் ஒருவன் கடற்காற்றை ஏவல் கொண்டு, கப்பலோட்டினன் என்று பழந்தமிழ்ச் செய்யுள் ஒன்று கூறுகின்றது.

பத்தி : 4, 5 திருமாவளவனும், பராந்தகனும்

புலிக்கொடி சோழர்க்கு உரியது. **திருமாவளவன் :** சோழன் கரிகாலன். **சிங்களவர் :** இலங்கை நாட்டு மக்கள். **வலுப்பட்டன** - வலிமை அடைந்தன. **சிங்களாந்தகன் :** சிங்களவர்க்கு இயமன் போன்றவன்.

திருமாவளவன் எனப் பெயர் பெற்ற கரிகாலன் இமயமலையிற் புலிக்கொடியை ஏற்றினான்; பின்பு இலங்கையிலும் நாட்ட விரும்பினான் அதனால் அவன் கலப்படை எடுத்துச்சென்று, இலங்கையை வென்றான். இலங்கைப் பழங்கதை இவ்வாறு கூறுகின்றது. தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட பிற்காலச் சோழர்களிடமும் வலிய கலாட்படை இருந்தது. பராந்தக சோழன் என்பவன் இலங்கை மக்களாகிய சிங்களவரை வென்று, 'சிங்களாந்தகன்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான்.

பத்தி 6 : சோழன் இராசராசன்.

செப்பம் - செம்மை, வலிமை. **காந்தளூர்ச்சாலை :** காந்தளூர் என்னும் இடத்தில் இருந்த கப்பற் படை நிலையம்.

சோழன் இராசராசன் தன் கப்பற்படையை வலிமைப் படுத்தினான்; சேர மன்னனுக்குரிய காந்தளூர்ச்சாலை என்னும் கப்பற்படை நிலையத்தைத் தாக்கி வென்றான்; கடல் ஆதிக்கம் பெற முயன்றான்.

பத்தி 7 : இராசராசன் இலங்கையில் அடைந்த வெற்றி.

குணகடல் : கீழ்க்கடல். குடகடல் : மேல் கடல். தீவகம் - தீவு. ஈழப்படை - இலங்கைப்படை. உடைந்து - தோற்று. ஈழம் - இலங்கை. சின்னம் - அறிகுறி, அடையாளம். சிவாலயம் - சிவன் கோயில்.

சோழன் இராசராசன் கீழ்க்கடலிலும், மேல் கடலிலும் ஆதிக்கம் பெற்று, இலங்கையின் மீது படையெடுத்தான். அக்காலத்தில் இலங்கையின் தலைநகராக விளங்கியது அநுராதபுரம் ஆகும். ஆண்டு அப்பொழுது மகிந்தன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனை வென்று, அந்நகரையும் அழித்தான் இராசராசன். அந்நாட்டுக்கு அவன், 'மும்முடிச் சோழமண்டலம்' என்னும் பெயரையும் இட்டான் பின்பு அவன் 'பொலனருவை' என்னும் ஊரை இலங்கையின் தலைநகராக்கி, ஆண்டு ஒரு சிவன் கோவிலையும் கட்டினான். அக்கோவில் தமிழ்நாட்டுக் கோவிலைப் போலவே அமைந்துள்ளது. அக்கோவிலுக்கு இன்று 'சிவ தேவாலயம்' என்னும் பெயர் அமைந்துள்ளது.

பத்தி 8, 9 : இராசேந்திரன்

இணைந்து - சேர்ந்து. வாகை - வெற்றி. பழங் காலத்தில் வெற்றிபெற்ற அரசர்கள், தம் வெற்றிக்கு அறிகுறியாக வாகை என்னும் பூவினைச் சூடினர். அதுபற்றி 'வாகை' என்னுஞ்சொல்லே 'வெற்றி' என்று பொருள் படலாயிற்று. இராசேந்திரன் : இராசராசனுடைய மகன். அணி - அணிகலன்கள். வேட்கை - விருப்பம்.

இராசராசனிடம் தோல்வியுற்ற மகிந்தன் ஊக்கத்தை இழந்தானல்லன்; இராசராசன் திரும்பியவுடன் மறுபடியும் படையைத் திரட்டினான்; ஆண்டு இராசராசன் விடுத்துச் சென்றிருந்த நிலைப்படையைத் தாக்கினான். அதனை இராசராசனது மகனாகிய இராசேந்திரன் உணர்ந்தான்; இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று வென்று மகிந்தனையும் சிறைப்படுத்திக்கொண்டு வந்தான். மகிந்தன் தமிழ்நாட்டிலேயே இறந்தான். அதன்பின் அவனது மகனாகிய இளம்பாலன் என்பவன் இலங்கைக்கு அரசன் ஆனான். அவன் பாண்டியர்களுடன் உறவுகொண்டு, சோழர்களைத் தாக்கியவாறு இருந்தான். எனினும், தமிழ்நாட்டில் சோழர் ஆட்சி வீழும் வரையில் இலங்கையில் சோழர் ஆதிக்கம் இருந்து வந்தது.

பத்தி 10, 11 : கடாரம் கொண்ட சோழன்

ஆர்ந்த - நிறைந்த. **அலைகடல்** - அலையையுடைய கடல். **மாநக்கவாரம் :** 'நிக்கபார்' தீவுகள். **பண்ணை** - வயல், மருதநிலம் **சுரக்கும்** - கொடுக்கும். **மலாய்நாடு :** மலேயாநாடு. **காவிரிப் பூம்பட்டினம்** - பழங்காலச் சோழர்களின் தலைநகரம் ; காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த ஒரு கடற்கரை நகரம்' **சாசனம் :** பழங்காலத்தில் அரிய பெரிய நிகழ்ச்சிகள் பல கோயிற் சுவர்களிலும், மலைப்பாறைகளிலும், செப்புத் தகடுகளிலும் பொறிக்கப்பட்டன. அவை 'சாசனம்' எனப்படும். (உங்கள் ஊர்க் கோயிற் சுவர்களை உற்று நோக்குங்கள். எழுத்துக்கள் பல காணப்படும்.) மலாய் நாட்டைச் சேர்ந்த 'கடாரம்' என்னும் பகுதியை வென்றவனு தலால் இராசராசனுக்கு, 'கடாரங் கொண்டான்' என்னும் சிறப்புப் பெயர் உண்டாயிற்று. **விருதுப் பெயர் :** சிறப்புப் பெயர். **காவலன்** - அரசன். **பாடலின் பொருள் :** தேன் சொரிகின்ற நீண்ட சோலைகளாற் சூழப்பெற்ற மாநக்க வாரத்தையும், தோண்டப் பெற்ற கடலைக் காவலாகக் கொண்ட, மிக வலிமையை உடைய கடாரத்தையும் மிகப் பெரிய படையெடுப்பினாற் கைப்பற்றிய கோப்பரகேசரி. **நக்க** - விளங்கிய, சொரிகின்ற. **வார்** - நீண்ட. **பொழில்** - சோலை. **தொடு** - தோண்டப்பெற்ற. **முரண்** - வலிமை. **மா** - பெரிய. **தண்டு** - படை. **கோப்பரகேசரி :** இராசேந்திரனுக்குரிய வேறு பெயர்களுள் ஒன்று.

இந்துமகா சமுத்திரம் எனப்படும் இந்தியப் பெருங்கடலில் உள்ள பன்னீராயிரம் தீவுகளை இராசராசன் வென்றான் எனப்படுகின்றது. அவனது மகன் கடலின் கண் கலங்கள் பலவற்றைச் செலுத்திப் பல இடங்களை வென்றான். தற்பொழுது 'நிக்கபார்' எனப்படும் மாநக்க வாரத்தை அவன் வென்றான். சுமத்திரா என்னும் தீவின் கண் உள்ள ஊர்கள் பல தமிழ்ப் பெயர்களாக உள்ளன. எடுத்துக்காட்டுகளாக மலையூர், பண்ணை என்னும் ஊர்களைக் குறிப்பிடலாம். இராசேந்திரனது கடற்படையெடுப்பின் பொழுது 'சுமத்திரா' தீவு வெல்லப்பட்டது என்பதற்கு ஆங்குள்ள தமிழ்ப் பெயர்களே சான்றுபகரும். மலாய் நாட்டின், ஒரு பகுதியையும் இராசேந்திரன் வென்றான். அப்பகுதி 'காழகம்' என்னும் பெயர் வாய்ந்தது. அது பின்பு 'கடாரம்' என்றும், 'கேடம்' என்றும் மருவியது. இன்று அது 'கெடா' என அழைக்கப்படுகின்றது. கடாரத்தைவென்ற இராசேந்திரன் 'கடாரம் கொண்டான்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். அவன் மலாய் நாட்டில் உள்ள 'தக்கோலம்' என்னும் ஊரையும் வென்றான். அவ்வூர் இப் பொழுது 'தக்கோபா' எனப் பெயர் பெற்றுள்ளது. இராசேந்திரன் கடலாண்ட திறத்தினை விளக்கும் சாசனங்கள் உள்ளன.

முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து

நல்லொழுக்கப் பயிற்சி

பழந்தமிழன் கடற்படையை வைத்திருந்தான்; கடல் வாணிகத்தை வளம்படுத்தினன்; கடலை ஆண்டான்; தமிழ் மக்களின் பண்பாடுகளையும், பெருமைகளையும் பிறநாடுகள் அறியச்செய்தான். தமிழ் நாட்டு மாணவச் செல்வர்களே! நீங்கள் யாது செய்யப் போகின்றீர்கள்? தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுதல்வேண்டாமா? தமிழின் பெருமையைப் பிறநாடுகள் அறியுமாறு செய்யமுற்படவேண்டாமா? இன்றே முற்படுங்கள்; முதற்கண் தமிழ் மொழியைப் பிழையறப் பயிலுங்கள்; தமிழ் இலக்கிய நூல்களைச் சுவைத்துப் படியுங்கள்; தமிழ்ச் சுவையைப் பிறர்க்கு உணர்த்துங்கள்; தமிழரின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் உலகுக்கு எடுத்து உணர்த்துங்கள்; தற்காலத்தே உலகின்கண் நிலவும் சிக்கல்களைத் தமிழ்ப் பண்பாட்டினல் தீர்க்கமுடியும் என்பதனைச் செயல் முறையில் காட்டுங்கள்.

4. நாடகக் கலை

பத்தி: 1, 2 முத்தமிழ்

அரங்கம் - நாடகமேடை. முத்தமிழ்: இயல், இசை, நாடகம் வகைப்பட-வகைப்படுத்தி சாற்றினர் - கூறினர். மதியுணர்ந்தோர்-அறிவுடையோர். பிங்கலர்: 'பிங்கலம்' என்னும் நிகண்டு நூலை இயற்றியவர். நிகண்டு - சொல்லுக்குரிய பொருள்களைச் செய்யுள் உருவில் கொண்ட நூல். அவிழ் - ஒளி வீசுகின்ற. வீங்கு - மிக்க. புனல் - நீர். காழி - சீர்காழி. ஒண் - ஒளி. முத்தமிழ்பயந்தான்: முத்தமிழ்க்கு ஆக்கம் தேடிய திருஞான சம்பந்தர். மூலம் - அடிப்படை, பிறப்பு. முதல்வன் - கடவுள். நான்மறை - நான்கு வேதங்கள்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகியவை. தொகைநூல்: புலவர்கள் பலரால், பல சமயங்களில், பல பொருள்கள் பற்றிப் பாடப்பெற்ற பாடல்கள் பின்பு அளவு பற்றியும், பொருள் பற்றியும், தன்மை பற்றியும் தொகுக்கப்பெற்றன. அவ்வாறு தொகுக்கப்பெற்ற நூலுக்குத் 'தொகை நூல்' என்று பெயர். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு எனச் சங்க காலத்துத் தொகை நூல்கள் எட்டு உள்ளன. பரிபாடல், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. தெரி - ஆராயப்படு

கின்ற. மாண் - சிறந்த. மும்மை - மூன்று. தென்னம்பொருப்பன் தென்மலைக்கு உரிமை பூண்ட பாண்டிய மன்னன். பரிமா - குதிரைகள். திரை - வரிசை. 'தெரிமாண்' எனத் தொடங்கும் பாடலின் கருத்து: முத்தமிழ் நிலைபெற்ற பாண்டி நாட்டை ஆளும் பாண்டிய மன்னனின் குதிரைகள் அணி பெறப் பரந்து செல்லுதல் போல வையை பரந்துசென்றது. பைந்தடம் - பசிய குளம். பாகுபாடு-பிரிவு.

இயல், இசை நாடகம் எனத் தமிழ் மூவகைப் பாகுபாட்டினை உடையது. பிங்கல நிகண்டில் இப்பாகுபாடு காணப்படுகின்றது. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர், 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி, 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த நாவுக்கரசர் ஆகியோர் பாடல்களில் 'முத்தமிழ்' என்னும் பிரிவு காணப்படுகின்றது. தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில், 'தமிழ் மும்மை' என்னுஞ் சொற்றொடர் காணப்படுகின்றது. பரிபாடல் கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது. இதற்கு முன்பு இம்மூவகைப் பாட்டினைப் பற்றிய செய்தி எந்நூலிலும் காணப்பட்டவில்லை. எனவே 'முத்தமிழ்' என்னும் பாகுபாடு கி. பி. 5-ஆம் நூற்றாண்டளவில் தோன்றி யிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

பத்தி 3 : நாடகம் என்பதன் பொருள்.

சான்ற - மிக்க, நிறைந்த. நச்சினார்க்கினியார்: தொல்காப்பியத்திற்கும், சிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய நூல்களுக்கும் உரையெழுதிய ஆசிரியர். இளம்பூரணர்: தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்களுள் ஒருவர்.

நாடகம் என்னும் சொல் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அச்சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'புனைந்துரை வகை' என்று பொருள் கூறினர். 'Drama' என்னும் ஆங்கிலச்சொல் குறிப்பிடுங் கருத்தையே 'நாடகம்' என்னும் சொல் குறிப்பிடும்.

பத்தி 4 : நாடகம் என்பதன் பழைய பொருள்.

பெரும்பாணாற்றுப்படை : பத்துப்பாட்டில் ஒரு பாடல்- விசி - கட்டு. வீங்கு - மிக்க. இன்னியம் - இனிய இசைக்கருவிகள். கடுப்ப- ஒப்ப. ஓர்ந்தும் - கேட்டும். நயத்தல் - விரும்புதல். கணிகை - பொது மகள். திவாகரம் : நிகண்டுகளுள் ஒன்று. 'நடமே என்று தொடங்கும் சூத்திரத்தில் வரும் சொற்களெல்லாம் 'கூத்து' என்னும் பொருளைத் தரும்.

பத்துப்பாட்டில் ஒரு பாடலாகிய பெரும்பாணாற்றுப்படையில் 'நாடகம்' என்னுஞ் சொல், 'கூத்து' என்னும் பொருளிலேயே வருகின்றது. நாட்டியத்திற்கு உரியோர் மகளிர் ஆவர். 'நாடகம்' என்ற சொல்லுக்கு 'நாட்டியம்' என்று பொருள் கூறுதல் பொருந்தும். சிலப்

பதிகாரத்தில் மாதவியின் நாட்டியம் பேசப்படுகின்றது. நாட்டியம் ஆடிய அவள் 'நாடகக் கணிகை' எனப்பட்டாள். திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகள், 'நாடகம்' என்னுஞ்சொல்லுக்கு 'கூத்து' என்றே பொருள் கூறுகின்றன. ஆகவே. 'நாடகத் தமிழ்' என்பது நாட்டியத்திற்குரிய இலக்கண இலக்கியங்களே ஆகும்.

பத்தி 5, 6 : நாடகம் தொடங்கிய முறை

குறுநில மன்னர் - சிற்றரசர். **விறலியர் :** விறல்பட (வெற்றி பொருந்த) ஆடும் மகளிர். **பாணர் :** பாடல் பாடும் ஓர் இனத்தார், **குழீஇய** - கூடிய. **தழீஇய** - கலந்து ஆடிய. **துணங்கை :** ஒரு வகைக் கூத்து. **மாண் தக்கோன் :** சிறப்புத் தகுதி பொருந்திய ஆட்டனத்தி என்னும் அரசன். **கோடு** - வளைந்த. **இலங்கு** - விளங்குகின்ற. **நெகிழ்த்த** - நெகிழுமாறு செய்த. **பீடு** - பெருமை. **குரிசில் :** ஆடவர்களுட் சிறந்தவன் ; ஈண்டு இது சேரன் ஆட்டனத்தியைக் குறிக்கும், ஈண்டுள்ள பாடலின் கருத்து : ஆடவர் கூடிக் கொண்டாடும் விழாக்களிலும், மகளிர் கூடி ஆடிய துணங்கைக் கூத்துக்களிலும் யான் என் கணவனாகிய ஆட்டனத்தியைக் கண்டிலேன். யான் ஒரு ஆடுகள மகள். என் காதலனாகிய ஆட்டனத்தியும் ஆடுகள மகனே ஆவான்' என்று ஆதிமந்தி என்பவள் பாடுகின்றாள். ஆதிமந்தி என்பவள் சோழன் கரிகாலனின் மகள் ஆவாள். அவளது கணவனாகிய ஆட்டனத்தி என்பவனைக் காவிரி வெள்ளம் கவர்ந்து சென்றது. அவனைத் தேடித் திரிந்த ஆதிமந்தி பாடிய பாடல் இது. இப்பாடல், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையின்கண் இடம் பெற்றுள்ளது.

நாட்டிய வகைகளுள் 'விநோதக் கூத்து' என்பது ஒன்று. பழங்காலத்து அரசர்கள் நாட்டியங்களை ஆதரித்து வந்தனர். விறலியர் என்போர் பாணர்களுடன் சென்று அரசர்களின் சபைகளிலும், விழாக்களிலும் நாட்டியம் ஆடி வந்தனர். அவர்கள் ஆடிய கூத்து வகையே பிற்காலத்தில் நாடகமாக உருப் பெற்றது.

பத்தி 7, 8 : நாட்டியத்தின் வளர்ச்சி

வைதிக சமயம் : வேதத்தோடு தொடர்பு கொண்ட சமயம். **கிளர்ச்சி** - எழுச்சி. **அவிநயக் கூத்து :** கதை தழுவாது, பாட்டினது பொருளுக்கு ஏற்பக் கைகாட்டி விளக்கும் பலவகைக் கூத்து. **ஏது** - கருவி. **ஈறாக** - முடிவாக. **புலனாகின்றது** - வெளிப்படுகின்றது. **அபிமானிக்கப் பெற்று** - ஆதரவு பெற்று ; போற்றப் பெற்று. **மரபு** - வழக்கம். **தலைக்கோல் :** நாடகம் ஆடும் மகளிர் பெறும் ஒருவகைப் பட்டம். **கட்டுரைத்து :** உண்டாக்கி.

விநோதக் கூத்து முதலியவை தொடக்கத்தில் அநாகரிகமாக இருந்து, பிறகு வளர்ந்து செம்மையுற்றிருத்தல் வேண்டும். கி. பி.

ஆறும் நூற்றாண்டில் எழுந்த வைதிக சமயக் கிளர்ச்சி, கூத்துக்கலைச் சீர்திருத்தியது. நாட்டியத்துடன் பாடல்களும் இயைந்தன. கண்ணுக் கும் காதுக்கும் இன்பம் தரும் ஒன்றாக நாட்டியம் மாறியது. வைதிக சமயக் கிளர்ச்சியினால் இசைப்பாட்டும் வளர்ச்சியடைந்தது இசைப் பாட்டினால் நாட்டியம் சிறப்புற்றது. நாட்டியம் பிறகு கோயில்களில் நடைபெறத் தொடங்கியது. இதற்குக் கல்வெட்டுக்கள் சான்று பகர் கின்றன. நாட்டியம் ஆடிய மகளிர் 'தலைக்கோல்' என்னும் பட்டத் தினைப் பெற்றனர். இவ்வாறு கோயில் விழாக்களில் நாட்டியம் ஓரிடத்தைப் பெற்றது.

பத்தி 9 : நாட்டியத்தின் மேம்பட்டது நாடகம்

சிறு + அளவு = சிற்றளவு. அவாவினர் - விரும்பினர். அடி யார்க்கு நல்லார் : சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர்.

நாட்டியத்தால் விளையும் இன்பம் சிற்றளவினதே. அதனால் நீடித்த இன்பம் உண்டாகாது. மேலும், நாட்டியத்தைச் சுவைக்க நுட்ப மான கலையுணர்ச்சி வேண்டும். எனவே மக்கள் நீண்ட நேரம் இன் பம் தரக்கூடிய, கதை தழுவிவரும் கூத்தாகிய நாடகத்தை விரும்பி னர். 'நாடகம்' என்பது 'கதை தழுவிவரும் கூத்து' என்கின்றார் அடியார்க்கு நல்லார். ஒரு நடிகையே பல பாத்திரங்களை மேற் கொண்டு, ஒரு கதையை முற்றுவித்தல் கூடும். இதனையே முன்பு 'நாடகம்' என்று குறிப்பிட்டனர். பழங்காலத்தில் 'நாட்டியம்' என்ற பொருளில் அமைந்த 'நாடகம்' என்னுஞ்சொல், பிறகு 'கதையை நடித் துக் காட்டும் கூத்து' என்னும் பொருளைப் பெற்றது. இந்நிலையை, தற்கால நாடகத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு 'மைல் கல்' என்னலாம்.

பத்தி 10 : நாடகம் இருந்ததற்குச் சான்றுகள்

கற்பிதம் - கற்பனை. **பிருகதீசுவரர் கோயில் :** தஞ்சைப் பெருங் **கோயில் :** இதனைக் கட்டியவன் சோழன் இராசராசன். **இறையிலி நிலம் :** வரி கொடுக்க வேண்டாத நிலம். மகிமை - சிறப்பு.

நாடகக்கூத்தினின்றும் நாடகம் பிறந்தது. நாடகங்கள் திருக் கோயில்களிலேயே நடைபெற்றன. தஞ்சைப் பெருங்கோயிலில், 'இராஜராஜேசுவரநாடகம்' என்னும் ஒரு நாடகம் நடிக்கப்பட்டு வந்த செய்தியைக் கல்வெட்டினால் அறியலாம். கோயில் கட்டிய வர லாறும், அரசனுடைய அருஞ் செயல்களும் அந்நாடகத்தில் அமைந் திருத்தல் கூடும். கமலாலயபட்டர் என்பவர் 'பூம்புலியூர் நாடகம்' என்னும் ஒரு நாடகத்தை எழுதி, இறையிலிநிலத்தைப் பரிசாகப் பெற்றார் என்று கடலூர்க் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. முதல் நாடகம் பெரும்பாலும் பத்தாம் நூற்றாண்டளவில் தோன்றியது என்று கொள்ளலாம்.

நன்றல்லது அன்றே மறப்பது நன்று

பத்தி 11: பழைய நாடக நூல்கள்

பாட்டியல் : தமிழ்ப் பிரபந்தங்களின் இயல்புகளை உணர்த்தும் நூல். பள்ளு, குறவஞ்சி என்பன தமிழ்ப் பிரபந்தவகையைச் சார்ந்த நூல்கள்.

நாடக நூல்கள் தமிழ்நாட்டில் செழித்துவளர்ந்தில. 'பள்ளு' எனப்படும் உழத்திப் பாட்டு, 'குறவஞ்சி' எனப்படும் குறத்திப் பாட்டு ஆகிய இரண்டைத் தவிர வேறு நாடக நூலகள் தோன்றவில்லை. இந்நூல்கள் கோயில்களுடன் தொடர்பு கொண்டவை.

பத்தி 12 : கீர்த்தனைகளின் தோற்றம்

இசைப்பாட்டுக்கள் வளர்ந்து, கீர்த்தனங்கள் பெருகின. சீர்காழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகக் கீர்த்தனை என்ற நூலே முதல் கீர்த்தனை நூல் ஆகும். கீர்த்தனைகள் கதாகால க்ஷேபங்கட்கும், நாடகங்களுக்கும் பயன்பட்டன. பாரதக் கீர்த்தனை முதலியவை நாடகங்களாகவே நடிக்கப்பட்டன.

பத்தி 13 : பிறமொழி தழுவிய தமிழ் நாடகங்கள்

அற்பம் - குறைவு. நாடக இயல் - நாடக இலக்கண நூல். இதனை எழுதியவர் திரு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் ஆவார். மனோன்மணீயம் : செய்யுள் உருவில் அமைந்ததொரு நாடக நூல். இதனை எழுதியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் ஆவார்.

19-ஆம் நூற்றூண்டில் வடமொழி நாடக நூல்களையும், ஆங்கில நாடக நூல்களையும் தழுவித் தமிழில் நாடக நூல்கள் பல எழுதப்பெற்றன. ஷேக்ஸ்பியர், ராஸீன், மோலியர் முதலிய மேனாட்டு நாடக ஆசிரியர்களுடைய நாடக நூல்களைத் தழுவிய நூல்கள் தோன்றின. வடமொழி நாடக இலக்கண முறைகளைப் பின்பற்றியவர்களுள் திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் சிறந்தவர். மேனாட்டு நாடக நூல்களைத் தழுவித் தமிழ் நாடக நூல்களை எழுதியவர்களுள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் சிறந்தவர்.

பத்தி 14, 15 : நடிகராயுள்ள நாடக ஆசிரியர்

கூர்ந்து - நுட்பமாக. உணரும் - அறியும்.

தற்காலத்தில் நாடக நூல்களை எழுதிச் சிறப்புப் பெற்றவர் திருவாளர் ப. சம்பந்த முதலியார் அவர்கள் ஆவார். இவருடைய நாடகங்கள் எளிய உரை நடையில் அமைந்துள்ளன. சிறந்த நடிகராகவும் இருந்தமையாலேயே, இவரால் அழகிய நாடக நூல்களை இயற்ற முடிந்தது. நாடகக் கலை இனி நன்கு வளர்ச்சியுறுவதற்கேற்ற அறிகுறிகள் தோன்றுகின்றன.

நல்லொழுக்கப் பயிற்சி

"சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும்" என்பது பெரியோர் கூறிய பொருள் மொழி. உடல் நன்னிலையில் இருந்தால்தான் உள்ளமும் நன்னிலையில் இருக்கும். உள்ளமும் உடலும் ஒரு சேர வளர்தல் வேண்டும். ஒன்றினைப் புறக்கணித்து, மற்றொன்றை வளர்ப்பது கேடு பயக்கும். எனவே நீங்கள் உள்ளத்தையும் உடலையும் ஒன்றாக வளர்க்க வேண்டும். நாட்டியம் உடல் உறுப்புக்களை வளர்த்துத் திண்ணிதாக்கி, உடலில் அழகொழுகச் செய்யும். நாடகத்தில் பங்கு கொண்டு நடிப்பது சிறந்த பொழுது போக்காகும். நல்லொழுக்கத்தைப் புகட்டும் நாடகங்களையும் படக் காட்சிகளையுமே நீங்கள் பார்த்தல் வேண்டும். அடிக்கடி படக் காட்சிகளைப் பார்ப்பதும், இரவில் நெடுநேரம் கண் விழிப்பதும் தீமையைத் தருவன. கல்வியறிவைப் புகட்டும் படங்களையும் நீங்கள் பார்க்கலாம்.

5. குடிமக்கள் காப்பியம்

பத்தி 1 : இளமையில் ஆசிரியர் முடிமக்கள் கதைகளையே அறிந்தமை

மின்னும் பூச்சிகள் : *மின்மினிப் பூச்சிகள்.* நகையாடுவோம் - *சிரித்து மகிழ்வோம்.* பேசும் விலங்கு, பாடும் மரம் ஆகியவை *கற்பனைக் கதைகளில் வருவன.* சித்தர் - *சித்திகளில் வல்லவர். 'சித்தி' என்பது நினைத்தவாறே செய்தல்.* திருவிளையாடல்கள் : *சிவபிரான் மதுரையில் நிகழ்த்தியனவாகக் கூறப்படும் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள்.* முடிமக்கள் : *முடிசூடிய மன்னர்கள்.*

ஆசிரியர் இளமைப் பருவத்தில், ஏனைய குழந்தைகளுடன் சேர்ந்து கொண்டு, இரவு வேளைகளில் கதைகளைக் கேட்பார். வேலையாள் கதைகளைக் கூறுவான். அவன் குழந்தைகட்கேற்ற கற்பனைக் கதைகளைக் கூறுவான், ஆனல் அக்கதைகளிலெல்லாம் அரசனும், அரசியும் தவறாமல் வருவர். விக்கிரமாதித்தன் கதை முதலான முடிமக்கள் கதைகளையன்றிக் குடிமக்கள் கதைகளை ஆசிரியர் இளமையில் கேட்டாரல்லார்.

பத்தி 2: முப்பதாண்டுகட்கு முன்லிருந்த நிலை

நைடதம் : *நளனது வரலாற்றை விருத்தப்பாக்களின் உருவில் கொண்டுள்ள ஒரு நூல்.* பாட்டாளி : *பாடுபட்டு உழைப்பவர்.*

ஆசிரியர் பள்ளியிலும், கல்லூரியிலும் படித்த காலத்தில் முடிமக்கள் கதைகளையே படிக்குமாறு நேரிட்டது. இராமயணம் முதலிய நூல்களிலும், ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும் முடிமக்கள் வரலாறே கூறப்படுகின்றது அன்றோ? வரலாற்றுப் பாடத்திலும் முடிமக்கள் வரலாறே வந்தது. எனவே முப்பதாண்டுகட்கு முன் 'பாட்டாளி' என்னும் சொல்லே வழங்கப்படவில்லை.

பத்தி 3: வேறு மொழிகளில் உள்ள நூல்களும் முடிமக்கள் வரலாற்றையே கூறும் பான்மை

ஆதிகாவியம் - பழங்காவியம். **காவியம்**; கதை தழுவிய செய்யுள் நூல். **பாவாணர்** - பாடல் பாடி வாழ்பவர்; கவிஞர்.

உலகம் முழுவதிலும் கதையென்பது முடிமக்கள் கதையையே குறித்தது. வான்மீகி முனிவர் வடமொழியிற் பாடிய இராமாயணம் என்னும் ஆதி காப்பியமும், ஹோமர் பாடிய 'இலியட்' என்னும் கிரேக்கப் பழங் காப்பியமும், வர்ஜில் பாடிய 'ஈனிட்' என்னும் இலத்தின் மொழிப் பழங்காப்பியமும் முடிமக்கள் கதைகளையும், வரலாறுகளையுமே கூறுகின்றன.

பத்தி 4: குடிமக்கள் காப்பியத்தைக் காணப்பெறாமல் மக்கள் மனங் குமுறியமை

குடியரசு: குடிகளால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவர்கள் நாட்டை ஆளுதல். குமுறுதல் - சினத்தினால் நெஞ்சம் அடையும் நிலை. குறம், குறவஞ்சி என்பவை தமிழ்ப் பிரபந்த வகைகளைச் சார்ந்த சிறு நூல்கள்.

— முடியரசர் காலம் முடிந்துவிட்டது. இது குடியரசுக் காலம். எனவே குடிமக்களைப் பற்றிய நூல்கள் தற்பொழுது எழுத்தான் வேண்டும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி செய்வோர் குடிமக்களைப் பற்றிய நூல் இல்லையே என்று குமுறுகின்றனர். குறமும், குறவஞ்சியும் கூட அரசர்களுடனும், கடவுளருடனும் தொடர்பு கொண்டனவாக உள்ளன.

பத்தி 5: குடிமக்கள் காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம்

அதனினும்: பெரியோரைப் புகழ்வதினும். **வாய்ப்பந்தல் போடுதல்** - சொல்லளவோடு நிற்றல். **எண்ணி** - நினைத்து, ஆராய்ந்து. **சோழன் கரிகாலன்**: சிலப்பதிகார வரலாற்றுத் தொடக்கத்தில் சோழ நாட்டை ஆண்டவன் **பாண்டியன் நெடுஞ்செழியன்**: கோவலனைக் கொன்ற பாண்டிய மன்னன். **சேரன் - செங்குட்டுவன்**: கண்ணகிக்குக் கோயில் கட்டிச் சிறப்பு செய்தவன். **தானை** - சேனை. **மூவர்**: சேரர், சோழர், பாண்டியர். **பரத்தையர்**: பொதுமகளிர்; நாடக மகளிர்.

"பெரியோரைக் காரணமின்றிப் புகழோம். சிறியோரை இகழவே மாட்டோம்" என்று பழந்தமிழன் பாடியுள்ளான். சொல்

ளவில் மட்டும்தானு இப்படி உள்ளது? குடிமக்கள் காப்பியம் இல்லையா? பாரதமும், இராமாயணமும் தமிழில் ஆதிகாப்பியங்கள் எனப்படா. சிலப்பதிகாரமே தமிழின்கண் முதன்முதல் தோன்றிய காப்பியமாகும். அந்நூலில் சோழன் கரிகாலனும், பாண்டியன் நெடுஞ்செழியனும், சேரன் செங்குட்டுவனும் வருகின்றனர். எனினும் அவர்களுடைய கதையை அந்நூல் பாடவில்லை. அந்நூல் கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோருடைய சிக்கல் வாழ்க்கையைப் பாடு கின்றது. அவர்கள் மூவரும் குடிமக்களே யாவர். எனவே சிலப்பதி காரம் குடிமக்கள் காப்பியம் ஆகும்.

பத்தி 6: சிலப்பதிகாரமே தமிழில் தோன்றிய முதற் காப்பியம்.

பரிவு - விருப்பம். ஆய்ச்சியர் - இடைச்சியர். குரவை: பெண்டிர் கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து. குன்றம் - மலை. வரி: ஒரு வகை இசைப்பாட்டு. ஒருமைப்பாடு-ஒன்றுக விளங்கும் தன்மை சிதைத்து-அழித்து. ஒருமை-ஒன்ருகும் தன்மை. முப்பெருந்துண்டு: சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு எனப்படும் முப்பெரும் பிரிவு.

பிற நாட்டு மொழிகளில் முடிமக்கள் வரலாறே பழங்காப்பியமாக அமைந்துள்ளது. ஆனல் தமிழ் மொழியில் குடிமக்கள் காப்பியமே பழங்காப்பியமாக உள்ளது. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பிய மாகும். பாட்டாளி உலகத்தை இளங்கோவடிகள் சிறப்பித்துப் பாடி யுள்ளார். முடிமக்களால் தமிழ் நாடு முப்பெரும் பிரிவாக இருந்தது. குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகியினுல் தமிழ் நாட்டில் ஒருமை ஓங்கி வளர்ந்தது.

பத்தி 7: இளங்கோவடிகளின் திறமை

இளங்கோவடிகள்; இளமையிலேயே துறவு பூண்டவர்; சேரன் செங்குட்டுவனுக்குப் பின் பிறந்தவர்; சிலப்பதிகாரத்தைப் பாடியவர்.

இக்கட்டுரையின் ஆசிரியர், இளமையில், குடிமக்களைப் பற்றிய காப்பியமே தோன்ருது என்று எண்ணியிருந்தார். இளங்கோவடிகள் குடிமக்களைப் பற்றிய காப்பியத்தின் இன்றியமையாமையை எண்ணி, சிலப்பதிகாரத்தைப் பாடினுர்; தமிழர் யாவரும் அந்நூலைப் பாராட்டும் படி செய்தார்.

பத்தி 8: குடிமக்கட் காப்பியத்தின் இயல்பும், உயர்வும்

வஞ்சி: சேரர்களின் தலைநகரம். வெண்ணி: ஓர் ஊர், ஈண்டுக் கரிகாலனுடன் போர் செய்த சேரமான், தான் அடைந்த புறப்புண்ணுக் காக நாணி வடக்கிருந்தான். அம்பலம்: ஊர்ப் பொதுமன்றம். காதல், வீரம் என்பன சுவைகள். அவலச்சுவை - அழுகைச் சுவை. கருணை - அருள். மறவன் - வீரன். மணிமேகலை: கோவலனுக்கு மாதவியின் வாயிலாகப் பிறந்த பெண். அவள் இளமையிலேயே பௌத்த மதப் பிக்குணி ஆயினள். ஒழிபியல்: ஒழிந்தனவற்றைக் கூறும் இயல். அநாமத்து - பெயர் இல்லாதது.

சங்கப் புலவர்கள் தம் பாடல்களில் புரட்சியை உண்டு பண்ணினர். தாங்கள் கண்ட ஊர்களையும், போர்களையும் அவர்கள் உவமைகளாகக் காட்டினர். இளங்கோவடிகளும் ஒரு புரட்சியை உண்டாக்கினார். குடிமக்கள் கதையைப் பாடினமையே அது. அவர் சிலப்பதிகாரத்தில் காதல், அழுகை, வீரம் ஆகிய சுவைகளை நன்கு அமைத்தார். புகார்க் காண்டத்தில் காதற் சுவையையும், மதுரைக் காண்டத்தில் அழுகைச் சுவையையும், வஞ்சிக் காண்டத்தில் வீரச் சுவையையும் அவர் நன்கு அமைத்துள்ளார். கோவலனிடம் அருள் வீரத்தையும், கண்ணகியிடம் ஒரு புதிய வாழ்க்கையையும், பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவியினிடம் கற்புப் பண்பையும் அவர் காட்டியுள்ளார். குடிமக்களுக்குச் சிறப்புக் கொடுக்க விரும்பியே திருவள்ளுவர் குடிகளின் சிறப்பைப் பதின்மூன்று அதிகாரங்களிற் கூறுகின்றார். அவற்றின் சிறப்பை உணராத இடைக்காலத்து மக்கள் அவற்றுக்கு 'ஒழிபியல்' எனப் பெயரிட்டு ஒதுக்கினர். இன்று குடிமக்கட் காப்பியத்தின் பெருமையை நாம் உணர்கின்றோம். பழைய நூல்களைப் புதுக் கண் கொண்டு நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நல்லொழுக்கப் பயிற்சி

உலகில் இன்பம் எனக்கருதப்படுபவை பல உள. ஆனால் எல்லாவற்றையும் இன்பம் எனக் கருதுதல் கூடாது. ஒருவருக்கு இன்பமாகத் தோன்றுவது மற்றொருவருக்குத் துன்பமாகத் தோன்றலாம். சிலவகை இன்பங்கள் நிலைத்து நிற்பன அல்ல. முதலில் இன்பமாகத் தோன்றிய ஒன்று பிறகு துன்பமாகத் தோன்றலாம். ஆனால் நிலைபெற்ற இன்பம் என்று உலக அறிஞர்களால் ஒருமுகமாகக் கூறப் பெறுவது இலக்கிய இன்பமேயாகும். நம் பழந்தமிழ்ப் புலவர்கள் சுவைபடப் பாடிய பாடல்களைப் படிக்கப்படிக்க, ஆராய ஆராய, நினைக்க நினைக்கப் புதிய இன்பம் கிடைக்கும்; நிலைபெற்ற பேரின்பம் கிடைக்கும். இலக்கிய இன்பத்தினை நுகர்தல் மக்களுக்குச் சிறந்ததொரு பொழுதுபோக்காகும். எனவே, தமிழ்நாட்டு இளைஞர்கள்! உங்கட்குப் பாடமாக வந்துள்ள பாடல்களை ஆழ்ந்து படித்துப் பாருங்கள்; தேர்வினைமட்டும் கருத்திற்கொண்டு படியாதீர்கள், அவற்றின்கண் அமைந்துள்ள சுவைகளை நுகரப் பழகுங்கள். அச்சுவைகளைப் பிறர்க்கும் எடுத்து உணர்த்துங்கள். பிற்காலத்தில், இலக்கியச் சுவை காணும் வழக்கம் உங்கட்குச் சிறந்ததொரு நற்பொழுதுபோக்காக அமையும்.

யா காவாராயினும் நா காக்க

6. கியூரி அம்மையார்

பத்தி 1: விஞ்ஞான வளர்ச்சி

விஞ்ஞானயுகம் : விஞ்ஞானம் முன்னேற்றமடைந்த யுகம்; மக்களின் வாழ்க்கைத் துறைகளிலெல்லாம் விஞ்ஞானம் பயன்படுகின்ற யுகம். **பௌதிக சாத்திரம்** : பொருள்களின் தோற்றத்தைப்பற்றி ஆராயும் சாத்திரம் (Physics) **இரசாயன சாத்திரம்** : பொருள்களின் அமைப்பினைப்பற்றி ஆராயும் சாத்திரம். (Chemistry) **காட்டுமிராண்டி** : நாகரிகம் அற்ற காட்டு மக்கள். **இறுமாந்து** - கர்வம் கொண்டு. **எள்ளி** - இகழ்ந்து. **நகையாடிய** - சிரித்த.

இக்காலத்தை விஞ்ஞான காலம் என்னலாம். விஞ்ஞான வளர்ச்சியால் கண்டு பிடிக்கப்பெற்ற பலவகைக் கருவிகள் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக உள்ளன. பௌதிக சாஸ்திரம், இரசாயன சாத்திரம் முதலிய துறைகளிற் செய்யப்பெறும் ஆராய்ச்சிகளால் அற்புதங்கள் பல தோன்றியுள்ளன. ஆதி மனிதர்கள் தமது அநுபவத்தால் பல கருவிகளை அமைத்துக்கொண்டனர். பழங்காலப் பெண்டிருடைய நுட்ப அறிவினால் வீட்டில் பயன்படக்கூடிய கருவிகள் பல சாதனங்களை ஆதி மக்கள் நாளடைவில் அமைத்துக்கொண்டனர். ஆனால் இவற்றுடன் விஞ்ஞான வளர்ச்சி முற்றுப்பெற்று விடவில்லை. யாவரும் திடுக்கிடக்கூடிய அளவில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தது.

பத்தி 2: விஞ்ஞானத் துறையில் பெண்டிர்

செருக்கு - கர்வம். **இடையூறு** - துன்பம். **ஐரீன் கியூரி** : கியூரி அம்மையாரின் மகள்.

விஞ்ஞான வளர்ச்சியால் மக்களின் கற்பனைகட்கும் எட்டாத புதிய பொருள்கள் பல தோன்றின. விஞ்ஞான ஆராய்ச்சி செய்தவர்களுள் பெண்டிரும் உளர். கியூரி அம்மையார், அவரது மகளாகிய ஐரீன் கியூரி அம்மையார் முதலியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். அவர்களுடைய ஆராய்ச்சியால் நோயாளிகள் பலர் நோய் தீர்ந்து, உயிர் பெற்றனர்.

பத்தி 3 : கியூரி அம்மையார் கல்வி பயிலச் செல்லுதல்

கூறு - பங்கு. **குழவி** - குழந்தை. **இயற்பெயர்** - குழந்தைக்குப் பெற்றோர் இட்ட முதற்பெயர். **இன்றி** - இல்லாமல்.

போலண்ட் என்னும் நாடு சென்ற நூற்றாண்டில் பகைவர்களால் பங்கிடப்பட்டது. அந்நாட்டு மக்கள் அடிமை வாழ்க்கை நடத்துமாறு நேரிட்டது. தாய்மொழிப் பற்றுமிக்க அந்நாட்டு மக்கள் மறைவாகத் தம் மொழியைக் கற்றனர். சிலர் கல்வி

கற்கும் பொருட்டு வெளிநாடு சென்றனர். அவ்வாறு கல்வி பயிலச் சென்றவர்களுள் மேரி கியூரி அம்மையாரும் ஒருவராவார். ஸ்கோலாடோ வாஸ்கி என்னும் குடியில், விஞ்ஞான ஆசிரியர் ஒருவரின் மகளாகப் பிறந்தார் கியூரி அம்மையார். அவர் சின்னாட்கள் ஒரூரில் சில குழந்தைகட்குக் கல்வி மேற் படிப்பின் பொருட்டுப் பாரிஸ் மாநகருக்குச் சென்றார்.

பத்தி 4: அம்மையாரின் திருமணமும் ஆராய்ச்சியும்

உலகப் பண்பாட்டின் தலைநகரம்என்று கருதப்படுவது பாரிஸ் மாநகரம் ஆகும். பல்கலைக் கழகம் : University. ஆர - நிரம்ப, பூத்து - தோற்றுவித்து. சமுதாயம் - மக்கள் கூட்டம், மணவினை - திருமணம். ஏழ்மை - வறுமை. காலம் கண்ட - பழைய. திருமஞ்சனம் - அபிடேகம்.

அம்மையாரிடம் சிறிய தொகையே இருந்தது. அதனை வைத்துக் கொண்டு அவர் பாரிஸ் மாநகரத்தில் வாழ்வது கடினமாக இருந்தது. அதனால் அவர் பல நாட்கள் பட்டினி கிடக்க நேரிட்டது, அவருக்கு ஆசிரியராக இருந்தவர் லிப்மன் என்பவராவார். அம்மையாருடன் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மற்றொரு மாணவர் பியரிக்கியூரி என்பவராவார். ஆராய்ச்சியில் ஒன்றுபட்டிருந்த அம்மையாரும், பியரிக் கியூரியும் 1898-ல் திருமணம் செய்துகொண்டனர். அவர்கட்கு ஐரீன் என்னும் பெண் குழந்தை பிறந்தது. ஏழ்மை நிலையில், காதலர் இருவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்கள் ஆராய்ச்சி செய்து வந்த இடமோ மிகப் பழையது. ஆராய்ச்சி செய்யுங்கால் ஒரு முறை கதிர் வீச்சினால் அம்மையாரின் கை எரிந்து விட்டது. எத்தகைய துன்பம் வரினும் தளராமல், உடலைத் தின்று அரிக்கக் கூடிய பொருளைப் பற்றிய ஆராய்ச்சியில் அம்மையார் ஈடுபட்டார்.

பத்தி 5 : அம்மையார் போலோனியம் கண்டுபிடித்தமை

துரைத்தனம் - அரசாங்கம். வலிந்து - பெருமுயற்சி செய்து. உரம் - வலிமை, எஞ்சி - மிச்சமாக,

'யுரேனியம்' என்பது தானே கதிர் வீசுவது என்பதனைப் பாக்கரல் என்பவர் கண்டுபிடித்தார். அவ்வாராய்ச்சியைப் பின்பற்றி, அம்மையார், கதிர் வீச்சு இயக்கம் பெற்ற வேறு பொருள் உளதோ என்று ஆராய்ந்தார். அவ்வாராய்ச்சியினால் 'தோரியம்' என்பதும் கதிர் வீசும் என்று கண்டார் அம்மையார். பிச்சுக்கட்டியிலிருந்து யுரேனியத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான கதிர் வீச்சு இயக்கம் உண்டானது என்பதனையும் அவர் கண்டார். ஆஸ்திரிய அரசாங்கம் அம்மையாருக்கு ஒரு டன் பிச்சுக்கட்டியைக் கொடுத்து உதவியது. மெலிந்து தளர்ந்த உடலினையுடைய அம்மையார் பிச்சுக்

கட்டியைப் பலவாறு ஆராய்ந்து பிரித்து, முடிவில் பேரியம் சல்பேட் என்னும் பொருளையும் பிரித்தார். அதன்பின் எஞ்சி நின்ற பொருளுக்கு அம்மையார் 'போலோனியம்' என்று பெயரிட்டார். தமது தாய் நாடாகிய போலண்டின் நினைவாகவே அம்மையார் அப்பெயரைச் சூட்டினார்.

பத்தி: 6: மேலும் ஆராய்ச்சி; ரேடியம் கண்டுபிடிக்கப் பெறுதல்

களி நடம் புரிதல் - மகிழ்ச்சிக் கூத்தாடுதல். வேதிப்பொருள்: மாற்றும் இயல்புடைய பொருள். அல்லல் - துன்பம்.

போலோனியத்தினும் ஒளி மிகுந்த பொருள் ஒன்று உண்டு எனக் கண்ட அம்மையார் அதனைக் கண்டுபிடிக்க மேலும் மேலும் ஆராய்ந்தார். பிச்சுக்கட்டியோடு வேதிப் பொருள்களைக் கலந்து காய்ச்சினார் அம்மையார். அவர் நான்கு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்த பின், 6 அரிசி எடையுள்ள நுட்பமான பொருளைப் பிரித்தெடுத்தார். அதுவே ரேடியம் ஆகும்.

பத்தி 7: அம்மையார் ரேடியத்தைக் கண்டுபிடித்தமை

எழில் - அழகு. வான்மீன்: நட்சத்திரம், பொலிதல் - விளங்குதல். சமாதி: பெரு மௌனத்துடன் தியானத்தில் இருத்தல். சோதி, சுடர்: ஒளி.

முதல் நாள் கண்டுபிடித்த நுட்பமான பொருளைக் காணக் காதலர் இருவரும் இருட்டறைக்குச் சென்றனர். ரேடியம் ஒளியுடன் விளங்கும் என்று அவர்கள் நினைத்தனர். என்னே வியப்பு! அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேல் மிக அதிகமான பேரொளியுடன் ரேடியம் விளங்கியது. அப்பொருளினைக் கண்டு பெரு மகிழ்ச்சியுடன் இருந்தார் அம்மையார். பியரிக்கியூரியோ அம்மையாரைப் பலவாறு பாராட்டினார்.

பத்தி 8: ரேடியத்தின் பண்பு.

மிளிர்ந்தது - விளங்கியது. சிதைத்து - அழித்து. கிருமிகள் - நுட்பமான உயிர்கள்.

நான்கு ஆண்டுகள் செய்த ஆராய்ச்சியின் பயனைப் அம்மையாரும் அவரது கணவரும் ரேடியத்தினைக் கண்டு பிடித்தனர். யுரேனியத்தைக்காட்டிலும் ஐந்தி லட்சம் மடங்கு அதிகமாக மிளிரும் ரேடியம். அது தானே சூட்டினைக் கொண்டது. அதிலிருந்து வெளிவரும் ஒளி கற்பனைக்கும் எட்டாத திறன் உடையது. காற்றில் உள்ள நோய்க் கிருமிகளைக் கொல்லும் தன்மை இதற்கு உண்டு. இதன் முன் எதிர்ப்பட்ட பொருள்கள் யாவும் பேரொளியினைப் பெறும்.

பத்தி 9: அம்மையாரின் கொடைப்பண்பு.

இரங்கி - கெஞ்சி. பறை அறைதல் - எங்கும் பரப்பி வெளிப்படுத்துதல்.

ரேடியத்தைப் பிரிக்கும் முறையை அறிவித்தால் கோடிக்கணக்கில் பணம் தருவதாகப் பலர் கூறினர். ஆனால், அம்மையார், தம் ஆராய்ச்சியை விலைக்கு விற்க மறுத்துவிட்டார். அவர் முதன்முறை பெற்ற ரேடியத்தைப் பாரிஸில் உள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கும், இரண்டாம் முறை பெற்றதை போலண்டில் உள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கும் தந்து உதவினர். இதனை விஞ்ஞான சந்நியாசம் என்னலாம்.

பத்தி 10 : அம்மையாரின் மறைவு.

மாண்டார் - இறந்தார். கதிர் - ஒளி.

பியரிக்கியூரி, குதிரை வண்டியின் கீழ் அகப்பட்டு இறந்தார். அதனால் அம்மையார் மிகவும் வருந்தினர். முதல் உலகப்பெரும் போரில் காயம்பட்ட வீரர்க்கு ரேடியம் கொண்டு மருத்துவம் செய்ய அம்மையார் பெரும்பாடுபட்டார். முடிவில் அவர் 9—7—1934 அன்று இயற்கை எய்தினர்.

பத்தி 11 : அம்மையாரின் புகழ்

வாணர் : வாழ்பவர். நோபல் பரிசு: ஆண்டுதோறும் அறிஞருக்குத் தரப்படும் பெரும் பரிசு. 'நோபல்' என்னும் பெரியார் இதனை அமைத்துள்ளார்.

முதன் முறையாக நோபல் பரிசுபெற்ற பெண்மணி கியூரி அம்மையாரே ஆவார். விஞ்ஞானத் துறை யறிவுபற்றி இவருக்கு இரு முறை நோபல் பரிசு அளிக்கப்பெற்றது.

நல்லொழுக்கப் பயிற்சி

வறுமையால் வாடினர் கியூரி அம்மையார். ஆனால் அவர் விடாமுயற்சியுடன் ஆராய்ச்சி செய்தார்; தமக்கு வந்த துன்பங்களை இன்பமாகக் கருதிப் பாடுபட்டார்; ஆராய்ச்சியில் வெற்றிபெற்றார். "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்பர் பெரியோர். அஃது உண்மை என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? மாணவர்களே! முன் வைத்த காலைப் பின் எடாமல் முயலுங்கள்; பயனை எதிர்பாராதீர்கள்! எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கப் பாடுபடுங்கள், தவறாமல் உங்கட்கு வெற்றி கிடைக்கும். இதனால் தான் வள்ளுவனர்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்"

என்றார்.

7. இன்னும் ஓர் ஐம்பது ஆண்டில்

பத்தி 1: 2 விஞ்ஞான முறைகள் அல்லாதவை

சலனம் - இயக்கம், அசைவு. தீர்க்கதரிசிகள்: பின் நிகழ்வன வற்றை முன்னதாகவே கூறுவோர். கற்பனைத் தேர்: கற்பனை ஒரு தேராக உருவகம் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் உலகம் எப்படி இருக்கும் என்று சோதிடர்களும், கவிஞர்களும் கற்பனைசெய்து கூறி யுள்ளார்கள். அவை யாவும் விஞ்ஞான முறைகள் அல்ல.

பத்தி 3 : விஞ்ஞானத்தின் இயல்பு

நனவு - விழித்திருக்கும் பொழுது. பாவிக்காது - நினையாது. பேய்த்தேர்: கானல் நீர்; வெயிற் காலத்தே நெடுந்தூரத்தில் நீர் நிற்பது போல் தோன்றும் ஒரு கற்பனைத் தோற்றம். செறிந்த-நிறைந்த. சாந்தம் - அமைதி. அகக்கண் - மனக்கண்.

கற்பனைக் காட்சிகளை விஞ்ஞானம் ஆதாரமாக் கொள்ளாது. அறிவும், தூய்மையும், சாந்தமும் நிரம்பிய மன நிலையுடன், குறித்த ஓர் இலட்சியத்தைக் குறித்து முன்னேறிச் செல்லும் இயல்புடையது விஞ்ஞானம்.

பத்தி 4 : ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது விஞ்ஞானம்

அட்சயபாத்திரம்: எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு பெருகும் பாத்திரம். மூப்பு - முதுமைப்பருவம். பிணி - நோய்- சாக்காடு - இறப்பு. அமரர் - தேவர். சந்ததம் - எப்பொழுதும். இச்சை - விருப்பம். அஸ்திவாரம் - அடிப்படை.

அட்சயபாத்திரம், அல்லாடின் விளக்கு, அற்புத மோதிரம், இச்சா கம்பளம் போன்றவை கதைகளில் வருபவை. அவையாவும் கற்பனைகளால் தோன்றியவை. ஆனால் விஞ்ஞானம் அத்தகையது அன்று. அஃது ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

பத்தி 5 : நம் விருப்பம் நிறைவேறுமா?

ஊண் - உணவு. இன்றியமையா - இல்லாமல் முடியாத. மூலம்- அடிப்படை. கடிய - விரைவான. உபகரணம்-துணைக்கருவி. பிரபஞ்சம் - மிகப் பெரியது. சேய்மை - நெடுந்தூரம். அண்மை - அருகே.

உணவு, உடை, உறைவிடம்; ஆகியவை நம் இன்றியமையாத் தேவைகள். மனம் நினைத்த விதமெல்லாம் நடக்கவும், கவலையின்றி

இன்பமாக வாழவும் நாம் விரும்புகிறோம். இயற்கையை ஏவல் கொள்ள நாம் விரும்புகிறோம். இவையாவும் ஐம்பது ஆண்டுகட்குள் நிறை வேறுமா?

பத்தி 6: உயிரினம் விரைவில் மாறாது

பரிணமித்து - வளர்ந்து பெரிதாகி. இத்துணை - இவ்வளவு.

ஆதியில் தோன்றிய உயிரினம் இருபதினாயிரம் ஆண்டுகளாகப் பலவகை மாறுபாடுகளை அடைந்தது. மனிதனும் பலவகைப் பண்புகளை நாளடைவில் பெற்றான். இந்நிலையில் ஐம்பது ஆண்டுகட்குள்ளாக உயிரினம் அதிகமாறுதலை அடையும் என்று நாம் நினைக்க முடியாது.

பத்தி 7: மக்களின் அச்சம்

உயிர்ப்பித்த - பிழைக்க வைத்த. நிர்மூலம் - அடியொடு அழிதல் அறத்திற்கு எதிர்சொல் மறம்.

விஞ்ஞானிகள் அணுவின் சக்தியை விடுவித்து விட்டார்களாதலால் இனி உலகம் அழிந்துவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர்.

பத்தி 8: மக்கள் அஞ்ச வேண்டுதில்லை

கேளிர் - உறவினர். வர்க்கம் - கூட்டம், தொகுதி.

நூடரையஸ் முதலான கொடுங்கோலரசர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். ஒவ்வொருவர் காலத்திலும் உலகம் அழிந்துவிடுமோ என்று மக்கள் அஞ்சினர். மக்களின் மனம் பண்படுமானால் யாரும் அஞ்ச வேண்டுவதில்லை. அப்பொழுது நமக்குப் பல நன்மைகளும் கிடைக்கும்.

பத்தி 9: உணவு நமக்கு இன்றியமையாதது

ஆயுள் - வாழ்நாள். ஆரோக்கியம் - நோயின்றிச் சுகமாக இருத்தல்.

உணவில்லாமல் நாம் நம் ஆயுட்காலம் முழுவதையும் கழித்துவிட முடியாது. உடலுக்கு ஏற்ற உணவு நமக்கு வேண்டும். மாத்திரைகளால் நெடுநாள் வாழ முடியாது.

பத்தி 10, 11, 12: உணவு

பசிய - பசுமையான. மர்மம் - இரகசியம். கால்நடைகள் - ஆடுமாடுகள். கனி - பழம். உருசி - சுவை. இயற்றுதல் - செய்தல்.

சூரிய ஒளியின் துணையால் ஸ்டார்ச்சுபோன்ற பொருள்களை நாம் இயற்றலாம். நமக்கும், கால்நடைகட்கும் வேண்டிய பொருள்களைக் கழிவுப் பொருள்களிலிருந்துகூட நாம் எடுக்கலாம். அதனால்

நாட்டில் பஞ்சமும் நோயும் இல்லாமல் செய்துவிட முடியும். பயன் தரக்கூடிய தாவரங்களைப் பயிர்செய்து, பலபொருள்களை நாம் எளிதில் பெறலாம். விரைவில் செல்லக்கூடிய வாகனங்களின் உதவியால், பிறநாடுகளில் விளையும் உணவுப்பொருள்களையும் நாம் விரைவில் பெறலாம். தாவரங்களிலிருந்து தூய பானங்களையும் நாம் பெற முடியும்.

பத்தி 13 : உடை

சீதம் - குளிர். ஈடு - சமம்.

நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு மக்கள் உடைகளை உடுக்கின்றனர். வெப்பமிக்க நாட்டில் வாழ்வோர் பருத்தி, பட்டு முதலிய ஆடைகளையும், தட்பம்மிக்க நாட்டில் வாழ்வோர் கம்பளி உடைகளையும், தோல் உடைகளையும் உடுக்கின்றனர். தற்காலத்தில் ரேயல், நைலன் முதலிய செயற்கைப் படுகளும், பிளாஸ்டிக் உடைகளும் உள்ளன. இத்தகைய செயற்கை முறைகளால் நாம் பிற்காலத்தில் உடைப்பஞ்சத்தை போக்கமுடியும்.

பத்தி 14: உறைவிடம்

நிருமிக்க - கட்ட, அமைக்க. திண்ணியவை-உறுதி வாய்ந்தவை. பளு - கனம். உறங்க - தூங்க.

ஆதிகாலத்தில் மக்கள் குகைகளிலும், மரப்பொந்துகளிலும் வாழ்ந்தனர். நாளடைவில் அவர்கள் தங்களுக்கு ஏற்ற உறைவிடங்களை அமைத்துக்கொண்டனர். தற்காலத்தில் செயற்கைப் பொருள்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல பொருள்களும் இனிக்கண்டுபிடிக்கப்படும். இவற்றால் வெயில், மழை, காற்று, நெருப்பு முதலியவற்றால் அழிவுறாத நல்ல உறைவிடங்களை நாம் எளிதில் அமைக்கமுடியும். நமக்கு விருப்பமான தட்ப வெப்ப நிலைகளைக் கொண்டுள்ள அறைகளையும் நாம் அமைக்கமுடியும். வருங்காலத்தில் இவற்றைக் குறைந்த செலவில் நாம் அமைக்கலாம்.

பத்தி 15: வருங்காலத்தில் 'ராக்கெட்' விமானம்

முட்டுதல் - நிறைவுறுதல். இணையும் - சேரும்.

அரை நூற்றாண்டுக்கு முன், உலகம் மிக விரைவில் முன்னேறுகிறதே என்று மக்கள் கருதினர். ஆனால் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தபொழுதிலும், இப்பொழுது மக்கள் அதன் விரைவைப் பாராட்டவில்லை. மணிக்கு எழுநூறு மைல் செல்லும் ராக்கெட் விமானங்களைக் கண்டு நாம் இப்பொழுது ஆச்சரியப்படுகின்றோம். இன்னும் சில ஆண்டுகளில் இவற்றைக் கண்டு நாம் வியக்கமாட்டோம். வருங்காலத்தில் விமானப் பயணம் சாதாரணமானதாக இருக்கும்.

நெடுந்தூரத்தில் உள்ள நாடுகள் வருங்காலத்தில் அண்மையில் உள்ளவை போல் கருதப்படும் டெலிவிஷன் மூலமாக ஏனைய நாடுகளில் நடப்பனவற்றை நாம் பார்க்க முடியும்.

பத்தி 16 : சந்திர மண்டல பயணம்.

'ராக்கெட்' விமானத்தின் உதவியால் வருங் காலத்தில் நாம் சந்திரமண்டலத்திற்குக் கூட இன்பப் பயணம் சென்று வரலாம். சந்திரமண்டலத்திற்கு அப்பால் உள்ள கிரகங்களுக்கும் நம்மால் இனிச் செல்லமுடியும்.

பத்தி 17 : அணுவின் சக்தி.

தகர்த்து - உடைத்து. சேமித்தல் - சேர்த்து வைத்தல்.

நெடுந்தூரப் பயணங்களுக்குச் சக்தி வேண்டும். அந்தச் சக்தியை அணுவிலிருந்து வருங்காலத்தில் பெறமுடியும். அணுவின் சக்தியினால் மருத்துவ முறையும் செம்மையுறும். தற்காலத்தில் மின்சாரசக்தி பயன்படுவது போல வருங் காலத்தில் அணுவின் சக்தி பயன்படும்.

பத்தி 18 : சூரிய கதிர்களிலிருந்து சக்தி.

குற்றேவல் செய்தல் - சிறு வேலைகளைச் செய்தல். பிரமாண்டம்: மிகப் பெரிய.

சூரியனுடைய கதிர்களிலிருந்து சக்தியை இனி நாம் உண்டு பண்ணமுடியும். அப்பொழுது சகாரா பாலைவனம் பெரிய சக்தி நிலையமாக மாறலாம்.

பத்தி 19 : காற்றின் சக்தி

தென்துருவப் பகுதியில் இடைவிடாமல் புயல் வீசிக் கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் அங்கே காற்றடி ஆலைகள் அமைக்கப்படலாம். அதனால் அவ்விடம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமையலாம்.

பத்தி 20 : பூமியின் அடிப்புறத்தில் உள்ள சக்தி

பூமியின் அடியில் போகப் போக, அறுநூறு அடிக்கு ஒரு டிகிரி வீதம் வெப்பம் மிகுகின்றது. வருங்காலத்தில் 30,000 அடி ஆழம் கூடத் தரையில் தோண்ட முடியும். அப்பொழுது நமக்கு வேண்டிய சக்தி முழுவதும் பூமியிலிருந்தே கிடைக்கலாம்.

பத்தி 21 : கடலிலிருந்து சக்தி

இடையறாது - இடைவிடாமல். ஆகர்ஷணம் - இழுக்கும் சக்தி. ஏற்றவற்றம் - ஏறுதலும் வற்றுதலும்.

கடலிலிருந்து எவ்வகைப்பட்ட சக்தியைப் பெற முடியும் என்று விஞ்ஞானிகள் முயல்கின்றார்கள். அது வருங்காலத்தில் கைகூடலாம்.

பத்தி 22, 23 : வருங்காலத்தில் மருத்துவ உதவி

செறிந்த-நிறைந்த. பிணைதல்-ஒன்றுபடுதல். போஷணை - உடலுக்கு உரம் கொடுத்துக் காப்பாற்றுதல். ஒட்டுவாரொட்டி - தொற்று நோய்.

இன்று உலகில் மலேரியா, மஞ்சள் சுரம், உறக்கநோய், க்ஷய ரோகம் முதலிய நோய்கள் உள்ளன. அவற்றைப் போக்குவதற்குரிய மருந்துகளையும், அவை வராமல் தடுப்பதற்குரிய வழிகளையும் விஞ்ஞானம் வருங்காலத்தில் அமைக்கக்கூடும். நோய்க்கிருமிகளை அழிப்பதற்குரிய வழிவகைகளை விஞ்ஞானம் அமைக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். பெனிஸிலின், ஸ்டரெப்டோமைஸின் முதலியவை மனித இனத்துக்குத் துணை செய்யும்.

பத்தி 24, 25 : விஞ்ஞானத்தால் மக்கட் சமுதாயம் உயர்ந்து, அறிவும் பெருகும்

வேற்றுமை - வேறுபாடு. சான்றோர் - பெரியோர். நிலவும் - தங்கும்.

மக்களின் மனம் பண்படுமானால், விஞ்ஞானத்தால் உலகத்தில் உள்ள வேறுபாடுகள் யாவும் நீங்கும். மக்கள் அப்பொழுது ஒற்றுமைப்படுவர். போர்கள் மிறகு நிகழா. அறிவும் அறமும் இன்னும் ஐம்பது ஆண்டுகட்குள் செழிக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

நல்லொழுக்கப் பயிற்சி

விஞ்ஞானம் இப்பொழுது முன்னேறுகிறது என்றும் விஞ்ஞான முன்னேற்றத்தால் உலகமக்கள் பலவகைப்பட்ட நன்மைகளை அடைவர் என்றும் இக்கட்டுரையின் ஆசிரியர் கூறுகின்றார். இந்நிலையில் உங்கள் கடமை என்ன? சாதிசமயப் பிணக்குகளையும், நிறம், மொழி, நாடு ஆகியவைபற்றி வரும் வேறுபாடுகளையும் அகற்ற நீங்கள் முற்படவேண்டும். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் புன்மையை நாம் இளமையிலேயே அகற்றினால் நமக்குள் ஒற்றுமை பெருகும். அப்பொழுது நாம் உலகுக்கு வழி காட்டலாம். இளைஞர்களே! உலகுக்கு வழி காட்ட முற்படுங்கள்.

8. நாட்டுப்புறங்களின் கல்வி

பத்தி 1 : நாட்டுப்புறங்களின் முன்னேற்றம் இன்றியமையாதது

சிறு + ஊர் = சிற்றூர். இன்றியமையாத - இல்லாமல் முடியாத. ஊண் - உணவு. தந்து + உதவுவன = தந்துதவுவன.

நகரங்கள் அல்லாத பகுதிகளே நாட்டுப்புறங்கள் ஆவன. மக்களுக்கு வேண்டிய உணவையும், உடையையும் நாட்டுப்புறங்களே தருகின்றன. நாட்டுப்புறமக்களே அரசியலார்க்கு மிக்க வரிகளைத் தருகின்றனர். நாட்டின் முன்னேற்றம் நாட்டுப்புறங்களையே பொறுத்துள்ளது.

பத்தி 2 : நாட்டின் உயர்வும் தாழ்வும் கல்வியைப் பொருத்தே அமையும்

பண்டை - பழைய. பண்டு - பழங்காலம். மேவிய - அமைந்த. நாட்டாண்மைக் கழகம் District Board.

நாட்டின் உயிர்நிலை நாட்டுப்புறம். நாட்டின் உயர்வும் தாழ்வும் நாட்டுப்புறங்களின் கல்வியைப் பொறுத்தே அமையும். நாடுப் புறங்களின் இன்னைய நிலையையும், நாட்டாண்மைக்கழகம் முதலியவற்றின் கடமைகளையும் இனி ஆராய்வோம்.

பத்தி 3 : குடிவாழ்க்கைக்குப் பொருந்திய கல்வியே வேண்டும்

சான்று - எடுத்துக்காட்டு. என்ப - என்று சொல்லப்படுபவை.

கல்விப் பயிற்சி முறை மாறுபட்டு வருகிறது. ஆனால் 'இதுதான் சிறந்தது' என்று எதனையும் கூறமுடியாது. நாட்டுமக்களின் குடி வாழ்க்கைக்குப் பொருந்திய கல்வியே வேண்டற்பாலது. 'எண்', எழுத்து' என்று திருவள்ளுவர் முதலியோர் கூறும் கல்வியும், 'பொருந்து கல்வி' என்று கம்பர் கூறுங் கல்வியுமே நாட்டிற்குத் தேவையாகும்.

பத்தி 4 : நாட்டுப்புறமக்கட்குரிய தொடக்கக் கல்வி

பயிலுதல்-கற்றல். பேறு-செல்வம். நெறி - வழி. வேளாண்மை: வெள்ளத்தை ஆளுதல்; பயிரதொழில். அல்-இரவு. மேவும் - தங்கும் 'வாழ்நாள்' என்பது 'வாணாள்', என்று மருவியது. ஊழ் - விதி.

நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தொடக்க நிலைக் கல்வியே பயிலுவர். படித்தல், எழுதல், கணக்குப் பார்த்தல் ஆகிய மூக்கலையாக அவர்களது படிப்பைப் பிரிககலாம். இம்மூன்றின் வாயிலாக அவர்கள் தம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை யெல்லாம் கற்க வேண்டியுள்ளது. எனவே அதற்கு ஏற்றவாறு அவர்களுடைய கல்வி முறை அமைதல் வேண்டும்.

பத்தி 5 : படித்தலும், எழுதுதலும்

, பண்டை - பழைய. 'அகரம்': 'அ' என்னும் எழுத்து. ஓர்ந்திலராய்-ஆராயாதவர்களாய்: பயிற்றப்பட்டு-கற்பிக்கப்பட்டு. உணர்கின்றிலர் - அறியாமல் உள்ளனர் - நிரல் - வரிசை. அறியா-அறியாத அகராதி: அகரவரிசைப்படி சொற்களும், அவற்றிற்குப் பொருள்களும் அமைந்த நூல். கூற்று - கூறியது. வரைய - எழுத. கண்கூடு - கண்ணுக்கு எதிரில். சிறார் - சிறுவர்கள். பிறழ - மாறுமாறு.

நம் முன்னோர்கள் நன்கு ஆராய்ந்தே எழுத்துக்களை அகரம் முதலாக அமைத்துள்ளனர். ஆனால் தற்காலத்தினர் அம்முறைவைப் பினை அறியாமல் டகரம், லகரம் முதலிய எழுத்துக்களை முன்னர் அமைத்து எழுதிய பாடல்களை மாணவர்கட்குக் கற்பிக்கின்றனர். அதனை, 'காலச் சுருக்க முன்னேற்ற முறை' என்கின்றனர். அஃது உண்மையாக இருந்தால் அதனை நாம வரவேற்க வேண்டும். ஆனால் அம்முறைப்படிப் படிப்போர் பிற்காலத்தில் 'அகராதி' பார்க்கக்கூட அறியாமல் உள்ளனர். எழுத்தாதலால் 'டகாரம்' முதற்கண் கற்பிக்கப்படுகின்றது என்பர் சிலர். அதுவும் சரியன்று. மக்களின் மனம் சுழிசுழியாக எழுதுவதில்தான் முதன் முதல் இயற்கையாகச் செல்லும் என்பது கண்கூடு. தற்காலத்தில் பிறநாட்டுச் செய்திகளும், வரலாறுகளும் கற்பிக்கப்படுகின்றன. அவற்றால் நாட்டுப்புறச் சிறுவர்கட்குப் பயன் உண்டாகாது. ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலிய பாடல்களை விடுத்து' எளிய பாடல்கள் என்று அபிநயப் பாடல்களைக்கற்பிப்பதும் தவறாகும். எனவே, பண்டைக் கல்விமுறையில் அமைந்திருந்த நல்ல கூறுகளை நாம் விடுதல் கூடாது. நீதிநூல்கள் தவறாமல் சிறுவர்கட்குப் போதிக்கப்படுதல் வேண்டும்.

பத்தி 6 : நாட்டுப்புறத்தினருக்கு எளிய கணக்குமுறை தேவை

இன்னோன்ன - இப்படிப்பட்ட. இலக்கம் - எண்குழி : நில அளவுகளுள் ஒன்று, ஒவ்வாதது - ஏலாதது.

தற்கால ஆங்கிலக் கல்விமுறையில் உள்ள பின்னம், உத்தமப் பொது மடங்கு முதலியவை நாட்டுப்புற மக்களுக்குப் பயன்படா. அவர்கட்கு இலக்கம், நெல் இலக்கம் போன்ற கணக்குகளே பயன்படும். கணக்குகளை மனத்திலேயே போட்டுப்பார்க்கும் பயிற்சி அவர்கட்குத் தேவையாகும். எனவே, எளிய கணக்குமுறை அவர்கட்கு வேண்டும்.

பத்தி 7 : நாட்டுப்புற மக்களுக்கு வேண்டிய கல்வியின் தன்மை

பள்ளி - பள்ளிக்கூடம். கோடல் - கொள்ளுதல். உணரற்பாலண - அறியவேண்டுவன. புறம்போக்கு - ஊர்க்குப் பொதுவான நிலம். வழங்கும் - பயன்படுத்தும். வேண்டியாங்கு - வேண்டிய விதம். ஆற்றல் - திறமை. கிழவர் - உரிபவர். பெறலாகும் - பெறுகின்ற. அஞ்சல் - தபால். இயன்ற - முடிந்த.

பயனில சொல்லாமை நன்று.

படித்தல், எழுதல், கணக்குப் பார்த்தல் முதலியவற்றைக் கொண்டு நாட்டுப்புற மக்கள் அறிந்துகொள்ள வேண்டியவை பல. அயல்நாடு வரலாறுகள், பூகோள அமைப்பு முதலியவற்றை அறிவதைக்காட்டிலும் நம் நாட்டைப்பற்றிய செய்திகளை நாட்டுப்புறத்தினர் அறிதல் இன்றியமையாதது. நாட்டுப்புறத்து மாணவர் தம் ஊரைப்பற்றிய எல்லாவற்றையும் நன்கு உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். மாணவர் தம் ஊர் நிலங்களைப்பற்றியும், நிலத்திற்கு உரியவர்களைப்பற்றியும் அரசியலார்க்கு வழங்க வேண்டிய வரிகளைப் பற்றியும், பயிரிடுவதற்குத் தக்க காலம், ஏனையவை நிகழ்த்துதற்குரிய காலம் முதலியவற்றையும், தானியங்களின் அளவு, மதிப்பு முதலியவற்றையும், அஞ்சல்களைப் படித்தல், அஞ்சல் எழுதி அனுப்பல் முதலியவற்றையும், பிற்காலத்தில் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதற்கேற்ற எளிய கைத்தொழில்களையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் அவர்கள் தங்களுடைய பொதுஅறிவு விரிதற்குரிய செய்திகளையும் அறிதல் வேண்டும்.

பத்தி 8: நாட்டாண்மைக் கழகத்தின் கடமைகள்

இயலாது - முடியாது. நியதி - சட்டம், கட்டுப்பாடு. ஊதியம் - செல்வம். இணைத்தல் - சேர்த்தல்.

தற்காலக் கல்விமுறையால் நாட்டுப்புற மாணவர்கட்கு அதிகப் பயன் உண்டாகாது. கட்டாயக்கல்வி, முதியோர்கல்வி ஆகியவற்றை நாட்டாண்மைக் கழகத்தார் நடைமுறையில் கொண்டுவரவேண்டும். சிறந்த சொற்பொழிவுகள் நடக்கவும், இராப் பள்ளிக்கூடங்கள் நடத்தவும் நாட்டாண்மைக் கழகத்தார் வழி செய்யவேண்டும். ஒலி பரப்புக் கருவிகள், இயங்கும் நூல்நிலையம் முதலியவற்றைத் தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தார் பயன்படுத்தி, நாட்டுப்புறங்களில் கல்வியைப் பரப்புகின்றனர். அக்கழகத்தை ஏனைய கழகங்கள் பின்பற்ற வேண்டும்.

நல்லொழுக்கப் பயிற்சி

கல்வியறிவு நாட்டுப்புறங்களில் பரவாவிடின் ஒருநாடு முன்னேறாது. நாட்டுப்புறங்களில் கல்வியைப் பரப்ப நீங்கள் எத்தகைய உதவி செய்ய முடியும்? நீங்கள் உங்களுடைய இருப்பிடத்திற்கு அருகில் உள்ள நாட்டுப்புறப் பகுதிக்கு ஓய்வு நேரத்தில் சென்று மக்களுக்குச் செய்தித் தாள்களைப் படித்தல், உலகச் செய்திகளை கூறல், மக்கள் உரிமை, கடமை முதலியவற்றைக் கூறுதல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள்.

சொல்லுக சொல்லில் பயன் உடைய.

வினாக்களும் விடைகளும்

பாடங்களை நன்கு படித்தபிறகு, ஈண்டுள்ள வினாவிடைகளைப் படித்தல் வேண்டும்.)

---

1. முருகன் அல்லது அழகு

1. 'முருகு' என்னும் சொல்லுக்கும், 'முருகன்' என்னும் சொல்லுக்கும் வேறுபாடு உள்ளதோ? ஏன்?

'முருகு' என்னுஞ் சொல்லுக்கும், 'முருகன்' என்னுஞ் சொல்லுக்கும் சொல்லளவில் வேறுபாடு உள்ளதேயொழிய, பொருளில் வேறுபாடு இல்லை. 'முருகன்' என்னுஞ் சொல்லில், 'முருகு' என்பது முதல் நிலை; அஃதாவது பகுதி யாகும். அது பின்னர், 'அன்' என்னும் ஆண்பால் விகுதி பெற்று 'முருகன்' என்று ஆயிற்று. எனவே முருகே முருகன்; முருகனே முருகு.

2. 'முருகன்' என்னுஞ் சொல்லுக்குப் பகுபத இலக்கணம் கூறுக.

முருகு × அன் = முருகன். முருகன் என்னுஞ் சொல்லில் 'முருகு' என்பது 'பகுதி'; 'அன்' என்பது ஆண்பால் விகுதி.

3. திரு. வி. க. அவர்கள் எவற்றைக் கண்டு இறும்பூது எய்துகின்றார்?

'முருகு' என்னுஞ் சொல் பல்லாயிர ஆண்டுகளாக ஆட்சி பெற்றிருத்தலையும், அச்சொல் உறுதியும், மாண்பும், தூய்மையும் கொண்டு விளங்குதலையும் கண்ட திரு. வி. க. அவர்கள் இறும்பூது எய்துகின்றார்.

4. முருகன் தொன்மை காணச் சிறப்பாக உதவும் இரண்டு குறிப்புக்கள் யாவை?

'முருகன் தமிழ்க் கடவுள்' எனப்படும் உண்மையும், 'முருகன் மலைநிலக் கடவுள்' எனப்படும் உண்மையும் முருகனது தொன்மை காண உதவுகின்ற குறிப்புக்கள் ஆவன. 'தமிழன்', 'தமிழ்ப் பெருமான்', 'தமிழ் இறை', 'முத்தமிழோன்' என்பவை முருகனைக் குறிப்பிடுகின்றன. எனவே முருகன் தமிழ்க் கடவுள் என்பது விளங்கும். 'குறிஞ்சிக்கிழான்', 'மலைகிழவோன்' என்பவை முருகனைக் குறிப்பிடுகின்றன எனவே முருகன் மலைநிலக் கடவுள் என்பது விளங்கும்.

5. 'முருக வழிபாட்டின் தொன்மையை ஆராய்க.

'முருகு' என்பது தொன்மை வாய்ந்த ஒரு செஞ்சொல். அச்சொல் 'அன்' என்னும் ஆண்பால் விகுதிபெற்று 'முருகன்' என ஆயிற்று. 'முருகன்' என்னுஞ் சொல் நெடுநாட்களாக ஆட்சியில்

தீயவை தீயினும் அஞ்சப்படும்.

இருந்து வருகிறது, முருகனோடு தொடர்புடைய விழாக்களும், நோன்பு களும் தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகின்றன. முருகன் தமிழ்க் கடவுள் என்றும், மலைநிலக் கடவுள் என்றும் குறிப்பிடப்படுகின்றான். உலகில் முதன் மகன் தோன்றிய இடம் தமிழ்நாடே என்றும், மக்கள் வாழ்வு முதன் முதல் தோன்றிய இடம் மலைப் பகுதியிலேயே என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர். மக்கள் வாழ்வு என்று தொடங்கியதோ அன்றே 'முருகு' என்னும் சொல்லும் தோன்றியது.

தமிழ் மக்களின் முருக வழிபாட்டைப்பற்றிய குறிப்பு தொல்காப் பியத்தில் உள்ளது. முருக வழிபாட்டின் முதிர்ந்து பண்பட்ட நிலையே தொல்காப்பியத்தில் பேசப்படுகின்றது. எனவே தொல்காப் பியத்திற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே முருக வழிபாடு தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முப்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மக்கள் காய்கறிகளைப் பச்சையாகவே உண்டனர் என்பர் ஆராய்ச்சியாளர். ஆதி மனிதன் மலையிடை வாழ்ந்த காலத்தில் காய்கறிகளைப் பச்சையாக உண்டான். அந்நாளிலேயே அம்மலை நாட்டு மனிதனிடம் முருக வழிபாடு இருந் தது. எனவே முருகன் காலங் கடந்த கடவுள் ஆவான். முருக வழி பாடும் மிகத் தொன்மை வாய்ந்தது.

6. முருகன் மலைநிலக் கடவுள் என்பதனை எவ்வாறு உணர லாம்?

தொல்காப்பியர் மலை நிலமாகிய குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவு ளாக முருகனையே குறிப்பிடுகின்றார். மேலும், 'மலை கிழவோன்', 'குறிஞ்சிக்கிழான்' என்னுஞ் சொற்றொடர்கள் முருகனையே குறிப் பிடுகின்றன. எனவே முருகன் மலைநிலக் கடவுள் என்பதனை நாம் உணரலாம்.

7. மக்கள் முதன் முதல் தோன்றிய இடம் எது?

மக்கள் முதன் முதல் தோன்றிய இடம் மலை நாடு ஆகும். முதல் மகன் தோன்றிய இடம் தமிழ் நாடே என்று ஆராய்ச்சியறிஞர்கள் கூறியுள்ளனர்.

8. தமிழ் நாட்டுப் பழங்கடவுள் முருகன் என்பதை எங்ஙனம் உணரலாம்?

மக்கள் முதன் முதல் மலையின்கண் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சி யறிஞர்கள் கூறுகின்றனர். மாலை நில மக்கள் முருகனையே வழிபாடு செய்து வந்தனர் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். 'மலைகிழ வோன்,' 'குறிஞ்சிக் கிழான்' என்னுஞ் சொற்றொடர்கள் மலை நாட்டுக் கடவுள் முருகனே என்பதைக் குறிப்பிடும். மக்கள் வாழ்வு மலைநாட்டி லேயே தொடங்கப்பட்டது எனவே அவர்கள் வழிபட்டு வந்த முருகனும் தமிழ் நாட்டுப் பழங்கடவுள் என்பதை நாம் உணரலாம்.

9. நால் வகை நிலங்கள் யாவை? விளக்குக.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நால்வகை நிலங்கள் ஆவன. குறிஞ்சி என்பது மலையும், மலைசார்ந்த இடமும் ஆகும். முல்லை என்பது காடும், காடு சார்ந்த இடமும் ஆகும். மருதம் என்பது வயலும், வயல் சார்ந்த இடமும் ஆகும். நெய்தல் என்பது கடலும், கடல் சார்ந்த இடமும் ஆகும்.

10. தொல்காப்பியத்தைப் பற்றிய குறிப்பு வரைக.

தொல்காப்பியம் என்பது தொல்காப்பியனாரால் இயற்றப் பெற்ற ஓர் இலக்கண நூல். அது மிகத் தொன்மை வாய்ந்தது. தற்காலத்தில் உள்ள தமிழ் நூல்களுள் அதுவே பழமை உடையதாகக் கருதப்படுகின்றது. அதன் காலத்தைப்பற்றி அறிஞர்கள் பலவாறு கூறுகின்றனர். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தொல்காப்பியம் தோன்றியிருக்கவேண்டும்.

11. தொல் காப்பியனார் காலத்தில் முருக வழிபாடு எந்நிலையில் இருந்தது?

தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுளாக முருகனைக் குறிப்பிடுகின்றார். அவர் காலத்தில் முருக வழிபாடு பழகிப் பழகி, முதிர்ந்து வளம்பட்ட நிலையில் இருந்தது.

12. மக்களின் மூதாதைகளைப் பற்றி நீவிர் அறிவன யாவை?

மக்களின் மூதாதைகள் விலங்குகளே என்பர் அறிஞர். ஹெக்கல் டார்வின் என்னும் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து, மக்கள் உலகின் தோற்றுவாய்க்கு நிலைக்களன் விலங்கு உலகமே என்று குறிப்பிட்டுள்ளனர். புராணங்கள் திருமாலின் பத்துப் பிறவிகளைக் குறிப்பிடுகின்றன. அப்பிறவிகளை ஆராய்ந்து பார்த்தால் உயிர்களின் பிறவி வளர்ச்சி நன்கு புலப்படும்.

13. 'கூர்தல்' அல்லது 'உள்ளது சிறத்தல்' (Evolution) என்றால் என்ன? விளக்குக.

ஆதியில் தோன்றிய உயிர்கள் படிப்படியாக வளர்ச்சியுற்றுப் பல வேறுபாடுகளை அடைதல் 'உள்ளது சிறத்தல்' எனப்படும். விலங்கு நிலையில் இருந்த ஆதிமனிதனுடைய உறுப்புக்கள் நாளடைவில் தேய்ந்தன; மூளை மென்மை அடைந்தது. அவனுக்குப் பகுத்தறிவு உண்டாகி கடவுள் உணர்வு தோன்றியது. இவ்வாறு வளரும் நிலையே 'உள்ளது சிறத்தல்' ஆகும்.

14. நம் மூதாதைகளின் நினைவுக் குறிகளாக உள்ளவை யாவை?

மனிதன் விலங்கிலிருந்து தோன்றினன். தொடக்கத்தில் மனிதனுக்கு விலங்குக் கூறுகள் பல இருந்தன. அவற்றுள் ஒன்று பல்.

ஆதிமனிதனுக்குக் கோரைப் பற்கள் இருந்தன. அப்பற்களே தேய்ந்து காய்ப் பற்கள் என வழங்கப்படுகின்றன. கோரைப் பல் என்னும் விலங்குப் பற்களுடைய பாவைகள் தற்காலக் கோயில்களில் உள்ளன அவைகளே நம் மூதாதைகளின் நினைவுக் குறிகள் ஆவன.

15. ஆதி மனிதனுக்கு எப்பொழுது கடவுள் உணர்வு தோன்றி யிருத்தல் கூடும்?

விலங்குக் கூறுபாடுகளுடன் ஆதி மனிதன் இருந்தபொழுது அவனுக்குக் கடவுள் உணர்வு தோன்றியிராது. கோரைப் பல் தேய்ந்த பிறகே மனிதனுக்குக் கடவுள் உணர்வு தோன்றியிருக்கும். பல்லுக்கும் ஏனைய உள்ளுறுப்புகட்கும் தொடர்பு உண்டு. உறுப்புக்கள் தேய்ந்து, மூளை மென்மையடைந்த நிலையில்தான் மனிதனுக்குக் கடவுள் உணர்வு தோன்றியிருத்தல் கூடும்.

16. மக்களுக்கும் மாக்களுக்கும் உரிய வேறுபாடு யாது?

மாக்கள் என்பார் ஐயறிவுடையர் ஆவார். மக்கள் என்பார் ஆறறிவுடையர் ஆவார். "மாவும் மாக்களும் ஐயறிவினவே" என்றும், "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்றும் தொல்காப்பியனார் கூறியுள்ளார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐயறிவு எனப்படும். இந்த ஐயறிவுகள் மாக்களுக்கு உரியன. இவற்றுடன் பகுத்தறிவாகிய ஆறுவது அறிவும் மக்களுக்கு உண்டு.

17. ஆறுவது அறிவு என்பது யாது?

ஆறுவது அறிவு என்பது பகுத்தறிவாகும். அந்தப் பகுத்தறிவே கடவுள் உணர்வு என்னும் அன்பு நெறிக்கு நிலைக்களனாக விளங்குவது. இந்த ஆறுவது அறிவே மக்களையும் மாக்களையும் வேறுபடுத்துகின்றது.

18. ஆதி மனிதனின் வாழ்க்கையைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

ஆதி மனிதன் விலங்கைப் போலவே வாழ்ந்து வந்தான். விலங்குக் கூறுபாடுகள் பல ஆதி மனிதனிடம் இருந்தன. அவன் தொடக்கத்தில் காய்கறிகளைப் பச்சையாகவே உண்டு வந்தான். அவ்வாறு அவன் உண்டமை முப்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னர் என்பர் ஆராய்ச்சியாளர். ஆதிமனிதன் முருகனைக் கடவுளாகக் கொண்டு வழிபட்டான்.

19. முருகன் காலங் கடந்த கடவுள் என்பதனை எங்ஙனம் உணரலாம்?

ஆதிமக்களின் மனத்தில் கடவுள் அறிவு தோன்றிய நாள் முதலே 'முருகு' என்னும் சொல் தோன்றியுள்ளது. அந்நாள் எது என்று ஆராய்ச்சியறிஞர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை. 'முருகு' என்னுஞ்

சொல் எப்பொழுது தோன்றியது என்று காண்பதே அரிதாகும். இயற்கையை எப்பொழுது மக்கள் கண்டனரோ அன்றே முருகனையும் கண்டனர். எனவே முருகன் காலங் கடந்த கடவுள் என்பதை உணரலாம்.

20. தமிழ் மக்கள் எதனை 'முருகு' என்று அழைத்தனர்?

தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை நடாத்தினர். இயற்கையோடு கலந்து வாழ்ந்த காலத்தில் அவர்கள் இயற்கையின் அழகையும், இளமையையும், மணத்தையும், ஒளியையும் கண்டனர். அவ்வாறு கண்ட அழகு, இளமை, மணம், ஒளி ஆகிய இயல்புகளைக் கொண்ட ஒன்றை அவர்கள் 'முருகு' என்று அழைத்துப் போற்றினர். 'முருகு' என்னுஞ் சொல் பொருள் பொதிந்த சொல்லாகும்.

2. பாண்டித்துரைத் தேவர்

1. பாண்டித்துரைத் தேவரவர்களின் ஆதரவினால் வெளிவந்த நூற்பதிப்புக்கள் யாவை?

பாண்டித்துரைத் தேவரவர்களின் ஆதரவினால் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை ஆகிய இரு நூல்களை வெளியிட்டார். இராமசாமிப் பிள்ளையவர்கள் தேவாரத் தலைமுறைப் பதிப்பு, சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு ஆகிய இரு நூல்களையும், சபாபதி நாவலவர்கள் சிவசம வாத உரை மறுப்பு என்னும் நூலையும், சுன்னைகம் குமாரசாமிப் பிள்ளையவர்கள் சில நூல்களையும் பாண்டித்துரைத் தேவரவர்களின் ஆதரவு பெற்றே பதிப்பித்து வெளியிட்டனர்.

2. டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பாண்டித்துரைத் தேவரவர்களை எங்கு எவ்வாறு போற்றி எழுதியுள்ளார்? ஏன்?

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் மணிமேகலை என்னும் நூலைப் பாண்டித்துரைத் தேவரவர்களின் ஆதரவினைப் பெற்றே பதிப்பித்தார். அவர் அளித்த ஆதரவினைப் போற்றி, ஐயரவர்கள் மணிமேகலை முதற்பதிப்பின் முகவுரையில் எழுதியுள்ளார். அம்முகவுரையில் ஐயரவர்கள், 'தமிழுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபாடு கொண்ட வள்ளல்களின் மரபில் தோன்றியவர் பாண்டித்துரைத் தேவர் ஆவார். அத்தகைய மரபில் தோன்றிய தேவர் இந்நூல் வெளிவருவதற்கு உதவி செய்தமை இயல்பேயாகும். இத்தகைய நூல்கள் வெளிவருதற்கு முன் தமிழார்வம் கொண்டவர்கள் நூற்பதிப்புக்கள் கிடைக்கப் பெறாமல் பெரிதும் துன்புற்றனர். அவர்கட்கே இத்தகைய நூற்பதிப்பின் அருமையும் பெருமையும் தெரியும். அவர்களே தேவரவர்களின்

பெருந்தொண்டினை நன்கு உணர்வர்' என்று தேவரவர்களைப் போற்றி எழுதியுள்ளார்.

3. தேவரவர்களின் உதவியால் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்ட நூல்கள் யாவை ?

தேவரவர்களின் உதவியால் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

4. தேவரவர்களின் ஆதரவினால் இராமசாமிப் பிள்ளையவர்கள் வெளியிட்ட நூல்கள் யாவை ?

தேவரவர்களின் ஆதரவினால் இராமசாமிப் பிள்ளையவர்கள் தேவாரத் திருமுறைப் பதிப்பையும், சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டையும் பதிப்பித்து வெளியிட்டார்.

5. 'சிவசம வாத உரைமறுப்பு' என்னும் நூல் யாருடைய ஆதரவால் யாரால் வெளியிடப்பெற்றது ?

'சிவசம வாத உரை மறுப்பு' என்னும் நூல் சபாபதி நாவலரவர்களால் பாண்டித்துரைத் தேவர்களின் ஆதரவு பெற்று வெளியிடப்பட்டது.

6. பாண்டித்துரைத் தேவரவர்கள் வெளியிட்ட நூல்கள் யாவை ? குறிப்புக்கள் வரைக.

பன்னூல் திரட்டு, சைவமஞ்சரி என்னும் தொகை நூல்களைப் பாண்டித்துரைத் தேவரவர்கள் வெளியிட்டார். தேவரவர்களின் ஆதரவினால் புலவர்கள் பலர் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டனர். அவற்றை அவர்கள் தேவரவர்கட்கு எதிரே படித்துக் காட்டுவது வழக்கம். அவ்வாறு படிக்கப் பெறுங்கால் தேவரவர்கள் அறம், பொருள், இன்பம்பற்றிய பாடல்களையும், சைவ சமயத் தொடர்புடைய பாடல்களையும் தனித்தனியே தொகுத்து எழுதச்செய்தார். பின்பு அவர் அறம், பொருள், இன்பம் ஆகியவைபற்றிய பாடல்களை 'பன்னூற்றிரட்டு' என்னும் பெயருடனுடனும், சைவ சமயத் தொடர்புடைய பாடல்களை 'சைவ மஞ்சரி' என்னும் பெயருடனும் வெளியிட்டார். இந்நூல்களால் நீதிகள், அறச்செயல்கள், அரசியல் முறைகள், அகப்பொருள் துறைகள், சைவ சமயத் தொடர்புடைய செய்திகள் முதலியவற்றைத் தமிழ் மக்கள் எளிதில் உணர முடிகின்றது.

7. திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் அரங்கேற்றிய நூல் எது ? எங்கு அஃது அரங்கேற்றப்பட்டது ?

வட மொழியில் 'சாதக சிந்தாமணி' என்றொரு நூல் உள்ளது. அதனைத் தமிழிற் பெயர்த்து, வெண்பாக்களின் உருவில் வெளிப்

புடுத்தி அரங்கேற்றினர் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள். பாண்டித்துரைத் தேவர்களின் அவையின்கண் அஃது அரங்கேற்றப்பட்டது

8. சாதக சிந்தாமணி என்னும் நூலுக்கு இக்கட்டுரையின் ஆசிரியர் பாடியளித்த பாயிரக்கவி ஒன்றில் அமைந்துள்ள சிலேடை நயம் யாது?

'சாதக சிந்தாமணி' என்னும் நூலுக்கு இக்கட்டுரையின் ஆசிரியர் பாயிரக்கவிகள் சில பாடி அளித்தார். அவற்றுள் ஒரு பாடலின்கண் ஆசிரியர், "மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் பேர் பெற்ற மாளிகையிலே புலவர்கள் கூடிய கூடலில், உக்கிர பாண்டியன் என்ற அரசர் தமிழ் வளர்ச்சி புரிந்து வருகின்றார். அச்சங்கத்தே இச்சாதக சிந்தாமணி அரங்கேறியது" என்று கூறியுள்ளார். ஈண்டுச் சிலேடை நயம் அமைந்துள்ளது. மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் அருளால், சங்கப் புலவர்கள் கூடிய மதுரையில், உக்கிர பாண்டியன் என்பவன் தமிழை வளர்த்து வந்தான். அவன் கூட்டிய சங்கத்தில் நூல்கள் அரங்கேற்றப்பட்டன. அதேபோல ஈண்டும் நிகழ்ந்தது என்கின்றார் இக்கட்டுரையின் ஆசிரியர். பாண்டித்துரைத் தேவருடைய மாளிகை மதுரைக் கடவுளின் பெயரைப் பெற்றதாகும். 'கூடல்' என்னும் சொல்லுக்கு 'மதுரை' என்றும், 'கூடுதல்' என்றும் பொருள் உண்டு, உக்கிர பாண்டியனைப்போலப் பாண்டித்துரைத் தேவர் தமிழை வளர்த்து வந்தார். தமிழ்ச் சங்கத்தில் நூல்கள் அரங்கேறியதுபோல புலவர் சங்கத்தில் 'சாதக சிந்தாமணி' என்னும் நூல் அரங்கேறியது. இரு பொருள் படுமாறு கட்டுரையாசிரியர் ஈண்டுக் கூறியுள்ளார். மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவ வேண்டுவதன் இன்றியமையாமை ஈண்டுக் குறிப்பால் வற்புறுத்தப் பெற்றுள்ளது.

9. 'காகதாலிய நியாயம்' என்றால் என்ன? அதற்கொரு மேற்கோள் காட்டுக.

"காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது" என்பது பழமொழி. காக்கையின் சுமையைப் பொறுக்கமாட்டாமல் பனம்பழம் விழுந்ததோ? அன்று அன்று. காக்கை ஏறவும் பனம்பழம் விழவும் சரியாக இருந்தது. ஆனால் காக்கை ஏறியதால்தான் பனம்பழம் விழுந்தது என்று சொல்லுதல் கூடாது. இதற்கே 'காகதாலிய நியாயம்' என்று பெயர். 'பாண்டித்துரைத் தேவர்' என்னும் தலைப்புடைய கட்டுரையின் ஆசிரியர், மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவ வேண்டும் என்பதனைக் குறிப்பினால் ஒரு முறை வெளியிட்டார். அவ்வாறு வெளியிடப் பெற்ற சின்னாட்களுக்குள், பாண்டித்துரைத் தேவரவர்கள் பெருமுயற்சி செய்து, தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். கட்டுரையின் ஆசிரியர் பேச்சைக் கேட்டுவிட்டுத் தேவரவர்கள் சங்கத்தை நிறுவினாரல்லர். ஆசிரியருடைய பேச்சும், சங்கம் நிறுவப்பெற்றது தக்க காலத்தில் நிகழ்ந்தன. இதுவே காகதாலிய நியாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

10. தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவுதல் வேண்டும் என்னும் நினைவு பாண்டித்துரைத் தேவரவர்கட்கு எப்பொழுது உண்டா யிற்று ? ஏன் ?

ஒரு முறை தேவரவர்கள் மதுரையில் சொற்பொழிவுகள் சில நிகழ்த்த வேண்டியிருந்தன. அப்பொழுது அவருக்குத் திருக்குறளும் கம்பராமாயணமும் வேண்டியிருந்தன. அவை மதுரையில் எந்த நண்பரிடமும் கிடைக்கவில்லை. முடிவில் அவர் புத்தகக் கடையொன்றி லிருந்தே அவற்றை விலைக்கு வாங்க நேரிட்டது. தமிழ் நிலைபெற்ற மதுரையில், தமிழ் நூல்கள் எளிதிற் கிடைக்கவில்லையே என்னும் எண்ணமே, ஆங்குத் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்னும் நினைவை அவருக்கு உண்டாக்கியது.

11. தமிழுக்குக் கதி எனப்படுபவை யாவை ?

கம்பராமாயணமும், திருக்குறளும் தமிழுக்குக் கதி எனப்படும். 'கதி' என்னுஞ் சொல்லில் 'க' என்னும் எழுத்து, கம்பராமாயணத் தையும், 'தி' என்னும் எழுத்து, திருக்குறளையும் குறிப்பிடும்.

12. தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவுவதில் பாண்டித்துரைத் தேவ ரவர்கட்கு ஊக்கமளித்தவர்கள் யாவர் ?

தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவுவதில் பாண்டித்துரைத் தேவரவர் கட்கு திரு. டி. சி. சீநிவாச ஐயங்கார் அவர்களும், திரு. எஸ். சாமிநாத ஐயர் அவர்களும் ஊக்கம் அளித்தனர்.

13. மாகாண அரசியல் மாநாட்டில் பாண்டித்துரைத் தேவர் மேற்கொண்ட பொறுப்பு யாது ?

மாகாண அரசியல் மாநாட்டிற்கு வந்திருந்த பெரியார்களை வர வேற்கும் பொறுப்பினைப் பாண்டித்துரைத் தேவரவர்கள் மேற்கொண் டார். அவர் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார்.

14. அரசியல் மாநாட்டின் முடிவில் பாண்டித்துரைத் தேவர் விடுத்த வேண்டுகோள் யாது ?

அரசியல் மாநாடு மதுரையில் மூன்று நாட்கள் நடைப்பெற்றது. மாநாட்டுக் கூட்டம் முடியுங்கால் தேவரவர்கள் தமிழ் நிலை பெற் றிருந்த மதுரையின் பழம் பெருமைகளையும், பிற்காலத்தே தமிழ் வளர்ச்சி ஆங்கே குன்றியிருந்த நிலைமையையும், அதுபற்றி மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றினை நிறுவத் தாம் முடிவு செய்துள்ளமையையும் கூறி, தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்குரிய வழிவகைகளை ஆராய அனை வரும் மறுநாள் ஒன்றுகூடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத் தார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக.

15. நான்காம் தமிழ்ச் சங்கம் எங்கு என்று யார் முயற்சியால் நிறுவப் பெற்றது? அது பொழுது வந்திருந்த அறிஞர்கள் யாவர்?

நான்காம் தமிழ்ச் சங்கம் மதுரையில், பிரபவ ஆண்டு ஆவணி மாதம், 31-ஆம் நாளன்று திரு. பாண்டித்துரைத் தேவரவர்களின் முயற்சியால் நிறுவப்பெற்றது. அதுபொழுது டாக்டர் உ. வே. சாமி நாதையர், திருவாளர்கள் ரா. இராகவையங்கார், வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சோழ வந்தான் சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திரு மயிலைச் சண்முகம் பிள்ளை முதலிய தமிழ்ப்பெரும் புலவர்களும், சேது வேந்தராகிய ஸ்ரீ பாஸ்கர சேதுபதியவர்களும் வந்திருந்தனர்.

16. மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்ற அன்று, தொடங்கப் பெற்ற வேறு நிலையங்கள் யாவை?

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்ற அன்று, சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலா ராய்ச்சிச் சாலை ஆகிய நிலையங்கள் சேதுபதி உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த கட்டிடங்களில் தொடங்கப் பெற்றன.

17. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையின் தலைமையாசிரியராக நியமிக்கப் பெற்றவர் யார்?

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையின் தலைமையாசிரியராக நிய மிக்கப் பெற்றவர் உயர்திரு. திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் ஆவார்.

18. நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைக்குத் தலைவராக நியமிக்கப் பெற்றவர் யார்?

நூற்பதிப்பு ஆராய்ச்சித்துறைக்குத் தலைவராக நியமிக்கப் பெற்ற வர் சேதுபதி அரசவைப் புலவரான உயர்திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் ஆவார்.

19. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் தேர்வுகள் யாவை? அவற்றால் விளைந்த நன்மைகள் யாவை?

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்று மூன்று தமிழ்த்தேர்வுகளை நடத்தி வருகின்றனர். அத்தேர்வுகளில் பயிற்சி பெற்றோருக்கு முன்காலத்தில் தமிழாசிரியர் பதவி கிடைத்தது. அத்தேர்வுகளைப் பின்பற்றியே சென்னைப் பல்கலைக்கழகத்தார் வித்துவான், பி.ஓ.எல். முதலிய தேர்வுகளை நடத்தத் தொடங்கினர். பலர் தமிழைப் படிக்குமாறு இத்தேர்வுகள் தூண்டின.

20. 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர்களாக இருந்தவர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

'செந்தமிழ்' என்னும் பத்திரிகையின் ஆசிரியராக முதற்கண் அமர்ந்தவர் மகாவித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் ஆவார். இரண்டரை ஆண்டுகள் அவர் ஆசிரியராக இருந்தார். அவருக்குப் பிறகு இக்கட்டுரையின் ஆசிரியராகிய திரு. மு. இராகவையங்காரவர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராக இருந்து தொண்டு செய்தார்.

21. தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட நூல்களுள் மூன்றினைக் குறிப்பிடுக. அவற்றைப் பதிப்பித்த ஆசிரியர் யார்?

தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட நூல்கள் ஞானமிர்தம் என்னும் சைவ சமய நூல், வில்லிபாரதம், கதிரைவேற் பிள்ளை தமிழகராதி முதலியவை ஆவன. அவற்றைப் பிழையறப் பதிப்பித்தவர் சேற்றூர் வித்துவான் சுப்பிரமணியக் கவிராயர் ஆவார்.

22. "ஏது! சோதிட நூலுக்குச் சோதிடங் கூறுவதில் வல்லவனாகவே பாயிரங் கொடுத்தாய் போலும்!": இடஞ்சுட்டி விளக்கம் தருக.

திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் வடமொழியில் உள்ள 'சாதக சந்திரிகை' என்னும் நூலைத் தமிழில் வெண்பாக்களாகப் பாடி முடித்தார். அதற்கு இக்கட்டுரையின் ஆசிரியராகிய மு. இராகவையங்காரவர்கள் பாயிரக் கவிகள் பாடிக் கொடுத்தார். அப்பாடல்களுள் ஒன்றின்கண், பாண்டித்துரைத் தேவரவர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவிவிட்டார் என்று குறிப்பாகக் கூறியிருந்தார். புலவர்களைத் தேவர் போற்றிக்காக்கும் பான்மையையே அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டபடியே பின்பு பாண்டித்துரைத் தேவரவர்கள் பெருமுயற்சி செய்து, தமிழ்ச் சங்கத்தை நிறுவினர். சங்கம் நிறுவிய பிறகு ஒருமுறை, திரு. நாராயண ஐயங்கார், 'மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தேவரவர்கள் நிறுவி விட்டார் என்பது முன்னமேயே பாடப்பட்டுவிட்டது. வெளிப்படையாக இப்பொழுது தான் தேவர் அச்சங்கத்தை நிறுவினர். அவரது சொற்களின் பொருளைப் பலர் அறிந்திலர். தேவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அப்பொழுது திரு. நாராயண ஐயங்கார் தமது 'சாதக சந்திரிகை' என்ற நூலுக்கு, இக்கட்டுரையாசிரியராகிய மு. இராகவையங்காரவர்கள் பாடியளித்த சிறப்புப் பாயிரப் பாடல்களைப் பாடிக் காட்டினர். அது காலையில் பாண்டித்துரைத் தேவரவர்கள் இக்கட்டுரையின் ஆசிரியரைப் பார்த்து, 'ஏது? சோதிட நூலுக்குச் சோதிடங் கூறுவதில வல்லவனாகவே பாயிரம் கொடுத்தாய் போலும்!' என்று கூறினர். பாண்டித்துரைத் தேவர் சங்கத்தை நிறுவிவிட்டார் என்று, அவர் நிறுவுவதற்கு முன்னதாகவே இக்கட்டுரையாசிரியர் குறிப்பிட்டுவிட்டா

நன்றோ? இதனையே சோதிடம் கூறியதாகத் தேவரவர்கள் ஈண்டுக் குறிப்பிட்டார்.

23. பாண்டித்துரைத் தேவர் செய்த தமிழ்த் தொண்டுகள் யாவை?

பாண்டித்துரைத் தேவர் தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பெறுவதற்கு ஆதரவு தந்தார்; (முதல் வினாவின் விடையையும் ஈண்டுச் சேர்த்துக் கொள்க.) தமிழ் நூல்களைத் தம் அவையில் அரங்கேற்றச் செய்தார் அவரே பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி என்னும் நூல்களை வெளியிட்டார். இவற்றுக்கெல்லாம் மேலாக அவர் பெருமுயற்சிசெய்து, மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். அதன் பொருட்டு அவர் படாத பாடுபட்டார்; தளராத உள்ளதுடன் உழைத்து, அச் சங்கத்தை நிறுவினார். மதுரை வடக்கு வெளி வீதியில் இருந்த தமது மாளிகையை அவர் தமிழ்ச் சங்கத்திற்கென்றே அளித்துவிட்டார். பொதுவாகக் கூறுமிடத்து, தமிழ் நாட்டில் தமிழ்க் கல்வியைப் பரப்பியதில் அவர் பெரும் பங்கு கொண்டிருந்தார் என்னலாம்.

3. கடலாண்ட காவலர்

1. செங்குட்டுவன் என்பவன் யாவன்? அவன் எவ்வாறு புகழ்ப் பெற்றான்? ஏன்?

செங்குட்டுவன் என்பவன் நெடுஞ்சேரலாதன் என்பவனது மகன்; சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகளின் அண்ணன். அவன் ' கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் ' என்று புகழப்பட்டான், கடலின்கண் தீவகத்தே வாழ்ந்து வந்த கடற்பகைவரை அவன் வென்றமையாலால் அவ்வாறு புகழப்பட்டான்.

2. நெடுஞ்சேரலாதன் என்பவன் யாவன்? அவன் யாரை வென்றான்?

சேரன் செங்குட்டுவனுக்கும், இளங்கோவடிகளுக்கும் நெடுஞ்சேரலாதன் தந்தை ஆவான். அவன் கடற்பகைவராகிய கடம்பர் என்பாரைத் தன் கலப்படையால் வென்றான்.

3. கடற்போர் புரிந்த சேர அரசர்கள் யாவர்?

நெடுஞ்சேரலாதனும், அவனது மகனாகிய செங்குட்டுவனும் கடற்போர் புரிந்த சேர அரசர்கள் ஆவர்.

4. சேர மன்னர்கள் கடம்பருடன் போர் புரியக் காரணம் யாது?

கடம்பர் என்போர் கடற் கொள்ளைக்காரர்கள் ஆவர். அவர்கள் வெள்ளைத் தீவில் தங்கி, வாணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்து வந்தனர் மேனாடுகளிலிருந்து தமிழ் நாட்டுக்கும் தமிழ் நாட்டிலிருந்து மேனாடுகட்கும் சரக்கினை ஏற்றிச் சென்ற கலங்களை அவர்கள்

மறித்துக் கொள்ளையடித்தனர். அதனால் தமிழ்நாட்டுக் கடல் வாணிகம் பெரும் கேடுற்றது. எனவே நெடுஞ்சேரலாதனும், சேரன் செங்குட்டுவனும் கலப்படை வலிமையால் கடம்பருடன் போர் செய்து, அவர்களை வென்றனர்.

5. 'முசிறி' என்னும் இடத்தைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

'முசிறி' என்பது சேரநாட்டுக் கடற்கரையில் அக்காலத்தே சிறப்புற்றிருந்த ஒரு துறைமுகம் ஆகும். யவனர், அரேபியர், எகிப்தியர் ஆகியோருடைய வாணிகக் கப்பல்கள் அத்துறைமுகத்திற்கு வந்தவண்ணம் இருந்தன. அதனால் வளமுற்றிருந்த அத்துறைமுகம் அக்காலத்தில் உலகறிந்த நகரமாக விளங்கியது.

6. கடம்பர் என்போர் யாவர்? அவர்களைப் பற்றி நீவிர் அறிவன யாவை?

நான்காம் வினாவின் விடையே இவ்வினாவிற்கும் விடையாகும்.

7. திருமாவளவனது வீரத்தினை எழுதுக.

'திருமாவளவன்' எனப் பெற்ற கரிகாற் சோழன் தனது புலிக் கொடியை இமயமலையின் நெற்றியில் நாட்டினான். பின்பு கடற்படை கொண்டு இலங்கை அரசனை எதிர்த்தான்; பன்னீராயிரம் சிங்களவரைச் சிறை செய்துகொண்டு திரும்பினான். இச் செய்தியை இலங்கைப் பழங்கதை கூறுகிறது.

8. சிங்களாந்தகன் : விளக்குக.

பிற்காலச் சோழர்களுள் ஒருவனாகிய சோழன் பராந்தகனுக்கு, 'சிங்களாந்தகன்' என்ற சிறப்புப் பெயர் இருந்தது. பராந்தகன் சிங்கள நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, சிங்களவரை வென்றமையால் அத்தகைய சிறப்புப் பெயரைப் பெற்றான். சிங்கள + அந்தகன் = சிங்களாந்தகன் : சிங்களவர்க்கு (இலங்கை மக்களுக்கு) இயமன் போன்றவன்.

9. இராசராசன் தமிழக் கடல் முழுவதையும் ஆளக் கருதி யாது செய்தான்?

இராசராசன் காலத்தில் சேர மன்னர்களிடம் வலிய கப்பற்படை இருந்தது. சேர நாட்டில் காந்தளூர்ச் சாலை என்னும் இடத்தில் சேரர்க்கு உரிய கப்பற்படை நிலைப்பு ஒன்று இருந்தது. அந்நிலையத்தை இராசராசன் தாக்கி வென்றான் இத்தகைய வெற்றியால் இராசராசனுக்கு தமிழ்க் கடல் ஆதிக்கம் கிடைத்தது.

10. காந்தளூர்ச்சாலை : குறிப்பு வரைக.

காந்தளூர்ச்சாலை என்னும் இடத்தில் இடைக்காலச் சேரர்கட்கு உரிய கப்பற்படை நிலையம் ஒன்று இருந்தது. அதனைச் சோழன் இராசராசன் வென்று, தமிழ்க்கடல் ஆதிக்கத்தைப் பெற்றான்.

11. இராசராசன் இலங்கையில் பெற்ற வெற்றியை விளக்குக.

இராசராசன் தமிழ்க்கடல் ஆதிக்கத்தைப் பெற்றபிறகு, இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றான். அக்காலத்தில் மகிந்தன் என்னும் மன்னன், அநுராதபுரம் என்னும் நகரைத் தலைநகராகக்கொண்டு இலங்கையை ஆண்டு வந்தான். இராசராசன் மகிந்தனை வென்று ஓட்டி, அநுராதபுரத்தை அழித்து, இலங்கையில் தமிழ்க் கொடியை நாட்டினான்; அந்நாட்டிற்கு மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரை இட்டான்; 'பொலனருவை' என்னும் ஊரை இலங்கைக்குத் தலைநகரமாக்கினார்; அந்நகரில் தன் வெற்றிக்கு அறிகுறியாகச் சிவன் கோவில் ஒன்றையும் கட்டுவித்தான்.

12. மகிந்தன், அநுராதபுரம், மும்முடிச் சோழமண்டலம், பொலனருவை சிறு குறிப்புகள் வரைக.

மகிந்தன்: இவன் இராசராசன் காலத்தில் இலங்கையை ஆண்ட மன்னன் ஆவான். இவன் இராசராசனிடம் தோல்வியுற்று ஓடி மறைந்தான். பின்பு இவன் இராசேந்திரனால் சிறைப்படுத்தப்பெற்று முடிவில் தமிழ்நாட்டில் இறந்துபட்டான்.

அநுராதபுரம்: மகிந்தன் என்னும் அரசன் காலத்தில் இவ்வூர் இலங்கைநாட்டின் தலைநகரமாக இருந்தது. இது சோழன் இராசராசனால் அழிவுற்றது.

மும்முடிச் சோழ மண்டலம்: ஈழ நாட்டிற்குச் சோழன் இராசராசன் வைத்த பெயர் இது. ஈழ நாட்டை வென்றபின் இராசராசன் அந்நாட்டிற்கு இப்பெயரை வைத்தான். சோழர் ஆட்சிக்கு உட்பட்ட மாகாணங்களுள் இம்மண்டலமும் ஒன்றாக விளங்கியது.

பொலனருவை: சோழன் இராசராசன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, அதன் தலைநகரமான அநுராதபுரத்தை அழித்தான்; பின்பு 'பொலனருவை' என்னும் ஊரை இலங்கை நாட்டுக்குத் தலைநகரமாக்கினான். அவ்வூரில் இராசராசனது வெற்றிக்கு அறிகுறியாக அவனால் கட்டப் பெற்ற சிவன் கோவில் ஒன்று உள்ளது. அது தமிழ் நாட்டுக் கோயிலைப் போலவே அமைந்துள்ளது. அஃது இன்று 'சிவ தேவாலயம்' என்னும் பெயருடன் விளங்குகின்றது.

13. இராசேந்திரன் இலங்கையிற் செய்த போரைப்பற்றிக் குறிப்பு வரைக.

சோழன் இராசராசனது மைந்தன் இராசேந்திரன் ஆவான். இராசராசன் இலங்கை அரசனாகிய மகிந்தன் என்பவனை நாட்டை விடுத்து ஓட்டினான். மகிந்தன் மீட்டும் அரசுரிமை பெற்று, வலிமை யுறவே, இராசேந்திரன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, மகிந்தனை வென்று, சிறைப்படுத்தித் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்தான். தமிழ் நாட்டில் மகிந்தன் இறந்தான். அதன்பின் மகிந்த

னின் மகனாகிய இளம்பாலன் என்பவன் இலங்கை அரசன் ஆனான். அவன் பாண்டியருடன் உறவு பூண்டு வலிமை பெற்றானாயினும், நெடுங் காலம் சோழருடைய புலிக்கொடி இலங்கையில் பறந்து கொண்டிருந்தது; இராசராசேந்திரன் அமைத்த கப்பற் படையின் வலிமையாலேயே இவ்வாறு சோழர் ஆதிக்கம் இலங்கையில் நெடுங்காலம் இருந்தது.

14. இராசேந்திரன் கடலாண்ட திறத்தினை விளக்கி வரைக.

இராசேந்திரனிடம் வலிய கப்பற்படை இருந்தது. அப்படையின் வலிமையாலேயே அவன் இலங்கையை தன்னடிப்படுத்த முடிந்தது. இராசேந்திரன் கடலின்கண் கலங்கள் பலவற்றைச் செலுத்தியவன் என்று புகழப்படுகின்றான். தற்காலத்தில் 'நிக்கபார்' என்று அழைக்கப்படும் மாநக்கவாரம் என்னும் தீவுத் தொகுதியையும், சுமத்திரா தீவுத் தொகுதியையும், மலாய் நாட்டைச் சேர்ந்த காழகம் எனப்பட்ட கடாரப் பகுதியையும், தற்காலத்தில் 'தக்கோபா' எனப்படும் தக்கோலத்தையும் அவன் தனது கப்பற்படை வலிமையாலேயே கைப்பற்றினான். கடாரம் முதலிய நாடுகளைக் கைப்பற்றிய காரணத்தால் இராசேந்திரன் 'கடாரம் கொண்டான்' என்னும் விருதுப் பெயரைப் பெற்றான்.

14. மாநக்க வாரம், மலையூர், பண்ணை, கடாரம், தக்கோலம்: குறிப்புகள் வரைக.

மாநக்க வாரம்: இஃது ஒரு தீவுத் தொகுதி. தற்காலத்தில் இது 'நிக்கபார்' என்று அழைக்கப்படுகின்றது. இதனைச் சோழன் இராசேந்திரன் தனது கப்பற்படை வலிமையால் வென்று கைப்பற்றினான்.

மலையூர்: சுமத்திரா தீவில் ஓடும் ஓர் ஆற்றின் பெயர் இது. அத் தீவில் மலையூர் என்பது சிறப்புப் பெற்றிருந்தது. அதனை இராசேந்திரன் வென்றான். மலையூரைக் கொண்ட நாடும் அப்பெயரையே பெற்றது. அந்நாட்டில் ஓடும் ஆறு 'மலையூர்' என்று அழைக்கப்படுகின்றது.

பண்ணை: சுமத்திரா தீவில் உள்ள ஓர் ஊர் இது. இராசேந்திரன் இவ்வூரை வென்றான். இது தற்காலத்தில் 'பன்னி' என்றும், 'பனி' என்றும் மருவியுள்ளது.

கடாரம்: மலாய் நாட்டைச் சேர்ந்த ஒரு பகுதிக்குக் கடாரம் என்பது பெயர். அது தமிழ் இலக்கியத்தில் 'காழகம்' என்று சுட்டப்பட்டுள்ளது. கடாரம் என்பது 'கேடம்' என்று மருவி, தற்காலத்தில் 'கெடா' என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது. கடாரப் பகுதியை இராசேந்திரன் வென்றதனால் அவன் 'கடாரம் கொண்டான்' என்னும் விருதுப் பெயரைப் பெற்றான்.

• தக்கோலம் : மலாய் நாட்டில் உள்ள ஓர் ஊர் இது. ஆயிரம் ஆண்டுகட்கு முன் தமிழர் இவ்வூரில் வர்த்தக வளம் பெற்று வாழ்ந்தனர். இதனை இராசேந்திரன் வென்றான். இதற்குத் தற்காலத்தில் 'தக்கோபா' என்னும் பெயர் அமைந்துள்ளது.

16. சுமத்திரா தீவிலும், மலாய் நாட்டிலும் பழங்காலத்தில் தமிழர் வாழ்ந்தனர் என்பதனை நாம் எவ்வாறு உணரலாம் ?

சுமத்திரா தீவிலும், மலாய் நாட்டிலும் உள்ள ஊர்களின் பெயர்கள் பல தமிழ்ப் பெயர்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக, சுமத்திரா தீவில் மலையூர், பண்ணை என்னும் ஊர்கள் உள்ளன. மலாய் நாட்டின் ஒரு பகுதியாகிய 'கெடா' என்பதனைத் தமிழிலக்கியம் 'காழகம்' என்னும் பெயரால் குறிப்பிடுகின்றது. இராசேந்திரன் சுமத்திராவையும், மலாய் நாட்டின் ஒரு பகுதியையும் வென்றான் என்பதற்குச் சாசனங்கள் சான்று பகர்கின்றன. இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்தி அவனுடைய கடற்படை வெற்றியைப் பல படப் பாராட்டுகின்றது. எனவே பழங்காலத்தில் சுமத்திரா தீவிலும், மலாய் நாட்டிலும் தமிழர் வாழ்ந்தனர் என்பதனை நாம் உணரலாம்.

17. கடலாண்ட காவலர்களுள் நால்வரைக் குறிப்பிடுக. அவர்கள் பெற்ற வெற்றிகளை விளங்க வரைக.

நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், சோழன் இராசராசன், சோழன் இராசேந்திரன் என்போர் கடலாண்ட காவலர்களுள் சிறந்தவர்களாவர். (ஈண்டு, 4, 11, 14 ஆகிய வினாக்களின் விடைகளைச் சேர்த்துக் கொள்க)

4. நாடகக் கலை

1. முத்தமிழ்ப் பாகுபாட்டினைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படும் நூல்கள் யாவை ? காலத்தையும் குறிப்பிடுக.

இயல், இசை, நாடகம் எனத் தமிழ் மூவகைப்படும் என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. 12-ஆம் நூற்றாண்டில தோன்றிய கம்பரும், 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நம்பியாண்டார் நம்பியும், 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசரும் முத்தமிழ்ப் பாகுபாட்டினைக் கூறியுள்ளனர். 6-ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய பரிபாடலில் முத்தமிழ்ப் பாகுபாட்டினைப் பற்றிய குறிப்பு உள்ளது. எனவே கி. பி. 5-ஆம் நூற்றாண்டளவில் முத்தமிழ்ப் பாகுபாடு தோன்றியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

2. 'பரிபாடல்' என்னும் நூல் எக்காலத்தே தொகுக்கப்பட்டிருத்தல் கூடும் ? ஏன் ?

'பரிபாடல்' என்னும் நூல் 6-ஆம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டிருத்தல் கூடும். அந்நூலில் 'நான்' என்னும் சொல் வந்துள்

பொய்யாமை அன்ன புகழ் இல்லை.

ளது." ஆறும் நூற்றாண்டிற்கு முன் அச்சொல் இலக்கியத்தில் இடம் பெற்றிலது. எனவே அந்நூல் 6-ஆம் நூற்றாண்டளவிலேயே தொகுக்கப்பட்டிருத்தல் கூடும்.

3. 'நாடகம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரை யாது?

'நாடகம்' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'புனைந்துரை வகை' என்று பொருள் கூறியுள்ளார்.

4. 'நாடகம்' என்பதற்குரிய பழைய பொருள் யாது? சான்றுகள் காட்டுக.

'நாடகம்' என்பதற்குரிய பழைய பொருள் 'கூத்து' என்பதாகும். பத்துப் பாட்டில் ஒன்றான சிறுபாணாற்றுப் படையில் 'நாடகம்' என்னும் சொல் 'கூத்து' என்னும் பொருளிலேயே வருகின்றது. பட்டினப் பாலையிலும் இச்சொல் 'நாட்டியம்' என்னும் பொருளிலேயே வருகின்றது. ஆடிய மாதவி, 'நாடகக் கணிகை' என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகின்றாள். திவாகர நிகண்டு 'நாடகம்' என்னுஞ் சொல்லும், 'கூத்து' என்னுஞ் சொல்லும் ஒரே பொருளைத் தருவன என்கின்றது. எனவே நாடகத் தமிழ் என்பது நாட்டியத்திற்குரிய இலக்கண இலக்கியங்களே ஆகும்.

5. 'விநோதக் கூத்து' என்பதற்கு விளக்கம் தருக.

'விநோதக் கூத்து' என்பதற்கு, "கொடித்தேர் வேந்தரும், குறுநில மன்னருமாக உடையோர் பகைவென்றிருந்த இடத்து விநோதங் காணுங் கூத்து" என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் கூறியுள்ளார். நாட்டிய வகைகளுள் இக்கூத்து ஒன்றாகும்.

6. தற்காலத்து வழங்கும் நாடகம் எப்பொழுது தமிழ் நாட்டு வழக்கிற் புகுந்தது?

நாட்டிய வகைகளுள் ஒன்றாகிய விநோதக் கூத்து முதலியவை அரசர்கட்கு எதிரில் ஆடல் பெற்றன. விறலியர் பாணர்களுடன் சேர்ந்து அரசர்களின் சபைகளிலும், விழாக் காலங்களிலும் நாட்டியம் ஆடினர். நாட்டியத்துடன் இசைப்பாடல்கள் கலந்து செப்பமுற்று தற்கால நாடகமாக வளர்ந்தன. நாட்டியமே வளர்ச்சியுற்று தற்கால நாடகம் ஆயிற்று.

7. நாட்டியம் ஆடுவதற்குரிய ஓரினத்தார் இருந்தனர் என்பதனை நாம் எவ்வாறு அறியலாம்?

விறலியர் என்போர் நாட்டியம் ஆடுவதற்குரிய இனத்தோர் ஆவர். குறுந்தொகை என்னும் நூலின்கண், ஆதிமந்தி என்பவள் தன் கணவனைக் காணாது வருந்திப் பாடிய பாடல் ஒன்று காணப்படுகின்றது. அதன்கண் அவள் தன்னை ஆடுகளமகளாகவும், தன் கணவனாகிய ஆட்டனத்தியை ஆடுகளமகனாகவும் குறிப்பிடுகின்றாள்.

எனவே நாட்டியம் ஆடுவதற்குரிய ஓரினத்தார் பண்டைக் காலத்தில் இருந்தனர் என்பதனை அறியலாம்.

8. நாட்டியம் எவ்வாறு வளர்ச்சியுற்றது?

விநோதக் கூத்து போன்றவை தொடக்கத்தில் எளிமையாகவும், அநாகரிகமாகவும் இருந்தன. பிறகு அவை படிப்படியாகச் செம்மை அடைந்தன. கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வைதீகக் கிளர்ச்சி நாட்டியத்தைச் சீர் தூக்கியது. தேவாரம், பரிபாடல் போன்ற பாடல்கள் நாட்டியத்திற்கு ஏற்ற இசைப்பாடல்கட்கு அடிகோலின. கண்ணுக்கு மட்டும் இன்பம்தர அமைந்த நாட்டியம் இசைப் பாடல்களின் இயைபினால் காதுக்கும் இன்பம் தரத் தொடங்கியது. 'அவிநயக் கூத்து' என்னும் ஒருவகைக் கூத்தில் இசையும், நாடகமும் ஒருங்கே கலந்திருந்தன. நாளடைவில் நாட்டியம் கோயில்களில் நடைபெறத் தொடங்கியது. அதனால் பொதுமக்கள் பலர் நாட்டியம் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றனர். இவ்வாறாகக் கோயில் விழாக்களில் நாட்டியம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றது.

9. 'அவிநயக் கூத்து' என்பது யாது?

சாந்திக் கூத்தின் ஒருவகையாக விளங்கியது அவிநயக் கூத்து. 'கதை தழுவாது பாட்டினது பொருளுக்கு ஏற்பக் கைகாட்டி வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து' என்று அவிநயக் கூத்திற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. இசையும் நாட்டியமும் அவிநயக் கூத்தில் ஒருங்கே விளங்கின.

10. "கோயில்கள் நாட்டியத்தை வளர்த்தன" — இதனை ஆராய்க.

கி. பி. 6-ஆம் நூற்றாண்டளவில் தென்னாட்டில் வைதிக சமயம் கிளர்ந்தெழுந்தது. அக்கிளர்ச்சியினால் இசைப்பாட்டு வளர்ச்சியுற்றது. இசைப்பாட்டினால் நாட்டியம் சிறப்புற்றது. சமயக் கிளர்ச்சியினால், கோயில்களில் மக்களின் கருத்தினை இழுக்கவேண்டி நேரிட்டது. எனவே மக்களின் கருத்தைக் கவர நாட்டியம் பெருந்துணை செய்தது. இவ்வாறு கோயில்களில் நடைபெற்று வந்த நாட்டியம் நாளடைவில் கோயில் விழாக்களில் இன்றியமையாததோர் இடத்தைப் பெற்றுவிட்டது. இதற்குக் கல்வெட்டுக்கள் பல சான்று பகர்கின்றன.

11. 'தலைக்கோல்' என்பது யாது? சான்று காட்டுக.

நாட்டியம் ஆடும் பெண்டிர் அரசனிடம் பெறும் பட்டம் 'தலைக்கோல்' ஆகும். மாதவி இவ்வாறு சோழ அரசனிடம் நாட்டியம் ஆடிக் காட்டி, 'தலைக்கோல்' என்னும் பட்டத்தைப் பெற்றாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

12. "பூங்கோயில் நாயகத் தலைக்கோலி", — குறிப்பு வரைக.

திருவாரூர்க் கோயிலின்கண் நாடக மகள் ஒருத்தி தனது நாட்டியத் திறமையை அரசனிடம் காட்டினாள். அவன் மகிழ்ந்து அவளுக்கு, 'பூங்கோயில் நாயகத் தலைக்கோலி' என்னும் பட்டத்தை அளித்தான். இச்செய்தியைச் சோழர் காலத்திய கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

13. நாட்டியத்தின் மேம்பட்டது நாடகம் என்பதனை எவ்வாறு அறியலாம் ?

நாட்டியத்தால் விளையும் இன்பம் சிற்றளவினதேயாகும். அதனால் நீடித்த இன்பம் கிடைப்பதில்லை. மேலும், நுட்பமான கலையுணர்ச்சி பெற்றவர்களாலேயே நாட்டியத்தை நன்கு சுவைக்க முடியும். ஆனால், நாடகம் அத்தகையதன்று; அது நீடித்து நிகழ்வது; எளிதில் இன்பம் பயப்பது; நாட்டியத்தையும் தன்னிடம் கொண்டது. எனவே நாட்டியத்தைக் காட்டிலும் மேம்பட்டது நாடகம் என்பதனை அறியலாம்.

14. 'நாடகம்' என்று மக்கள் முதன்முதல் எதனைக் குறிப்பிட்டனர் ? அதனை எவ்வாறு குறிப்பிடலாம் ?

ஒரு நடிகையே ஒரு கதையைப் பின்பற்றி, அதில் வரும் பல பாத்திரங்களையும் தானே மேற்கொண்டு, பாட்டுக்களாலும், அபிநயங்களாலும் கதையை நிகழ்த்தி முற்றுவித்தல் உண்டு. அதைத் தான் 'நாடகம்' என்று மக்கள் முதன்முதல் குறிப்பிட்டனர். இத்தகைய நாடகத்தை, தற்கால நாடகத்திற்குச் செல்லும் வழியில் அமைந்ததொரு 'மைல்கல்' என்று குறிப்பிடலாம்.

15. நாடகம் பழங்காலத்தில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் காட்டுக.

கோயில்கள் நாட்டியத்திற்கு மட்டுமின்றி, நாடகத்திற்கும் ஆதரவு தந்தன. வைதிக சமயங்கள நாடகத்திற்கு உரிய கதைப் பொருளைத் தந்தன. இராசராசன் கட்டிய தஞ்சைப் பெருங் கோயிலில் 'இராஜராஜேசுவர நாடகம்' என்னும் நாடகம் ஆண்டுதோறும் நடிக்கப்பட்டு வந்தது என்று கல்வெட்டொன்று கூறுகின்றது. கி. பி. 1119-ல் கமலாலயபட்டர் என்பவர் 'பூம்புலியூர் நாடகம்' என்றதொரு நாடக நூலை எழுதி, அரசனிடமிருந்து இறையிலி நிலத்தைப் பெற்றார் என்று கடலூர்க் கல்வெட்டொன்று கூறுகின்றது. முதல் நாடகம் பெரும்பாலும் பத்தாம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பாகத் தோன்றியிருத்தல் கூடும்.

16. பழைய நாடக நூல்கள் யாவை ? விளக்குக.

பாட்டியல் எனப்படும் நூலில் பள்ளு, குறவஞ்சி என்னும் நாடக நூல்கள் காணப்படுகின்றன. முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி

போன்ற நாடக நூல்கள் கோயில்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. இவை 17-ஆம் நூற்றாண்டில் தோன்றின.

17. கீர்த்தனைவடிவில் நாடக நூலை முதன்முதல் எழுதியவர் யார்? அந்நூல் யாது?

கீர்த்தனை வடிவில் நாடக நூலை முதன்முதல் எழுதியவர் சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆவார். அவர் எழுதிய நூல் இராம நாடகக் கீர்த்தனை ஆகும்.

18. நாடகங்களாக நடிக்கப்பெற்ற இசை நாடகங்கட்கு எடுத்துக்காட்டுகள் தருக.

இராம நாடகக் கீர்த்தனை, பாரதக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை, திருவிளையாடல் கீர்த்தனை முதலியன நடிக்கப்பெற்ற இசை நாடகங்கள் ஆவன. சகுந்தலை நாடகம், அரிச்சந்திர நாடகம் முதலியனவும் அக்காலத்தில் நடிக்கப் பெற்றன.

19. வடமொழி நாடக இலக்கண முறைகளைப் பின்பற்றிய ஆசிரியர்களுள் சிறந்தவர் யார்?

வடமொழி நாடக இலக்கண முறைகளைப் பின்பற்றிய ஆசிரியர்களுட் சிறந்தவர் திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் ஆவார். அவர் 'நாடக இயல்' என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றியுள்ளார்.

20. திருவாளர் ப. சுந்தரம் பிள்ளையைப்பற்றி நீவிர் அறிவன யாவை?

அண்மைக் காலத்தில் சிலர் ஷேக்ஸ்பியர், ராஸீன், மோலியர் முதலிய மேனாட்டு நாடக ஆசிரியர்களைப் பின்பற்றி நாடகம் இயற்றலாயினர். அவர்களுள் சிறந்தவர் திருவாளர் ப. சுந்தரம் பிள்ளையவர்கள் ஆவார். அவர் 'மனோன்மணீயம்' என்னும் செய்யுள் உருவில் அமைந்த நாடக நூலை எழுதியுள்ளார்.

21. தற்காலத்தில் நடிகராகவுள்ள நாடக ஆசிரியர் யார்? அவர் எழுதிய நாடகங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

தற்காலத்தில் நடிகராகவுள்ள நாடக ஆசிரியர் திரு. பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். அவர் நடிகராக இருந்தாராதலால், நாடக நுட்பங்களை நன்கு அறிந்திருந்தார். அதனால் அவரால் எளிய உரை நடையில் நாடகங்களை எழுத முடிந்தது. அவர் 'லீலாவதி சுலோசனை', 'மனோகரா' முதலிய நாடக நூல்களை எழுதியுள்ளார்.

5. குடிமக்கள் காப்பியம்

1. ஆசிரியர் இளமையில் எவ்வாறு முன்னிரவுப் பொழுதினைக் கழிப்பார் ?

ஆசிரியர் தமது இளமையில், ஏனைய குழந்தைகளுடன் ஒன்று சேர்ந்து முன்னிரவு நேரங்களில் கதை கேட்பார். முதிய வேலையாளே அவர்கட்குக் கதைகளைக் கூறுவான். கதைகள் யாவும் கற்பனைக் கதைகளாகவும், முடிமக்களைப்பற்றிய கதைகளாகவும் இருக்கும்.

2. ஆசிரியர் தம் இளமையில் கேட்ட முடிமக்கள் கதைகள் யாவை ?

ஆசிரியர் தம் இளமையில் விக்கிரமாதித்தன் கதை, மதனகாம ராஜன் கதை, திருவிளையாடல்கள், நளன் கதை, அரிச்சந்திரன் கதை, துரியோதனன் கதை, இராமன் கதை முதலிய முடிமக்கள் கதைகளைக் கேட்டார்.

3. "இன்று நினைத்தால் பெரிய வியப்பாக இருக்கிறது" என்று ஆசிரியர் எதனைக் காட்டுகின்றார் ?

ஆசிரியர் தம இளமையில் விக்கிரமாதித்தன் கதைபோன்ற முடிமக்கள் கதைகளையே கேட்டார். குடிமக்கள் கதை ஒன்று கூட அவர் கேட்டிலர். குடிமக்களைப்பற்றி எண்ணுவதற்கே அவருக்கு இடம் கிடைக்கவில்லை. அதனைக் குறிப்பிடுங்கால் ஆசிரியர், "இன்று நினைத்தால் பெரிய வியப்பாக இருக்கிறது" என்கின்றார்.

4. ஆசிரியர் தம் மாணவ வாழ்க்கையில் படித்த நூல்கள் எத்தகையன ?

ஆசிரியர் தம் மாணவ வாழ்க்கையில் இராமாயணம், பாரதம் நளவெண்பாபோன்ற புராணங்களையும், ஷேக்ஸ்பியர் நாடகங்களையும், வரலாறு நூலையும் படித்தார். அவர் படித்த நூல்களெல்லாம் முடிமக்களைப்பற்றிய கதையாகவோ, வரலாறாகவோ இருந்தன. குடிமக்களோடு தொடர்புடைய எந்நூலையும் அவர் படித்தாரல்லர்.

5. இலக்கிய உலகில் முப்பதாண்டுகட்கு முன்னிருந்த நிலையைப்பற்றி ஆசிரியர் கூறுவது யாது ?

"முப்பதாண்டுகட்குமுன் மக்கள் யாவரும் முடிமக்களைப் பற்றிய கதைகளையும், வரலாறுகளையுமே படித்தனர். பாட்டாளி என்னும் சொல்லே அக்காலத்தில் வழங்கப்பட்டிலது" என்று ஆசிரியர் கூறுகின்றார்.

செல்லா இடத்துச் சினம் தீது.

6. "அயல் மொழிக் காப்பியங்கள் யாவும் முடிமக்கள் காப்பியங்களே"—இக்கூற்றினை ஆராய்க.

வடமொழியில் ஆதிகாப்பியமாகக் கருதப்படுவது வான்மீகி முனிவர் பாடிய இராமாயணம் ஆகும். கிரேக்க மொழியில் ஆதிகாப்பியமாகக் கருதப்படுவது ஹோமர் என்பவர் பாடிய 'இலியட்' என்பது ஆகும். இலத்தீன் மொழியில் ஆதிகாப்பியமாகக் கருதப்படுவது வர்ஜில் என்பவர் இயற்றிய 'ஈனிட்' என்பதாகும். அத்தகைய ஆதி காப்பியங்களெல்லாம் முடிமக்களைப் பற்றிக் கூறும் காப்பியங்களே யாவன. எனவே, "அயல் மொழிக் காப்பியங்கள் யாவும் முடிமக்கள் காப்பியங்களே" என்று கூறுவது பொருந்தும்.

7. இலியட், ஈனிட் — சிறு குறிப்புக்கள் வரைக.

இலியட்: கிரேக்க மொழியில் உள்ள பழங்காப்பியம் இது. இதனைப் பாடியவர் ஹோமர் என்பவர் ஆவார். மெனலஸ் என்னும் அரசனது மனைவியாகிய ஹெலன் என்பவளை, இல்லிய நாட்டு இளவரசனாகிய பாரிஸ் என்பவன் சிறைப்படுத்தினான். அதனால் விளைந்த போரினை இந்நூல் பாடுகின்றது.

ஈனிட்: இலத்தீன் மொழியில் உள்ள பழங்காப்பியம் இது. இதனைப்பாடியவர் வர்ஜில் என்னும் புலவர் ஆவார். உரோமப் பேரரசனைத் தோற்றுவித்த ஈனியஸ் என்னும் அரசனது வரலாற்றை இந்நூல் கூறுகின்றது.

8. "இப்பழந்தமிழன் வாய்ப் பந்தல் போடுகின்றானா?"—இவ்வாறு ஆசிரியர் எங்கு ஏன் கூறுகின்றார்? விளக்குக.

தமிழில் உள்ள நூல்களெல்லாம் முடிமக்களோடு தொடர்புடையனவாக இருத்தலைக் கண்டார் ஆசிரியர். "பெரியோரைக் காரணமின்றிப் புகழ மாட்டோம்! சிறியோரை இகழவே மாட்டோம்" என்று பழந்தமிழன் கூறியுள்ளான். அக்கூற்றினை ஆராய்ந்து பார்த்தார் ஆசிரியர். தமிழில் குடிமக்கள் காப்பியமே இல்லை என்னும் எண்ணம் வந்தவுடன் ஆசிரியர், "இப்பழந்தமிழன் வாய்ப் பந்தல் போடுகின்றானா" என்கின்றார். "பழந்தமிழன் சொல்லளவிலேயே நிற்கின்றானா? செயலளவில் அவன் ஒன்றும் காட்டவில்லையா? குடிமக்களைப்பற்றித் தமிழன் பாடவே இல்லையா?" என்னும் கருத்தினாலேயே ஆசிரியர் இவ்வாறு கூறினார்.

9. தமிழ் மொழியில் தோன்றிய பழங்காப்பியம் எது? அஃது எத்தகைய காப்பியம் என்கின்றார் ஆசிரியர்?

தமிழ் மொழியில் தோன்றிய பழங்காப்பியம் இளங்கோவடிகள் பாடிய சிலப்பதிகாரம் ஆகும். அது, 'குடிமக்கள் காப்பியம்' என்கின்றார் ஆசிரியர்.

10. சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்பது எங்ஙனம் பொருந்தும்?

சிலப்பதிகாரத்தில் சோழன் கரிகாலன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன்-செங்குட்டுவன் ஆகிய அரசர்கள் பேசப்படுகின்றனர். பாண்டியன் கண்ணகிக்கு எதிரில் உயிரை விடுத்தான். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டினன். எனினும் அவர்களுடைய வரலாறுகளைப் பாடுவது இளங்கோவடிகளின் நோக்கமன்று. குடிமக்களாகிய கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரின் சிக்கல் வாழ்க்கையைக் கூறும் சித்திரமே சிலப்பதிகாரம் ஆகும். எனவே சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் ஆகும்.

11. பிறமொழியைச் சார்ந்த ஆதிகாப்பியங்கட்கும், தமிழ் மொழியில் உள்ள ஆதிகாப்பியத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

பிறமொழியில் உள்ள ஆதிகாப்பியங்கள் யாவும் முடிமக்கள் காப்பியங்கள் ஆவன. ஆனால் தமிழ்மொழியில் உள்ள ஆதிகாப்பியமாகிய சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் ஆகும்.

12. பாட்டாளி மக்கள் சிலப்பதிகாரத்தைப் பாராட்டுவர்—ஏன்?

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவரி முதலிய பகுதிகள் வருகின்றன. அவை யாவும் பாட்டாளி மக்களையே பாடுகின்றன. எனவே பாட்டாளி மக்கள் சிலப்பதிகாரத்தைப் பாராட்டுவர்.

13. கண்ணகியின் வாழ்க்கையால் தமிழ் நாடு ஒருமைப்பாடு பெற்றது என்பது எங்ஙனம் பொருந்தும்?

சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் தமிழ் நாடு முப்பெருந் துண்டுகளாக வெட்டுண்டது. அத்தகைய தமிழ் நாட்டில் கண்ணகி வாழ்ந்தாள். அவள் சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டில் கணவனை இழந்து, சேர நாட்டில் தெய்வம் ஆயினள். எனவே அவளது வாழ்க்கையால் தமிழ்நாடு ஒருமைப்பாடு பெற்றது என்று கூறுதல் பொருந்தும்.

14. ஆசிரியர் தமது வாழ்நாளில் கண்டதொரு புரட்சி யாது?

இளமையில் முடிமக்களைப்பற்றிய கதைகளையே கேட்டும், எழுதியும் வந்தார் ஆசிரியர். ஆனால் அவர் பிற்காலத்தில் குடிமக்கள் கதையைக் கேட்டும், எழுதியும் வருகின்றார். இதுவே அவர் தமது வாழ்நாளில் கண்டதொரு புரட்சியாகும்.

15. இளங்கோவடிகள் செய்த புரட்சி யாது?

முடிமக்களுக்கு முதலிடம் கொடுக்காமல், கண்ணகி, கோவலன், மாதவி ஆகிய குடிமக்களுக்கு முதலிடம் கொடுத்துத் தம் சிலப்பதி

காரத்தைப் பாடிய செய்கை இளங்கோவடிகள் செய்த புரட்சி ஆகும்.

16. சங்க காலம் ஒரு புரட்சிக் காலம் என்பது எங்ஙனம் பொருந்தும் ?

சங்ககாலத்துப் புலவர்கள் பழமைக்கு அடிமையாகாமல் வெற்றி பெற முயன்றனர். தாம் கண்ட ஊர்களையும், போர்களையும் உவமைகளாக அவர்கள் காட்டுகின்றனர். எனவே, சங்க காலம் ஒரு புரட்சிக் காலம் என்னலாம்.

17. சங்கப் புலவர்கள் தாம் கண்ட போர்களையும், ஊர்களையும் உவமைகளாகக் காட்டினர் என்பதற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டினை வரைந்து விளக்குக.

'வஞ்சிமாநகர்போல அழகிய தலைவி' என்று சங்கப் புலவர் ஒருவர் உவமை காட்டியுள்ளார். 'வஞ்சி என்பது சேர மன்னர்களின் தலைநகரமாகும். அந்நகரம் நல்ல தோற்றமும், அமைப்பும், அழகும், செல்வமும் வாய்ந்தது. அந்நகர்போல் அழகு வாய்ந்தவள் தலைவி' என்பது இவ்வுவமையின் கருத்தாகும்.

'வெண்ணிப்போர் ஆரவாரம்போலப் பழிச்சொல் அம்பலத்தில் ஆரவாரமாகிறது' என்று சங்கப் புலவர் ஒருவர் உவமை காட்டியுள்ளார். 'வெண்ணி' என்னும் இடத்தில் சோழன் கரிகாலனுடன் சேரமான் போர் செய்தான். அதுபொழுது ஆண்டுப் பேரொலி எழுந்தது. அதுபோலத் தலைவியைப்பற்றி பழிச்சொல் அம்பலத்தின்கண் பேரொலியுடன் எழுந்தது. களவொழுக்கம் பூண்ட தலைவனைக் காணாமல் உடல் மெலிந்த தலைவியைப்பற்றியே பழிச்சொல் எழுந்தது. அது பேரொலியுடன் பலரால் அம்பலத்தின்கண் பேசப்பட்டது.' என்பது இவ்வுவமையின் கருத்தாகும்.

18. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின்கண் காதல், அழுகை, வீரம் ஆகிய சுவைகளை எவ்வெவ்விடங்களில் அமைத்துள்ளார் ? விளக்குக.

மாதவியும், கோவலனும் காதல் வாழ்க்கை நடத்தும் நிலையில் இளங்கோவடிகள் காதற்சுவையை அமைத்துள்ளார். அது புகார்க் காண்டத்தின்கண் இடம்பெற்றுள்ளது. கணவனையிழந்த கண்ணகியின் வாயிலாக அவலச் சுவையின் ஆழத்தைக் காட்டிவிட்டார் இளங்கோவடிகள். அது மதுரைக் காண்டத்தின்கண் இடம் பெற்றுள்ளது. கண்ணகிப் படிமத்தைப் பொறிக்கும் பொருட்டுக் கல்லொன்று கொணரச் சென்ற செங்குட்டுவன், வடநாட்டரசர்களை வென்று, அவர்தம் முடித்தலையில் கல்லினை ஏற்றிச் சுமக்கச் செய்தான். அவ்

விடத்தில் வீரச்சுவை நன்கு அமைந்துள்ளது. அது வஞ்சிக் காண்டத்தின்கண் இடம் பெற்றுள்ளது. காந்தியடிகள் உலகுக்கு உணர்த்திய அருள் வீரத்தைக் கோவலனிடம் காட்டுகின்றார் இளங்கோவடிகள். மறையவனைத் தாக்கிய யானையைக் கொல்லாமல் விளக்கி, மறையவனைக் காத்தான் கோவலன். ஈண்டு அவனது அருள் வீரம் விளங்குகின்றது.

19. குடிமக்கள் சிறப்பினை இளங்கோவடிகள் புதிய முறையில் எவ்வாறு காட்டியுள்ளார்?

மறையவனைத் தாக்கிய மத யானையைக் கொல்லாமல் விலக்கி, மறையவனைக் காத்தான் கோவலன். குடிமக்களில் ஒருவனாகிய கோவலனுக்கு அருள் வீரத்தினை ஏற்றிச் சிறப்பித்தது ஒரு புதுமையாகும். வீட்டை விடுத்தே வெளிவந்திராத கண்ணகி பாண்டியனையும் வெல்லும் ஆற்றல் பெற்றுக் கடவுள் ஆயினாள். குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகிக்குச் இச்சிறப்பினை ஏற்றியது ஒரு புதுமையாகும். பரத்தையரை யாவரும் பழிப்பர். அத்தகைய பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியைக் கற்பரசி ஆக்கிச் சிறப்பித்தார் இளங்கோவடிகள். இதுவும் ஒரு புதுமையாகும்.

20. திருவள்ளுவர் குடிகளின் சிறப்பினைப் பதின்மூன்று அதிகாரங்களிற்கூறி, பொருட்பாலின் இறுதியில் அமைத்ததன் நுட்பம் யாது?

குடிமக்கள் சிறப்பிற்குத் தக்கதொரு இடம் தர விரும்பினார் திருவள்ளுவர். எனவே அவர்களது சிறப்பைப் பதின்மூன்று அதிகாரங்களால் அவர் பாடினார். அவ்வதிகாரங்கள் பொருட்பாலின் இறுதியில் இருந்தால் சிறப்புடன் யாவராலும் அவை படிக்கப்படும் என்பது அவரது நினைவு. பொருட்பாலின் முடிமணியாக விளங்கவேண்டும் என்ற எண்ணத்தினாலேயே அவர் அவ்வாறு அவற்றை ஈற்றின்கண் அமைத்தார்.

21. குடிமக்கள் சிறப்பினை இடைக்காலத்தில் தமிழ் மக்கள் மறந்ததும் உண்டு: சான்று காட்டுக.

பொருட்பாலின் முடிமணிபோல் விளங்க வேண்டுமென்ற எண்ணத்துடன், குடிமக்களின் சிறப்பினைக் கூறும் பதின்மூன்று அதிகாரங்களை வள்ளுவனார் பொருட்பாலின் இறுதியின்கண் வைத்தார், அவற்றுக்கு இடைக்காலத்தார் 'ஒழிபியல்' என்று பெயர் வைத்து ஒதுக்கினர். குடிமக்களின் சிறப்பினை உணராமலேயே தமிழ் மக்கள் இவ்வாறு பெயரிட்டனர். இதிலிருந்து, இடைக்காலத்தில் தமிழ் மக்கள் குடிமக்கள் சிறப்பினை மறந்ததும் உண்டு என்பதனை நாம் உணரலாம்.

ஒன்றாக நல்லது கொல்லாமை.

6. கியூரி அம்மையார்

1. விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னேற்றத்தால் விளைந்த நன்மைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னேற்றத்தால் மின்சாரம், தந்தி, கப்பல், ஆகாய விமானம், புகைவண்டி, மோட்டார், தொழிற்சாலைகள், இயந்திரங்கள் முதலிய பல சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றால் நம் வாழ்வு இன்பமாக அமைந்துள்ளது.

2. 'பௌதிக ஆராய்ச்சி மிகப் பழைய காலத்திலேயே தொடங்கியது' — சான்று காட்டுக.

வெட்டுண்டு கிடக்கும் மரத்தின்மேல் பொருள்களை வலித்திழுப்பது எளிது என்பதை ஆதிகாலத்து மக்கள் கண்டறிந்தனர். கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்கும் சக்கரத்தைப் பழங்காலத்தினர் பயன்படுத்தினர். நெருப்பைக் கண்டுபிடித்ததும், உணவைச் சமைக்க அறிந்ததும், அம்பி, குழவி முதலியவற்றைப் பயன்படுத்தியதும் பழங்காலத்து மக்களுக்கு பௌதிக அறிவு இருந்தது என்பதை வெளிப்படுத்தும்.

3. "உயிர் கொடுப்பதன்றோ பெண்ணின் பெருமை!" — இக்கருத்தினைக் கட்டுரையாசிரியர் ஏன் கூறுகின்றார்?

கியூரி அம்மையார், ஐரீன்கியூரி ஆகியோர் விஞ்ஞான ஆராய்ச்சி செய்தகாலையில் புதுப் பொருள்களை சிலவற்றைக் கண்டுபிடித்தனர். அவற்றால் மருத்துவத் துறை வளம் பெற்றது. அவர்கள் கண்டுபிடித்த மருந்துகளால் நோயாளிகள் பலர் நோய் நீங்கிப் பிழைத்தனர். அவர்களுடைய ஆராய்ச்சி பலருக்கு உயிரைக் கொடுத்தது. இக்கருத்தினை வெளிப்படுத்துங்கால் ஆசிரியர், "உயிர் கொடுப்பதன்றோ பெண்ணின் பெருமை!" என்கின்றார்.

4. போலண்ட் என்பது எங்குள்ளது? சென்ற நூற்றாண்டில் அதன் நிலை யாது?

போலண்ட் என்பது ஜர்மனிக்கும் ருஷியாவிற்கும் இடையேயுள்ள நாடாகும். சென்ற நூற்றாண்டில் இதனைச் சுற்றி நின்ற நாடுகள் இந்நாட்டைக் கூறு போட்டுக்கொண்டன. இதனால் அந்நாட்டு மக்கள் தம் தாய்மொழியைக்கூட வெளிப்படையாகக் கற்றுக்கொள்ள முடியாமல் துன்புற்றனர். அந்நாடு அடிமை நிலையில் இருந்து வாடியது.

5. கியூரி அம்மையாரின் குடிப்பெயர், இயற்பெயர், கணவனின் பெயர், மகளின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

கியூரி அம்மையாரின் குடிப்பெயர் ஸ்கோலாடாவாஸ்கி. அவரது இயற்பெயர் மேரி. அவருக்குக் கணவனர் பியரிக்கியூரி என்பவராவார். அம்மையாரின் மகள் ஐரீன் கியூரி.

பற்றுக பற்றற்றான் பற்றினை.

6. கியூரி அம்மையார் ஏன் பாரீஸுக்குச் சென்றார்? அப்பொழுது அவரது நிலை எவ்வாறிருந்தது?

கியூரி அம்மையார் பிறந்த நாடு போலண்ட் ஆகும். அந்நாடு அடிமை நிலையில் இருந்தது. அந்நாட்டு மக்கள் உயர்கல்வி கற்பதற்கேற்ற வாய்ப்புக்கள் ஆங்கு இல. அக்காலத்தில் பாரிஸ் மாநகரம் தான் பெண்களையும் வரவேற்று உயர்கல்வி கற்பதற்கு வாய்ப்பளித்தது. அதனால் கியூரி அம்மையார் பாரிஸ்மாநகரத்திற்கு கல்வி கற்கும் பொருட்டுச் சென்றார். அப்பொழுது அவர் வறுமை நிலையில் இருந்தார். கியூரி அம்மையாரின் தமக்கையார் ஆங்கு இருந்தார். அவரது உதவியும் கிடைக்கும் என்ற எண்ணமும் கியூரி அம்மையாருக்கு இருந்தது.

7. "கால் பணத்தில் கலியாணம்; அதில் ஒரு பாண வேடிக்கை" — இப்பழமொழி எங்கு எதன்பொருட்டு எடுத்தாளப்பட்டது? விளக்குக.

கியூரி அம்மையார் வறுமை நிலையில் பாரிஸ்மாநகருக்குக் கல்வி கற்கும்பொருட்டுச் சென்றார். அந்நகரில் மிகச் சிறிய தொகையில் அவர் வாழவேண்டியிருந்தது. உண்டி, உடை, உறையுள், கல்வி ஆகியவற்றிற்குரிய செலவுகளையெல்லாம் அச்சிறு தொகைக்குள் செய்யவேண்டியிருந்தன. இந்நிலையை விளக்க ஆசிரியர், "கால் பணத்தில் கலியாணம்; அதில் ஒரு பாண வேடிக்கை" என்னும் பழமொழியை எடுத்தாண்டுள்ளார்.

8. கியூரி அம்மையாரின் முதலாசிரியர் யார்? அவரிடம் அம்மையார் எதனைக் கற்றார்?

லிப்மன் என்பவர் கியூரி அம்மையாரின் முதலாசிரியர் ஆவார். அவர் நிறப் புகைப்படம் (Colour Photography) பிடிப்பதில் வல்லவர். செய்க் காட்சிக் கருவிகளை அமைக்கும் வித்தையை அம்மையார் அவ்வாசிரியரிடமிருந்து கற்றுக்கொண்டார்.

9. கியூரி அம்மையார் யாரை மணந்தார்? அஃது எவ்வாறு வாய்த்தது?

கியூரி அம்மையார் பாரிஸ்மாநகரில் லிப்மன் என்னும் ஆசிரியரிடம் விஞ்ஞான உண்மைகளைக் கற்றார். அவ்வாசிரியரிடம் பியரிக் கியூரி என்பவரும் மாணவராக இருந்தார். எனவே கியூரி அம்மையாரும், பியரிக் கியூரியும் சேர்ந்தே ஆராய்ச்சி நடத்தவேண்டி நேரிட்டது. அவ்வாறு ஆராய்ச்சி செய்யுங்கால், அவர்களுடைய மனம் ஒன்றுபட்டது அதனால் அவர்கள் 1895-ல் திருமணம் செய்து கொண்டனர்.

10. பாரிஸ்மாநகரில் கல்வி கற்குங்கால் கியூரி அம்மையார் அடைந்த துன்பங்களைச் சுருக்கி வரைக.

பாரிஸ்மாநகரில் கல்வி கற்குங்கால் கியூரி அம்மையார் மிகவும் வறிய நிலையில் இருந்தார். அவர் பியரிக் கியூரி என்பவரை

மணந்த பிறகும் அவரது வறுமை நிலை அகலவில்லை. அந்நிலையில் அவருக்குப் பெண் குழந்தையொன்று பிறந்தது வறிய நிலையில் ஆராய்ச்சி செய்வது பெருந் தொல்லையாக இருந்தது. அவர் ஆராய்ச்சி செய்து வந்த இடமோ மிகப் பழைய இடம். அதனால் வெயிற் காலத்தில் வெப்பத்தாலும், குளிர் காலத்தில் மிகக் குளிராலும் அவர் துன்புறுமாறு நேரிட்டது. அவர் ஆராய்ச்சிசெய்து வந்த பொருளோ உடலைத் தின்று அரிக்கும் தன்மையைக் கொண்டது. ஒருமுறை கதிர் வீச்சின் கொடுமையால் அவரது கை சுடப்பட்டது. இவ்வாறு கியூரி அம்மையார் கல்வி கற்குங்கால் பலவகைப்பட்ட துன்பங்களை அடைந்தார்.

11. பாக்கரல் என்பவர் எதனைக் கண்டுபிடித்தார் ?

பாக்கரல் என்பவர், யுரேனியம் தானே கதிர் வீசி நிற்கும் என்னும் உண்மையைக் கண்டுபிடித்தார்.

12. கியூரி அம்மையாரின் முதல் ஆராய்ச்சி யாது ? அதன் பயன் என்ன ?

பாக்கரால் என்பவர், யுரேனியம் தானே கதிர் வீசி நிற்கும் என்னும் உண்மையைக் கண்டுபிடித்தார். அதனைப் பின்பற்றியே கியூரி அம்மையார் தம் முதல் ஆராய்ச்சியைத் தொடங்கினார். யுரேனியத்தைப்போல் தானே கதிர் வீசி நிற்கும் பொருள் வேறு உண்டா என்று ஆராய்ந்ததே கியூரி அம்மையாரின் முதல் ஆராய்ச்சி ஆகும். அவ்வாறு ஆராய்ச்சி செய்ததன் பயனாக, அவர், 'தோரியம்' என்பது யுரேனியத்தைப்போலக் கதிர் வீசி நிற்கும் என்னும் உண்மையை உணர்ந்து வெளியிட்டார்.

13. கியூரி அம்மையார் பிச்சுக்கட்டியில் செய்த ஆராய்ச்சியினால் கண்டுபிடித்த உண்மை யாது ?

பிச்சுக் கட்டியில் இருந்து கண்ணாடிக்காக யுரேனியத்தைப் பிரித்தெடுப்பது வழக்கம். அவ்வாறு பிரித்தெடுத்த பிறகு, எஞ்சி நிற்கும் பொருளில், யுரேனியத்தில் காணப்படும் கதிர் வீச்சினைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான கதிர் வீச்சு இயக்கம் விளங்கும் என்பது கியூரி அம்மையார் கண்டுபிடித்த உண்மை ஆகும்.

14. "என்ன எமவேலை இது!" — இடஞ்சுட்டி விளக்கம் தருக.

கியூரி அம்மையார் பிச்சுக் கட்டியைக் காய்ச்சிப் பொருள்களைப் பிரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஏழ்மை நிலையில் இருந்தாராதலால் அவருக்குப் பிச்சுக்கட்டியைப் பெறுவதும் அரிதாக இருந்தது. அப்பொழுது ஆஸ்டிரிய அரசாங்கத்தார் அவருக்கு ஒரு டன் பிச்சுக் கட்டியைக் கொடுத்து உதவினர். அதனை உருக்கிக் காய்ச்சி, அதில் உள்ள பல பொருள்களை வலிந்து பிரிக்கும் முயற்சியில் கியூரி அம்மை

யார் ஈடுபட்டார். அப்பொழுது அவர் கடுமையாகப் பாடுபடவேண்டி யிருந்தது. அந்நிலையை விளக்க இக்கட்டுரையின் ஆசிரியர், "என்ன எமவேலை இது!" என்கின்றார்.

15. 'போலோனியம்' என்பது யாது? அதற்கு அப்பெயர் வைக்கப் பெற்றமைக்குக் காரணம் யாது?

பிச்சுக் கட்டியை உருக்கிக் காய்ச்சி, அதில் உள்ள பல பொருள்களை வலிந்து பிரித்தார் கியூரி அம்மையார். பலவற்றைப் பிரித்த பிறகு அதன்கண் பேரியம் சல்பேட்போன்ற பொருள் எஞ்சி நின்றது. பின்பு அவர் அப்பொருளிலிருந்து பேரியத்தையும் பிரித்தார். அவ்வாறு பிரித்தபிறகு எஞ்சி நின்ற பொருளுக்கு அம்மையார் 'போலோனியம்' என்று பெயரிட்டார். அம்மையார் தாம் பிறந்த நாடாகிய போலண்டின் நினைவாகவே அப்பொருளுக்கு, 'போலோனியம்' என்று பெயரிட்டார்.

16. "பாவம்! இது நிலைத்திருக்கின்ற பொருள் அன்று" — இடஞ்சுட்டி விளக்கம் தருக.

(முன் வினாவிற்குரிய விடையை ஈண்டு எழுதிக்கொள்க.) போலோனியத்திலிருந்து ரேடியத்தைப் பிறகு அம்மையார் பிரித்தார். அதனால் போலோனியம் என்னும் பொருளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. ஆதலால்தான் ஆசிரியர் அதனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, "பாவம்! இது நிலைத்திருக்கின்ற பொருள் அன்று" என்று கூறினார்.

17. ரேடியம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?

ஒரு டன் பிச்சுக் கட்டியை உருக்கிக் காய்ச்சி, அதில் உள்ள பல பொருள்களை வலிந்து பிரித்தார் கியூரி அம்மையார். அப்பொழுது பேரியம் சல்பேட்போன்ற பொருள் எஞ்சி நின்றது. பின்பு அம்மையார் அதிலிருந்து பேரியத்தைப் பிரித்தார். பேரியம் பிரிக்கப்பட்ட பிறகு ஆண்டு, 'போலோனியம்' என்னும் பொருள் எஞ்சி நின்றது. அதனினும் ஒளியுடைய பொருள் ஒன்று உண்டு என்று அம்மையார் ஊகித்தார். எனவே அவர் ஒரு டன் பிச்சுக் கட்டியோடு, ஐந்து டன் வேதிப் பொருள்களைக் கலந்து, கரைத்துக் காய்ச்சிப் பிரிக்கலானார். இவ்வாறு நான்கு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். முடிவில் ஆறு அரிசி எடையுள்ள பொருள் எஞ்சி நின்றது. 225 அணு எடை கொண்டிருந்த அப்பொருளே ரேடியம் ஆகும்.

18. "மின்மினிபோல் மின்னும் இந்த மாயப் பிள்ளையின்மேல் அம்மையாருக்கு எழுந்த தாய்மை அன்பினை என்ன என்னென்பது?" இடஞ்சுட்டி விளக்கம் தருக.

(முன் வினாவிற்குரிய விடையை ஈண்டு எழுதிக்கொள்க.) ரேடியத்தினைக் கண்டவுடன் அம்மையார் மன மகிழ்ச்சி கொண்டு, அன்பு

குழைய அதன் அருகில் அமர்ந்தார். அந்நிலைப்பற்றிக் குறிப்பிடுங்கால் இக்கட்டுரையின் ஆசிரியர், "மின்மினிபோல் மின்னும் இந்த மாயப் பிள்ளையின்மேல் அம்மையாருக்கு எழுந்த தாய்மை அன்பினை என்னென்பது!" என்று கூறியுள்ளார்.

19. ரேடியத்தின் இயல்பினையும், பயனையும் விளக்குக.

யுரேனியத்தைவிட ரேடியம் ஐந்து லட்சம் மடங்கு ஒளியுடையது. தன்னில்தானே சூடுகொண்டு அது கொதிக்கும். பார்வைக்கு அது சோற்றுப்பைப்போல் காணப்படும். அதிலிருந்து வெளிப்படும் ஒளி எயத்தினையும் ஊடுருவிச் சென்று படம் பிடிக்கவல்லது. அதனைச் சுற்றியுள்ள பொருள்கள் யாவும் சூட்டையும், ஒளியையும் பெறும். காற்றில் கலந்துள்ள அணுக்களை அது சிதைக்கும். நோய்க் கிருமிகளைக் கொல்லும் தன்மை அதன் ஒளிக்கு உண்டு. அப்பொருள் நோய்கள் பலவற்றைப் போக்குவதற்குப் பேருதவி செய்கின்றது.

20. "விஞ்ஞான சந்நியாசம்" என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? அல்லது கியூரி அம்மையாரின் தன்னலமற்ற தன்மைக்குச் சான்று காட்டுக.

கியூரி அம்மையார் ரேடியத்தினைக் கண்டுபிடித்தவுடன், அதனைக் கண்டுபிடிக்கும் முறையைக் கூறினால் கோடிக்கணக்கில் பணம் தருவதாகவும், அதனைப் பிறர்க்கு அறிவிக்காமல் தமக்கே அறிவிக்கும்படியும் பலர் கூறினர். ஆனால் அம்மையார் தம் ஆராய்ச்சியின் பயனை விலைக்கு விற்க விரும்பினாரல்லர். அதுமட்டுமோ? அம்முறையை எல்லோருக்கும் வெளிப்படுத்தினார். அமெரிக்கா கொடுத்த ரேடியத்தைப் பாரிஸிலுள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கும், இரண்டாம் முறை பெற்றதைத் தம் தாய் நாடாகிய போலண்டில் எழுந்த ஆராய்ச்சி நிலையத்திற்கும் அவர் நன்கொடையாகக் கொடுத்தார். இதிலிருந்து அம்மையாரின் தன்னலமற்ற தன்மை வெளிப்படுகின்றது. இதனையே ஆசிரியர் "விஞ்ஞான சந்நியாசம்" என்று குறிப்பிடுகின்றார்.

21. கியூரி அம்மையார் செய்த தொண்டினையும், அவரை உலகம் போற்றிய பான்மையையும் வரைக.

(முன் வினாவிற்குரிய விடையை ஈண்டு எழுதிக்கொள்க.) முதல் உலகப் பெரும் போரில் காயம்பட்ட வீரர்க்கு ரேடியத்தைக்கொண்டு மருத்துவம் செய்ய அம்மையார் பெரும்பாடுபட்டார். இறக்கும்வரையில் அவர் ஆராய்ச்சி செய்தார். அவரது விஞ்ஞான அறிவை உலகம் பெரிதும் பாராட்டியது. சிறந்த அறிஞர்கட்குக் கொடுக்கப்பெறும் நோபெல் பரிசு அவருக்கு இருமுறை கொடுக்கப்பெற்றது.

22. 'நோபெல் பரிசு' என்பது யாது?

ஐரோப்பாவில் வாழ்ந்த 'ஆல்பிரட் நோபெல்' என்னும் பெரியாரால் அமைக்கப்பட்ட பரிசுக்கு 'நோபெல் பரிசு' என்று பெயர்.

ஊழின் பெருவலி யாவுள.

இலக்கியம், பௌதிகம், இரசாயனம், வைத்தியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளில் சிறந்த தொண்டாற்றியவர்கட்கு ஆண்டு தோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

7. இன்னும் ஓர் ஐம்பது ஆண்டில்!

1. விஞ்ஞான முறைகள் அல்ல என்று ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

கிரகங்களின் நிலைகளையும், சலனங்களையும் கொண்டு சோதிடர்கள் நாட்டின் எதிர்காலத்தைப்பற்றிக் கூறுகிறார்கள். தீர்க்கதரிசிகளான கவிகள் வருங்காலத்தைப்பற்றிக் கற்பனையாகப் பலவற்றைக் கூறியுள்ளனர். இவை விஞ்ஞான முறைகள் அல்ல என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

2. விஞ்ஞானம் எத்தகையது?

விஞ்ஞானம் கனவை நனவாகப் பரவியது. ஆதாரங்களைக் கொண்டே, ஒரு பொருளைப்பற்றி அஃது அறிய முயலும். அறிவு காட்டும் வழியில், தூய்மையும் சாந்தமும் நிரம்பிய அகன்ற மனநிலையோடு, மனக்கண்ணால் கண்ட இலட்சியத்தைக் குறித்தே விஞ்ஞானம் முன்னேறிச் செல்லும்.

3. கற்பனைகள் என்றும், பூமியில் அஸ்திவாரம் இல்லாத ஆகாயக் கோட்டைகள் என்றும் ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

அட்சய பாத்திரமும், அமரர்களாக வாழும் வாழ்க்கையும், அல்லாவின் விளக்கும், யோகிரமும், இச்சா கம்பளமும் கற்பனைகள் என்றும், பூமியில் அஸ்திவாரம் இல்லாத ஆகாயக் கோட்டைகள் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

4. நாம் எவ்வாறு வாழ விரும்புகின்றோம்?

பொன்னின் ஒளியும், இரும்பின் வலிமையும், பஞ்சின் மென்மையும் ஒருங்கே பெற்ற பொருள்களை நாம் தேடுகின்றோம். கவலையும், நோயும், வறுமையும் இன்றி, இயற்கைக் கொடுமைகளுக்கு அஞ்சாமல் வாழ நாம் விரும்புகின்றோம். பிற உலகங்கட்குச் செல்லவும், பருவங்களை ஏவல் கொள்ளவும் நம் மனம் விரும்புகின்றது.

5. தற்காலத்தில் மக்கள் யாது கூறி அஞ்சுகின்றனர்?

"பஞ்சதந்திரக் கதையில் இறந்த சிங்கத்துக்கு உயிர் கொடுத்தார் ஓர் அறிஞர்! அதுபோல, இக்காலத்தில் விஞ்ஞானிகள் அணுவாகிய பிரபஞ்சத்தில் அடைபட்டுக் கிடக்கும் அளவில்லாத சக்தியை விடுவித்து விட்டனர். எனவே இனி உலகம் அழிந்துவிடும். அறிவும் அறமும் ஒழிந்துவிடும்" என்று தற்காலத்தில் மக்கள் கூறி அஞ்சுகின்றனர்.

6. சுதந்திர மக்களை அழிக்கும் கொடுங்கோலர்களாக வாழ்ந்தவர்கள் என்று ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் யாவர்?

டேரியஸ், ஊணர்கள், செங்கிஸ்கான், நெப்போலியன், ஹிட்லர், முஸ்ஸோலினி முதலியோர் சுதந்திர மக்களை அழிக்கும் கொடுங்கோலர்களாக வாழ்ந்தவர்கள் என்று ஆசிரியரால் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

7. உலகத்துக்கும், மனித வர்க்கத்துக்கும் யாதொரு தீங்கும் வாராமல் இருக்க நாம் பின்பற்ற வேண்டிய கொள்கை யாது? விளக்குக.

உலகத்துக்கும், மனித வர்க்கத்துக்கும் யாதொரு தீங்கும் வாராமல் இருக்கும்பொருட்டு நாம், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். 'எதுவும் நமக்கு ஊராகும்; எல்லோரும் நமக்கு உறவினர்களே' என்பதே அதன் பொருளாகும்.

8. இன்று நாம் தாங்கித் திரியும் வேண்டாத உறுப்புக்கள் யாவை?

வால் எலும்பும், குடல் வாலும் போன்றவை இன்று நாம் தாங்கித் திரியும் வேண்டாத உறுப்புக்கள் ஆவன.

9. உணவுத் துறையில் நாம் செய்யக் கூடியவற்றைச் சுருக்கி எழுதுக.

சூரிய ஒளியின் துணையால் பசிய தாவரங்கள் ஸ்டார்ச்சு போன்ற பொருள்களை இயற்றுகின்றன. அதன் மர்மத்தை உணர்ந்து, அவ்வாறே நாமும் இயற்ற முயல வேண்டும். அவ்வாறு செய்தால் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் அகன்றுவிடும். நமக்கு வேண்டாத கழிவுப் பொருள்களிலிருந்து நமக்கும், கால்நடைகளுக்கும் தேவையான உணவினைப் பெற நாம் முயல வேண்டும். சிறந்த பொருள்களை அளிக்கும் தாவரங்களை நாம் வளர்க்க வேண்டும். போக்குவரவுச் சாதனங்கள் நன்கு அமைந்துள்ளனவாதலால் குளிர் நாட்டில் விளையும் பொருள்கள் வெப்ப நாட்டிற்கும், வெப்ப நாட்டில் விளையும் பொருள்கள் குளிர் நாட்டிற்கும் விரைவில் வந்து சேரும். தாவரங்களிலிருந்து தூய பானங்களைத் தயாரிக்கும் முறைகளையும் நாம் உணர வேண்டும். உணவுத் துறையில் இத்தகைய பலவற்றை நாம் செய்யலாம்.

10. விஞ்ஞான முன்னேற்றத்தால் ஆடைகளில் எத்தகைய வளர்ச்சி உண்டாகும்?

வெப்பம் மிக்க நாட்டில் வாழ்வோர் பருத்தி ஆடைகளையும் பட்டு ஆடைகளையும், குளிர் மிக்க நாட்டில் வாழ்வோர் ஆட்டு மயிராலும்,

ஒட்டக மயிராலும் செய்யப்பட்ட ஆடைகளையும், தோலாடைகளையும் உடுக்கின்றனர். இக்காலத்தில் ரேயல், நைலன் முதலிய செயற்கைப் பட்டு ஆடைகளும், பிளாஸ்டிக் ஆடைகளும் மிகவும் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. அவை வெப்பம், குளிர், தீ, காற்று முதலியவற்றிலிருந்து நம்மைக் காக்க உதவுகின்றன. அவற்றால் நாம் உலகில் உள்ள துணிப் பஞ்சத்தைப் போக்க முடியும்.

11. விஞ்ஞான முன்னேற்றத்தால் இருப்பிடங்கள் எத்தகைய மாறுதலை அடைந்துள்ளன ?

பழங்காலத்தில் மக்கள் குகைகளிலும், மரப் பொந்துகளிலும் மிருகங்களைப்போல் வாழ்ந்து வந்தனர். நாளடைவில் மக்கள் தாங்கள் வசிப்பதற்கு ஏற்ற வீடுகளை அமைத்துக்கொண்டனர். இக்காலத்தில் உறுதியும், மென்மையும் வாய்ந்த பல செயற்கைப் பொருள்களைக் கொண்டு இருப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன. வெயிலாலும், மழையாலும், குளிராலும், தீயாலும், காற்றாலும் அழிக்க முடியாத தன்மை வாய்ந்த பொருள்களால் இக்காலத்தில் வீடுகள் கட்டப்படுகின்றன. விஞ்ஞான முன்னேற்றத்தால் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள் எல்லோருக்கும் வேண்டிய உறைவிடங்களை அமைக்க முடியும்.

12. வருங்காலத்தில் போக்குவரவுச் சாதனங்களில் எத்தகைய மாறுபாடு உண்டாகலாம் ?

மணிக்கு எழுநூறு மைல் செல்லக் கூடிய ராக்கெட் விமானங்களைக் கண்டு தற்காலத்தில் நாம் வியப்படைகின்றோம். இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாக ராக்கெட் விமானம் மிகவும் சாதாரணமானதொரு சாதனமாகக் கருதப்படும். டெலிவிஷன் போன்ற கருவிகளால் நெடுந்தொலைவில் உள்ள நாடுகளுள் வாழும் மக்கள் ஒன்றாக இணைவர். தற்காலத்தில் ராக்கெட் விமானங்களில் ஏறிச் சந்திர மண்டலத்திற்கும் செல்வதற்கு முயல்கின்றனர். வருங்காலத்தில் சந்திர மண்டலத்திற்கு மட்டுமன்றி, அதற்கு அப்பால் உள்ள கிரகங்களுக்கும் இன்பப் பயணம் செல்ல வழியேற்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

13. பெரும் பயணங்களுக்கு வேண்டிய சக்தியை விஞ்ஞானிகள் எவ்வாறு உண்டாக்கக் கூடும் ?

தற்காலத்தில் விஞ்ஞானிகள் அணுவைத் தகர்த்துள்ளனர். இனி வருங்காலத்தில், அணுவிலிருந்து கிடைக்கும் சக்தி எல்லாத் துறைகளுக்கும் பயன்படுமாறு விஞ்ஞானிகள் செய்வர் என்று நாம் எதிர்பார்க்கலாம். தற்காலத்தில் மின்சாரம் பலவகைகளிற் பயன்படுவதுபோல வருங்காலத்தில் அணுவின் சக்தி பலவகைகளிற் பயன்படும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். வருங்காலத்தில், ‘அடாமிக் பைல்’ என்னும் அணு அடுக்கையும் விஞ்ஞானிகள் அமைக்கக் கூடும்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர்.

14. சூரியனின் கதிர்களை விஞ்ஞானிகள் வருங்காலத்தில் எவ்வாறு பயன்படுத்தக் கூடும்?

சூரியனின் கதிர்களை ஏவல் கொள்ளத் தற்காலத்தில் விஞ்ஞானிகள் முயல்கின்றனர். வருங்காலத்தில் விஞ்ஞானிகள் அம்முயற்சியில் வெற்றி பெறுதல் கூடும். அப்பொழுது சகாரா பாலைவனம் ஒரு பெரிய சக்தி நிலையம் ஆகலாம்.

15. தென்துருவப் பனிப் பாலைவனங்களை விஞ்ஞானிகள் எத்தகைய இடமாக மாற்றக் கூடும்?

தென்துருவப் பகுதியில் எப்பொழுதும் பெரும்புயல் வீசிக்கொண்டிருக்கின்றது. ஆங்குக் காற்றாடி ஆலைகளை அமைத்து, அவ்விடத்தை விஞ்ஞானிகள் சிறந்ததொரு சக்தி நிலையமாக மாற்றக் கூடும். சக்தியால் ஆண்டு மக்கள் வாழ்விற்கு வேண்டிய வெப்பத்தையும் அவர்கள் உண்டாக்கலாம். இவற்றால் அவ்விடத்தை விஞ்ஞானிகள் மக்கள் வாழ்வதற்கேற்ற இடமாக மாற்றுவர் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

16. தரை, கடல் ஆகியவற்றை விஞ்ஞானிகள் வருங்காலத்தில் எவ்வாறு பயன்படுத்தக் கூடும்?

தரையின் அடியில் வெப்பம் மிகுதியாக உள்ளது. வருங்காலத்தில் முப்பதினாயிரம் அடிவரையில் தோண்டி, ஆங்குள்ள வெப்பத்திலிருந்து நமக்குத் தேவையான சக்தி முழுவதையும் விஞ்ஞானிகள் வெளிப்படுத்தி நமக்கு உதவக் கூடும். அவ்வாறே கடலிலிருந்தும் நாம் எதிர்பார்க்க முடியாத அளவு சக்தியை விஞ்ஞானிகள் பெற்று உதவக் கூடும்.

17. விஞ்ஞானிகள் மருத்துவத் துறையை எவ்வாறு செம்மைப் படுத்தக் கூடும்?

இன்று உலக மக்களுட் பலர் மலேரியா, மஞ்சள் சுரம், உறக்க நோய், க்ஷயநோய் முதலிய நோய்களால் துன்புறுகின்றனர். அவற்றால் பலர் இறக்கவும் நேரிடுகின்றது. போக்குவரவுச் சாதனங்களின் மிகுதியால் நோய்கள் பல எளிதில் பரவவும் கூடும். அந்நோய்கள் உண்டாகாமலும், பரவாமலும் செய்வதற்கேற்ற மருந்துகளை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். வருங்காலத்தில் பெனிஸிலின், ஸ்ட்ரெப்டோமைஸின் முதலியவை மனித இனத்துக்குப் பெருந்துணை செய்யுமாறு விஞ்ஞானிகள் செய்வர் என்று திண்ணமாக எதிர்பார்க்கலாம்.

18. வருங்காலத்தில் விஞ்ஞானிகள் மக்கட் சமுதாயத்திற்கு எவ்வெவ்வழிகளில் துணை செய்யக் கூடும்?

உணவு, உடை, உறையுள் முதலிய துறைகளில் விஞ்ஞானிகள் பலவகை ஆராய்ச்சிகளைச் செய்து, வருங்காலத்தில் அவற்றைச் செம்மைப்படுத்துவர் என்று நாம் எதிர்பார்க்கலாம். அவற்றால் இன்று

நாட்டில் உள்ள உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், உறைவிடப் பற்றாக்குறை ஆகியவை நீங்கக்கூடும். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் போக்குவரவுச் சாதனங்கள் பல இன்னும் அமையக் கூடும். வருங்காலத்தில் ராக்கெட் விமானத்தில் ஏறி, சந்திர மண்டலத்திற்கும், ஏனைய கிரகங்களுக்கும் நாம் இன்பப் பயணம் செல்லலாம் என்று நாம் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. விஞ்ஞானிகள் அணு சக்தியையும், சூரியன், காற்று, தரை, கடல் முதலியவற்றிலிருந்து கிடைக்கக்கூடும் சக்தியையும் பெற்று, மக்கள் வாழ்க்கைக்கு அவற்றைப் பயன்படுத்துவர். விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் மருத்துவத் துறை செம்மையுறும் என்றும், உலகில் நோய்கள் அகலும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். மக்களின் மனத்தில் உள்ள பிணக்குகளும், வேறுபாடுகளும் நீங்கினால், விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் மக்கட் சமுதாயம் கற்பனை செய்யவும் முடியாத அளவு நன்மைகளைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

8. நாட்டுப்புறங்களின் கல்வி

1. ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டைச் சார்ந்த நாட்டுப்புறங்களைப் பொருத்தே அமையும் என்பது எங்ஙனம் பொருந்தும்?

ஒரு நாட்டில் நகரங்கள் அல்லாத பகுதியே மிகுதியாக இருக்கும். நகரங்களில் உள்ளோர்க்கு உணவு, உடை முதலிய பொருள்கள் நாட்டுப்புறங்களிலிருந்தே கிடைக்கின்றன. நாட்டுப்புற மக்களே அரசியலார்க்கு மிகுதியான வரியைக் கொடுத்து உதவுகின்றனர். எனவே ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டைச் சார்ந்த நாட்டுப்புறங்களைப் பொறுத்தே அமையும் என்று கூறுதல் பொருந்தும்.

2. நம் நாட்டின் பண்டைக் காலத்து நல்வாழ்விற்குரிய காரணமாக விளங்கியது எது?

நம் நாட்டின் பண்டைக்காலத்து நல்வாழ்விற்குரிய காரணமாக விளங்கியது நாட்டுப்புற ஊர்களில் நிலைபெற்ற கல்வி முறையேயாகும். பழங்காலத்துக் கல்விமுறை செம்மையாக இருந்தது. அதனால் நம் நாடு பண்டைக் காலத்தில் நல்வாழ்வை அடைந்திருந்தது.

3. ஒரு நாட்டில் கல்வி முறை எத்தகையதாக இருக்க வேண்டும்? விளக்கம் தருக.

கல்வி முறை நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகின்றது. இத்தகைய கல்வி முறைதான் சிறந்தது என்று நாம் எதனையும் துணிந்து முடிவாகக் கூற முடியாது. நாட்டு மக்களின் குடி வாழ்க்கைக்கு முற்றும் பொருந்திய கல்வியே நாட்டிற்கு வேண்டற்பாலது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றும், "எண்ணென்ப ஏனை எழுத்

தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்றும் பெரியவர்கள் கூறியவாறு எண்ணும் எழுத்தும் மக்களுக்குக் கண் எனத் தக்கன. இதனையே கம்பரும் 'பொருந்து கல்வி' என்கின்றார். எனவே இத்தகைய பொருந்து கல்வியே ஒரு நாட்டில் இருக்கவேண்டும்.

4. தொடக்கக் கல்வியின் முப்பிரிவுகள் யாவை?

படித்தல், எழுதல், கணக்குப் பார்த்தல் என்னும் மூன்றும் தொடக்கக் கல்வியின் முப்பிரிவுகள் ஆவன.

5. நாட்டுப்புற மக்கள் எம்முறையில் எத்தகைய கல்வியைக் கற்க வேண்டியுள்ளது?

நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் தொடக்க நிலைக் கல்வியையே பெற முடிகின்றது. நாட்டுப்புறங்களில் தொடக்க நிலைப் பள்ளிகளே உள்ளனவன்றோ? நாட்டுப்புற மக்கள் அப்பள்ளியில் நான்கைந்து ஆண்டுகளே பயிலுதற்கு உரியர். எனவே அவர்கள் நான்கைந்து ஆண்டுகளுக்குள், தொடக்கநிலைப் பள்ளியிற் பயிலுங்கால் தங்கள் குடி வாழ்க்கைக்கு இன்றியமையாத பலவற்றை அறிய வேண்டியுள்ளன.

6. பழங்காலத்தில் எழுத்துக்கள் எவ்வாறு கற்பிக்கப்பட்டன? இக்காலத்தில் எவ்வாறு கற்பிக்கப்படுகின்றன?

பழங்காலத்தில் எழுத்துக்கள் அகரம் முதலாகக் கற்பிக்கப் பட்டன. பழந்தமிழ்ப் புலவர்கள் கண்டு ஆராய்ந்தே எழுத்துக்களை அகரம் முதலாக அமைத்தனர். தற்காலத்திலோ சிலர் எழுத்துக் களின் முறையை மாற்றிக் கற்பிக்கின்றனர். டகரம், லகரம் முதலான எழுத்துக்களை முதலிற் கொண்ட பாடல்களை முதற்கண் கற்பிக்கின் றனர். அம்முறையை அவர்கள் 'காலச் சுருக்கமுள்ள முறை' என் கின்றனர்.

7. பழங்காலத்தில் எழுத்துக்கள் கற்பிக்கப்பெற்ற முறைக்கும், தற்காலத்தில் கற்பிக்கப்படுகின்ற முறைக்கும் உள்ள வேறுபாடு யாது? தற்காலத்து முறையில் எத்தகைய குற்றம் உள்ளது என்று ஆசிரியர் கூறுகின்றார்?

(முன் வினாவின் விடையினைக் கண்டு எழுதிக் கொள்க.)

இத்தகைய புது முறையினால் மாணவர்கள் எழுத்துக்களை வரிசை யாக உணர்ந்தார்களல்லர். அகராதி பார்க்க மாணவர்கட்குத் தெரிவ தில்லை. டகரம் முதலிய 'நேர்க்கோட்டெழுத்துக்களாதலின் அவை முதற்கண் கற்பிக்கப்படுகின்றன என்பர் சிலர். ஆனால் சுழிசுழியாக வரைவதிலேயே முதற்கண் மாணவர்க்கு மனம் செல்லும். இக்கார ணம்பற்றி, பழங்காலத்து முறையே நலமானது என்று ஆசிரியர் கூறுகின்றார்.

களர் அனையர் கல்லாதவர்.

8. இக்காலத்தில் நாட்டுப்புற மாணவர்கட்கு அமைந்துள்ள பாடங்களில் எத்தகைய குற்றங்கள் உள்ளன என்று ஆசிரியர் கூறுகின்றார்? அவரது கருத்து யாது?

'இக்காலத்தில் நாட்டுப்புற மாணவர்கட்குப் பிற நாட்டு மக்களின் வரலாறுகளும், செய்திகளும் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்கள் தற்காலத்தில் மாண வர்கட்குக் கற்பிக்கப்படுவதில்லை. அபிநயப் பாட்டுக்கள் மாணவர்க் குக் கற்பிக்கப்படுகின்றன. இவை தற்காலத்துப் பாடங்களில் உள்ள குற்றங்கள் ஆவன' என்கின்றார் ஆசிரியர். நீதி நூல்களை மாணவர்க் குக் கற்பிக்க வேண்டும் என்றும், மாணவர்கள் வாழும் ஊரின் வர லாற்றையும், தங்களது ஊரைப்பற்றிய செய்திகளையும் அவர்கட்குக் கற்பிக்க வேண்டும் என்றும் ஆசிரியர் கருதுகின்றார்.

9. அபிநயப் பாட்டுக்களைப்பற்றி ஆசிரியரின் கருத்து யாது?

தற்காலத்தில் நீதி நூல்களை விலக்கி, மாணவர்கட்கு அபிநயப் பாட்டுக்கள் கற்பிக்கப்படுகின்றன என்றும், நீதி நூல்கள் அபிநயப் பாட்டுக்களைக் காட்டிலும் மிக உயர்ந்தன என்றும், எனவே அவற் றையே மாணவர்கட்குக் கற்பிக்க வேண்டும் என்றும் ஆசிரியர் கருது கின்றார்.

10. நாட்டுப்புற மாணவர்கட்கு எத்தகைய கணக்கினைக் கற் பிக்க வேண்டும்?

நாட்டுப்புற மாணவர்கட்குப் பின்னம், உத்தமப் பொது மடங்கு முதலிய கணக்குகள் தேவைப்படா. அவர்கட்கு இலக்கம், நெல் இலக்கம், கீழ்வாய் இலக்கம், குழிமாற்று, சதுரம் முதலியவை கற்பிக் கப்படுதல் வேண்டும். எல்லாவற்றையும் மனக்கணக்குகளாகவே போடுதற்குரிய பயிற்சியை அவர்கட்கு அளித்தல் வேண்டும். அவர் கட்கு வேண்டியவை எளிய கணக்கு முறைகளேயாம்.

11. நாட்டுப்புற மாணவர்கள் பள்ளியில் உணர்ந்து கொள்ளு வதற்குரியவை யாவை?

நாட்டுப்புற மாணவர்கள் முதலாவதாகத் தம் ஊரைப்பற்றியும், ஆங்குள்ள நிலப் பகுதிகளைப்பற்றியும், அதன் அமைப்பையும் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அவற்றுடன் அவர்கள் நிலத்தை அளக்கும் முறையையும் உணர்தல் வேண்டும். இரண்டாவதாக அவர்கள் தம் ஊரில் உள்ள பயிரிடும் குடிகள், நிலக்கிழவர் ஆகியோ ரைப்பற்றியும், அரசியலார் பெறும் பல்வகை வரிகளைப்பற்றியும் அறிதல் வேண்டும். மூன்றாவதாக அவர்கள் பயிர்த்தொழிலின் ஒவ் வொரு படியையும் நடத்துதற்குரிய பருவங்களைப்பற்றியும், தானியங் களை மதிப்பிடவும் அறிதல் வேண்டும். நான்காவதாக அவர்கள் அஞ் சலைப் படிக்கவும், அஞ்சல் எழுதவும் உணர்தல் வேண்டும். மேலும்

அவர்கள் அறநெறி மன்றம், கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் ஒழுங்கு முறைகளையும் உணர்தல் வேண்டும். ஐந்தாவதாக அவர்கள் தம் பிற்கால வாழ்க்கைக்கு இன்றியமையாத நூற்றல், நெய்தல் போன்ற சிறு கைத்தொழில்களைப் பள்ளிகளிலேயே கற்றல் வேண்டும்.

12. நாட்டாண்மைக் கழகத்தார் முதற்கண் செய்யவேண்டுவது யாது? ஏன்?

நாட்டாண்மைக் கழகத்தார் நாட்டுப்புறங்களில் முதற்கண் கட்டாயக் கல்வியை நடைமுறையிற் கொண்டுவருதல் வேண்டும். இன்று நாட்டுப்புற மக்கள் கல்வி பயில வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. அவர்கள் கல்வியின் பெருமையினை உணர்ந்திலர். எனவே அவர்கள் கல்வியின் பயனை அடையும்பொருட்டு, கட்டாயக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டுவருவது நாட்டாண்மைக் கழகத்தாரின் முதற் கடமையாகும்.

13. நாட்டுப்புற மக்கள் கல்வியின் பயனை அடைய இன்றியமையாமல் செய்ய வேண்டுவன யாவை?

நாட்டுப்புற மக்கள் கல்வியின் பயனை அடைய முதற்கண் கட்டாயக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும். முதியோர் கல்வி நிலையங்கள் நாட்டுப்புறங்களில் இராப் பள்ளிக்கூடங்களாக அமைதல் வேண்டும். அவற்றின்கண் உலகச் செய்திகள், சமயப் பெரியோர்களின் வரலாறுகள், உடல்நல வழிகள், செல்வ வளர்ச்சி நெறிகள் முதலியவை பற்றிய சொற்பொழிவுகள் நடைபெறுதல் வேண்டும். மேலும் நூல் நிலையம், வானொலிப் பெட்டி முதலியவை நாட்டுப் புறங்களில் அமைதல் வேண்டும். இவற்றால் நாட்டுப்புற மக்கள் கல்வியின் பயனை அடையுமாறு செய்யலாம்.

14. தஞ்சை நாட்டாண்மைக் கழகம் நாட்டுப்புற மக்களுக்குக் கல்வி கற்பிக்கப் பின்பற்றியுள்ள புதிய முறை யாது?

தஞ்சை நாட்டாண்மைக் கழகம் நாட்டுப்புற மக்களுக்குக் கல்வி கற்பிக்கப் பல வழிகளில் முயல்கின்றது; முதிய மக்களின் மனத்தைக் கவரத் தக்கனவும், அவர்களது பொது அறிவை வளர்க்கத் தக்கனவும் ஆகிய சொற்பொழிவுகளை நாட்டுப் புறங்களில் நிகழ்த்துமாறு செய்கின்றது; அதற்குச் சாதனங்களாக ஒலிபரப்பும் கருவி, இயங்கும் நூல் நிலையம் முதலியவற்றைப் பயன்படுத்துகின்றது.

15. நாட்டின் உயர்நிலை வாழ்க்கை தொடங்கும் காலம் எது என்னலாம்?

நாட்டாண்மைக் கழகத்தாரும், அரசியலாரும் நாட்டுப்புற மக்களின் கல்வியிற் கருத்தைச் செலுத்தி, உலகத்தோடு நாட்டுப்புறங்களும் முன்னேறுமாறு செய்யுங்காலமே நாட்டின் உயர்நிலை வாழ்க்கை தொடங்கும் காலம் என்னலாம்.

நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

லிப்கோ

மாணவர் தமிழ் அகராதி

(சிறந்த அநுபந்தங்களுடன் கூடியது)

ஆசிரியர்:
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
உயர்திரு. T. A. ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்கள்

பொருளடக்கம்:

I. சுமார் 23,000 சொற்களுக்கு மேற்பட்ட அருஞ் சொற்களுக்குத் தெளிவான பொருள்.

II. பிற்சேர்க்கை: 1. ஓரெழுத்தொரு மொழிகள்; 2. தமிழ் இலக்கியங்களும், ஆசிரியர்களும்; 3. தொகை அகராதி; 4. நினைவுச் செய்யுட்கள்; 5. பொதுப் பிழைக் களைவு; 6. ஒலிக் குறிப்பகராதி; 7. தமிழ் இலக்கணச் சொற்களுக்கேற்ற ஆங்கிலச் சொற்கள்; 8. வழக்கில் உள்ள குறியீடுகள்; 9. புலவர் அகராதி.

★ 480 பக்கங்கள் ★ நேர்த்தியான அச்சு
★ விலை: ரூ. 2-13 ★ தபால் மூலம்: ரூ. 3-13

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17.

இலக்கணப் பகுதி

பாடத் திட்டம்

அரசியற் கல்வித் துறைத் தலைவரால் 27-1-1954 தேதியிட்ட போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில்வெளியிடப்பெற்றுள்ள இலக்கணப் பாடத் திட்டம்:

பகுதி I (பொதுப் பிரிவு)

படிவம் 6

I. எழுத்து:
   (1) எழுத்தின் இடப் பிறப்பு.
   (2) இன எழுத்துக்கள்.
   (3) மொழி முதல் இறுதி எழுத்துக்கள்.

II. சொல்:
   (1) இயற்சொல், திரிசொல்.
   (2) வடசொல், திசைச்சொல்.
   (3) பெயர்ச்சொல்.
      (i) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்.
      (ii) உருபு மயக்கம்.
   (4) வினைச்சொல்:
      (i) காலங் காட்டும் முறைகள்—இடைநிலை, பகுதி, விகுதி.
      (ii) தெரிநிலை, குறிப்பு வினைகள்.
      (iii) சிலவகை வினையெச்சங்களின் வாய்ப்பாடுகள்.

III. பொது:
   (1) செய்யுள் விகாரங்கள்.
   (2) சொல் முடிபு—பெயரும் வினையும் முடியும் முறை.

IV. புணர்ச்சி:
   (1) குற்றுகரப் புணர்ச்சி—(விரிவாக)—சிறப்பு விதிகள்.
   (2) தேன், அகம்: இவை புணரும் முறை.
   (3) ணகர னகர ஈறு, லகர ளகர ஈறு.
   (4) சாரியைகள்: அ, அத்து, அம், அன், இன், அற்று.
   (5) பல, சில: இவை புணரும் முறை.

V. யாப்பு:
(1) எதுகை மோனையின் பொது இலக்கணம்.
(2) அடிவகை.
(3) இசைப்பாட்டு வகை: கண்ணி, கும்மி, கீர்த்தனை.

VI. அணி:
(1) தன்மை நவிற்சி.
(2) உயர்வு நவிற்சி.
(3) தற்குறிப்பேற்றம்.

மொழிப்பயிற்சி

I. வாக்கியம் — பலவகைகள்.
II. வாக்கிய அமைப்பு — எழுவாய், பயனிலை, செயப்படு பொருள். எச்சங்கள் நிற்கும் முறை.
III. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்.
IV. பத்தியமைப்பு (முன்னிலும் விரிவாக).
V. நடை (விரிவாக).
VI. வழூஉச் சொற்களும் திருத்தமும் — (முன்னிலும் விரிவாக.)
VII. விலக்குதற்குரிய இழிவழக்குகள் (slang usage).
VIII. திருத்தக் குறிப்புப் பயிற்சிகள்.
IX. மரபு.
X. உவமைகளும், பழமொழிகளும் வைத்தெழுதுதல்.
XI. உவமை உருவகமாற்றம்.
XII. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும் (முன்னிலும் விரிவு).
XIII. இடம்விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்.
XIV. சொற்களை இடம்விட்டு எழுதுதலும், சேர்த்து எழுதுதலும்.

மேற்கண்ட பாடத் திட்டத்தை ஒட்டிச் சுருக்கமான குறிப்புக்கள் கீழே தரப்பெற்றுள்ளன. உங்களுடைய பாடப் பகுதியில் காணப்படும் எடுத்துக்காட்டுகள் இயன்றவரையில் தரப்பெற்றுள்ளன. ஈண்டு எழுதப் பெற்றுள்ள இலக்கணக் குறிப்புக்களை மனத்திற்கொண்டால், செய்யுட் களிலும், உரைநடைப் பகுதிகளிலும் மறைமுகமாகக் கேட்கப்படும் இலக் கணக் குறிப்புக்கள்பற்றிய வினுக்களுக்கு விடையெழுதுதல் இயலும்.

கலம் கலந்தால் குலம் கலக்கும்.

I. எழுத்து

(1) எழுத்தின் இடப் பிறப்பு

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையின மெய்யெழுத்துக்களும் கழுத்தை இடமாகக்கொண்டு பிறக்கும்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களும் மூக்கை இடமாகக்கொண்டு பிறக்கும்.

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்யெழுத்துக்களும் மார்பை இடமாகக்கொண்டு பிறக்கும்.

(2) இன எழுத்துக்கள்

பிறப்பிடம், தொழில், மாத்திரை, பொருள், உருவம் ஆகியவற்றுள் ஒன்றோ பலவோ ஒத்துவரும் எழுத்துக்கள் இனப்படுத்தப் பெறும்.

அ ஆ ; இ ஈ ; உ ஊ ; எ ஏ ; ஐ இ ; ஒ ஓ ; ஔ உ : இவ்வாறு உயிரெழுத்துக்கள் இனப்பட்டன.

க் ங் ; ச் ஞ் ; ட் ண் ; த் ந் ; ப் ம் ; ற் ன் : இவ்வாறு வல்லின எழுத்துக்களுக்கு மெல்லின எழுத்துக்கள் இனமாயின.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் தனியினமாகும்.

(3) மொழி முதல் இறுதி எழுத்துக்கள்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களும், இறுதியில் வரும் எழுத்துக்களும் இன்ன இன்ன என்று இலக்கண நூல்கள் விதித்துள்ளன. அவையன்றி, ஏனைய எழுத்துக்களை முதலிலோ, ஈற்றிலோ கொண்டுவரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் :

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அன்பு, ஆடு, இலை, ஈகை, உடல், ஊர், எருது, ஏர், ஐயம், ஒன்று, ஓடு, ஔவை.

க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிர்களுடன் கூடிநின்று மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துக்களுடன் கூடிநின்று வகர மெய் மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் கூடிநின்று யகர மெய் மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரெழுத்துக்களுடன் கூடி நின்று ஞகரம் மொழிக்கு முதலில் வரும்.

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களுக்கும், எ, யா என்னும் வினாவெழுத்துக்களுக்கும் பின், அகரத்தைச் சேர்ந்தே ஙகரம் மொழிக்கு முதலில் வரும்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாவன:

உயிர்	—	12
க், ச், த், ந், ப், ம் என்பன 12 உயிருடன் கூடிவருதலால் 6 × 12	—	72
வகரம் எட்டு உயிருடன் வருதலால்	—	8
யகரம் ஆறு உயிருடன் வருதலால்	—	6
ஞகரம் நான்கு உயிருடன் வருதலால்	—	4
ஙகரம் ஒரே உயிருடன் வருதலால்	—	1
ஆக, மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்	—	103

மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்:

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்துநான்கு எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் வரும்.

(உ-ம்) பல, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, தே, தை, நொ, போ, வௌ: உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு ஈற்றில் வந்தன.

உரிஞ், கண், வெரிந், மரம், பொன், காய், வேர், தோல், தெவ், வாழ், வாள்: மெய்யெழுத்துக்கள் பதினொன்றும் மொழிக்கு ஈற்றில் வந்தன.

விறகு: குற்றியலுகரம் ஈற்றில் வந்தது.

மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்களாவன :

உயிர்	—	12
ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்னும் மெய்யெழுத்துக்கள்	—	11
குற்றியலுகரம்	—	1
ஆக, மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்	—	24

மொழிக்கு முதலில் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ள 103 எழுத்துக்களும், ஈற்றில் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ள 24 எழுத்துக்களும் அல்லாத எழுத்துக்களை முதலிலோ, ஈற்றிலோ கொண்டுவரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல என்று அறிதல் வேண்டும்.

II. சொல்

(1) இயற்சொல், திரிசொல்

இயற்சொல் : செந்தமிழ் நிலத்து மொழியாகி, கற்றோர்க்கும் மற்றோர்க்கும் ஒப்பத் தம் பொருளை எளிதில் விளக்கும் தன்மையை உடைய உலக வழக்குச்சொல் இயற்சொல்லாகும்.

(உ-ம்.) மண், பொன், இருந்தான், உண்டான், அழகு, அன்பு என்பன.

திரிசொல் : ஒரு பொருளைக் கருதிய பல சொற்களாகியும், பல பொருள்களைக் கருதிய ஒரு சொல்லாகியும் அரிதாகக் கற்றோர் அறியும் பொருளைக் கொண்டுவருவன திரிசொற்கள் ஆவன.

(உ-ம்.) கிள்ளை, சுகம், தத்தை என்பன கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்த் திரிசொற்கள். 'வாரணம்' என்னும் சொல் யானை, கோழி, சங்கு முதலாகிய பல பொருள்களைக் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

(2) வடசொல், திசைச்சொல்

வடசொல் : ஆரியத்திற்கும், தமிழிற்கும் உரிய பொது எழுத்துக்களாலும், ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துக்களாலும், அவ்விருவகை எழுத்துக்களாலும் இயைந்து, வடமொழியிலிருந்து வந்து செந்தமிழ் நிலத்தே வழங்கும் சொற்கள் வடசொற்கள் ஆவன.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?

(உ - ம்.) கமலம், காரணம், காரியம் : *பொதுவெழுத்தால் இயைந்த வடசொற்கள்.*

போகி, சுத்தி : *சிறப்பெழுத்தால் இயைந்த வடசொற்கள்.*

சலம், அரி : *இருவகை எழுத்துக்களாலும் இயைந்த வட சொற்கள்.*

(3) பெயர்ச்சொல்

(i) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்.

தான், தாம், எல்லாம் என்னும் பெயர்கள் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகட்கும் பொதுவாய் வரும்.

(உ - ம்) அவரெல்லாம் (*உயர்திணை*)

அவையெல்லாம் (*அஃறிணை*)

அவர்தாம் (*உயர்திணை*)

அவைதாம் (*அஃறிணை*)

அவன்தான் (*உயர்திணை ஆண்பால்*)

அவள்தான் (*உயர்திணைப் பெண்பால்*)

அதுதான் (*அஃறிணை ஒன்றன்பால்*)

(ii) உருபு மயக்கம்

பெயர்ச்சொல் வேற்றுமையுருபை ஏற்று நிற்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஒரு பெயர்ச்சொல்லைச் சார்ந்து நின்ற உருபு வேறொரு வேற்றுமைப் பொருளைத் தருவதும் உண்டு. அவ்வாறு தருவது உருபு மயக்கம் *எனப்படும். இதனையே* வேற்றுமை மயக்கம் *என்றும் கூறுவதுண்டு.*

எடுத்துக்காட்டாக, உங்களுடைய திருக்குறட் பகுதியில், 'வாய்மை' என்னும் அதிகாரத்தில் "உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்னுங் குறளைப் பார்ப்போம். ஈண்டு, 'உள்ளத்தால்' என்பதன்கண் 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமையுருபு அமைந்துள்ளது. ஆனால், 'உள்ளத்தால்' என்பதற்கு, 'உள்ளத்திற்கு ஏற்ப' என்று நான்காம் வேற்றுமையாக விரித்துப் பொருள் கொள்கின்றோம். ஈண்டு மூன்றும் வேற்றுமையுருபு, நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. எனவே, இஃது உருபு மயக்கம் ஆகும்.

(4) வினைச்சொல்

(i) காலங் காட்டும் முறைகள்—இடைநிலை, பகுதி, விகுதி

இடைநிலை : த், ட், ற், இன் என்னும் இடைநிலைகள் இறந்த காலத்தைக் காட்டும்.

(உ - ம்.) வந்தான் : 'ந்' இடைநிலை இறந்த காலம் காட்டியது.
கண்டான் : 'ட்' ,, ,, ,,
சென்றான் : 'ற்' ,, ,, ,,
தூங்கினான் : 'இன்' ,, ,, ,,

ஆநின்று, கின்று, கிறு என்னும் இடைநிலைகள் நிகழ் காலத்தைக் காட்டும.

(உ - ம்.) வாராநின்றான் : 'ஆநின்று' என்னும் இடைநிலை நிகழ்காலம் காட்டியது.
வருகின்றான் : 'கின்று' ,, ,,
வருகிறான் : 'கிறு' ,, ,,

ப், வ் என்னும் இடைநிலைகள் எதிர்காலத்தைக் காட்டும்.

(உ - ம்.) உண்பான் : 'ப்' இடைநிலை எதிர் காலம் காட்டியது.
செல்வான் : 'வ்' ,, ,, ,,

பகுதி: சிலவிடங்களில் பகுதிகள் காலங் காட்டுதல் உண்டு. கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யிற்றுக் குறிலிணைப் பகுதிகள் இறந்த காலம் காட்டும். அவ்வாறு காலங் காட்டுங்கால் பகுதியில் உள்ள ஒற்று இரட்டிக்கும்.

(உ - ம்.) 'நக்கான்' என்னுஞ் சொல்லில், 'நகு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று, இறந்த காலங் காட்டியது காண்க.

'தொட்டான்' என்னுஞ் சொல்லில், 'தொடு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று இறந்த காலங் காட்டியது காண்க.

'பெற்றான்' என்னுஞ் சொல்லில், 'பெறு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று, இறந்த காலங் காட்டியது காண்க.

விகுதி: சில சொற்களில் விகுதிகள் காலம் காட்டும்.

று, றும் என்னும் விகுதிகள் இறந்த காலமும், எதிர் காலமும் காட்டும்.

(உ - ம்.) சென்று, சென்றும் (சென்றேன்), (சென்றேம்) } இறந்த காலம்.
சேறு, சேறும் (செல்வேன்), (செல்வேம்) } எதிர்காலம்.

து, தும் என்னும் விகுதிகள் இறந்த காலமும், எதிர் காலமும் காட்டும்.

(உ - ம்.) வந்து, வந்தும் (வந்தேன்), (வந்தேம்) } இறந்த காலம்.

வருது, வருதும் (வருவேன்), (வருவேம்)	எதிர் காலம்.

இவ்வாறே விகுதிகள் காலங்காட்டும் முறைகளை ஆராய்ந்தறிக.

(ii) தெரிநிலை, குறிப்பு வினைகள்

ஒன்றன் தொழிலை உணர்த்திக் காலங்காட்டி வரும் சொல் வினைச்சொல் எனப்படும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என வினைச் சொல் மூன்று வகைப்படும்.

தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினைச்சொற்களை தெரிநிலை வினைச்சொற்கள் எனப்படும்.

(உ-ம்.) வந்தான், வந்த, வந்து: தொழிலையும், காலத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன.

தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவியாமல் குறிப்பாகத் தெரிவிக்கும் வினைச் சொற்கள் குறிப்பு வினைச்சொற்கள் எனப்படும்.

(உ-ம்.) பொன்னன்: இது 'பொன்னையுடையான்' என உடைமைத் தொழிலையும், இறந்த காலத்தையும் குறிப்பாகத் தெரிவித்தது காண்க.

(iii) சிலவகை வினையெச்சங்களின் வாய்ப்பாடுகள்

தொழிலையும், காலத்தையும் தெரிவித்துத் திணை, பால் முதலியவற்றைக் காட்டும் விகுதி குறைந்து, வினையைக் கொண்டு முடியும் எச்ச வினையே வினையெச்சமாகும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். வினையெச்சங்கட்கு வாய்ப்பாடுகள் உள. செய்து செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்ப்பாடுகள் கொண்டு வினையெச்சங்கள் வரும்.

(உ—ம்.) வந்து : 'செய்து'	என்னும்	வாய்ப்பாடு	(இறந்தகாலம்)
உண்ணுபு : 'செய்பு'	,,	,,	,,
காணு (கண்டு) : 'செய்யா'	,,	,,	,,
காணூ : 'செய்யூ'	,,	,,	,,
கண்டென : 'செய்தென'	,,	,,	,,
உண்ண : 'செய'	,,	,,	(நிகழ்காலம்
வரின் : 'செயின்'	,,	,,	(எதிர்காலம்)
உண்ணிய : 'செய்யிய	,,	,,	,,
உண்ணியர் : 'செய்யியர்'	,,	,,	,,

III. பொது

(1) செய்யுள் விகாரங்கள்

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் ஆகிய விகாரங்கள் செய்யுளின்கண் வரும். மெல்லொற்றை வல்லொற்றாக்குதல் வலித்தல் விகாரம். (உ-ம்.) "குறுத்தாட்பூதம்": ஈண்டு, 'குறுந்தாள்' என்பது 'குறுத்தாள்' என வந்தது வலித்தல் விகாரம்.

வல்லொற்றை மெல்லொற்றாக்குதல் மெலித்தல் விகாரம். (உ—ம்.) "தண்டையின் இனக்கிளி கடிவோள்" ஈண்டு, 'தட்டை' என்னுஞ் சொல் 'தண்டை' என நின்றது மெலித்தல் விகாரம்.

குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்குதல் நீட்டல் விகாரம். (உ—ம்.) "போத்தனார் புல்லறிவினார்": ஈண்டு, 'பொத்தனர்' என்பது 'போத்தனர்' என நீண்டு நின்றது நீட்டல் விகாரம்.

நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்குதல் குறுக்கல் விகாரம். (உ-ம்.) "திருத்தார் நன்றென்றேன் தியேன்": ஈண்டு, 'தீயேன்' என்னுஞ் சொல் "தியேன்" எனக் குறுகி நின்றது குறுக்கல் விகாரம்.

இல்லாத எழுத்தை வருவித்தல் விரித்தல் விகாரம். (உ-ம்.) "தேஞ்சுளைப் பலவின்பழம் ஊழ்க்கும்மே" ஈண்டு, 'ஊழ்க்குமே' என்பது, 'ஊழ்க்கும்மே' என விரிந்து நின்றது விரித்தல் விகாரம்.

உள்ள எழுத்தை நீக்குதல் தொகுத்தல் விகாரம். (உ-ம்.) "சிறியிலை" : ஈண்டு, 'சிறிய இலை' என நிற்க வேண்டுவது 'சிறியிலை' என நின்றது. இவ்வாறு யகர உயிர்மெய் மறைந்தது தொகுத்தல் விகாரமாகும்.

இனி, ஒரு சொல்லின் முதற் பகுதியோ, இடைப் பகுதியோ, கடைப் பகுதியோ குறைந்தும் வருவதுண்டு. அவ்வாறு வருவனவும் செய்யுள் விகாரங்களே.

சொல்லின் முதற் பகுதி குறைந்து வருவது முதற்குறை விகாரம். (உ-ம்.) "மரையிதழ்புரையும்": ஈண்டு, 'தாமரை' என்னுஞ் சொல், 'மரை' என முதற்குறைந்து நின்றது முதற்குறை விகாரம்.

சொல்லின் இடைப் பகுதி குறைந்து வருவது இடைக்குறை விகாரம். (உ-ம்.) "ஓதிமுது போத்து": ஈண்டு, 'ஓந்தி' என்னுஞ் சொல் 'ஓதி' என இடைக்குறைந்து நின்றது இடைக்குறை விகாரம்.

சொல்லின் கடைப் பகுதி குறைந்து வருவது கடைக்குறை விகாரம். (உ-ம்.) "நீலுண்துகிலிகை": ஈண்டு, 'நீலம்' என்னுஞ் சொல் 'நீல்' எனக் கடைக்குறைந்து நின்றது கடைக்குறை விகாரம்.

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

(2) சொல் முடிபு - பெயரும் வினையும் முடியும் முறை

சொற்கள் திணை, பால், எண், இடங்கட்கு ஏற்றவாறு முடிதல் வேண்டும். அவற்றுட் சிறிது தவறினும் இலக்கணப் பிழை உண்டாகும்.

(உ - ம்.) அவன் வந்தான்.
அவள் வந்தாள்.
அவர் வந்தார்.
அது வந்தது.
அவை வந்தன.
இராமன் அவன்.
முருகன் யாவன் ?
வேலன் யார் ?

என்பன போலப் பொருத்தமாகச் சொற்களை முடித்தல் வேண்டும்.

IV. புணர்ச்சி

(1) குற்றுகரப் புணர்ச்சி

1. வருமொழி முதலில் உயிர் வந்தால், நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றுகரம் கெட்டு, மெய்யெழுத்துமட்டும் நின்று, வருமொழியின் உயிரெழுத்துடன் புணரும்; யகர முதன் மொழி வந்தால் உகாரம் இகரமாகும்.

(உ - ம்.) வந்து + உள்ளது = வந்துள்ளது. ஈண்டு, மென்றொடர்க் குற்றியலுகரத்திற்குமுன் உயிர் வந்தமையால், 'து' என்னும் எழுத்தில் உள்ள உகரம் கெட்டுப் புணர்ந்தது.

சென்று + யான் = சென்றியான்: யகர முதன் மொழிவந்தவிடத்துக் குற்றியலுகரம் இகரமாயிற்று.

2. நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் 'டு' 'று' என்னும் எழுத்துக்களை இறுதியிற் கொண்ட சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் இரட்டிக்கும்.

(உ - ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால்: 'ஆடு' என்ற நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் ஒற்று இரட்டித்து, 'ஆட்டுக்கால்' என்று ஆயிற்று.

ஞாயிறு + ஐ = ஞாயிற்றை: 'ஞாயிறு' என்ற உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் றகர ஒற்று இரட்டித்து, 'ஞாயிற்று' என்றாகி ஐயுருபை ஏற்றது.

அடாது செய்தவர் படாது படுவர்.

3. வன்றொடர்க் குற்றியலுகரத்தின்முன் வல்லினத்தை முதலாக உடைய சொல் வரும்பொழுது வல்லினம் மிகும். (உ-ம்.) பார்த்துப் பார்த்துத் தம் கண் களிப்பர் : பகரமும், தகரமும் மிகுந்தன காண்க.

4. வேற்றுமைப் புணர்ச்சியில் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாகத் திரிதல் உண்டு. (உ-ம்.) நஞ்சு + பை = நச்சுப்பை. 'நஞ்சு' என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம், 'நச்சு' எனத் திரிந்தது. இவ்வாறே, சுரும்பு + நாண் = சுருப்பு நாண் ; கரும்பு + வில் = கருப்புவில் ; கன்று + ஆ = கற்று என்பன வந்தன.

5. அல்வழிப் புணர்ச்சியில் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடராகத் திரிதலும் உண்டு. (உ-ம்.) என்பு + உடம்பு = எற்புடம்பு; அன்பு + தளை = அற்புத்தளை ; குரங்கு + மனம் = குரக்குமனம்.

(2) தேன், அகம் : இவை புணரும் முறை :

'தேன்' என்னுஞ் சொல் புணரும் முறை

தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி.
தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு.
தேன் + மலர் = தேன்மலர், தேமலர்.
தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம்.

'அகம்' என்னுஞ் சொல் புணரும் முறை :

அகம் + செவி = அஞ்செவி } இடையில் உள்ள 'க' என்னும்
அகம் + கை = அங்கை } உயிர்மெய் கெட்டது.
அகம் + செவி = அகஞ்செவி 'க்' என்னும் உயிர்மெய் இவ்
அகம் + கை = அகங்கை வாறு கெடாமலும் புணர்தல் உண்டு.

(3) ணகர னகர ஈறு, லகர ளகர ஈறு

ணகர னகர ஈறு :

ணகர னகரங்கள், வேற்றுமைப் புணர்ச்சியின்கண் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும்.

(உ—ம்.) மண் + குடம் = மட்குடம்.
தன் + புகழ் = தற்புகழ்.

நிலைமொழி ஈற்றில், 'ண்', 'ன்' என்பன, வருமொழியில் வல்லினம் வர 'ட்', 'ற்' ஆகத் திரிந்தன.

லகர ளகர ஈறு :

மொழியிறுதியில் உள்ள லகர ளகர மெய்கள், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே 'ற்', 'ட்' ஆகத் திரியும்; மெல்லினம் வந்

தால் 'ல்' என்பது 'ன்' ஆகவும் 'ள்' என்பது 'ண்' ஆகவும் திரியும்; இடையினம் வரின் இயல்பாகும்.

(உ—ம்.) மக்கள்+பிறப்பு=மக்கட்பிறப்பு (நிலைமொழி ஈற்று 'ள்', வருமொழியில் வல்லினம் வர 'ட்' ஆகத் திரிந்தது).

மணல்+குன்று=மணற்குன்று நிலைமொழி ஈற்று 'ல்', வருமொழியில் வல்லினம் வர, 'ற்' ஆகத் திரிந்தது).

கல்+மனம்=கன்மனம் (லகரம் மெல்லினம் வர, னகரமாகத் திரிந்தது.)

உள்+மகிழ்ந்தான்—உண்மகிழ்ந்தான். (ளகரம் மெல்லினம் வர, ணகரமாகத் திரிந்தது.)

வில்+வீரன்=வில்வீரன்; வாள்+விழி=வாள்விழி (லகரமும், ளகரமும் இடையினம் வர, இயல்பாயின).

(4) சாரியைகள் : அ, அத்து, அம், அன், இன், அற்று

பகுதியோடு விகுதியும், இடைநிலையும் சேரும்பொழுது, அவற்றைச் சார்ந்து இயைந்து வரும் இடைச்சொல் சாரியை ஆகும் என்பதை அறிவீர்கள்.

'அ' என்னும் சாரியை: நட+த்+த்+அ+து= நடந்தது.

நட - பகுதி; து - விகுதி; த் - இடைநிலை; அ - சாரியை. 'த்' மிகுந்து, மெல்லொற்றாக விகாரப்பட்டது. ஈண்டு, 'அ' என்னும் சாரியை காண்க.

'அத்து' என்னும் சாரியை: மரம்+ஐ=மரத்தை. 'மரம்' என்பதன் கண்ணுள்ள 'அம்' கெட்டு 'அத்து' என்னும் சாரியை வந்தது காண்க.

'அம்' என்னும் சாரியை: 'மன்றம்' என்னும் சொல்லின் கண் 'அம்' என்னும் சாரியை வந்தது காண்க.

'அன்' என்னும் சாரியை: ஒன்றன் கூட்டம்: ஈண்டு 'அன்' என்னும் சாரியை வந்தது காண்க.

'இன்' என்னும் சாரியை: வண்டின் கால்: ஈண்டு 'இன்' என்னும் சாரியை வந்தது காண்க.

'அற்று' என்னும் சாரியை: சிலவற்றை: ஈண்டு 'அற்று' என்னும் சாரியை வந்தது காண்க.

(5) பல, சில : இவை புணரும் முறை

பல, சில என்னுஞ் சொற்களுக்குமுன் முறையே பல சில என்னுஞ் சொற்கள் வந்தால், (1) இயல்பாக வரும்; (2) வருமொழி

முதலெழுத்து மிகும்; (3) 'ல' என்பதன்கண் உள்ள 'அ' கெட்டு, லகரம் றகரமாகத் திரியும். வேறு சொற்கள் வரின் விகற்பம் ஆகும்.

பல பல, சில சில : இயல்பாயின.

பலப்பல, சிலச்சில : மிக்கன.

பற்பல, சிற்சில : அகரம் கெட்டு, லகரம் றகரமாயிற்று.

பலகடல், பல்கலை, பஃறுழிசை, பல்படை, பன்மணி, பலவணி, பல்லணி : வேறு சொற்கள் வருங்கால் விகற்பம் ஆகியுள்ளமை காண்க.

V. யாப்பு

(1) எதுகை மோனையின் பொது இலக்கணம்

எதுகை: செய்யுளில் அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

"மலரும் மாலையும்" என்னும் பகுதிப் பாடலைப் பாருங்கள்:

"நாடிப் புலங்கள்......

தேடிக் கொழிக்கும்......

ஓடிப் பெருகும்.........

ஆடிக் களிக்கும் ...."

அடிதோறும் முதலெழுத்து நெடிலாகவே அமைந்து, அளவொத்து நிற்பதையும், இரண்டாம் எழுத்து ஒன்றி வந்திருத்தலையும் காண்க. இவ்வாறு வருவதே எதுகை ஆகும்.

மோனை : முதற்சீரின் முதலெழுத்தோடு பின் வரும் சீர்களுள் ஒன்றிலேனும், பலவற்றிலேனும் முதலெழுத்து ஒன்றி வருதல் மோனை ஆகும்.

அ, ஆ, ஐ, ஔ; இ, ஈ, எ, ஏ; உ, ஊ, ஒ, ஓ; ஞ, ந; ம, வ; த, ச ஆகியவை தமக்குள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.

"நனைவரு கற்பக நாட்டு நன்னகர்" என்னும் உங்களுடைய கம்பராமாயண முதற் செய்யுளின் முதலடியை நோக்குங்கள். ந, நா, ந என்னும் எழுத்துக்கள் முறையே முதற் சீரிலும், மூன்றும் சீரிலும், நான்காம் சீரிலும் முதற்கண் அமைந்துள்ளன. முதற் சீரின் முதலெழுத்தாகிய 'ந' என்பதற்கேற்ப 'ந' 'நா' என்னும் எழுத்துக்கள் மோனை எழுத்துக்களாக வந்துள்ளன காண்க.

(2) அடிவகை

இரண்டு சீர்களையுடைய அடி குறளடி.

மூன்று சீர்களையுடைய அடி சிந்தடி.

நான்கு சீர்களையுடைய அடி அளவடி.

ஐந்து சீர்களையுடைய அடி நெடிலடி.

ஐந்துக்கு மேற்பட்ட சீர்களையுடைய அடி கழிநெடிலடி.

(உ - ம்.) "தண் பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல் வஞ்சி." என்னும் புறநானூற்று அடிகளை உற்று நோக்குக. இவ்வடிகள் ஒவ்வொன்றும் குறளடி ஆகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

இக்குறட்பாவின்கண் இரண்டாவது அடி சிந்தடி' முதலடி அளவடி.

"மலரும் மாலையும்" என்னும் பகுதியில் வந்துள்ள

1 2 3 4 5
"நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்"
என்று தொடங்கும் பாடலைப் பாருங்கள். அப்பாடலின்கண் அமைந்துள்ள ஒவ்வோர் அடியும் நெடிலடி ஆகும்.

உங்களுடைய இராமாயணப் பகுதியின் 7-ஆம் பாடலை நோக்குக. அப்பாடலின் அடியில்,

1 2 3
"என்னனைய முனிவர்களும் இமையவரும்
4 5 6
இடையூறொன் றுடைய ரானால்"
என்று ஆறு சீர்கள் அமைந்துள்ளன. எனவே அஃது அறுசீர்க்கழிநெடிலடி ஆகும்.

உங்களுடைய 'திருவருட்பா' என்னும் பகுதியில் அமைந்த பாடலின் அடியில்,

1 2 3 4
"அப்பா! நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
5 6 7 8
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
என்று எட்டுச் சீர்கள் அமைந்துள்ளன. எனவே அஃது எண்சீர்க்கழிநெடிலடி ஆகும்.

உங்களுடைய பெருந்தொகைப் பகுதியில் உள்ள பாடலைப் பாருங்கள். அக்குள்ள அடியில்,

1 2 3 4
"இரவு நண்பக லாகி லென்பகல்
5 6 7
இருளா குவிர வாகிலென்
8 9 10 11
இரவி யெண்டிசை மாறி லென்கடல
12 13 14
ஏழு மேறிலென் வற்றிலென்"

என்று பதினான்கு சீர்கள் அமைந்துள்ளன. எனவே அது பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆகும்.

(3) இசைப்பாட்டு வகை : கண்ணி, கும்மி, கீர்த்தனை

இசையொடு பொருந்தப் பாடுதற்கு ஏற்றவாறு அமைந்த பாடல் இசைப்பாட்டு ஆகும். அது தாளத்தோடு பொருந்தியும் அமையும்.

"நெஞ்சிலு ரமு மின்றி
நேர் மைத்தி றமுமின்றி
வஞ்சனை சொல் வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

பாரதியார் பாடியுள்ள இப்பாடல் 'கண்ணி' என்னும் இசைப் பாட்டு ஆகும்.

"செந்தமிழ் நாடென்ற போதினி லேயின்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினி லேயொரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

பாரதியார் பாடியுள்ள இப்பாடற்பகுதி, 'கும்மி' என்னும் இசைப் பாட்டு ஆகும். தாளத்திற்கு ஏற்ப இது பாடப்பெறும்.

இராகம், தாளம் ஆகியவற்றிற்கு இயைய அமைந்து, பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய உறுப்புக்களுடன் வருவது கீர்த்தனை ஆகும்.

தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் முதலியவர்கள் கீர்த்தனைகள் பலவற்றைப் பாடியுள்ளனர். இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது, கீர்த்தனைகளைக் கேட்டுணர்க.

ஆபத்தில் அறியலாம் அருமைச் சிநேகிதனை.

VI. அணி

(1) தன்மை நவிற்சியணி

ஒரு பொருளின் இயல்பான தன்மையை உள்ளவாறே கூறுதல் தன்மை நவிற்சியாகும்.

" தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார் "

என்னும் கம்பராமாயணப் பாடலைப் பாருங்கள். இடைப் பெண்கள் தயிர் கடையுங்கால் மத்தின் ஒலியும் அவர்களுடைய கை வளைகள் குலுங்கும் ஒலியும் தோன்றுகின்றன. அவர்களுடைய இடை தள்ளாடுகின்றது. இவ்வாறு ஆயமங்கையர் தயிர் கடையுங் காட்சி உள்ளவாறே கூறப் பெற்றிருத்தலால் ஈண்டுத் தன்மை நவிற்சியணி அமைந்துள்ளது.

(2) உயர்வு நவிற்சியணி

ஒரு பொருளின் தன்மையை மிக உயர்வுபடுத்திக் கூறுதல் உயர்வு நவிற்சியணி ஆகும்.

உங்களுடைய கம்பராமாயணப் பகுதியின் முதற் பாடலைப் பாருங்கள். அப்பாடல்,

" நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரும் அனைதர அயிர்க்குஞ் சிந்தையான்
நினையவும் அரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினன் "

என்பதாகும். இப்பாடலின் பொருளை நோக்குங்கள். ஈண்டுத் தசரதனுடைய மேம்பாடும், மண்டலத்தின் சிறப்பும் மிக உயர்த்திக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி ஆகும்.

(3) தற்குறிப்பேற்ற அணி

இயற்கையாக நிகழும் ஒரு பொருளின் நிகழ்ச்சியில் புலவர் தம் கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

உங்கள் கம்பராமாயணம் பகுதியில் விசுவாமித்திரனது கூற்றாக வந்த முதற் செய்யுளை (7-ஆம் செய்யுள்) நோக்குக. ஆங்கு, " பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரை" என்று உள்ளது. பல மலைகளையும் இகழ்ந்து சிரிக்கின்ற வெள்ளிமயமான குளிர்ந்த கைலைமலை என்பது அதற்குப் பொருளாகும். கைலாய மலை பிறமலைகளைப் பார்த்துச்

சிரிப்பதில்லை. ஆனால் புலவர், கைலாயத்தின் வெள்ளொளி வீசுதலாகிய தன்மையை, மற்றை மலைகளைப் பார்த்துச் சிரிப்பதாகக் குறிப்பிட்டது, தன்மைத் தற்குறிப்பேற்ற அணி ஆகும். தன்மைத் தற்குறிப்பேற்ற அணி, தற்குறிப்பேற்ற அணியின் ஒரு வகை ஆகும்.

மொழிப் பயிற்சி

I. வாக்கியம்—பலவகைகள்

நேற்று மழை பெய்தது.: செய்தி வாக்கியம்.

இவ்வாண்டு மழை பெய்யுமா? : வினா வாக்கியம்.

பெரியோர் சொற்படி நட.: கட்டளை வாக்கியம்.

இறைவரின் அருள் இருந்தவாறு என்னே! : உணர்ச்சி வாக்கியம்.

விசுவாமித்திரன் தசரதனிடம் வந்தான்.: இது தனி வாக்கியம்.

கியூரி அம்மையார் வறுமையால் வாடினார்; இரவும் பகலும் பாடுபட்டார் ; அரிய ஆராய்ச்சி செய்தார்: ரேடியத்தைக் கண்டுபிடித்தார்.: இது தொடர்வாக்கியம்.

"மூச்செல்லாம் அடக்கிக்கொண்டு மெல்ல 'அதோ பாரும், அதோ பாரும்!' என்று கூறிப் பேர் இருட்டில், பெருமௌனத்தில், பேர் அமைதியில் இவர்கள் இருவரும் கலந்தனர்.": இது கலவை வாக்கியம்.

II. வாக்கிய அமைப்பு — எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை

வாக்கியங்களில் முதற்கண் எழுவாயும், இறுதியிற் பயனிலையும், இடைக்கண் செயப்படுபொருளும் நிற்றல் இயல்பு. சிறப்பு நோக்கி இம்முறை மாறுபடுதலும் உண்டு. பெயர்ச்சொல்லுக்கு முன் பெயரெச்சமும், வினைச்சொல்லுக்கு முன் வினையெச்சமும் நிற்றல் வேண்டும்.

III. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

நான் இப்புத்தகத்தை எழுதினேன்; இப்புத்தகத்தை நான் எழுதினேன்; இப்புத்தகம் என்னால் எழுதப்பெற்றது. யான் எழுதிய புத்தகம் இது; இப்புத்தகத்தை எழுதியவன் யான் என்பன ஒரே கருத்தைக் கொண்டுள்ள வாக்கியங்கள் ஆவன. இவ்வாறு ஒரே கருத்தை பல உருவ வாக்கியங்களில் வெளியிடலாம்.

ஆனைப்பசிக்குச் சோளப் பொரி தாங்குமா?

IV. பத்தியமைப்பு

கட்டுரையில் பல பத்திகள் அமைந்திருக்கும். ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வொரு பத்தி அமைதல் வேண்டும். பல கருத்துக்களுக்கு ஒரே பத்தி அமைதலும், ஒரே கருத்துக்குப் பல பத்திகள் அமைதலும் கூடா. பத்தியில் உள்ள வாக்கியங்கள் ஒன்றற்கு ஒன்று தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மாறுபட்ட கருத்துக்களைத் தனிப் பத்திகளில் அமைக்க வேண்டும். சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலியன அமைந்த பத்தியே நல்ல பத்தியாகும்.

V. நடை

நடந்து செல்வதுதான் நடையாகும். அஃதாவது எல்லோரும் படித்து அறிந்து கொள்ளக்கூடிய முறையில் நடை அமைந்திருக்க வேண்டும். தற்காலத்தில் பத்திரிகையாசிரியர் நடை, சிறுகதை ஆசிரியர் நடை, பேச்சு நடை, செய்யுள் நடை எனப் பலவகைப்பட்ட நடைகளில் தமிழ் உரைநடை அமைந்துள்ளது. செந்தமிழ் நடையில் பிழையற்று அமைந்து, அரிய கருத்துக்களை எளிய முறையில் விளக்கவல்ல முறையே நல்ல நடையாகும். அத்தகைய நடையையே மாணவர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

VI. வழூஉச் சொற்களும் திருத்தமும்

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அருகாமையில்	அருகில்	சம்மந்தம்	சம்பந்தம்
ஆக்ஷி	ஆட்சி	சிகப்பு	சிவப்பு
இடது பக்கம்	இடப்பக்கம்	சிலவு	செலவு
இடை	எடை (நிறை)	சுந்திரம்	சுந்தரம்
இளைமை	இளமை	சுவற்றில்	சுவரில்
உத்திரவு	உத்தரவு	சேர்வை	சேவை
எண்ணை	எண்ணெய்	தமயன்	தமையன்
எழவு	இழவு	தாப்பாள்	தாழ்ப்பாள்
என்னமோ	என்னவோ	திருவிஷா	திருவிழா
ஒருக்கால்	ஒருகால்	திரேகம்	தேகம்
ஒருவள்	ஒருத்தி	துடங்கு	தொடங்கு
கயறு	கயிறு	நஞ்சை	நன்செய்
கறுமை	கருமை	நாகரீகம்	நாகரிகம்
கார்க்கும்	காக்கும்	நாத்தம்	நாற்றம்
காக்ஷி	காட்சி	நாநூறு	நானூறு
கேழ்வி	கேள்வி	நிரைய	நிறைய
கோர்வை	கோவை	நிலமை	நிலைமை

இளமையில் கஷ்டப்படுகிறவன் முதுமையில் சுகப்படுவான்.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
பனிரண்டு	பன்னிரண்டு	மூன்னூறு	முந்நூறு
பிர	பிற	ரொம்ப	நிரம்ப
புஞ்சை	புன்செய்	விற்க்கும்	விற்கும்
பேதமை	பேதைமை	வெங்கலம்	வெண்கலம்
மாக்ஷி	மாட்சி	வெண்ணை	வெண்ணெய்
முயற்ச்சி	முயற்சி	வென்னீர்	வெந்நீர்
முழித்தான்	விழித்தான்		

VII. விலக்குதற்குரிய இழிவழக்குகள் (Slang Usage)

வெறுமனே, சும்மனுச்சிக்கும், தேமேன்னு, உம்மாச்சி, ஆப்டுக்கிட்டான், வேணுங்கட்டைக்கு, ஈஸ்துகினு, டபாய்க்கிறது, நாமஞ்சாத்தறது என்பன போன்றவை விலக்குதற்குரிய இழிவழக்குகள் ஆவன. இவற்றை மாணவர்கள் தம் உரைநடையில் எழுதுதல் தவறு.

VIII. நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள்

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, ஒற்றை மேற்கோட்குறி, இரட்டை மேற்கோட்குறி, கேள்விக்குறி, உணர்ச்சிக்குறி, வரலாற்றுக்குறி, கீழ்க்கோடிடுதல் முதலிய நிறுத்தக் குறிகளை ஏற்றவாறு ஏற்ற இடங்களில் அமைத்து மாணவர்கள் எழுதுதல் வேண்டும். உங்களுடைய உரைநடைப் பகுதியைப் படிக்குங்கால் எவ்வெக்குறிகள் எவ்வெவ்விடங்களில் அமைந்துள்ளன என்று ஊன்றி நோக்கி, அத்தகைய முறையையே, எழுதும்பொழுதெல்லாம், பின்பற்றுதல் வேண்டும்.

IX. மரபு

ஒரு பொருளை எச்சொல்லால் எவ்வழியில் அறிவுடையோர்கள் கூறினார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியிலேயே கூறுதல் மரபு ஆகும்.

(உ-ம்.) குதிரைக்குட்டி, யானைக்கன்று, ஆட்டுப்புழுக்கை என்று கூறுவது மரபாகும். இவ்வாறன்றி, குதிரைக் கன்று, யானைக்குஞ்சு, ஆட்டுச் சாணம் என்று கூறுவது தவறு.

X. உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதுதல்

மாணவர்கள் கட்டுரை எழுதுங்கால் ஏற்ற உவமைகளையும், பழமொழிகளையும் அமைத்து எழுதுதல் வேண்டும்.

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.

(உ - ம்.) ரேடியத்தைக் கண்டவுடன், கியூரி அம்மையாரின் துயரமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது (உவமை அமைந்த வாக்கியம்).

"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்றபடி எத்தகைய நூலாயினும் கற்றல் வேண்டும் (பழமொழி அமைந்த வாக்கியம்).

XI. உவமை உருவகமாற்றம்

ஒன்றைப்போல மற்றொன்று உள்ளதாக உவமித்துக் கூறுதல் உவமை ஆகும். உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடில்லாமல் கூறுவது உருவகம் ஆகும்.

தாமரை போன்ற முகம் : உவமை.

முகத்தாமரை : உருவகம்.

உவமை முன்னும், பொருள் பின்னுமாக நிற்கும் முறையை மாற்றி அமைத்தால் உருவகம் ஆகிவிடும்.

XII. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும்

வல்லினம் மிகும் இடங்கள் :

1. அந்த, இந்த என்ற சுட்டுத் திரிபின்முன் க, ச, த, ப க்கள் மிகும். (உ-ம்) அந்தப் பொருள், இந்தச் செயல்.

2. எந்த என்ற வினாத் திரிபின்முன் மிகும். (உ-ம்) எந்தச் செய்கை ?

3. அ, இ, உ, என்ற சுட்டெழுத்துக்களுக்குமுன் மிகும். (உ-ம்.) அப்புத்தகம், இக்குடம், உச்சோலை.

4. எ எனும் வினாவெழுத்துக்குமுன் மிகும். (உ-ம்.) எப்பொருள்?

5. தனி நெடிலுக்குமுன் மிகும். (உ-ம்.) தீக்குணம்.

6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துக்குமுன் மிகும். (உ-ம்.) தேடாப் பொருள்.

7. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபுகள் விரிந்திருக்குமாயின் வலி மிகும். (உ-ம்.) அவனைக் கண்டான், அவனுக்குக் கொடுத்தான்.

8. அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு எனும் சொற்களுக்குமுன் வல்லினம் மிகும். (உ-ம்.) அப்படிச் செய், இப்படிப் பார், எப்படிப் பாடினார் ? அங்குச் செல், இங்குக் கண்டேன், எங்குத் தேடினான் ?

9. இனி என்னும் இடைச் சொல்லுக்குமுன் வல்லினம் மிகும். (உ-ம்.) இனிக் காண்போம்.

10. இகர விகுதி கொண்டு முடியும் வினையெச்சங்கட்குமுன் வலி மிகும். (உ-ம்.) ஓடிப் போனான், தேடிப் பார்.

11. செய, என்ற வாய்பாட்டு வினையெச்சங்கட்குமுன் வலி மிகும். (உ-ம்.) தரத் தகும்.

12. வன்றொடர்க் குற்றுகரத்துக்குமுன் வலி மிகும். (உ-ம்.) பாட்டுப் பாடினான்.

13. நெடில் தொடர்க் குற்றியலுகரமும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமையில் ஒற்று இரட்டித்து வல்லினத்தோடு புணரும்பொழுது மிகும். (உ-ம்.) ஆற்றுப் பாய்ச்சல், நாட்டுப் பற்று, வயிற்றுப் பாடு.

14. மற்று, மற்ற, மற்றை எனும் இடைச் சொற்களுக்குமுன் வலி மிகும். (உ-ம்.) மற்றுப் பற்று, மற்றக் காரியம், மற்றைச் செயல்.

15. அன்றி, இன்றி என்ற வினையெச்சங்கட்குமுன் வலி மிகும். (உ-ம்.) அவன் அன்றிச் செய்யான், இவன் இன்றிக் கூறான்.

16. சால, தவ, மிக எனும் உரிச் சொற்களுக்குமுன் மிகும். (உ-ம்.) சாலப் பேசினான், தவச் சொன்னான், மிகச் செய்தான்.

17. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வலி மிகும். (உ-ம்.) சாரைப் பாம்பு.

18. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்குமுன் வலி மிகும். (உ-ம்.) தயிர்க் குடம்.

வல்லினம் மிகா இடங்கள் :

1. அது, இது என்ற சுட்டுப் பெயர்கள், எது, ஏது, யாது என்ற வினாப்பெயர்கள் ஆகியவற்றின்முன் க, ச, த, ப இயல்பாம் (உ-ம்.) அது செய், இது பார், எது கண்டார்? ஏது தேடினான்? யாது கூறினன்.

2. அத்துணை, இத்துணை, எத்துணை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்ற சொற்களின்முன் வல்லினம் இயல்பாம். (உ-ம்.) அத்துணை கொடு, இத்துணை செய், எத்துணை படித்தாய்? அவ்வளவு தா, இவ்வளவு கொடு, எவ்வளவு செய்தீர்?

3. படி என்று முடியும் வினையெச்சங்களுக்குமுன் வலி மிகா. (உ-ம்.) வரும்படி சொன்னான், தரும்படி கேட்டான்.

ஊருடன் பகைப்பவன் வேருடன் கெடுவான்.

4. வினைத் தொகை, உம்மைத் தொகைகளுக்குமுன் வலி மிகா (உ-ம்.) உயர் குணம், சேர சோழர்.

5. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகா. (உ-ம்.) புளி தின்றான்.

6. முதல் வேற்றுமைக்குமுன் வலி மிகா. (உ-ம்.) புலி பாய்ந்தது.

7. மூன்று, ஐந்து, ஆறும் வேற்றுமை விரிகளில் வலி மிகா. (உ-ம்.) பண்ணோடு பாடினான், மரத்திலிருந்து குதித்தான், எனது கை.

8. விளித் தொடரில் வலி மிகா. (உ-ம்.) அண்ணா கேள்.

9. பெயரெச்சத்துக்கு வலி மிகா. (உ-ம்.) ஓடின குதிரை.

10. செய்யிய, செய்பு எனும் வாய்பாட்டு வினையெச்சத்துக்கு முன் வலி மிகா. (உ-ம்.) உண்ணிய கொண்டான், உண்ணுபு தந்தான்.

11. இடைச்சொற்களாகிய ஏ, ஓ க்களுக்குமுன்னும் ஆ என்ற ஈற்றையுடைய வினைப் பெயருக்குமுன்னும் வலி மிகா. (உ-ம்.) அவனே செய்தான், இவனோ கொன்றான்? அவனா பேசினான்?

12. வட சொற்கள் நிலை, வருமொழிகளாயின் வலி மிகா. (உ-ம்.) ஆதி பகவன், தரும சாலை.

XIII. இடம்விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்

கட்டுரை எழுதுங்கால் பத்திக்குப் பத்தி இடம் விட வேண்டும்; வாக்கியத்திற்கு வாக்கியமும், சொல்லுக்குச் சொல்லும் இடம் விடுதல் வேண்டும். தலைப்பிற்கும், கட்டுரையின் முதல் வரிக்கும் நடுவில் இடம் விடுதல் வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்களால் எளிதிற் படிக்க முடியும்.

XIV. சொற்களை இடம்விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்

சொல்லுக்குச் சொல் இடம் விட வேண்டும் என்று முன்பு கூறினோம். ஒரு சொல்லின்கண் உள்ள எழுத்துக்களைச் சேர்த்தே எழுதுதல் வேண்டும். ஒரு சொல்லின் ஒரு பகுதியை, ஒரு வரியின் முடிவில் எழுதி, மற்றொரு பகுதியை அடுத்த வரியின் தொடக்கத்தில் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும். இரண்டு சொற்கள் புணர்ந்து, உடம்படுமெய் தோன்றியோ, வல்லின ஒற்று இரட்டித்தோ நின்றால், அவற்றைச் சேர்த்தே எழுதுதல் வேண்டும். இத்தகைய முறைகளை மாணவர்கள் ஆராய்ந்து பார்த்துப் பின்பற்றுதல் வேண்டும்.

அருந்தொடர்களைப் பிரித்துக் காட்டல்

சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டுதற்கென்று ஏறத்தாழ மதிப்பெண்கள் 2 உள்ளன. இலக்கணப் பகுதி வினாக்களுக்குள் இவ்வினாவும் ஒரு பகுதியாகும். கீழே சில அருந்தொடர்களில் உள்ள சொற்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை நன்கு படித்து, உளத்தில் இருத்தினால் 2 மதிப்பெண்கள் எளிதில் கிடைக்கும்.

கேட்டருள்: கேட்டு + அருள்
ஆருயிர்: அருமை + உயிர்
எப்பாரும்: எ + பாரும்
மேனிலை: மேல் + நிலை
திகழ்ந்தோங்க: திகழ்ந்து + ஓங்க
தப்பேது: தப்பு + ஏது
செழுங்கருணை: செழுமை + கருணை
நயவுரை: நயம் + உரை
அறிவாளர்: அறிவு + ஆளர்
பரிந்தோம்பி: பரிந்து + ஓம்பி
ஒல்காருரவோர்: ஒல்கார் + உரவோர்
என்றுமிடும்பை: என்றும் + இடும்பை
வாயாற் சொலல்: வாயால் + சொலல்
தன்னெஞ்சு: தன் + நெஞ்சு
புறந்தூய்மை: புறம் + தூய்மை
அகந்தூய்மை: அகம் + தூய்மை
யாமெய்யா: யாம் + மெய்யா
வாய்மையினல்ல: வாய்மையின் + நல்ல
அருஞ்சீர்: அருமை + சீர்
உப்பீண்டு வரி: உப்பு + ஈண்டு + உவரி
உயிருய்ந்த: உயிர் + உய்ந்த
செங்கோல்: செம்மை + கோல்
வெஞ்சமம்: வெம்மை + சமம்
தன்னச்சி: தன் + நச்சி
மாசில்: மாசு + இல்
சாவாவுடம்பு: சாவா + உடம்பு

முற்றோன்று: முன் + தோன்று
கழிவிரக்கம்: கழிவு + இரக்கம்
ஒன்றுற்றார்: ஒன்று + உற்றார்
அறந்தோன்று: அறம் + தோன்று
அணியென்ப: அணி + என்ப
முன்னுரைப்பது: முன் + உரைப்பது
உரைப்பதில்: உரைப்பது + இல்
அறங்கேட்டு: அறம் + கேட்டு
புலங்கண் மாட்டு: புலங்கள் + மாட்டு
மன்னுயிர்: மன் + உயிர்
பாற்பட்டவன்: பால் + பட்டவன்
கொங்கலர்: கொங்கு + அலர்
வெண்குடை: வெண்மை + குடை
அங்கண்: அம் + கண்
பொற்கோடு: பொன் + கோடு
மேனின்று: மேல் + நின்று
பூம்புகார்: பூ + புகார்
பதியெழுவறியா: பதி + எழு + அறியா
பழங்குடி: பழமை + குடி
நீணகர்: நீள் + நகர்
வானிகர்: வான் + நிகர்
குலக்கொம்பர்: குலம் + கொம்பர்
ஈராறு: இரண்டு + ஆறு
மீனின்றிறம்: மீனின் + திறம்
நிலமுழுதாளும்: நிலம் + முழுது + ஆளும்

எய்தவனிருக்க அம்பை நோவானேன்?

மகன்றலை : மகன் + தலை
ஈரெட்டு : இரண்டு + எட்டு
மண்டேய்த்த : மண் + தேய்த்த
பண்டேய்த்த : பண் + தேய்த்த
கண்டேத்தும் : கண்டு + ஏத்தும்
நன்னகர் : நன்மை + நகர்
தரவயிர்க்கும் : தர + அயிர்க்கும்
மெல்லரியணை : மென்மை + அரி + அணை
இடங்கொணன்முகன் : இடம் + கொள் + நான்கு + முகன்
பைம்பொன் : பசுமை + பொன்
கமலச்சரண் : கமலம் + சரண்
நிலஞ்செய் : நிலம் + செய்
என்னனைய : என் + அனைய
இடையூறொன்று : இடையூறு + ஒன்று
பாற்கடல் : பால் + கடல்
பொன்னகர் : பொன் + நகர்
இன்றளிர் : இன் + தளிர்
தோட்சம்பரன் : தோள் + சம்பரன்
மற்றினி : மற்று + இனி
அருளுகென்று : அருளுக + என்று
கொடுங்கூற்று : கொடுமை + கூற்று
எண்ணிலாவருந்தவம் : எண் + இலா + அருமை + தவம்
புண்ணிலாம் : புண்ணில் + ஆம்
உண்ணிலாவிய : உள் + நிலாவிய
ஊற்றிற்றேன் : ஊற்றில் + தேன்
தேன்றுளிக்கும் : தேன் + துளிக்கும்
புடையூற்றும் : புடை + ஊற்றும்
அன்றெனவாமென : அன்று + என + ஆம் + என
அவற்புகன்று : அவன் + புகன்று
நான்மறை : நான்கு + மறை
கோயில் : கோ + இல்
நிகழ்வுறு : நிகழ்வு + உறு
நன்னாட்கொண்டு : நன்மை + நாள் + கொண்டு
வாவியுந்தொட்டு : வாவியும் + தொட்டு
கற்றளி : கல் + தளி
முன்னாள் : முன் + நாள்
நீடாலயம் : நீடு + ஆலயம்
திண்டிறல் : திண் + திறல்
மாசிலா : மாசு + இலா
எண்டிசை : எட்டு + திசை
கண்ணுதல் : கண் + நுதல்
மூதூர் : முதுமை + ஊர்
நாட்பேணி : நாள் + பேணி
பயிறரு : பயில் + தரு
உலகிற்றோன்றி : உலகில் + தோன்றி
மறைந்திடு நும்மை : மறைந்திடும் + நும்மை
செங்கை : செம்மை + கை
தன்னழிவு : தன் + அழிவு
மின்னற்கொடி : மின்னல் + கொடி
பொன்னரசி : பொன் + அரசி
பெண்ணரசி : பெண் + அரசி
என்றன் : என் + தன்
வெண்ணிலவு : வெண்மை + நிலவு
கல்லார் : கல் + ஆர்
தோட்கிள்ளி : தோள் + கிள்ளி
கோறல் : கொல் + தல்
வேறல் : வெல் + தல்
கோடல் : கொள் + தல்

துணைப்பாட விளக்கம்

கரிகால்வளவன்

கதைச் சுருக்கம்

காவிரிப்பூம்பட்டினத்தில் அரசாண்ட இளஞ்சேட்சென்னிக்கும், அழுந்தூர் வேண்மாளுக்கும் மகனாகத் திருமாவளவன் தோன்றினான். பிறக்கும் முன்னர்த் தந்தையை இழந்து, தன் அம்மானாகிய இரும்பிடர்த்தலையார் என்னும் புலவரால் வளர்க்கப்பட்டான். பகைவரிட்ட சிறையிலிருந்தபோது, அச்சிறைக் கூடத்தில் தீயிட்டனர். அதிலிருந்து தப்பி வரும்போது இவன் கால் கரிந்து விட்டதால் **கரிகாலன்** என வழங்கப்பட்டான்.

கருவூரில் கரிகாலன் மறைந்து வாழும் நாளில் அமைச்சர்கள் சோழ நாட்டுக்கு 'அரசனைத் தேர்ந்தெடுக்கப் பட்டத்து யானையைப் பூமாலையுடன் விட்டனர். அது கரிகாலனுக்கு மாலையிட்டதால் கரிகாலன் சோழ நாட்டின் அரசனானான். பதினொரு வேளிரும், சேர பாண்டியரும் 'வெண்ணி' என்ற இடத்தில் கரிகாலனை எதிர்த்துப் போர் செய்தனர். கரிகாலன் வெற்றி பெற்றான். புறப்புண் நாணிய சேரன் வடக்கிருந்து உயிர் விட்டான். தன்னை எதிர்த்த ஒன்பது சிற்றரசர்களை வாகை என்னும் இடத்தில் வென்ற கரிகாலன், வடதிசை நோக்கிப் படையெடுத்துச் சென்று இமயமலையில் புலிக்கொடியை நாட்டி வடநாட்டு அரசர்களைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தி மீண்டான்.

பின், காவிரிக்குக் கரை கட்டி அதன் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்தினான். உறையூரைத் தலைநகரமாக்கினான். நாங்கூர் வேண்மாளைத் திருமணம் புரிந்து கொண்டான். உறையூரில் நீதி மன்றம் ஏற்படுத்தினான். முதியவர் வழக்கைத் தீர்க்கத் தானும் முதிய வேடம் புனைந்தான். முடத்தாமக் கண்ணியார் கரிகாலனைச் சிறப்பித்துப் 'பொருநர் ஆற்றுப்படை' என்னும் நூலைப் பாடிப் பரிசு பெற்றார். கடியலூர் உருத்திரங் கண்ணனார் 'பட்டினப் பாலை' என்னும் நூலைப் பாடிப் பதினாறு லட்சம் பொன் பரிசு பெற்றார். கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பவள் சேர இளவரசன் அத்தியை மணந்தாள். அத்தி காவிரியில் நீராடும்பொழுது வெள்ளம் அடித்துச் சென்றது. ஆதிமந்தி கடற்கரைவரை சென்று அத்தியை மீட்டுவந்தாள். கரிகாலன் 85 வயதுவரை முறை தவறாமல் அரசாண்டு வந்தான். அவன் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது.

கட்டுரைத் தலைப்பும் குறிப்பும்

1. வளவன் பிறந்தான்

காவிரிப்பூம்பட்டினம் - இளஞ்சேட் சென்னி - இரும்பிடர்த்தலையார் - கரிகாலன் பிறப்பு.

2. கரிகாலன்

இளவரசன் மறைந்து வளர்தல் - இரும்பிடர்த்தலையார் கல்வி கற்பித்தல் - திருமாவளவன் பகைவர் கையில் சிக்குதல் - தீயிடுதல்.

3. ஏற்றிய விளக்கு

கரிகாலன் கருவூரில் மறைந்து வாழ்தல் - தெய்வத் திருவுள்ளம் - பட்டத்து யானை கரிகாலனுக்கு மாலை சூட்டுதல் - கரிகாலன் அரசு கட்டில் ஏறுதல்.

4. வெண்ணிப் போர்

வேளிர் சூழ்ச்சி - படையெடுப்பு - வெண்ணிப் போர் - கரிகாலன் வெற்றி - பெருஞ் சேரலாதன் வடக்கிருந்து உயிர் நீத்தல்.

5. இமயத்தில் புலி

சிற்றரசர் ஒன்பதின்மர் எதிர்ப்பு - சோழ நாட்டில் கலை எடுப்பு - வட நாட்டுப் படையெடுப்பு - இமயத்தில் புலிக் கொடி ஏற்றுதல் - வச்சிரமகத நாட்டரசர்களை வெல்லுதல் - காவிரிப்பூம்பட்டினம் அடைதல்.

6. உறையூரின் தோற்றம்

காவிரிக்குக் கரைகட்டுதல் - ருத்திரன் எதிர்ப்பு - கரிகாலன் கரையைக் காணுதல் - கோழியின் எதிர்ப்பு - உறையூரை அமைத்தல் - திருமணம்.

7. கிழக்கோலம்

கரிகாலன் ஆட்சி - உறையூர் நீதிமன்றம் - முதியோர் வழக்கு - முதுமைக் கோலம்.

8. நாட்டுவளம் பாடிய நங்கை

முடத்தாமக் கண்ணியார் - பொருநர் ஆற்றுப்படை (பொருநர் ஆற்றுப்படையின் பொருள்) - பொருநன் காட்டு வழிச் செல்லுதல் - பரிசு பெற்றுவரும் பொருநன் இவர்களைக் காணுதல் - கரிகால்வளவன் பொருநனிடம் காட்டிய அன்பு - கரிகாலன் உபசரிக்கும் முறை - காவிரியின் சிறப்பு.

---

9. பாட்டும் பரிசும்

பட்டினப்பாலை (பட்டினப் பாலையின் பொருள்)- சோழ நாட்டின் வளம்- காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு- அரச்சாலை - பரதவர் வீதி - பெரிய வீதிகள் - பண்டசாலை - பல கொடிகள் - ஆவண (கடை) வீதி - கரிகாலன் பெருமை.

10. இழந்து பெற்ற காதலன்

ஆதிமந்தி திருமணம் - அத்திகாவிரி நீராடல் - அத்திகாவிரி வெள்ளத்தில் போதல் - ஆதிமந்தியின் விடா முயற்சி - முடிவு.

குறிப்பு: ஒவ்வொரு கட்டுரைக் குறிப்பின் முதலிலும் 'முன்னுரை'யும், கடைசியில் 'முடிவுரை'யும் சேர்த்து எழுதுக.

1. வளவன் பிறந்தான்

காவிரிப்பூம்பட்டினம்

இது சோழ நாட்டின் தலைநகரம். காவிரி கடலொடு கலக்கும் இடத்திலிருந்த இக்காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என இரு பிரிவுகளை உடையதாய் இருந்தது. மருவூர்ப்பாக்கம் கடற்கரையை அடுத்திருந்தது. காவிரிப்பூம்பட்டினத்திற்குப் புகார் என்றும், பூம்புகார் என்றும் வேறு பெயர்கள் உண்டு. மருவூர்ப் பாக்கத்தில் வாணிகப் பொருள்கள் மலைபோல் குவிந்திருக்கும். பல நாட்டு வணிகர்கள் தம் பண்டங்களை விற்கவும், தமிழ் நாட்டுப் பொருள்களை வாங்கவும் வந்து தங்கியிருப்பர். இது செல்வம் நிறைந்துள்ள பகுதி. இதை அடுத்துள்ள பட்டினப்பாக்கம் நகரத்தின் உட்பகுதி. இங்கு அரண்மனையும், செல்வர்கள் வீடுகளும் இருந்தன. நகர மக்கள் இங்குத்தான் வாழ்ந்தனர்.

இளஞ்சேட் சென்னி

சோழ மன்னர்கள் பெருமை காவியம் கண்டது. இம்மரபில் வந்த இளஞ்சேட் சென்னி என்னும் மன்னன் காவிரிப்பூம்பட்டனத்தைத் தலைநகரமாகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தான். இவன் குடிமக்களிடம் எளிதில் பழகி அவர் குறைகேட்டு முறை செய்து வந்தான். இதனால் இவ்வரசன் சோழ நாட்டு மக்களின் உள்ளத்தில் இருந்தான். அரசனுக்கு உரிய 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்' இளஞ்சேட் சென்னியிடம் இருந்தன. அழகிய பல தேர்கள் இருந்தன. இதனால் இவனுக்கு 'உருவப்பல் தேர் இளஞ் சேட் சென்னி' என்ற பெயரைச் சூட்டிய புலவர் பாடினர். இம் மன்னன் உழு தொழில் புரியும் வேளாளர்களில் சிறந்த 'அழுந்தூர்

வேள்' என்பவன் மகள் 'அழுந்தூர் வேண் மாள்' என்பவளை மணந்து கொண்டான். வீரமும், நீதி முறையும் பொருந்திய இளஞ்சேட் சென்னிக்கு மகப்பேறு வாய்க்கவில்லை என்ற கவலை குடிமக்கள் மனத்தை வாட்டியது.

இளஞ்சேட் சென்னியின் தாயாதிகள் சிலர் அரசுரிமையைப் பெறுவதற்கு விரும்பியிருந்தனர். சில வேளாளச் செல்வர்களும் தாங்கள் சோழ மரபோடு தொடர்புடையவர்கள் என்று கூறிக் கொண்டிருந்தனர். இளஞ்சேட் சென்னிக்குப் பின் சோழ சிங்காதனத்தை அடைய அவர்கள் எண்ணியிருந்தனர். இதை அறிந்த சோழநாட்டுப் பெருமக்கள் "இளஞ்சேட் சென்னிக்குப் பின் இந்நாடு எந்நிலை யடையுமோ?" என்று ஏங்கியிருந்தனர். இந்நிலையில் இளஞ்சேட்சென்னி நோய்வாய்ப்பட்டான். அரசன் இனிப் பிழைக்கமாட்டான் என்று நினைத்த அமைச்சர்களும் சான்றோர்களும் அறங்கூறு அவையத்தாரும் (நீதி மன்றத்தார்) ஒருங்குகூடிச் சோழநாட்டு அரசுரிமைபற்றியும், அதைப் பெறப் பலர் சமயம் பார்த்திருப்பதுபற்றியும் ஆராய்ந்தனர்.

அப்பொழுது அரசி கருவுற்றிருக்கின்றாள் என்னும் செய்தியை ஒரு தோழி கூறக்கேட்டு மகிழ்ச்சி உற்றனர். இது இறைவன் திருவருள் என நினைத்து உவகையடைந்தனர். அரசன் தனக்குப் பிறக்கும் குழந்தையைப் பார்க்கும் பேறு பெறுவனோ? என்று வருந்தினர். இச்செய்தியை எல்லோருக்கும் தெரிவிக்கக்கூடாதென்றும், தெரிந்தால் குழந்தையைக் கொல்லப் பகைவர்கள் சதி செய்யக்கூடும் என்றும் கருதினர். அரசிக்குப் பிறக்கும் குழந்தை ஆணாக இருக்க வேண்டும் என்ற கவலையும் அவர்களுக்கு இருந்தது.

இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டான். அமைச்சர்கள் ஆட்சியை மேற்கொண்டனர். எச்சமயத்திலும் நகரத்தைப் பகைவர்கள் முற்றுகை இடக்கூடும். ஆதலின் கருவுற்றிருக்கும் அரசியை யாருக்கும் தெரியாமல் பாதுகாப்புள்ள ஓரிடத்தில் வைப்பதென்று முடிவு செய்தனர்.

இரும்பிடர்த் தலையார்

அரசியின் உடன் பிறந்தவராகிய இரும்பிடர்த்தலையார் என்பவர் பெரும் புலவராய் இருந்தார். அவரிடம் அரசியைத் தக்க வசதிகளுடன் தங்கியிருக்கும்படி செய்தார்கள்.

இரும்பிடர்த்தலையார் 'குழந்தை பிறக்குமுன்பே தந்தையைக் கொன்றுவிட்டதே இனி பிறந்து வளர்ந்து சோழநாட்டைக் காக்க வேண்டுமே' என்று கவலைப்பட்டார். அவர் சோதிட நூல் பயிற்சி உடையவர். ஆதலின் தன் தங்கைக்கு மகன் பிறப்பான் என்றே நம்பினார். அவன் நல்ல வேளையில் பிறக்க வேண்டும் என வேண்டினார்.

பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்.

கரிகாலன் பிறப்பு

அரசி குழந்தை பெறும் காலம் நெருங்கியது. இரும்பிடர்த்தலையார் பஞ்சாங்கத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார். "இன்னும் மூன்று நாழிகை கழித்துக் குழந்தை பிறந்தால் ராஜயோகத்தோடு இருப்பான். பெரும் புகழை அடைவான். இளமையில பல துன்பங்கள் வந்தாலும் பிறகு யாராலும் வெல்லமுடியாத உயர்நிலையடைவான். பல ராஜ்யங்கள் அவனுக்கு உரிமையாகும், அதற்கு முன்பு பிறந்தால் இந்த யோகம் இல்லை" என்று எண்ணினர். மகப்பேற்றை மூன்று நாழிகை தாமதமாக்குதற்கு ஒரு மருத்துவன் உதவியை நாடினர். மருத்துவன் கருத்தின்படி அரசியின் கால்கள் மேலே தூக்கிக் கட்டப்பட்டன. மூன்று நாழிகையும் மூன்று யுகம்போல் கழிந்தது. அரசி பழைய நிலையில் படுக்க வைக்கப்பட்டாள். நல்ல வேளையில் ஆண் மகவு பிறந்தது. அதை அறிந்த அரசியும் இரும்பிடர்த்தலையாரும் மகிழ்ந்தனர். இளஞ்சேட் சென்னியின் குலத்தை விளக்கவந்த இப்பிள்ளையே பிறகு திருமாவளவன், கரிகால் வளவன் என்று சரித்திரம் போற்றும் சக்கரவர்த்தியாய் விளங்கியவன்.

2. கரிகாலன்

இளவரசன் மறைந்து வளர்தல்

சோழப் பேரரசின் கோமகனாய் விளங்கவேண்டிய குழந்தை அரண்மனையில் வளராமல், மறைவிடத்திலே வளரவேண்டியிருந்த நிலைக்குச் சான்றோரும், அமைச்சர் முதலியவர்களும் வருந்தினர். குழந்தை பிறந்த செய்தியை வெளியார் யார்க்கும் அறிவிக்கவில்லை. சோழநாட்டில் சில வேளிர்கள் அப்போது கலகம் செய்யக் கிளம்பியிருந்தனர். அவர்கள் இளஞ்சேட்சென்னிக்கு மகன் பிறந்ததை அறிந்தால் தீமை செய்ய நினைக்கக்கூடுமாதலால், அரண்மனைக்கு அரசியை அழைத்து வந்திலர். தனியிடத்தில் தக்க காவலுடன் குழந்தை வளர வேண்டும் என எண்ணினர். அரசனுக்கு மகன் பிறந்திருக்கும் செய்தி சோழநாட்டு மக்களிடையே பரவியது. இச்செய்தியைச் சிலர் நம்பினர். பலர் மறுத்தனர். அரசன் இல்லாமையால் காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமை குன்றியது.

பகைவர்கள் வலிமைபெற்று வந்தனர். சேர அரசனுடனும், பாண்டியனுடனும் சேர்ந்து சதி செய்தனர். குழந்தை இருக்கும் இடம் அறிய முயன்றனர். 'குழந்தை பிறக்கவில்லை' என்ற பொய் வதந்தியை எங்கும் பரப்பினர்.

இரும்பிடர்த்தலையார் கல்வி கற்பித்தல்

தங்கத் தொட்டிலில் வளரவேண்டியவன் மரத்தொட்டிலிலும் வளராமல் தாயின் மார்புத்தொட்டிலில் வளர்ந்தான். பனி நீரால் குளிப்பாட்டவேண்டிய மகனைக் கண்ணீரால் குளிப்பாட்டினள்.

மகன் பிறப்பால் மகிழவேண்டிய அரசி, 'பகைவரால் எப்போது இவனுக்கு என்ன தீங்கு நேருமோ ?' என ஏங்கி நடுங்கினாள். காட்டிலே ஓடி விளையாடவேண்டிய சிங்கக் குட்டி கூட்டிலே அடைந்து கிடப்பதுபோலத் தாயின் அன்பில் தனியிடத்தில் வளவன் வளர்ந்தான். அவனுடைய அழகும், பேச்சும் தாயை மகிழ்வித்தன. 'இவன் அரசு கட்டில் ஏறுவானா?' என அவள் ஏங்கினாள். இரும்பிடர்த் தலையார் அவளுக்கு ஆறுதல் கூறினார். இரும்பிடர்த்தலையார் வளவனுக்குக் கல்வி புகட்டினார். சோழர் பெருமையையும், வீரத்தையும் கதைகளாகக் கூறினார். தமிழின் சிறப்பையும், தமிழ் மன்னர் வீரத்தையும் அவன் உள்ளத்தில் பதிய வைத்தார். அவன் உடல் வளர்ச்சி போல் அறிவும் வளர்ந்து வந்தது. அது கண்ட அன்னையும் அம்மானும் மகிழ்ச்சியுற்றனர்.

திருமாவளவன் பகைவர் கையில் சிக்குதல்

உள்நாட்டுப் பகைவர்கள் அரசிளங்குமரன் வளர்ந்துவரும் இடத்தை அறிந்தனர். அவனுக்குத் தீங்கு செய்யத் திட்டமிட்டனர். இரு முரடர்களை ஏவி அவனைப் பிடித்துவரச் செய்தனர். மக்கள் நடமாட்டம் இல்லாத ஓரிடத்திலுள்ள வீட்டில் அவனை அடைத்துவிட்டனர். இளைஞனாயிருப்பினும் இளவரசன் தன் குலத்தின் பெருமைக் கேற்ப, கதறி அழுதிலன். கூச்சல் போடவில்லை. உள்ளேயிருந்து மீண்டுவரும் வழி தெரியாமல் திகைப்புற்றிருந்தான். அவ்வீடு காட்டின் நடுவில் இருப்பதாய்த் தோன்றியது. அயர்வினால் இளவரசன் உறங்கிவிட்டான்.

தீயிடுதல்

நள்ளிரவில் சிலர் பேசும் ஒலி கேட்டது. வளவன் 'யார் அங்கே?' என்று பன்முறை கேட்டும் அக்கொடியவர்கள் பதில் கூறவில்லை. அவன் தங்கியிருந்த வீட்டிற்குத் தீவைத்துச் சென்றனர். கரிகாலன் செய்வது இன்னதென்று தெரியாமல் தவித்தான். கதவைப் பன்முறை இடித்தான். பயனில்லை. பெருங்குரலில் மாமனைக் கூப்பிட்டான். அவ்வேளையில் அவனைப் பலவிடங்களிலும் தேடி யலைந்து அங்குவந்த இரும்பிடர்த்தலையார் தீயினின்றும் அவனைக் காப்பாற்றினார். கதவை அவர் திறந்தபோது எரிந்து வீழ்ந்த பகுதிகளின்மேல் இளவரசன் நடந்து வந்ததால் அவன் காலில் தீப்புண்கள் உண்டாயின.

இரும்பிடர்த்தலையார் தக்க மருத்துவர் உதவியால் தீக்காயங்கட்கு மருந்து கட்டினார். நாளடைவில் புண் ஆறியது. எனினும் அவன் காலில் தீயினால் ஏற்பட்ட வடு மாறாமல் கருமையாயிருந்தது. இவ்வாறு கால் கரிந்தமையால் திருமாவளவனுக்குக் கரிகாலன் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. இப்பெயரே அவனுக்கு நிலைத்துவிட்டது. 'உயிருக்கு வந்தது காலைக்கருமையாக்கி விட்டுச் சென்றது' எனத் தாயும், அம்மானும் ஆறுதல் அடைந்தனர்.

3. ஏற்றிய விளக்கு

கரிகாலன் கருவூரில் மறைந்து வாழ்தல்

கரிகாலன் உயிரோடு இருப்பதைப் பகைவர் அறிந்தால் அவனுக்கு மீண்டும் தீங்கு செய்யக்கூடும் என்று எண்ணிய இரும்பிடர்த் தலையார், அவனைக் கருவூரில்வைத்து கண்ணை இமை காப்பதுபோல் காத்துவந்தார். கருவூரில் உள்ளவர்கள் கரிகாலனை இளவரசன் என்பதை அறிந்திலர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் அமைச்சர்களும் சான்றோர்களும் இளவரசன் இருக்குமிடம் தெரியாமல் வருந்தினர். பகைவர்களின் வலிமை அதிகமாவதை அறிந்தனர். இரும்பிடர்த்தலையாரும் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வருவதில்லை. அவர் இன்று வருவார், நாளை வருவார் என்று எதிர்பார்த்து இருந்தும் பயனில்லை. திருமாவளவனுக்கு வந்த ஆபத்து அவர்களுக்குத் தெரியாது. அவன் தப்பிச் சென்ற செய்தி பகைவர்களுக்குத் தெரியாது. 'இளவரசன் இறந்து விட்டான்' என்ற வதந்தியை அவர்கள் நாடெங்கும் பரப்பினர். இளவரசன் இருக்குமிடம் தெரியாமையால் சோழ நாட்டுக்கு அரசன் ஒருவனைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற எண்ணம் அமைச்சர்களுக்குத் தோன்றியது.

தெய்வத் திருவுள்ளம்

அமைச்சர்கள் ஒரு நாள் ஒருங்கு கூடிச் சோழ அரசனைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஆராய்ந்தனர். சோழர் குலத் தொடர்புடையவர்கள் என்று சொல்லிக் கொள்பவர் நாட்டில் பலர் இருந்தனர். அவர்களில் யாரைத் தேர்ந்தெடுத்தாலும் மற்றவர்கள் அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள். ஆதலின் புதிய அரசனைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சிக்கல்கள் பல என்பதை அமைச்சர்கள் அறிந்தார்கள். இனி இது தெய்வத் திருவருளால் தான் நடக்க வேண்டும் என்று முடிவு கட்டினர். பழங்காலம் முதல் நடந்துவரும் வழக்கத்தின்படி தெய்வத் திருவுள்ளத்தின்படி நடக்க ஏற்பாடு செய்வதுதான் சரி எனக்கருதினர். அவ்வழக்கமாவது "பட்டத்து யானையின் கையில் மாலையைக்கொடுத்து விட்டு விட்டால் அது யாருக்கு மாலையிடுகிறதோ அவனையே அரசனாக ஏற்றுக் கொள்வது" இவ்வழக்கத்தைப் பின்பற்ற அமைச்சர்கள் முடிவு செய்தார்கள்.

பட்டத்து யானை கரிகாலனுக்கு மாலை சூட்டுதல்

அமைச்சர்கள் தாங்கள் முடிவு செய்தபடி கழுமலம் (சீர்காழி) என்னும் ஊரில் இருந்த பட்டத்து யானையை அலங்கரித்து, அதன் கையில் மாலையைக் கொடுத்துக் கட்டவிழ்த்து விட்டனர். அது மேற்குத் திசை நோக்கி விரைந்து சென்றது. அதன் பின் பலர் ஆவலுடன் சென்றனர். சோழநாட்டு மக்களும், சேர பாண்டிய நாட்டினரும் சோழ

நாட்டு இளவரசனாக வரக்கூடியவன் யாரென்று அறிய ஆர்வம் கொண்டிருந்தனர். அப்பொழுது சேர நாட்டின் எல்லையிலிருந்த கருவூரைப் பட்டத்து யானை அடைந்தது. கரிகாலன் மறைந்து வாழ்ந்து வந்த சிறு குடிசையின் முன் வந்து நின்றது. கரிகாலனுக்கு மாலையிட்டு அவனைத் தூக்கித் தன் முதுகின்மேல் வைத்துக்கொண்டு சோழ நாட்டை நோக்கிப் புறப்பட்டது.

கரிகாலன் அரசு கட்டில் ஏறுதல்

கரிகாலன் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான். தெய்வத் திருவருளால் பட்டத்து யானை, பட்டத்துக்கு உரியவனையே அரசனாகத் தேர்ந்தெடுத்தது. சோழ நாடு செய்த தவம் பலித்தது. இரும்பிடர்த்தலையார் அங்கு வந்து கரிகாலன் இளஞ்சேட் சென்னியின் மகன் என்பதை அறிவித்தார். அமைச்சரும் சான்றோரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். கரிகாலன் இளம்பருவத்தினன் ஆயினும் மணிமுடி தரித்துச் சோழ சிங்காதனத்தில் ஏறினான். மீண்டும் காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனையில் தெய்வத் திருவருள் ஏற்றிய விளக்காய் ஒளியுடன் விளங்கினான்.

4. வெண்ணிப் போர்

வேளிர் சூழ்ச்சி

உலக இயல்பை அறியாத இளம்பருவத்தில் தெய்வத் திருவருளால் அரியணை ஏறிய கரிகாலன், இரும்பிடர்த்தலையார் கற்பித்த கல்வியின் துணைகொண்டு நாட்டைத் திறம்பட ஆண்டுவந்தான். அரசியல் வேலைகளில் கண்ணுங் கருத்துமாய் இருந்தான். முடி சூடியவுடன் அவன் செய்த முதல் வேலை படைப் பலத்தைப் பெருக்கியதுதான். சிங்கக் குட்டி பிறந்தபோதே பெரிய யானையின்மேல் பாய்வதுபோல் கரிகாலன் இளமையிலேயே பிற அரசர்களைத் தாக்கும் வீரம் பெற்றிருந்தான். கரிகாலன் முடி சூடுமுன் சோழ அரசைக் கைப்பற்ற எண்ணியிருந்த பகைவர்கள், இப்போது போர் செய்தாலன்றித் தம் எண்ணம் நிறைவேறாது என்று அறிந்து தம் படைப் பலத்தைப் பெருக்கினர். அவர்களில் பதினொரு வேளிர் ஒருங்குகூடி, பேரரசன் ஒருவன் உதவி இருந்தாலன்றி நாம் கரிகாலனை வெல்ல முடியாதென்று நினைத்துப் பாண்டிய நாடு சென்றனர். பாண்டியனைக் கண்டு சோழ நாட்டின் நிலையைக் கூறி அதன்மேல் படை எடுத்துவந்தால் தாங்களும் அவனுடன் சேர்ந்து போர் செய்வதாகக் கூறினர்.

சேர நாட்டு அரசன் துணையை நாடுமாறு பாண்டியன் கூறிய ஆலோசனையின்படி அவர்கள் சேர நாட்டை அடைந்து பெருஞ்சேரலாதன் என்னும் சேர அரசனைக் கண்டு தங்கள் கருத்தையும் பாண்டியன் ஆதரவையும் கூறினர். அவன் சோழ நாட்டின்மீது படையெடுக்க ஒப்புக்கொண்டு, தானே தலைமை பூண்டு போரை நடத்து

வ்தாகவும் கூறி, அதற்கு ஏற்ற ஆயத்தங்களைச் செய்யலானான். பதினொரு வேளிரும் பாண்டியனும் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வாராயினர்.

படையெடுப்பு

சேரன் தன் படைகளைப் பாண்டிய நாட்டின் வழியே செலுத்தி, அந்நாட்டுப் படையையும் வேளிர் படையையும் சேர்த்துக்கொண்டு, சோழ நாட்டின் தென்பகுதியில் படையெடுத்துவந்து வடக்கு நோக்கி முன்னேறினான். இதை முன்பே எதிர்பார்த்து படைதிரட்டி வந்த கரிகாலன் அப்படையுடன் புறப்பட்டான். பகைவர் படை காவிரிப் பூம்பட்டினத்தை முற்றுகையிடும் வரையில் காத்திருக்கக் கூடாதென்று விரைந்து முன் சென்றான். இதைக் கண்ட படைத் தலைவர்கள் வியப்புற்றனர். படை வீரருக்கும் மிக்க ஊக்கம் உண்டாயிற்று. அங்கங்கே வலிமை உள்ள மக்கள் தாமே வந்து படையில் சேர்ந்து கொண்டனர்.

வெண்ணிப் போர்

வெண்ணி என்னும் ஊரில் சோழப் பெரும்படையும் சேர பாண்டிய படைகளும் சந்தித்தன. சோழர் படைக்குத் தலைவன் கரிகாலன் ஒருவனே. பகைவர் படையில் சேரனும், பாண்டியனும், பதினொரு வேளிரும் படைத் தலைமை பூண்டனர். சோழ சரித்திரத்தில் நிகழ்ந்த பெரும் போர்களில் வெண்ணிப் போர் ஒன்று. ஒரு அரசனை இரண்டு பேரரசர்களும் பதினொரு சிற்றரசரான வேளிரும் எதிர்த்தனர். கரிகாலனோ இளையவன். ஆயினும் அவனுடைய ஆற்றல் எல்லோரினும் மேம்பட்டு இருந்தது. அவன் படைஞர்களுக்கு நாட்டுப்பற்று மிக்கிருந்தது. அதை ஊட்டியவர் இரும்பிடர்த்தலையார். போர்வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் வேண்டிய அளவிற்கு மிகுதியாகவே இருந்தன.

பகைவர் படை அளவில் பெரிதாயிருப்பினும் வெவ்வேறு தலைவர்களின் கீழ் போரிட்டது. அவர்களில் பலர் கூலிப் படைகள். அவர்களுக்கு நாட்டுப் பற்றோ உயர்ந்த கொள்கையோ இல்லை. உணவு முதலியன குறைந்தால், தொலைவிலுள்ள சேர நாட்டிலிருந்தோ பாண்டிய நாட்டிலிருந்தோ அவை வர வேண்டும், சோழ நாட்டுக் குடிமக்கள் தங்கட்கு மறைமுகமாக உதவி செய்வார்கள் என்று வேளிர்கள் நம்பியிருந்தார்கள். அவ்வாறு நடக்கவில்லை. பெரிய யானையின்மேல் இளங்கதிரவன்போல் ஆத்திமாலை சூடி விளங்கும் கரிகாலனைத் தெய்வமாக நினைத்த அவன் படைவீரர்கள் மிக்க வீரத்துடன் போர் புரிந்தனர்.

கரிகாலன் வெற்றி

கடும்போர் நடந்தது. முதல் முதல் வேளிர் படையில் தளர்ச்சி உண்டாயிற்று. அப்படைகள் வரிசை வரிசையாகப் பின் வாங்கி

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

ஓடின. எஞ்சியிருந்தோர் உயிர் நீங்கினர். பதினொரு வேளிரும் ஒருவர் பின் ஒருவராக மடிந்தனர். அடுத்தபடி கரிகாலன், பாண்டியன் படையைத் தாக்கினான். பாண்டிய நாட்டுப் படையும் தளர்ந்தது பாண்டியனும் இறந்தான். பின்னர்ச் சேரனது பெரும்படையோடு கரிகாலன் போர் புரிந்தான். பல போர்களில் வென்ற பெருஞ்சேரலாதனுக்கு எதிரில் கன்னிப் போர் செய்யும் கரிகாலன் நிமிர்ந்து நின்றான். இதைக்கண்ட படைத் தலைவர்களும் ஏனையோரும் வியந்தனர். கரிகாலன் விட்ட ஓர் அம்பு பெருஞ்சேரலாதன் மார்பில் பாய்ந்தது. அவன் தரையில் சாய்ந்தான். அவனைப் படைத்தலைவர்கள் தூக்கிச் சென்றனர். வீழ்ந்தவர்களோடு போர் செய்தல் அறமன்று. ஆதலால் போர் நின்றது. கரிகாலனுக்கு வெற்றி கிடைத்தது. பகைவர் படை பின்வாங்கி ஓடியது.

பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் நீத்தல்

அம்பு பட்டு வீழ்ந்த பெருஞ்சேரலாதனை அவன் நாட்டுத் தலைநகராகிய வஞ்சி மாநகருக்கு எடுத்துச் சென்றனர். அவன் மார்பில் பட்ட அம்பு முதுகுவழியே ஊடுருவிச் சென்றதால், முதுகில் புண் உண்டாகிவிட்டது. வீரர்களுக்கு மார்பில் புண் இருப்பது சிறப்பு; முதுகில் புண் இருப்பது இழிவு. இவ்விழிவுப் புண்ணோடு வாழ்வதற்குப் பெருஞ்சேரலாதன் விரும்பவில்லை. ஊருக்கு வடக்கே ஓரிடத்தில் அமர்ந்து உணவும் நீரும் இன்றி உண்ணாவிரதமிருந்து உயிர் விட்டான். அவன் மானத்தையும் வீரத்தையும் உறுதியையும் அனைவரும் பாராட்டினர். வெண்ணிப் போரில் வெற்றிபெற்ற கரிகாலனின் புகழ் நாடெங்கும் பரவியது.

5. இமயத்தில் புலி

சிற்றரசர் ஒன்பதின்மர் எதிர்ப்பு

கரிகாலன் சின்னஞ்சிறிய பருவத்தில் சேர பாண்டியர்களையும் பதினொரு வேளிரையும் வென்றதனால் சோழ நாட்டு மக்களுக்கு அவனிடத்தில் அளவற்ற மதிப்பு உண்டாயிற்று. நாட்டில் எங்கும் வெற்றி முழக்கம் ஒலித்தது. மீண்டும் ஒன்பது சிற்றரசர்கள் கரிகாலனுக்கு மாறாகச் சூழ்ச்சி செய்தனர். "கடுமையான போருக்குப் பின் படை வீரர்கள் வெற்றிக் களிப்பில் மூழ்கியிருக்கும் இச்சமயத்தில் நாம் எதிர்த்தால் எளிதில் வெற்றி பெறலாம். இனி நமக்குப் பகையில்லை என்ற இறுமாப்புடன் இருக்கும் இச்சிறுவன் வாழ்வைக் குலைக்கலாம்" என்று அவர்கள் நினைத்தனர்.

வெண்ணிப் போர் நடந்த சில மாதங்களில் வாகை என்னும் இடத்தில் மீண்டும் போர் தொடங்கியது. முடிமன்னர் எவரும் இப்போரில் எதிர்க்கவில்லை. சிற்றரசர்கள் ஒன்பதின்மர் மட்டும் எதிர்த்த

னர். வெண்ணிப் போரில் வெற்றிபெற்ற சோழப்படைகளுக்கு இந்தப் போரெம்மாத்திரம்? வாகைப் போர்க் களத்தில் மிக எளிதில் கரிகாலன் வாகைக் (வெற்றி) மாலை சூடினன். ஒன்பது குறுநில மன்னர்களில் சிலர் மாண்டனர்; சிலர் ஓடி ஒளிந்தனர்.

சோழநாட்டில் களை எடுப்பு

இரண்டாம் முறை வெற்றி பெற்ற கரிகாலன் மீண்டும் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தான். மீட்டும் மீட்டும் பகைவர் எதிர்த்தால் அடுத்தடுத்துப் போர் செய்யவேண்டியிருக்கும். சோழ நாட்டின் வளத்தைப் பெருக்குதற்கு எத்தனையோ பணிகள் செய்யவேண்டியிருக்க, முடியணிந்தவுடன் வில்லேந்தும் நிலைமையைப் பகைவர்கள் உண்டாக்கிவிட்டனர். இவ்வாறு போர் செய்துகொண்டே இருந்தால் நாட்டில் அமைதியான வாழ்க்கை நடப்பது எந்நாள்?

கரிகாலன் வீரமும் சோழ நாட்டுப் படைகளின் திறமையும் வெளிப்படுவதற்குப் பகைவர்களே காரணமாயிருந்தனர். இனியும் இவர்கள் இவ்வாறு படையெடுத்துக்கொண்டேயிருந்தால் அமைதியாக அரசாட்சி செய்ய முடியாது. ஆதலால் உடனே பகைவர்களை அடியோடு வேரறுக்கும் வேலையை முதலில் செய்து முடிக்கவேண்டுமென்று வளவன் உறுதி பூண்டான்.

நாட்டில் யார் யார் முன்னர்க் கிளர்ச்சியும் கலகமும் செய்தார்களோ அவர்களைப்பற்றிய செய்திகளையும் வரலாறுகளையும் கரிகாலன் விசாரித்துத் தெரிந்துகொண்டான். தன் படைப் பலத்தையும் பல மடங்கு பெருக்கினன். எயினர், நாகர், ஒளியர் என்ற கூட்டத்தினர் ஆங்காங்கே மக்களை அடக்கி ஆண்டுவந்தனர். அவர்களை முதலில் அடக்கினன். சேரபாண்டியர்கள் வெண்ணியில் தோல்வியுற்றும் அவர்கள் மரபினர் மீண்டும் எதிர்க்கக்கூடுமாதலால் திருமாவளவன் அந்த நாடுகளில் சென்று அவர்களைத் தன் ஆட்சிக்கு உட்பட்டவர்களாக்கினன்.

வடநாட்டுப் படையெடுப்பு

மேலும் மேலும் வெற்றி கிடைக்கவே திருமாவளவனுக்கு அளவில்லாத ஊக்கம் உண்டாயிற்று. தமிழ் நாட்டில் பகையின்றிச் செய்துகொண்டது போல வடநாட்டிலும் சென்று பகைகொள்வோரை வென்றும், நட்புக்கொள்வோரை ஏற்றும் திரும்பலாம் என்ற எண்ணம் தோன்றியது. அமைச்சர், சான்றோர், படைத்தலைவர் முதலியவர்களிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். அவர்களும் அக்கருத்தை ஆதரித்தனர்.

நல்ல நாள் பார்த்துக் கரிகாலன் படையுடன் புண்ணியத் திசையாகிய வடக்கு நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில் எதிர்ப்பே

இல்லை. படைகள் தடையின்றிச் சென்றன. ஒவ்வொரு நாடாகக் கடந்துசென்று இமயமலையின் எல்லையை அடைந்தான். சிவபெருமான் வீற்றிருக்கும் இமயமலையைக் கண்டவுடன் மகிழ்ச்சியுற்றான்.

இமயத்தில் புலிக்கொடி ஏற்றுதல்

தன் முன்னோர்களாகிய சோழ அரசர்கள் யாரும் செய்யாத பெருஞ்செயலைக் கரிகாலன் செய்து முடித்தான். பகையரசர் எவரும் இன்றி வழியில் உள்ள நாட்டினர் அன்புடன் உபசரிக்க இமாசலத்தை அடைந்த கரிகாலன், இச்சிறப்பை உலகம் என்றும் நினைவு கொள்வதற்கு ஏற்றபடி தான் சென்றடைந்த இமயமலைப் பகுதியில் தன் புலிக்கொடியை நாட்டுவித்தான். கொடி பலநாள் நிலைத்து நிற்காது. ஆதலால், பல இடங்களில் தன் புலிக்கொடியின் உருவத்தைக் கல்லிலே பொறிக்கச் செய்தான். கரிகாலன் புலி பொறித்த இடம் (சிக்கிம்) பகுதியில் உள்ளதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அந்தப் பகுதியில் 'சோழ மலைத் தொடர்' (சோழர் கணவாய்) என்று இரண்டு இடங்களின் பெயர்கள் வழங்கி வருகின்றன.

வச்சிரமகத நாட்டரசர்களை வெல்லுதல்

இமயத்தில் புலிக்கொடியை நாட்டிய பெருமிதத்துடன் தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்ட கரிகாலன்மேல் வடநாட்டு அரசர் சிலர்க்குப் பொறாமை மூண்டது. இப்போது 'பண்டில்கண்டு' என வழங்கும் வச்சிரநாட்டைக் கரிகாலன் கடந்து சென்றபொழுது அந்த நாட்டு வேந்தன் அவனை எதிர்த்துப் போர் செய்தான். அப்போரில் கரிகாலனே வென்றான். வச்சிரநாட்டு மன்னன் தன் தோல்விக்கு அடையாளமாக முத்துப் பந்தர் ஒன்றைத் தருவதாக வாக்களித்தான்.

வச்சிர நாட்டினின்றும் வெற்றி முழக்கத்தோடு வரும் கரிகாலனை மகத நாட்டு மன்னன் எதிர்த்துத் தோல்வியுற்றான். அத்தோல்விக்கு அடையாளமாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் 'பட்டி மண்டபம்' ஒன்றை அமைத்துத் தருவதாக அவன் வாக்களித்தான். இவ்விரு நாட்டிலும் கரிகாலன் பெற்ற வெற்றியைக் கேட்ட பிற அரசர்கள் அவனை எதிர்க்கத் துணியாமல் நட்புப் பூண்டனர். அவந்தி நாட்டு மன்னன் கரிகாலனை எதிர் கொண்டு அழைத்து உபசரித்து நட்புக் கொண்டான். அந்நட்புக்கு அறிகுறியாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் தோரணவாயில் ஒன்றைச் செய்வதற்கு அவன் இசைந்தான்.

காவிரிப்பூம்பட்டினம் அடைதல்

வடநாட்டில் இத்தகைய சிறப்புகளை எல்லாம் பெற்ற கரிகாலன் நகர மக்கள் வரவேற்கக் காவிரிப்பூம்பட்டினத்தை யடைந்தான். தமிழர் அனைவரும் கரிகாலன் அருஞ்செயல் கேட்டு மகிழ்ந்தனர்.

முன்பு வாக்களித்தபடி வச்சிர நாட்டு மன்னன் முத்துக் குவியலையும் கலைஞர்களையும் அனுப்பிக் காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனை

யில் பெரிய முத்துப் பந்தர் ஒன்றை அமைக்கச்செய்தான். மகத நாட்டு மன்னன் தன் நாட்டுச் சிற்பிகளை அனுப்பிப் புலவர்கள் கூடி ஆராய்ச்சி செய்யும் 'பட்டி மண்டபத்தை' அமைக்கச் செய்தான். மதுரையில் சங்க மண்டபம் இருந்ததுபோலக் காவிரிப்பூம்பட்டினத்தில் இப்பட்டி மண்டபம் விளங்கியது. அவந்தி மன்னன் காவிரிப்பூம்பட்டினத்தின் முகப்பில் தோரணவாயில் ஒன்றைச் சிறப்பாக அமைத்துத் தந்தான். தன் வீரத்தால் பகையொடுக்கி, இமயத்தில் புலி பொறித்து நான்கு திசையிலும் புகழ் பரப்பிய கரிகாலன் சிங்காதனத்தில் அமர்ந்து தன் நாட்டை வளம்படுத்தும் முயற்சியில் ஈடுபடலானான்.

6. உறையூரின் தோற்றம்

காவிரிக்குக் கரை கட்டுதல்

இமயத்தில் புலிக்கொடி நாட்டிய கரிகால் வளவன் புகழ் கடல் கடந்தும் பரவியது. சோழ நாட்டு வளத்தைக் காணவும் பண்டங்களை வாங்கவும் வரும் அயல்நாட்டு மக்கள், இம் மன்னன் காலத்தில் மேன் மேலும் அதிகமாக வந்தார்கள். சோழ நாட்டின் வளத்தைப் பெருக்கும் முயற்சிகளில் கரிகாலன் ஈடுபட எண்ணினான். முதலில் காவிரியின் நீரை ஒழுங்குபடுத்த நினைத்து, அதன் இரு பக்கங்களிலும் கரை கட்டத் தொடங்கினான். சோழநாட்டுக்கு மேற்கே உள்ள இடங்களிலும் காவிரிக்குக் கரைகட்ட வேண்டும் என்னும் தன் விருப்பத்தை அங்குள்ள அரசர்களுக்குத் தெரிவித்தான். அவ்வரசர்கள் யாவரும் அவனுடைய விருப்பத்திற்கு இணங்கிக் கரைகட்டத் தொடங்கினர்.

ருத்திரன் எதிர்ப்பு

அவர்களில் ருத்திரன் என்பவன் கரிகாலன் வேண்டுகோளை அசட்டை செய்தான். அவன் மரபினர் நெற்றிக் கண்ணையுடைய உருத்திரன்வழி வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக நெற்றியில் கண்ணைப் போன்ற குறியை அணிந்துகொள்ளும் வழக்கம் உடையவராய் இருந்தனர். அவன் அசட்டையை அறிந்த கரிகாலன் ஓர் ஓவியனை அழைத்து ருத்திரனைப் போல் ஒரு படம் எழுதச் செய்தான். அதில் நெற்றிக் கண்ணையும் அமைக்கச் செய்து அக்கண்ணைத் தன் வேலால் குத்தி அப்படத்தைக் கொண்டு போய் ருத்திரனுக்குக் காட்டச் செய்தான். படத்தை ருத்திரனிடம் சேர்த்தார்கள். நெற்றிக் கண்ணைக் குத்தியிருப்பதை ருத்திரன் பார்த்தான். "நெற்றியிலே கண் இருப்பதனால் செருக்கு அடையாதே அதை வேலால் குத்தி விடுவேன்" என்று அப்படத்தின் மூலம் கரிகாலன் எச்சரிப்பதாக அவன் உணர்ந்தான். தானும் காவிரிக்குக் கரை கட்டும் பணியில் ஈடுபடுவதாகக் கரிகாலனுக்குச் செய்தி அனுப்பினான்.

கரிகாலன் கரையைக் காணுதல்

காவிரிக்கு நல்ல கரை அமைந்தது. அக்கரையைக் காணக் கரிகாலன் யானை மீதேறிச் சென்றான். சோழ நாட்டு மக்கள் தம் உழைப்பினால் கட்டிய கரையைப் பார்த்துக்கொண்டே திருச்சிராப் பள்ளியை அடைந்தான். அங்கு மலைக் கோட்டையில் எழுந்தருளி யுள்ள தாயுமானேச்சுவரரையும், திருவரங்கத்தில் அறிதுயில் அமர்ந்த அரங்கநாதரையும், திருவானைக்காவிலுள்ள சிவபெருமானையும் வழி பட்டு மேற்கு நோக்கிப் புறப்பட்டான்.

கோழியின் எதிர்ப்பு

கரிகாலன் சிறிது தூரம் சென்ற போது பெரிய சேவல் ஒன்று பக்கத்திலிருந்து ஓடி வந்தது. கரிகாலனது பட்டத்து யானை மேலே செல்லாமல் தடைப்பட்டு நின்றது. கோழி படபடவென்று சிறகை யடித்துக் கொண்டும் கழுத்து, மயிரைச் சிலிர்த்துக் கொண்டும் விரைந்து ஓடி வந்து யானையின் காலைக் கொத்தியது. யானை திடுக் கிட்டது. கோழி யானையின் நான்கு கால்களிலும் மாறிமாறிக் கொத் தியது. கரிகாலன் அதைப் பார்த்து வியந்தான். வீரர்கள் கோழியை அடிக்க முயன்றபோது கரிகாலன் அவர்களைத் தடுத்தான்.

பின்னர் கோழி ஓடி மறைந்தது. இந்நிகழ்ச்சி கரிகாலன் எண் ணத்தைத் தூண்டியது. அவன் யானை மீதிருந்து கீழிறங்கினான். பெரும் போரிலும் கலங்காத யானை மயங்கி நிற்பதையும், அதன் காலில் இரத்தம் கசிவதையும் கண்டு வியந்தான். சின்னஞ் சிறிய கோழி இவ்வளவு பெரிய யானையை இத்தனை மக்கள் எதிரில் தைரிய மாக வந்து கொத்த அதற்கு எவ்வளவு நெஞ்சு உரம் இருக்க வேண்டும்? இந்த மண்ணில் தோன்றிய கோழியே இவ்வளவு வலிமை உடைய தானால் மக்கள் எத்தகைய மனவலிமை படைத்தவர்களாய் இருக்க வேண்டும். இம்மண்ணிற்குத் தனிப் பெருமை இருக்கின்றது" என்று எண்ணினான்.

உடன் வந்தவர்களை அனுப்பி விசாரித்ததில் அருகில் உறையூர் என்ற சிறிய ஊர் இருப்பது தெரிந்தது. "இப்பூமி வீரம் செறிந்தது. இந்த இடத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கே ஒரு நகரத்தை அமைத்துக் கோட்டை கொத்தளங்களும் கட்டவேண்டும். அதைச் சோழ ராஜதானியின் தலைநகராகக் கொள்ள வேண்டும். என்று முடிவு செய்தான்.

உறையூரை அமைத்தல்

திருமாவளவன் விரைந்து சென்று காவிரிக் கரையைப் பார்த்து விட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து உறையூரை அமைக்கும் வேலையில் முனைந்தான். சோழ நாட்டிலுள்ள சிறந்த பணியாளர்கள் காடாக இருந்த இடத்தில் மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் கட்டி

னர். அழகிய தெருக்களும் அணிமிக்க பொழில்களும் அமைந்தன. உயர்ந்தோங்கிய அரண்மனையும் கட்டப்பட்டது. சிற்றூராயிருந்த உறையூர் பெரிய நகரமாய்விட்டது. கரிகாலன் நல்ல நாளில் உறையூரிலிருந்த அரண்மனையில் குடிபுகுந்தான். அந்நகரத்தில் ஒரு சிவன் கோயிலையும் எடுப்பித்தான். கடற்கரை நகரமாகிய காவிரிப்பூம் பட்டினத்திலும், உள்நாட்டுத் தலைநகரமாகிய உறையூரிலும் திருமாவளவன் மாறி மாறி வசித்துவந்தான் கோழியினால் குறிக்கப்பெற்ற இடமாதலின் உறையூர்க்குக் 'கோழி' என்ற பெயரும் அமைந்தது. கோழியின் மூக்கினால் யானை தடைப்பட்டதால் அந்நகரில் உள்ள சிவன் கோயிலுக்கு 'மூக்கீச்சரம்' என்ற பெயர் வழங்கியது.

திருமணம்

கரிகாலனுடைய தந்தை அழுந்தூர் வேண்மானை மணம் செய்து கொண்டதுபோலவே, இவனும் வேளாளர் ஒருவருடைய மகளை மணம் செய்துகொள்ள விரும்பினான். சீர்காழிக்கு அருகிலுள்ள நாங்கூரில் கல்வி, கேள்வி அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த வேளாளச் செல்வர் ஒருவர் இருந்தார். அவருடைய திருமகளாகிய 'நாங்கூர் வேண்மாள்' என்பவளைத் திருமாவளவன் திருமணம் செய்துகொண்டு இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தான்.

7. கிழக்கோலம்

கரிகாலன் ஆட்சி

கரிகால் வளவன் ஆட்சியில் அறம், பொருள், இன்பம் பெருகின. காவிரிக்குக் கரைகட்டியதனால் அதன் நீர் சோழ நாட்டுக்குச் 'சோழ வள நாடு சோறுடைத்து' என்னும் பெயரைத் தந்தது, அதன் வண்டல் பாய்வதால் வயல்களுக்கு எருப்போடாமலே ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது. பலகாலமாக நெல் விளையாத இடங்களெல்லாம் விளை நிலங்களாக மாறின. ஒரு பெண் யானை படுக்கும் சிறிய இடத்தில் விளையும் நெல்லால் ஏழு ஆண் யானைகளைக் காப்பாற்றக்கூடியபடி சோழ நாட்டின் வளம் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த யவனர் (மேல்நாட்டவர்) வாணிகம் புரிந்தனர். மிளகு, ஏலம், ஜாதிக்காய், பட்டு, துகில், மயில்தோகை முதலிய பொருள்களை வாங்கித் தங்கள் நாட்டிற்கு அனுப்பினார். தம் நாட்டிலிருந்து பல வகையான விளக்குகளையும் பிற பொருள்களையும் கொண்டுவந்து விற்றார்கள். அரண்மனையிலும் பிற இடங்களிலும் யவனர் பலர் வேலையில் அமர்ந்தனர். கப்பல் வாணிகம் சிறப்புடன் நடைபெற்றது.

உறையூர் நீதி மன்றம்

திருமாவளவன் உறையூரில் ஒரு நீதி மன்றத்தை ஏற்படுத்தினான். அதற்கு அறங்கூறு அவையம் என்ற பெயர் வழங்கப்பட்டது. அதில்

கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்த அறுபது ஆண்டுகட்கு மேற்பட்ட சான்றோர்கள் உறுப்பினராய் இருந்தார்கள். திருமாவளவன் அதன் தலைவனாயிருந்தான். மக்கள் தங்களுக்கு நேர்ந்த குறைகளை அச்சபையில் முறையிட்டு நியாயம் பெற்றுவந்தனர். எந்தவகையான வழக்கானாலும் நன்கு விசாரித்து ஆராய்ந்து தீர்ப்புக் கூறும் சிறப்புப் பெற்று இருந்ததனால் உறையூர் நீதி மன்றம் உலகப் புகழ் பெற்றது.

முதியோர் வழக்கு

ஒரு நாள் சோழ நாட்டின் ஒரு பகுதியிலிருந்து சில முதியவர்கள் உறையூர் நியாய மன்றத்துக்கு வந்தனர். அப்பொழுது வேறொரு வழக்கின் விசாரணை நடந்துகொண்டு இருந்தது. அம்மன்றத்தில் பல முதியவர்கள் இருப்பதையும் ஒரு இளைஞன் அவர்களுக்குத் தலைவனாய் இருப்பதையும் கண்ட அவர்களுக்குச் சிறிது ஐயம் உண்டாயிற்று. "இவ்விளைஞன் இங்கு வரும் வழக்கில் சரியான முடிவு காணும் அநுபவம் உடையவனாய் இருப்பானோ?" என்று தம்முள் பேசிக் கொண்டார்கள், அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒற்றன் ஒருவன் கரிகாலனிடம் கூறினான். 'அவர்கள் ஐயம் நியாயமானதே' என்று சோழ மன்னன் கருதினான். அவர்கள் மனம் மகிழும் வகையில் நீதி வழங்கவேண்டுமென்று எண்ணினான்.

முதுமைக் கோலம்

மறுநாள் உரிய நேரத்தில் நீதி மன்றம் கூடியது. சான்றோர்கள் வந்து அமர்ந்தனர். அரசன் வந்திலன். யாரோ ஒரு முதியவர் வந்தார். அவருடைய தலை நரைத்திருந்தது. சபையில் வந்த அவர் அரசன் அமரும் ஆசனத்தில் அமர்ந்தார். சான்றோரை நோக்கி 'என்னை உங்கட்குத் தெரியவில்லையா?' என்று கேட்டார். அக்குரலால் அவரை யாவரும் தெரிந்து கொண்டனர். கரிகால்வளவனே முதியோன் போல் வேடம் பூண்டு வந்திருந்தான். "இவன் இளம் பருவத்தினன். நம் உரையின் முடிவைக் காணமாட்டான்" என்று முதல் நாள் கூறிய நரைத்த முதுமக்கள் உவப்படையும்படி தானும் நரை முடித்து வந்திருந்தான். முதல்நாள் வந்த முதியவர்கள் அன்று தம் வழக்கைக் கூற வந்தார்கள். "இளைஞன் என்று தாம் எண்ணியவன் திருமாவளவனே. அவன் தம் ஐயத்தை எவ்வாறோ அறிந்துகொண்டு இன்று முதுமைக்கோலம் பூண்டு வந்திருக்கின்றான். நம்முடைய அறியாமையை போக்குதற்கே இந்தக்கோலம் பூண்டிருக்கிறான்" என எண்ணி மகிழ்ந்தனர். அவர்களுடைய வழக்கை நன்கு ஆராய்ந்து அறங்கூறு அவையத்தின் கருத்தின்படி அரசன் தீர்ப்புக் கூறினான். அம்முடிவைக் கேட்ட முதியவர்கள் "குலவிச்சை (வித்தை) கல்லாமல் பாகம் படும்" என்று கூறிப் பாராட்டினர். இச்செய்தியை அறிந்த தமிழகம் முழுவதும் கரிகாலனைப் போற்றியது. புலவர்கள் அதைப் புகழ்ந்து பாடினார்கள்.

வெள்ளம் வருமுன் அணை போடவேண்டும்.

8. நாட்டுவளம் பாடிய நங்கை

முடத்தாமக்கண்ணியார்

திருமாவளவன் புகழ் தமிழ்நாடெங்கும் பரவியதால் அவனைப் புலவரும் பாணரும் நாடிவந்தனர். காவிரிப்பூம் பட்டினத்தில் நிறுவிய பட்டி மண்டபத்தில் புலவர்கள் தம் கவிகளை அரங்கேற்றினர். தமிழ் நூல்களை ஆய்ந்தனர். சேர சோழ பாண்டிய நாடுகளிலிருந்து புலவர்கள் அடிக்கடிவந்து கரிகாலனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றனர். ஒரு நாள் வளவனிடம் ஒரு பெண் புலவர் வந்தார். அவருக்குத் தாமக்கண்ணி என்பது பெயர். அவர் கால் முடமாயிருந்த தனால் யாவரும் அவரை 'முடத்தாமக் கண்ணியார்' என்றே வழங்கினர். முடத்தாமக்கண்ணியாரைக் கரிகாலன் வழக்கம்போல் வரவேற்றான். சிலகாலம் அப்பெண்மணியார் அரண்மனையில் தங்கி அங்கிருந்த புலவர்களோடு பேசி மகிழ்ந்தார். அவர் சோழநாடு நீர் நிலவளங்கள் நிரம்பப்பெற்று விளங்குவதைக் கண்டும் கேட்டும் அறிந்தவராதலால், அவற்றை ஒரு பெரிய பாட்டில் அமைத்துப் பாடவேண்டும் என்று கருதினார்.

பொருநர் ஆற்றுப்படை

தமிழில் ஒருவருடைய புகழை வெளிப்படுத்தப் பல வழிகள் இருக்கின்றன. வள்ளல்களிடம் பரிசு பெற்ற ஒருவர், பரிசில் பெறும் இடம் தெரியாமல் அலையும் மற்றவர்களைப் பார்த்து "நீங்கள் இன்னாரிடம் சென்றால் உயர்ந்த பரிசு கிடைக்கும்" என்று சொல்லி அவரிடம் போவதற்கு வழி காட்டும் முறையில் புலவர்கள் சில நூல்களைப் பாடி இருக்கிறார்கள். அவ்வகையான நூலுக்கு ஆற்றுப்படை என்று பெயர். (ஆறு=வழி, படை=செலுத்துதல்) பரிசில் பெறப் போகிறவர்கள் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் எனப் பலவகையாக இருப்பார்கள். இவர்களில் யாரை வழியனுப்புவதாகப் பாட்டு அமைகிறதோ அவர்கள் பெயரால் பாணாற்றுப்படை, புலவராற்றுப் படை, பொருநர் ஆற்றுப்படை என்று அந்நூலுக்குப் பெயர் அமையும், முடத்தாமக் கண்ணியார் கரிகாலன் மேல் பொருநர் ஆற்றுப்படை பாடினார். பொருநர் என்பவர்கள் கையில் தடாரி என்ற பறையை வைத்துத் தட்டிப் பாடுகிறவர்கள். அவர்களுடன் யாழ் வாசித்து பாடியும் ஆடியும் பரிசில் பெறும் விறலியரும (நடனமாடும் பெண்கள்) வருவர். தன்னை ஆதரிக்கும் வள்ளல் யாரையும் காணமல் வறுமையில் வருந்தி ஊர் தோறும் அலையும் பொருநன் ஒருவனைக் கண்டு, கரிகால்வளவனிடம் பரிசு பெற்ற பொருநன் ஒருவன், 'கரிகாலனிடம் சென்றால் பரிசு பெறலாம்' என்று அப்பொருநனிடம் சொல்வதாகப் பொருநர் ஆற்றுப்படையை முடத்தாமக் கண்ணியார் பாடினார்.

வைரத்தை வைரத்தாலேயே அறுக்க முடியும்.

பொருநர் ஆற்றுப்படையின் பொருள் — பொருநன் காட்டு வழிச் செல்லுதல்

பொருநன் ஒரு திருவிழாவிற்குப் போயிருந்தான். அங்கு அவனுடன் விறலி யாழிசைத்தாள். அவன் தடாரிப்பறை கொட்டினான். விழாவில் நான்கைந்துநாள் வயிறார அவர்கள் உண்டனர். விழா முடிந்தவுடன் அவ்வூரை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். உணவின்றி மெலிந்த சுற்றத்தாரும் அவர்களுடன் சென்றனர். காட்டு வழியே நடந்து அவர்களுக்குக் கால் சலித்துவிட்டது. ஒரு மரத்தின் நிழலில் சற்று அமர்ந்தார்கள்.

பரிசு பெற்று வரும் பொருநன் இவர்களைக் காணுதல்

கரிகால் வளவனிடம் சென்று விருந்துண்டு பரிசில் பெற்ற மற்றொரு பொருநன் அங்கே வந்தான். மரத்தின் நிழலில் இருந்த பட்டினிப் பட்டாளத்தைக் கண்டு வருந்தினான். "கரிகால் வளவனைக் காணுமுன் நாமும் இந்நிலையில் தான் இருந்தோம். இவர்களைக் கரிகாலனிடம் போகும்படிச் சொல்வோம்" என்று எண்ணி அருகில் சென்றான். பசியால் வாடியிருந்த பொருநன், யாரோ ஒரு பெருஞ் செல்வர் தன்னிடம் வருகிறார் என்று எண்ணி எழுந்து நின்று வணங்கினான். மற்றவர்களும் அவ்வாறே செய்தனர். அதைக்கண்டு வந்த பொருநன் கூறுவான். "நானும் உங்கள் இனத்தவன் தான். என்னைக் கண்டு மருள வேண்டா. உங்களைப் போலவே பசியும் வறுமையும் வாட்ட நானும் வருந்தினவன் தான். கரிகால் வளவனைக் கண்ட பிறகு என் வறுமை ஓடி விட்டது. நீங்களும் கரிகாலனிடம் சென்றால் உங்கள் வறுமை நீங்கும்.

கரிகால் வளவன் பொருநனிடம் காட்டிய அன்பு

"கரிகாலன் அரண்மனை வாசல் என்றும் திறந்தே இருக்கும். நம்மைப் போன்ற இரவலர் புகுந்தால் யாரும் தடை செய்ய மாட்டார்கள். பல நாள் பட்டினியால் உடம்பு இளைத்திருந்த நான் அங்குச் சென்றேன். விடியற்காலையில் என் கையழுக்குப் படிந்திருந்த தடாரியைக் கொட்டினேன். நான் இருந்த இடத்திற்கே கரிகால்வளவன் வந்து விட்டான். நெடு நாட்களாகக் காணாத உறவினனைக் கண்டது போல் என்னுடன் பேச ஆரம்பித்தான். நான் இருந்த கோலம் எத்தகையது? என் இடுப்பிலே இருந்த கந்தல் வேர்வையிலே நனைந்து பேனுக்கு இருப்பிடமாய் இருந்தது. அதைப் பலமுறை தைத்து உடுத்தியிருந்தேன். அதைக் கரிகாலன் களைந்தெறியச் சொல்லி மிக மெல்லிய பூவேலை செய்த ஆடையை அணிவித்தான். பிறகு மிக இனிமையான பல்வகைப் பானங்களைப் பொன் கிண்ணத்தில் அழகிய பெண்கள்

ஊற்றித்தர நான் வாங்கிக் குடித்துக் கொண்டேயிருந்தேன். என் தாகமும் பசியும் நீங்கின. பிறகு இளைப்பாறினேன்.

முதல் நாள் பார்த்தவர்கள் என்னை அப்பொழுது பார்த்தால் அடையாளம் தெரியாது. ஆடை அலங்காரங்களுடன் விளங்கினேன். எனக்கே பொறுக்க முடியாமல் இருந்த உடை நாற்றமும் உடல் நாற்றமும் மாறி நறுமணத்தோடு விளங்கினேன். இது கனவோ, நனவோ? என்ற எண்ணமும் எனக்கு உண்டாகிவிட்டது. அங்கே உள்ள பண்டங்களை எப்படி உபயோகிக்க வேண்டுமென்பதைப் பணியாளர்கள் எனக்குச் சொல்லித் தந்தார்கள்.

'பக்குவமாக வெந்த இறைச்சியோடு கலந்த விருந்தைப் பக்கத்திலிருந்து 'அதை உண்ணுங்கள் இதை உண்ணுங்கள்' என்று கரிகாலன் சொல்லச் சுடச்சுடச் சாப்பிட்டேன். ஒருவகை உணவு சலித்து விட்டால் வேறு வகையான பணிகாரங்களைத் தந்தார்கள். முனை முறியாத அரிசியினால் சமைத்த சோற்றை உண்டேன். இப்படித் தினமும் உண்டு உண்டு என் பற்களும் தேய்ந்து விட்டன. பலநாள் தங்கியிருந்த பிறகு, விடை பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணி 'எங்கள் ஊருக்குப் போய் வருகிறோம்' என்று மெல்லச் சொன்னேன். அவன் வெகுண்டு 'எங்களை விட்டுப் போகிறீர்களா?' என்று கேட்டான். நாங்கள் போகத் தீர்மானித்திருப்பதைத் தெரிந்து கொண்டு வருந்தினான். உடனே எங்கட்கு யானையையும் விலையுயர்ந்த பொருள்களையும் பரிசிலாகத் தந்தான். அப்பரிசில்களோடு நான் திரும்பி வருகின்றேன்.

"அவன் சோழ நாட்டு மன்னன். இளஞ்சேட் சென்னியின் மகன். சேர பாண்டியர்களை வெண்ணிப்போரில் வென்றவன். அவனிடம் போனால் உங்கள் வறுமை இருந்த இடம் தெரியாமல் மறையும்."

கரிகாலன் உபசரிக்கும் முறை

"கரிகாலனை அணுகித் தொழுது நின்றால் அவனுடைய அன்புப் பார்வை உங்கள் மேல் படும். கன்றைப் பிரிந்த பசு, கன்றைப் பார்ப்பது போல் உங்களை அன்பு ததும்பப் பார்ப்பன். யாழ் ஒலியும் தடாரிப்பறை யொலியும் கேட்டபோதே உங்கள் தகுதியைத் தெரிந்து கொள்வான். உங்கள் இடுப்பிலுள்ள கந்தையைக் களைந்து பட்டாடையை உடுக்கச் செய்வான். நல்ல மது வகைகளை அருந்தக் கொடுப்பான். பொன்னாலாகிய தாமரைப் பூவை உங்கள் தலையில் சூட்டுவான், விறலியர் அணியும்படி பொன்னரி மாலையை அளிப்பான். நீங்கள் பகிர்ந்து கொள்ளும்படி குதிரைகள் பூட்டிய தேரையும், யானைகளையும் மிகுதியாக வழங்குவான். 'ஊருக்குப் போகிறோம்' என்று சொன்னால் உங்களை எளிதில் அனுப்பமாட்டான். அவனுடைய அன்புக்கு ஈடாக எதனையும் சொல்லக்கூடாது' என்று கூறினான்.

காவிரியின் சிறப்பு

பின் சோழநாட்டின் நிலவளத்தைக் கூறினன். சோழ நாட்டில் எவ்வளவு சிறப்பு இருந்தாலும் அவற்றுக்கு மேற்பட்ட சிறப்பை உடையது காவிரியாறு. காவிரி எந்த நாட்டில் தோன்றி எவ்வெந் நாட்டின் வழியாக வந்தாலும் அதன் முழுப்பயனை அடைவது சோழ நாடு. வெயிலால் மரங்கள் வாடினும், அருவி வறண்டாலும், மழை பெய்ய மறந்தாலும், எங்கும் பஞ்சம் பறந்தாலும் நீர்வளம் பொய்யாமல் பெருகுவது காவிரியாறுகும். மலைப்பகுதியிலிருந்து மலை விளை பொருள்களைக் காவிரி வெள்ளம் அடித்து வருகிறது. வாசனைக் கொடிகளும் நரந்தைப் புல்லும் அகிலும் சந்தனமும் காவிரியில் மிதந்து வருகின்றன. சோழநாட்டின் குளத்திலும் மடுவிலும் காவிரி தன் நீரை நிரப்புகின்றது. அங்கே மகளிர் நீரில் மூழ்கி விளையாடுகின்றனர். நெற்பயிர் சிறப்பாக வளருகின்றது. நெற்கதிர் பொன்மலை போலக் குவிக்கப்படுகின்றன. நெல்லைக் குதிர்களில் நிரம்பக் கொட்டுகிறார்கள். ஒவ்வொரு வேலியும் ஆயிரம் கலம் நெல் தருகிறது. எல்லாம் காவிரியின் சிறப்பு. சோழநாட்டைக் காவிரிதான் காப்பாற்றுகிறது.

இவ்வாறு சோழநாட்டை முடத்தாமக் கண்ணியார் வருணித்து 248 வரிகளையுடைய பொருநராற்றுப் படையைப் பாடி முடித்தார். அதைக்கேட்ட கரிகாலன் அவருக்குச் சிறந்த பரிசில்களை அளித்தான்.

9. பாட்டும் பரிசும்

பட்டினப் பாலை

முடத்தாமக் கண்ணியார் கரிகாலனைப் புகழ்ந்து பொருநராற்றுப் படை பாடிய பிறகு கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் கரிகாலனது காவிரிபூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பட்டினப்பாலை என்னும் நூலை இயற்றினார். 301 அடிகளைக்கொண்ட அந்தப் பாட்டு காதலன் ஒருவன் சொல்வதுபோல் அமைந்திருக்கிறது. இல்லறம் நடத்துதற்குவேண்டிய பொருளைத் தேடுதற்குத் தன் காதலியைப் பிரிந்து செல்ல அவன் முதலில் நினைக்கிறான். பின் அவளைப் பிரிவது துன்பத்தைத் தரும் என்ற எண்ணம் உண்டாகிறது. அப்போது தன் நெஞ்சை நோக்கி "காவிரிப்பூம்பட்டினத்தையே பெறுவதாயிருந்தாலும், கரிகாலன் வேலைக் காட்டிலும் வெப்பமுடைய பாலையைக் கடந்து யான் வரமாட்டேன். என் காதலியின்மேனி அம்மன்னன் செங்கோலைவிடக் குளிர்ந்தது" என்று சொல்லுகிறான். இப்படிச் சொல்லும் வகையில் காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமையும் கரிகாலனுடைய பெருமையும் பட்டினப்பாலையில் விளக்கப்படுகின்றன.

ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கவேண்டும்.

பட்டினப்பாலையின் பொருள் — சோழநாட்டின் வளம்

இனி பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ள பொருள்களை நோக்கு வோம். "சுக்கிரன் வடக்கே இருந்தால் மழை பொழியும். தெற்கே சென்றால் மழையின்றிப் பஞ்சம் உண்டாகும். அவ்வாறு பஞ்சம் உண்டானாலும் குடகு மலையிலிருந்து வரும் காவிரி தான் பொய்யாமல் நீரைப் பரப்பிப் பொன்னைக் கொழிப்பது சோழநாடு. அந்நாட்டில் கரும்பும், நெல்லும், தென்னையும் கமுகும், மஞ்சளும் சேம்பும், மாவும் பனையும், இஞ்சியும் வளர்ந்து நல்ல பலனைத் தருகின்றன. நெல்லை உலர்த்தும் மகளிர் அதைத் தின்ன வரும் கோழியை ஓட்ட, கல்லோ வேறு பொருளோ இல்லாமையால் தம்முடைய காதில் உள்ள குழையை எடுத்துக் கோழியின்மேல் எறிந்து ஓட்டுகிறார்கள். அக் குழைகள் தெருவில் கிடந்து சிறு குழந்தைகள் தள்ளிச்செல்லும் நடை வண்டிகளைத் தடுக்கின்றன. ஒன்றுக்கொன்று அருகில் உள்ள பல ஊர்கள் நிறைந்தது சோழநாடு. அவ்வூர்களில் பகைவரால் உண்டா கும் அச்சம் இல்லை. அந்நாட்டில் கடற்கரையில் விளங்குவது காவிரிப் பூம்பட்டினம்.

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு

காவிரிப்பூம்பட்டினத்துக் கடல் துறையில் படகிலே உப்பைக் கொண்டுவந்த பரதவர்கள், நெல்லுக்கு அதை விற்றுப் படகில் நெல்லை நிரப்பிக் கழிகளின் பக்கத்தில் அப்படகுகளைக் குதிரைகள்போல் கட்டியிருக்கிறார்கள். நகரின் புறத்தில், தோப்புகளும், பூஞ்சோலை களும், நன்னீர்ப் பொய்கைகளும் உள்ளன. அவற்றுள் மிகப் பெரிய நீர் நிலைகள் இரண்டு உள. அவற்றை "இரு காமத்திணை ஏரி" என்று சொல்வார்கள். இந்த ஏரிகளுக்கு அப்பால் சோழ அரசனது புலிச் சின்னம் பொறித்த கதவுகளையுடைய மதில் இருக்கின்றது.

அறச்சாலை

நகரத்துக்குள் புகுந்தால் முதலில் காணப்படுவது அன்னதானம் செய்யும் அறச்சாலை. அங்குச் சோற்றை வடித்த கஞ்சி ஆற்றைப் போல ஓடுகிறது. கஞ்சியைக் குடிக்க வரும் காளை மாடுகள் தங்க ளுள் சண்டையிடுகின்றன. கஞ்சி பாயும் இடம் சேறாகி, பிறகு வண்டிகள் செல்வதால் காய்ந்து புழுதி பறந்து அருகிலுள்ள மாளிகை களில் படிகிறது. அறச்சாலையின் அருகே பசுக்களையும் எருதுகளை யும் காக்கும் கோசாலைகள் இருக்கின்றன. அவற்றினுள் கேணிகள் இருக்கின்றன. அப்பால் தவஞ்செய்பவர்களின் மடங்களும், முனி வர்களது வேள்விச்சாலையும், காளிகோயிலும் உள்ள இளமரச் சோலைகளும் காணப்படும்.

பரதவர் வீதி

கடற்கரைப் பக்கத்தில் பரதவ மக்கள் தமக்கு விருப்பமான ஊனைத் தின்று, அடப்பம் பூவைத் தலையில் சொருகிக்கொண்டு ஆடு

களை முட்டவிட்டும், காடை கவுதாரிகளைச் சண்டையிடச் செய்தும், மற்போர்செய்தும் விளையாடுகிறார்கள். அத்தெருவில் உறைக்கிணறுகள் உள்ளன. பன்றிகளையும் கோழிகளையும் வளர்க்கிறார்கள். அமாவாசை, பௌர்ணமிகளில் மீன் பிடிக்கப்போகாமல் தம் தெய்வமாகிய வருணனுக்குப் பூசை போடுகிறார்கள். மீனின் கொம்பை நட்டு அதில் வருணனை எழுந்தருளிவித்து மனைவிமாருடன் வழிபடுகிறார்கள். கூதாளம்பூ, தாழம்பூக்களைச் சூடி, பனங்கள்ளைக் குடித்து, காவிரி கடலொடு கலக்குமிடத்தில் தீவினை தீரக் கடலாடிப் பின் நன்னீரிற் குளிக்கின்றார்கள்.

பெரிய வீதிகள்

பெரிய வீதிகளில் உயர்ந்த மாளிகைகள் உள்ளன. வானுலகம் போன்ற இன்பம் உடைய அவற்றில் உள்ள பெண்கள் பாடல் கேட்டும், நாடகம் பார்த்தும் மகிழ்ந்து, மதுவருந்தி, கணவருடன் மகிழ்ந்திருக்கின்றனர். விளக்குகள் விடியற்காலத்திலும் எரிகின்றன. இரவில் மீன் பிடிக்கச் செல்லும் பரதவர் அவ்விளக்குகளை எண்ணுகின்றனர்.

பண்டசாலை

பரதவர் தெருவில் பண்டசாலை உள்ளது. அங்குக் கடுமையான காவல் உண்டு. உள்நாட்டுப் பொருள்களை அங்குக் குவித்துப் புலிப் பொறி பொறித்துச் சுங்கம் வாங்கிக் கப்பலில் ஏற்றி வெளிநாட்டுக்கு அனுப்புகின்றனர். வெளிநாட்டுப் பொருள்களுக்கும் அவ்வாறே புலிப் பொறி பொறித்துச் சுங்கம் வாங்குவர். அதன் எதிரில் மூட்டைகள் மலைபோல் குவிந்திருக்கும். சுங்க அதிகாரிகள் நேர்மையுடன் கடமைகளைச் செய்கிறார்கள். அவர்களும், ஏவலாளர்களும் சோர்வின்றி வேலை செய்கின்றனர்.

பல கொடிகள்

திருமகள் விளங்கும் கடை வீதியில் உயர்ந்த மாளிகைகள் உள்ளன. இன்ன பொருள் இங்கே விற்கப்படும் என்பதைக் காட்டும் பலவகைக் கொடிகள் அங்கு உள. பல நூல்களைக் கற்றவர் வாதம் செய்ய நாட்டிய கொடிகளும் அவர்கள் வீட்டு வாயிலில் உண்டு. கப்பலில் உள்ள கொடிகளும், கள் விற்பவர் நட்டுள்ள கொடிகளும் தனித் தனி தோன்றும்.

ஆவண (கடை) வீதி

இங்குக் கப்பலில் வந்த பலநிறக் குதிரைகள் ஒரு பக்கம் நிற்கின்றன. பிறநாட்டுக்குச் செல்லும் மிளகு மூட்டைகள் மலை மலையாகக் குவிந்துள்ளன. இமயத்துப் பொன்னும் மணியும், மேற்கு மலையில் விளைந்த சந்தனமும் அகிலும், பாண்டி நாட்டு முத்தும் பவளமும், கங்கையிலும், காவிரியிலும் உண்டான பொருள்களும், ஈழத்திலும்,

காழகமாகிய பர்மாவிலும் விளைந்த பொருள்களும் இங்கு விற்கப்படு கின்றன. வாணிகர்கள் நேர்மை தவறுமல் வியாபாரம் செய்கின்ற னர். வேளாளர்கள் நடுநிலையுடன், கொலை, களவு செய்யாமல் வாழ் கின்றனர். பசு காக்கின்றனர். அறம் புரிகின்றனர். எங்கும் வாணி கம். உலகத்து எம் மொழியும் அங்குப் பேசப்படும். அம்மக்களையும் அங்குக் காணலாம்: எப்பொழுதும் விழா. காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை முழுதும் கூறமுடியாது.

கரிகாலன் பெருமை

"கரிகாலன், பகைவரிட்ட சிறையிலிருந்தான். பின் அரசுரிமை பெற்றுன். பல போர்களில் வென்றுன். பல அரசர்களைப் புறங்கண் டான். காடு கெடுத்து நாடாக்கினான். குளம் வெட்டி, வளம் பெருக் கினான். உறையூரை விரிவாக்கி, அரண்மனை நிறுவிக் குடியேற்றி னான்" எனப் புகழ்ந்து பட்டினப்பாலையைப் பாடி முடித்த உருத்திரங் கண்ணனார் அந்நூலைக் கரிகாலன் அவைக்களத்தில் அரங்கேற்றினார். புலவர் அதைக் கேட்டுப் பாராட்டினர். கரிகாலன் அப் புலவருக்குப் பதினாறு லட்சம் பொன்னையும் ஆடை அணிகளையும், மணிபாரத்தை யும் பரிசளித்தான். யாவரும் பாட்டுக்கேற்ற பரிசு எனப் பாராட் டினர்.

10. இழந்து பெற்ற காதலன்

ஆதிமந்தி திருமணம்

கரிகாலனுக்குப் பல மக்கள் பிறந்தனர். அவர்களுள் ஆதி மந்தி என்னும் மகள் அழகில் சிறந்து கலையறிவில் மேம்பட்டு விளங்கி னள். அவளை மணக்கப் பலர் விரும்பினர். சேர இளவரசன் ஆட் டன் அத்தி (நடனமாடும் அத்தி) என்பவன் கரிகாலன் அவைக்களத் துக்கு வந்தான். அவனது தோற்றத்தையும், கலையறிவையும் கண்ட ஆதிமந்தியின் உள்ளமும் அத்தியின் உள்ளமும் ஒன்றுபட்டன. கரி காலன் அவ்விருவர்க்கும் சிறப்புடன் திருமணம் செய்வித்தான். இரு வரும் அன்பு கலந்த நெஞ்சுடன் இன்புற்று வாழ்ந்தனர்.

அத்தி காவிரி நீராடல்

ஆடி மாதத்தில் காவிரியில் புது வெள்ளம் புதுமணப் பெண் போல் மலர்களையும், தளிரையும் சுமந்து பெருகிற்று. கடலை நோக்கி விரைந்து சென்றது. சோழ நாட்டார் காவிரியை வரவேற்று வழி பாடு செய்து 'புதுப் புனல் விழா'க் கொண்டாடி மகிழ்ந்தனர். கரி கால் வளவனும் ஆட்டனத்தியும், ஆதிமந்தியும் காவிரியைக் காணக் கழார் என்னும் இடத்திற்குச் சென்றனர். அங்கே கூடாரம் அடித் துத் தங்கினர். காவிரி வெள்ளத்தைக் கண்ட அத்தி கூத்தாடினான். காவிரியில் குதித்தான், நீந்தினான். கரையில் உள்ளவர்க்குத் தன் ஆடல் திறமைகளைக் காட்டி விளையாடினான். மேன்மேலும் நீராடும்

ஆவல் பெருகியது. நீரோட்டம் அதிகமாயுள்ள இடத்தில் சென்றதனால் அவன் கைகள் ஓய்ந்தன. நிலைகொள்ளாத ஆழத்தில் சிக்கிக் கொண்டு தடுமாறினான்.

அத்தி காவிரி வெள்ளத்தில் போதல்

அவன் தடுமாறுவது கண்ட ஆதிமந்தி 'ஐயோ ஐயோ!' என்று கதறினாள். அதைக் கேட்ட அரசனும், ஏவலாளரும் விரைந்து வந்தனர். ஆற்று வெள்ளம் அடித்துச் செல்லும் அத்தியைக் காப்பாற்றப் பலர் காவிரியில் குதித்து நீந்திச் சென்றனர். இரு கரையும் செல்லும் பெரு வெள்ளத்தில் அத்தியைக் கண்டு மீட்க முடியவில்லை. சில சமயம் தெரிந்த அத்தியின் உருவம் மறைந்து விட்டது எனினும் பலர் குதிரை மீதேறியும், படகிலும் தேடிக் கொண்டே சென்றனர். ஆதிமந்தி காவிரியின் கரை வழியே கிழக்கு நோக்கிச் சென்று கொண்டேயிருந்தாள்.

ஆதிமந்தியின் விடா முயற்சி

ஆதிமந்தி கடலுடன் காவிரி சேரும் இடம் வரை சென்றாள். காவிரியையும், கடல் அரசனையும் நோக்கிப் புலம்பினாள். 'என் கணவனைப் பெற்றாலன்றி நான் திரும்பேன்' என வஞ்சினம் கூறினாள். 'நானும் காவிரியில் விழுந்து உயிர் விடுவேன்' என்றாள். "காவிரி அன்னையே, என் கணவரை நீ விழுங்கலாமா? உன் கரையை அழகு செய்த கரிகால் வளவன் மகளாகிய நான் உன் தங்கையல்லவா? என் காதலரை நீ கவர்ந்து கொள்ளலாமா? அவரை என்னிடம் கொண்டு வந்து கொடு" என்று முறையிட்டாள். "கடலரசனே, உன்னிடம் என் காதலர் தஞ்சம் புகுந்தாரோ? அவர் உடலைப் பவளம் போலவும், முத்துப் போலவும் உன் திரு வயிற்றில் அடக்கிக் கொண்டாயோ? என் இன்னுயிர்க் கணவனை இங்கே கொண்டு வந்து கொடுத்தருள்" என்று வேண்டினாள்.

ஆட்டனத்தியின் உடல் கடலில் மிதந்தது. அதைக் கரைக்குக் கொணர்ந்து முதல் உதவி புரிந்தனர். நீரில் மூழ்கும் பயிற்சியால் அத்திக்கு உயிர் இருந்தது. நீரை வெளிப்படுத்திய பின் மூச்சு விடலானான். ஆட்டனத்தி பிழைத்துக் கொண்டான். ஆதிமந்தி இழந்த காதலனை மீண்டும் பெற்றாள். அவள் கற்பின் திறத்தை அனைவரும் போற்றினர்.

முடிவு

கரிகாலன் மனைவி மக்களுடன் நெடுங்காலம் வாழ்ந்தான். 85 வயது வரை அரசாண்டான். சோழர் குலத்தின் சூரியனைப் போல் அவன் விளங்கினான். அவன் முயற்சியால் காவிரி கரை பெற்றது; சோழ நாடு வளம் பெற்றது; தமிழ் பாடல் பெற்றது. அப்பாடலின் வாயிலாய் இன்றும் கரிகாலன் புகழை நாம் அறிந்து வாழ்த்துகின்றோம்.

இரும்புத் தூணைச் செல் அரிக்குமா?

கரிகால் வளவன்

நீதிகள்

1. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது."
(தெய்வத் திருவருளால் கரிகாலன் அரசனானான்).

2. "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்"
"முயற்சி திருவினை யாக்கும்."
(கரிகாலன் இளையவனாயினும் தன் முயற்சியால் பல அரசர்களை வென்று பலநாடுகளைத் தன் கீழ்ப்படுத்தி இமயத்தில் புலிக்கொடி நாட்டினான்).

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு." (திருக்குறள்).

பொருள்—சோம்பல் இல்லாத அரசன், திருமால் திருவடியினால் அளந்த உலகம் முழுதும் ஆள்வான்.

3. "குலவிச்சை (வித்தை) கல்லாமல் பாகம் படும்."
(பழமொழி நானூறு)

பொருள்—குலத்தொழில் கற்காமலே வரும்.

(இளையனாயினும் சோழ அரசர் குலத்துக்குரிய முறை வழுவாமல் கரிகாலன் முதியவர்க்கு நீதி வழங்கினான்).

4. "கற்புடைய மகளிர்க்குக் கணவனே தெய்வம்"
(ஆதிமந்தி தன்கணவனை இழந்து, விடாமுயற்சியால் மீண்டும் பெற்றாள்).

"மூச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக்கரமே அளந்ததால்—செயச்செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால் நெருப்புற்று."

(பொருநராற்றுப் படை உரையில் உள்ள தனிப் பாடல்).

பொருள்—மூவுலகத்தையும் அளக்க நீட்டிய கரிகாலன் கால், நெருப்பால் கரிந்ததால் இவ்வுலகத்தை மட்டும் அளந்தது.

இலக்கணம் பரம ஔஷதம்.

2. உதயணன்

கதைச் சுருக்கம்

வத்தவ நாட்டு மன்னன் சதானிகன் சேதிநாட்டு இள வரசி மிருகாபதியை மணந்தான். கருவுற்ற அவள் நிலா முற்றத்தில் உறங்கும்போது சரபப்பறவை அவளைத் தூக்கிச் சென்று விபுல மலைச்சாரலில் விட்டது. அங்குத்தான் உதயணன் பிறந்தான். சேடகமுனிவர் காப்பாற்ற பிரமசுந்தர முனிவர் அவனுக்குக் கல்வி கற்பித்தார். அவர் மகன் யூகி உதயணனின் உற்ற நண்பனானன்.

உதயணன் யாழிசைக்கும்போது தெய்வயானை அவன் முன்தோன்றி அவனுக்கு அடிமையாயிற்று. பிறகு விக்கிரன் உதயணனை வைசாலிக்கு அரசனாக்கினான்.

அவந்தியரசன் பிரச்சோதனனுக்கு வாசவதத்தை என்ற மகள் இருந்தாள். கப்பம் கட்டாததால் பிரச்சோதனின் மந்திரி சாலங்காயன் வஞ்சனையாக உதயணனைச் சிறைப்படுத்தினான். ஆருயிர் நண்பனைக்காக்க யூகி தெய்வ ஆவேசங் கொண்டவன்போல் நடித்து சிறைவாசலில் உதயணனைச் சந்தித்தான்.

யூகியின் சூழ்ச்சியால் நளகிரி என்னும் பட்டத்து யானைக்கு மதம் பிடித்தது. பிரச்சோதனனின் வேண்டுகோளின்படி உதயணன் அதையடக்கினான். பகை மறைந்து நண்பராயினர். உதயணன் வாசவதத்தைக்கு வீணைக் கற்றுக்கொடுத்தான். காதல் தோன்றிக்கனிந்தது. யூகி தந்திரத்தால் நீர்விழா நடக்க ஏற்பாடு செய்வித்தான். அப்பொழுது அவனுடைய சூழ்ச்சியால் நகரில் தீவிபத்து ஏற்பட்டது. குழப்பத்தில் உதயணன் வாசவதத்தையுடன் பத்திராபதி என்ற யானைமீதேறி நகரைவிட்டு வெளியேறினன். சயந்தி சென்று வாசவதத்தையை மணந்தான். யூகி அரசியல் காரணமாக வாசவதத்தையைப் பிரித்தான்.

பதுமை என்பவளை உதயணன் மணந்து வாழும்போது வாசவதத்தையின் பிரிவினல் மிக வருந்தினன், பிரிந்தவர் கூடினர். இறந்த பத்திராபதிக்கு நினைவுச் சின்னம் எழுப்பினன். பதுமையின் மகன் கோமுகன்பால் அரசை ஒப்படைத்து தவம் செய்து இன்பவுலகு எய்தினன்.

இல்லாது பிறவாது; அள்ளாது குறையாது.

கட்டுரைத் தலைப்பும் குறிப்பும்

1. பிறப்பும் வளர்ப்பும்

முன்னோர் - சேடகன் துறவு - மிருகாபதி - பிறப்பு - சேடக முனிவர் - பிரமசுந்தர முனிவர் - உதயணன் தெய்வயானையைப் பெறுதல் - கனவில் யானை கூறியது.

2. உதயணன் அரியணையேறுதல்

வைசாலிக்கு வருதல் - உதயணன் முடி சூடல் - பிரிந்தவர் கூடல் - உதயணன் ஆட்சி - தெய்வயானை போதல் - யானையைத் தேடுதல்.

3. உதயணன் சிறைப்படுதல்

வாசவதத்தையின் பிறப்பு - சாலங்காயன் கூறிய உபாயம் - மாய யானை - உதயணன் சிறைப்படுதல் - யூகிக்கு ஓலை.

4. யூகி உதயணன் இருக்குமிடம் அறிதல்

யூகியின் சூளுரை - யூகியின் மாயச் சாக்காடு - நண்பர்களின் உதவி - யூகி மாறு வேடம் பூணல் - மன்னன் அறிதல் - யூகியின் அஞ்சாமை.

5. உதயணனைச் சிறைமீட்டல்

நளகிரி - நளகிரி மதங்கொளல் - மன்னனின் வேண்டுகோள் - உதயணன் நளகிரியை அடக்குதல் - உதயணனும் வாசவதத்தையும் கண்டு பழகுதல் - சாங்கியத்தாய் தன் வரலாறு கூறல் - அரங்கேற்றம்.

6. உதயணன் வாசவதத்தையை உடன்கொண்டு செல்லல்

யூகி சூழ்ச்சி - நீர் விழா - யூகியின் முன் ஏற்பாடு - உதயணன் வெளியேறுதல் - மன்னன் செய்தி அறிதல் - பத்திராபதி உயிர் நீத்தல்.

7. இடைவழிப் போர்

வேடுவருடன் போர் - இடவகன் உதவி.

8. உதயணன் வாசவதத்தை திருமணம்

வரவேற்பு - திருமணம் - யூகியின் செயல்.

9. வாசவதத்தையைப் பிரிதல்

யூகியின் வேண்டுதல் - சாங்கியத்தாய் வருகை - யூகியின் மாயச் சாக்காடு - உதயணன் புலம்பல் - உண்டாட்டு அயர்தல் - முனிவர் கூற்று - சுருங்கை வழி - வேட்டையாடச் செல்லல் - யூகியை அடைதல் - உதயணன் வருந்துதல்.

உடையவன் போகாவேலை ஒருமுழம் கட்டை.

10. பதுமை மணம்

உதயணன் ஏக்கம் - காகதுண்ட முனிவரைக் காணல் - பதுமாவதி - மாணகன் - (உதயணன்) - அரண்மனையில் தங்குதல் - பகைவர் முற்றுகை - நள்ளிரவு நிகழ்ச்சி - பெரும்போர் - உதயணன் வீரம் - மாணகனையே மணப்பேன் - இசைச்சன் திருமணம் - பதுமை திருமணம் - ஆருணிமேற் சேறல்.

11. பிரிந்தவர் கூடுதல்

உதயணன் கௌசாம்பி அடைதல் - உதயணன் அறச் செயல் - பத்திராபதிக்கு நினைவுச் சின்னம் - கோடபதியைப் பெறுதல் - வாசவதத்தை நினைவு - ஐயம் அகற்றல் - பிரிந்தவர் கூடுதல் - யூகியின் விளக்கம் - பரிசுகள் வழங்குதல் - மற்றும் இருவரை மணத்தல் - வருந்தம் - மகப்பேறு.

12. உதயணன் துறவு

துறவு எண்ணம் - தவவனம் செல்லல்.

குறிப்பு: ஒவ்வொரு கட்டுரைக் குறிப்பிலும் முதலில் 'முன்னுரை' என்றும், முடிவில் 'முடிவுரை' என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1. பிறப்பும் வளர்ப்பும்

முன்னோர்

பண்டை நாளில் குருகுல மன்னர்கள் நெறியில் நின்று ஆட்சி செய்து, புகழுடன் விளங்கினார்கள். அவருள் சதாணிகன் என்பான் சிறப்பு வாய்ந்தவன். 'வத்தவ நாடு' அவன் ஆட்சியின் கீழ் தழைத்துக் குறைவின்றி விளங்கிற்று. இதன் தலைநகர் கௌசாம்பி. இந்நாட்டின் ஓர் எல்லையாகச் சேதிநாடு இருந்தது. அந்நாட்டின் தலைநகர் வைசாலி. அங்குச் சதானிகனுக்கு இணையாகச் சீர்த்தியுடன் ஆட்சி செலுத்தியவன் சேடகன். சேடகனுக்குப் புதல்வர் பதின்மரும், மிருகாபதி என்ற ஒரு புதல்வியும் உண்டு. தனக்கு ஒத்த குலம், குணம், அறிவு முதலிய எல்லா நலத்தாலும் சிறப்பு வாய்ந்த மிருகாபதியைச் சதானிகன் மணஞ் செய்துகொண்டான்.

சேடகன் துறவு

சேடகன் இனிது ஆட்சி செய்து வரும் நாளில், ஒருநாள் அரண்மனைப் பூங்காவில் இயற்கைகளைக் கண்டு வியந்து கொண்டிருந்தான். தோன்றி மறையும் மேகங்களைப் பார்த்து, மன்னன் தன் நிலையாமை பற்றியும் எண்ணத் தலைப்பட்டான். அரசாட்சியை வெறுத்துத் தவஞ் செய்து வீடு பெறத் துணிந்தான். மக்களை அருகழைத்து, தன் விருப்

யத்தை வெளியிட்டான். ஆட்சியேற்க யாரும் முன் வந்திலர். கடைசி மகன் விக்கிரன் மட்டும் விரும்பி, ஏற்றுக் கொண்டான். நன்னுளில் அவனுக்கு*முடிகவித்துச் சேடகன் விபுல மலைச்சாரலைச் சார்ந்து, தவம் புரிந்து வந்தான்.

மிருகாபதி

தந்தை வனம் புகுந்தது அறிந்து, மிருகாபதி முதலில் வருந்தி, பின் தேற்றத் தெளிந்தாள். சில ஆண்டுகள் கழிந்தபின், மிருகாபதி கருவுற்றாள். இது கருதி, சதானிகன் துணைவியை மிகவும் மகிழ்வித்து வந்தான். ஒரு நாள் மேன் மாடியில் மிருகாபதி தனித்து உறங்குகையில், அவ்வழியே பறந்து சென்ற சரபப் பறவை அவளை எடுத்துச் சென்றது. விபுல மலைச் சாரலில் வைத்து, உண்ணும் சமயம் மிருகாபதி உறக்கம் தெளிந்தாள். பறவையும் அஞ்சி, அவ்விடம் விட்டுப் பறந்து சென்றது.

பிறப்பு

வழி வருத்தத்தாலும், களைப்பாலும் மிருகாபதிக்குப் பிரசவ நோய் தோன்றிற்று. தனிமையாகப் புது இடததில் இருப்பதை எண்ணிப் பயந்தாள். எனினும், அரசியானதால், ஒருவாறு மனத்தைத் திடஞ்செய்து கொண்டு பொறுத்திருந்தாள். காலைச் சூரியன் உதயமாகும் தருணத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றாள். பனிமலைக்கு மத்தியில் தனிமையான இந்நிலையில் வேறொன்றும் செய்வதறியாமல் புலம்பினாள். குழந்தையும் குளிர் தாங்காமல் அழுதது.

சேடக முனிவர்

காலைக் கடன்களை முடிக்க வெளியே வந்த சேடகன் காதில் இப் புலம்பல் கேட்டது. ஒலி கேட்ட திசை நோக்கிச் சென்று பார்க்கையில் ஒரு குழந்தை தனிமையில் அழுவதைக் கண்டார். அருகில் ஒரு பெண் வருத்தத்துடன் இருப்பதையும பார்த்தார். அருகில் சென்று உற்று நோக்கியபோதுதான், தன் மகள் மிருகாபதி என்று தெரிந்துகொண்டார். பிறகு, விவரம் கேட்டறிந்த சேடகர், அவளுடன் தம் தவப் பள்ளியை அடைந்தார். உதய காலத்தில் பிறந்ததால், குழந்தைக்கு உதயணன் எனப் பெயரிட்டார்.

பிரமசுந்தர முனிவர்

சேடகர் தவப்பள்ளிக்கு அருகில் பிரமசுந்தரர் என்ற முனிவர் வாழ்ந்து வந்தார். அவரும் அரசு துறந்து, மனைவி பரமசுந்தரியுடனும், மகன் யூகியுடனும் இவ்விடம் சேர்ந்து, தவத்தில் ஈடுபட்டவர். யூகியும், உதயணனும் சேர்ந்து வளர வாய்ப்பு ஏற்பட்டது. அரசர்க்குரிய யானை ஏற்றம் முதலிய போர்க் கலைகள் எல்லாம் இருவர்க்கும் கற்பித்தார்கள். உதயணன் அறிவாலும் செயலாலும் திறமைமிக்க

வனாய் விளங்கினான். முனிவர் மிக மகிழ்ந்து, யானையை அடக்கி யாளும் மந்திரம் ஒன்றை அன்பின் பெருக்கினால் உதயணனுக்கு உப தேசித்தார், தமக்கு வாசவனால் தரப்பட்ட 'கோடபதி' என்னும் யாழையும் அவனுக்குக் கொடுத்தார். கோடபதியை வாசித்தால், யானைகளும் இசை வயப்பட்டு, மயங்கிப் பணி புரியும். யூகியும் உதயணனுக்குச் சிறந்த நண்பன் ஆனான்.

உதயணன் தெய்வயானையைப் பெறுதல்

ஒரு நாள் உதயணன் காட்டில் கோடபதியை வாசித்துக்கொண்டு உலவி வருகையில், எதிரில் ஒரு யானைக் கூட்டம் வருவதைக் கண்டான். கூட்டத்தின் மத்தியில் ஒரு தெய்வ யானை நிமிர்ந்து நிற்பதை யும் பார்த்தான். உடனே தான் கற்ற மந்திரத்தை ஜெபித்து, யாழை வாசித்து நின்றான். யாழிசை கேட்டு உருகி, அத் தெய்வ யானை உதயணன் அருகில் வந்து, அவன் ஆணைப்படி நடந்தது. உதயணன் அதன் மீது ஏறித் தன்னிருப்பிடம் திரும்பினான்.

கனவில் யானை கூறியது

ஒரு நாளிரவு உதயணன் கனவில் தெய்வயானை தோன்றியது. உதயணன் தவிர, மற்ற பாகரை அதன்மீது ஏற்றினாலும், தோற்கயிற் றால் கட்டிவைத்தாலும், அது உண்பதற்கு முன் உதயணன் உண்டா லும், அவனைவிட்டு நீங்கிவிடுவதாகக் கூறியது. உதயணன் அதன் படியே நடந்துவர, யானையும் அவனிட்ட பணிகளை அன்புடன் செய்து வந்தது.

2. உதயணன் அரியணையேறுதல்

வைசாலிக்கு வருதல்

விக்கிரனும் சில ஆண்டுகளில் அரசாட்சி செய்வதில் வெறுப்புற் றான். அரசை ஏற்கத் தக்கவர் யாரும் கிடைக்காமையால் தந்தை சேடக முனிவரைச் சார்ந்தான். அப்போது உதயணன் அங்கே வர, அவன் வரலாற்றைத் தந்தை மூலம் தெரிந்துகொண்டான். பொலி வும் அறிவும் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற உதயணனையே தனக் குத் தருமாறு தந்தையிடமும் தங்கை மிருகாபதியிடமும் வேண்டினான். அவர்கள் சம்மதிக்க, உதயணனுடன் விக்கிரன் வைசாலிக்கு மீண்டான்.

உதயணன் முடிசூடல்

முடிசூட்டும் நாளை மக்கட்குப் பறையறைவித்துத் தெரிவித்து, மங்கல விழாவுடன், மக்கள் மகிழ்ச்சி பொங்க, விக்கிரன் உதயண னுக்கு முடி கவித்தான். உயிர் நண்பர்களான யூகி, உருமண்ணு வன், வயந்தகன், இடவகன் ஆகியோர் உதயணனுக்கு உற்ற

அமைச்சர்களாக விளங்கினர். தெய்வயானை அவனுக்குப் பேருதவி யாய் இருந்தது.

பிரிந்தவர் கூடல்

இங்ஙனம் உதயணன் நெறியாட்சி செலுத்த, அவன் தந்தை சதானிகன் மிருகாபதியை இழந்து, ஒன்றும் தோன்றாதவனாய் வருந் திக் கொண்டிருந்தான். வருவனவற்றை யறிந்து கூறும் தவசியரைப் பற்றி, அமைச்சர் கூறச் சதானிகன் அவரை அணுகி வினவினான். தவசியர் உதயணன் பிறப்பு முதல், சேதி நாட்டில் ஆட்சிசெய்வது வரை அனைத்தும்கூற, மிகவும் மகிழ்ந்த சதானிகன் வைசாலி நகரை அடைந்தான். சில நாட்கள் உதயணனுடன் தங்கி, பின் மிருகா பதியை மட்டும் அழைத்துக்கொண்டு தன் தலைநகர் மீண்டான். இவ் வாறு வாழும் நாளில், பின்னும் பிங்கலன், கடகன் என்ற இருவரை மிருகாபதி ஈன்றாள்.

உதயணன் ஆட்சி

சில ஆண்டுகள் கழியச் சதானிகனும் முதுமையுற்றதால், உத யணனுக்கே பட்டஞ்சூட்டித் துறவுபூண்டான். சேதிநாடு, வத்தவநாடு ஆகிய இருபெருநாட்டிற்கும் உதயணன் அரசனாய் விளங்கினான். இரு நாட்டையும் நன்கு பரிபாலிக்க முடியாமையால், தன்னிகர் நண்பன் யூகியைச் சேதி நாட்டரசனுக்கித் தான் கௌசாம்பியில் ஆண்டு வந் தான். இவன் ஆட்சியில் மக்கள் இன்புற்றிருந்தனர். கல்வியாலும், கொடையாலும் வீரத்தாலும் உதயணன் புகழுடன் விளங்கினான்.

தெய்வயானை போதல்

ஆடல் பாடல்களில் மகிழ்ந்திருந்த ஒரு நாள் உதயணன் பசி மிக்கு, யானைக்குத் தந்த வாக்குறுதியை மறந்து முன் உண்டான். யானையும் உதயணனைவிட்டு நீங்கிற்று.

யானையைத் தேடுதல்

உதயணன் தன் தவற்றை உணர்ந்தான். கோடபதியை இசைத் தாவது யானையைத் தேடுவது என எண்ணினான். திசைதோறும் ஏவலாளரை அனுப்பித் தேடினான். எங்கும் காணப்பெறாமையால், உதயணன் யானையைத் தேடிக்கொண்டு நாடோறும் காட்டில்சென்று அலைவானாயினான்.

3. உதயணன் சிறைப்படுதல்

வாசவதத்தையின் பிறப்பு

வத்தவ நாட்டிற்குப் பக்கத்திலிருந்த பெருநாடு அவந்தியாகும். அதனைப் பிரச்சோதனன் என்பான் உச்சையினியைத் தலைநகராகக்

கொண்டு, ஆண்டு வந்தான். அவனுக்குப் பல தேசத்து மன்னர்களும் திறை செலுத்தி வந்தனர். அரசு அங்கங்கள் ஆறுடன் சிறப்புடன் சக்ரவர்த்தியாய் விளங்கினன். வாசவன் அருளால் அவன் அரசி பதுமை காரிகை ஒரு பெண் மகவை ஈன்ருள். அத்தெய்வத்தின் பேராலேயே அவளை வாசவதத்தை என்று அழைக்கலாயினர்.

ஒருநாள் அரசவையில் நாட்டுநலம்பற்றிக் கேட்டுக்கொண்டிருக் கையில், சேதிநாடும், வத்தவநாடும் திறை செலுத்தாமை அறிந்து, பிரச்சோதனன் வெகுண்டான். இவ்வளவு அஞ்சா நெஞ்சர்களைப்பற்றி அறிய விரும்பி, அமைச்சரை வினவினன்.

சாலங்காயன் கூறிய உபாயம்

அமைச்சருள் சாலங்காயன் மதிநுட்பமுடையவன். "உதயண னும் யூகியும் சிறந்த வீரர்கள். யானையும் உறுதுணையாய் உள்ளது. யூகியோ சூழ்ச்சியில் வல்லவன். இவர்களை வெல்லத்தகுந்த உபாயங் காணவேண்டும். முதலில் படைகளைச் சேதி நாட்டிற்கனுப்பி, யூகி யைப் போரில் ஈடுபடச் செய்தல்வேண்டும்; அச்சமயம் தெய்வயானை யின்றி, மயங்கித் திரியும் உதயணனை மாயயானை காட்டிச் சிறை படுத்தவேண்டும்" என்று சாலங்காயன் உபாயங் கூறினன். பிரச் சோதனனும் அவ்வாறே படைகளை ஏவினன்.

மாய யானை

யூகி தன் படைகளைத் திரட்டிப் பகைவர்களை எதிர்த்தான். இதற் குள், சாலங்காயன் சிறந்த சிற்பிகளைக்கொண்டு அரக்கு, மரம் இவற் ருல் ஒரு எந்திர யானை தோற்றுவித்தான். அதனுள் வீரர்கள் மறைந் திருந்தனர். மேலும் பலவித ஆயுதங்களும் உள்ளடக்கி வைக்கப்பட் டிருந்தன.

உதயணன் சிறைப்படுதல்

எந்திர யானை முன்செல்ல, சாலங்காயன் முதலியோர் பிறர் அறி யாதவாறு ஒளிந்து பின்தொடர்ந்தனர். பல யானைகள் சூழ, எந்திர யானை காட்டில் மிக்க பேரொலிசெய்து உலவியது. வேடர்கள் இச் செய்தியை உதயணனுக்குத் தெரிவித்தனர். அதைத் தெய்வயானை என்று நினைத்து அளவிலா மகிழ்ச்சி பொங்க, யாழுடன் உதயணன் காட்டிற்கு விரைந்தான். தெய்வ யானையே என்று மயங்கி எதிர் நின்றபோது, வீரர்கள் எந்திர யானையினின்றும் இறங்கி, உதயணனை வளைத்துக் கொண்டனர். உதயணன் வீரத்துடன் போரிட்டுப் பலரை வீழ்த்தினன். படைத் தலைவனும் மடிந்தான். ஆனல் அதற்குள் சாலங்காயன் படைகளுடன் சேர்ந்து வந்து போரிட்டான். அமைச்ச ணுகிய அவனைக் கொல்லலாகாது என்று உதயணன் விடுத்தான். போரில் உதயணன் வாள், யானைக் கொம்பில் பட்டு ஒடிந்து விட்டது. அந்நிலையில் வீரர்கள் உதயணனைச் சிறைப்படுத்தினர்.

யூகிக்கு ஓலை

உதயணன் உடனே அருகிருந்த வயந்தகனிடத்தில் விளைவு குறித்து யூகிக்குச் ,செய்தியனுப்பினான். பின்னர் உதயணன் பிரச்சோதன னிடம் அழைத்துச் செல்லப்பட்டான், விலங்கிடப்பட்டுச் சிறையிலும் தள்ளப்பட்டான்.

4. யூகி உதயணன் இருக்குமிடம் அறிதல்

யூகியின் சூளுரை

வைசாலியின் புற நகரில் போர் செய்துகொண்டிருந்த யூகியிடம் வயந்தகன் உதயணன் தந்த ஓலையைச் சேர்த்தான். வஞ்சனையால் நண்பனைச் சிறைப்படுத்திய பிரச்சோதனனை வஞ்சனையாலேயே வெல்ல யூகி உறுதி கொண்டான். யானையைக் கொண்டே அவந்தியை அழித்து, வாசவதத்தையையும் கவர்ந்து வந்து உதயணனுக்கு மணம் முடிப்பதாகவும் வஞ்சினம் கூறினான். வைசாலியைக் காக்குமாறு வீரர்களுக்குச் சொல்லி, மற்ற தலைநகர்களையும் காக்க அமைச்சர்களை ஏற்பாடு செய்துவிட்டு, யூகி உதயணன் இருப்பிடம் அறியப் புறப்பட் டான்.

யூகியின் மாயச்சாக்காடு

மேலும் தனக்கும் எப்போதும் ஆபத்து நிகழலாம் ஆகையால், தான் இறந்துவிட்டதாக நடித்துப் பிரச்சோதனனை ஏமாற்றினால் நல்லது என்று யூகிக்குத் தோன்றியது. அத்திட்டம் நிறைவேற, ஒரு பிணத்தைத் தன் ஆடைகளால் அலங்கரித்துச் சுடுகாட்டில் எரிக்கச் செய்தான். ஒற்றர்கள் மூலமாகவும் தான் இறந்ததாகப் பொய்ச் செய் தியை அவந்தி நாடெங்கும் பரவச் செய்தான். பிரச்சோதனனும் இச் செய்தியால் மகிழ்ந்து வாளா இருந்தான். இதற்கிடையில் உதயண னுடைய சகோதரர்களாகிய பிங்கல, கடகரை வென்று, பாஞ்சாலத் தரசன் ஆருணி, கௌசாம்பியைப் பிடித்துக் கொண்டான்.

நண்பர்களின் உதவி

யூகி, உதயணனைப் பற்றி விவரம் அறியத் தன் நண்பர்களை அரண்மனையில் வேலையில் அமர்த்தி, அவ்வப்போது செய்தியனுப்ப ஏற்பாடு செய்தான். வயந்தகன் பிரச்சோதனனுடைய குமாரர்களுக்கு ஏவல் செய்யும் வேலையில் அமர்ந்தான்; பல வீரர்கள் ஊமைகளாக வும், செவிடர்களாகவும் நடித்து, முக்கிய இடங்களில் வேலைக்கமர்ந்து விட்டனர்.

யூகி மாறுவேடம் பூணல்

முதலில் உதயணன் இருப்பிடம் அறிய யூகி திட்டமிட்டான். ஒரு நாள் தெய்வ ஆவேசங் கொண்டவன் போல் வேடம் பூண்டு, கையில் நீர்க் கரகத்துடன் வீதியில் அலைந்து, துப்பறியும் தொழிலில் ஈடுபட்

டான். புது வேடத்தில் மக்கள் யூகியை அறிந்துகொள்ள முடிய வில்லை. சிறைக்கூடத்தருகில் வந்தபோது, யூகி தனக்கும் உதயண னுக்கும் மட்டும் தெரிந்த பாட்டைச் சிறைக்குள் கேட்குமாறு பாடி னன். உதயணன் யூகியின் வரவை அறிந்து கொண்டு, குழல் ஊதிப் பதில் அனுப்பினன். காவலர் அனுமதி பெற்றுத் தெய்வ ஆவேசம் கொண்டவனைப் பார்க்க வருவதுபோல், வெளிவந்து யூகியைக் கண் டான். எல்லா நண்பர்களும் உதயணனைக் கண்டு மகிழ்ந்தனர்.

மன்னன் அறிதல்

நாடோறும் இவ்வாறு உதயணன் சந்திப்பதை ஒரு வீரன் சந்தே கித்து, மன்னனிடம் தெரிவித்தான். சாலங்காயனும், யூகியை அறிய யானைக் கோடுபட்டு உண்டான தழும்பு அவன் மார்பில் உள்ளதா என்று அறிந்து வருமாறு வீரரை எச்சரிக்கை செய்தனுப்பினன்.

யூகியின் அஞ்சாமை

ஆனல் யூகியின் ஒற்றர் அன்றிரவே யூகிக்கு இதைத் தெரிவித்து விட்டனர். அன்று முதல் மார்பை மறைத்து, முன்போலவே யூகி வீதிதோறும் திரிந்து வந்தான்.

5. உதயணனைச் சிறை மீட்டல்

நளகிரி

உதயணன் இருப்பிடம் அறிந்த யூகி எப்படியாயினும் அவனை விடு விக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். ஒருநாள் நள்ளிரவில் பட் டத்து யானை நளகிரி இருப்பிடத்தை யாரும் அறியாமல் சேர்ந்தான். மயக்க மருந்து கொடுத்து, அகிற் புகை ஊட்டி, யானையை மதங் கொள்ளச் செய்தான். "உதயணனை மீட்பது உன் கடன்" என்று சொல்லி, யானையின் காதில் மந்திரத்தையும் உபதேசித்தான்.

நளகிரி மதங் கொள்ளல்

அந்த இரவே நளகிரி மதம் பிடித்துக் கட்டுத் தறிகளையும் முறித் துக் கொண்டு, வெளியே சென்றது. பாகர்களாலும் அதனை அடக்க முடியவில்லை. எதிர்ப்படுவோர் எல்லோரையும் துதிக்கையால் தூக்கி எறிந்தது. மரங்களையும் மண்டபங்களையும் கொம்பால் குத்திப் பாழாக்கியது. நகர் முழுமையும் மிகவும் பயத்தால் பீடிக்கப்பட்டு, அலங்கோலமாய் இருந்தது. நளகிரியின் செயல் அரசனுக்கு மிக்க மன வருத்தத்தை உண்டாக்கியது.

மன்னவின் வேண்டுகோள்

பிரச்சோதனன் நளகிரி திடீரென்று மதங்கொள்ளக் காரணம் தெரியாமல் கலங்கினன். அமைச்சர்களை அழைத்து, யானையை அடக் கும் வழிகளை ஆராய்ந்தான். சாலங்காயன் உதயணனுக்குள்ள

யானையை அடக்கும் வல்லமையை எடுத்துச் சொன்னான். முதலில், சிறைப்பட்டவனிடம் உதவி கேட்பதற்கு அரசன் நாணம் அடைந்தான். வேறு வழியின்றி, உதயணனை அழைத்து வரக் கட்டளையிட்டான். வஞ்சனையால் சிறைப்படுத்திய சாலங்காயன் உதயணனிடம் செல்ல நாணினான். சிவேதன் என்னும் வேறொரு அமைச்சன் உதயணனை அடைந்து அரசனுடைய வேண்டுகோளைத் தெரிவித்தான். நளகிரியை உதயணன் அடக்கினால், அவனை விடுவித்து முன்மாதிரியே கௌசாம்பிக்கு அரசனாக்குவதாகவும் உறுதி கூறினான்.

உதயணன் நளகிரியை அடக்குதல்

உதயணன் இந்த நல்ல தருணத்தை நழுவவிட விரும்பவில்லை. உடனே தன் சம்மதத்தைத் தெரிவிக்குமாறு சிவேதனிடம் சொல்லி அனுப்பினான். அவ்வாறே, அரசன் ஆணைப்படி, உதயணனைச் சிவிகைமீது ஏற்றிச் சிறப்புகளுடன் நளகிரி இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றனர். உதயணன், பிரம சுந்தர முனிவர் உபதேசித்த மந்திரத்தை உச்சரித்து நளகிரியை அசையாமல் நிற்கச் செய்தான். பிறகு யாழை மீட்டிப் பாடிக்கொண்டே அதன் அருகில் சென்றான். யானையும் அடங்கி, உதயணனுக்குப் பணிந்தது. உதயணன் அதன்மீது ஏறிக்கொண்டு, நகர வீதியெல்லாம் சுற்றினான். பிறகு அரண்மனை வாயிலை அடைந்தான். பிரச்சோதனன், உதயணனை எதிர் கொண்டழைத்து, ஆசனம் கொடுத்து, அருகில், அமரச் செய்து, உதயணனைப் பலவாறு புகழ்ந்து, தன்னுடன் சில காலம் தங்கியிருக்கவும் வேண்டிக் கொண்டான்.

உதயணனும் வாசவதத்தையும்

உதயணனும் அதற்குச் சம்மதித்து, அரண்மனையிலேயே ஒரு தனியிடத்தில் தங்கி இருக்கலானான். இப்படி இருக்கையில், ஒரு நாள் நளகிரி மதங் கொண்ட காரணங்களை அரசனுக்கு உதயணன் விளக்கிக் கொண்டிருந்தான். அச்சமயம் தாய்மார்களிடையே நின்ற வாசவதத்தையை நோக்கினான். அவளும் உதயணனைக் கண்ணுற்றாள். ஒருவர் மீது ஒருவர்க்குக் காதல் உண்டாயிற்று. மாறுதலை வெளிக் காட்டிக் கொள்ளாமல், உதயணன் அரசனிடம் பேசிவிட்டுத் தன் இருப்பிடத்துக்குத் திரும்பினான். அதுமுதல் வாசவதத்தை நினைவாகவே இருந்தான். மறுபடி அவளைச் சந்திக்கும் வழியறியாமல் ஏங்கினான். அந்தப்புரம் அடைந்த வாசவதத்தையும் ஊண் உறக்கம் இன்றி வருந்தினாள்.

கண்டு பழகுதல்

இந்நிலையில், பிரச்சோதனன் தன் மக்களுக்குப் படைக்கலப் பயிற்சி தரவும், வாசவதத்தைக்கு வீணை கற்றுத் தரவும் உதயணனை ஏற்பாடு செய்தான். இதனால், காதலர் இருவரும் சந்திக்க முடிந்தது.

அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா ?

பழகப்பழக, இருவருக்கும் நீங்காத அன்பு உண்டாயிற்று. வாசவ் தத்தையின் கலை, அழகு மேம்பாட்டினால் அரசர் பலரும் அவளை மணக்க விரும்பினர். அவள் உதயணனையன்றிப் பிறரை மணக்க நேரின், உயிர்விடத் துணிந்தாள். செவிலி சாங்கியத்தாய் எப்படியும் உதயணனுக்கே மணம் செய்விப்பதாக ஆறுதல் கூறினாள்.

சாங்கியத்தாய் தன் வரலாறு கூறல்

" சாங்கியத்தாய் கௌசாம்பியில் வாழ்ந்த பார்ப்பனப் பெண். கணவன் வெறுத்து வெளியேறப் பின்னர் அவள் தீய வழியில் ஈடு பட்டாள். அறங்கூறவையத்தார் அவளை மணல் குடத்துடன் நீரில் ஆழ்த்துமாறு கட்டளையிட்டனர். அச்சமயம், நீர் விளையாட்டில் ஈடுபட்ட உதயணன் செய்தி கேட்டு, அவளுக்குத் தந்த தண்டனை அதிகம் என்றும் அவளைத் தவஞ் செய்ய விடுதல் நல்லது என்றும் கூறி விடுவித்தான். பின், அவள் வணிகர் குழுவுடன் வடதிசை யாத்திரை சென்றாள். ஒரு சாங்கிய (புத்த) முனிவரை அடைந்து, அறம் பல கேட்டு, அம்மதத்தைச் சார்ந்தாள். பிறகு அம்முனிவருடன் தென்திசை யாத்திரைக்குப் புறப்பட்டாள். வழியில் பிரச்சோதனன் அரண்மனையில் தங்கியபோது அறுவகைச் சமயத்தோர் வாதம் செய்தனர். இறுதியில், அரசனும் சாங்கிய மதக் கொள்கைகளை ஏற்று, முனிவரைச் சிறிது காலம் தங்கி யிருக்குமாறு ஏற்பாடு செய் தான். அச்சமயம் அரசியும் அறநூல்களைச் சாங்கியத் தாயிடம் கேட்டுவந்தாள். குழந்தையாயிருந்த வாசவதத்தை அவளிடம் அன்பு டையவளாய் இருந்தாள். முனிவர் புறப்படுகையில், தத்தை சாங்கியத் தாயைப் பிரியமனமில்லாமல் இருந்தாள். அரசன் விருப்பப்படி, சாங்கியத்தாய் அரச குமாரிக்குச் செவிலியாக அங்கேயே தங்க நேரிட்டது." இதுவே அவள் வரலாறு.

இச்சாங்கியத்தாய் வாசவதத்தையின் பொருட்டு அடிக்கடி உதய ணனைச் சந்தித்துப் பேசி வந்தாள். ஒருநாள் தன் வரலாற்றையும் கூறி, உதயணனை வாசவதத்தையை மணக்க முயற்சி செய்யுமாறும் வேண்டிக்கொண்டாள்.

அரங்கேற்றம்

இதற்குள், அரச குமாரர்கள் எல்லா கலையிலும் மிக்க பயிற்சி உள்ளவர்களாகி விட்டார்கள். பிரச்சோதனனும் ஒருநாள் அரங் கேற்றம் செய்ய ஏற்பாடு செய்தான். அன்று கலைத் திறமைகளைக் கண்டு யாவரும் உதயணனை மெச்சினர். வாசவதத்தையும் வீணையை வாசித்து எல்லோரையும் மகிழச் செய்தாள். பிரச்சோதனன் இதற்குக் கைம்மாறாக, ஆருணியைவென்று உதயணனை மறுபடியும் கௌசாம்பிக்கு அரசனாக்குவதாக உறுதி கூறினான். இதற்காகப் படை திரட்ட, சேனைத் தலைவர்களுக்கும் கட்டளையிட்டான்.

6. உதயணன் வாசவதத்தையை உடன் கொண்டு செல்லுதல்

யூகி சூழ்ச்சி

கௌசாம்பியின்மேல் படையெடுப்பதை யூகி கேள்வியுற்றான். இதைத் தடுத்தால்தான் தன் சபதம் நிறைவேற வழி உண்டு என்று தீர்மானித்தான். பாகீரதி என்னும் ஒரு குறி சொல்பவளை அழைத்து, ஊரில் சென்று தெய்வ ஆவேசம் வந்தவள்போல் நடித்து நீர்விழா நடத்த ஏற்பாடு செய்யச் சொன்னான். உடனே, அவளும் நளகிரி மதங்கொண்டதும் தெய்வத்தை அவமதித்ததால்தான் என்று காரணங் காட்டி, 'இவ்வாண்டே நீர்விழாக் கொண்டாட வேண்டும்' என்றாள்.

நீர்விழா

இதைக்கேட்ட மக்கள் அரசனிடம் முறையிட்டனர். அரசனும் நன்னாள் குறித்து நீர்விழா எடுக்க, மாந்தர்க்கு முரசறைவித்து தெரிவித்தான். இவ்விழாக்காலங்களில் அரசனுக்குத் தீமை செய்து மறைந்து வாழ்பவர்களும் வெளிவந்து விழாக் கொண்டாடலாம். மெய்க் காப்பாளர் தவிர மற்ற யாவரும் ஆயுதங்களைத் தொடுதல்கூடாது. மதம் பிடித்த யானைகள் நகருக்கு வெளியே கட்டப்பட்டன. எல்லா ஏற்பாடுகளும் அரசன் ஆணைப்படியே நிகழ்ந்தன. குறித்த நாளில் மக்கள் அனைவரும் யமுனைக் கரையில் திரண்டனர். அரச குடும்பத்தினர் நீராடத் தனித்துறைகள் அமைக்கப்பட்டிருந்தன. வாசவதத்தை ஒரு சிவிகையில்வர, அரசன் முதலியோர் நீர்த்துறையை அடைந்தனர். பத்திராபதி என்னும் யானையை அனுப்பி, உதயணனையும் அழைத்து வரச் செய்தான். பிறகு அரசன், யானை, தேர், குதிரை, பொற்பூ முதலியன தானஞ் செய்தான். மக்களும் பல தானங்களைத் தமக்கியன்றவரை செய்தனர். எல்லோரும் நீராடிக்கொண்டு, இன்பமாக பொழுது கழித்தனர்.

யூகியின் முன் ஏற்பாடு

உதயணன் எவ்வாறேனும் வாசவதத்தையைக் கொண்டு செல்ல சமயம் பார்த்திருந்தான். யூகி முன் ஏற்பாடாக நகரில் பல மகளிரை வைத்து, முரசொலி கேட்டதும் வீடுகளுக்குத் தீயிடுமாறு பணித்திருந்தான், வீரர் பலரும் வழி நெடுகிலும் மரங்களில் பதுங்கி இருந்தனர். உதயணனை அரசனுடைய வீரர் தொடர்ந்து வந்தால் அவர்களை எதிர்க்கவே இந்த ஏற்பாடு. மாலை நெருங்க, காற்று வீசத் தொடங்கியது. இதுதான் சமயம் என்று யூகி முரசு அறையச் செய்தான். உடனே, நகரில் பல இடங்களில் இருந்து புகையெழுந்தது. இதற்குள் வீரர்கள் வெளிவந்து போர் செய்து, குழப்பத்தை உண்டு

பண்ணினர். பகைவர் தன் நகரில் புகுந்துவிட்டதாகப் பிரச்சோதனன் நினைத்தான். யானைகளைச் சுற்றி நிறுத்தி உரிமை மகளிரை மட்டும் அவன் காத்து நின்றான். வாசவதத்தையைக் காப்பாற்றுமாறு உதயணனுக்குச் செய்தியனுப்பினான். உதயணனும் வாசவதத்தையைப் பத்திராபதிமேல் ஏற்றிக்கொண்டு, நகரைவிட்டு வெளியே செல்லும் வழியில் செலுத்தினான். அரச வீரர்களும் ஊருள் செல்லல் ஆபத்து என்று உதயணனைத் தடுக்காமல், வழியனுப்பினர். தோழி காஞ்சனமாலையும் வாசவதத்தையுடன் யானைமீது ஏறிக்கொள்ள, உதயணன் கௌசாம்பியை நோக்கி விரைந்து செலுத்தினான்.

உதயணன் வெளியேறுதல்

இதற்கிடையில் வீரர்கள் உண்மையறிந்து, உதயணனைத் தொடர்ந்தனர். அவர்களை எல்லாம் யூகியின் ஆட்கள் மரப்பொந்துகளிலிருந்து வெளிவந்து கொன்று குவித்தனர். யூகியும் விரைந்து வந்து, " உதயணனைக் காத்தல் உன் கடமை " என்று பத்திராபதியின் காதில் ஒரு மந்திரத்தை ஓதினான். உதயணன் விரைந்து செல்ல, மேல் நடப்பனவற்றைக் கவனிக்க யூகி பின் தங்கினான். சாங்கியத்தாயும் அவனுடன் சேர்ந்துகொண்டாள்.

மன்னன் செய்தி அறிதல்

இதற்குள் வீரர்கள் அரசனை அணுகி, உதயணனிடம் ஏமாந்த நிலையைக் கூறினர். பிரச்சோதனன் மிகவும் வெகுண்டு, உதயணனைச் சிறைப்படுத்துமாறு நாற்படைகளையும் ஏவினான். ஆனால், உதயணன் குலத்திலும் எல்லா வகையிலும் சிறந்தவன் என்று சொல்லிச் சாலங்காயன் அரசனைத் தடுத்தான். பிறகு அனைவரும் அரண்மனை திரும்பினர்.

வழியில் காஞ்சனை வாசவதத்தைக்கு ஆறுதல் சொல்லி வந்தாள்.

பத்திராபதி உயிர் நீத்தல்

அன்றிரவே நெடுந்தூரம் கடந்து, பாலை நிலத்தை அடைந்தனர். வழியில் கோடபதியாழ் மூங்கிலில் சிக்கிக்கொண்டது. எல்லைக் கடந்ததும், யானைக்குக் காலவேகம் என்னும் நோய் கண்டது. யானை விரைவில் இறக்கும் என்று தெரிந்து, உதயணன் யாவரையும் யானையினின்று இறக்கினான். அதன் காதில் பஞ்சமந்திரம் கூறி, நற்கதியடையத் துதி செய்தான். பிறகு, பத்திராபதி இறக்க அதற்கு உரிய கடன்களைச் செய்து, உதயணன் அங்கேயே ஒரு பொதும்பரில் (சோலையில்) இரவைக் கழிக்கலானான். உடன்வந்த வயந்தகன், இடவகனிடம் சென்று, படைகளை அழைத்துவர விரைந்து சென்றான்.

7. இடைவழிப் போர்

வேடுவருடன் போர்

இதற்குள், பாலை நிலத்து வேடுவர்கள் யானைச் சுவடுகளைப் பார்த்து, "மனிதர் யரேனும் சென்றிருத்தல்கூடும், விரைந்துசென்று அவர்களைப் பிடிக்கலாம்" என்று ஓடினர். வழியில் உதயணன் வில் லேந்தி நிற்கக் கண்டு, அவனை வளைத்துக் கொண்டனர். போரில் பலரை உதயணன் வீழ்த்தினன். ஆனல், வில் ஒடியவே, வகையற்று நின்ருன். வேடுவரும் பொதும்பரைக் கொளுத்திவிட்டனர். மறைய முடியாமல், வாசவதத்தையும் காஞ்சனையும் வெளியே வந்தனர். வேடுவர் உதயணனை 'யார்' என்று கேட்டனர். 'தான் உதயணன் காட்டு வணிகன் என்றும், பொருளை இவ்விடம் மறைத்து வைத்திருப் பதாயும், தீயும் புகையும் அடங்கிய பின் காட்டுவதாயும்' உதயணன் கூறினன். வேடுவரும் உதயணன் கைகளைப் பிணித்துவிட்டு, அவ் வாறு பொருளைக் காட்டாவிடில் கொன்றுவிடுவதாகக் கூறிக் காத்து வந்தனர்.

இடவகன் உதவி

வயந்தகன் மூலம் உதயணன் நிலையை அறிந்து, வேண்டிய ஊர்தி களுடனும், படைவீரர்களுடனும் பொதும்பருக்கு இடவகன் விரைந் தான். அவ்விடம் சேர்ந்ததும், பொதும்பர் தீக்கிரையாகி இருப்பது கண்டு அஞ்சினர். ஆனல் அருகில் வேடர் கூட்டம் தென்பட, அங் குச் சென்று, உதயணன் அவர்கள் நடுவில் அகப்பட்டிருப்பதையும் பார்த்தனர், வீரர் அம்புமாரி பொழிய, வேடர்கள் ஓடி ஒளிந்தனர். உதயணனும் தக்க சமயத்தில் காத்த இடவகனைப் பாராட்டி, அவன் வேண்டுகோளின்படி வாசவதத்தையுடன் சயந்தியம் பெருநகரை அடைந்தான்.

8. உதயணன் வாசவதத்தை திருமணம்

வரவேற்பு

சயந்திய நகரத்தார் நகர் முழுமையும் வாழை, இஞ்சி, மஞ்சள் முதலியவற்ருல் அலங்கரித்துத் தத்தம் வீட்டு வாயில்களில் தோரணங் கள் தொங்கவிட்டு, மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். 'மகளைக் கொடுக் கவே இவ்வாறு வஞ்சகமாகச் சிறைப்படுத்தினன் பிரச்சோதனன்' என்று மக்கள் பேசிக் கொண்டனர். உதயணன் 'அமராபதி புகும் இந்தி ரனைப் போன்று' விளங்கினன்.

திருமணம்

இடவகன், உதயணன் கருத்தின்படி, திருமண நன்னள் குறித் தான். வள்ளுவன் யானைமீதேறி நகர்க்கு மணநாளை அறிவித்தான்.

செய்திகேட்டு, மக்கள் ஆரவாரித்தனர். தத்தம் வீடுகளில் திருமணம் நிகழ்வதாகவே கருதி, அலங்கரித்தனர். ஆயிரத்தெட்டு யானைகளை அலங்கரித்து, நன்னீர் கொண்டு வந்தனர். அந்தணர் முறைப்படி, திருமணம் நடந்தேறியது. 'இமயம்போன்று நீடு வாழ்க' என்று மக்கள் உதயணனையும் வாசவதத்தையையும் வாழ்த்தினர்.

யூகியின் செயல்

யூகி உச்சயினியில், "பிரச்சோதனன் தர, உதயணன் வாசவதத்தையை அழைத்துச் சென்றான்" என்ற வதந்தியைப்பரவச் செய்தான். பிறகு, எல்லா வீரர்களையும் உதயணனிடம் வந்து சேரும்படி அறிவித்து, அவனும் சாங்கியத்தாயும் பூணியின்றிப் பொறியின் இயங்கும் (பூணி - வாகனம்) வையம் என்னும் ஊர்தியில் வந்து, இடவகனிடம் சேர்ந்தனர். இடவகன்மூலம் யூகி, உதயணன் நிலைமையை உணர்ந்தான். உதயணன் இன்ப நுகர்ச்சியில காலங் கழித்துக் கௌசாம்பியைத் திரும்பக் கைப்பற்றும் எண்ணமே நீங்கியிருந்தான்.

9. வாசவதத்தையைப் பிரித்தல்

யூகியின் வேண்டுதல்

யூகி, நண்பர்களையும் சாங்கியத்தாயையும் அருகே அழைத்து, உதயணனைக் காப்பாற்றும் தம் கடமையைப் பற்றி அறிவுறுத்தினான். அவன் கூறிய திட்டம் வருமாறு: "உதயணனை இலாவண நகரின் புறத்தே ஒரு சோலையில் தங்கியிருக்கச் செய்ய வேண்டும். அச்சமயம் வாசவதத்தை இருக்கும் இடத்தைத் தீ மூட்டி, சுருங்கை வழியாக அவளை யூகியிடம் சேர்க்க வேண்டும். மேலும், வழியில் அவல் தின்னும்போது விக்கி யூகி இறந்துவிட்டதாகவும் செய்தியைப் பரப்ப வேண்டும்.

சாங்கியத்தாய் வருகை

பின்னர் சாங்கியத்தாய் உதயணனை அடைந்தாள். உதயணன் அவளை அன்புடன் வரவேற்று எல்லா நிகழ்ச்சிகளையும் கூறக்கேட்டு மகிழ்ந்தான். அந்தப்புரம் சென்று வாசவதத்தையைக் கண்டாள். தாய்மார், சகோதரர் நலங்களை அவள் மூலம் வாசவதத்தை அறிந்தாள். மேலும் உதயணன எப்போதும் வாசவதத்தையைப் பிரியாதிருந்து, தன் நாட்டை அந்நியன் ஆள, வாளா இருப்பது அரசர்க்கு முறையல்ல என்றும், சிறிது காலம் பிரிந்திருந்தால் நாட்டை மீளப் பெற்று, நீடு வாழலாம் என்றும் சாங்கியத்தாய் வாசவதத்தையிடம் கூறி வேண்டினாள். பின்னல் வரும் பயனை நினைத்து, வாசவதத்தையும் காதலனைப் பிரிவதற்குச் சம்மதித்தாள்.

யூகியின் மாயச்சாக்காடு

யூகி தந்த ஆடையில் உதயணன் உருவம் எழுதப்பட்டு, நான்கு கண்கள் அமைத்து, அதில் ஒன்று மங்கி இருக்கவும் திட்டப்பட்டது. அதனைச் சாங்கியத்தாய் உதயணனிடம் சேர்த்தாள். மங்கிய கண்ணைக் கண்டு, யூகிக்குத் துன்பம் நேர்ந்திருக்குமோ என்று உதயணன் சந்தேகித்தான். அச்சமயம் சாங்கியத்தாய், வழியில் அவல் நின்று விக்கி யூகி இறந்ததாகச் சொல்லி விட்டாள்.

உதயணன் புலம்பல்

உதயணன் இதைக் கேட்டு அடியற்ற மரம்போல் வீழ்ந்து புரண்டான். இளமை முதல் துணையாய் இருந்த உயிர் நண்பனை எண்ணிப் பலவாறு புலம்பினன். அருகிருந்த அமைச்சர்கள், இவ்வாறு புலம்புவது பகைவர்களுக்கு ஏளனமாகும் என்று கூறி, உதயணனைத் தேற்றினார்கள்.

உண்டாட்டு அயர்தல்

உருமண்ணுவன் முதலியோர் அரசனுக்கு மன வருத்தம் நீங்கச் செய்ய, புறநகர்ச் சோலையில் தங்கி உண்டாட்டு அயர்தலுக்கு ஏற்பாடு செய்யத் துணிந்தனர். அங்குள்ள முனிவரைக் கேட்டால் நிகழ்ந்ததும், நிகழ்வனவும் கூறுவார் என்று சொல்ல, உதயணனும் அங்குச் செல்லச் சம்மதித்தான். அரசன் விருப்பத்தைப் பறையறைவித்து மக்களுக்குத் தெரிவித்தனர். யாவரும் விழாக் கொண்டாட, புறநகர்ச் சோலை புக்கனர். உதயணனும் முனிவரது பள்ளியை அடைந்து, யூகியை நினைந்தவாறே அசோக மரத்தின்மீது சார்ந்து அமர்ந்திருந்தான்.

முனிவர் கூற்று

உதயணன் கையிலிருந்த பூ அவன் காலடியில் விழுந்தது. 'பூ விழுந்தது அரசன் இன்பத்துக்கு இடையூறு ஏற்படுத்தும்' என்றும், 'காலடியில் விழுந்ததால், அதனை அரசன் திரும்ப அடைவான்' என்றும், 'நிலத்தின் வீழ்ந்தமையால், இழந்த நாட்டைப் பெறுவான்' என்றும், பசுமரத்தைச் சார்ந்திருப்பதால், நண்பன் உயிரோடு இருப்பதாகவும் முனிவர் கூறினர். இதைக் கேட்டு உதயணன் ஒருவாறு தேறியிருந்தான்.

சுருங்கைவழி

இதற்குள் யூகி அரசன் இருப்பிடத்திற்கும் தன்னிடத்திற்கும் ஒரு சுருங்கைவழி தோண்டி முடித்தான். இதனை அமைச்சர்க்கும் அறிவித்து, மேற்கொண்டு நடக்க வேண்டுவன கவனிக்குமாறும் செய்தியனுப்பினன். சில நாட்கள் சோலையில் தங்கி, உதயணன் அரண்மனைக்கு மீண்டான்.

எவனுகிலும் தான்சாக மருந்துண்பானு ?

வேட்டையாடச் செல்லல்

வேட்டையாட வெளியே செல்ல உதயணனுக்கு விருப்பமில்லை. மலர், தழை முதலியவற்றால் கண்ணி செய்து தருமாறு வாசவதத்தை கேட்க, உதயணன் காட்டிற்குச் செல்ல உடன்பட்டுத் தோழர்களுடன் புறப்பட்டான். இதுதான் சமயம் என்று உருமண்ணுவா முதலியோர் அரண்மனையை வேடர்கள் சூழ்ந்து கொண்டதாகப் பொய் வதந்தியைப் பரப்பி, அரண்மனைக்கு நாற்புறத்தும் தீ வைத்தனர். சுருங்கை வழியாக வாசவதத்தையை யூகியிடம் சேர்த்தனர். கொலைக் குற்றத்திற்காகச் சிறைப்பட்ட கைதிகள் இருவரைத் தீயில் தள்ளிவிட்டனர். வாசவதத்தையின் உடல் என்று நம்புமாறு அவளது அணிகலன்கள் பலவற்றைச் சிதறி வைத்தனர். உருமண்ணுவா முதலியோர் தீ வைத்தவர்களுடன் போர் செய்பவர்கள்போன்று நடித்துக் கொண்டிருந்தனர்.

யூகியை அடைதல்

வாசவதத்தை சாங்கியத்தாயுடன் யூகியை அடைந்தாள். யூகி வாசவதத்தையை வணங்கி, உதயணனைப் பிரித்தமைக்குக் காரணங்களைக் கூறி மன்னிப்பு வேண்டினன். யூகி இறந்தான் என்று ஐயுற்ற வாசவதத்தைக்குச் சாங்கியத்தாய் உண்மையை விளக்கினாள்.

உதயணன் வருந்துதல்

இதற்குள் கானகஞ் சென்ற உதயணன் மீண்டான். அரண்மனைப் பக்கம் தீ யெழுவது கண்டு விரைந்தான். உருமண்ணுவா முதலியவர் போர் செய்வதைப் பார்த்தான். காஞ்சனமாலை புலம்பலைக் கேட்டு, உதயணன் மூர்ச்சையானான். அமைச்சர் உதயணனைத் தெளிவிக்க, வாசவதத்தை இறந்த அதே தீயில் உயிர் நீப்பதாக ஓடினான். உருமண்ணுவா, இதை யறிந்தால் பகைவர் நகைப்பர் என்று கூறி, உதயணனைத் தடுத்தான். உதயணன் சிறிதும் ஆறுதல் அடையவில்லை; குறைப் பிணங்களைப் பார்த்துவிட்டு, அணிகளைக் கையில் கொண்டு, ஏங்கி அழுதான். அமைச்சர், காமத்தால் விளையும் தீமைகளைப் பற்றி இடைவிடாது கூறி, உதயணனை ஒருவாறு தேற்றினர்.

உருமண்ணுவா காஞ்சனையை அழைத்துச் சென்று, வாசவதத்தையிடம் சேர்த்து, உதயணனுக்குத் தீங்கின்மையும் தெரிவித்து மீண்டான்.

10. பதுமை மணம்

உதயணன் ஏக்கம்

உதயணன் யூகியையும், வாசவதத்தையையும் இழந்து ஏங்கினான். இனி, உதயணனால் துன்பமில்லை என்று ஆருணி மகிழ்ந்திருந்தான். ஆனால், உருமண்ணுவா மகத வேந்தனுடன் நட்புக்கொண்டு, ஆருணி

யைக் கொல்லத் திட்டமிட்டான். இசைச்சன் எனும் நண்பன், மந்திரத்தால் இறந்தவரையும் முன்னைய வடிவோடு காட்டும் முனிவர் மகத* நாட்டின் தலைநகரில் இருப்பதாகக் கூறினான். உதயணனும் அதுகேட்டு மகிழ்ந்து, அங்கே செல்லப் புறப்பட்டான்.

காகதுண்ட முனிவரைக் காணல்

உண்மை உருவுடன் செல்லாமல், பார்ப்பன வடிவம் தாங்கி, யாத்திரை வாசிகளாகப் புறப்பட்டனர். வழியில் இராசகிரியின் புறநகர்ச் சோலையில் தங்கினர். உருமண்ணுவா தனிமையில் அங்கிருந்த காகதுண்ட முனிவரை வணங்கி, உண்மையைக் கூற, ஆறுதல் மொழி சில உதயணனுக்குக் கூறுமாறு வேண்டினான். "இரண்டு மாதங்கள் தங்கி விரதம் இருந்தால், வாசவதத்தையை முன்னை உருவத்துடன் பார்க்கலாம்" என்று முனிவரும் உதயணனுக்கு ஆறுதல் சொல்லி, விரத முறைகளையும் கூறியருளினார். இனி, மகத மன்னனுடன் நட்புக்கொள்ளும் முறையைச் சிந்திக்கலானார்கள்.

பதுமாவதி

அச்சமயம் இராசகிரியில் காமன் விழாக் கொண்டாடப்பட்டது. மகதநாட்டரசன் தங்கை பதுமாவதி, தோழி, யாப்பியாயினியுடன் வையத்தில் ஊர்ந்து இராசகிரிக்கு வந்தாள். காமன் கோவில் அருகில் புன்னை மர அடியில், ஏங்கியிருந்த உதயணனைக்கண்டு, நெஞ்சைப் பறி கொடுத்தாள். உதயணனும், அவள் வாசவதத்தையைப்போல் இருந்ததால், மயங்கி அவள் பால் அன்புகொண்டான். பல நாட்கள் இவ்வாறே ஒருவரை ஒருவர் நோக்கி, காதல் மேலிட்டனர். *தோழி ஒருத்தி உதயணனை அடைந்து விசாரித்தாள். உதயணன் தான் காந்தார நாட்டு இரத்தினபுரத்து அந்தணன் என்றும்; பெயர் மாணகன் என்றும் கூறினான். தானங்கேட்போர் யாவரையும் தடையின்றி அரண்மனைக்குள் விடுமாறு பதுமாவதி கட்டளையிட்டாள். இந்த வழியிலாவது மாணகனைச் சந்திக்க விரும்பினாள். உதயணன் தன் காதலை உருமண்ணுவாவிடம் கூறினான். அவன் இதுவும் சூழ்வலி என்று எண்ணிப் பதில் பேசாதிருந்தான்.

மாணகன்

'மகத மன்னன் தன் தந்தை வைத்த புதையல் இருக்கும் இடம் அறியாது வருந்துகிறான்' என்று காவலர் வாயிலாக உதயணன் தெரிந்து கொண்டான். ஒருநாள் மாறுவேடம் பூண்டு, அரசனைச் சார்ந்து, தனக்குப் புதையல் கண்டுபிடிப்பதிலும், பூமியின் கீழ் நீரோட்டம் அறிதலிலும் வல்லமை உண்டு என்று கூறினான். மன்னன் தன் விருப்பத்தைத் தெரிவிக்க, உதயணனும் புதையலிடத்தைக் காட்டினான். மன்னன் உதயணனைப் பலவாறு புகழ்ந்து மகிழ்ந்தான்.

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும்.

அரண்மனையில் தங்குதல்

அரண்மனையைச் சுற்றி, நல்ல நீர் இருக்குமிடங்களையும் அறிந்து கூறினன். மன்னன் அவனது திறத்தைப் பாராட்டி, அரண்மனையில் சிறிது காலம் தங்குமாறு வேண்டினன். உதயணனும் உடன்பட்டான். உதயணனுக்கு ஆபத்து நேர்ந்தால், காப்பாற்ற உருமண்ணுவாவும் அரண்மனையில் ஒரு வேலையில் அமர்ந்தான். இசைச்சன் பதுமையின் தாய்க்கு அறநூல் ஆசிரியனாக அமர்ந்தான். வயந்தகன் பதுமைக்குப் பூத்தொடுத்து அனுப்பிவைக்கும் தொழிலை ஏற்றான்.

கேகயத்தரசன் பதுமையை விரும்பி, விலையுயர்ந்த அணிகலன்களை அனுப்பித் தானும் மகதத்துக்கு வந்திருந்தான்.

பகைவர் முற்றுகை

அச்சமயம் விரிசிகன் முதலிய சிற்றரசர்கள் ஒன்றுகூடி, மகதத்தின்மீது படையெடுத்தனர். மன்னன் செய்வதறியாது திகைத்தான். பதுமை இச்செய்தியை மாணகனுக்குச் சொல்லி அனுப்பினள். பகைத் துன்பம் தீர்த்து, இரண்டு திங்களில் திரும்பி வருவதாகப் பதில் அனுப்பிவிட்டு, உதயணன் தன் நண்பர்களை அடைந்தான். அனைவரும் குதிரை வணிகர்போல் வேடந்தாங்கி, விரிசிகன் படைவீடு அடைந்தனர். தாங்கள் மகத மன்னனிடத்து வாணிகம் செய்து வந்ததாயும், இப்போது அவர்களை மன்னன் பகைப்பதாயும், அதனால் அவனுடன் போர் செய்யத் துணை செய்யுமாறும் விரிசிகனிடம் வேண்டினர். அவன் உண்மை என்று நம்பி, அவர்களையும் சேர்த்துக் கொண்டான்.

நள்ளிரவு நிகழ்ச்சி

சில நாட்கள் இவ்வாறு தங்கி, படை நிலையை அறிந்து கொண்டனர். ஒருநாள் இரவு தங்களுக்குள் சண்டையிடுவதாகப் போர் புரிந்து, எதிர்ப்பட்டவர்களை அழித்துவிட்டு, ஓடிவிட்டனர். உண்மையறியாது, விரிசிகன் முதலியோர் படையெடுப்பைக் கைவிட்டுத் திரும்பினர்.

இதற்குள் உருமண்ணுவா வெற்றியைக் காட்டி மகத மன்னனிடம் நட்பு உண்டாக்கிக்கொள்ள விரும்பினன். உதயணன் பகைவர்களை விரட்டிவிட்டதாகவும் தலைநகருக்கு வருவதாகவும் முன்னதாக வீரர் மூலம் செய்தியனுப்பினன். மகத மன்னன் இதனைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுடன் உதயணனை வரவேற்கப் பெரிய ஏற்பாடுகள் செய்தான். உதயணனும் மன்னன் விருப்பப்படி அரண்மனையில் தங்கியிருந்தான்.

ஏடு அறியாதான் வீடு பெறான்.

பெரும்போர்

பிரிந்து ஓடிய விரிசிகன் முதலியோர் மீண்டும்கூடி, 'குதிரை வியாபாரிகள் செய்த கொடுமை இது' என்று அறிந்து மறுபடி போர் தொடுக்க ஆயத்தமாயினர். மகத மன்னன் ஒற்றர் மூலம் இராசகிரி முற்றுகையைக் கேள்விப்பட்டான். தன் சேனையுடன் போருக்கு எழுத் துணிந்தான். ஆனால், உதயணன் தான் பகைவரை அடக்குவதாகக் கூறினான். மன்னனும் அதற்கு உடன்பட்டு, சேனைகளை உதயணன் தலைமையில் அனுப்பினான். கேகயத்தரசனும் துணையாக உடன் சென்றான். தங்கையை விரும்பி வந்தவனைக் காக்குமாறு உதயணனிடம் மன்னன் கேட்டுக்கொண்டான்.

உதயணன் வீரம்

படைகள் மதிற்புறத்தை அடைந்து சூழ்ந்துகொண்டனர். உதயணன் யானைமீதிருந்து போர் செய்த ஒரு அரசனை இழுத்துவந்து தன் தேர்க்காலில் கட்டினான். இதைக் கண்டு, கோபங்கொண்ட ஒரு பகையரசன் கேகயத்தரசன் தலையை வெட்டி வீழ்த்தினான். பகைவர் படைநிலை குலைந்தது. உருமண்ணுவாவும் உதயணனும் வாளைச் சுழற்றிக்கொண்டு, பகைவர்களைத் துரத்திச் சென்றனர். எங்கும் வெற்றி முழக்கம் கேட்டது. எனினும், உருமண்ணுவா பகைவரிடம் சிக்கிக்கொண்டான். மகத மன்னன் புறநகர் வந்து, உதயணனை வரவேற்றான். கேகயத்தரசன் இறந்தது குறித்து வருந்தினான். உதயணன் செய்த பேருதவிக்கு மகிழ்ந்து, கைம்மாறு எதும் செய்ய அறியாமல், பதுமையை மணம்செய்து தர முடிவு செய்தான்.

மாணகனையே மணப்பேன்

அமைச்சன் மூலம் விவரம் அறிந்த பதுமை மாணகனையே மணக்கவும், மற்றவரை மணக்க நேரின் உயிர் துறக்கவும் துணிந்தாள். உயிர் கண்பனையும் காதலியையும் இழந்த உதயணன் மறுமணம் செய்துகொள்ள இசையவில்லை. மன்னன் வேண்டுகோட்கு இறுதியில் உடன்பட்டான்.

இசைச்சன் திருமணம்

இசைச்சன் தாய் தந்தையர் அற்றவன். அவனுக்கு மணமுடித்த பின்பே, தான் மணஞ் செய்துகொள்ள விரும்புவதாக உதயணன் அரசனுக்குச் சொல்லியனுப்பினான். மகத மன்னனும் பதுமையின் தோழி யாப்பியாயினியை இசைச்சனுக்குத் தர இசைந்தான். அவ்விருவர்க்கும் திருமணம் நடந்தது.

இசைச்சனும் யாப்பியாயினியும் அமர்ந்திருக்கையில் மகத நாட்டுக்கு வந்தது பற்றி, இசைச்சனிடம் உதயணன் கூறினான். யாப்பியாயினி மாணகன் குரலை ஒத்திருத்தல் அறிந்து, தெளிந்து, 'உதயணனே மாணகன்' என்று பதுமைக்குத் தெரிவித்தாள். பதுமையும் உதயணனை மணக்கச் சம்மதித்தாள்.

பதுமை திருமணம்

சில நாட்களுள், நல்லோரையில் மிக்க சிறப்பாக நகர் முழுமையும் களிப்படைய, பதுமைக்கும் உதயணனுக்கும் திருமணம் முறைப்படி நடந்தேறியது. யாவரும் சயந்தி திரும்பினர். உருமண்ணுவாவையும் சிறைமீட்டு அனுப்பி வைக்குமாறு மகதவேந்தனுக்குச் சொல்லியனுப்பினன்.

ஆருணிமேற்சேறல்

மகதன் தன் சிறந்த அமைச்சர்களுடன் சேனைத் தலைவர்கள், நாற் படைகளை, உதயணனுடன் அனுப்பினன். ஆருணியை வென்று, உதயணனை அரசனாக்குவது அவர்கள் கடன் என அறிவுறுத்தினன், வழியில் உதயணன் தம்பியர் பிங்கல கடகர் உடன் சேர்ந்துகொண்டனர். எல்லோரும் கௌசாம்பியின் புறநகரை அடைந்தனர். ஒற்றர் மூலம் செய்தியறிந்து, ஆருணியும் போர்க்கெழுந்தான். இருபடைகளும் மோதின. ஆருணி வீரர்கள் நிலைகுலைந்து ஓடிவிட்டனர். வெற்றி பெற்ற உதயணன் நகருள் புக, வாயிற்கதவினைத் திறக்கவேண்டினன். உதயணன் முத்திரையுடன் ஓலைகண்டாலன்றித் திறக்க மறுத்தனர் மக்கள். உதயணன் தந்த ஓலை பார்த்து நெடுநாள் பிரிந்த அரசனை மிக்க ஆரவாரத்துடன் வரவேற்றனர். எங்கும் வாழ்த்தொலி முழங்கியது.

11. பிரிந்தவர் கூடுதல்

கௌசாம்பியில் புதிய அரண்மனை நிறுவி, அதில் பதுமையுடன் உதயணன் இருந்தான். ஆருணி உரிமை மகளிர்க்கும் இடந் தந்து வேண்டியன உதவினன்.

உதயணன் அறச்செயல்

உதயணன் செங்கோலாட்சி நடத்தினன். ஆலயங்கள், தவப்பள்ளி, அந்தணர் இருக்கை முதலியன புதுப்பித்தான். வறியவர், தள்ளாதவர், அறைைப் பெண்டிர், முடவர் முதலியவர்களும் வாழ வழி செய்தான். அறம் தழைக்க, வானம் வழாது பொழிய, நாடு செழித்தது. மக்கள் இன்புற்றனர்.

பத்திராபதிக்கு நினைவுச் சின்னம்

வாசவதத்தையுடன் உச்சையினிலிருந்து தப்புவதற்குப் பேருதவி செய்த யானை பத்திராபதிக்கு இறந்த இடத்தில் வேடுவரைக் கொண்டு மாடம் எழுப்பினன். அங்கு வழிப்போக்கர்க்கு உணவும் நீரும் உதவத் தண்ணீர்ப்பந்தரும் அமைத்தான். அந்த யானை எலும்பைக்கொணர்ந்து கௌசாம்பியில் கோற்றவாயிலை அதன் மேல் நிறுவினன். யானைக்கு நன்றி செலுத்துமுகமாக இவ்வனைத்தும் செய்தான்.

கோடபதியைப் பெறுதல்

ஒரு நாள் மேன்மாடியில் பதுமையுடன் அளவளாவிக்கொண்டிருக்கையில் யாழொலி கேட்டது. வாசிப்போன் அருஞ்சுகன் என்பரீனி அழைத்து, யாழ் கிடைத்தவகை பற்றிக் கேட்டான். "காட்டில் யானைக் கூட்டத்திற்கு அஞ்சி, வேங்கைமரத்தில் ஏற, மூங்கிலில் சிக்கி யாழ் செய்த ஓசையைக் கேட்டேன். பிறகு அதை அரிதிற்பெற்றேன்" என்று அருஞ்சுகன் கூறினான். கோடபதி கைவரப்பெற்ற உதயணன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

வாசவதத்தை நினைவு

யாழ் பெற்றதும், வாசவதத்தையின் நினைவு உதயணனை வாட்டியது. இதற்குள், உருமண்ணுவா உதயணனைச் சேர்ந்தான், யூகியிடமிருந்து உருமண்ணுவாவுக்கு ஒரு ஓலை கிடைத்தது. அதில் "இனி வாசவதத்தையை உதயணனிடம் ஒப்பித்தல்வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. உடனே உருமண்ணுவா யூகியை அடைந்தான். எல்லோரும் கௌசாம்பியின் புறநகரில் மதுகாம்பீரம் எனும் சோலையில் வந்து தங்கினார்கள். வாசவதத்தையை அழைத்துக்காட்ட முனிவர் புறநகரில் தங்கியிருப்பதாகவும், அதனால் பதுமையைச் சில நாட்கள் பிரிந்திருக்க வேண்டும் என்றும் உதயணனுக்கு வயந்தகன் கூறினான். உதயணனன் தனிமையில் வாசவதத்தையை நினைந்து அரற்றிக்கொண்டிருந்தான்.

ஐயம் அகற்றல்

இரவில் வாசவதத்தையைச் சிவிகையில் ஏற்றிக் கொணர்ந்து, மறைவாக உதயணன் நிலையைக் காட்டினர். அவளும் உதயணன் அன்பை வியந்து மீண்டாள்.

பிரிந்தவர் கூடுதல்

மறுநாள் உதயணன் சோலைக்குச் சென்றான். முதலில் யூகியைக் காட்டினர். மார்பில் இருந்த தழும்பைப் பார்த்து யூகி எனத் தெளிந்து உதயணன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான். பிறகு வயந்தகன் வாசவதத்தை இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான். உதயணனைக் கண்டதும், வாசவதத்தை விரைந்துவந்து, அவன் அடிகளில் விழுந்து, பிரிந்தமைக்கு மன்னிப்புக் கோரினாள். பெறற்கரிய மணியைப் பெற்றார் போல, உதயணன் உளம் பூரித்தான். பதுமையை அறிமுகம் செய்ய, அவள் வாசவதத்தையை வணங்கினாள். வாசவதத்தை அன்போடு அவளை ஏற்றாள்.

யூகியின் விளக்கம்

ஒரு நாள் யூகி அரசவை கூட்டி அனைத்தையும் விளக்கிப் பொய்ச் செய்திகளைப் பரப்பினமைக்கு மன்னிப்புக் கோரினான். ஆட்சியை

மீண்டும் பெற்றமைக்கும் நன்றி தெரிவித்து, உதயணனும் யூகியைப் பாராட்டினன்.

பரிசுகள் வழங்கல்

உருமண்ணுவா சேனுதிபதியாக்கப்பட்டான். அவனுக்குப் பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுக்கப்பட்டன. பதுமையின் தோழி இராசனையை உருமண்ணுவா மணந்தான். யூகிக்குச் சேதி நாட்டையும், வைசாலியையும் உதயணன் அளித்தான். வயந்தக னுக்குப் பதினெரு நகரங்களைக் கொடுத்தான். உதயணன் அவனைத் தன்னுடன் இருக்க வேண்டிக் கொண்டான். இசைச்சனுக்கும் பல ஊர்கள் அளித்தான். போரில் இறந்தவரின் சுற்றத்திற்கும் பொருள் களை வழங்கினன்.

மற்றும் இருவரை மணத்தல்

உதயணன் ஆட்சி செய்கையில், மானனீகை, விரிசிகை என்னும் இருவரையும் மணந்தான்.

வருத்தம்

சந்ததியில்லாமையால் ஏற்பட்ட ஒரு வழக்கை விசாரித்த, உதய ணன் தனக்கும் மகப்பேறு இல்லாமையை உணர்ந்து வருந்தினன்.

மகப்பேறு

சில நாட்களில் வாசவதத்தை கருவுற்று, ஆண்மகவைப் பெற்றெ டுத்தாள். குபேரன் அருளால் கிடைத்தமையின் அவனுக்கு நரவாண தத்தன் என்று பெயரிட்டனர். தக்க பருவம் அடைந்த பின்னர் அவனுக்கு மதன மஞ்சிகை என்பவளை மணஞ் செய்வித்து, நெடுநாள் கீர்த்தியுடன் வாழ்ந்தனர்.

12. உதயணன் துறவு

யூகி கிடைத்ததும், வாசவதத்தையை அடைந்ததும் தவத்தால்தான் என்ற எண்ணம் உதயணனுக்கு வந்தது. வரவே, துறவுகொள்ள எண்ணி, அதை நரவாணனுக்குச் சொன்னன். அவனும் அரசை வெறுக்கப் பதுமையின் மகன் கோமுகனுக்குப் பட்டம் கட்டி, உதய ணன் குடும்பத்துடன் வனம் சார்ந்தான். தருமசுருதி என்னும் முனிவருடன் தங்கி, அறம் பல கேட்டு, தவஞ் செய்து இறுதியில் இன்பவுலகு எய்தினன்.

ஒருகை தட்டினல் ஓசை கிளம்புமா?

உதயணன்

நீதிகள்

1. "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு".—(குறள்)

(பொருள்—தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினவர் நட்பை தமது எழுவகைய பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.)

உதயணன் தனக்கு உதவிய எல்லோருக்கும் நாடு, பொருள் முதலியன கொடுத்தான். தன்னை மீட்டுக் கொணர்ந்த யானை பத்திராபதிக்கும் நன்றி செலுத்து முகமாக, நினைவுச் சின்னம் எழுப்பினான்.

2. "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்".—(குறள்)

பொருள்—தவசியே தன் சொந்த வேலையைச் செய்ப வனுவான்.

சேடகன், சதானிகன், உதயணன், விக்கிரன் யாவரும் முடிவில் தவஞ் செய்தே இன்பவுலகு எய்தினார்.

3. நல்ல நண்பரைப் பெறுதல் எல்லாச் செல்வத்தினும் மிகச் சிறந்தது. யூகியின் உயர்ந்த நட்பு, நண்பனுக்குத் துன்பம் நேர, தானும் பல இன்னல்கள் அனுபவித்து, அவனைக் காத்துவந்தது.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு—(குறள்)

(பொருள்—உடை நெகிழ்ந்தவனுடைய கை உடனே சென்று உதவுவதுபோல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்று அதை நீக்க வேண்டும். அதுதான் சிறந்த நட்பு.)

குறிப்பு: நம் நாட்டில், பண்டை நாளில் வாகனமின்றிப் பொறியினால் தாமே செல்லும் எந்திர ஊர்தி (மோட்டார்) களும் இருந்தன என்று தெரியவருகிறது. வையம் என்பது அத்தகைய ஊர்திகளுள் ஒன்று, எந்திரயானை போன்று அமைக்கும் கூரிய அறிவுத் திறன் உடையவர்களாய்ப் பண்டைக்கால மக்கள் இருந்தனர்.

ஒரு காசு பேணில் இரு காசு தேரும்.

பொருட் சுருக்கம்

கயிலாயம் இமயமலையின் சிகரங்களுள் ஒன்று. கயிலையில் சிவபெருமான் பார்வதியுடன் வாழ்வதாகப் புராணங்கள் கூறும். நம் முன்னோர் இயற்கைக் காட்சி நிறைந்த இடங்களை இறைவன் கோயிலாகக் கண்டு வணங்கினர். மண்ணுலகத்தில் உள்ள புண்ணிய தலங்களில் ஒன்றாகிய கயிலையங்கிரியைத் தரிசிக்கப் போக்குவரவு வசதியில்லாத அக்காலத்தில் பலர் யாத்திரை செய்தனர். இந்த யாத்திரையில் உயிர்விடுவதைப் பெரும் புண்ணியமாக நினைத்தனர். கயிலை யாத்திரையைப் பெருந்தவமென்று கூறலாம். இந்துக்களேயன்றிப் புத்தர்களும் கயிலையைப் புனித க்ஷேத்திரமாகப் போற்றுகின்றனர்.

இந்தியாவிலிருந்து கயிலாயத்துக்குச் செல்லப் பல வழிகள் உள்ளன. **அல்மோரா**விலிருந்து செல்லும் வழியே யாத்திரைக்கு ஏற்றது. வேண்டிய உணவு, உடை, வழி காட்டி துணையுடன் புறப்பட வேண்டும். சென்னையிலிருந்து **அல்மோரா** 1,700 மைல் தூரத்தில் உள்ளது. அங்கிருந்து கயிலை சென்றுவர 500 மைல் தூரம் உள்ளது. அங்கிருந்து நடந்துதான் செல்ல வேண்டும். அல்மோராவிலிருந்து கயிலை சென்று திரும்பக் குறைந்தது ரூ. 200-ம், உயர்ந்தது ரூ. 400-ம் செலவாகும்.

மலை வழியில் ஏற்றங்களும் இறக்கங்களும், கணவாய்களும், ஆறுகளும் கடப்பதற்கு அரியவையாயிருக்கும். பனிக் கொடுமையும் குளிரும் தாங்க முடியா; கூடாரங்களில்தான் தங்க வேண்டும். திபேத்து நாட்டில் நெடுந்தூரம் செல்ல வேண்டும். கயிலைக் காட்சி காண்பதற்கினியதாகும். 'மானசஸரோவரம்' என்னும் தடாகத்தில் மூழ்குதல், கயிலையை வலம்வருவது இவை மனத்துக்குப் பேரின்பம் தருவன.

யாத்திரையில் பல நாடுகளையும், பல மக்களையும் பார்க்கின்றோம். உடல் உழைப்பினால் பிணியகல்கின்றது. இறைவனைக் கண்ட இன்ப உணர்ச்சி உண்டாகின்றது. ஆன்மலாபம் அளவிடற்கரியது. இந்த யாத்திரையாகிய தவம்செய்து முடித்தவர் இம்மை மறுமை இன்பம் எய்துவர்.

ஒன்று ஒன்றாய் நூறு? ஒருமிக்க நூறு?

கட்டுரைத் தலைப்பும் குறிப்பும்

1. இமயமும் கயிலையும்

இமயமும் இறைவனும் - கயிலையும் புராணங்களும் - கயிலாயப் பதவி. இமயமலைத் தோற்றம் - இமயமலையின் பெருமை - இமயமலைத் தலங்கள் - கயிலையின் சிறப்பு.

2. வழியும், செலவும் (பிரயாணமும்)

கயிலாய வழிகள் - லிப்புத் தடாகக் கணவாய் வழி - ஆயத்தம் - உணவு - உடை - பொருட் செலவு - சில எச்சரிக்கைகள் - வழிக் காட்சி - அல்மோரா.

3. மலைவழி

பரிச்சினு - கனெரிச்சினு - கனுயு - பெரிநாகு - தால் - டிடிஹட் - ஆஸ்கோட் - ஜலஜிவி - பலவக் கோட்டை - டார்ச்சுலா - கேலா.

4. காளிகங்கை

காளிகங்கை - புங்கு - சிர்க்கா - ஜிப்தி - மிந்துக் கோட்டை - மால்ப்பா - ஆட்டுமந்தைகள் - பூதி - கர்பியாங்.

5. கயிலாய வாயில்

நீர்வீழ்ச்சிகள் - காலபானி - ஆராய்ச்சியாளர் கருத்து - லிப்புத் தடாகக் கணவாய் - கணவாயைக் கடத்தல் - லிப்புத் தடாகம் கணவாய்.

6. திபேத்தும் திபேத்தியரும்

திபேத்துப் பீடபூமி-பிராணிகள்-ஊரும் வீடும் - திபேத்திய மக்கள் - லாமாக்கள் - ஆட்சிமுறை - வாணிகம் - நாணயம் - திபேத்தும் இந்தியாவும்.

7. திபேத்தில் பிரயாணம்

தக்களக் கோட்டை - திபேத்தியர் வியப்பு - பௌத்த மடாலயம் - நூல் நிலயம் - திபேத்தின் உள்நாடு - திருடர் தொல்லை - தீர்த்தபுரி - பஸ்மாசுரன் அழிவு.

8. கயிலை மால்வரை

கயிலைக் காட்சி - கயிலையின் அமைப்பு - கயிலையும் இராவணனும் - கயிலையும் பௌத்தரும் - கயிலையை வலம் வருதல்.

9. முப்பெருந் தடாகங்கள்

கௌரி குளம் - மானசசரோவரம் - இராட்சஸ தடாகம் - மீண்டு வருதல்.

உத்தம சேவன் பெற்ற தாயினும் அதிகம்.

10. செலவின் (யாத்திரையின்) பயன்

அரிய அனுபவங்கள் - இராக் காலம் - மழை - மக்கள் மலை வாணர் - பூட்டியவர் - பயன் - உடல் நலம் - அறிவு நலம் - ஆன்ம நலம்.

குறிப்பு: ஒவ்வொரு கட்டுரைக் குறிப்பிலும் முதலில் 'முன்னுரை' என்றும் முடிவில் 'முடிவுரை' என்றும் சேர்த்து எழுதிக்கொள்க.

1. கயிலைமால்வரை

இமயமும் கயிலையும்

திருமாலும் சிவபெருமானும் நம் நாட்டின் பழம் பெரும் கடவுள்கள். நம் நாட்டவர் இயற்கையை உடலாகக் கொண்டு அதனுள் உயிராக இறைவன் இருப்பதை உணர்ந்துள்ளனர். இயற்கையில் இறைவனைக்கண்டு வணங்கினர். இயற்கைக் காட்சி நிறைந்த இடமெல்லாம் இறைவன் கோயிலாகக் கொண்டு வழிபட்டனர். உலகில் சிறந்த அழகின் இருப்பிடமாய் விளங்குவது இமயமலை. அதன் இதயமாயிருப்பது கயிலாயம். அது இறைவன் உருவைக்காட்டி நிற்பது. அதைக் கண்ட நம் முன்னோர் கயிலையைச் சிவபிரான் உறையும் இடமாகக் கொண்டனர். அதன் அமைப்பைக் கொண்டே சிவபெருமானுக்கு உருவும் குணமும் கற்பித்தனர்.

கயிலையும் புராணங்களும்

கயிலாயம் சிவனுறையும் இடம் என்பதையும், அது இமயத்தில் உளது என்பதையும் புராணகாலத்திலேயே நம் முன்னோர் உணர்ந்திருந்தனர். அவர்கள் அக்காலத்தில் கூறியுள்ள செய்திகள் இக்காலத்தில் நேரில் காணும் காட்சிகளோடு ஒத்திருக்கின்றன. பாண்டவர் கயிலை சென்ற செய்தியைப் பாரதத்தில் காணலாம். அவர்கள் பாரதப்போரை முடித்து அமைதியான ஆட்சியை நிறுவிய பின் கயிலைக்குச் சென்றதாகப் பாரதம் கூறுகின்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்த திருநாவுக்கரசரும், ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த சுந்தரரும் கயிலாயம் சென்றதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. திருநாவுக்கரசர் இமயமலையில் நெடுந்தூரம் வரை ஏறிச் சென்று வருந்தியபோது, திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காட்டுவதாய்ச் சிவபெருமான் கூறக்கேட்டு மீண்டார். சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாருடன் மனித உடலோடு கயிலாயம் சென்றார். கயிலாயம் மண்ணுலகத்திலுள்ள ஒரு சிவதலம் என்பதையும், மற்ற தலங்கட்டு யாத்திரை செய்து தரிசிப்பதுபோல இதையும் தரிசிக்கலாமென்பதையும் பிற்காலத்தவர் அறிந்திலர்.

கயிலாய பதவி

பிரயாண வசதியில்லாத முற்காலத்தில் யாத்திரை செய்வது கடினம். காடு, மலை, காட்டாறுகளைக் கால் நடையாகவே

நடக்கவேண்டும். காசிக்குச்சென்று மீள்வதே எளிதில் இயலாது. அக்காலத்தில் கயிலைக்குச் செல்பவர் மீள்வதில்லை. அதனால் அங்குச் செல்வது 'பரகதி' அடைவதனோடு ஒப்பிடப்பட்டது. இறந்தவர்களைக் 'கயிலாய பதம்' அடைந்தார் எனக் கூறுவாராயினர்.

இமயமலைத் தோற்றம்

இந்தியாவின் வடக்கெல்லையாய், கிழக்கு மேற்காக இரண்டாயிரம் மைல் நீளம் தொடர்ந்துள்ளது இமயமலை. இந்தியத் தாயின் மணி முடியாய், இயற்கையின் இன்பத் திருவுருவமாய், 'மலை அரசு' என்னும் பெருமிதத்தோடு, உயர்ந்த எண்ணங்கட்கு உறைவிடமாய் விளங்குவது இமயமலை.

இமயமலையின் பெருமை

ஆன்ம சாந்தியையும், விடுதலையையும் நாடினவர்கட்குப் புகலிடமாய் உள்ளது இமயம். தியானம், யோகம் இவற்றை ஓதாமல் உணர்த்துகின்ற இதைக் கண்டு ஞானம் அடைந்து கடவுள் காட்சியை பெற்றவர் பலராவர். இம்மலையிலிருந்து கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா போன்ற புண்ணிய நதிகள் பெருகிவந்து நாட்டை ஊட்டி வளர்க்கின்றன. அவற்றால் அறிவு பெற்ற நம்நாடு உலகிற்கு வழிகாட்டும் ஆசிரிய நிலை பெற்றுளது. ஆன்ம லட்சியத்தை அடைபவர்க்கு ஏணியாய் விளங்குவது இப்பெருமலை.

இமயமலைத் தலங்கள்

இமயம் சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. பெரிய இமயத்தின் தென்சாரலில் திருக்கேதாரம், பதரிகாசிரமம், கங்கோத்ரி, யமுனோத்ரி, அமரநாதம், பசுபதிநாதம் என்னும் பெயர் பெற்ற முக்கியமான க்ஷேத்திரங்கள் உள்ளன. இவற்றிற்குச் செல்லும் வழிகள் இப்போது மிகவும் செப்பனிடப்பட்டுள்ளதால், ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் முதியோர்கள் மகளிரும்கூட இத்தலங்கட்கு எளிதில் சென்று மீள்கின்றனர்.

கயிலையின் சிறப்பு

இமயத்து மணிமுடியாக இருக்கும் கயிலை, பேரிமயத்திற்கு அப்பால் உள்ள எல்லை கடந்த இமயத்தில் இமயத்தின் வடசாரலில் மேற்குத் திபேத்தில் அமைந்துள்ளது. உலகத்தில் அழகில் சிறந்த மானசசரோவரம் என்னும் தடாகம் கயிலையின் அருகில் உள்ளது. கயிலை சிவ வடிவமாகவும், இத்தடாகம் சக்தி வடிவமாகவும் காட்சியளிக்கின்றன. இவ்விரண்டும் சேர்ந்து கௌரி சங்கர் என வழங்கப்படும். இமயம் இறைவன் கோயிலாயும் கயிலாயம் அக்கோயிலின் மூலத்தானமாகவும் விளங்குகிறது. கயிலாயம் தொன்று தொட்டு நம்நாட்டு

மக்களால் சிறந்த க்ஷேத்திரமாகப் பாராட்டப்பட்டு வந்தது. தேவர்களும் அசுரர்களும் இங்குத்தவம் செய்த இடங்கள் இன்றும் காணப்படுகின்றன. கடவுள் அன்பு இல்லாதவர்களும் கயிலையைக் கரணில் தம்மை மறந்து அன்பு வெள்ளத்தில் மூழ்குவர்.

கயிலாயம் இந்துக்களுக்கேயன்றிப் புத்தர்களுக்கும் புனித க்ஷேத்திரமாய் விளங்குகின்றது. திபேத்தில் உள்ள புத்தர்கள் இந்துக்களோடு சேர்ந்து, கயிலை சிவபெருமான் உறைவிடம் என்று கூறுகின்றனர். சிவபதவி என்பதையும் மகாநிர்வாணம் என்பதையும் அவர்கள் ஒன்றாகவே கருதுகின்றனர். புத்தர்களில் பலர் கயிலையில் மகா நிர்வாண நிலையை அடைந்ததாக அவர்கள் கூறுகின்றனர். கயிலையை எடுக்க இராவணன் முயன்றதும், தவம் செய்ததும், திபேத்தில் பெரு வழக்காக வழங்கி வருகின்றனர். இந்தியாவையும் திபேத்தையும், இந்து மதத்தையும் புத்த மதத்தையும் கயிலாயம் ஒற்றுமைப் படுத்துகிறது.

2. வழியும், செலவும் (பிரயாணமும்)

கயிலாய வழிகள்

கயிலாயத்துக்குச் செல்லுவோர் என்றும் உருகாத பேரிமயத்தை கடந்தாக வேண்டும் அதைக் கடந்து வடக்கே செல்வதற்கு உபயோகப்படும் சில கணவாய்களும் வேனிற் காலத்திலேயே வழிவிடும். மற்ற காலங்களில் பனி அடையால் மூடப்பட்டுக் கிடக்கும். ஆதலால் ஒருவர் இருவரே இரண்டு மூன்று ஆண்டு கட்கு ஒருமுறை கயிலாயத்திற்குச் சென்று மீள்வர். அவர்களிலும் சிலர் விபத்துக்குள்ளாகி அங்கேயே மாள்வர். வட இந்திய பைராகிகள் இதை ஒரு புண்ணியமாகக் கருதி யாத்திரை சென்று உயிர்விட்டனர். இப்பொழுது கயிலை செல்லும் வழிகள் ஓரளவு சீர்பட்டு உள்ளன. மெய் வருத்தம் பாராது செல்பவர் இதனைக் கடந்து திரும்பலாம். துன்பந்தாங்கும் உறுதி இல்லாதவர் உல்லாசமாகச் சென்று வர முடியாது. இக்காலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கயிலை சென்று மீள்கின்றனர். நம் நாட்டினின்றும் கயிலைக்குச் செல்லப் பலவழிகள் இருக்கின்றன. காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரிலிருந்து கிழக்கு நோக்கிக் கயிலைக்கு ஒரு வழி செல்லுகின்றது. இது மிகவும் தூரவழியாகும். டெஹரி சமஸ்தானத்திலுள்ள கார்வால் என்னும் இடத்திலிருந்து மற்றொரு வழி செல்லுகின்றது. சிம்லாவிலிருந்து ஷிப்கி கணவாய் வழியாகச் செல்லும் வேறொரு வழியும் உள்ளது. கங்கை நதி உற்பத்தியாகும் கங்கோத்ரி யிலிருந்து நீலக் கணவாய் வழி ஒன்றும் பத்ரிகாசிரமத்திலிருந்து மானக் கணவாய் வழியொன்றும் உள்ளன. மானக் கணவாய் வழியில் தெலிங்க மடம் என்னும் திபேத்திய மடம் உள்ளது. பத்ரிகாசிரமத்திற்குக் கீழே ஆதி சங்கரரால் அமைக்கப்பட்ட ஜோதி

மடம் உள்ளது. அங்கிருந்து நீதிக் கணவாய் வழியொன்றும் கயிலைக்குச் செல்கிறது. இவையாவும் யாத்திரைக்கு ஏற்றவையல்ல.

லிப்புத் தடாகக் கணவாய் வழி

அல்மோராவிலிருந்து தொடங்கி லிப்புத் தடாகக் கணவாயில் செல்லும் வழியே எல்லா வழியினும் குறைந்த தூரமுள்ளது. இது கயிலைக் கோயிலுக்கு வாயில் போன்றது; ஆபத்து அதிகம் இல்லாதது குளிர் காலத்தில் முழுதும் பனிமூடிக்கிடக்கும்; இளவேனிற் காலத்தில் பனி உருகி முதுவேனிற்காலத்தில் முற்றும் நீங்கிவிடும். அப்போது திபேத்திய வணிகர் இந்தியாவிற்கு வரத்தொடங்குவர். அவர்கள் வரக்கண்டதும் அல்மோராவில் காத்திருக்கும் யாத்ரிகர், யாத்திரையைத் தொடங்குவர். ஆனி, ஆடி, ஆவணி இம்மூன்று மாதங்களுக்குள் யாத்திரையை முடிக்க வேண்டும்.

ஆயத்தம்

கயிலைக்குச் செல்ல விரும்புவோர் சில மாதங்கள் முன்தொடங்கியே உடன் கொண்டு செல்லுதற் குரிய பொருள்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். சென்று வந்தவர்களிடம் தெரிந்து கொள்வதும் நலம். இமயத்தின் தட்ப வெப்பநிலை நம்நாட்டு நிலைக்கு முற்றிலும் வேறுபட்டது. குளிர்மிகுந்த அப்பிரதேசத்தில் இரண்டு மாதம் பிரயாணம் செய்வதற்கு ஏற்ற உணவும், உடையும் இன்றியமையாதவை. வேறு உணவு உட்கொள்ள விரும்பாதவர் யாத்திரை செல்ல இயலாது. திபேத்துப் பிரதேசத்தில் பருப்பு வேகாது. அரிசியும் அப்படியே. பூரி சப்பாத்தி முதலிய கோதுமை உணவையே உட்கொள்ளவேண்டும்.

உணவு

இமயத்தில் உருளைக்கிழங்கும், வெங்காயமும் தவிர, வேறு காய் வகைகளும் பால் தயிர்களும் கிடையா. வற்றல். மசாலைத்தூள், ஊறுகாய், உறைந்த பால் புட்டிகள், லேசான அலுமினியப் பாத்திரங்கள், மண்ணெண்ணெய் அடுப்பு. (stove) வெப்பங்காக்கும் குப்பி முதலியவற்றை உடன்கொண்டு செல்ல வேண்டும். திபேத்தில் விறகு கிடைக்காது.

உடை

பழக்கமான பருத்தி உடையோடு கம்பள உடைகள், போர்வைகள், கம்பள உள்சட்டை, தால்சட்டை, கையுறை, கால் உறை இவை அவசியமானவை. இவை வட நாட்டில் குறைந்த விலைக்குக் கிடைக்கும். உறுதியாகத் தைக்கப்பட்ட செருப்பு, பூட்ஸ், இரும்புப் பூண் போட்ட ஊன்றுகோல், குடை, புகைப்படக் கருவி, மருந்துகள் இவையும் அவசியமானவையே.

பொருட் செலவு

அல்மோராவிலிருந்து கயிலாயம் சென்று அவ்விடத்திற்குத் திரும்ப ஒருவருக்குக் குறைந்தது 200 ரூபாய் செலவாகும். 400 செலவு செய்யின் இன்ப யாத்திரையாக முடியும். உணவு, உடை, மருந்து வாங்கவும் கூலியாட்கள், குதிரைகள் அமர்த்தவுமே இத்தொகை செலவாகும்.

சில எச்சரிக்கைகள்

அரைவேட்டி மேலாடையுடன் கயிலை யாத்திரை செய்ய இயலாது. கம்பள உடை, சட்டை, காற்சட்டை வேண்டும். காலில் செருப்பின்றிக் கூரான கற்களின்மேல் நடக்க முடியாது. தண்ணீரைக் காய்ச்சியே பருக வேண்டும். அங்குள்ள சில கனிகளில் நச்சுத் தன்மை இருப்பதால் கண்ட பழங்களைத் தின்னக் கூடாது ஆட்டு மந்தைகள், குதிரைகள் எதிர்ப்படின் மலைப் பக்கமாக ஒதுங்கி வழிவிட வேண்டும். இன்றேல் அவை மோதிக் கீழே தள்ளிவிடும். கயிலாய யாத்திரை புறப்பட்ட பாண்டவர் ஐவரில் தருமர் ஒருவரே கயிலை அடைந்தார் என்றும், மற்றவர் வழியில் தடைப்பட்டு ஒழிந்தனர் என்றும் பாரதம் கூறுகின்றது. முன்னோக்கிச் செல்பவர் பின்னால் திரும்பிப் பார்க்கக்கூடாதென்பதை இது உணர்த்தும் கடவுள் பக்தியுடன் செல்வதும் அவசியம்.

வழிக் காட்சி

அல்மோரா சென்னையிலிருந்து 1,700 மைல். தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து செல்வோர் டெல்லி, மொராதபாத், பரிலி சந்திப்புக்களில் வண்டி மாற வேண்டும். காத்கோடம் என்னும் இடத்தோடு ரயில் பிரயாணம் முடிகின்றது. நைனிடால், ராணிக்கேட் அல்மோரா முதலிய இடங்களுக்குச் செல்வோர் மோட்டார் வண்டிகளில் செல்ல வேண்டும்.

அல்மோரா

காத்கோடத்திலிருந்து அல்மோராவுக்கு 100 மைல். அல்மோரா கடல் மட்டத்திலிருந்து 5,600 அடி உயரத்தில் உள்ளது. பத்தாயிரம் மக்கள் இங்கே வாழ்கின்றனர். ஆட்டு மயிரைக்கொண்டு நூல் நூற்றுக் கம்பளம் செய்யும் தொழில் இங்கு நடைபெறுகிறது. அல்மோராவிலிருந்து கயிலைக்குச் சென்று திரும்பி வந்துசேரும் தூரம் 500 மைலுக்கும் அதிகம். அவ்வளவு தூரமும் நடந்தே செல்லவேண்டும். சில இடங்களில் குதிரைமீது செல்லலாம். மூட்டை, படுக்கை, பெட்டி முதலியவற்றைத் தூக்கிச் செல்ல ஆட்களையும், குதிரைகளையும் இங்கேயே அமர்த்திக்கொள்ளவேண்டும். ஒரு ஆள் 60 பவுண்டும், குதிரை 120 பவுண்டும் கனம் தூக்கிச்செல்வது வழக்கம்.

• அல்மோராவிலிருந்து கயிலைசென்று மீள ஏழு வார காலம் செல்லும். எட்டு வாரத்திற்கு உணவுப் பொருள்களைச் சேமித்துக்கொள்ள வேண்டும். யாத்திரை செல்வோர்க்கு உதவிசெய்யும் சமிதி ஒன்று அல்மோராவில் உள்ளது. அவர்கள் உதவியோடு அங்கு ஒரு வாரம் தங்கி வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு யாத்ரீகர்கள் பதின்மர் பதின்மராகப் பிரிந்து செல்லவேண்டும். ஒரே கும்பலாய்ச் சென்றால் வழியில் உள்ள தங்கும் இடங்களில் இடம் கிடைக்காது.

3. மலை வழி

பரிச்சீனு

அல்மோராவிலிருந்து எட்டு மைல் வரை சம நிலத்திலேயே வழி செல்கிறது. வானளாவி வளர்ந்த பயின்மரக்காட்டில் வழி வளைந்து வளைந்து செல்லும். எட்டு மைலுக்கு அப்பால் பரிச்சீனு என்னும் ஊர் உள்ளது. இரு பள்ளத்தாக்குகட்கு இடையில் உள்ள மேட்டுப்பாங்கான இடம் பரிச்சீனு எனப்படும். அல்மோராவிலிருந்து புறப்பட்டவர்கள் முதல் நாள் இரவு இங்குத் தங்குவார்கள்.

கனெரிச்சீனு—கனுய்

பரிச்சீனுவிலிருந்து பதினோராவது மைலில் கனெரிச்சீனு இருக்கிறது. அங்கிருந்து ஐந்து மைல் சென்றால் சரயுநதி குறுக்கிடுகிறது. அதனைக் கடக்க ஒரு அழகியத் தூரிப்பாலம் இருக்கின்றது. அதனைக் கடந்ததும் நான்கு மைல் தூரம் செங்குத்தான ஒரு ஏற்றம் இருக்கின்றது. பின்னர் இரண்டு மைல் இறங்கிச் சம நிலத்தில் சென்றால் கனுயை அடையலாம். அங்குத் தண்ணீர் கிடைப்பது அரிது. ஒரு குடம் நீருக்கு ஓர் அணா விலை கொடுக்கவேண்டும்.

பெரியநாகு

கனுயைக் கடந்ததும் இயற்கைக் காட்சி அழகாகத் தோன்றும்-வழி சம நிலத்தில் செல்லும். கறிவேப்பிலை மரங்கள் மிகுதி. நீரால் சுழற்றப்படும் எளிய இயற்கை இயந்திரங்களின் உதவியால் மலைவாணர் கோதுமை மாவு அரைத்துக் கொள்கின்றனர். அல்மோராவிலிருந்து கயிலைக்குச் செல்லும் வழியில் ஒன்பது ஏற்றங்கள் உள்ளன. ஏற்றத்தைச் சடாய் என்றும் இறக்கத்தை உத்தராய் என்றும் கூறுகின்றனர். கனுய்க்கும், பெரியநாகுக்கும் இடையில் முதலாவது பெரிய ஏற்றம் உள்ளது. பெரிய நாகு கடல் மட்டத்திற்கு 7000 அடி உயரத்தில் உள்ளது. முதல் ஏற்றத்தைக் கடந்தால் கனுயிலிருந்து பன்னிரண்டாவது மைலில் உள்ள பெரிய நாகு என்ற ஊர் காணப்படும்.

தால்

பெரியகாகுவிலிருந்து ஏழு மைல் வழி இறங்கிச் செல்கிறது. தால் என்னும் ஊருக்கு அருகில் வழி தாழ்வாக ஏறிச்செல்கிறது. இங்கு ராம்கங்கா என்னும் அழகிய ஆறு ஓடுகிறது. இதைக் கடந்தால் தால் என்னும் ஊரை அடையலாம். இவ்வூர்ப் பாடசாலையில் தங்குதற்கு இடம் கிடைக்கும்.

டிடிஹாட்

தால் என்னும் ஊரைக் கடந்ததும் இரண்டாவது ஏற்றம் தொடங்குகிறது. செங்குத்தான மலையின்மேல் ஐந்து மைல் தூரம் ஏறவேண்டும் சிறிது தூரம் ஏறியதும் பேரிமயத்தின் பெருமுடிகளான நந்தாதேவி, பஞ்சசூலி, பிண்டாரி என்பவை காட்சியளிக்கும். இங்கிருந்து ஐந்து மைல்கொடிய விலங்குகள் நிறைந்த காட்டில் நடந்து டிடிஹாட் என்னும் ஊரை அடையலாம். இக்குப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் யாத்ரிகர்களுக்கு உதவி புரிவர்.

ஆஸ்கோட்

டிடிஹாட்டினின்றும் ஒன்பதுமைல் தூரத்தில் ஆஸ்கோட் உள்ளது. கோட் என்னும் சொல் கோட்டை என்னும் பொருள் தரும். இங்கே எட்டுக் கோட்டைகள் இருந்தனவாம். ‘அஷ்டகோட்’ என்பது ஆஸ்கோட் எனத் திரிந்து வழங்குகின்றது. விக்கிரமபகதூர்பால் என்னும் இவ்வூர் அரசர் யாத்ரீகர்களுக்கு வேண்டும் உதவி செய்கிறார்.

ஜுலஜீவி—பலவக்கோட்டை

ஆஸ் கோட்டைக் கடந்ததும் மூன்றுமைல் வழி கீழ்நோக்கி இறங்குகிறது. கயிலை வழியில் உள்ள நான்கு இறக்கங்களில் இது ஒன்று. மூன்றுமைல் கடந்தால் கௌரி கங்கை என்னும் பெரிய ஆற்றை அடையலாம். ஒரு மைலுக்கு அப்பால் இது காளி கங்கை என்னும் மற்றொரு பெரிய ஆற்றோடு கூடுகிறது. இங்கு ஜுலஜீவி என்னும் பெயருடைய ஊர் உள்ளது. இவ்வூரில் அழகிய சோலையின் நடுவில் ஒரு சிவன்கோயிலும், ஒரு ஆசிரமும் உள்ளன. ஆசிரமத்தில் தங்கலாம். ஜுலஜீவியிலிருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் பலவக் கோட்டை என்னும் ஊர் உள்ளது. பூட்டிய வியாபாரிகள் பனிக் காலத்தில் இங்கு வசித்து, வேனிற்காலத்தில் வேறிடங்களுக்குச் சென்று விடுவதால், அப்போது ஊர் பாழடைந்து தோன்றும். வீடுகள் பூட்டப் பட்டு இருக்கும்.

டார்ச்சுலா

பலவக்கோட்டையினின்றும் பதினோராவது மைலில் டார்ச்சுலா என்னும் ஊர் உள்ளது. இங்குத் தேள் முதலிய விஷப்பூச்சிகள் அதிகம்.

இவ்வூரைச் சுற்றி காலைக்கோட்டை, மாள்வேளக் கோட்டை டார்ச்சுலாக் கோட்டை என்னும் மலைகள் சூழ்ந்திருக்கின்றன. இங்கு நெல், கோதுமை வாழை, மா, கிச்சிலி போன்றவை பயிராகின்றன. நேபாள அரசாங்கக் காரியாலயம், நீதிமன்றம், சிறைச்சாலை முதலியவை இங்கு உள்ளன. இங்குத் தங்குவதற்குக் கடைகளும், தருமசாலைகளும், விடுதிகளும் உள்ளன. இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். அல்மோராவிலிருந்து வந்த கூலியாட்கள் இவ்வூரோடு நின்றுவிடுவர். இங்கு வேறு கூலியாட்களை அமர்த்திக்கொள்ளவேண்டும். டார்ச்சுலாவிலிருந்து செல்லும் வழி அபாயம் நிறைந்தது. ஒரு பக்கம் மலை, மறுபக்கம் பாதாளத்தில் இறைந்துகொண்டு விரைந்து செல்லும் காளி கங்கை. மலைச்சரிவில் கற்கள் அடிக்கடி நழுவி உருண்டுவிழும். மழை பெய்யும்பொழுது இவ்வாபத்து அதிகம். முதல் மூன்றுமைல் வழி சமமாக உள்ளது. இறுதி மூன்று மைல் மூன்றுவது பெரிய ஏற்றம் எதிர்ப்படுகிறது:

கேலா

இவ்வேற்றத்தைக் கடந்ததும் கேலா என்னும் ஊர் காணப்படுகிறது. கயிலை செல்லும் வழியில் இழ்வூரில் நல்ல நெய் கிடைக்கும். வாழைப்பழமும் மிகுதி. இங்கிருந்து கர்பியாங் வரையிலுள்ள 50 மைல் தூரமும் கயிலை வழியில் கடுமையான பகுதியாகும். கர்பியாங் வரை செல்ல இங்குப் புதிய கூலியாட்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. காளி கங்கை

காளி கங்கை

பலவக் கோட்டையிலிருந்து கேலாவரை காளி கங்கையின் கரையோரமே செல்லவேண்டும். பின் இது விலகி இரண்டு நாள் பயணத்திற்குப் பின் ஜிப்தியில் காட்சியளிக்கிறது. அங்கிருந்து இதன் பிறப்பிடமாகிய லிப்புத் தடாகம் வரையில் இதன் கரையோரமே வழி செல்கிறது. இது இமயமலையின் இந்திய எல்லையில் உள்ள ஆறுகள் எல்லாவற்றிலும் பெரியதும் வேகமுள்ளதும் ஆகும். இதன் பயங்கர வேகம் அசுரர் மேற்செல்லும் காளியை நினைப்பூட்டுவதால் இப் பெயர் பெற்றது. இது சமவெளியில் வந்ததும் சரயு என்ற பெயர் பெறுகிறது. இதன் குறுக்கே ஒரு கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டு மலைவாணர் இதைக் கடக்கிறார்கள். நேபாளத்திற்கும், இந்தியாவிற்கும் இடையே இவ்வாறு எல்லையாக அமைந்துள்ளது. நேபாளத்தின் மேல் பகைவர்கள் படையெடுக்காமல் இருப்பதற்கு இந்த ஆறும் ஒரு காரணமாகும்.

புங்கு—சிர்க்கா

கேலாவை யடுத்து இரண்டாவது பெரிய இறக்கம் உள்ளது. ஒரு மைல் தூரம் ஏணிப்படியில் இறங்குவது போல் இறங்கவேண்டும்.

முடிவில் தவளகங்கை என்ற ஆறு ஓடுகின்றது. இதை யடுத்துள்ள நான்காவது பெரிய ஏற்றம் ஐந்து மைல் வளைந்து வளைந்து மேல் நோக்கி ஏறுகிறது. இடையில் இடையில் பூட்டியர்களுடைய பூங்கு என்னும் ஊர் கடல் மட்டத்திலிருந்து 7,000 அடி உயரததில் உள்ளது. தவள கங்கையிலிருந்து பூட்டியர்களுடையநாடு தொடங்குகிறது. வழியில் காணும் மரக்கிளைகளில் சிறு துணிகள் கணக்கின்றிக் கட்டப்பட்டுள்ளன. திபேத்தில் இக் காட்சியைக் காணலாம். இதைப் 'பிரார்த்தனைக் கொடி' என்று கூறுகிறார்கள். இந்த ஏற்றத்தைக் கடந்ததும் கடல் மட்டத்திலிருந்து ஒன்பதினாயிரம் அடி உயரத்திலுள்ள சிர்க்கா என்னும் ஊர் உள்ளது. அக்ரூட் மரங்களும் ஆப்பிள், பேரிக்காய்களும் இங்கு உண்டு. அசுத்தத்திற்கு இருப்பிடமான இவ்வூரில் ஈக்கள் மிகுதி. இங்கிருந்து இரண்டு மைல் வரை வழி நன்றாய் இருக்கின்றது. அதைக் கடந்ததும் மூன்று மைல் தூரமுள்ள ஐந்தாவது ஏற்றம் காணப்படுகின்றது. இதைத் தொடர்ந்து மூன்று மைல் தூரம் மூன்றாவது பெரிய இறக்கம் உள்ளது. இங்கு இயற்கைக் காட்சிகள இன்பந் தரும்.

ஜிப்தி

இடையிலுள்ள பிரிங்பாங் என்னும் ஊரைக் கடந்து ஜிப்தியை அடையவேண்டும். ஜிப்தி என்னும் சொல்லுக்குச் சிக்கனம் என்று பொருள். இவ்வூர் கடல் மட்டத்திற்கு எண்ணாயிரம் அடி உயரத்தில் உள்ளது. டேலியா என்னும் ஒருவகைப் பெரிய பூக்கள் இங்கு மிகுதி.

பிந்துக் கோட்டை

ஜிப்தியைக் கடந்து ஒரு மைல் சென்றதும் இருபெரும் பாறைகளுக்கிடையில் வழி நுழைந்து செல்கிறது. இதை பிந்துக்கோட்டை என்பர். இதை எமலோகவாயில் என்னலாம். இங்கிருந்து கர்பியாங் செல்லும் வரையில் இருபத்தொரு மைல் தூரமும் கடுமையான வழி. இடப்பக்கம் நிர்ப்பானி மலை. வலப்பக்கம் காளி கங்கை மூன்று மைல் தூரம் ஏணிப்படி போன்று கீழே இறங்குகிறது. இது நான்காவது பெரிய இறக்கம். இங்கும் மலையிலிருந்து கல் சரிந்து விடும். கயிலாய வழியில் மிக்க துன்பந் தரும் வழிகளில் இதுவும் ஒன்று. மைசூர் அரசர் நன்கொடையால் இவ்வழி சீர்பட்டிருக்கிறது.

மால்ப்பா

பத்துமைல் கடந்ததும் பாறைமேல் கட்டப்பட்டுள்ள சிறிய குடிசை காணப்படுகின்றது. இவ்விடம் மால்ப்பா எனப்படும். இப்பெயரை உடைய நதி அருகில் ஓடுகின்றது. இது ஒரு ஊரன்று. உமாதேவி என்னும் பூட்டிய அம்மையாரால் கட்டப்பட்ட தருமசாலையாகிய குடிசையும் தபால்காரன் குடிசையும் வழிச் செப்பம் செய்வோர் தங்கும் குடிசையும் மட்டும் உள்ளன. மால்ப்பாவிலிருந்து கர்பியாங் பன்னிரண்டு மைலில் உள்ளது. பூந்தி என்னும் ஊர்வரை ஏழு மைல் துன்பம் நிறைந்த வழி.

சருகைக் கண்டு தணல் அஞ்சுமா ?

ஆட்டு மந்தைகள்

இவ்வழியில் ஆட்டு மந்தைகள் அடிக்கடி எதிர்ப்படும். அவற்றைக் கடப்பது பெருந்தொல்லையாகும். திபேத்தியர் குளிர் காலத்தில் ஆடுகளை இந்தியாவிற்கு ஓட்டி வருவர். திரும்பிச் செல்லும் பொழுது ஆட்டு ரோமத்தை விற்றுக் கோதுமை, வெல்லம் இவற்றை வாங்கி ஆடுகளின் மேல் ஏற்றிச் செல்வர். திபேத்திய நாய்களும் உடன் செல்லும்.

பூதி : மால்ப்பாவிலிருந்து ஏழாவது மைலில் பூதி என்னும் ஊர் உள்ளது. யாத்திரை செல்வோர் இங்குத் தங்கி இளைப்பாறிச் செல்வர்.

கர்பியாங் : பூதியினின்றும் இரண்டரை மைல் ஒரு பெரிய ஏற்றத்தில் ஏறிச் செல்லவேண்டும். பின்னர் இரண்டு மைல்கள் இறக்கத்தில் இறங்கினால் கர்பியாங் என்னும் ஊரை அடையலாம். இது கடல் மட்டத்திற்கு மேல் 10,300 அடி உயரத்தில் உள்ளது. அல்மோராவிலிருந்து நூற்றைம்பது மைல்கள் கடக்கப்பட்டன. கயிலையை அடைய இன்னும் நூறு மைல்கள் உள்ளன. இந்திய எல்லையின் கடைசி கிராமம் கர்பியாங்கே ஆகும். கர்பியாங்கிலிருந்து கயிலாய யாத்திரையின் போக்கு மாறுகின்றது. இனி திபேத்தில் செய்யும் யாத்திரைக்குத் தக்க வழிகாட்டியை இங்கே அமர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வுயரத்திற்கு மேல் ஆட்கள் மூட்டையைத் தூக்கிச் செல்ல இயலாதாகையால் குதிரைகளை அமர்த்திக் கொள்ளவேண்டும். நடந்து செல்ல முடியாதவர்கள் ஏறிச் செல்லக் குதிரையை இங்கேயே அமர்த்திக் கொள்ள வேண்டும். கயிலை போய் இங்குத் திரும்பும் வரையில் கூடாரத்தில்தான் தங்க வேண்டும். கூடாரமும், பனிக் கட்டித் தரையில் விரிக்கும் கொதமா என்னும் கம்பள விரிப்புக்களும் இங்கு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவேண்டும். திபேத்தில் திருடர் பயம் அதிகம். கம்பளம், உணவுப் பொருள், குதிரை இவற்றைத் திருடிச் செல்ல, யாத்ரிகர்களை அவர்கள் கொலை செய்வதும் உண்டு. வழிகாட்டி, துப்பாக்கியையும், வேட்டை நாய்களையும் துணையாகக் கொண்டுவருவான். ஆபத்துக்கள் முடிந்தவுடன் வழிகாட்டி படைத் தலைவன் போல் பணியாற்றுவான். அவன் ஆணைப்படியே யாவும், நடக்க வேண்டும். பிரயாணம் தொடங்குவதற்கு முன் வழிகாட்டியும், குதிரை யாட்களும் வரிசையாக நிற்க, அவர்கள் தாய்மார்களும், உறவினரும் வந்து தலையில் வெற்றிக் கொடி சூட்டி, கயிலை யாத்திரையை இனிது முடிக்க ஆசி கூறுவர். ஆசி சடங்கு முடிந்ததும் ஜெய முழக்கத்துடன் அனைவரும் புறப்படுவர்.

---

5. கயிலாய வாயில்

1. நீர் வீழ்ச்சிகள்

கர்பியாங்கைக் கடந்ததும் ஒரு மைல் தூரம் கீழிறங்கிக் காளி கங்கையை மரப்பாலத்தால் கடக்கவேண்டும். அதன் இடக்கரையி லிருந்து நேப்பாள நாட்டு எல்லை தொடங்குகிறது. அங்கு மிகப்பெரிய மலைத்தொடர்கள் உள்ளன. அவற்றிலிருந்து விழும் அருவிகள் பல. அருவிநீரின் தூவானம் யாத்திரிகர்களை நனைத்துவிடும்.

காலபானி

துன்பம் நிறைந்த இவ்வழியைக் கடந்து பத்து மைல் சென்றால் காலபானி என்ற இடம் உள்ளது. கரும் பாறைகளிலிருந்து நீர் ஊற்றுப் பீறிட்டுப் பாய்ந்து ஓடுகிறது. அதுசேறு படிந்து கறுப்பு நிறமாக இருப்பதினால் காலபானி (கறுப்பு நீர்) என்று பெயர் வழங்கப் படுகின்றது. இங்கு வீடோ குடிசைகளோ இல்லை. கூடாரங்களில் தங்க வேண்டும். இதற்கு மேல் உறைபனிப் பிரதேசம் ஆனதால் மரம், செடி, கொடிகள் வளர மாட்டா. விறகு கிடைக்காது. இதற்கு மேல் விறகு அடுப்பிற்கு வேலை இல்லை. மண்ணெண்ணெய் அடுப்புப் பயன்படும். இது கடல் மட்டத்திலிருந்து பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது குளிர் அதிகம். கம்பளச் சட்டை, கம்பள அங்கி, கம்பளக் குல்லாய் கழுத்துக்கும், காலுக்கும் சுற்றும் கம்பளப்பட்டை கம்பளக் கையுறை, காலுறைகள் அணிந்து கொள்ளவேண்டும். ஆணி கள் தைத்த தோல் செருப்புக்களைக் காலில் பூட்டிக் கொள்ள வேண்டும்.

ஆராய்ச்சியாளர் கருத்து

கர்பியாங்கிலிருந்தும் பதினெட்டு மைல் தொலைவிலுள்ள குட்டி என்னுமிடத்திற்கு அருகில் கல்லுருவாகச் சமைந்த கடல் சிப்பிகளும், மீன்களும் கடல் பிராணிகளும் காணப்படுகின்றன. இமயமலை கடலுக்குள் இருந்ததை இவை காட்டுவதாக ஆராய்ச்சியாளர் கூறு கின்றனர். நாம் கடவுள் உருவமாக வழிபடும் சாளக்கிராமங்களும் இவ்வாறு உண்டானவையே. அவை நேப்பாளத்திலுள்ள முக்தி நாத் என்னுமிடத்திலும் உண்டாதுராக் கணவாயிலும் தர்மாக் கண வாயிலும் இவை மிகுதியாகக் கிடைக்கின்றன.

லிப்புத்தடாக கணவாய்ப் பகுதியில் பனியால் உடலும் உடம் பும் கருகி வெடித்துவிடும். உடலிலும் முகத்திலும் அடிக்கடி வாஸ் லீன் என்ற எண்ணெய் பூசிக்கொள்ளவேண்டும். காலபானியி லிருந்தே பனிக்கட்டி மழை தொடங்கிவிடும். கணவாயின் அருகில் அது மிகுதியாகப் பெய்யும். அதில் மனிதன் புதைந்து விடுவான். பனி மழை நிற்கும் வரை கணவாயை நோக்கி முன்னேறக்கூடாது. காலையில் வெயில் எழுந்து பனிக்கட்டி உருகத் தொடங்குமுன் கண வாயைக் கடந்துவிடவேண்டும்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்.

லிப்புத்தடாகக் கணவாய்

இக்கணவாய் கடப்பதற்குக் கடுமையான வழி. இதன் உச்சியில் ஏறும்போது வயிறு நிறைய உணவுண்டிருத்தல் வேண்டும். இன்றேல் வாந்தியும், மயக்கமும் வரும். சிற்றுண்டி ஊறுகாய் வாஸலின், முகர் உப்பு இவற்றை மறவாமல் வைத்திருக்க வேண்டும்.

கணவாயைக் கடத்தல்

இக்கணவாய் பதினாறாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் உள்ளது. உயரச் செல்லச்செல்ல வேண்டும் அளவு காற்று இல்லாமையால் மூச்சு திணறும். தலை கிறுக்கி மயக்கம் உண்டாகும். அவ்வப்போது சிற்றுண்டி உட்கொண்டும், ஊறுகாய் மென்றுகொண்டும், முகர் உப்பை முகர்ந்து கொண்டும் செல்லவேண்டும். பனிக்கட்டியின் மேல் செல்வதால் இரத்த ஓட்டம், மிகவும் குறைவு. களைப்பினால் பனிக்கட்டியின் மேல் படுக்கத் தோன்றும். படுத்தவர் மறுபடியும் எழார். பனி இளகிய இடங்களில் கால் புதையும், கண் சிவக்கும், தலை சுழலும்.

லிப்புத் தடாகம்

இக்கணவாயின் உச்சியில் வெள்ளி மயமாக விளங்கும் மலையின் இடையில் பச்சை நிறமாகத் தோன்றும் நீரையுடைய லிப்புத் தடாகம் தோன்றும். இதிலிருந்து உண்டாவது தான் காளிகங்கை. ஒளிமயமாகத் தோன்றும் பனிக்கட்டி நிறைந்த இப்பகுதியை வெறும் கண்ணால் பார்க்கின் கண்ணொளி மங்கிவிடும். ஆதலால் பச்சை அல்லது கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொள்ளவேண்டும்.

கணவாய்

இக்கணவாய், இந்தியா, நேபாளம், திபேத்து ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகளும் கூடுமிடமாகும். இது கயிலைக் கோயிலுக்கு அமைந்த வாயிலைப் போன்றது. இதைக் கடந்தவுடன் தேவலோகத்தை அடைந்தது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் உண்டாகும். கணவாயைக் கடந்து பேரிமயத்தின் வடசாரலில் ஒரு மைல் தூரம் பனியடை மூடிய மலைச் சரிவில் திபேத்துப் பக்கம் இறங்க வேண்டும். இங்கிருந்து எல்லை கடந்த இமயப் பரப்பு தொடங்குகிறது. கணவாயிலிருந்து ஏழு மைல் சென்றதும் பாலா என்னும் ஊர் காணப்படுகின்றது. அதனைக் கடந்து மூன்று மைல் சென்றால் மாக்ரம் என்னும் ஊரும் அதைக் கடந்து இரண்டு மைல் சென்றால் தக்களக் கோட்டையும் உள்ளன. கணவாயின் இறக்கத்திலிருந்து திபேத்து நாடு தொடங்குவதால் யாத்திரையின் போக்குப் புது முறையில் மாறுகின்றது.

சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்.

6. திபேத்தும் திபேத்தியரும்

திபேத்துப் பீடபூமி

இது உலகில் உள்ள எல்லாப் பீடபூமிகளிலும் உயரமானது. கடல் மட்டத்திலிருந்து பதினையாயிரம் அடி உயரமுள்ளது. செடி கொடிகள் இல்லாத மலைகள் பனிமூடிக் கிடக்கின்றன. மழை பெய்வதில்லை. பனிமழை பெய்யும். குளிர் தாங்க முடியாது. சில இடங்களில் ஒன்று இரண்டடி உயரமுள்ள டாமா என்னும் காரைச் செடிகள் கொத்துக் கொத்தாக வளர்ந்திருக்கும். அவை பசுமையாக இருக்கும்போதே திப்பற்றி எரியும் தன்மை வாய்ந்தவை. திபேத்தியர்களுக்கு இச்செடிகள் வளர்ந்துள்ள இடமே காடு.

பிராணிகள்

திபேத்தில் செம்மறி ஆடு வெள்ளாடுகள் மிகுதி. யாக் என்னும் ஒருவகைச் சடை மாடுகள் உள்ளன. இவை திபேத்தியருக்கு வாகனமாகவும் பொதிமாடுகளாகவும் பயன்படும். இவை கவரி, சமரி, என்றும் வழங்கப் படுகின்றன. இவற்றின் வாலில் மயிர் அடர்ந்திருக்கும். இவைகளின் வெண்ணிற மயிர்கள் சாமரைகளாகப் பயன்படுகின்றன, கருமயிர் பெண்கள் கூந்தல் முடிக்கும் சவரி ஆகின்றது. இம்மயிரைக் கொண்டு கூடாரக் கம்பளங்களும் நெய்து கொள்கின்றனர். அதன் நாற்றம் நம்குடலைப்புரட்டும். வெண்ணெயும் எடுக்கின்றனர். இம்மாட்டின் பாலைத திபேத்தியர் பருகுகின்றனர். கழுதை, கோவேரிக் கழுதைகளும், ஜப்பு என்னும் ஒரு வகை மாடுகளும் இங்குள்ளன.

ஊரும் வீடும்

திபேத்தில் வண்டிபோன்ற ஊர்திகள் கிடையா. தக்களக் கோட்டை ஒன்றே பெரிய ஊர். ஒன்று அல்லது இரண்டு கூடாரங்கள் உள்ள இடங்கள் கிராமமாம்! சிலர் மலைச்சரிவுகளில் குகை போன்ற குழிவெட்டி அதில் வாழ்கின்றனர். கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்ட வீடுகள் ஒன்றிரண்டு காணப்படும். அங்கு அசுத்தம் மலிந்திருக்கும்.

திபேத்திய மக்கள்

திபெத்தியர் பெரும்பாலும் ஆடுமாடு மேய்க்கும் ஆயர்வாழ்க்கையர். குகைகளிலும் கூடாரங்களிலும் வசிப்பவர். கம்பளம், உப்பு, வெங்காரம் போன்ற பொருள்களை விற்கும் வணிகரும் சிலர் உளர். பல் துலக்குவதும் குளிப்பதும் துணி துவைப்பதும் அவர்களுக்குத் தெரியா. அவர்கள் உடையில் வெண்ணெய் ஊறிக்கிடக்கும். உடலினின்று ஒரு துர்நாற்றம் வீசும். ஒரே விதமான கம்பள உடையையே இருபாலரும் அணிவர். ஆதலின் இரு பாலார்க்கும் வேற்றுமை

காண்பது அரிது. திபேத்திய ஆடவர் இடக்காதில் பெரிய வளையங்களை அணிகின்றனர். மகளிர் தலைமயிரைப் பின்னி நுனியில் சோழிகளையும் மணிகளையும் கோத்துத் தொங்கவிட்டுக் கொள்வர். வெள்ளியும் பவளமும் அவர்களுடைய அணிகள். பேய் பிசாசுகளைத் தடுக்கக் கவசங்களையும்; ஜபமாலைகளையும் அணிவர். முகத்தில் உண்டாகும் பனிவெடிப்புகளை மறைக்கக் கருப்பட்டி பூசிக் கொள்வர். இது பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பாய் இருக்கும்.

இருபாலரும் தக்ளியால் நூல் நூற்பர். எலும்பால் செய்த ஊசி கொண்டு கையுறை காலுறை பின்னுவர். அங்கு விறகு கிடைக்காதாதலின் ஆடு, குதிரை, சடைமாடுகளின் உலர்ந்த சாணத்தைக் கொண்டே அடுப்பெரிக்க வேண்டும். பெண்கள் சாணம் சேர்க்கும் கூடையை முதுகில் கட்டிக் கொண்டிருப்பர். செல்லுமிடங்களுக்கெல்லாம் புகையிலை, கத்திகள், எலும்புக் கரண்டிகள், உணவு இவைகளைச் சட்டைப் பையில் கொண்டு செல்வர். திபேத்தியர் புலால் உண்பவர்கள். வறுத்த கோதுமை மாவு, பச்சை இறைச்சி இவற்றை உண்பர். ஒருவகை மதுபானமும் செய்வர். நண்பர்களைக் கண்டு அளவளாவும்போது அதை மரக் கிண்ணத்தில் ஊற்றிப் பருகி மகிழ்வர். திபேத்தில் ஒரு பெண்ணைப் பல சகோதரர் மணந்துகொள்ளும் வழக்கம் இருக்கிறது. பாண்டவர் ஐவர் பாஞ்சாலியை மணந்த செய்தியை இது நினைப்பூட்டுகிறது. இதற்குக் காரணம் இந்நாட்டில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தொகை மிகவும் குறைவாயிருப்பதே. நம் நாட்டிலும் நீலகிரியிலுள்ள தொதவர்களிடையே இவ்வழக்கம் உண்டு. திபேத்தியர் வழங்கும்மொழி திபேத்து. பர்மா தொகுதியைச் சேர்ந்தது. இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தொம்மி சம்போதனால் ஏற்படுத்தப் பட்டது. இந்நாட்டில் கற்றவர்கள் தொகை மிகவும் குறைவு.

லாமாக்கள்

திபேத்தியர் அனைவரும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். துறவிகளுக்கு லாமாக்கள் என்று பெயர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இருவர் துறவியாவது உண்டு. பெண்களும் துறவு பூணுவர். லாமாக்கள் கோம்பா என்னும் மடங்களில் தங்கி வசிப்பர். மடங்களில் புத்தர் சிலைகளை வைத்து வழிபடுகின்றனர். திபேத்தியர்கள் அனைவரும் "ஓம் மணி பத்மேஹூம்" என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டேயிருக்கின்றனர். ஜபம் செய்கையில் தர்மசக்கரம் ஒன்றைக் கையில் வைத்து உருட்டுகின்றனர். அது தாமிரத்தால் நாழி போன்று கைப்பிடி உள்ளதாகச் செய்யப்பட்டுள்ளது. அம்மந்திரத்தை ஒரு தாளில் பல முறை எழுதி அந்நாழியுள் இட்டுக் கைப்பிடியைச் சுற்றுகின்றனர். ஊர்தோறும் தலைவாயிற் சுவரில் அம்மந்திரம் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கிறது. எலும்புகளிலும், கொம்புகளிலும், குகைகளிலும் அம்மந்திரம் எழுதப்பட்டு இருக்கும். ஆங்காங்குக் கற்களைக் குவித்து அக்கற்குவியலின் நடுவில் உயரமான கல்லைத் தூண்போல் நிறுத்தி அதில்

சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.

செம்மண் பூசிப் பல நிறச் சிலைகளைக் கட்டி வழிபடுகின்றனர். மாலையில் மைதானத்தில் கூடி மந்திரம் ஓதுகின்றனர். இளவேனிற் காலத்தில் கொண்டாடும் விழாவில் லாமாக்கள் பட்டாடை அணிந்து, தலை வேடம் புனைந்து, வழிபாடு செய்வர். அவர்கள் தலையை மொட்டை அடித்துக் கொண்டு, ஊதா நிறமான ஆடை உடுத்திருக்கின்றனர். மடங்களில் சிறுவர் சிறுமிகட்குக் கல்வி கற்பிக்கும் பணியும் நடைபெறுகிறது.

ஆட்சி முறை

திபேத்தில் கோனாட்சியோ குடியாட்சியோ இல்லை. லாமாக்களிடம் அதிகாரம் உள்ளது. ஒரு லாமாவின்கீழ் பல அதிகாரிகள் உள்ளனர். மக்கள் அனைவரும் லாமாக்களிடம் பயபக்தி கொண்டு நடக்கின்றனர்.

வாணிகம்

திபேத்தில் வாணிகம் முழுவதும் பூட்டியர்களிடம் உள்ளது. இந்தியப் பொருள்களுக்கும் திபேத்தியப் பொருள்களுக்கும் பண்டமாற்றுச் செய்கின்றனர். டாங்கா என்னும் வெள்ளி நாணயம் உள்ளது சில்லறை வேண்டுமாயின் அந்நாணயத்தை முறித்துக் கொடுக்கின்றனர்.

திபேத்தும் இந்தியாவும்

புத்த மதம் தோன்றிய இந்தியாவினிடத்தும், இந்தியரிடத்தும் திபேத்தியர் அன்பு பாராட்டுகின்றனர். இந்தியத் துறவிகளை அவர்கள் காசி லாமாக்கள் என்று அழைக்கின்றனர். இந்தியர் முன் அனுமதியின்றியே திபேத்திற்குள் எங்கும் செல்லலாம். திபேத்திய அரசாங்கம் கயிலைக்குச் செல்லும் இந்தியர்களுக்கு வேண்டும் பாதுகாப்புகளை அளித்து உதவி செய்கின்றது.

7. திபேத்தில் பிரயாணம்

தக்களக் கோட்டை

திபேத்தின் எல்லையில் லிப்புத் தடாகக் கணவாயிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் தக்களக்கோட்டை என்னும் ஊர் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் புராங் என்னும் பள்ளத்தாக்கில் உள்ளது. பெரிய வியாபார ஸ்தலம். பூட்டியர்களுடைய மண்டிகள் பல இங்கு உள்ளன. உயரமான சுவர்களின்மேல் கூடாரம் அமைத்துப் பூட்டியர் வாணிகம் செய்வர். சந்தையும் உண்டு. கோதுமை, மாவு, வால் கோதுமை, அரிசி, சர்க்கரை, திராட்சைப்பழம், மண்ணெண்ணெய், கூடாரம், கம்பளம், துப்பாக்கி முதலியன இங்கு விற்கப்படும். இதற்கு அப்பால் எப்பொருளும் கிடைக்கா. ஆதலால் யாத்ரீகர்கள் வேண்டும் எப்பொருளையும் இங்கேயே வாங்கிக்கொள்ளல் வேண்டும்.

கர்னலி நதிக்கரையில் இவ்வூர் உள்ளது. இது பிரம்மபுத்திராவின் உப நதி. தக்களக்கோட் என்னும் சிற்றூர் அருகில் ஓடுகிறது. திபேத்தில் இவ்வூரில் ஒன்றில்தான் கோதுமை, பட்டாணிக் கடலை பயிர் செய்யப்படுகின்றன. வேறெங்கும் பயிர்த்தொழிலே இல்லை.

திபேத்தியர் வியப்பு

இவ்வூரில் யாத்ரிகர் அமைக்கும் கூடாரத்தைச் சுற்றித் திபேத்தியர் சூழ்ந்துகொண்டு கூடாரத்தைத் தூக்கி உள்ளே மண்ணெண்ணெய் அடுப்பு எரிவதையும், சமையல் செய்வதையும், தையல் இலையில் சாப்பிடுவதையும் ஆவலோடு பார்ப்பர். எச்சில் இலையைப் போட்டியிட்டுப் பிய்த்துக் கொள்வர். பல் துலக்குவது, குளிப்பது, துணி துவைப்பது, கைகால் கழுவுவது யாவும் அவர்களுக்குப் புதுமையான செயல்களாகத் தோன்றும்.

பௌத்த மடாலயம்

இங்கு ஒரு குன்றின் உச்சியில் ஸிமிலிங் - கோம்பா என்னும் பௌத்த மடாலயம் உள்ளது. அங்குள்ள லாமாக்கள் யாத்ரிகர்களை வரவேற்றுச் சுற்றிக் காட்டுவர். மரமே வளராத நாட்டில் மரங்களால் பெரிய கட்டிடங்கள் கட்டியிருப்பது வியப்பே. அங்குச் சிறுவர்கள் பலர் தங்கிக் கல்வி கற்கின்றனர். ஆறடி உயரமுள்ள புத்தர் சிலையும் பல சிறு புத்தர் சிலைகளும் உள்ளன. அவற்றின் எதிரில் லாமாக்கள் அமர்ந்து மந்திரத்தை ஓதுவர். மடாதிபதி, யாத்ரிகர்களைப் பிரசாதம் அளித்து ஆசீர்வதிப்பார். அங்குத் தரும சக்கரம் ஓயாமல் சுற்றிக்கொண்டிருக்கிறது.

நூல் நிலையம்

மடாலயச் சுவர்களில் புத்தர் வாழ்க்கை வரலாறு, யோக சாதனை வகைகள், சுவர்க்கம், நரகம் ஆகியவை அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்கு மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்று உள்ளது. திபேத்திய மொழியிலும் பாலி பாஷையிலும் எழுதப்பட்ட நூல்கள் பல அதில் உள்ளன. வைத்தியம், தத்துவம், வானநூல், சோதிடம் ஆகிய கலைகள்பற்றிய வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்புகளும் அங்கு இருக்கின்றன. அங்கிருந்து பார்த்தால் மாந்தாதா மலையின் தோற்றம் மகிழ்ச்சி ஊட்டும். தக்களக் கோட்டையிலிருந்து கயிலைக்கு இரண்டு வழிகள் செல்லுகின்றன. ஒன்று ஞானிமண்டி தீர்த்தபுரி, தர்ச்சன் வழியாகக் கயிலைக்குச் செல்லுகிறது. மற்றொன்று மாந்தாதா மலைப் பக்கமாகச் சென்று, குர்லாக் கணவாயைக் கடந்து, இராட்சஸ தடாகம், 'மானசசரோவரம்' ஆகிய இரண்டையும் தாண்டிக் கயிலையை அடைகிறது.

திபேத்தின் உள்நாடு

தக்களக்கோட்டையைத் தாண்டினால் ஊர்களில்லை. தூரத்தை அளவிட்டுக் கூற இயலாது. இத்தனை நாள் பயணம் என்று கூற முடியும். ஏற்றம் இறக்கங்கள் இல்லாமையால் ஒருநாளில் பதினைந்து மைல் நடக்கலாம். தீர்த்தபுரியை ஐந்து நாட்களிலும், அங்கிருந்து கயிலை மலையின் அடியை மூன்று நாட்களிலும் அடையலாம். குர்லாக் கணவாய் வழியாகச் சென்றால் ஐந்தே நாட்களிலும் கயிலையை அடையலாம். வழியில் குண்டாங்கற்களும், கூழாங் கற்களும் நிறைந்து யாத்ரிகர்கள் நடப்பதற்குத் துன்பம் தரும். பாறைகளின் பல நிறங்கள் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றும். மயக்கமும், திகைப்பும் உண்டாகும்போது மாங்காய் வற்றல், ஊறுகாய் இவற்றை மென்று கொண்டே செல்ல வேண்டும். உணவின்மீதும் விருப்பம் இராது. அரிசியை அடுப்பில் வேக வைத்தால் வேகும்போது சோரு பிருந்து, இறக்கினவுடன் அரிசியாய்விடும். பருப்பும் வேகாது. ஆதலின் கோதுமை உணவே கொள்ள வேண்டும். குளிரின் மிகுதியால் அடிக்கடி எண்ணெய் பூசினும் தோல் உரிந்துவிடும். இரவில் கம்பள உடைகளை ஒன்றன்மேல் ஒன்று அணிந்துகொண்டு போர்வையைப் போர்த்து மூட்டைபோல் உறங்கிக் கிடக்க வேண்டும்.

திபேத்தில் ஆறுகளைக் கடப்பது அருஞ்செயல். வழிகாட்டி யாத்ரிகர்களை ஒவ்வொருவராகத் தூக்கிச்சென்று மறுகரை சேர்ப்பான். பேராறுகளைக் குதிரைமீது ஏறிக் கடக்க வேண்டும். பனிப்பாறையின் மேல் நடப்பதும் ஆற்றைக் கடப்பதும் பேராபத்தை விளைவிக்கக்கூடியவை.

திருடர் தொல்லை

திபேதத்தில் திருடர் தொல்லை அதிகம். பகலில் பிச்சைக்காரர்கள் போல் வந்து உளவறிந்து இரவில் ஆயுதங்களுடன் கூட்டமாக வந்து கொள்ளையடிப்பர். திருடர்களை வழிகாட்டி அறிந்து இரவு முழுதும் தூங்காமல் துப்பாக்கி வெடித்துக் காத்து நிற்பான்.

தீர்த்தபுரி

சிந்து நதியைக் கடந்து தீர்த்தபுரியை அடைய வேண்டும். சிந்து நதி, மானசசரோவரத்தில் தோன்றிக் கற்களையும் பாறைகளையும் உருட்டிக்கொண்டு ஓடுகிறது. தீர்த்தபுரி திபேத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றாகும். அங்கு ஒரு பௌத்த மடம் தவிர வீடு ஒன்றும் கிடையாது. பூமியிலிருந்து வெந்நீர் பொங்கிவரும் வெந்நீர் ஊற்று ஒன்று அங்கு உள்ளது. அந்நீரைத் தொட்டால் கை வெந்துவிடும்.

பஸ்மாசுரன் அழிவு

சிவபெருமானிடம் "யார் தலையில் கை வைத்தாலும் அவர் அழிய வரம் பெற்று" சிவன் தலையில் கை வைக்கப்போய், திருமாலின் சூழ்ச்சியால் தன் தலையில் கைவைத்து மாண்ட பஸ்மாசுரன் தவம் செய்த இடம் இங்குள்ளது.

8. கயிலைமால்வரை

கயிலைக் காட்சி

தீர்த்தபுரிக்குக் கிழக்கில் 50 மைல் தூரத்தில் உள்ளது கயிலைமா மலை. வழி கடுமையானது. சிறிது தூரம் சென்றதும் ஒரு மலை எதிர்ப் படுகிறது. அதில் ஏறி உச்சியினின்று கிழக்கில் நோக்கினால் கயிலாய மலை பனி முடிசூடிக் காட்சி அளிக்கின்றது. அதைக் கண்டவுடன் யாவரும் விழுந்து வணங்குகின்றனர். இதுவரை வழி நடந்ததனால் நேர்ந்த களைப்பு நீங்கி மகிழ்ச்சி உண்டாகின்றது. யாவரும் தம்மை மறந்து "கயிலாய பதீ!" 'கயிலாய பதிக்கு ஜே' என வாய்விட்டுக் கூறுகின்றனர். அருகில் உள்ளதுபோல் தோன்றும் கயிலை அடி வாரத்தை அடைய மூன்று நாட்கள் செல்லும். .

அடிவாரத்தை அடைந்ததும் அடிமுதல் முடிவரை அதன் முழுத் தோற்றத்தையும் காணலாம். என்றும் உருகாத உறைபனிப் போர்வை போர்த்து வெள்ளி மலையாய் விளங்கும் அது தென்முக மாக இந்தியாவை நோக்கிக் கம்பீரமாக நிற்கின்றது. இங்குப் பரம சிவன் பார்வதியுடன் வீற்றிருப்பதாய்ப் புராண இதிகாசங்கள் புகலும்.

கயிலையின் அமைப்பு

இமயமலையின் வட சரிவில் உள்ள கொடுமுடியே கயிலையாகும். மக்கள் கட்டிய கோயிலோ, உருவச் சிலையோ அங்கில்லை. இம்மலையே இயற்கைக் கோயில்போல் அமைந்துள்ளது. தென்னாட்டுக் கோயில் களின் உறுப்புக்கள்போன்ற கோபுரங்கள், மண்டபங்கள், பிராகாரங் கள், கர்ப்பக்கிரகம் அமைந்துள்ளன. வச்சிரபாணி, அவலோகி தேசுவரம் என்னும் இரு குன்றுகள் துவார பாலகர்போல் முன் உள் ளன. அவற்றின் இடையே ஒரு பீடத்தில் அமைந்த விமானம்போல் கயிலைமலை உளது. அடிவாரம் 28 மைல் சுற்றளவுகொண்ட சம சதுரமாயுள்ளது. சுற்றிலும் மதில்போன்ற மலைச் சுவர் உயர்ந்து ளது. அதன்மேல் ஆயிரம் அடி உயரத்தில் மேடைபோன்ற சமதலம் உளது. அதற்குமேல் பல சிற்ப, சித்திரங்களின் அமைப்பைப்போல் சிறியனவும் பெரியனவுமான குன்றுகள் நிற்கின்றன. அதன் முடி பௌத்த ஸ்தூபத்துக்கு இலட்சியமாயிருக்கின்றது. சூழ உள்ள குன் றுகள் மலையாள நாட்டுக் கோயில் மண்டபத்தைப்போல் உள்ளன.

கயிலாயத்தின் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 23,000 அடி உயரத் தில் எப்பொழுதும் பனியடை மூடியிருக்கின்றது. 'விசுவலிங்கம்' என வழங்கும் அச்சிகரம் சிவலிங்கம் போலவே காட்சியளிக்கின்றது. அதன் அருகில் சென்று காணமுடியாது. அதன் அடிவாரத்தில் சில பௌத்த மடங்களும், சோர்ட்டன் என்னும் புனிதக் கட்டடங்களும், குளமும் உள்ளனவாம். கயிலையின் கீழ்த்திசையில் கௌரிகுன்ற

மும், கௌரி குளமும் உள்ளன. இறைவன் இடப்பாகத்தில் தேவி யுடன் விளங்கும் ஐதிகம் இயற்கையாக இங்கு அமைந்துள்ளது. இம் மலையை நோக்கினால் இயற்கைக் கோயில்போலவும், புற மலைகள், பரிவாரங்கள் தங்கும் மாளிகைகள்போலவும் தோற்றமளிக்கும். இதன் தென் கோடியில் 40 மைல் தொலைவில் மானசசரோவரம் என் னும் தடாகமும், அதற்கு மேற்கில் இராட்சஸ தடாகமும் உள்ளன.

கயிலையும் இராவணனும்

தேவரும் முனிவரும் மானசசரோவரத்தின் கரையிலும், அசுரர் இராட்சஸ தடாகத்தின் கரையிலும், இருந்து தவம் செய்ததாய்த் திபேத்தியர் கூறுகின்றனர். "இராவணன் இங்குத் தவஞ்செய்த வலிமையால் கயிலையைப் பெயர்க்கத் தொடங்கினான். அதன் அசை வினால் கௌரி நடுங்கினாள். இறைவன் தன் கால் பெருவிரலால் அழுத்த, அவன் பாதளத்தில் அழுந்தி நசுங்கி அழுது சாமவேதம் பாடித் துதித்தான். இசைகேட்ட இறைவன் அவனை விடுவித்தார்" என்னும் செய்தி திபேத்தில் வழங்குகின்றது.

கயிலையும் பௌத்தரும்

இந்துக்களைப்போலவே புத்த மதத்தவரும் கயிலையை வழிபடுகின் றனர். கயிலையின் கொடுமுடியை அவர்கள் காங்ரின்போஷி என் கின்றனர். கயிலையே உலகின் உயிர்நிலை என்பது அவர்கள் கொள்கை. டெம்சொக் என்னும் கடவுள் புலித்தோல், தலைமாலை அணிந்து, உடுக்கை, திரிசூலம் ஏந்தி, கண்டோ என்னும் பெண் தெய்வத்துடன் கயிலையில் வீற்றிருப்பதாகவும், அவர்களுடன் பல நூறு போதி சத்துவர் சூழப் புத்தர் பெருமானும் அதன் சிகரத்தில் வாழ்வதாகவும், அடிவாரத்தில் அநுமன் இருப்பதாகவும், தேவர்கள் எப்போதும் அங்கு உலவுவதாகவும், இனிய வாத்தியங்கள் ஒலிப்பதாகவும், திபேத்தியர் கூறுகின்றனர். கயிலையைச் சுற்றி நான்கு பௌத்த மடங்களும், மானசசரோவரத்தைச் சுற்றிலும் ஏழு மடங்களும் உள்ளன. அவற்றிலுள்ள லாமாக்கள் கயிலையை வழி பாடு செய்கின்றனர். திபேத்திய அரசாங்கமும் கயிலை வழிபாட்டில் கருத்தைச் செலுத்துகின்றது.

வேனிற்காலத்தில் பனியடை உருகி வழி திறந்ததும் கயிலையைப் பிரதட்சிணம் செய்யத் தொடங்குவர். 28 மைல் தூரமும் வலம் வர நமக்கு 3 நாள் செல்லும். திபேத்தியர் சிலர் ஒரே நாளில் வலம் வரு வர். சிலர் அங்கப்பிரதட்சிணம் செய்வர். இவர்கள் பகலெல்லாம் சாஷ்டாங்கமாக விழுந்தும் எழுந்தும் பிரதட்சிணம் செய்து 27 நாளில் அங்கப் பிரதட்சிணத்தை முடிப்பர்.

கயிலையை வலம் வருதல்

கயிலையை வலம் வரும்போது சில இடங்களில்தான் அதன் சிகர மாகிய விசுவலிங்கம் தெரியும். தெரியுமிடத்தில் வணங்கி வழிபடுவர்.

தார்ச்சன் என்னுமிடத்திலிருந்தே கயிலையின் அடிவரை தொடங்குகின்றது. சுற்றிச்செல்லும் வழியில் தரையோடு தரையாய்ச் சிறு பூண்டுகள் பரவியுள்ளன. ஷெர்ஷாங் என்னுமிடத்தில் திபேத்தியர் வைகாசிப் பௌர்ணமியில் திருவிழா நடத்துவர். லாசூ என்னும் ஆற்றின் கரையில் நியந்தி மடம் உள்ளது. சற்றுத்தூரம் சென்றதும் டிருபுக் என்னும் இரண்டாவது புத்த மடம் உள்ளது. முதல் நாள் இரவு இங்குக் கூடாரமடித்து தங்குவர். காலையில் கதிரவனொளியில், கயிலைக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும். டிருபுக்கிலிருந்து நான்கு மைல் தூரம் டோல்மாக் கணவாய் வரை உயரத்தில் ஏறிச் செல்ல வேண்டும். டோல்மாக்கில் பாறைகளின்மேல் தோரணங்களும், கொடிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கணவாயைக் கடந்ததும் கௌரி குன்றமும், கௌரி குளமும் உள்ளன. அங்கிருந்து வழி கீழ் நோக்கியிறங்குகின்றது. சாந்தல்புக் என்னுமிடம் இராத் தங்குவதற்கு ஏற்றது. அங்கும் பௌத்த மடம் உள்ளது. அதையடுத்து உளள வழி இடர்ப்பாடுடையது. குளிரின் கடுமை அதிகம். உடல் வெறுங்கட்டைபோல் ஆகிவிடும். உணவு ஜீரணமாகாது. வயிற்றுவலி, பனி வெடிப்பு, பனிக்குருடு, முக வீக்கம், முதலியன உண்டாகும். கண்கள் பொங்கிச் சிவக்கும். மூக்கில் இரத்தம் வரும். மூச்சுத் திணறும், இவைகளினின்று தப்பும் வழிகளைக் கடைப்பிடித்துக் கயிலையை வலம் வருதல் வேண்டும்.

9. முப்பெருந் தடாகங்கள்

கௌரி குளம்

கயிலையைச் சூழ்ந்து மூன்று பெரிய தடாகங்கள் உள்ளன. அவை கௌரி குளம், மானசசரோவரம், இராட்சஸ தடாகம் என்பவை. முன்னிரு தீர்த்தங்களில் நீராடுவதோடு கயிலை யாத்திரை முற்றுப் பெறுகின்றது. டோல்மாக் கணவாயைக் கடந்து கௌரி குளத்தை அடைய வேண்டும். பனிகட்டிமீது நடந்துசெல்லும் வழி மிகவும் துன்பந்தருவது. மூச்சுத் திணறும், உடல் பெருஞ்சுமையாகத் தோன்றும். உள்ளத்தை இறைபால் வைத்து உறுதியுடன் செல்ல வேண்டும்.

18000 அடி உயரத்தில் இக்குளம் உளது. கயிலையின் இடது பக்கத்தில் இறைவியின் வடிவாக உள்ள இக்குளத்தின் அருகில் பார்வதி என்னும் குன்று உள்ளது. குன்றுகளிலிருந்து பனிப்பாறைகள் சரிந்து குளத்தில் விழும். இதில் நீராடுவது புதிய அனுபவம். கடுங்குளிரில் உடைகளைக் களைந்து, உடலில் எண்ணெய் பூசிக்கொண்டதும் வழிகாட்டி, கரையருகில் நின்று பனிக்கட்டியை உடைத்து இடமாக்கி ஒவ்வொரு யாத்திரிகரையும் நீருக்குள் அமிழ்த்தி எடுத்துக் கரையில் கிடத்துவான். அதற்குள் உடல் விறைத்துக்கொள்ளும்.

துணையாட்கள் கம்பளியாலும், துணியாலும் தேய்த்துச் சூடுண்டாக்கு வர். அனைவரும் நீராடியபின் கௌரிக்கும், கயிலாய பதிக்கும் வழி பாடு செய்வர். அதுவே யாத்திரையின் முடிவான சடங்காதலால், அன்புடன் அதைச் செய்துமுடித்துக், குளத்து நீரைக் குப்பியில் கயி லைப் பிரசாதமாக முகந்து மூடி முத்திரையிட்டு வைத்துக் கொள்வர்.

மானசசரோவரம்

கயிலைக்குத் தெற்கில் நாற்பது மைல் தொலைவில் மானசசரோ வரம் என்னும் அழகிய தடாகம் உள்ளது. இதிலிருந்து தோன்றும் வெந்நீர் ஊற்றில் நீராடுவர். கயிலை மலைக்கும் மாந்தாதா மலைக்கும் நடுவில் கடல் மட்டத்திலிருந்து 15,000 அடி உயரத்தில் உள்ள இத்தடா கம் ஐம்பது மைல் சுற்றளவும் இருநூறு சதுரமைல் பரப்பும், இரு நூற்றைம்பது அடிவரை ஆழமும் உள்ளது. இதன் நீர் பசுமையாய் உள்ளது. இதைத் திபேத்தியர் ட்ஸோம : பான் (வெல்லலாகாத ஏரி) என்றும், ட்ஸோமவாங் (அடிமைப்படாத ஏரி) என்றும் வழங்கு கின்றனர். இதில் மனிதர் கண்ணுக்குத் தெரியாத நாவல் மரம் (ஜம்பு) உள்ளதென்றும் அதனால் இவ்விடம் ஜம்புலிங் எனவும், இதை யடுத்துள்ள இந்தியா ஜம்பூத்வீபம் எனவும் வழங்குகின்றன என்றும், இத்தடாகத்தில் மலரும் தெய்வத் தாமரையில் புத்தர் தங்குவதாகவும், இதில் ஒரு முறை நீராடின் நூறு பிறப்புக்களின் தீவினை தீருமென் றும் திபேத்திய புராணங்கள் கூறுகின்றன. இதைச்சுற்றி ஏழு பௌத்த மடங்கள் உள்ளன. அம்மடத்து லாமாக்கள் இதை வழி பட்டு, 'நிர்வாண' நிலை குறித்துத் தியானத்தில் ஈடுபடுகின்றனர்.

இதன் நீர் வெப்பமும் அசைவும் இல்லாதது என்னும் பொருளில் இதற்கு அநவதப்த என்னும் பெயரும் வழங்குகிறது. இதில் ஒரு வகைப் பசுங்கோரையும், அதன் மலர்களும் (தாமரை போன்றது) அழகு செய்கின்றன. அரச அன்னங்கள் ஆனந்தமாக நீந்துகின்றன. அவற்றைத் திபேத்தியர் ஙங்பா என அழைக்கின்றனர். மற்ற பறவை களைப்போல் இவை மீன் நத்தை முதலியவற்றை உண்பதில்லை, பாசி நீர்ச் செடிகளையே உண்கின்றன.

இத்தடாகத்தினின்றே நம் நாட்டை வாழ்விக்கும் சிந்து, பிரமபுத் திரா, கங்கையின் உபநதியான கர்னலி, சலிக்ஜு நதிகள் உற்பத்தி யாகின்றன. இதில் யாத்திரீகர் முழுகி, வழிபாடுசெய்து, வலம்வந்து, நீரைக் குப்பிகளில் எடுத்துச் செல்வர்.

இராட்சஸ தடாகம்

மானசஸரோவரத்துக்கு மேற்பால் இராட்சஸ தடாகம் உளது. இதன் கரையில் அசுரரும் இராவணனும் தவம் செய்ததால் இப்பெயர் பெற்றதாம்.

சுட்ட சட்டி சுவை அறியுமா ?

மீண்டு வருதல்

கயிலையிலிருந்து மீண்டு குர்லாக் கணவாய் வரும் வரையில் கயிலை மலையும், மானசசரோவரமும் காட்சியளிக்கும். கணவாயைக் கடந்ததும் காட்சி மறையும். திபேதது எல்லையில் குறைந்திருந்த பசி இந்திய எல்லையில் அதிகரிக்கும். உடலில் தினவு எடுக்கும். நல்ல உணவை உண்டு, உடலில் எண்ணெய் பூசிக் குளித்தால் நாளடைவில் அவை தணியும்.

10. செலவின் (யாத்திரையின்) பயன்

அரிய அனுபவங்கள்

கயிலை யாத்திரை நீண்டதொரு மனித வாழ்க்கை யாத்திரையைப் போன்றதே. இன்ப துன்ப நுகர்ச்சியும், புதுப் பொருள்களையும், மக்களையும் காணலும் பழகலும் இந்த யாத்திரையில் நிகழ்கின்றன. இமயப் பெருமலையின் உட்பகுதி ஒரு புதிய உலகம் போன்றது. திபேத்து நாட்டில் செல்வது பெருங்கடலிற் செல்வது போலாகும். பனியடைப் பரப்பில் செல்வது பெறுதற்கரிய அனுபவம்.

இராக்காலம்

இரவில் இமயமலையில் அமைதி அரசாள்கின்றது. மாவும் மரமும் மண்ணும் கல்லும் தியானத்தில் உள்ளனபோல் தோன்றும். இயற்கை அன்னை அனைத்தையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றாள். உறை பனி தோலை உரித்துவிடும். குளிர் காற்று ஊசியால் குத்துவது போலிருக்கும். ஓர் இரவு ஒரு யுகமாகத் தோன்றும்.

மழை

இமயத்தில் ஒவ்வொரு மழைத்துளியும் நெல்லிக் காயளவு இருக்கும். மலைப் பாறையடியில் மறைந்தாலன்றி உயிர் தப்ப முடியாது. விரைவில் தொடங்கிய மழை அவ்வாறே நின்றுவிடும். மிளகின் அளவுமுதல் கொட்டைப்பாக்குக் கனம் வரையில் ஆலங்கட்டி மழை அடிக்கடி பெய்யும். திபேத்தில் பனிக்கட்டி மழையே பொழியும். குளிர் காலத்தில் குன்றுகளையே இப்பனிமழை மறைத்துவிடும். வேனிற் காலத்தில் அவ்வளவு இல்லை.

மக்கள், மலைவாணர்

கயிலாய யாத்திரையில்நாம் காணும் பூட்டியரும், மலைவாணரும் திபேத்தியரே. பழக்க வழக்கங்களில் வேறுபட்டிருப்பினும், வாழுமிடத்திற்கு ஏற்பப் புறவாழ்க்கையில் மாறுபட்டிருப்பினும் அவர்களனைவரும் அகவாழ்க்கையில் இந்தியர்களே. அவர்களிடம் நவீனம் காணப்படவில்லை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் மக்கள் வாழ்ந்த

அதே நிலையில் இன்றும் வாழ்கின்றனர். அவர்களிடம் உள்ள நல்லொழுக்கம் போற்றற்குரியது. ஆடவர் மகளிர் இருபாலாரும் உடலுழைப்பில் பின் வாங்குவதில்லை. மலைவாணர் சீனரைப் போன்ற முகத்தோற்றம் உடையவர். பூணூல் அணிவர் அவர்களைப் பஹடி என அழைக்கின்றனர். தம்மை இராஜபுத்திரர் என அவர்கள் கூறிக் கொள்கின்றனர். பண்டிதர் க்ஷத்திரியர் என இரு வகையினர் உளர். அகர்வால் என்னும் வேறொரு வகையினரும் உண்டு. உடல் நனைய நீராடுவதும், துணியைத் துவைத்து உலர்த்துவதும் அவர்களுக்கு வழக்கமில்லை. உடை மாற்றிக்கொள்வதே குளிப்பதற்கு சமம். உண்ணுமுன் சிறிது உணவை நெருப்பிலிடுவது அவர்கள் வழக்கம். அடிக்கடி ஹூக்கா பிடிப்பர்.

மலைவாணர் நாம் வணங்கும் தெய்வங்களையே வணங்குகின்றனர். ஆடி மாதம் முதல் நாள் அவர்கட்குச் சங்கராந்தி பண்டிகை. கண்ணன் பிறந்த ஜயந்தி நாளைச் சிறப்பாகக் கொண்டாடி ஆடவரும் மகளிரும் கண்ணன் புகழ்பாடிக் கும்மியடித்துக் கூத்தாடுவர். மூட்டை சுமக்கும் கூலிகள் முரடர்களாயினும் நம்பிக்கைக் குரியவர்கள். தம்முள் சண்டையிடினும் பிறகு கூடிக் குலவுவர்.

பூட்டியர்

தவளகங்கைக்கு வடக்கேயுள்ள பிரதேசம் பூட்டியர் மிகுதியாயுள்ள நாடாகும். இவர்களும் தம்மை இராஜபுத்திரர் எனக் கூறிக் கொள்கின்றனர். பூணூல் அணிகின்றனர். வாணிகத் தொழில் புரியும் இவர்களும் முகத்தோற்றத்தில் சீனரைப் போன்றவரே. இந்தியும், திபேத்திய மொழியும் கலந்த கலப்பு மொழியை இவர்கள் பேசுகின்றனர். பூட்டிய மகளிர் திபேத்தியரினும் அழகியர். இவர்களிடையே கலப்பு மணம் உண்டு.

பயன்—உடல் நலம்

வெளியிடத்திலுள்ள மக்களைப் பார்த்துப் பழகுவதோடு உடல் நலத்துக்கும் கயிலாய யாத்திரை உறுதுணையாகிறது. உடல் உறுப்புக்களுக்கும் மலையேற்றம் உழைப்பைத் தருகிறது. வேர்வையும், ஆழ்ந்த பெருமூச்சும் இரத்தாசயத்தையும், சுவாசாசயத்தையும் தூய்மைப் படுத்துகிறது. பனிப்பரப்பில் உறைவதால் கிருமிகள் மடிந்து நோய்க் காரணங்கள் நீங்கி உடல் நலம் பெறுகின்றது.

அறிவு நலம்

நாம் கற்றதே பெரிதென்று, கிணற்றுத் தவளை போல் ஓரிடத்திலேயில்லாமல், பல இடங்களில் பல மொழி பேசும் பலப் பல மக்களையும், பழக்க வழக்கங்களையும் பார்ப்பதால் அறிவு பெறுகின்றது. குமரி

மூதல் இமயம் வரை உள்ள மக்கள் மொழி, இனம், பழக்க வழக்கங்களால் வேறுபடினும் கயிலை யாத்திரை அவர்களனைவரையும் ஒன்றுகப் பிணைப்பதைக் காணலாம். இமயமலையின் உட்பரப்பில் பாரத நாட்டுப் பண்பாடே இன்றும் நிலைத்திருக்கின்றதை நேரில் கண்டறியலாம். பணத்திற்கு அங்கு மதிப்பில்லை. பணமில்லாமல் வாழமுடியாதென்று கருதும் நமக்குப் பணத்தின் உதவியின்றி வாழும் திபேத்தியர் வாழ்க்கை வியப்பை உண்டாக்கும்.

ஆன்ம நலம்

கயிலாய யாத்திரையில் உண்டாகும் ஆன்ம நலத்தை அளந்து கூற இயலாது. பண்டைத் தருமத்தின் அரசனுக விளங்கும் இமயப் பெருமலையில் நம் நாட்டுப் பாரமார்த்திகச் செல்வம் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த முனிவர்கள் கண்ட ஆன்ம தத்துவம் யாவும் அதில் புதைந்துள்ளன. அத்தத்துவங்களின் உயிர் நிலையாகக் கயிலாயம் அமைந்துள்ளது. இயற்கையின் வாயிலாய் இறைவனைக் காணும் பண்டை முறையினை இவ் யாத்திரை உணர்த்துகின்றது. அன்பு, அருள், அறிவு ஆகிய மூன்றும் அமைந்தது பாரத நாட்டு நாகரீகம், அம்மூன்றின் வடிவமாகக் கங்கை சிந்து, பிரமபுத்திரா நதிகள் இமயத்தில் தோன்றி நாட்டின் பண்பாட்டை வளர்க்கின்றன. கயிலை யாத்திரை கடவுள் நிலையை அடையும் யாத்திரை யாகும்.

கயிலைமால்வரை

நீதிகள்

1. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"—(*திருமந்திரம்*).

(அ) இந்தியா திபேத்து, நேபாள நாடுகளிலுள்ள அனைவரும் பழக்க வழக்கங்கள் மொழியினால் வேறு படினும், **ஓரினத்து மக்களாகவே** *கயிலையை வணங்குகின் றனர்.*

(ஆ) புத்த மதத்தவரும், இந்துக்களும் கயிலாய வழிபாட்டில் ஒன்றுபட்டு நிற்பதால், **எம்மதமும் சம்மத மாகச் செய்வது கயிலைமால்வரை.**

2. *உடலை வெறுத்து, உயிரைத் துரும்பாக மதித்துத்* **தவம்** *செய்பவர் இறைவனைக் காண்பர். யாத்திரையில் அத் தகைய பற்றற்ற* **துறவு வுள்ளம்***படைத்தவரே கயிலையைத் தரிசித்து மீள்வர்.*

3. **"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."** (*நீதிநெறி விளக்கம்*).

இவ்வாறு கருமமே கண்ணாயிருப்பவர் கயிலை காண் பர்.

4. **"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்—நாம்
எல்லோரும் இந்நாட்டு மக்கள்."** (*பாரதியார்*).

பாரதி கூறும் உண்மையான இக்கொள்கையைக் கயி லாய யாத்திரையில் காணலாம்.

சூடு கண்ட பூனை அடுப்பங்கரை சேராது.

4. ஊமைத்துரை

கதைச் சுருக்கம்

வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பியாகிய ஊமைத் துரை கி. பி. 1766 ஆம் ஆண்டில் பிறந்தார். அண்ணனுடன் சேர்ந்து வெள்ளையரை விரட்டும் வீரராய்த் திகழ்ந்தார். வெள்ளையர் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டபின், ஊமைத்துரையைச் சிறையில் அடைத்தனர். புரட்சி வீரர் சிறையைத் தாக்கி, ஊமைத்துரையைச் சிறை மீட்டனர். பாஞ்சாலங் குறிச்சியில் கோட்டை கொத்தளங் கட்டி ஊமைத்துரை அரசுரிமை ஏற்றார். படைகளைத் திரட்டிப் பயிற்சியளித்து வந்தார்.

இதையறிந்த வெள்ளையர் படையெடுத்து வந்தனர். பாஞ்சை வீரர் போர்த்திறங்கண்டு பின்வாங்கிச் சென்றனர். தூத்துக்குடியிலிருந்த வெள்ளையர் ஆயுதசாலையைப் பாஞ்சை வீரர் கொள்ளையிட்டுப் படைக்கலங்களைக் கைப் பற்றினர். சிறைப்பட்ட பகைவர்களையும் பாஞ்சையர் கருணையுடன் விடுதலை செய்தனர். மீண்டும் கும்பினிப் படை பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கிப் பின்வாங்கியது. மேலும் பல படைஞரையும், போர்க் கருவிகளையும் வருவித்து கடும்போர் புரிந்தும் வெல்ல முடியவில்லை. முடிவில் நச்சுப் புகையைச் செலுத்திப் பல வீரரைக் கொன்றனர். ஊமைத் துரை தம்பியுடன் வெளியேறினர். வழியில் காயமுற்று வீழ்ந்தார். ஒரு கிழவியின் சிகிச்சையினால் தேறினர். பின சிவகங்கை **சின்னமருது** என்பவர் துணையுடன் படை திரட்டினர். அங்கும் கும்பினியார் வளைத்துக்கொண்டு போர் செய்தனர்; மருது சகோதரரைக் கொன்றனர். பின் திருமயம் என்னும் ஊரிலிருந்து படை திரட்டினர். கும் பினித் தலைவர் இது கண்டு கலங்கி, திருமயம் கோட்டையை முற்றுகையிட்டனர். ஊமைத்துரை எதிர்த்தவரை வெட்டி வீழ்த்தி வெளியேறினர். கால் இடறி விழுந்த **துரைச்சிங்கம்** தூக்கிலிடப்பட்டார். ஊமைத்துரை **திண்டுக்கல்** மலைக்குகையில் மறைந்து வாழ்ந்து, பின் இமயமலை சார்ந்து 30 ஆம் வயதில் துறவியானர்.

செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும்?

கட்டுரைத் தலைப்பும் குறிப்பும்

1. தோற்றமும் இளமையும்

கட்டபொம்மனின் வரலாறு-புதிய தலைநகர், பாஞ்சாலங்குறிச்சி-ஊமைத்துரையின் தோற்றம் - ஊமைத்துரையின் குணநலன்கள் - குடி மக்கள் போற்றிய கோமகன்.

2. நாட்டுப்பற்று பெற்ற பரிசு (கட்டபொம்முவின் முடிவு)

கும்பினியாரின் நயவஞ்சகம் - வரிகொடா இயக்கம் - கட்ட பொம்மு கலெக்டரைக் காணச் செல்லல் - கலெக்டர் கட்ட பொம்முவை அவமதித்தல் - பாஞ்சைக் கோட்டை பிடிபடுதல் - காட்டிக் கொடுத்த படலம்.

3. சிறையில் தவம் (ஊமத்துரை சிறை மீட்சி)

ஊமத்துரையின் துடிப்பு - புரட்சி வீரர் கூட்டம் - புரட்சிப் படை சிறைச்சாலையை நண்ணுதல் - ஊமைத்துரையின் மீட்சி.

4. அரசுரிமை ஏற்றல்

மரபினரைத் திரட்டுதல் - கோட்டையை மீண்டும் அமைத்தல் - கோட்டையின் அமைப்பு - மீண்டும் நிமிர்ந்து நின்ற நகரம் - முடிசூட்டு விழா.

5. மீண்டும் பகை

கும்பினியார் படை கயத்தாறு அடைதல் - பாஞ்சை வீரர் கும்பினிப் படையை வளைத்துக் கொள்ளுதல் - பாஞ்சை வீரர் தம் கோட்டையை அடைதல் - தளபதியின் திகைப்பு - தளபதியின் முடிவு - கும்பினிப் படையினர் பின்வாங்குதல்.

6. தூத்துக்குடியில் பாஞ்சை வீரர்

பாஞ்சையர் போர்க் கருவிகளைத் திரட்டுதல் - காடல் குடியில் கைகலப்பு - பாஞ்சையர் தூத்துக்குடியைத் தாக்குதல் - சிறைப்பட்ட வெள்ளை வீரனுக்கு விடுதலை.

7. கருணைக்கடல்

தூத்துக்குடியில் கும்பினித் தலைவன் சிறைப்படுதல் - ஊமைத்துரையின் மனப்பண்பு - வெள்ளை மாதின் துணிவு - கோமகன் துரையை விடுதலை செய்தல் - கைதியிடத்திலும் கருணை.

8. படுகளம்

ஊமைத்துரையின் ஆட்சிமுறை - ஒற்றர்மூலம் செய்தியறிதல் - எட்டப்ப நாயக்கரின் துரோகம் - கும்பினிப் படை பாஞ்சையை நோக்கிப் புறப்படுதலும் பாஞ்சை வீரர் இடைவழியில் தாக்குதலும் -

படைகளின் ஆயத்தம் - "வெள்ளை எலிகளை விரட்டு" - கோட்டை மதிலில் பிளவு - கும்பினிப் படை நிலைகுலைதல் - ஊமத்துரையின் பெருந்தன்மை.

9. பாஞ்சையர் வீரம்

கும்பினித் தளபதியின் திட்டம் - கும்பினியார் தம் படை பலத்தைப் பெருக்குதல் - பாஞ்சையர் போராட்டம் - ஒரு பாஞ்சை வீரனது அரிய செயல் - கோட்டைப் பாதுகாப்புக்களை வலுப்படுத்தல்.

10. சாமியைக் காப்பாற்று

எட்டப்பர் சதிச்செயல் - நச்சுப் புகையால் நேர்ந்த விளைவு - பாஞ்சை மகளிர் வீரம் - ஊமைத்துரை தப்பிச் செல்லுதலும் அவருக்கு நேர்ந்த விபத்தும் - பெண்கள் புரிந்த உதவி - ஊமைத்துரை சிகிச்சை பெறுதல் - முத்தம்மாளின் சூழ்ச்சியும் எட்டையபுரத்தார் ஓட்டமும்.

11. மருது சகோதரர்

ஊமத்துரை மறைவிடம் விட்டு வெளியேறுதல் - ஊமத்துரை கமுதிக் கோட்டையில் குடியேறி மீண்டும் படை திரட்டுதல் - சிவகங்கை மருது சகோதரர் - சின்ன மருதுவின் கருத்து - கும்பினிப் படை சிறு வயலையடைதலும் குடிமக்களின் நாச வேலையும்.

12. இறுதிப் போர்

ஊமைத்துரையின் போர்க்கருவியும் கும்பினிப்படை ஓட்டமும் - சின்னமருது கொடைத்திறன்.

13. தியாகியின் மறைவு

ஊமத்துரை மறைவிடத்தைவிட்டு வெளியேறுதல் - மருது சகோதரர்களின் கோர முடிவு - கும்பினித் தலைவரின் கலக்கம் - ஊமைத்துரையின் இறுதிப் போர் - துரைச்சிங்கம் தூக்கிலிடப்படுதல் - ஊமைத்துரை துறவறம் பூணுதல் – சரித்திர வாயிலாய் அறிவது - கும்பினியாரின் வஞ்சம் - வீர வழிபாடு.

குறிப்பு: ஒவ்வொரு கட்டுரை எழுதும்போதும் முதலில் முன்னுரையும், இறுதியில் முடிவுரையென்றும் இருபத்திகள் இருத்தல் வேண்டும்.

1. தோற்றமும் இளமையும்

கட்டபொம்மனின் வரலாறு

துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள கம்பிலி என்ற நகரில் 'பொம்மு என்ற மரபைச் சேர்ந்தவன் இருந்தான். அவன் அதைவிட்டுப் பின் தமிழ்நாட்டில், சக வீரபாண்டியன் என்ற ஒரு சிற்றரசன் ஆதரவில் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சமயம் கள்வர் பலரைத் தான் ஒரு

வனை எதிர்த்து வெற்றி பெற்றான். அரசன் அவன் வீரத்தை மெச்சிச் சிறப்புப் பல செய்து 'கெட்டி பொம்மு' என்ற சிறப்புப் பெயரும் அளித்தான். 'கெட்டி' என்ற சொல் தெலுங்கில் கட்டி என மருவிப் பின் 'கட்ட பொம்மு' என்று அழைக்கப்பட்டான். மற்றொரு முறை பாண்டியனின் பகைவரைக் கட்டபொம்மன் வென்றமையால் பாண்டியன் தன் பெயரையே அவனுக்குப் பட்டப் பெயராகக் கொடுத்தான். அன்று முதல் வீரபாண்டியக் கட்டபொம்மு என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. சகவீரபாண்டியனுக்கு மைந்தரில்லாமையால் கட்டபொம்மனே அரசனானான். பிறகு அவன் தன் மரபினர் பலரை வடக்கேயிருந்து வரவழைத்து அந்நாட்டில் குடியேற்றினான். கம்பிலி நாட்டிலிருந்து வந்தமையால் கம்பளத்தார் எனப் பெயர் பெற்றனர்.

புதிய தலைநகர், பாஞ்சாலங்குறிச்சி

இவன், வீரபாண்டிய புரத்தையே தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துவந்த நாட்களில் சாலிகுளம் என்ற ஊரையடுத்திருந்த காட்டில் வேட்டையாடச் சென்றான். வேட்டை நாய்களை எதிர்த்து நின்ற ஒரு முயலின் வீரத்தைக் கண்டான். அவ்விடத்தில் தலைநகரை நிருமாணித்துப் பாஞ்சாலங்குறிச்சி எனும் பெயரிட்டான். அது பாஞ்சையெனவும் கூறப்பட்டது. 'பாஞ்சாலன்' என்பவர் கட்டபொம்முவின் பாட்டனார் ஆவார். அவருடைய நினைவாகவே அதற்கு அப்பெயர் அளித்தான்.

ஊமைத்துரையின் தோற்றம்

கட்டபொம்மனின் வழிமுறையில் நாற்பத்தெட்டு மன்னர் எழுநூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். அவர்களுள் நாற்பதாம் மன்னர் சகவீரக் கட்டபொம்மு ஆவார். அவருடைய மனைவியின் பெயர் ஆறுமுகத்தம்மையார். இவ்விருவர் செய்த நல்வினைப் பயனால் கி.பி. 1760-ல் ஒரு மைந்தர் பிறந்தார். அவரே பிற்காலத்தில் வெள்ளையரை யலைத்துத் தமிழனின் வீரத்தை உலகுக்குக் காட்டிய வீரபாண்டியக் கட்டபொம்மு ஆவார்.

கி. பி. 1766-ஆம் ஆண்டில் தளவாய்க் குமாரசுவாமி எனப்படும் ஊமைத்துரை பிறந்தார். இவரைச் சிவத்தையா எனவும் அழைத்தனர். இவ்விருவர்க்கும் இளையவரே சிவத்தையா என்பவர். இவர்களுக்குப் பின் ஈசுவரவடிவு, துரைக்கண்ணு என்னும் பெண் மக்கள் இருவர் பிறந்தனர். புதல்வர் மூவரும் பல கலைகளைப் பயின்றும், உடற்பயிற்சியிலும், படைக்கலப் பயிற்சியிலும் ஒப்பாரும் மிக்காரும் இலராயினர்.

ஊமைத்துரையின் குணநலன்கள்

தளவாய்க் குமாரசுவாமி திக்கிப் பேசும் இயல்புடையவராதலால் அவர் ஊமைத்துரை எனப்பட்டார். அவர் ஒருவருடனும் அதிக

மாகப் பேசமாட்டார். அச்சமென்பதையே அறியாதவர். அவரது நற்குண நற்செயல்களும், நடையுடை பாவனைகளும், பழக்க வழக்கங்களும், வியப்புக்குரியனவாயிருந்தன.

ஊமைத்துரை மெலிந்த உடலினர். வயிரம் போன்ற மனவுறுதி வாய்ந்தவர். சிவந்த மேனியர். முகத்தில் தெளிவும் பொலிவும் அமைதியும் ஒளி வீசி நின்றன. வெள்ளையரைக் கண்டால் அவர் வேம்பெனச் சீறுவார். வெள்ளையரை நெற்பதர்களாக நினைப்பவர். தமிழும் தெலுங்கும் சிறிதளவு பயின்றவர். படைக்கலப் பயிற்சியில் வல்லவர். வெள்ளையர் அவரை 'ஊமைச் சகோதரன்' (Dumb brother) என்றழைத்தனர்.

குடிமக்கள் போற்றிய கோமகன்

ஊமைத்துரை, சிறந்த போர்வீரர். நீதி வழுவாமை, மதிநுட்பம், ஆண்மை, வீரம், நுண்ணறிவு, கொடை, நேர்மை, இரக்கம், பெருந்தன்மை ஆகிய நற்பண்புகள் அமையப்பெற்றவர். மக்கள் அவரைச் சாமி என்றழைத்தனர். அவரது நாட்டுக்கு ஊமையன் சீமை என்று பெயர் வழங்கி வந்ததை நோக்கில் அவரது மாட்சியும் திறனும் நன்கு விளங்கும் அவரது திறனைப் பகைவராகிய வெள்ளையரே போற்றியுள்ளனர். பொதுமக்கள் அவரைப் புகழ்ந்து வந்துள்ளனர்.

"ஊமைத்துரை யென்னும் பேரைச் சொன்னால் அங்கே
சீமைத்துரைகள் எல்லாம் நடுங்கி
சேமத்தை நாடியே தென்திசை நோக்காமல்
சித்தம் கலங்குவர் மெத்தவுமே."

என்ற நாட்டுப்பாடல் அவர்பால் மக்கள் கொண்டிருந்த பெரும் மதிப்பைப் புலப்படுத்தும்.

ஊமைத் துரையின் மனைவியார் சவுந்தர வடிவு என்பார். அவர் அழகும் குணமும் அமையப்பெற்றவர். இவ்விருவரும் இல்லறத்தில் நல்லறம் பல புரிந்து இனிது வாழ்ந்தனர்.

வீரபாண்டியர் தம் முப்பதாவது வயதில் அரசுரிமை ஏற்றார். தம்பியர் இருவரும் இளவரசு பட்டம் சூடினர். மதி நுட்பம் மிகுந்த சிவசுப்பிரமணியம் பிள்ளை அமைச்சரானார்.

2. நாட்டுப் பற்றுப்பெற்ற பரிசு
(கட்ட பொம்முவின் முடிவு)

கும்பினியாரின் நய வஞ்சகம்

திருநெல்வேலி மண்டலத்திலிருந்த முப்பது பாளையப்பட்டுகளில் சிறந்ததான பாஞ்சாலங் குறிச்சிக்கு அரசராக 1790 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள் வீரபாண்டியக் கட்ட பொம்மனார் முடி

சொப்பனத்தில் கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?

OSSE: BVLW

சூட்டப்பட்டார். பாளையக்காரர் சிலர் வெள்ளையருக்கு வரி செலுத்த மறுத்தனர். பலர் கும்பினியாரின் படைப் பலத்துக்கு அஞ்சி வரி செலுத்தி வாழ்ந்தனர். இங்கிலேயில் கும்பினியார் பாளையப்பட்டுக் களின் எல்லேகளை வரையறுக்கும்போது பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த இரண்டு ஊர்களை எட்டையபுரத்துடன் இணைத்தனர். இத ஞல் பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் எட்டையபுரத்தாருக்கும் பகை மூண்டது. எட்டையபுரத்தார்க்குக் கும்பினியாரின் ஆதரவு இருந்தது

வரிகொடா இயக்கம்

தமிழகத்தில் ஒற்றுமை குன்றி அன்னியர் ஆட்சி வேரூன்றுவதை யுணர்ந்த கட்டபொம்மன் மனம் பதறினர். 'வணிகருக்கு வரி கொடேன்' என்ருர். பாளையக்காரர் சிலர் அவருக்கு உறுதுணையாக இருந்தனர். கும்பினியாரின் ஆட்சிக்குட்பட்ட சில கிராமங்களில் பாஞ் சாலங் குறிச்சியார் வரி வசூல்செய்யத் தொடங்கினர். இதன் பயனுகக் கும்பினியாருக்குக் கட்டபொம்மனுர் மேல் பகைமை அதிகரித்தது. அவர்கள் பாளையக்காரர் சிலரைத் தூண்டிவிட்டுக் கட்டபொம்மனுர் மேல்புகார்கள் கிளப்பினர். இவ்வாறு அவர்களை வம்புக்கிழுத்தார்கள்.

கட்டபொம்மு கலெக்டரைக் காணச் செல்லல்

கும்பினியார் ஆலன் என்பவனைப் பாஞ்சை (பாஞ்சாலங் குறிச்சி) வரிப் பணத்தை வாங்கிவரத் தூது அனுப்பிஞர்கள். கட்ட பொம்மு "வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னன் காணிக்கு ஏது கிஸ்தி? நாடோடிகளான வெள்ளையர்க்கு நாடாளும் மன்னன் வரி கொடுப்பதா? நான் வரி கொடுக்கமாட்டேன்" என்று கூறி விடுத்தார். ஆலன் சென்ற காரியம் கைகூடவில்லை.

கலெக்டர் ஜாக்ஸன் தன்னை உடனே வந்து பார்க்கும்படி கட்ட பொம்முவுக்கு ஆணை விடுத்தான். அதற்கு மறுமொழியில்லை. மறுபடி யும் தூதாகச் சென்ற வைகுண்டம் பிள்ளையும் வெறுங் கையுடன் திரும்பினன். மீண்டும் கலெக்டரைப் பதினைந்து நாட்களுக்குள் இராம நாதபுரத்தில் வந்து காணும்படி முடங்கல் அனுப்பப்பட்டது. கட்ட பொம்முவுக்குக் கலெக்டரைக் காண விருப்பமில்லை யாயினும். ஆலோ சனைக்குப் பின், தம்பியர், அமைச்சர், உறவினர், மெய்க்காவலர் ஆகியோருடன் சென்று காண உடன்பட்டார்.

கலெக்டர் கட்டபொம்முவை அவமதித்தல்

கட்டபொம்மு இராமநாதபுரத்தை யடைவதற்குள் கலெக்டர் குற்ருலம் சென்ருன். அவரும் குற்ருலம் சென்ருர். அங்கும் கலெக்டர் மன்னரை வரவேற்காமல் சொக்கம்பட்டி, சேற்றூர், வில்லிபுத்தூர் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று மறுபடியும் இராமநாதபுரம் சேர்ந்தான். கட்டபொம்மனுரும் ஊர் ஊராகப் பின்தொடர்ந்து கலெக்டரை இராமநாதபுரத்தில் ஒரு நாள் காலை (10-9-1798) காணச்

சென்றார். அவன் மன்னருக்குரிய மரியாதையோடு அவரை வரவேற்காமல், அவர்மீது பல குற்றங்களைக் காட்டிச் சிறை செய்யக் கருதினான். அவன் கருத்தை யறிந்த மன்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறினார். தடுத்த வெள்ளையர் மாண்டனர். மன்னர் தம் பரிவாரத்துடன் பாஞ்சாலங் குறிச்சி யடைந்தார். அமைச்சர் சிவசுப்பிரமணியம் பிள்ளை மட்டும் கும்பினியாரிடம் சிக்கிக்கொண்டார்.

பாஞ்சைக்கோட்டை பிடிபடுதல்

இராமநாதபுரத்தில் நடந்த செயல்களைக் கும்பினியார் நுட்பமாக ஆராய்ந்து சிவசுப்பிரமணியம் பிள்ளையை விடுதலை செய்தனர். கலெக்டர் ஜாக்ஸனையும் வேலையினின்று நீக்கினர். எனினும் பகைமை நீடித்தது. கட்டபொம்மு உயிரோடிருக்கும் வரை தம் ஆட்சி வேரூன்ற முடியாது என்று வெள்ளையர் நன்கு உணர்ந்தனர். ஆகவே மேஜர் பானர்மேன் தலைமையில் ஒரு பெரும் படை பாஞ்சாலங்குறிச்சி மீது பாய்ந்தது. கடும்போரின் இறுதியில் (6-9-1799) ஒரு நாள் இரவு கட்டபொம்மு தம் தம்பியர் அமைச்சருடன் கோட்டையை விட்டு வெளியேறினர். காகம் பறவாத கட்டபொம்முவின் கோட்டை வெள்ளையரால் தரைமட்ட மாக்கப்பட்டது. அமைச்சரும் மற்றும் பலரும் சிறைப்பட்டனர். அமைச்சருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்று, உடனே நிறைவேற்றப் பட்டது.

காட்டிக்கொடுத்த படலம்

கோட்டையை விட்டு வெளியேறிய கட்டபொம்மு பலவிடங்களில் மறைந்திருந்து முடிவில் புதுக்கோட்டை மன்னர் மாளிகையில் விருந்தினராகத் தங்கினார். புதுக்கோட்டையை மன்னன் துரோகச்செயலால் கட்டபொம்மு வெள்ளையரிடம் சிறைப்பட்டார். அவருடன் தம்பியரும், உறவினர் பலரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கயத்தாறு என்னுமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்விடத்தில் பாளையக்காரரை ஒன்றுகூட்டிக் கட்டபொம்மனின் மேல் பல குற்றங்களைச் சுமத்திப் போலி விசாரணை நடத்தினான். அவருக்குத் 'தூக்கு' தண்டனை விதித்தான் பானர்மேன். முப்பதே ஆண்டுடன் அவர் வாழ்வு முடிந்தது. நாட்டுப்பற்றுக்குப் பரிசு தூக்கு தண்டனை! ஊருக்கு வெளியில் மங்கம்மாள் சாலையிலிருந்த கட்டைப் புளியமரமே தூக்குமேடையாகத் திகழ்ந்தது.

வாழ்க கட்டபொம்மனார் புகழ்!

3. சிறையில் தவம் (ஊமைத்துரை சிறை மீட்சி)

ஊமைத்துரையின் துடிப்பு

கட்டபொம்மனார் திருமேனி கயத்தாற்றுப் புளியமரத்தில் ஊசலாடிய பின் சுமார் ஒன்றரையாண்டுகள் கழிந்தன. ஊமைத்துரையும் அவர் தம்பியும் மற்றும் சில உறவினருமாகப் பதினொரு வீரர் பாளையங்

கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். பாளையக் காரரிட மிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கோட்டைகள் தரை மட்ட மாக்கப்பட்டன. மக்கள் வெள்ளையருக்குப் பயந்து வாழ்ந்து வந்தனர். நாட்டில் அமைதி நிலவுவதாகக் கும்பினியார் நினைத்தனர். படையில் பெரும்பகுதி திருசிரபுரம் சென்றது. மற்றப்பகுதி மூன் றிடங்களில் பிரிந்து இருந்தது

சிறையில் மன்னர் குலத்தவர் மனம் மிக நொந்தனர். பழியும் அவமானமும் அவரைக் கொல்லாமல் கொன்றன. 'விடுதலை பெறு வோம்' என்று நம்பி உயிர் வாழ்ந்தனர். இரண்டு காரணங்களால் கும்பினியார் ஊமைத்துரையைச் சிறையில் வைத்திருந்தனர். அவை யாவன ; (1) அவர் சூழ்ச்சி மிக்கவர். நாட்டுமக்களின் அன்புக்குப் பாத்திரமானவர். அவரை விட்டால் படை திரட்டிப் பழிவாங்குவார் (2) வெள்ளையரை எதிர்த்தவர் கடுந்துயர் அடைவர் என்பது நாடு முழுதும் அறியவேண்டும்.

புரட்சி வீரர் கூட்டம்

கும்பினியாரின் கொடுமை பெருகிற்று. மக்கள் தலைவரை இழந்து மனம் கலங்கி நின்றனர். ஊமைத்துரையை மதியாத ஊமைத் துரையின் செயல் திறனை எண்ணி அவரே மன்னவராக வேண்டும் என்று முடிவு செய்தனர். மக்கள் கிளர்ச்சி மறைமுகமாகவே நடந்தது. 'பகைவரை வேருடன் களையவேண்டும். அல்லது நாம் அடியோடு அழிய வேண்டும்' என்று மக்கள் உறுதி பூண்டனர். புரட்சித் தலை வர்கள் மும்முறை கூடி முடிவு செய்தனர். குறிப்பிட்ட நாளில் பல ஊர்களினின்று வீரர் பலர் இரவில் வழிநடந்து யாரும் அறியாதபடி வல்ல நாட்டு மலையை அடைந்தனர். ஊமைத்துரையின் ஒன்றுவிட்ட தம்பியாகிய சிவத்தையா புரட்சி வீரர்க்குத் தளபதியானார். புரட்சி வீரர் முந்நூற்று முப்பத்தறுவர் இருந்தனர்.

புரட்சிப் படை சிறைச்சாலையை நண்ணுதல்

1—2—1801 ஆம் நாள் காலை உணவருந்திப் புரட்சிவீரர் பல பிரி வினராகப் பிரிந்து மாறுவேடத்தில் உலவினர். சிலர் சடைமுடிகளு டன் துறவிகளாகவும், சிலர் மேனி முழுவதும் வெண்ணீறு பூசிச் சீடர் களாகவும் மடங்களிலும், ஆலயங்களிலும், மர நிழலிலும் இருந்தனர். சில பண்டாரங்கள் போலவும், தாதர் போலவும் வேடமணிந்து பிச்சை யெடுத்தனர். சிலர் விறகு சுமைக்குள்ளும், புற்கட்டுகளுக்குள்ளும், ஆயுதங்களை மறைத்து விலை கூறினர். அதிக விலை கூறினமையால் யாரும் வாங்கவில்லை. பகல் முழுதும் இவ்வாறு பிரிந்து நின்ற புரட்சி வீரர் மாலையில் ஊமைத்துரையிருந்த சிறைச்சாலை யருகில் கூடினர்.

நாட்டில் அமைதி நிலவுவதாக நினைத்த வெள்ளையர் சற்றே அயர்ந் திருந்தனர். பாளையக்கோட்டையில் கும்பினியார் இருபதின்மரே

யிருந்தனர். புரட்சி வீரர் அணுகிய அந்நாள் மாலை வெள்ளையர் அனைவரும் மெக்காலே என்ற தளபதியின் விடுதியில் நடந்த விருந்துக்குச் சென்றிருந்தனர். சிறைக்கூடத்தில் காவற்படையினர் வெகு சிலரே இருந்தனர்.

ஊமைத்துரையின் மீட்சி

புரட்சி வீரர் கோட்டையைச் சுற்றி ஆங்காங்கே இருந்தனர். ஒரு வீரன் வடக்கு வாயில் காவலரிருவரிடம் சென்று 'உள்ளே ஒருவனைக் காண வேண்டும்' என்றான். அவன் "உள்ளே செல்லக்கூடாது" என்றான். உடனே அயலேயிருந்த வீரர் அவன் மீது பாய்ந்து ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு அவர்களைக் கீழே தள்ளினர். சிலர் சிறைக்குள் சென்றனர். சிவத்தையாவும் மற்றவரும் பகைவர் வந்து தடை செய்யாதவாறு காத்தனர். உள்ளே புகுந்த வீரர் ஊமைத்துரையையும், அவர் தோழரையும் கண்டு, விலங்குகளை உடைத்தெறிந்தனர். அங்கிருந்த ஆயுதங்களையும் கவர்ந்து கொண்டு தடுத்த காவல் படையினரை ஒடுக்கிவிட்டு அனைவரும் வெளியேறினர். வேறு எவரும் தம்மை யணுகாதவாறு நகர்வலம் வந்து மன்னவருடன் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிச் செல்லும்போது வந்த கும்பினியாரின் குதிரைப் படையை வென்று ஊரைச் சேர்ந்தனர்.

4. அரசுரிமை ஏற்றல்

மரபினரைத் திரட்டுதல்

தகர்த்தற்கரிய கோட்டையை வெள்ளையர் தரை மட்டமாக்கியமை பாஞ்சை மன்னர்க்குப் பேரெரிச்சலை விளைவித்தது. "இத்தகைய கொடுஞ் செயலைச் செய்த வெள்ளையரை வேரறுத்து வெற்றிமாலை சூடுவேன்" என்று வஞ்சினம் சாற்றினார். தம் மரபினர் அனைவர்க்கும் விரைவில் பாஞ்சையில் கூடும்படி ஓலை யனுப்பினார். 'சாமி'யின் ஆணையைக் கண்ட குடிமக்கள் மன மகிழ்வோடு மன்னனைக் காணத் திரள்திரளாகச் சென்றனர். பாஞ்சையை யடைந்து ஊமைத்துரையைக் கண்டு வணங்கி அவர் ஆணை கேட்டு நின்றனர். அவர்களின் ஊக்கத்தைக் கண்ட ஊமைத்துரை மேலும் செய்ய வேண்டுவனவற்றை எடுத்துரைத்தார். "பகைவர் வருவதற்குள் நம் கோட்டையை எழுப்ப வேண்டும். அவர்கள் பீரங்கி, வெடி மருந்து, துப்பாக்கி ஆகியவற்றுடன் எதிர்ப்பர். நாம் நம்மை அதற்கு ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்" என்றார்.

கோட்டையை மீண்டும் அமைத்தல்

அவரது வீரவுரை கேட்ட மக்கள் வீறுகொண்டனர். ஒரு மனதுடன் கோட்டையமைப்பதில் நாட்டம் கொண்டனர். ஆண்களும் பெண்களும் அவ்வேலையில் ஈடுபட்டனர். பீரங்கித் தாக்குதல்களுக்

குத் தாங்கக் கூடிய மதில்களையமைத்தனர். நன்கு குழைத்த மண்ணில், கம்பஞ்சக்கையை யிழைத்து, பதனீரையும் கருப்பஞ்சாற்றையும் கலந்து, மதில்கள் அமைக்கப்பட்டன. ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இம்மாபெரும் பணி செய்தனர். ஆறே நாட்களில் கோட்டை கொத்தளங்கள் முன்போல் எழுந்தன. பழைய கோட்டையை விடச் சிறந்து விளங்கிற்று.

கோட்டையின் அமைப்பு

கோட்டையின் மதிற் சுவர் ஆறடி அகலமும், பதினெட்டடி உயரமும், ஆயிரத்து முந்நூற்றைம்பது கெஜம் நீளமும் உடையதாய் அமைந்தது. பகைவர் புகாதவாறு உறுதியாக அமைக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே கொத்தளங்கள் அமைந்திருந்தன. மேல் வரும் பகைவரை மறைந்து நின்று எளிதில் வெற்றி கொள்ளத் தக்க வழி வசதிகளும், போர்க் கருவிகளைச் சேர்த்து வைக்க மறைவிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன, மதிற்சுவர் இரட்டையாக அமைக்கப் பெற்று, இடைவெளியில் உமி, பதர், வரகு, வைக்கோல் முதலியன நிரப்பப்பட்டன.

கோட்டை உருவாகிக் கொண்டிருக்கும்போதே, போர் வீரர்க்குப் படைக்கலப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பணியில் ஈடுபட்டிருந்த அனைவர்க்கும் மன்னர் பெரிய விருந்து ஒன்று அளித்துப் பந்தியில் தாமே வந்து முகமன்கூறி நன்றி கூறினார். இறைவனருளால் வெற்றி காண்பது உறுதி என்று கூறினார். மீண்டும் அழகுடன் விளங்கிய நகரத்தைக் கண்ட மக்கள் தலைவனை மனமாரப் போற்றினர்.

முடிசூட்டு விழா

தம்பி துரைச்சிங்கம், குடிமக்கள் வேண்டுகோளின் மேல், அரச குலத்தினரின் முறைப்படி ஊமத்துரை பாஞ்சாலங்குறிச்சியின் மன்னராக ‘இலட்சுமி விலாசம்’ என்னும் மண்டபத்தில் முடிதரித்தார். முடிசூட்டு விழாவின்பின் நகர்வலம் வந்து, கொலுவில் அமர்ந்து, அறம் பலசெய்து அவையினரை நோக்கி, “நான் இன்று சூடிக் கொண்டது அரசபட்டம் அல்ல; பகைவரை வேருடன் களைய ஏற்ற வீரப்பட்டம் ஆகும்” என்று முழக்கம் செய்தார்.

5. மீண்டும் பகை

கும்பினியார் படை கயத்தாறு அடைதல்

தான் அனுப்பிய படைவீரரை முறியடித்துவிட்டு ஊமைத்துரையும் புரட்சி வீரரும் தப்பிவிட்டனரே என்று வெள்ளையர் தளபதி மனம் புழுங்கினான். சிறைக்கூடம் சென்று நடந்தவற்றை விவரமாக அறிந்து சீற்றங்கொண்டு இராணுவத் தலைவர்களுக்கு ஆணைகள்

அனுப்பி, விரைவில் போர் வீரரைக் கயத்தாற்றுக்குக் கொண்டுவருமாறு பணித்தான். சிவலப்பேரி, சங்கர நயினார் கோவில் என்னும் இடங்களிலிருந்த படை வீரருடன் மேஜர் ஷெப்பர்டு என்பான் கயத்தாற்றை யடைந்தான். பாளையங்கோட்டையிலிருந்து மேஜர் மெக்காலே தன் படை வீரருடன் அவ்விடம் சேர்ந்தான். கயத்தாறு என்பது திருநெல்வேலிக்கு வடமேற்கே இருபது மைல் தொலைவிலுள்ளது. வெள்ளையரிடம் பீரங்கிப் படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய முப்படைகளுமிருந்தன.

பாஞ்சை வீரர் கும்பினிப் படையை வளைத்துக்கொள்ளுதல்

கயத்தாற்றிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு நான்கு மைல் தொலைவிலுள்ள குலையநல்லூருக்கு வெள்ளையர் விடிவதற்கு முன் வந்து சேர்ந்தனர். அங்கே கூடாரங்கள் அமைத்துக்கொண்டு இளைப்பாற அமர்ந்தனர். படைவீரர் தமது பாடி வீடுகளில் உண்டுகளித்து உறங்கியிருந்தனர். இதையறிந்த ஊமைத்துரை இடைவழியிலேயே பகைவரை வேருடன் களைய எண்ணினார். பலவித போர்க்கருவிகளுடன் ஆயிரம் போர் வீரர் ஓட்டமும் நடையுமாக வெள்ளையர் பாசறை நோக்கி விரைந்தனர். கூடாரங்களை நாற்புறமும் வளைத்துக் கொண்டனர். திகைத்து நின்ற பகைவர் விரைவாகத்திரண்டு போரிட முனைந்தனர்.

பாஞ்சை வீரர் தம் கோட்டையை யடைதல்

பாஞ்சை வீரர் வேல்கொண்டு தாக்கவே கும்பினிப் படை வீரர் வெடிகளைத் தொடுத்து விடுத்தனர். குண்டுமாரியைப் பொருட்படுத்தாமல் குதிரைப் படைகளை ஊடுருவிச்சென்று வேல்களாலும், கம்புகளாலும் பலரைக் குத்திக் கொன்று பாஞ்சைப் படைவீரர் மூர்க்கமாகப் போரிட்டனர். வெள்ளையரின் குண்டுகளுக்குப் பல பாஞ்சை வீரர் பலியாயினர். அதனால் நெடுநேரம் எதிர்த்துப் போரிட முடியாமல் பாஞ்சையர் கோட்டையை நோக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் கடுஞ்சேதம் விளைவித்த பாஞ்சை வீரரின் ஆற்றலைக் கண்டு வெள்ளையர்தளபதி மருண்டான். இரவு முழுதும் கண் மூடாமல் காத்து நின்றான்.

தளபதியின் திகைப்பு

பொழுது புலர்ந்தது. கும்பினிப் படைவீரர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அணியணியாகப் பாஞ்சையை நோக்கி நடந்தனர். பாஞ்சைக் கோட்டையைத் தளபதி கண்டான். திகைத்து நின்றான். தான் காண்பது கனவோ என மருண்டான். அக்காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. தரைமட்ட மாக்கப்பட்ட கோட்டை மறுபடியும் வீறுடன் விளங்கியது. அரண்களில்லாத நகரை எளிதில் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்த தளபதி, வலிய அரண்களைக்

கண்டதும் மதிமயங்கி நின்றான். 'அரண்களும் கோட்டையும் எவரும் நம்பமுடியாத வேகத்தில் அமைக்கப்பட் டிருந்தன' என்று ஒரு படைத் தலைவன் புகழ்ந்து கூறியுள்ளான்.

தளபதியின் முடிவு—கும்பினிப் படையினர் பின் வாங்குதல்

கோட்டைக்கு ஒரு மைல் தொலைவில் ஒட்டப்பிடாரம் என்னும் ஊருக்கு அருகில் பாசறை யமைத்துக்கொண்டனர். தளபதி ஒரு மேட்டின் மீது ஏறி தொலைப் பார்வைக் கருவியின் உதவியால் கோட்டையைக் கூர்ந்து கவனித்தான். ஏறக்குறைய இரண்டாயிரம் போர்வீரர்கள் ஆயுத பாணிகளாக உறுதியுடனும் ஊக்கத்துடனும் நிற்பதைக் கண்டு வியந்தான்.

ஒற்றர்கள் வணிகர்போல மாறுவேடம் பூண்டு கோட்டைக்குள் புகுந்து அங்குள்ள நிலைமையை அறிந்து விளக்கினர். "கொத்தளங்களி லும் வெளியிலும் காணப்படும் படைவீரர் போல் இருமடங்கு போர் வீரர் ஆயுதபாணிகளாக உட்புறம் உள்ளனர். அவர்கள் போரை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். எங்கும் போர்க்கருவிகள் குவிந்து கிடக்கின்றன" என்ற ஒற்றர் உரைகேட்ட மெக்காலே மனந்தளர்ந்து திரும்பிவிட முடிவுசெய்தான். கோட்டைமேல் படையெடுப்பதுபோல் பாவனைக் காட்டிப் பகைவரை ஏமாற்றிச் சேதமின்றிச் செல்லும்படி உத்தரவிட்டான், போரின்றிப் பின்வாங்கும் வெள்ளையரைக் கண்டு பாஞ்சை வீரர் வெகுண்டெழுந்தனர். அவர்களைப் பின் தொடர்ந்து கடும் போரிட்டனர். இரவில் இனம் தெரியாமையால் பாஞ்சை வீரர் பிறகு தம் கோட்டையை யடைந்தனர்.

ஊமைத் துரைமேல் சீமைத்துரை எடுத்த படையெடுப்பு நகைப் புக்கு இடமாயிற்று. வெள்ளையர் தளபதி நாணத்தினால் தலை குனிந் தான். எனினும் கும்பினித் தலைவருக்கு நிலைமையை விளக்கி வெவ் வேறிடங்களிலிருந்து படைகளை வரவழைத்துக் குவித்தான். வெள்ளை யரின் ஆயுதங்கள் பலவற்றைப் பாஞ்சையர் கைப்பற்றிக் கொண்ட னர். இவ்வாறு மீண்டும் போர்புரிய ஆயத்தம் செய்தனர்.

6. தூத்துக்குடியில் பாஞ்சை வீரர்

பாஞ்சையர் போர்க் கருவிகளைத் திரட்டுதல்

ஊமைத்துரை இரவும் பகலும் விழிப்புடனிருந்து தேவையான அரண்களை அமைத்தார். படைகளைப் பலப்படுத்தினார். முதலில் பாளையக்காரரிடமிருந்து பறித்த ஆயுதங்களை வெள்ளையர் சிந்து பூந் துறையிலும், ஸ்ரீ வைகுண்டத்திலும் சேமித்து வைத்திருந்தனர். ஊமைத் துரையின் ஒரு படை, அவ்வாயுதங்களுக்குக் காவலாக இருந்தவரை விரட்டிவிட்டு அவற்றை மீட்டு வந்தது. போர்க்கருவி களைக்கண்ட மன்னரும் வீரரும் புதிய வலிமை பெற்றனர். அண்

னைக் கொன்றவர் மீது வஞ்சம் தீர்க்க முனைந்தனர். பலதிட்டங்களில், பகைவரிடமிருந்து போர்க்கருவிகளைக் கவர்வது ஒரு முக்கிய மான திட்டமாகும்.

காடல் குடியில் கைகலப்பு

இச்சமயத்தில் பாஞ்சையைச் சேர்ந்த காடல் குடி என்னும் கிராமத்தைக் கைப்பற்ற கும்பினியார் ஒரு படையை அனுப்பினார்கள். இச்செய்தியை முன்கூட்டியே அறிந்திருந்த ஊமைத்துரை தம் படை வீரரை அங்கு அனுப்பினார். அப்படையை எதிர்பாராத கும்பினிப் படை உறுதி குலைந்த நிலையில் போர் மூண்டது. நாட்டு விடுதலைப் போரில் உயிருக் குத்துணிந்து வுறுதியுடன் போராடும் பாஞ்சைய வீரர்க்குக் கும்பினிப் படை புறங்காட்டி ஓடிப் பாளையங்கோட்டையையடைந்தது. பிறகு பாஞ்சைப் படை. வீரர் ஸ்ரீவைகுண்டத்தைக் கைப்பற்றினர். அதனையறிந்த கும்பினித் தலைவன் ஒரு படையை ஏவினன். அதுவும் பின் வாங்கிச் சென்றது.

நாளுக்கு நாள் பகை வளர்ந்து கொண்டே போயிற்று, வெள்ளையரில் நடுநிலை யுணர்ச்சியுடையோர் சிலர் பாஞ்சைத் தலைவருடன் பகைமை வளர்த்துக்கொண்டது தவறு என்று கருதினர்.

பாஞ்சையர் தூத்துக்குடியைத் தாக்குதல்

பாஞ்சாலங்குறிச்சிக்குத் தென்கிழக்கில் பதினேழு கல் தொலைவில் தூத்துக்குடி உள்ளது, அதில் கும்பினியார் ஒரு கோட்டை கட்டியிருந்தனர். அதில் பண்ட சாலைகள் பல இருந்தன. அது தென்னிந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு அரண்போல் அமைந்திருந்தது. ஆகவே ஊமைத்துரை ஒரு சிறந்த படையை அனுப்பினார். இரவில் புறப்பட்ட அப்படை விடியுமுன் தூத்துக்குடியையடைந்தது, போர் வீரர்கள் கோட்டையை நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டனர், பாஞ்சையரின் தாக்குதலால் பகைவர் பறந்து சென்றனர், கும்பினிப் படைத்தலைவன் பாஞ்சையரால் கைது செய்யப்பட்டான், கோட்டைக்குள் இருந்த போர்க்கருவிகளைப் பாஞ்சையர் தமதாக்கிக்கொண்டனர்

சிறைப்பட்ட வெள்ளை வீரனுக்கு விடுதலை

கைது செய்யப்பட்ட படைத் தலைவன் கதிகலங்கினன். உயிர் போய்விடும் என்று உள்ளம் கலங்கினன். அவனுக்கு நம் நாட்டு மொழி தெரியாது. அவன் மணமாகாத வாலிப வயதினன். அவனது நிலையைக் கண்ட பாஞ்சைப் படைத்தலைவன் அவனுக்கு யாதொரு துன்பமும் நேரக்கூடாது என்று ஆணையிட்டான். "உம்மை விடுதலை செய்தால் இப்போதே உமது நாட்டுக்குச் செல்வீரா ?" என்று கேட்டான். அவனும் தலையை யசைத்துத் தன் உடன்பாட்டைத் தெரிவித்தான். உடனே அவன் ஒரு மீன் பிடிக்கும் தோணியில் ஏற்றிக் கடல் வழியாக அனுப்பப்பட்டான்.

தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா ?

இச்சம்பவம் பற்றி ஆங்கிலேயன் ஒருவன் தன் குறிப்புரையில் "பகைவர் படைத் தலைவனைப் பரிவுடன் நடத்தி, படகிலேற்றி யனுப்பி யது பாஞ்சை வீரரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது' என்று புகழ்ந் துள்ளான். பகைவரும் புகழ்ந்து போற்றும் உயர்ந்த பண்பு பூரஞ்சை யரிடம் அமைந்திருந்தமை போற்றத் தக்கதாகும்.

7. கருணைக் கடல்

தூத்துக்குடியில் கும்பினித் தலைவன் சிறைப்படுதல்

தூத்துக்குடியில் வெள்ளையர் பணிந்த பின் பாஞ்சைப்படை வீரர் பண்டசாலைகளைக் கைப்பற்றினர். அவற்றுக்குத் தகுந்த காவலை அமைத்துவிட்டுப் பல இடங்களைப் பார்த்துக் கொண்டுவந்தனர். அப் போது ஒரு மாளிகையைக் கண்டு அதனுள் புகுந்தனர். அதனுள்தான் பாக்கட் (Baggot) என்ற கும்பினித் தலைவன் மறைந்திருந்தான். அவனுக்கு அப்போது முப்பத்தெட்டு வயது. கொள்ளை கொண்ட பொருள்களுடன் அவனையும் தம்முடன் கூட்டிக் கொண்டு பாஞ் சையை நோக்கி வெற்றி முழக்கத்துடன் விரைந்து சென்றனர். வெள்ளைத்துரை கைதியாகி வருவதைக்காண மக்கள் திரண்டனர். பாஞ்சைப் படைத்தலைவனுக்கு மக்கள் ஆங்காங்கே மலர்மாலை சூட்டி மரியாதை செய்தனர்.

ஊமைத்துரையின் மனப்பண்பு

சிறைப்பட்ட சீமைத்துரை ஊமைத்துரைமுன் கொணர்ந்து நிறுத்தப்பட்டான். அரசனைக் கண்ட அயலான் சோர்ந்து நாணி நின்றான். அவன் நிலையுணர்ந்த அரசர் அவன்பால் இரக்கங் கொண் டார். அவருக்கு என்றுமே வெள்ளையர் மீது வஞ்சம் இல்லை. வெள்ளையரின் ஆட்சி வெறியை மட்டுமே வெறுத்தார். ஆகவே அவர் வெள்ளையனை அவமதிக்கவில்லை. மாறாக அவன்பால் அன்பு செலுத் தினார். "நீர் அஞ்சவேண்டாம். உமக்கு யாதொரு துன்பமும் நேராது கும்பினியாரின் ஆட்சி ஒழிந்தபின் உம்மை உம் நாட்டுக்கு அனுப்பி விடுவோம். நீர் அதுவரை எம்முடன் இருக்கவேண்டும்" என்று அடைக்கலம் அளித்துச் சிறையில் அடைத்து வைக்குமாறு கட்டளை யிட்டார். சிறையில் வைக்கப்பட்ட வெள்ளைத்துரையின்மீது மன் னர் மனைவி சவுந்தரவடிவு பெரிதும் இரக்கம்கொண்டு அவனைப் பரிவுடன் நடத்துமாறு சிறைக்காவலருக்கு ஆணையிட்டாள்.

வெள்ளை மாதின் துணிவு

மேரிவிலேலா என்பவள் பாஞ்சைச் சிறையிலடைபட்ட வெள்ளை யரின் மனைவியாவாள். அவள் தன் கணவனுக்கு நேர்ந்த துன்பத் தைக் கண்டு துடித்தாள். என்ன செய்வதென அறியாது திகைத்தாள். பின் ஒருவாறு மனம்தேறி பாஞ்சாலங்குறிச்சி சென்று தன் கணவனை

மீட்க எண்ணினாள். ஆங்கிலேயர் எவரும் உடன்வர மறுக்கவே, அவள் தனிமையாகவே கால்நடையாகப் பாஞ்சையை அடைந்தாள். கோட்டையுட் புக அனுமதியும் பெற்றாள்.

கோமகன், துரையை விடுதலை செய்தல்

கோட்டையுள் சென்ற அம் மங்கை மன்னவரைக் கண்டு வணங்கிக் கண்ணீர் சிந்தி நின்றாள். தனக்கு மங்கலப்பிச்சை யருளுமாறு வேண்டினாள். அவள் நிலையைக் கண்ட கோமகன் மனமுருகி அபயம் அளித்து, அருகிலிருந்த இருக்கையில் அமர்த்தினான். சிறையிலிருந்த துரையை அழைத்து வருமாறு ஏவலரை யனுப்பினான். சபைக்கு வந்த ஆங்கிலேயன் தன் மனைவியைக் கண்டு மகிழ்ந்தான். எனினும் தன் நிலைக்கு நாணினான். ஊமைத்துரை அவ்விருவரையும் அருகில் அழைத்து ஆறுதல் கூறிப் பாலும் பழமும் உண்ணச் செய்தார் அம் மங்கைக்குப் பட்டாடை யொன்று பரிசளித்து "உனக்காக உன் கணவனை விடுதலை செய்கிறேன்" என்று சொன்னார். "நாம் மீளமாட்டோம் என்று நினைத்திருந்த ஆங்கிலேயன் அம்மொழி கேட்டு வியந்தான்.

கைதியிடத்திலும் கருணை

பாஞ்சை மன்னர் அவ்வெள்ளையனைச் சிறை செய்தபோழுது அவனிடமிருந்து கவர்ந்த பொருள்களை யெல்லாம் அவனிடமே கொடுத்து, ஒரு பெட்டிவண்டியில் கணவனையும் மனைவியையும் ஏற்றித் தகுந்த காவலுடன் தூத்துக்குடிக்கு அனுப்பினார். கைதியிடத்திலும் கருணை காட்டிய மன்னனை வெள்ளையரும் புகழ்ந்தனர். இவற்றை நினைக்கும்போதெல்லாம் நம் நாட்டவர் உயர்ந்த பண்பு நம்மை உடல் சிலிர்க்க வைக்கின்றது.

8. படுகளம்

ஊமைத்துரையின் ஆட்சி

ஊமைத்துரை கும்பினியாரின் ஆட்சியை ஒழிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாரேனும், தமது ஆட்சிமுறையிலும் கவனம் செலுத்தினர். தாம் கைப்பற்றிய இடங்களில் பாதுகாப்புக்காகப் படைகளை அமர்த்தினர். குடிகளுக்கு யாதொரு இடையூறும் செய்யக் கூடாதெனத் தம் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். பாஞ்சாலங் குறிச்சி ஜமீனைப் பத்துப் பிரிவுகளாக்கி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்து அரசியலை நடத்தினர். பாஞ்சையில் போர்க்கருவிகள் வந்து குவிந்த வண்ணமிருந்தன. பல விடங்களில் போர்க்கருவிகள் செய்யத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

ஒற்றர்மூலம் செய்தியறிதல்

ஊமைத்துரை மாசி மாதம் சிவராத்திரி யன்று தம் குல வழக்கப் படி சக்கதேவியை வணங்கிய பின் அரங்கமால் என்னும் மாளிகையில் சபையைக் கூட்டினர். தளபதிகள் பலர் அங்குக் கூடியிருந்தனர். பகைவரை வேரறுத்து நாட்டில் நல்லாட்சி நிறுவவேண்டுமென்றும், மாற்றானின் படைப் பலங்களை ஒற்றர்மூலம் அறிதல் வேண்டுமென்றும், தகுந்த போர்க் கருவிகளுடன் படைகளைப் பலப்படுத்தவேண்டுமென்றும் அச்சபை முடிவுசெய்தது. அதன்படியே பல ஊர்களிலிருந்து ஆறாயிரத்து எண்ணூறு வாலிபர் பாஞ்சையில் கூடினர். அவர்களுக்குச் சிறந்த முறையில் படைக்கலப் பயிற்சி யளிக்கப்பட்டது. ஒற்றர்கள் வெள்ளையர் பெரியதொரு போருக்கு ஆயத்தம்செய்து கொண்டிருப்பதையும், எட்டையபுரத்தார் அவர்களுக்கு உதவி புரிவதையும் அறிந்துவந்து சொன்னார்கள்.

எட்டப்ப நாயக்கரின் துரோகம்

எட்டைய புரத்தரசர் எட்டப்ப நாயக்கர் கும்பினியாரின் தூண்டுதலால் பாஞ்சாலங் குறிச்சியாரிடம் கடும்பகை கொண்டிருந்தார். ஊமைத்துரையின் வலிமை அவர்க்கு அச்சத்தை விளைவித்தது. அண்ணனுக்குத் தான் செய்த கொடுமைகளுக்குத் தம்பி வஞ்சம் தீர்த்துக் கொள்ளக்கூடும் என்று அஞ்சினர். ஐந்தே நாட்களில் அரிய பல செயல்களைச் செய்து பெரிய கோட்டையை அமைத்துப் பல்லாயிரம் போர்வீரரைத் திரட்டி நின்ற ஊமைத்துரையின் ஆற்றலைக் கண்டு எட்டையப்பர் பொறாமையும் அச்சமும் கொண்டார். அவரிடம் படைவீரரோ போர்க் கருவிகளோ சேனைத் தலைவரோ இல்லை. கலெக்டரைக் கண்டு பேசியதன் விளைவாகப் போர்க்கருவிகளும், வெடிமருந்துகளும் பெற்றார். கும்பினியார்க்கு அவசியமான பொழுதெல்லாம் உதவ வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவர் இவ்வுதவிகளைப் பெற்றார். பிறகு அவர் படை வீரர்களைத் திரட்டிப் பயிற்சி அளித்தார். கும்பினியார் ஊமைத்துரையின் மீது படையெடுக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார். அந்த நாளும் வந்தது.

கும்பினிப் படை பாஞ்சையை நோக்கிப் புறப்படுதலும் பாஞ்சை வீரர் இடை வழியில் தாக்குதலும்

முன்போல் தோல்வியடையக் கூடாதென்ற நோக்கத்துடன் தளபதி மெக்காலே எச்சரிக்கையாகப் பல திட்டங்களை அமைத்தான். பதினொரு வெள்ளையர் படைத் தலைவர்களாக இருந்தனர். மார்ச்சு மாதம் 30-ஆம் நாள் கும்பினிப் படை பாஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. ஓட்டரம்பட்டி யென்னும் ஊரையடைந்து காலை உணவு அருந்தினர். வெள்ளையர் படை திரண்டு வருவதை ஒற்றர் மூலம் அறிந்த ஊமைத்துரை எழுநூறு போர் வீரரை ஆயுதபாணிகளாக அனுப்ப, நள்ளிரவில் அவர்கள் புறப்பட்டு இடைவழியில் மறைந்து கொண்ட

ஞர். மறுநாள் மாலை அவ்வழி வந்த கும்பினிப் படையைப் பாஞ்சை வீரர் வளைத்துக் கொண்டனர். கும்பினிப்படை திகைத்து நின்றது. பிறகு பாஞ்சை வீரர்மீது குண்டு மாரி பொழிந்தது.

"இன்றைக் கிருந்தாலும் நாளைக் கிருந்தாலும்
என்றைக்குமே ஒரு நாள் இறப்போம்
அன்றைக்குச் சாவதை இன்றைக்குப் போரினில்
ஆக்கியமர்வதே பாக்கியமாம்"

என்ற உறுதியுடன் பாஞ்சை வீரர் போரிட்டனர். பீரங்கித் தாக்குதலில் மாண்டவர் போக மற்றவர் மீண்டு பாஞ்சைக்குச் சென்றனர். கும்பினிப்படை பாஞ்சைக்கு வடமேற்கே பசுவந்தனை என்னுமூரை யடைந்து பாடி யமைத்துக்கொண்டு தங்கியது. அவ்விடத்தில் எட்டப்ப நாய்க்கர் தமது படையுடன் வந்து கலந்துகொண்டார். பாஞ்சைக் கோட்டையைக் கண்டதும் வெள்ளையரில் சிலர் 'மண்கோட்டை' என்று எள்ளி நகையாடினர், ஆனல் மெக்காலே அக்கோட்டையின் வலிமையை எடுத்துக் கூறியபின் அவர்கள் வியப்படைந்தனர். அக்கோட்டைக்கு வடமேற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ள ஆத்தூலோடை என்னுமிடத்தில் பாசறைகளை அமைத்துக் கும்பினிப்படைகள் தங்கின.

படைகளின் ஆயத்தம்

கும்பினிப்படைத் தலைவனுகிய ஜெனரல் வெல்ஷ் என்பவன் பாஞ்சைக்கோட்டையை ஜிப்ரால்டரோடு ஒப்பிட்டுப் பாராட்டினன். பாஞ்சையைவென்ருல் தென்னுடு முழுதும் தம் ஆட்சிக்குக் கீழ்படியும் என்பதே அவன் அவ்வாறு கூறியதன் உட்பொருளாகும். கோட்டையை உடைத்தெறிந்தாலன்றி ஊமைத்துரையை வெல்லமுடியாதென்பதை யறிந்த வெள்ளையர் கோட்டைக்கு மேற்கிலும் வடக்கிலும் சிறிது தொலைவில் இரண்டு மண்மேடுகள் அமைத்துப் பெரிய பீரங்கிகளை நிறுத்தினர். வெடி மருந்துகளும் குண்டுகளும் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டன. படை வீரர் அணிவகுத்துத் தலைவனின் ஆணையை எதிர்நோக்கியிருந்தனர்.

பாஞ்சையரும் கோட்டை மதிலின் உட்புறத்தில் போர்க் கருவிகளைக் குவித்தனர். கொத்தளங்களில் பழுதடைந்த பீரங்கிகளும், போர்க் கருவிகளும் குவிக்கப்பட்டிருந்தன. கவண் குறிக்கான இரும்புக் குண்டுகளும், கல் கூடைகளும் மதில் மீது ஆங்காங்கே வைக்கப்பட்டன, நான்கு மூலைகளிலும் ஈயத்தையும் செம்பையும் உருக்குவதற்கும், அந்த அனல் குழம்பைப் பகைவர் மீது அள்ளி வீசவும் தேவையான கொப்பரைகளும், தட்டுகளும் வைத்தனர். படை வீரருக்குத் தேவையான போர்க் கருவிகளை விரைந்து கொடுப்பதற்கென்று பரண்கள் அமைத்தனர். மதிலுக்கு வெளியே ஒரு முள் வேலியும் அமைத்தனர்.

வெள்ளை எலிகளை விரட்டு

வெள்ளையர் ஊமைத்துரையையும் 'கட்டபொம்மு' என்றே அழைத்துவந்தனர். அவர்கள் அந்தப் பெயரைச் சுருக்கமாக 'கேட்'' (Cat) என்று வழங்கினர். ஆங்கிலத்தில் 'Cat' என்ற சொல் 'பூனை யென்ற பொருள தருகிறது. பூனை எலிகளை வேட்டை யாடுதல் இயற்கையான தல்லவா? ஆகவேதான் ஊமைத்துரை வெள்ளையரை 'எலிகள்' என்றார். "வெள்ளை எலிகளை விரட்டு, எதிர்த்தால் கொல்'' என்று வீரர்க்கு ஆணையிட்டார். ஊமைத்துரையும் போர்க்கோலம் பூண்டு நின்றார்.

கோட்டை மதிலில் பிளவு

காலையில் கும்பினிப் படைகள் கோட்டை மேல் குண்டு மாரி பொழிந்தன, நண் பகல் வரை கோட்டை மதில் நிலை குலையவில்லை. தினையளவு மண் கூட இடிந்து விழவில்லை. கும்பினித் தலைவன் "இஃதென்ன மாயக்கோட்டையோ?'' என்று எண்ணமிட்டான். எங்கும் இடிமுழக்கம் போன்ற ஒலி யெழுந்தது. மாலை நான்கு மணிக்குமேல் வடமேற்கு மதிலில் சிறிதளவு பிளவு கண்டது. கும்பினிப் படைவீரர் திரண்டு முள்வேலியைக் கடந்து கோட்டைக்குள் செல்ல முனைந்தனர்.

கும்பினிப்படை நிலைகுலைதல்

மாற்றான் படை உள்ளே நுழைவதைக் கண்ட பாஞ்சையர் வேல், வாள் முதலிய கருவிகளால் அவர்களைக் குத்திக் கொல்லத் தொடங்கினர். கும்பினியார் குண்டுகளால் பாஞ்சையர் பலர் மாண்டனர். ஏணியை வைத்து மதில்மேல் ஏற முயன்றவர்களைப் பாஞ்சை வீரர் வல்லயங்களால் குத்தி வெளியே எறிந்தனர். வில் வீரர், கல் குண்டுகளையும், இரும்புக் குண்டுகளையும் எதிரிகள் மீது எறிந்தனர். பல படுகொலைகள் நிகழ்ந்தன. கும்பினிப் படைகள் நிலைகுலைந்தன. தளபதி, கலைந்த படைகளை மீண்டும் அணிவகுத்துப் போரிடுமாறு ஊக்கினான்.

ஊமத்துரையின் பெருந்தன்மை

பகைவர் குண்டுவீச்சுக்குப் பயப்படாமல் பாஞ்சை வீரர் போரிட்டதால் கும்பினிப் படைத்தலைவர்களில் பலர் வெட்டுண்டு சாய்ந்தனர். மிகுதிப் படையை மீட்டுக்கொண்டு வெள்ளையர் தளபதி பாசறையை அடைந்தான். அன்று நடந்த போரில் ஐந்நூறு போர் வீரரும், வெள்ளையரில் பலரும் மாண்டனர். பலர் படுகாயமடைந்தனர். ஒரு சிற்றரசனிடம் இவ்வாறு இடர்ப்படுவதற்கு வெள்ளையர் தளபதி நாணித் தலைகுனிந்தான். ஊமைத்துரை பகைவருக்கு அன்றிரவு இன்னல் பல இழைத்திருக்கக்கூடும். ஆனால் அவ்வாறு செய்யாதது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

தலை இருக்க வால் ஆடுமா?

மதிலருகில் தன்படை வீரரின் நாதியற்றுக் கிடந்த சவங்களை எடுத்துப் புதைக்கக் கருதிய வெள்ளையர் தளபதி ஒரு தூதுவனைப் பாஞ்சையரிடம் அனுப்பினான். ஒரு இராணுவ அதிகாரி பச்சைக் கொடியேந்தி ஒருகடிதத்துடன் கோட்டையை நோக்கிச் சென்றான். கோட்டைக் காவலர் அவனை உள்ளே அனுமதித்தனர். ஊமைத்துரையைக் கண்டு கடிதத்தைக் கொடுத்தான். கோரியவாறே அனுமதி கிடைத்தது. தூதுவன் திரும்பிவந்து, ஊமைத்துரையின் வாய்மொழியைக் கூறினான். உடனே பெரிய குழிகளைத்தோண்டிச் சவங்களைப் புதைத்தனர். கல்லறைகளும் கட்டினர். அன்று பகல் முழுவதும் சவங்களைப் புதைப்பதிலேயே காலம் கழிந்தது. யாதொரு தடையும் சொல்லாமல் சவங்களை யகற்ற அனுமதியளித்த பாஞ்சையதிபரை வெள்ளையர் புகழ்ந்தனர்.

உடைப்பட்ட மதில் இரவோடிரவாகச் செப்பனிடப்பட்டது. வெற்றி பெற்ற களிப்பால் ஊமைத்துரை அயர்ந்திருக்கவில்லை. மறு நாள் போருக்கு வேண்டியவற்றைக் கவனித்தார்.

9. பாஞ்சையர் வீரம்

கும்பினித் தளபதியின் திட்டம்

கும்பினித் தளபதி மெக்காலே ஊமைத்துரையிடம், இருமுறை தோல்வியுற்றதை நினைந்து வெட்கினான். தன்னிடமிருந்த படைப் பலத்தினால் பகைவரை வெல்ல முடியாது என்று முடிவு செய்தான். மற்றுமொருமுறை தோல்வியுற்றால் அது கும்பினியாட்சிக்குச் சாவு மணியாகும் என்று அஞ்சினான். ஆகவே கும்பினித் தலைவனுக்குப் பாஞ்சையரின் வலிமையைப் பற்றியும், பெரும்படையுடன் பீரங்கிகளையும் அனுப்ப வேண்டுமென்றும் எழுதினான். கும்பினித் தலைவனும் தன் படைக்கு ஏற்பட்ட தோல்வியை நினைத்து வருந்தினான்.

இந்நிலையில் இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றும் நாள் கும்பினிப்படைத்தலைவன் கோட்டைக்குள் உணவுப்பொருள்கள் செல்லாதவாறு முற்றுகையிட்டான். பகைவரைப் பணியவைப்பதற்கு இதுவே சிறந்த வழி என்று நம்பினான். இதையறிந்த ஊமைத்துரை வெள்ளையருக்கு வெளியிடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் வராமலிருக்க ஏற்பாடுகள் செய்தார். நாட்டுமக்கள் ஊமைத்துரையின் ஆணையை மதித்துக் கும்பினியர்க்கு உணவுப் பொருள்களை வழங்க விரும்பவில்லை. படைவீரரே சென்று வாங்கிவருங் காலங்களில், இடைவழியில் பாஞ்சைவீரர் அவர்களை எதிர்த்து அவற்றைப் பறித்துக்கொண்டு சென்றனர்.

கும்பினியார் தம் படை பலத்தைப் பெருக்குதல்

பல இன்னல்களுக்கிடையிலும் கும்பினிப் படைத் தலைவன் உறுதியுடன் நின்றான். சென்னையில் கும்பினித் தலைவராயிருந்த

லார்டு எட்வர்டு கிளைவ் என்பவர் படைகளைத் திரட்டி பீரங்கிகளைச் சேகரித்து கர்னல் ஆக்னியூ (Colonel Agneu) என்பவர் தலைமையில் அனுப்பினார். புதிய தலைவரைக் கண்ட போர் வீரர் ஆரவாரம் செய்தனர். மேமாதம் 21-ஆம் தேதி யிரவு இரு தலைவர்களும் நெடு நேரம் மேல் செய்யவேண்டியவற்றைப்பற்றி ஆலோசித்தனர்.

இவ்விவரங்களைக் கேள்வியுற்ற ஊமைத்துரை மனம் தளரவில்லை. "வெள்ளையர் படைகளைப் பதர்களைப்போல் ஊதி விடுவேன்" என்றார்.

"ஆயிரம் அக்கினிச் சென்னல்கள் வந்தாலும்
ஆண்டவன் பாஞ்சைமன் அஞ்சாமல்
பாயும் சிங்கேறுபோல் ஏறிநின்றான் அந்தப்
பாண்டியன் வீரம் ஆர் கூறவல்லார்?"

[அக்கினிச்சென்னல் : Colonel Agneu]

என்ற நாட்டுப் பாடல் ஊமைத்துரையின் உறுதியைப் புலப்படுத்து கின்றது.

பாஞ்சையர் போராட்டம்

மே மாதம் 29-ஆம் நாள் காலை கோட்டையை நோக்கிப் பீரங்கிகள் வரிசையாக நின்றன. குதிரைப் படைகளும் காலாட் படைகளும் அணிவகுத்து நின்றன. மலாய் நாட்டிலிருந்து வந்த நூற்றைம்பது படை வீரர் தனித் தொகுதியாக நின்றனர். கோட்டை தகர்ந்தவுடன் அனைவரும் உள்ளே பாய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தனர். காலை ஆறு மணிக்குப் பீரங்கிகள் முழங்கின. பாஞ்சையரும் ஆயுத பாணிகளாகத் திகழ்ந்தனர். கோட்டைக்குள் எங்கும் நிலவறைகளையும் சுரங்க வழிகளையும் அமைத்தனர்.

பீரங்கிகள் குண்டுகள் பொழிந்த வண்ணமிருந்தன. பாஞ்சையர் மதில்களுக்கு அருகில நான்கு மூலைகளிலும் பெரிய குழிகளைத் தோண்டினார். நண்பகல் வரை மதில் சேதமடையவில்லை. அதன்பின் தெற்கில் மதில் உடைபட்டு விழுந்தது. உடனே பகைவர் திரண்டு உள்ளே சென்றனர். குழிகளில் பதுங்கி நின்ற பாஞ்சை வீரர் அவர்களைக் கூரிய வேல்களால் குத்தி வீழ்த்தினர். இரண்டு வெள்ளைத் தளபதிகள் தரையில் சாய்ந்தனர். நொடிப் பொழுதில் முப்பத்திரண்டு வீரரை இழந்தமையால் தளபதி, படை வீரரைப் பின்வாங்குமாறு கட்டளையிட்டான். மீண்டும் உறுதியுடன் போர் புரியுமாறு படை வீரர்களை ஏவினான்.

ஒரு பாஞ்சை வீரனது அரிய செயல்

கடும் வேகத்துடன் பீரங்கி வெடிகள் மதிலைத் தகர்க்கத் தொடங்கின. மேற்கிலும் வடக்கிலும் மதில் உடைந்து விழுந்தது. கும்பினிப் படைகள் முன்னோக்கி வந்தன. இரு திறத்தவரிலும் பலர் இறந்தனர்.

அங்கிலேயில் வாட்போர் புரிந்த ஒரு பாஞ்சை வீரனது இடையில் குண்டு பாய்ந்து வாளுடன் தரையில் விழுந்தான். அவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கையில் குதிரையேறி வந்த ஒரு ஆங்கில வீரன் வாளைத் தனக்குத் கொடுக்குமாறு கேட்டான். அவன் 'குனிந்து வாங்கிக் கொள்' என்றான். வெள்ளையன் குனிந்து கையை நீட்டினான். உடனே பாஞ்சை வீரன் வாளை அவனிடம் கொடுப்பவனைப்போல் பாசாங்கு செய்து வெள்ளையனுடைய தலையைச் சீவி விட்டதுமன்றி அவன் குதிரையையும் குத்திக் கொன்றான். வாளை மண்ணில் மறைத்தான். அவன் உயிரும் நீங்கிற்று. பின் கும்பினிப் படைகள் அன்று மாலை பாசறையை அடைந்தன. பாஞ்சையர் இரவு முழுதும் உறங்காம லும், பீரங்கி வெடிகளைப் பொருட்படுத்தாமலும் கோட்டைப் பாதுகாப் புக்களை வலுப்படுத்தினர்.

10. சாமியைக் காப்பாற்று

எட்டப்பர் சதிச் செயல்

24-5-1801 காலை கடும்போர் தொடங்கிற்று. கோட்டை மதிற் சுவர் அழிந்தது. பாஞ்சை நகரின் மாட மாளிகைகள் கொறுங்கின. மன்னர் மாளிகைகள் தகர்க்கப்பட்டன. வேலியைக் கடந்து உட் சென்ற காலாட் படைகளைக் குழிகளில் பதுங்கியிருந்த பாஞ்சையர் வேல் கொண்டு தாக்கினர். கும்பினித் தளபதி செய்வதறியாது வருந் தினர். அவ்வேளையில் எட்டப்பர் 'உட்புறம் நச்சுப்புகையைச் செலுத் தினல் மறைவிடங்களில் பதுங்கியுள்ளோர் வெளியே வருவர். பிறகு சுலபமாக அவர்களைத் தாக்கலாம்' என்று ஆலோசனை கூறினர்.

நச்சுப்புகையால் நேர்ந்த விளைவு

அவ்வாறே கோட்டையின் நாற்புறத்திலும் குழிகளைத் தோண்டி அவற்றில் மிளகு வற்றல்களைக் குவித்தனர். சுரைக் குடுக்கைகளில் பொடி செய்த வற்றல்களுடன் சில மயக்க மருந்துகளையும் கலந்து வெவ்வேறிடங்களில் வைத்தனர். இரவில் வற்றல்களுக்குத் தீ வைக்கப் பட்டது. சுரைக் குடுக்கைகளுக்கும் தீ வைத்து உள்ளே எறிந்தனர். ஊருக்குள் புகை சூழ்ந்தது. பலர் மயக்கமுற்றனர். சிலர் மாண்டனர். இன்னும் வெடிமருந்துடன் மயக்க மருந்து கலந்த கலவையில் தோய்ந்த பீரங்கிக் குண்டுகளைப் பாஞ்சையர்மேல் ஏவினர். நிலவறையிலிருந்த பாஞ்சை வீரர் வெளியேறினர். வெளியே தலை நீட்டியவர்களைக் கும்பினியார் சுட்டனர். நச்சுப் புகையால் மதிமயங்கி நின்ற பாஞ்சை வீரர் குண்டுகளுக்கு இரையாயினர். உட்புறம் அறுநூறு பாஞ்சை வீரர் மாண்டனர். ஆயிரவர் வெளியேறியதும் மாண்டனர். எஞ்சி யவரைப் பகைவர் துரத்திப் போரிட்டனர். அன்றைய போரில் இறந்தவர் கணக்கிலடங்கார். எங்கும் பிணக் குவியலும், புகை நாற் றமுமாகவே இருந்தன.

தவத்துக் கொருவர் கல்விக் கிருவர்.

பாஞ்சை மகளிர் வீரம்

ஒரு வீர மங்கை வீதியில் ஒரு வெள்ளையன் செல்வதைக் கண்டு குறிபார்த்து அவன்மீது ஒரு வேலை எறிந்தாள். அவன் உடனே வீழ்ந்து இறந்தான். அம்மங்கையும் ஒரு ஈட்டியால் தன்னைத்தானே குத்திக் கொண்டு மடிந்தாள். பகைவர் நகருக்குள் புகுந்தனர் என்றறிந்த மகளிர் தற்கொலை செய்துகொண்டனர்.

வெற்றி கொண்ட வெள்ளையர் படைத் தலைவர்கள் பாஞ்சை வீரரின் ஆற்றலை மனமாரப் பாராட்டினர். நேர்மையான வழியில் அவர்களை வெள்ளையர் வெற்றி கொள்ளவில்லை. வஞ்சனையாலும், நச்சுப் புகையின் உதவியாலுமே வெள்ளையர் வெற்றி பெற்றனர்.

ஊமைத்துரை தப்பிச் செல்லுதலும், அவருக்கு நேர்ந்த விபத்தும்

பாஞ்சை வீரர் பலர் இறந்தனரேனும், தம்பி துரைச்சிங்கத்துடனும் எஞ்சிய படை வீரரோடும் கோட்டையின் கிழக்கு வாயில் வழியே ஊமைத்துரை வெளியேறினார். கோட்டையைச் சுற்றியிருந்த கும்பினிப் படைகளின் காவலை மீறி அவர் மாயமாக மறைந்துவிட்டார். அவரைப் பின்தொடர்ந்து எட்டையபுரத்துப் படையும், கும்பினிப் படையும் சென்று கோட்டைக்கு மூன்று மைலில் இருந்த ஒரு சிற்றூரில் பாஞ்சை வீரருடன் போரிட்டனர். இருள் சூழ்ந்திருந்தமையால் கும்பினிப் படைகள் மீண்டன.

இப்போரில் ஊமைத்துரையின் உடல் முழுதும் காயங்கள் ஏற்பட்டு உணர்விழந்து பிணக் குவியலுக்கிடையே விழுந்தார். அந்தோ! தாய் நாட்டை அடிமைத் தளையிலிருந்து மீட்கப் போராடிய வீரர் தரையிலே குற்றுயிரோடு கவனிப்பாரற்றுக் கிடந்தார்.

பெண்கள் புரிந்த உதவி

சில பெண்கள் தம் கணவன்மார்களையும், பிள்ளைகளையும் தேடிப் படுகளத்தையடைந்தனர். கோரக் காட்சியைக் கண்டு நடுங்காமல் பிணமாகக் கிடந்தவரின் மார்பிலே இருந்த காயங்களை நோக்கிக் களித்தனர். உயிரிழந்தோரை எடுத்து ஈமக் கடன்களைப் புரியவும், காயமுற்றோர்க்குத் தக்க சிகிச்சை செய்யவும் ஆவல் கொண்டனர்.

அப்பெண்களோடு ஒரு கிழவியும் வந்திருந்தாள். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் தன் வீர மகனைக் கண்டு அவனை மார்புடன் அணைத்துக் கொண்டாள். அவன் மயக்கம் தெளிந்து அன்னையை நோக்கி, "அம்மா! என்னைத் தவிர உனக்கு வேறு திக்கில்லையென்பதை நான் அறிவேன். தந்தையைப் பின்பற்றிப் போருக்கு வந்து பகைவர் பலரைக் கொன்று நானும் சாய்ந்தேன். நான் இன்னும் சிறிது நேரத்தில் இறந்து விடுவேன். பாஞ்சாலங்குறிச்சியைப் பகைவரிடமிருந்து மீட்பதே என் நோக்கம். தமிழன்னையைக் கும்பினியாரிடமிருந்து மீட்க வல்லவர் அதோ படுகாயமடைந்து வீழ்ந்திருக்கிறார்.

அவரைக் காப்பாற்று. என்னைப்பற்றி கவலை கொள்ளாதே! நாட்டின் நலத்தைக் கவனி அம்மா. அங்கே கிடக்கும் நம் சாமியைக் (ஊமைத்துரையை) காப்பாற்று" என்று சொல்லி முடித்ததும் அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

ஊமைத்துரை சிகிச்சை பெறுதல்

தாயார் அழுது புரண்டாள். விரைவில் தெளிந்து ஊமைத்துரையின் உடலைத் தேடிக் கண்டுபிடித்து மற்ற பெண்கள் துணையுடன் தூக்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றாள். காயங்களைக் கழுவிப் பல பச்சிலைகளையும் மருந்துகளையும் வைத்துக் கட்டினாள். உபசாரங்கள பல புரிந்து மருத்துவம் செய்தாள். இந்நிகழ்ச்சியைப் பகைவர் அறியார்.

"வெள்ளையரை எள்ளி நகையாடிய ஊமைத்துரை தப்பி விட்டானே" என்று வெள்ளையர் தளபதி மனம் நொந்தான். "ஊமைத்துரை எங்கிருந்தாலும் பிடித்து வர வேண்டும்" என்று கட்டளையிட்டான். எட்டயபுரத்து வீரர் பிணங்களைத் தேடிப் பார்த்து ஊமைத்துரை காணுமையால் அங்கிருந்து அடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்று, ஒரு மைல் தூரத்திலிருந்த கக்கரம்பட்டி என்னும் ஊரையடைந்தனர்.

முத்தம்மாளின் சூழ்ச்சியும் எட்டையபுரத்தார் ஓட்டமும்

கக்கரம்பட்டியில் முத்தம்மாள் வீட்டில்தான் ஊமைத்துரை மறைவாக மருத்துவம் பெற்று வந்தார். எட்டப்பரின் வீரர் அவ்வூருக்குள் புகுந்ததையறிந்த அக்கிழவி உடனே பசு மஞ்சளைப் பெருமளவில் அரைத்து, ஊமைத்துரையின் உடல் முழுதும் பூசினாள். ஒரு வெள்ளைத் துணியால் அவரது உடலை நன்கு மூடினாள். சில வேப்பிலைக் கொத்துக்களைத் தலைவாயிலில் செருகி வைத்தாள். கட்டிலிலும் சில கொத்துக்களைப் பொதிந்து வைத்தாள். அயலேயிருந்த சில பெண்களைச் சேர்த்துக்கொண்டு மஞ்சத்தைச் சுற்றி உட்கார்ந்து, கண்ணீர் வடிய ஒப்பாரி வைத்து அழுதாள்.

இந்த வீட்டையடைந்த எட்டயபுர வீரர் 'என்ன அழுகை?' என்று கேட்டனர். வெளியே இருந்த சில பெண்கள் "இந்த வீட்டு அம்மாளுக்குப் பிறந்த ஒரே மகன் ஒரு திங்கள் வைசூரியால் வருந்தி இன்று இறந்து போனான்" என்றார்கள். வைசூரி என்ற சொல்லைக் கேட்ட அவ்வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். அவ்வூராரும் அரசர் பிழைத்தார் என்று ஆனந்தம் கொண்டனர்.

11. மருது சகோதரர்

ஊமைத்துரை மறைவிடம்விட்டு வெளியேறுதல்

முத்தம்மாளின் சூழ்ச்சியின் பயனாக ஊமைத்துரை உயிர் பிழைத்தார். உடலிலிருந்த படுகாயங்கள் சில நாட்களில் ஆறிவிட்டன. அம்

மூதாட்டியின் பணிவிடைகளினால் நாளடைவில் உடல் உரம் பெற்றார். தான் பெற்று வளர்த்த மகனைப் போர்க் களத்திலேயே இறக்குமாறு விட்டுவிட்டு, அந்தத் துயரத்தைப் பொறுத்துக்கொண்டு தம்மை எடுத்து வந்து, கொலைகாரரிடமிருந்து காப்பாற்றி ஆதரவளித்த அன்னையை நோக்கி, "அம்மா! நீரே என்னை ஈன்ற தாயார், நான் பிழைத்து மீண்டும் வந்தால் உமக்கு மகனாக இருந்து வேண்டிய பணிகளைச் செய்வேன்" என்று பலவாறு கூறிக் கரங்களைக் குவித்து வேண்டிக்கொண்டார். அம்மூதாட்டியும் பிரியா விடையளித்தாள்.

அன்றிரவே துணைவரின்றி அநாதைபோல் நடந்து அதிகாலையில் ஒரு வேளாளருடைய ஆதரவில் தங்கினார். அவர், தம்பிதுரைச் சிங்கத்தை அழைத்துவந்து முன்னவரிடம் சேர்த்தார். தம்பியைக் கண்ட அண்ணல் பெரு மகிழ்ச்சி அடைந்தார்.

ஊமைத்துரை கமுதிக்கோட்டையில் குடியேறி மீண்டும் படை திரட்டுதல்

பாஞ்சையதிபர் வேளாளரிடம் விடை பெற்றுக்கொண்டு தம்பியும் உறவினரும் உடன்வர இரவோடிரவாக வெளியேறினார். பின் கமுதிக்கோட்டையை உறைவிடமாக அமைத்துக்கொண்டார். அது ஒரு சிறந்த அரணாக அமைந்தது. மறவர் அவரை உவந்து உபசரித்தனர். எஞ்சிய பாஞ்சை வீரர் அங்கே வந்து குழுமினர். அவர்கள் வெள்ளையராட்சியிலிருந்த பாளையங்களிலிருந்து ஒரு பெரும் படையைத் திரட்டினர். ஒரு மாத காலத்திற்குள் ஏறக்குறைய இருபதினாயிரம் போர் வீரர் திரண்டனர்.

சிவகங்கை மருது சகோதரர்

அந்நாளில் சிவகங்கையை வெள்ளை மருதுசேர்வை என்பவர் ஆண்டு வந்தார். அவர் உல்லாசப் பிரியராதலால் அவருக்கு இளையவரான சின்னமருது என்பவர் ஆட்சி நடத்தினார். இவர் சிறந்த போர் வீரர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். குடிமக்கள் இவரிடம் பேரன்பு கொண்டிருந்தனர்; கவலையற்று வாழ்ந்தனர். இவர் பல தான தருமங்களைச் செய்தார், பல கோயில்களை அமைத்துள்ளார். இவர் நாவசைந்தால் நாடசையும். எனினும் எளிய வாழ்க்கையே நடத்தி வந்தார். செல்வச் செருக்கும் ஆடம்பரமுமில்லாதவர். கற்றோரைப் போற்றி, வறியவர்க்கு வழங்கிய வள்ளலாவார்.

சின்னமருது கமுதியிலிருந்த ஊமைத்துரையைக் கண்டு உள்ளம் உருகித் தமது இருப்பிடமாகிய சிறுவயலுக்கு அழைத்துச் சென்று, உபசாரங்கள் பல புரிந்தார். இருவரும் நட்புரிமை பூண்டு, மேலே ஆற்றவேண்டிய செயல்களைத் திட்டம் செய்துகொண்டனர்.

சின்னமருது கருத்து

மருது சகோதரர்க்குக் கும்பினியாரிடம் மனத் தாங்கல் இருந்தது. பெரிய மருது சேர்வைக்கு அவர் மனைவி வேலு நாச்சியாரிடமிருந்து

ஜமீன் உரிமை கிடைத்தது. கும்பினியார் அது செல்லத்தக்கதல்ல என்று கூறிவிட்டனர். அங்கிலேயில் ஊமைத்துரையுடன் சேர்ந்து போரிட்டால் தமக்கும் நாட்டுக்கும் நலம் உண்டாகக் கூடும் என்று கருதிய சின்னமருது, அவருக்குத் துணை செய்ய முனைந்தார்.

கும்பினிப்படை சிறுவயலையடைதலும் குடிமக்களின் நாச வேலையும்

ஊமைத்துரை மருது சகோதரருடன் கூடிப் படை திரட்டுகிறார் என்பதையறிந்த வெள்ளையர் மீண்டும் ஒரு படையைத் திரட்டிக் கொண்டு ஆக்னியூவின் தலைமையில் சிறுவயலை நோக்கி நடந்தனர். அப்படைகள் சிறுவயலைச் சூழ்ந்து நின்றன. இதனை முன்னரே யறிந்த மன்னரிருவரும் அங்கே போதிய அரண்களில்லாமையால் அதனை விடுத்து வீரருடன் அருகிருந்த காட்டில் மறைந்துகொண்டனர். சிறுவயல் குடிமக்கள் தத்தம் வீடுகளுக்குத் தீ வைத்துவிட்டு, ஊரைவிட்டு வெளியேறினர். தீயணைந்தபின் உட்புகுந்து அரண்மனையைக் கைப்பற்றிக்கொண்டனர்.

சின்னாட்கள் வரை மன்னர் சென்ற இடம் வெள்ளையர்க்குத் தெரியவில்லை. அறிந்தபின் அக்காட்டை வளைத்துக்கொண்டனர். முதலில் இராமநாதபுரத்தைக் கைப்பற்றிப் பின்பு கும்பினியாரை எதிர்க்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்த ஊமைத்துரைக்கு அவ்வாறு நடவாமற் போனது ஏமாற்றத்தையளித்தது. அவரது படைகள் சிதறியிருந்தன. அவருடன் முன்னூறு படை வீரரே இருந்தனர் எனினும் அவர் உறுதியுடன் எதிர்த்துப் போராட முடிவு செய்தார்.

12. இறுதிப் போர்

ஊமைத்துரையின் போர்க் கருவியும் கும்பினிப் படை ஓட்டமும்

ஊமைத்துரை சிறந்த போர் வீரர். வாட் போரிலும், சிலம்பப் போரிலும் இணையில்லாதவர். அவரிடம் அற்புதமான ஒரு சுருள் வாள் இருந்தது; அதை விரித்தால் இருபத்துநான்கு முழம் நீளும்; இரு பக்கங்களிலும் கூர்மையானது; ஒரே சுற்றில் பலரை வீழ்த்தும் வன்மை வாய்ந்தது. அந்த வாட் போரில் அவருக்கு இணை அவரே. பாஞ்சைப் போரில் அவ்வாளைப் பயன்படுத்த வாய்ப்புக் கிட்டவில்லை.

கும்பினிப் படைஞர் புதர்களையகற்றி வழிகளையுண்டாக்கி முன்னேறிச் சென்றனர். ஊமைத்துரையைக் கண்டு அவரை வளைத்துக் கொண்டு குண்டுமாரி பொழிந்தனர். அவர் குண்டு வீச்சுக்கு அஞ்சாமல் பகைவரிடையே பாய்ந்து தமது வாளைச் சுழற்றினார். ஒரே வீச்சில் எழுவர் சிரங்கள் அறுந்து வீழ்ந்தன. அக்காட்சியைக் கண்ட பகைவர் பறந்தனர்.

ஊமைத்துரையின் வீரச் செயலை அருகிருந்து பார்த்த மருது சேர்வை அதிசயித்தார். அக்காட்டிலேயே இருந்தால் மறுபடியும்

துன்பம் நேரும் என்று எண்ணி இருவரும் துணைவருடன் இருபது மைல்களுக்கு அப்பாலிருந்த மற்றொரு காட்டில் மறைந்து வாழ்ந்தனர்.

சிறுவயலிலிருந்து காளையார் கோயில் வரை அவர்களிலிருந்த கானகம் பரவியிருந்தது. வெள்ளையர் அக்காட்டை வெட்டி வெட்டி வெளியாக்கினர். அதனையறிந்த ஊமைத்துரை, அக்கானகத்தை விடுத்து, தம் துணைவருடன் அயலே இருந்த வேறொரு காட்டை யடைந்தார்.

13. தியாகியின் மறைவு

ஊமைத்துரை மறைவிடத்தை விட்டு வெளியேறுதல்

ஊமைத்துரை மறைந்திருந்த இடத்தை அறிந்துகொண்டு, கும்பினியார் பெரும் படையுடன் அக்காட்டை வளைத்துக்கொண்டனர். வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் உள்ளே செல்லாதவாறு காவல் காத்து நின்றனர். அந்நிலையில் பட்டினியால் பரிதவிக்கும் தம்மவரையும், மருதுவையும் அழைத்து, "என்னால் நீங்கள் பல துன்பங்களை யடைந்தீர்கள். உமது ஜமீனும் என்னால்தான் பறி போயிற்று. இனியும் நாம் இங்கிருப்பது கேடு பயக்கும். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பேடிகள் வாழும் இந்நாட்டில் வாழ்வதைவிடச் சாவதே மேல். எனக்கு விடை கொடுங்கள்" என்று ஊமைத்துரை சொல்லிப் பிரியா விடை பெற்றுப் பிரிந்தார். மன்னரும், துரைச்சிங்கமும் ஒரு நாளிரவு வெளியேறினர்.

மருது சகோதரர்களின் கோர முடிவு

பிறகு கும்பினிப்படை சின்னமருது முதலிய அறுபத்து நால்வரைக் கைது செய்தது. அவர்களில் ஊமைத்துரையும் இருந்ததாகக் கருதினர். அனைவரையும் ஒரு வார காலம் சிறையிலடைத்துத் தூக்குத் தண்டனை விதித்தனர். ஆக்னியூவின் ஆணையின்படி சின்னமருது சேர்வை ஒரு பொதுவிடத்தில் கோரமாகத் தூக்கிலிடப்பட்டார்.

பெரிய மருதுசேர்வையும் கும்பினிப் படையால் துரத்தப்பட்டார். பிறகு அவரது தொடையைத் துப்பாக்கியால் சுட்டனர். அதையும் பொருட்படுத்தாமல் அவர் நடந்துசென்று சிவகங்கையை அடைந்தார். அங்கே கர்னல் ஆக்னியூவின் முன்னிலையில் கும்பினியாரை வன்மையாகக் கண்டித்தார். அவருக்கும் தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது.

கும்பினித் தலைவரின் கலக்கம்

மருதுவைவிட்டு நீங்கிய ஊமைத்துரை தன் தம்பியுடன் திருமயம் என்னும் ஊரையடைந்து மறைந்து நின்று படை திரட்டினார். அப்போது பகைவர் அஞ்சக்கூடிய செயலொன்றைச் செய்தார். சில இளநீர்க் காய்களைக் கொணர்ந்து, வெள்ளையர் சிலரின் தலைகளைத் துணித்துக் காய்களினிடையே, அச்சிரங்களைப் பொதிந்து வைத்துப் பொதிகளாகக் கட்டிச் "சிமைத்துரைக்கு ஊமைத்துரை அனுப்பிய வரிப்

பணம்" என்ற ஓலைச் சீட்டுக்களை அப்பொதிகளில் வைத்து, எருதுகளின்மேல் ஏற்றி அனுப்பினர். திருச்சியில் கும்பினித்தலைவன் மாளி கையில் அவை இறக்கப்பட்டன. அவற்றைக்கொண்டு வந்தவர்கள் மறைந்தனர். வெள்ளைத்துரை இளநீர்க் காய்களைக் கண்டு மகிழ்ந்து, எடுத்துப் பார்த்துத் துடிதுடித்து நின்றான். ஒற்றர்களை அனுப்பி அவர் இருந்த இடத்தையறிந்தான்.

ஊமைத்துரையின் இறுதிப் போர்

கும்பினிப் படைகள் எல்லாம் திரண்டு திருமயம் கோட்டையை முற்றுகையிட்டன. அப்பொழுது நள்ளிரவு. அண்ணனும் தம்பியும் தனித்து இருந்தனர். ஊமைத்துரைக்கு உடல் நலிந்திருந்தது. எனினும் உள்ளம் நலியவில்லை. பகைவரைக் கண்டதும் பொங்கியெழுந்தார். சுருள்வாளைக் கையில் எடுத்துக்கொண்டு தம்பியைப் பின்தொடரக் கட்டளையிட்டார். வடக்கு வாயில் வழியே வெளியே பாய்ந்து எதிர்த்த பகைவரைச் சுருள் வாளுக்கு இரையாக்கினர். அச்சமயம் துரைச் சிங்கம் கால் இடறிக் கீழே விழுந்தார். அவரைப் பகைவர் பிடித்துக் கொண்டனர்.

துரைச்சிங்கம் தூக்கிலிடப்படுதல்

கும்பினிப் படைத் தலைவர், தம்பியைக் கழுதிக்கோட்டைச் சிறையில் அடைத்தனர். சில நாட்களுக்குப் பின் துரைச்சிங்கத்தையும் அவர் உறவினரையும் வெள்ளையர் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு சென்றனர். அங்கே அவர்கள் பீரங்கி மேட்டில் தூக்கிலிடப்பட்டனர். கலங்காத நெஞ்சத்துடன் தூக்கு மேடையில் ஏறி நின்ற துரைச்சிங்கம் தம் கழுத்தில் தாமே கயிற்றை மாட்டிக்கொண்டார். வெள்ளையர் இக்காட்சியைக் கண்டு களித்தனர். இறக்கும்போது அவருக்கு வயது இருபத்தொன்று. அவர் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். சகோதர வாஞ்சை மிக்கவர். வெள்ளையரே அவரைச் "சிறிதும் தன்னலம் கருதா வீரர்" என்று பாராட்டியுள்ளனர்.

ஊமைத்துரை துறவறம் பூணுதல்

திருமயத்திலிருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை திண்டுக்கல் மலைக்குகையில் மறைந்து வாழ்ந்தார். தம்பிக்கு என்ன நேர்ந்ததோ என்று கவலை கொண்டார். பிறகு தம்பி தூக்கிலிடப்பட்ட செய்தியறிந்து அவர் கலங்காத உள்ளமும் கலங்கியது. துயரைத் தாங்க முடியாமல் துடிதுடித்தார். பின் உயிரையும் உலகையும் வெறுத்துக் காசியையடைந்து சில நாட்கள் தங்கி இமயம் சார்ந்து துறவியானர். அப்போது அவருக்கு வயது முப்பது.

சரித்திர வாயிலாக அறிவது

துறவு பூண்டு இமயம சார்ந்தார் என்பதே நாட்டு வரலாறு. சரித்திரச் சான்றுகள் அவரது முடிவைப்பற்றி வேறுவிதமாகக் கூறுகின்

றன. கும்பினியார் ஊமைத்துரை, துரைச்சிங்கம் இருவரையும் பிடித்துச் சில நாட்கள் சிறையில் வைத்துப் பின் பாஞ்சைப் பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டனர் என்று சரித்திரம் கூறுகிறது. பிறந்த பொன்னாட்டை அந்நியர் பிடியிலிருந்து விடுவிக்கச் செய்த அரும்பணியில் ஈடுபட்ட அவ்வீரருக்கு நேர்ந்த முடிவு விதியின் கொடுமை என்றே கூறுதல் தகும்.

கும்பினியாரின் வஞ்சம்

ஊமைத்துரையின் மனைவி அப்போது கரு தரித்திருந்தாள். மூன்று சிறுவருடன் அவள் செக்காரக் குடியென்னும் ஊரில் கும்பினியார் அறியாதவாறு வாழ்ந்து வந்தாள். அரண்மனை ஊழியர் பலர் அவ்வம்மையாரையும் குழந்தைகளையும் கண்ணேபோல் காத்து வந்தனர். அரண்மனைப் பசு ஒன்றை ஒரு மாது ஊமைத்துரையின் மனைவியிடம் ஒப்படைத்தாள். அவள் தான் அரண்மனையைச் சார்ந்தவளல்லள் என்று கூறி அம்மாதை விரட்டினள். அவளது கூக்குரலைக் கேட்ட கும்பினி ஊழியர் உளவறிந்து அந்த அம்மையைச் சிறைப்படுத்தினார்கள்.

வீர வழிபாடு

இன்று நாம் நாட்டு விடுதலை பெற்றுள்ளோம். இதற்குத் தமிழ்நாட்டில் அடிகோலியவர் இருவர். அவர்களே கட்டபொம்மனும் ஊமைத்துரையும் ஆவர். அவர்களை நாம் என்றும் மறக்கமாட்டோம். தமிழன் நன்றி மறந்தவனல்லன்.

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

வாழ்க ஊமைத்துரையின் புகழ்! வாழ்க கட்டபொம்மனின் புகழ்!

ஊமைத்துரை

நீதிகள்

1. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."—(குறள்)

(பொருள்—மக்களாய்ப் பிறந்தால் புகழுக்குக் காரணமான குணங்களோடு பிறத்தல் வேண்டும். அக்குணமில்லாதவர் பிறப்பதைவிட பிறவாமை நன்று).

ஊமைத்துரை இறந்தும் புகழுடம்புடன் விளங்குகிறார்.

2. "கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றலது வே படை."—(குறள்)

(பொருள்—எமனே வந்து எதிர் நின்றாலும் அஞ்சாது எதிர்த்து நிற்கும் மனவலி படைத்தவரே படை வீரர் ஆவார்.)

பாஞ்சையர் 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என அஞ்சாது போர் புரிந்தனர்.

3. "புரந்தார் கண்ணீர் மல்கச்சாகிற் பின்சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து."—(குறள்)

(பொருள்—தன்னைப் பாதுகாத்தவர் கண்ணில் நீர் வருமாறு, ஒருவன் இறக்க நேரின், அம்மரணம் வேண்டிப் பெறத்தக்கதாகும்.)

'சாமியைக் காப்பாற்று' என்று தாயிடம் கூறி ஒரு வீரன் உயிர் நீத்தான்.

4. "பேராண்மை என்பதறு கண் ஒன்றுஉற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு."—(குறள்)

(பொருள்—பகைவரிடம் தாட்சணியம் காட்டாமல் வீரச் செயல் புரிவது ஆண் தன்மை; பகைவர்க்குத் துன்பம் வரின், அதைத் தீர்த்துக்கொள்ள உதவுவது அந்த ஆண்மைக்குக் கூர்மையாம்.)

பகைவர்க்குத் துன்பம் நேர்ந்தபோது அது தீர்க்கப் பலமுறை ஊமைத்துரை கருணை காட்டியுள்ளார்.

5. ஊமைத்துரை நாட்டுப் பற்று உடையவராய் சுதந்திரப் போரில் உயிர் நீத்தார். அதன் பயனைச் சுதந்திர மக்களாய் வாழ்கின்ற நாம் அவர்களைப் போற்றுதலும், பெற்ற சுதந்திரத்தைக் காத்தலையும், கடமையாகக் கொள்ள வேண்டும்.

பயிற்சிக்கான கட்டுரைகள்

(ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு பக்கங்கள் எழுதிப் பழகுக)

1. கரிகால் வளவன்

1. வளவன் பிறந்தான்.
* 2. கரிகாலன்.
* 3. ஏற்றிய விளக்கு.
* 4. வெண்ணிப் போர்.
* 5. இமயத்தில் புலி.
6. உறையூரின் தோற்றம்.
* 7. கிழக்கோலம்.
* 8. நாட்டுவளம் பாடிய நங்கை.
* 9. பாட்டும் பரிசும்.
10. இழந்துபெற்ற காதலன்.
11. கரிகாலன் சோழ நாட்டுக்குச் செய்த நன்மைகள்.
12. பொருநர் ஆற்றுப்படை.

2. உதயணன்

1.* பிறப்பும் வளர்ப்பும்.
2. உதயணன் அரியணை ஏறுதல்.
* 3. உதயணன் சிறைப்படுதல்.
* 4. யூகி உதயணன் இருக்கும் இடம் அறிதல்.
* 5. உதயணனைச் சிறைமீட்டல்.
* 6. உதயணன் வாசவதத்தையை உடன்கொண்டு சேரல்,
7. இடைவழிப் போர்.
8. உதயணன் வாசவதத்தை திருமணம்.
* 9. வாசவதத்தையைப் பிரித்தல்.
*10. பதுமை மணம்.
11. பிரிந்தவர் கூடுதல்.
*12. யூகியின் சூழ்ச்சித் திறன்.
13. உதயணன் வீரம்.

---

* இக்குறியிட்டன தேர்வுக்கு இன்றியமையாதனவாம்.

3. கயிலைமால்வரை

1. இமயமும் கயிலையும்.
2. வழியும், செலவும் (பிரயாணமும்).
3. மலைவழி.
4. காளி கங்கை.
* 5. கயிலாய வாயில்.
* 6. திபேத்தும், திபேத்தியரும்.
* 7. திபேத்தில் பிரயாணம்.
* 8. கயிலைமால்வரை.
9. முப்பெருந் தடாகங்கள்.
10. செலவின் (யாத்திரையின்) பயன்.
*11. கயிலைக் காட்சி.
*12. மானசஸரோவரம்.

4. ஊமைத்துரை

1. தோற்றமும், இளமையும்.
* 2. நாட்டுப்பற்றுப் பெற்ற பரிசு.
* 3. சிறையில் தவம் (ஊமைத்துரை சிறை மீட்சி).
4. அரசுரிமை ஏற்றல்.
5. மீண்டும் பகை.
6. தூத்துக்குடியில் பாஞ்சை வீரர்.
* 7. கருணைக் கடல்.
* 8. படுகளம்.
9. பாஞ்சையர் வீரம்.
*10. சாமியைக் காப்பாற்று.
11. மருது சகோதரர்.
12. இறுதிப் போர்.
*13. தியாகியின் மறைவு.
*14. ஊமைத்துரையின் குணநலன்கள்.

---

* இக்குறியிட்டன தேர்வுக்கு இன்றியமையாதனவாம்.

மாணவர்கள், துணைப்பாடக் கட்டுரை எழுதுவதற்கு உரிய குறிப்புக்கள்

---

1. ஒவ்வொரு துணைப்பாட நூலிலும் மூன்று வினாக்கள் கொடுத்து ஒன்றை இரண்டு பக்கங்களில் எழுதுமாறு கேட்பர். எதை நன்கு எழுத முடியும் என்பதை நன்கு கவனித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். எழுத எடுத்துக்கொள்ளும் தலைப்பை மறவாமல் முதலில் குறிப்பிட வேண்டும். சிலர் தலைப்பை எழுதாமல் விடுவதால், எதை எழுதுகிறார்கள் என்பதை, முழுவதும் படித்தபின்தான் தேர்வாளர் அறிய முடியும். கேள்வியின் உட்பிரிவு எண்ணைக் குறித்தால் மட்டும் போதாது.

2. எடுத்துக்கொண்ட கட்டுரையின் கருத்துக்களுக்கு ஏற்றபடி பல உள் தலைப்புக்கள் குறித்து, அவற்றை ஒவ்வொரு பத்தியாக எழுதுதல் வேண்டும். பத்தி பிரிக்காமல் ஒரே மொத்தமாக எழுதுதல் கூடாது. முன்னுரை முடிவுரைகளும் அமைத்தெழுதுதல் வேண்டும். குறிப்பிட்ட 2 பக்க அளவை மீறக் கூடாது. மீறி எழுதுவதற்கு மதிப்பெண் இல்லை.

3. எழுத்துத் தெளிவாயிருக்க வேண்டும். நல்ல கையெழுத்துக்கும், நடை (Style) க்கும், பழமொழி, மரபு சொற்றொடர்கட்கும் (Idiom) 4 பொருளுக்கு (Subject Matter) 9 நிறுத்தப்புள்ளி, பத்தி பிரிவுகட்கு 2 வீதம் மதிப்பெண் பகிர்ந்தளிக்கப்படும். கருத்துக்களைக் கணக்கிட்டே மதிப்பெண் அளிக்கப்படுவதால், நன்கு சிந்தித்து முக்கியமான கருத்துக்களைத் தொடர்ச்சியாக எழுதல் வேண்டும். தலைப்புக்குப் பொருத்தமில்லாதவற்றை எழுதிப் பக்கம் நிரப்பக்கூடாது.

4. எழுத்துப் பிழை, சந்திப் பிழை, இலக்கணப் பிழைகட்கு கால் ($\frac{1}{4}$) மதிப்பெண் வீதம் குறைக்கப்படும். மாணவர் இதை மனத்திற் கொண்டு, இப்பிழைகள் நேராவண்ணம் கவனித்து எழுத வேண்டும். எழுதியதை மறுபடி கட்டாயம் படித்துப் பார்த்துப் பிழைத் திருத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு திருத்தின் பிழை இராது. மொழி பெயர்ப்பு வினாவிற்கும் மேற்சொன்ன விதிகள் பொருந்தும். தெரிந்த அளவு மொழி பெயர்த்தெழுதினாலும், எழுதியவரையில் மதிப்பெண் உண்டு. ஒரு வாக்கியம் மொழிபெயர்த்தெழுதினாலும் அதற்குரிய மதிப்பெண் பெற முடியும். சிந்தித்துப் பார்த்துப் பொருள் அறிந்து எழுதுதல் வேண்டும். பல முறை படித்தால் பொருள் விளங்கும்.

மொழிபெயர்ப்பு

மாணவர் தம் தாய் மொழியில் தேர்ச்சியுற, மொழிபெயர்ப்பில் தேர்ச்சி பெறுதல் இன்றியமையாததாம். வேற்று மொழியில் — இன்றைய உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தில் — உள்ள கருத்துக்களைத் தமிழில் பெயர்க்க இயன்றாலன்றி, நம் கலைகள் வளர்ச்சியுறா. உலக நாகரிகத்தின் உயர்ந்த படியில் நாமும் நிற்றல் இயலாதாம்.

மாணவர் தமிழ்ப் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு மொழிபெயர்ப்பைக் கருத்துடன் பயின்று தேர்ச்சி பெறல் வேண்டும். இத்திறமை எளிதில் வாய்க்கக் கூடியதன்று. . ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய தேர்ச்சி பெற்றால் மட்டுமே இத்துறையில் சிறந்து விளங்குதல் கூடும். ஆங்கிலத்தில் புதிய புதிய சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள் முதலியவற்றைக் கற்கும்பொழுதெல்லாம் அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்கள், சொற்றொடர்கள் ஆகியன யாவை என்பதை ஆராய்ந்து, கற்றோர் வாயிலாகக் கேட்டுக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். பல முறை எழுதிப் பழகினாலன்றி மொழிபெயர்ப்பில் புலமை எய்துதல் முடியாதாம். எனவே, கீழ்க்கண்ட குறிப்புக்களை மனத்தில் பதித்து நன்கு பயிற்சி பெற்றால் மிக மிகச் சிறந்து விளங்குதல் கூடும்.

1. மொழிபெயர்க்கவேண்டிய ஆங்கிலப் பகுதியைக் கண்டதும் மொழிபெயர்க்கத் தொடங்குதல் கூடாது. அதனை மும்முறையேனும் படித்துப் பார்த்து, அதில் கூறப்பட்ட செய்தி யாதென மனத்தில் ஆராய வேண்டும். அவசரப்பட்டு ஒரு சொல்லை மற்றொரு சொல்லாக எண்ணி மொழிபெயர்த்தல் கூடாது.

ஆங்கிலத்தில் ஒரு சிறு வேறுபாடே உள்ள பல சொற்கள் உள்ளன. மற்றும் மாணவர் அவசரத்தில் சொற்களை நம்பத்தகாதவாறு திரித்துப் பொருள் கொள்கின்றனர். எனவே ஊன்றிக் கவனித்துப் படிக்க வேண்டும்:

(உ - ம்.) hard - hardy - hardly ; practice - practise ; advice advise ; pocket - packet ; picture - pitcher ; sent - scent ; quite quiet ; whether - weather.

2. ஆங்கிலத்தில் ஒரே சொல்லுக்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு பொருள் வரும். ஆகவே எப்பொருளில் அச்சொல் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆராய்ந்து எழுத வேண்டும்:

(உ - ம்.) He was first in the race: அவன் ஓட்டப் பந்தயத்தில் முதன்மையாக வந்தான்.

தன் நெஞ்சு அறியாத பொய் இல்லை.

The Rajputs belong to a warlike **race:** இராஜபுத்திரர்கள் வீரம் மிக்க இனத்தைச் (வம்சத்தை) சார்ந்தவர்கள்.

The cooly carries the **trunk :** கூலியாள் பெட்டியைத் தூக்கிச் செல்கிறான்.

The elephant drinks water with its **trunk:** யானை தன்னுடைய துதிக்கையால் தண்ணீர் குடிக்கிறது.

3. ஆங்கில வாக்கிய அமைப்புக்கும் தமிழ் வாக்கிய அமைப்புக்கும் மிக்க வேறுபாடு காணப்படுகிறது. இதை மாணவர் ஊன்றிக் கவனித்தாலன்றி அவர் மொழிபெயர்ப்பில் சிறந்து விளங்கமுடியாது. ஆங்கில வாக்கியத்தில் பெரும்பாலும் முதலில் எழுவாயும், அதையடுத்துப் பயனிலையும், அதற்கப்பால் செயப்படுபொருளும் வரும். எழுவாயையும் செயப்படுபொருளையும் விளக்கும் சொற்கள் முன்னும் பின்னும் வழக்கிற்கு ஏற்றவாறு மாறி மாறி வரும். மொழிபெயர்க்கும்பொழுது சொற்களையும் தொடர்களையும் எவ்வரிசையில் மொழிபெயர்க்க வேண்டும் என்று ஆராய்ந்த பின்னரே, ஒவ்வொரு வாக்கியத்தையும் மொழிபெயர்த்தல் வேண்டும். ஆங்கிலத்தில் எச்ச வாக்கியங்கள், அவை அணையும் சொற்களுக்குப் பின்னரே வழங்கப்படும். தமிழிலோ அவற்றை முன்னர் மொழிபெயர்த்தல் அவசியம். இவற்றை ஈண்டு தரப்பட்டுள்ள எளிய பயிற்சிகளில் ஆங்காங்குக் கண்டறிக.

4. ஆங்கிலத்திலுள்ள மரபுத் தொடர்களின் பொருள்களைக் கூர்ந்து அறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு தமிழில் பொருள் தருதல் வேண்டும். அத்தொடர்களில் உள்ள தனித்தனிச் சொற்களுக்குப் பொருள் தரல் தவறாகும். The president **took the chair :** இதற்குத் 'தலைவர் தலைமை தாங்கினார்' என்றே மொழிபெயாக்க வேண்டுமேயன்றி, 'தலைவர் நாற்காலியை எடுத்தார்' என்று கூறுதல் கூடாது.

5. ஆங்கிலப் பகுதியிலுள்ளது போன்றே தொகுதிப் பிரிவுகளும் தலைப்பும் மொழிபெயர்த்தெழுதப் பெறும் தமிழ்ப் பகுதியின்கண்ணும் அமைதல் வேண்டும்.

6. ஆங்கில வாக்கியம் நீண்டதாயிருப்பின் அதனைத் தமிழில் சிறு சிறு வாக்கியங்களாக்கி எழுதலாம். சில சிறு வாக்கியங்களை ஒன்றாக்கியும் எழுதலாம்.

7. ஆங்கிலப் பகுதியில் உள்ள எக்கருத்தையும் விடாமலும், இல்லாத கருத்தைச் சேர்க்காமலும் விடை தருக. மொழிபெயர்ப்புக்கு மதிப்பெண் ஆங்கிலப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்துக்கும் வழங்கப்படுதல் கூடும். ஆதலால் ஒன்றையும் விடாமல் எழுதினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெறக்கூடும்.

தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.

8. பகுதியிலுள்ள அருஞ்சொற்கள், மரபுத் தொடர்கள் ஆகிய வற்றிற்கு தனி மதிப்பெண்கள் தரப்படுமாதலால் அவற்றை முதலி லேயே ஊகித்துப் பென்ஸிலால் குறித்துக்கொண்டு ஏற்ற விடை தருக.

9. கையெழுத்து, பத்திப் பிரிவு, நடை ஆகியவற்றிற்கும் தனி மதிப்பெண் தரப்படுவதால் இவற்றை அசட்டை செய்யலாகாது.

10. கடினமான சொல்லொன்று பகுதியில் காணப்பட்டால் அதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை இடம் நோக்கி ஊகித்து அறிய வேண்டும்.

11. ஆங்கிலத்திலுள்ள சொற்களையும், தொடர்களையும் அப் படியே ஆங்கிலத்திலோ தமிழிலோ எழுதுதல் கூடாது.

12. தேர்வில் எழுத்துப் பிழைகளுக்கும், சந்திப் பிழைகளுக்கும் தக்கவாறு மதிப்பெண்கள் குறைக்கப்படுவதால், மாணவர் தங்கள் விடையில் இவற்றை அறவே நீக்கப் பெரிதும் முயலுதல் வேண்டும்.

13. மொழிபெயர்க்கையில் அவ்வப்போது படித்துப் பார்த்த லும், எழுதி முடித்தபின் முழுவதையும் படித்துப் பார்த்துப் பிழை களைத் திருத்துதலும் சிறந்த பழக்கங்களாம்.

14. மொழி பெயர்த்த பகுதி தமிழிலேயே முதலில் எழுதப்பட் டது போன்று இனிய நடையுடையதாய் இருத்தல் வேண்டும். தமி ழுக்கே சிறப்பான எதுகை மோனை முதலியவற்றை ஏற்றவாறு அமைத்து எழுதினால் விடை மிகவும் சிறப்புடையதாம்.

15. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்தவாறு பயிற்சி பெறு வதில் பேரார்வமும், பொறுப்புணர்ச்சியும், ஊக்கமும் மாணவர்க்கு மிகவும் இன்றியமையாதனவாம்.

குறிப்பு: கீழ்க்கண்ட பயிற்சிகளில் ஆங்கில வாக்கியத்தின் அமைப்புக்கும், தமிழ் வாக்கியத்தின் அமைப்புக்கும் உள்ள வேற் றுமைகளைக் கவனிக்கவும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கள் அமைந்துள்ள முறையை ஆராய்ந்து அறிக. தடித்த எழுத்துக் களில் உள்ள தொடர்களின் மொழிபெயர்ப்பையும், அவை தமிழ் வாக் கியத்தில் வழங்கப்பெற்றுள்ள வகையையும் கூர்ந்து நோக்குக.

பயிற்சி 1

1. The boy, **anxious to learn,** works hard.
2. **But for your timely help,** I would not have succeeded.
3. He speaks **too fast to be understood.**
4. The dog, **seizing the man by his coat,** dragged him out.
5. The Eskimoes make houses **of snow and ice.**

மொழிபெயர்ப்பு

1. கற்பதற்கு ஆர்வமுடைய சிறுவன் வருந்தி உழைக்கிறான்.

2. காலத்தினால் செய்த தங்களுடைய உதவியின்றேல் நான் வெற்றி பெற்றிருக்கமுடியாது.

3. அவன் விளங்காதவாறு மிகவும் விரைவாகப் பேசுகிறான்.

4. அந்த நாய், அம்மனிதனின் மேற்சட்டையைப்பற்றிக் கொண்டு, அவனை வெளியே இழுத்து வந்தது.

5. எஸ்கிமோக்கள் பனிக்கட்டியாலும் உறை பனியாலும் வீடுகளை அமைக்கின்றனர்.

பயிற்சி 2

1. A man dressed in silk, came to my house **yesterday morning** at 7 o'clock.

2. He enjoys reading Scott's novels **all the day.**

3. The electric train from Poona to Bombay runs **at sixty miles an hour**.

4. Many boys and girls learn their lessons **without thinking.**

5. The people here are **quiet, industrious and intelligent.**

மொழிபெயர்ப்பு

1. பட்டாடை தரித்த (அணிந்த) மனிதன் நேற்றுக் காலை 7 மணிக்கு என் வீட்டுக்கு வந்தான்.

2. ஸ்காட் என்பாரின் நவீனங்களை நாள் முழுதும் படிப்பதில் அவன் பெருமகிழ்ச்சி அடைகிறான்.

3. பூனாவிலிருந்து பம்பாய்க்குச் செல்லும் மின்சார ரயில் வண்டி மணிக்கு அறுபது மைல் வேகத்தில் செல்லுகிறது.

4. சிந்தித்துப் பார்க்காமலே சிறுவர் சிறுமியர்களில் பலர் பாடங்களைப் படிக்கின்றனர்.

5. இங்குள்ள மக்கள் அமைதியுள்ளவர்களாயும், உழைப்பாளிகளாயும், அறிவாளிகளாயும் இருக்கின்றனர்.

பயிற்சி 3

1. The rain was **so heavy that I could not go out.**
2. He has written a better essay **than his brother.**
3. **Had I but known that,** I should have acted **otherwise.**
4. I cannot tell you that **because it is a secret.**
5. Take this tonic **lest your health should suffer.**

மொழிபெயர்ப்பு

1. நான் வெளியிற் செல்ல முடியாதபடி மழை அவ்வளவு அதிகமாயிருந்தது.
2. அவன் தன் சகோதரனைவிடச் சிறந்த கட்டுரை எழுதியுள்ளான்.
3. நான் மட்டும் அதனை அறிந்திருந்தால், வேறு வகையாக நடந்துகொண்டிருப்பேன்.
4. அது இரகசியமாதலால் அதனை உன்னிடம் கூற இயலாது.
5. தங்களுடைய ஆரோக்கியம் கெடாதிருக்கும்பொருட்டு இம் மருந்தை உட்கொள்ளுங்கள்.

பயிற்சி 4

1. That he is God-fearing is known to us all.
2. The fact, that **Gopal goes to England for higher studies,** is known to me.
3. Give me the mangoes **which you have bought.**
4. This is the boy **who got the first prize.**
5. **As I was purchasing a ticket** a man took away my purse **from** my pocket.

மொழிபெயர்ப்பு

1. அவன் கடவுட் பக்தியுடையவன் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.
2. கோபாலன் மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்குச் செல்கிறான் என்ற செய்தி எனக்குத் தெரியும்.
3. நீ வாங்கியுள்ள மாம்பழங்களை எனக்குக் கொடு.
4. முதற் பரிசு பெற்ற சிறுவன் இவன்தான்.
5. நான் பிரயாணச் சிட்டை வாங்குகையில் ஒருவன் என் சட்டைப் பையிலிருந்து பணப்பையைத் தூக்கிச் சென்றுவிட்டான்.

தாழ்ந்த இடத்திலே தண்ணீர் தங்கும்.

பயிற்சி 5

1. Many children like the teacher to do all the thinking, to work out the difficult sums, while they write down what the teacher tells them.

2. In the Pacific Ocean there are many islands which were formerly inhabited by savages who used to kill and eat one another.

3. Some said that the noise of the engines would stop the cows from grazing and the hens from laying eggs and that the air would be poisoned by the gases from the engines.

4. If some lesson has to be learned, or some work to be done to-day, do not say, "I will do it tomorrow or the next day, or next week," but set to work at once and finish it, for tomorrow may never come. If we procrastinate we shall surely suffer loss.

மொழிபெயர்ப்பு

1. *இளைஞரில் பலர், சிந்திக்கும் வேலை முழுவதையும் ஆசிரியரே புரியவும், கடினமான கணக்குகளை அவரே செய்யவும் விரும்புகின்றனர்; அவர் சொல்வதை மட்டுமே எழுதுகின்றனர்.*

2. *பஸிபிக் பெருங்கடலில் பல தீவுகள் உள்ளன. அவற்றில் முற்காலத்தில் ஒருவரையொருவர் கொன்று தின்னும் இயல்புடைய நாகரிகம் அற்ற மக்கள் குடியிருந்தனர்.*

3. *ரயில் இயந்திரங்களின் ஒலி பசுக்கள் மேய்வதையும், கோழிகள் முட்டையிடுவதையும் தடுக்கும் என்றும், இயந்திரங்களிலிருந்து வரும் புகையினால் காற்று விஷமுடையதாகும் என்றும் சிலர் கூறினர்.*

4. *ஏதேனும் பாடத்தைக் கற்க வேண்டுமாயினும், ஏதேனும் வேலையை இன்று செய்யவேண்டுமாயினும், "நாளையோ, மறுநாளோ, அடுத்த வாரமோ" என்று கூறாதே; உடனே வேலையைத் தொடங்கி முடித்துவிடு. ஏனெனில் நாளை வராமலே இருக்கக் கூடும். காலதாமதம் செய்தால் நாம் நஷ்டத்தால் வருந்துவது திண்ணம்.*

பயிற்சி 6

(மரபுத் தொடர்கள் : Idioms)

1. **I backed up** my friend's case.
2. My father has **disposed of** his horse for Rs. 500.
3. The doctors have **given him up.**
4. The strikers are not likely to **give in.**

5. He promised to go into the matter.

6. The thief tried to get at me.

7. I cannot **make out** the meaning of this word.

8. While travelling we have **to put up with** many difficulties.

9. In these days many people find it difficult **to make both ends meet.**

10. This is the most **up to-date** book on psychology.

மொழிபெயர்ப்பு

1. என்னுடைய நண்பனின் வழக்குக்கு நான் ஆதரவளித்தேன்.

2. என் தகப்பனார் தம்முடைய குதிரையை ஐந்நூறு ரூபாய்க்கு விற்றுவிட்டார்.

3. அவன் பிழைப்பான் என்ற நம்பிக்கையை மருத்துவர்கள் இழந்துவிட்டனர்.

4. வேலை திருத்தம் செய்வோர் விட்டுக்கொடுப்பதாகத் தோற்றவில்லை.

5. அவர் அவ்விஷயத்தைப் பரிசீலனை செய்வதாய் உறுதி கூறினார்.

6. திருடன் என்னைத் தாக்குவதற்கு முயன்றான்.

7. இச்சொல்லின் பொருளைக் கண்டறிய என்னால் இயலவில்லை.

8. பிரயாணம் செய்கையில் நாம் பல இன்னல்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

9. இக்காலத்தில் மக்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்த முடியாமல் துன்பமடைகின்றனர்.

10. உளநூல் துறைபற்றி அண்மையில் வெளிவந்த நூல், இது.

பயிற்சி 7

1. A bird in the hand is worth two in the bush.
2. No smoke without fire.
3. Look before you leap
4. Birds of the same feather flocks together.
5. Make hay while ths sun shines.

மொழிபெயர்ப்பு

1. நாளை வரும் பலாக்காயினும் இன்று கிடைத்த களாக்காயே சிறந்தது.
2. இல்லாது பிறவாது : அள்ளாது குறையாது.
3. எண்ணித் துணிக கருமம்.
4. இனம் இனத்தோடு சேரும்.
5. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.

பயிற்சி 8

Social service is that service rendered to our less fortunate brethren to improve their lot. It has to be rendered without any selfish motive. Every effort should be taken to better their lives.

Society cannot progress merely by political reform. It has to be thoroughly reformed for wholesome progress. To-day India is very badly in need of social reform. Her old customs, manners and superstitions, which impede her progress, have to be changed in order that she may march forward in the path of progress.

The majority of Indians are afflicted with poverty and distress. They live in rural parts and find it difficult to make both ends meet. A very large proportion of the population of India is illiterate. So they are unable to take an intelligent part in the movements that work for the progress of the country.

மொழிபெயர்ப்பு

நம்மைப்போல் அத்துணைப் பேறு பெறாத நம்முடைய உடன் பிறந்தவர்களின் வாழ்க்கையை உயர்த்துதற்பொருட்டுச் செய்யப்படும் சேவையே சமூகத் தொண்டாகும். அது யாதொரு சுயநலக் கொள்கையுமின்றி ஆற்றப்படல் வேண்டும். அவரது வாழ்க்கையைச் சீர் திருத்துவதில் எல்லா வகைகளிலும் நாம் முயற்சி கொள்ள வேண்டும்.

அரசியல் சீர்திருத்தத்தால் மட்டும் சமூகம் சீர்திருந்தாது. அது சீரிய வகையில் முன்னேற வேண்டுமாயின், முற்றிலும் சீர்திருத்தப்பட வேண்டும். இன்று இந்திய நாட்டுக்குச் சமூகச் சீர்திருத்தம் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. நம் நாட்டின் மிகப் பழைய பழக்க வழக்கங்களும், மூட நம்பிக்கைகளும் நமது முன்னேற்றத்தைப் பெரிதும் தடை புரிந்து வருகின்றன. முன்னேற்றப் பாதையில் நம் நாடு

முடுகிச் செல்வதற்கு இம்மூட நம்பிக்கைகளும், பழங்காலத்திய வழக்கங்களும் மாற்றியமைக்கப்படல் அவசியம்.

இந்தியரில் பெரும்பாலோர் வறுமையாலும், துன்பங்களாலும் அல்லலுறுகின்றனர். அவர்கள் நாட்டுப்புறங்களில் வசிக்கின்றனர். தங்கள் வாழ்க்கையை நடத்தவும் இயலாமல் இருக்கின்றனர். இந்தியாவின் ஜனத்தொகையில் மிகவும் அதிகமான விகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ஆதலால், நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் இயக்கங்களில் அவர்கள் அறிவுடன் பங்கெடுத்துக்கொள்வதற்கு இயலாதவர்களாக உள்ளனர்.

பயிற்சி 9

The exemption from exercise was of course obtained, as my father wrote himself to the Headmaster saying that he wanted me at home after school. But though I was none the worse for having neglected exercise, I am still paying the penalty of another neglect. I do not know whence I got the notion that good handwriting was not a necessary part of education. But I retained it until I saw the beautiful handwriting of young educated men. I was ashamed of myself and repented of my neglect. I saw that bad handwriting should be regarded as a sign of imperfect education. I tried later to improve mine. But it was too late. I could never repair the neglect of my youth. Let every young man and woman be warned of my example and understand that good handwriting is a necessary part of education.

I am now of opinion that children should first be taught the art of drawing before learning how to write. Let the child learn his letters by observation as he does different objects such as flowers, birds etc., and let him learn handwriting only after he has learnt to draw objects. He will then write a beautifully formed hand.

மொழிபெயர்ப்பு

பாடசாலை முடிந்தவுடன் நான் வீட்டிலிருக்குமாறு தாம் விரும்புவதாக என் தந்தையார் தலைமையாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதனால் தேகப்பயிற்சியினின்று விடுதலை யாதொரு தடையுமின்றி எனக்குக் கிடைத்தது. ஆனால் நான் தேகப்பயிற்சியை அசட்டை செய்ததற்காக யாதொரு கேடும் அடையாவிடினும், மற்றொன்றை அசட்டை செய்ததற்காக இன்னும் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறேன். சிறந்த கையெழுத்து கல்விப் பயிற்சியின் இன்றியமையாத பகுதி அன்று என்ற எண்ணம் எங்கிருந்து எனக்கு வந்ததோ என்பதை யான்

அறியேன். ஆனால் இளமையும், கல்வியறிவுமுடைய மக்களுடைய அழகிய கையெழுத்தைக் காணும் வரையில் அக்கருத்தையே நான் கொண்டிருந்தேன். கண்டதும் என்னைக் குறித்து நானே பேரவமானப்பட்டு, அங்ஙனம் அசட்டை செய்தமைக்காக மிகவும் வருந்தினேன்; அழகற்ற கையெழுத்து முற்றுப் பெறாத கல்விப் பயிற்சியின் அறிகுறி என்பதை உணர்ந்தேன். பிற்காலத்தில் எனது கையெழுத்தை சீர்திருத்த முயன்றேன். ஆனால் பல நாட்கள் தாமதித்துவிட்டமையால் முடியவில்லை. என்னுடைய இளமையில் அசட்டை செய்த இதனை என்னால் சீர்திருத்தவே இயலவில்லை. ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும், எனது வாழ்க்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டு, சிறந்த கையெழுதது கல்விப் பயிற்சியின் இன்றியமையாத பகுதி என்பதை உணர்வார்களாக.

இளைஞர்கள் எழுத்துக்களை எழுத கற்குமுன், அவர்களுக்கு முதலில் சித்திரம் வரைதலாகிய கலையைக் கற்பிக்க வேண்டும் என்று தற்பொழுது நான் கருதுகிறேன். மலர்கள், பறவைகள் ஆகிய வெவ்வேறு பொருள்களைக் கூர்ந்து நோக்கி இளைஞன் அறிவதுபோல் எழுத்துக்களையும் அறிவானாக; பொருள்களை வரையக் கற்றுக் கொண்டபின் கையெழுத்தைக் கற்றுக் கொள்வானாக. அங்ஙனம் செய்தால் அவன் மிகவும் அழகாக அமைந்த கையெழுத்தை எழுதுவான்.

பயிற்சி 10

We end today a peroid of ill-fortune and India discovers herself again. The achievement we celebrate today is but a step, an opening of opportunity, to the greater triumphs and achievements that await us.

Freedom and power bring responsibility. The responsibility rests upon this Assembly, a sovereign body respresenting the sovereign people of India. We have suffered much in the past. Nevertheless the past is over and it is the future that beckons to us now.

That future is not one of case and resting but of incessant striving so that we might fulfil the pledges we have so often taken and the one we shall take today. The service of India means the service of the millions who suffer. It means the ending of poverty and ignorance and disease and inequality of opportunity. The ambition of the greatest man of our generation has been to wipe every tear from every eye. That may pe beyond us but so long as there are tears and suffering, so long our work will not be over. May we all join with faith and confidence in building the noble mansion of free India!

திருடனுக்குத் தோன்றும் கள்ளப் புத்தி.

நமது கெட்ட காலம் இன்று முடிகிறது. இந்தியத் தாய் தன் ஆற்றல்களை மீண்டும் உணர்ந்துள்ளாள். இன்று நாம் கொண்டாடும் வெற்றி நமக்கு நேரவிருக்கும் பெருமை வாய்ந்த வெற்றிகளுக்கும் சாதனைகளுக்கும் முதற்படியாகிய வாய்ப்பின் துவக்கமேயாகும்.

சுதந்திரமும், அதிகாரமும் பொறுப்பையே மிகுவிக்கின்றன. அத்தகைய பொறுப்பு, அதிகாரம் வாய்ந்த இந்திய மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய, அதிகாரம் வாய்ந்த தொகுதியாகிய இம்மக்கள் சபையின் கண் உள்ளது. பழங்காலத்தில் நாம் கணக்கற்ற துன்பங்களுக்கு ஆளாயிருக்கிறோம். ஆயினும் அப்பழங்காலம் முடிவடைந்துவிட்டது. தற்போது நம்மை எதிர்காலமே கைகாட்டி அழைக்கின்றது.

அவ்வெதிர்காலம் ஓய்வும் இன்பமும் உடையதன்று: ஆனால் அது நாம் பல முறைகளில் மேற்கொண்ட உறுதிமொழிகளையும், இன்று மேற்கொள்வதையும் நிறைவேற்றுமாறு ஓயா உழைப்பு நிறைந்தது. இந்தியாவுக்குத் தொண்டு புரிவதாவது துன்புறுகின்ற நூறு மிக்கணக்கான மக்களுக்குத் தொண்டு புரிவதேயாகும். வறுமை, அறியாமை, நோய், வாய்ப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிற்கு முடிவு கட்டுவதே அத்தொண்டின் பொருளாம். நம் தலைமுறையில் மிகச் சிறந்த பெரியாரின் குறிக்கோளாவது, ஒவ்வொருவருடைய கண்ணி னின்று ஒவ்வொரு துளி கண்ணீரையும் துடைப்பதேயாகும். அது நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கலாம். ஆனால் நாட்டில் துன்பமும் கண்ணீரும் உள்ளவரையில் நமது பணி முற்றுப் பெற்ற தாகாது, நம்பிக்கையும் மன உறுதியும்கொண்டு, சுதந்திர இந்தியக் கோயிலைக் கட்டுவதில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோமாக.

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்

மாணவர் தம் தாய் மொழியில் உள்ள எளிய சில பகுதிகளை ஆங் கிலத்தில் மொழிபெயர்க்கப் பயிலுதலும் மொழிபெயர்ப்பில் சிறந்த அறிவு பெறத் துணையாகும்.

பயிற்சி

முன்னொரு காலத்தில் வறியவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் போதுமான அளவுமட்டும் சம்பாதித்தான். நாள் முழுவதும் அவன் பாடிக்கொண்டு காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்தான். ஆனால் அயலிலிருந்த பணக்காரர்கள் தங் களுடைய செல்வத்தைப்பற்றியே கவலையுடன் இருந்ததால் பாடுவதே இல்லை. அவர்கள் அவ்வறியவன் பாடுவதைக் கண்டு அதிசயித்தனர். அதனோடு நில்லாமல் அவன் பாட்டுப் பாடுவதால் தங்களைத் தூங்கவும் விடுவதில்லை எனப் புகார் செய்தனர்.

திருடனைப் பிடிக்கத் திருடனே வேண்டும்.

அவர்களில் ஒருவராகிய பெரும் பணக்காரர், 'அவன் அவ்வளவு மகிழ்ச்சியுடன் இருப்பதையும், எப்பொழுதும் பாடிக்கொண்டிருப்பதையும் நான் நிறுத்திவிடுகிறேன்' என்றார். அவ்வறியவன் வீட்டிலில்லாதபொழுது அவனுடைய வீட்டிற்குச் சென்று, அவனுடைய அறையில் பணம் நிறைந்த பையை அவர் எறிந்தார்.

அவ்வறியவன் வீட்டிற்கு வந்தபொழுது முதலில் அவன் பெருங் களிப்புடன் இருந்தான். சிறிது நேரத்தில், அப்பணம் அபகரிக்கப்படும் என்றோ, அதைத் திருடியதாகக் குற்றம் சாற்றப்படுவான் என்றோ அவன் அஞ்சினான். ஆதலால் மகிழ்ச்சியோடு பாடுவதை நிறுத்திவிட்டான்.

சிலநாட் கழித்து, அந்தப் பணக்காரர் அவன் அவ்வளவு இளைத்தும் கவலையுடனும் இருக்கக் காரணம் என்னவென்று வினவினார். அதைச் சொல்ல அவனுக்கு முதற்கண் தைரியம் உண்டாகவில்லை. ஆனால் அந்தப் பணக்காரர் இரகசியம் தமக்குத் தெரியும் என்று கூறியதும், அவன், 'உங்கள் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது நான் கவலையின்றி மகிழ்ச்சியுடன் இருப்பேன்; வழக்கம் போல் பாடிக்கொண்டும் இருப்பேன்' என்றான்.

TRANSLATION

Once there was a poor man who earned just a bare living for himself and his family. All day he sang and passed his time cheerfully while his rich neighbours were anxious about their riches and never sang. They wondered at the poor man's joy and ever complained that with his singing he would not let them sleep.

One of them a very wealthy man said, 'I will stop him being so cheerful and singing all the time.' He went to the poor man's house while he was away and threw a bag of money into his room.

When the poor man came home he was very hapyy at first. Soon, he began to fear that the money might be stolen or that he might be accused of having stolen it. Therefore he ceased to be cheerful and to sing.

After a time the rich man asked him what had made him so thin and sad. At first he did not dare to say, but when the rich man told him that he knew his secret, he cried out, 'Take back your money. Then I shall be happy and free from care and shall sing as I used to.'

தெய்வம் காட்டும்; ஊட்டுமா?

மரபுத் தொடர்கள்

a bosom friend : உயிர் நண்பன்
after all : முடிவில்
a glaring evil : உலகறிந்த தீமை
all in all : முழு அதிகாரங் கொண்ட
a man of fertile genius : சிறந்த அறிவாளி
any how : எப்படியாவது
arm in arm : நெருங்கி, தோளோடு தோள்
at all : சிறிதும்
at one's beck and call : ஒருவர் கருத்துப்படி நடத்தல்
at one's elbow : அண்மையில் இருத்தல்
back up : போற்றுதல், ஆதரித்தல்
bear with : பொறுத்துக் கொள்
bent upon mischief : தீமை செய்ய நினைத்தல்
better off : சீரிய நிலையில் இரு
birds of a feather : ஒரே இனத்தைச் சார்ந்த
breath one's last : மரணம் அடை
bring forth : பிறப்பி, உண்டாக்கு
bring out : எடுத்துக்காட்டு
bring to light : வெளியாக்கு
build castles in the air : ஆகாயக் (மனக்) கோட்டை கட்டு
burst into tears : கண்ணீர் விடு
by all means : எல்லா வகைகளிலும்
by and by : நாளடைவில்
by degrees : படிப்படியாய்
by fits and starts : வேளைக்கொரு விதமாய்
by hook or crook : எவ்விதத்திலேனும்
call at : போய்க் காண்
carry on : தொடர்ந்து செய்
carry out : நிறைவேற்று
chalk out : திட்டம் செய், வரையறு
come to blows : சண்டை செய்
come out in one's true colours : உண்மையான தோற்றத்தை (தன்மையை) வெளிப்படுத்து
do way with : ஒழித்துவிடு
draw a deep breath : பெருமூச்சு விடு
drop out : மறந்துவிடு
earn one's bread : வயிறு வளர்
fair play : நியாயமாய் நடத்தல்
from head to foot : முடிமுதல் அடிவரை
from the bottom of one's heart : மனமார
from the cradle : பிறந்த நாள் முதல்
give ear : செவி சாய்த்துக் கேள்
give out : வெளியிடு

தென்றல் முற்றிப் பெருங்காற்று ஆகும்.

give way : இடங் கொடு
go out of date : வழக்கொழிதல்
go through fire and water : அபாயங்கள் அனைத்தையும் எதிர்த்து நில்
go to the dogs : அழிந்து போதல்
go to the extremes : அளவுக்கு மீறு
have at one's fingers' ends தயாராய் நினைவில் வைத்திரு
in any case : எவ்வாறுயினும்
ins and outs : உண்மைகள்
in the long run : நாளடைவில்
laugh at : பரிகாசம் செய்
lend a hand : உதவி செய்
make both ends meet : வரவுக்குள் வாழ்க்கை நடத்து
make out : தயாரி, கண்டறி
make up one's mind : தீர்மானஞ் செய்
nip in the bud : முளையிலே கிள்ளி எறி
nook and corner : மூலை முடுக்குகள்
of his own accord : தானாகவே
on account of : அதன் காரணமாக
once for all : முடிவாக
one another : ஒருவர்க்கொருவர்
out and out : முற்றிலும்
pay one in his own coin : எட்டிக்குப் போட்டி செய்
presence of mind : சமயத்துக்குத் தக்கவாறு நடத்தல்
read between the lines : மறைந்த உண்மையைக் கண்டு கொள்
render an account : கணக்குக் கொடு
set aside : தள்ளி வை
set out : புறப்படு
take notice : எச்சரிக்கை கொள்
take pains : பிரயாசை கொள்
to amass wealth : திரவியம் சேர்க்க
to be amazed : திகைக்க
to be dispirited : மனந் தளர
to bid adieu : வழி விட்டனுப்ப
to commit to memory : மனப் பாடம் செய்ய
to eye with favour : அருளொடு நோக்க
to fire with zeal : ஊக்கத்தால் எழுச்சி கொள்ள
to gain a firm footing : உறுதியாக நிலைக்க
to go astray : வழி தவறிப் போக
to raise a hue and cry : கூச்சலிட
up-to-date : நவீனமான
well to do : செல்வமுள்ள

தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு.

மாதிரி வினாத்தாள்கள்

தேர்வில் விடையெழுதும் மாணவர்க்குக் குறிப்புகள்

1. வினாத்தாளை வாங்குவதற்கு முன்னரே உங்களுடைய பதிவெண்ணையும், வினாத்தாளின் பெயரையும் விடைத்தாளில் அவற்றுக்குரிய இடங்களில் குறித்தல் வேண்டும். பதிவெண் தெளிவாக எழுதப் படுதல் வேண்டும். உங்கள் பெயரை விடைத்தாளில் **எழுதாதீர்கள்.** விடைத்தாளின் எப்பகுதியிலும் உங்கள் பெயர் காணப்படுதல் கூடாது.

2. எழுத்தில் தெளிவு வேண்டும்.

3. விடைகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

4. தொடக்கத்தில் வினாக்கள் முழுவதையும் படிப்பதில் காலம் போக்குதல் தக்கதன்று. சுருங்கிய காலமே இருப்பதால், விரைந்து விடைகளை எழுதிச் செல்லுதல் வேண்டும்.

5. விடை தெரியாத வினாக்களையும், ஐயமுள்ள வினாக்களையும் விடுத்து, தெரிந்த வினாக்களுக்கு விடைகளை எழுதிச் செல்க.

6. தெரிந்த வினாக்களுக்கு விடைகளை எழுதியபிறகு, ஐயமுள்ள வினாக்களுக்கு விடை எழுதவும். அதன் பின், தெரியாத வினாக்களை ஆராய்ந்து பார்க்கவும். அவற்றுக்கு விடைகள் ஓரளவு தெரிந்தால் எழுதுக.

7. விடைக்கென்று வரிகளின் எல்லை குறிப்பிடப்பட்டிருந்தால், அவ்வெல்லையைத் தாண்டாதீர்கள்

8. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், உங்கட்கு அது பற்றித் தெரிந்தவற்றையெல்லாம் எழுதுதல் வேண்டும் என்று எண்ணுதல் கூடாது. கேட்கப்பட்ட செய்தியையே எழுதுதல் வேண்டும்.

தோழனுவது துலங்கிய கல்வி.

9. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், அவ்வினாவிற்குரிய மதிப்பெண்ணையும் கருத்தில் இருத்திக் கொள்க. எடுத்துக்காட்டாக 1 மதிப்பெண்ணை கொண்ட வினாவிற்கு ஒரு பக்க அளவில் விடையெழுதுதல் கூடாது. அத்தகைய சிறு வினாவிற்கு நெடுநேரம் விடை எழுதுவதும் கூடாது.

10. அதிகமான மதிப்பெண்ணைக் கொண்ட வினாவை நன்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். பிறகே விடை எழுதுக.

11. வினாவின் எண், கிளை எண், உட்கிளை எண் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

12. விடைகளையெல்லாம் எழுதி முடித்தபிறகு அவற்றை ஒரு முறை படித்துப் பார்க்கவும்.

13. விடைகளைப் பார்க்குங்கால், கண்ணிற்படும் பிழைகளைத் திருத்துக.

14. தனிச் சேர்க்கைத் தாள்களை (additional sheets) விடைப புத்தகத்துடன் (answer book) நன்கு இணைத்துக் கட்டுக. ஒவ்வொரு தனிச் சேர்க்கைத் தாளிலும், உங்கள் பதிவெண்ணைக் குறிப்பிடுக.

15. விடை எழுதிய எல்லாத் தாள்களுக்கும் பக்க எண்களைத் தொடர்ச்சியாகக் குறிப்பிடுக.

16. வினாத்தாளுக்கென்று குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன் விடைத்தாளைக் கொடுத்து விடாதீர்கள். விடைகளை எழுதியபின் நேரம் இருந்தால், அவற்றைப் படித்துப் பாருங்கள்; தெரியாத வினாக்களுக்குரிய விடைகளை ஆராய்ந்து பாருங்கள்.

ஆடிமாதம் அவரை போட்டால் கார்த்திகை மாதம் காய்.

முதற் பகுதி

மாதிரி வினாத்தாள் I

FIRST LANGUAGE—PART I—PAPER I—TEXT AND GRAMMAR—TAMIL.

Time—Two hours and a half.

(Maximum marks : 60.)

[குறிப்பு.—(1) கையெழுத்துத் தெளிவாக இருத்தல் வேண்டும்.

(2) விடைகள் தெளிவாகவும், சுருக்கமாகவும், குறிப்பிட்ட அளவினை விஞ்சாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.

(4) II (*a*) (1), (2) ஆகிய வினாக்களுக்குச் செய்யுளிலேயே விடை எழுதுக.]

Marks.

I. (*a*) கீழ்வரும் குறட்பாக்களின் பொழிப்புரை தருக :— 6

(1) உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.

(2) புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(*b*) நின்ற புகழுடையார் மூவர் யாவர் ? 2

(*c*) இளங்கோவடிகள் புகார் நகரை எவ்வாறு புகழ்ந்துள்ளார் ? 2

(*d*) விசுவாமித்திர முனிவன் தசரதனை எவ்வாறு புகழ்தான் ? ஏன் ? (விடையை 20 வரிகட்கு மேற்படாமல் தொகுத்து எழுதுக.) 6

II. (*a*) (1) "மண்டேய்த்த" என்று தொடங்கி, "கோவலனென்பான்மன்னே" என்று முடியும் சிலப்பதிகாரப்பகுதியை அடி பிறழாது எழுதுக. 3

(2) "அற்றைத் திங்கள்" என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளை அடி பிறழாது எழுதுக. 3

ஆடிப்பட்டம் தேடி விதை.

Marks.

(*b*) கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டினுக்கு இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:— 4

(1) "கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான் கடுந்துயரம்."

(2) "நீயிங் கொன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்."

(3) "புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது."

(*c*) சோழ மன்னனது யானையின் கொலைச் செயலை விளக்கி எழுதுக. 2

III. (*a*) கட்டான், போதருவீர், எய்தினன்—இவற்றிற்கு உறுப்பிலக்கணங் கூறுக. 6

(*b*) மேனிலை, கழிவிரக்கம், நீணகர், பொதுவியல் — இத் தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக. 2

(*c*) கீழ்க்கோடிட்டவற்றிற்கு இலக்கணக் குறிப்பு வரைக:— 4

ஆடிக் களிக்கும் மயிலே!

எய்தாப் பழி.

நறுந்தேன்.

தூஉயம் என்பார் தொழில்.

IV. (*a*) முருக வழிபாட்டின் தொன்மையைப் பற்றி திரு. வி. கலியாணசுந்தர முதலியார் கூறியுள்ளவற்றைச் சுருக்கி வரைக. 5

(*b*) பாண்டித்துரைத் தேவர் செய்த தமிழ்த் தொண்டுகளைச் சுருக்கி வரைக. 4

(*c*) சிறு குறிப்பு வரைக:—மகிந்தன், தலைக்கோல், இலியட். 4½

(*d*) 'போலோனியம்' என்பது யாது? அதற்கு அப்பெயர் அமைந்தமைக்குக் காரணம் யாது? 2½

(*e*) நாட்டுப்புற மாணவர்கள் பள்ளியில் உணர்ந்து கோடற்குரிய பொது அறிவுகளுள் மூன்றினைக் குறிப்பிடுக. 4

அகல உழுவதினும் ஆழ உழு.

மாதிரி வினாத்தாள் II

FIRST LANGUAGE—PART I—PAPER I—TEXT AND GRAMMAR—TAMIL.

Time—Two hours and a half.

(Maximum marks: **60**.)

[குறிப்பு:—(1) கையெழுத்துத் தெளிவாக இருத்தல் வேண்டும்.

(2) விடைகள் தெளிவாகவும், சுருக்கமாகவும், குறிப்பிட்ட அளவினை விஞ்சாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.

(4) II (*a*)(1), (2) ஆகிய வினாக்களுக்குச் செய்யுளிலேயே விடை எழுதுக.]

Marks.

I. (*a*) கீழ்வருவனவற்றின் பொழிப்புரை தருக:—

(1) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து.

(2) கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன் றுற்றார்முற் றோன்றா வுறுமுதல்.

(*b*) இராமலிங்க அடிகளார் இறைவனிடம் எவற்றை வேண்டுகின்றார்? 2

(*c*) புரை தீர்ந்த நன்மை விளக்குக: 2

(*d*) விதுரன் துரியோதனனுக்குக் கூறிய நீதியுரைகளை 20 வரிகட்கு மேற்படாமல் தொகுத்து எழுதுக. 6

II. (*a*) (1) "நாடிப்புலங்கள்" என்று தொடங்கும் தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் பாடலை அடி பிறழாது எழுதுக. 3

(2) "எண்ணிலா அருந் தவத்தோன்" என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுளை அடி பிறழாது எழுதுக. 3

(*b*) கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டினுக்கு இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:— 4

(1) "அன்றளித்த அரசன்றே புரந்தரனின்றுள்கின்ற தரச!"

Marks.

(2) "அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக் கண்டு நான் வணங்க வேண்டும்."

(3) "வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றுங் கொண்டார்."

(c) இளங்கோவடிகள் கண்ணகியை எவ்வாறு புகழ்ந்துள்ளார்? 2

III. (a) உணர்ந்தோர், எழுந்தனன், செய்தார் — இவற்றிற்கு உறுப்பிலக்கணங் கூறுக. 6

(b) துன்னருஞ்சீர், குன்றளிக்கும், பாய்ந்திற்ற, புறங்கொடாத - இத்தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக. 3

(c) கீழ்க்கோடிட்டவற்றிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:— 4

உள்ளத்தாற் (பொய்யாது).

துன்னு(த் துறத்தல்).

பழங்குடி.

உவகைக்கடல் பெருக.

IV. (a) தமிழ் நாட்டுப் பழங் கடவுள் முருகன் என்பதை நாம் எங்ஙனம் உணரலாம்? 4

(b) சாதக சிந்தாமணி, சிங்களாந்தகன், மலையூ:— சிறு குறிப்புக்கள் எழுதுக. 3

(c) நாட்டியத்தின் மேம்பட்டது நாடகம் என்பதனை எவ்வாறு அறியலாம்? 3

(d) சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் என்பது எங்ஙனம் பொருந்தும்? 4

(e) ரேடியத்தின் இயல்பினையும் பயனையும் விளக்குக. 3

(f) நாட்டாண்மைக் கழகத்தின் கடமைகள் யாவை? 3

என்னும் கரும்பும் இறுக்கினல் பயன் தரும்.

மாதிரி வினாத்தாள் III

FIRST LANGUAGE—PART I—PAPER I—TEXT AND GRAMMAR—TAMIL.

Time—Two hours and a half.

(Maximum marks : 60.)

[குறிப்பு.—(1) கையெழுத்துத் தெளிவாக இருத்தல் வேண்டும்.

(2) விடைகள் தெளிவாகவும், சுருக்கமாகவும், குறிப்பிட்ட அளவினை விஞ்சாதனவாகவும் இருத்தல் வேண்டும்.

(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.

(4) II (*a*) (1), (2) ஆகிய வினாக்களுக்குச் செய்யுளிலேயே விடை எழுதுக.]

Marks.

I. (*a*) கீழ்வருவனவற்றின் பொழிப்புரை தருக :— 6

(1) அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு.

(2) நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்.

(*b*) கலைமகள் நடம் புரியும் இடங்கள் யாவை ? 2

(*c*) "இல்லை உயிருடையார் எய்தாவினை"— இப்பழமொழிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டவன் யாவன் ? அவனது வரலாற்றைச் சுருக்கி வரைக. 3

(*d*) விசுவாமித்திரர் சினங்கொண்ட நிலையைக் கம்பர் எவ்வாறு வருணித்துள்ளார் ? (விடையை 20 வரிகட்கு மேற்படாமல் தொகுத்து எழுதுக.) 5

II. (*a*) (1) "போதிலார் திருவினாள்" என்று தொடங்கி, "கண்ணகியென்" என்று முடியும் சிலப்பதிகாரப் பகுதியை அடி பிறழாது எழுதுக. 2

(2) "இரவு நண்பகல் ஆகி" என்று தொடங்கும் பெருந்தொகைச் செய்யுளை அடி பிறழாது எழுதுக. 4

Marks.

(b) கீழ்வருவனவற்றில் எவையேனும் இரண்டினுக்கு இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:— 4

(1) "நாட்டமோர் ஆயிரம் இல்லையென் றையம் நீங்கினார்."

(2) "எனைத்தும் ஓர் பொருட் பேறின்றி என் செய்கேன்."

(3) "ஆண்டவரே, யாங்கள் அறியாமை யாற்செய்த நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர்."

(c) செல்வத்தை வெறுக்கையென்று கூறக் காரணம் என்ன? 2

III. (a) பணித்தார், போந்தார், கொள்ளற்க — இவற்றிற்கு உறுப்பிலக்கணங் கூறுக. 6

(b) ஆருயிர், தன்னச்சி, மெல்லரியணை, என்றவற்புகன்று — இத்தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக. 2

(c) கீழ்க்கோடிட்டவற்றிற்கு இலக்கணக் குறிப்பு வரைக:— 4

செழுங்கருணை.

எள்ளா ஒருவன்.

நாம நீர்.

கொன்றை வேய்ந்தார்.

IV. (a) முருகன் தொன்மை காணச் சிறப்பாக உதவும் இரண்டு குறிப்புக்கள் யாவை? விளக்குக. 3

(b) பாண்டித்துரைத் தேவரவர்களது ஆதரவினால் வெளிவந்த நூற்பதிப்புக்களுள் நான்கினைக் குறிப்பிடுக. 2

(c) இராசராசன் இலங்கையிற் பெற்ற வெற்றியை விளக்குக. 4

(d) "விநோதக் கூத்து":— விளக்குக. 3

(e) "பாட்டாளி மக்கள் சிலப்பதிகாரத்தைப் பாராட்டுவர்"— ஏன்? 3

(f) கியூரி அம்மையாரின் முதல் ஆராய்ச்சி யாது? அதன் பயன் என்ன? 1

(g) வருங்காலத்தில் ராக்கெட் விமானத்தால் நாம் எத்தகைய நன்மையை அடையலாம்? 2

ஏழை சொல் அம்பலமேறாது.

இரண்டாம் பகுதி

மாதிரி வினாத்தாள் I

FIRST LANGUAGE—PART I—PAPER II—NON-DETAILED TEXTS AND TRANSLATION—TAMIL.

Time—Two hours.

(Maximum marks: 40.)

Marks.

I. கீழ்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(கரிகால்வளவன்)

(1) வெண்ணிப்போர்.
(2) இமயத்தில் புலி.
(3) பட்டினப்பாலை.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(ஊமைத்துரை)

(1) நாட்டுப்பற்றுப் பெற்ற பரிசு.
(2) கருணைக் கடல்.
(3) ஊமைத்துரையின் குண நலங்கள்.

II. பின்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(உதயணன்)

(1) உதயணனைச் சிறை மீட்டல்.
(2) வாசவதத்தையை உடன்கொண்டு செல்லுதல்.
(3) உதயணன் வீரம்.

திறைநீர நீரவர் கேண்மை.

Marks

இரண்டாம் பிரிவு.

(கயிலைமால்வரை)

(1) இமயமும், கயிலையும்.
(2) கயிலாய வாயில்.
(3) மானசஸரோவரம்.

III. தமிழில் மொழிபெயர்க்க:—

HYDER

Hyder never went to school. On that account, you cannot call him an illiterate. The world was his school and experience his master. He did during his life time what most literate Kings did not do, or perhaps could not do. 10

He was one of the foremost of the Indian Kings to foresee the establishment of the British rule in India. A born soldier, he fought tooth and nail to wipe out British supremacy.

As a ruler, he was in no way inferior to the fabulous Solomon the wise. His subjects lived in peace and loved him for his sense of justice and tolerance. We learn that even the disabled were entertained in service under his rule.

In short, he made Mysore one of the most formidable powers in South India.

மாதிரி வினாத்தாள் II

FIRST LANGUAGE—PART I—PAPER II—NON-DETAILED TEXTS AND TRANSLATION—TAMIL.

Time—Two hours.

(Maximum marks : 40.)

Marks.

I. கீழ்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக :— 15

முதற் பிரிவு.

(கரிகால்வளவன்)

(1) ஏற்றிய விளக்கு.
(2) காட்டுவளம் பாடிய நங்கை.

பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு.

Marks.

(3) சோழ நாட்டிற்குக் கரிகாலன் செய்த நன்மைகள்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(ஊமைத்துரை)

(1) ஊமைத்துரை அரசுரிமை ஏற்றல்.
(2) தியாகியின் மறைவு.
(3) படுகளம்.

II. பின் வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை வரைக :— 15

முதற் பிரிவு.

(உதயணன்)

(1) யூகி உதயணன் சிறையிருக்குமிடத்தை அறிதல்.
(2) வாசவதத்தையைப் பிரித்தல்.
(3) இடைவழிப் போர்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(கயிலைமால்வரை)

(1) திபேத்தில் பிரயாணம்.
(2) வழியும், செலவும் (பிரயாணமும்).
(3) யாத்திரையின் அனுபவங்கள்.

III. தமிழில் மொழிபெயர்க்க :—

A prince fell in love with a shepherd's daughter. But the latter refused at first to marry the former on the ground that he had not learned any useful craft. The prince, however, soon learned to weave rugs of straw and got her for his wife.

One day, while the prince was touring over his kingdom, he fell in among robbers and murderers. They were cannibals and as the prince was lean, they put him in prison to grow fat. The prince told them that he was a weaver of straw rugs and made for them three fine rugs. The robbers sold the rugs to a King who was luckily the prince's own father. The writings in the rugs disclosed the

prince's den. The King sent his general who killed the robbers and rescued the prince.

So, everyone must learn a useful craft.

மாதிரி வினாத்தாள் III

FIRST LANGUAGE—PART I-PAPER II—NON-DETAILED TEXTS AND TRANSLATION—TAMIL.

Tamil—Two hours.

(Maximum marks: 40.)

Marks

I. கீழ்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக :— 15

முதற் பிரிவு.

(கரிகால்வளவன்)

(1) கரிகாலன்.

(2) பாட்டும் பரிசும்.

(3) கிழக்கோலம்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(ஊமைத்துரை)

(1) சிறையில் தவம்.

(2) "சாமியைக் காப்பாற்று".

(3) பாஞ்சையர் வீரம்.

II. பின்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(உதயணன்)

(1) உதயணன் சிறைப்படுதல்.

Marks.

(2) யூகியின் சூழ்ச்சித் திறன்.

(3) பதுமை மணம்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(கயிலைமால்வரை)

(1) மலைவழி.

(2) திபேத்தும் திபேத்தியரும்.

(3) கயிலைக் காட்சி.

III. தமிழில் மொழிபெயர்க்க :—

If you want to live long and happy in the world, keep this clearly imprinted in your mind. Do not worry yourself over the past or the future. 1

If you had lost your beloved ones, consider that their loss was but natural. If you had lost your wealth, think that some one poorer than you has had it. In the same way, do not be disheartened by troubles to come, which are after all imaginary.

Worries are the worst enemies of mankind. Many a young man and woman with all their wealth and health and learning have been the victims of worries. And, therefore, is it not right round stupidity to worry over yesterday which is dead, or to-morrow which is not at all born ?



முகம் நக நட்பது நட்பன்று.

பெற்றோர்கட்கு ஒரு வேண்டுகோள்

இவ்வுரைநூலின் ஒவ்வொரு பகுதியின் ஈற்றிலும் **'நல்லொழுக்கப் பயிற்சி'** என்றொரு பகுதி தரப்பெற்றுள்ளது. அவை ஏன் தரப்பெற்றுள்ளன? கல்வியின் நோக்கம் அறிவு பெறுதல் ஆகும். அறிவின் பயன் ஒழுக்கமுடைமை யாகும். எனவே ஒழுக்கம் இன்றேல் கல்வி கற்றதனால் உண்டாகும் பயன் இல்லையாகும். மாணவர்க்கு நல்லொழுக்கங்களில் சிலவற்றைப் புகட்ட வேண்டும் என்னும் கருத்துடனேயே அத்தகைய பயிற்சிகள், அவ்வப்பாடத்துடன் தொடர்புபடுத்தித் தரப்பெற்றுள்ளன.

மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற வழிகாட்டுதல் எங்களுடைய துணை நோக்கமேயாகும். **எங்களுடைய முதல் நோக்கம் மாணவர்க்கு ஒழுக்கங்களை ஓரளவு கற்பிப்பதே ஆகும்.** அத்தகைய எங்கள் முதல் நோக்கம் நிறைவேறுமாறு செய்தல் பெற்றோர்களையே சார்ந்தது. ஆகவே, **பெற்றோர்களே!** ஈண்டுத் தரப்பெற்றுள்ள நல்லொழுக்கப் பயிற்சிகளை உங்களுடைய மக்கள் நடைமுறையிற் கைக்கொள்ளுமாறு செய்யுங்கள்; **'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'** என்னும் தந்தையின் கடமையை நிறைவேற்ற முன் வாருங்கள். அவ்வாறு நிறைவேற்றினால் உங்களுடைய மக்கள் **'அறிவறிந்த மக்கள்'** ஆவர். அறிவறிந்த மக்களைப் பெறுவதினும் சிறந்த பேறு வேறில்லை அதுபற்றியே வள்ளுவனார்:

> **"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**
> **மக்கட்பே றல்ல பிற"**

என்றார்.

CONNEMARA PUBLIC
4 - APR 1956

—**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**
பதிப்புகத்தார்.

PRINTED AT SRI RAJAM POWER PRESS, 16/1, ROYAPETTAH HIGH ROAD, MADRAS-14.